NALAVENBA

WITH ANNOTATIONS AND
ENGLISH TRANSLATION

3827

CHETTIAR
PAGANERI.

K. R. PRESS SCHOOL SERIES

NALAVENBA

3827

WITH

ANNOTATIONS BY

T. E. SREENIVASARAGHAVA CHARIAR

AND

An English translation

BY

C. GUEST

W. PUSHPARATHA CHETTY & Co.
K. R. PRESS,
MADRAS.
1899.

Copy Right.

LIFE OF NALA.

In the south east division of the Central India, there was once in a flourishing condition the country of Naishadam. King Nala, who is described as specially gifted with the choicest virtues and abilities, and who was highly renowned for his skill in driving and other such arts, was the monarch of this country of Naishadham whence is his other name Nishada. Contemporarily with him, in the neighbourhood of his dominions there lived king Bhima, who ruled over the country of Vidharbha. This king of rare abilities, possessed an only daughter, whom he named Damayanti, and whose beauty as well as her maidenly character enraptured all those who happened to see or hear of her. King Nala who has already heard enough of Damayanti as to allure and captivate his feelings, while walking in his garden one day, and seeing some swans disporting themselves near him, seized one of them. To his astonishment the bird, addressing him in human language, promised, that if he would release it, it would fly to Damayanti and praise Nala in her presence. This being agreed upon and carried into effect, Damayanti became highly inspired with a passion for Nala. Bhima, her father, seeing his daughter pining in secret love, determined to celebrate her Swayamvara, i. e. to proclaim the public choice of a husband by Damayanti, according to the custom of that race. All the youthful princes of

India, including Nala, flocked to Vidarbha as suitors for the lovely hand of Damayanti. The gods also hearing of her extraordinary beauty, resolving to be present and meeting Nala on their way, commissioned him to plead their cause before Damayanti. Though he entreated to be excused and confessed that he was also enamoured of her, being adjured sternly, he promised to deliver their message, and was introduced by them unseen into the palace. Then he had an interview with Damayanti, who slighting the message of the gods, confessed and revealed her love to Nala, and her resolve to choose him and him only. Accordingly at the Swayamvara, in spite of the artifice of the gods who assumed Nala's shape, she found him out by his shadow, the gods having none, and selected him.

It appears that at the time of the Swayavaram, Kali, the evil genius of the fourth age of the world or vice personified, had set out for Vidarbha with the intention of making Damayanti his consort; but hearing of the completion of the marriage ceremony, he resolved, out of jealousy, to work the ruin of Nala. For twelve years he watched his opportunity, and at last detecting Nala unholy in some trifling neglect of his ablutions, entered and acquired power over his body and mind. Infatuating his victim, he instigated him to play at dice with the king Pushkara. The game went on for many months; and Nala, after losing his kingdom and all his possessions was driven with Damayanti into exile.

In the forest, Nala still infatuated by Kali, deserted Damayanti who wandering alone, and escaping many perils, at last found a refuge at the court of Sadi. Meanwhile Nala passing through the forest rescued a serpent from a

flaming bush. This serpent was Karkotaka, one of the principal Nagas or semi-divine beings inhabiting the regions below. In return for the service rendered by Nala, Karkotaka promised to deliver Nala from the power of Kali. He accordingly metamorphosedNala into a dwarfish charioteer but gave him a magic garment, by which he could at any time regain his proper form. Nala, now transformed to a short-armed man,entered the services of Rituparna,king of Ayodhya, a monarch celebrated for his skill in dice under the name of Vakuha. Meanwhile, king Bhima searching the world for his lost daughter, discovered her at length at Sadi, and sent for her thence to his own capital. There pining for the lost Nala, she devised a plan to reover him. Suspecting that he was living disguised as Vakuha with Rituparna, king of Ayodhya, she caused the latter to be told that king Bhima would celebrate on the next day a second Swayamvara for his daughter Damayanti Rituparna was determined to be present, but could only do so by the help of his charioteer Vakuha, whose skill in horsemanship enabled him to drive from Ayodhya to Vidurbha in one day. On the road, Nala disguised as Vakuha, agreed to impart to Rituparna his knowledge of horsemanship in return for that monarch's skill in dice They made the exchange, and, arriving at Vidurbha, Nala re-assumed his own form and was restored to his wife With her returning to Nishadha, he renewed the game with Pushkara, and won back his kingdom. Then with a noble generosity he forgave Pushkara, and entered on a long happy reign with his consort Damayanti.

புகழேந்திப்புலவர் சரித்திரம்.

புகழேந்திப் புலவர் சரித்திரத்தைப் பலவாறு கர்ணபரம்பரையிற் சொல்லி வருகிறார்கள். அவருடைய காலம் நாடு சாதிகளைக் குறித்து விவரம் நன்றாய்த் தெரியாதாயினுங் கம்பரோ டவரிருந்ததால் தெரியவருகிறதினால் உத்தேசத்தில் (ககரு0) வருஷங்களுக்குமுன் அவரிருந்தாரென்று கொள்ளலாம். அவர் வேளாளரென்றும், பிறந்த இடம் இத்தொண்டைநாட்டிற் செங்கற்பட்டுக்குச் சமீபத்திலுள்ள பொன்விளைந்தகளத்தூரென்றும், படிக்காசுப்புலவர் பாடிய தொண்டைமண்டல சதகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஔவையும் திருவள்ளுவரும் கடைச்சங்க மிருந்தகாலத் திருந்ததாய்த் தெரியவருகின்றது. ஆதலால் ஔவைக்கும் இப்புலவர்க்குஞ் சில சம்பாஷணை நடந்ததாகச் சொல்வது உசிதமல்லவென்று சிலர் கூறுவர். ஆனால் பந்தன் என்னும் ஓர் வைசியசிகாமணியின்மேல் அந்தாதிபாடி அவன் நாகலோகத்தினின்று பெற்றுவந்த அருநெல்லிக்கனியில் பாதிக்கனி ஔவைபெற்று அதையுண்டு நெடுங்காலஞ் சீவித்திருந்ததாக பலர் கூறுகின்றனர்; ஆதலால் இவ்விரண்டு காலங்களிலு மிருந்த ஔவை ஒருவரே எனத் துணியவேண்டியதாக விருக்கின்றது. இவர்செய்த பிரசித்தநூல்கள் நளவெண்பாவும், இரத்தினச்சுருக்கமுமே.

யாம் கர்ணபரம்பரையிற் கேட்ட இவர் சரித்திரத்தை அடியில் எழுதுகின்றோம்.

புகழேந்திப் புலவர் மதுரை நகரில் அரசாட் [illegible] செய்திருந்த
வரகுணபாண்டியராஜன் சமஸ்தான வித் [illegible] யிருந்தார்.
அந்தக் காலத்தில் உறையூரில் அரசு செ [illegible] ண் டிருந்த
குலோத்துங்க சோழராஜனுக்குப் பெண் [illegible] ம்படி அவர்
சமஸ்தான வித்துவானாகவும் உபாத் [illegible] யும் இருந்த
ஒட்டகூத்தப் புலவர் வந்து அப் [illegible] ளிடத்தில் சம்
பாஷித்துக்கொண் டிருக்கையி [illegible] ராஜன் பரிகாச
மாய்ச் "சோழராசன் எங்கள் [illegible] ளைக் கொள்ளத்

தக்கவனோ? எங்களிலும் ஏற்றமானவனோ? சொல்லும்" என ஒட்டக் கூத்தப்புலவர் சோழராஜன் பெருமைதோன்ற அவனுடைய குதிரை நதி மாலை முதலியவைகளுக்குப் பாண்டியர் மாட்டா என்னும் பொருளுள்ள—

"கோரத்துக்கொப்போ கனவட்டமம்மானே
கூறுவதுங்காவிரிக்கு வையையோவம்மானே
வேருக்கும் நிக ராகுமோவம்மானே
ஆதித்தனுக்குநிக ரம்புலியோவம்மானே
வீரர்க்குள்வீரனொரு மீனவனேவம்மானே
வெற்றிப்புலிக்கொடிக்கு மீன்கொடியோவம்மானே
ஊருக்குறந்தைநிகர் கொற்கையோவம்மானே
ஒக்குமோசோணாட்டுக்குப் பாண்டிநாடம்மானே."

என்று இப்பாடலைச் சொன்னார். அதுகேட்டு அப்பாண்டிய ராஜன் சமஸ்தான வித்துவானாகிய மேற்குறித்த புகழேந்திப் புலவர் ஒட்டகூத்தப் புலவரைநோக்கி அதற்கு மாறாக,—

"ஒருமுனிவனேரியிலோ வுரைதெளித்ததம்மானே
ஒப்பரியதிருவிளையாட் டுறந்தையிலோவம்மானே
திருநெடுமாலவதாரஞ் சிறுபுலியோவம்மானே
சிவன்முடியிலேறுவதுஞ் செங்கதிரோவம்மானே
கரையெதிரல்காவிரியோ வையையோவம்மானே
கடிப்பகைக்குத்தாதகியங் கண்ணியோவம்மானே
பரவைபணிந்ததுஞ்சோழன் பதந்தனையோவம்மானே
பாண்டியனார்பராக்கிரமம் பகர்வரிதேயம்மானே."

என்று இக[illegible]யச் சொன்னார். அப்போதே ஒட்டகூத்தப் புலவருக்குப்[illegible]ழந்திப் புலவர்மேற் பொறாமை யுண்டா யிற்று. பின்[illegible]டியராஜன் தன் பெண்ணைச் சோழராஜ னுக்குக் கலி[illegible]செய்துகொடுத்துத் தான் அனுப்பியசீதன வரிசையுடன்[illegible] புலவரையுந் தன்பெண்ணுக்குச் சீத னமாயனுப்ப,[illegible] "இவன் உமக்குப் பெண்கொடுக்க வொட்டாமற் [illegible]டைய குலமுதலியவற்றை [illegible]கவன் தூஷித்[illegible]ரைத்துப் புகழேந்

திப் புலவரைச் சிறைச்சாலையில் வைப்பித்தார். அவர் அச் சிறையி லிருந்துகொண்டு அதனருகே தண்ணீர்க்குப்போகிற பெண்கள் செவிக்கு இனிமையாக இக்காலத்தில் நங்கைபாட்டென்று வழங்குகிற அல்லியரசாணிமாலை, பவளக்கொடி மாலை, புரந்தரன் களவுமாலை என்னும் பாடல்களைப் பாடி அப்பெண்களால் தமக்குவேண்டிய சாமக்கிரிகளைப் பெற்றுச் சமைத்துண்டு மிகுதியைக்காவலாளிகளுக்குக் கொடுத்துஅவர்களைக் கைவசப்படுத்திக்கொண் டிருக்கையில், ஒருநாள் வீதியில் யானையின்மேற் பவனிவருஞ் சோழராஜன் சிறைச்சாலையின் மேற்றலத்தி லிருக்கும் புகழேந்திப் புலவரைப் பார்த்து "இவர் தமிழில் மகாசமர்த்த ரல்லவா?" என்று தன்னருகி லிருக்கும் ஒட்டகூத்தருடன் சொல்ல, அவர் புகழேந்திப் புலவரை யிகழ்ந்து,—

"மானிற்கு மோவந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோவவ் வெரியுந் தழன்முன் கனைகடலின்
மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவமுன் வீசுபனி
தானிற்கு மோவக் கதிரோ னுதயத்திற் றூர்மன்னனே."

என்று இப்பாடலைச் சொன்னார். அதைக்கேட்ட புகழேந்தி "அப்பாடலை வெட்டிப்பாடவோ, ஒட்டிப்பாடவோ?" என்று சோழராஜனைக்கேட்க, அவன் "ஒட்டிப்பாடும்" என அவ்வாறே,

"மானவ னனந்த வாளரி வேங்கையும் வற்றிச்செத்த
கானவ னவ்வெரியுந் தழலுங் கனைகடலின்
மீனவ னனந்த வெங்கட் சுறவமும் வீசுபனி
தானவ னைக் கதிரோ னுதயமுந் தார்மன்னனே."

என்று இப்பாடலைப்பாடி, ஒட்டக்கூத்தப் புலவர்வெட்கும்படி செய்தார். அப்போதும் அவ்வரசன் பு[illegible]ந்திப் புலவரிடத்து மதிப்புங் காருணியமு முடையவனா யி[illegible]தும் அவர் தாட்சிணியத்தால் புகழேந்திப் புலவரைச் [illegible] நீட்காமலே போய்விட்டான்.

இப்படியிருக்கையில் ஒட்[illegible]பர் சோழராஜ[illegible] சமஸ்தானத்திற் பரிசுவாங்[illegible]ங்களைக் காவ[illegible]

வைத்து நவராத்திரி யுற்சவத்தில் அவர்களை யழைப்பித்துத் தான் கேட்ட கேள்விக்கு உத்தரஞ் சொல்லாதவர்களை யவமதித்துத் துன்பப்படுத்துகிற வழக்கப்படி புகழேந்திப்புலவருடன் சில புலவர்களைச் சிறைசெய்வித்திருந்தார். அவர்களில் குயவன், கம்மாளன், வண்ணான், அம்பட்டன், வேளாளன் ஆகிய ஐவருக்கும் புகழேந்திப்புலவர் விசேஷமாய்க் கல்வி போதித்துச் சமர்த்தர்களாக்கினார். நவராத்திரியுஞ் சமீபித்தது. அக்காலத்தில் வழக்கம்போல் ஒட்டகூத்தப்புலவர் சிறைச்சாலையில் அடைபட்டிருந்த வித்துவான்களை வரவழைக்க, அவர்களில் அநேகர் கல்வியில் அற்பமானவர்களா யிருந்தமையால்புகழேந்திப்புலவர் தம்மிடத்தில் வாசித்துத்தேர்ந்த இந்த ஐவரையும் ஒருவர்பின் ஒருவராய் ஒட்டக்கூத்தப் புலவர்முன் போய்நின்று அவர்கேட்குங் கேள்விக்கு உத்தரஞ் சொல்லும்படி திட்டஞ்செய் தனுப்பினார். அவ்வாறே முன் குசவன்போய் ஒட்டக்கூத்தப்புலவ ரெதிரில் மிடுக்காய் நின்றான். அவனைப்பார்த்துக் கவித்திறம் அறியும்படி,—

"மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந்தெதிர்த்தவ னாரடா?"—என்று

ஒட்டக்கூத்தப்புலவர் கூறினார். அதற்குக் குயவன்,—

"கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
பானையும் பண்ணு மங்குசப் பையல்யான்"—என்றான்.

ஒட்டக்கூத்தப்புலவர் தன்னை யானை என்று சொன்னதற்கு அதனை யடக்குவது அங்குசமாகையால் அங்குசப்பையல் எனவும், தான் குசவனானதால், அம்+குசப்பையலெனவும் சிலேடையாச் சொன்னான், ஒட்டகூத்தப்புலவர் மற்றொருவனை யழைப்பிக்க, அம்ப[illegible] வந்து நின்றான். அவனைக்கண்டு,

"விண்பட்ட கொ[illegible] வல் லூறுகண்டென்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொ[illegible] மிங்குநின் றாய்பொட்டை யாய்புகல்
வாய்?"—என,

அதற்கு அம்ப[illegible]

'கண்பொட்டை [illegible] —னன்கவி வாணர்முன்னே
[illegible]ண்பட்ட செ[illegible] க்கிடப் பாடுவனே"

என்றான். இவன்பின்பு வந்த கருமானை? "நீயார்" என்று வினவ, அதற்கவன்,

"செல்வன் புதல்வன் றிருவேங் கடவன் செகத்குருவாங்
கொல்ல ன்கவியைக்குறைசொன்ன பேரைக் குறடுகொண்டு
பல்லைப்பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர்முன்னே
அல்லும்பகலு மடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே."

என்றுசொன்னான். பின்பு வேளாளன்வர அவனை நோக்கிப் "பிரபல வித்துவான்களுக்கு முன்னே புன்கவிஞர்கள் வந்து நிற்பது தகுதியோ?" என்றார். அதற்கு வேளாளன்—

"கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூதலமேழ்
காக்கின்ற மன்ன கவியொட்டக் கூத்தநின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ் பாடிய பாவலரே."

என்றான். இவர்கள் திறத்தைக்கண்டு புகழேந்தியால் நேர்ந்த திதுவென வறிந்து ஒட்டக்கூத்தருங் கர்வபங்கப்பட்டார். சிறைசெய்யப்பட்ட வித்துவான்களும் வெகுமதி பெற்றுத் தத்தமிடஞ் சேர்ந்தார்கள்.

இச்செய்திகளையெல்லாம் பரிசாரகப் பெண்களால் சோழ ராஜன் மனைவி அறிந்து மனவருத்தமடைந்து சயனக்கிரகத் திற்குச் சோழராஜன் வரும்போது வீட்டு வாசற்கதவைத் தாழ் பூட்டிக்கொண்டாள். அதுகண்டு சோழராஜன் பற்பல விதமா யிதம் சியுங் கதவு திறவாதபடியால் அவருடைய ஊடலைத்த ...தும்படி ஒட்டக்கூத்தப்புலவரை யனுப்பினான்.

*"நாம ... ம ... வ வேண்டுவதில்லை நளினமலர்த்
தேனே கவ... திறந்திடு வாய்கிற வாவிடிலோ
வானே றனை... விரவிகு லாதிபன் வாசல்வந்தால்
தானே திற...ன் கைத்தல மாகிய தாமரையே."

என்றார். அப்பாட... ...யாயிருந்தபடியால் "ஒட்டக்கூத்தர் வேண்டுவதென்கொல்" என்றும்

* "தானே
...லோத்.

பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்றுசொல்லி மற்றொரு தாழ்ப்பாளையும் போட்டாள்.

இதைக் கேள்வியுற்ற சோழராஜனானவன் புகழேந்திப்புலவரை நெடுநாளாய்ச் சிறைச்சாலையி னின்று மீட்காதிருந்த கோபத்தினால் தன்மனைவிக்குஊடலுண்டாயிற்றென்றுணர்ந்துப் புகழேந்திப் புலவரைச் சிறைநீக்கி ராணியின் கோபத்தைத் தணிக்கும்படி யனுப்ப, அவர் அந்தப்புரம்போய் ராஜஸ்திரீக்கு ஊடல் தணியும்பொருட்டு,

"இழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை யேந்திய பொற், குழையொன் றிரண்டு விழியணங் கேகொண்ட கோபந் தணி, மழையொன் றிரண்டுகைம் மானா பரணனின் வாசல் வந்தால், பிழையொன் றிரண்டு பொறாரோ குடியிற் பிறந்தவரே",— என்றார்.

இப்பாடலைக் கேட்டவுடனே மகிழ்ச்சியடைந்து இராணி கோபந்தணிந்தாள். அதுமுதல் சோழராஜன் புகழேந்திப்புலவரைப் பரிபாலித்து வந்தான். ஆயினும் ஒட்டக்கூத்தனுடைய பொறாமையினாலும் அவன் பேச்சை யரசன் கேட்பதனாலும் புகழேந்திப்புலவர் அங்கிருக்க இஷ்டமில்லாமல் அந்நாட்டிற் சேர்ந்த மள்ளுவமென்னும் ஒரு சிறியநாட்டில் முரணூரிலிருந்த சந்திரன்சுவர்க்கி யென்னு மரசனிடஞ்சேர்ந்து அவன் விரும்பினபடி நளவெண்பாவென்னு நூலைச்செய்து பரிசு பெற்று வாழ்ந்திருந்தார்,—

பின்பு குலோத்துங்கன் மிக மரியாதைய [illegible] வரை வரவழைத்து உபசரித்து நளவெண்பாவைப் [illegible] ச் செய்தான். அந்நளவெண்பாவைக் கம்பர் ஒட் [illegible] த முதலிய வித்துவான்கள் முன்னிலையில் பிரசங்க [illegible] செய்துகொண்டு வருகையில்,—

"மல்லிகையே வெண்சங்கா வண்டே [illegible] ன்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப் [illegible] லைமலர்
மென்மாலை தோளசைய [illegible] த

என்னும் இப்பாடலைச் சொல்லும்போது ஒட்டக்கூத்தப்புலவர் "மல்லிகை யரும்பைச் சங்காகவும், வண்டைச் சங்காதஞ் செய்கிறவனாகவும் கற்பித்தது உசிதமே. சங்கவாத்தியஞ்செய்வோர் அதன் அடியை யல்லவோ வாயில்வைத்து ஊதுவார்கள்; அப்படிக்கு வண்டுகள் அடிப்புறத் தூதுகிறதில்லையே, ஆதலால் அந்த வாணனை குற்றம்" என்றார்.

அதற்குப் புகழேந்திப்புலவர் "கட்குடியனுக்குச் சூத்தென்றும் வாயென்றுந் தெரியுமா?" என்றார். இவ்வாறு அவர் செய்த துராக்ஷேபங்களுக்கெல்லாம் சாதுரியமான உத்தரஞ் சொல்லி அவர் நாவை யடக்கினார். கம்பர் அவருக்குச் சார்பாய் நின்று புகழ்ந்தார்.

ஒட்டக்கூத்தர் புகழேந்திப்புலவரை வெளிக்கு அவமதித்து வந்தும் உள்ளத்தில் அவர் கவித்திறத்தைப்பற்றி வியப்படைந்தே யிருந்தார். ஒருகால் அவர் தன்மனைவியோடு நளவெண்பாவை வியந்து பேசிக்கொண் டிருக்கையில் அவர் வீட்டுப்புறத்தி லொளித்திருந்து கேட்ட புகழேந்தி அவரிடத்திருந்த பகைமையை விட்டு அவர் வீட்டுக்குட் சென்று அவரோடே சிநேகம்பாராட்ட அவரும்மனமுற்றுச்சிநேகம் பாராட்டினார். அரசனும் இச்செய்தி கேட்டுச் சந்தோஷித்து அவ்விருவரையு நோக்கி அந்நாட்டிலுள்ள நெய்த்தான மென்னுந் தலத்துக் சுவாமியின்மேல் "நெய்த்தா னத்தானைச் சேவித்தே" என்பது மகுடமாக சந்தவிருத்தம் பாடும்படி சொல்ல, ஒட்டக்கூத்தர்,

"விக்கா வுக்கா வித்தா விப்போய்
விட்டார் நட்டார் சுட்டூர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே
யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சூ
ழப்பா டத்தீ வெப்பா டப்பூ
ணைக்கா டக்கா னத்தா டப்போ
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே."—

என்கிற பாட்டையும்,

புகழேந்திப்புலவர்,—

"தற்கோ லிப்பூ சற்பா சத்தே
தப்பா மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ லிக்கோ லிப்பூ சித்தே
மூட்டா மற்சே வித்தே நிற்பீர்
வற்ரு நெட்டோ டைப்பா ரைச்சேன்
மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்ரு ஞற்ரு லேப்பா கிற்சேர்
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே."

என்கிற பாட்டையும் பாடினார்கள்.

மற்றொருநாள் திருக்குறுங்குடி யென்னுந் தலத்துப் பெருமாள்மேல் வல்லோசையுள்ளகலித்துறைகளைப் பாடும்படிஅரசன்சொல்ல ஒட்டக்கூத்தர்,—

திக்குளெட்டுக்கயந் துக்கமுற் றுத்திடுக் கிட்டலற
மைக்கடற் குட்சரந் தைக்கவிட் டேற்கிட மாமதுர
விக்குமுற் றிக்கணுச் சற்றுவிட்டுத்தெறித் திட்டமுத்தைக்
கொக்குமொயி கிக்கக்கி விக்குமச் சோலைக் குறுங்குடியே.

என்றொரு பாட்டும்,

புகழேந்திப்புலவர்,—

எட்டெழுத தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவுஞ்
சிட்டர் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கவருமவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத் தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே.

என்றொரு பாட்டும்பாடினார்கள். அரசனும் முனபோலின்றி இருவருக்கும் சமமாகவே நடப்பித்து வந்தான். இவ்வாறுபுகழேந்திப்புலவர் சோழநாட்டிலிருந்து காலங்கழித்தார்.

வெண்பாவிற் புகழேந்திபரணிக்கோர்செயங்கொண்டான் விருத்தமென்னு, மொண்பாவி லுயர்கம்பன் கோவையுலாவந்தாதிக் கொட்டக்கூத்தன், கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காளமேகம், பண் பாகப்பகர்சந்தம் படிக்காச லாதொருவர் பகரொ ணாதே.

நளவெண்பா.

நூற்சிறப்புப்பாயிரம்.

தெய்வவணக்கம்.

விநாயகக்கடவுள்.

நேசரிதங் கூர நிலவலயந் தாங்குநளன்
மாசரிதங் கூற வருந்துணையாம் - ஈசன்
கரியா னனத்தான் கருதுபுகழ் பூண்ட
கரியா னனத்தான் கழல்.

In order to relate the great history of Nala, who protects his kingdom, so that his subjects may obtain happiness, I invoke as a help the feet of the renowned elephant-faced Deity, who forms the subject of the contemplations of Siva, Vishnu, and Brahma.

(இதன் பதப்பொருள்.) நேசர் - மித்திரர், இதம்கூர-நன்மை மிகும்படி, நில வலயம் - பூமண்டலத்தை, தாங்கு நளன்-இரக்ஷித்த நளமகாராஜனுடைய, மா சரிதம் - பெருமையுள்ள சரித்திரத்தை, கூற - சொல்வதற்கு, துணையாவரும் - சகாயமாகவரும், (எதுவெனில்), ஈசன் - சிவனும், கரியான் - விட்டுணுவும், அனத்தான்-பிரமனும், கருது - சிந்திக்கின்ற, புகழ் பூண்ட - கீர்த்தியணிந்த, கரி ஆனனத்தான்-ஆனைமுகமுள்ள விநாயகமூர்த்தியினது, கழல் - திருவடி, எ-று.

அனத்தான்—அன்னத்தை வாகனமாக வுடையவன்; அவர்களால் கருதப்படும் புகழ் மாபாரதம் எழுதியது முதலிய செய்கைகளால் விளைந்தது.

மற்றொருபாடம்.

சடகோபமுனிவர்.

நேசரிதங் கூர நிலவலயந் தாங்குநளன்
மாசரிதங் கூற வருந்துணையாப் - பேசரிய
மாமகிழ்மா றன்புகழாம் வண்டமிழ்வே தம்விரித்த
மாமகிழ்மா றன்றுண் மலர்.

In order to relate the great history of Nala, who protects his kingdom, so that his subjects may obtain happiness, I invoke as a help the feet of the great Sadagopa Muniver, who is adorned with wreaths of Makizham flowers, and who expounded to the world the Tamil Vedas which contemplate the praise of Vishnu, the lover of Lakshmi.

(இ - ள்.) நேசர் - மித்திரர், இதம் கூர - நன்மை மிகும்படி, நில வலயம்-பூமண்டலத்தை, தாங்கு நளன் - இரக்ஷித்த நளமகாராஜனுடைய, மா சரிதம் - பெருமையுள்ள சரித்திரத்தை, கூற - சொல்வதற்கு, துணையா வரும்-சகாயமாகவரும், (எதுவெனில்), பேசரிய - சொல்ல எளிதாகாத, மா - திருமகள், மகிழ் - களிக்கின்ற, மால்தன் - திருமாலினுடைய, புகழாம் - புகழே பொருளாகக்கொண்ட, வண் தமிழ்வேதம் - அழகிய தமிழ்வேதத்தை, விரித்த - வெளியிட்ட; மா மகிழ் - மேன்மையான மகிழம்பூமாலை யணிந்த, மாறன் - சடகோப முனிவருடைய, தாள் மலர் - திருவடியாகிய தாமரைமலர், எ-று.

தமிழ்வேதம், திருவாய்மொழிமுதலிய பிரபந்தங்கள்.

விஷ்ணுமூர்த்தி.

ஆதித் தனிக்கோல மானா னடியவற்காகச்
சோதித் திருத்தூணிற் றோன்றினான் - வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே யெனவழைப்ப
என்னென்றா னெங்கட் கிறை.

He is our god, who has incarnated as the matchless Varaca, who has for the sake of his devote follower Prahlatha, issued forth from the great and holy pillar, who is contemplated as the head of the Vedas, and who, when the elephant cried out for help saying "O thou original cause" appeared and enquired into the reason of the cry.

(இ-ள்.) ஆதி - முதலான, தனி - ஒப்பற்ற, கோலமானான் - வராக அவதாரமானவனும், அடியவற்கு ஆ - அடியவனாகிய பிரகலாத ஆழ்வானுக்காக, சோதி-ஒளிபொருந்திய, திருத்தூணில் - மேன்மையான தூணில், தோன்றினான் - அவதரித்தவனும், வேதத்தின்-வேதங்களுக்கு, முன் - முதலாகிய பிரண

வத்தில், நின்றான்-(பொருளாக)நின்றவனும், வேழம்-யானை, முதலே என அழைப்ப - மூலகாரணமே என்று அழைக்கை யில், என் என்றான் - (ஓடிவந்து) என்ன என்று வினவினவனு மாகிய திருமால், எங்கட்கு - எங்களுக்கு, இறை - தெய் வம், எ - று.

சிவபெருமான்.

கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவு சடைமே லுறையு - நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றார் நாகம்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு.

He who has on his left side Parvati, who resembles a beautifully-feathered peacock, whose holy body is smeared with sacred ashes, as if the moon on his lock of hair, over which the Ganges flows, poured forth its beams, and who decorates himself with snakes, the same is our matchless protector.

(இ-ள்.) கலாப மயில் - தோகையுள்ள மயில்போன்ற பார் வதிதேவி, இருந்த - அமர்ந்த, பாகத்தார் - இடப்பக்கமுடை யவரும், கங்கை உலாவு - கங்காநதி யுலாவப்பெற்ற, சடை மேல் - சடைமுடியின்மேல், உறையும் - இருக்கின்ற, நிலா வை-சந்திரகாந்தியை, வழிய - (உடலின்மேல்) வழியும்படி, வார்த்தால் அன்ன - ஊற்றினால் அதையொத்த, மா நீற்றார் - பெருமை பொருந்திய விபூதியை யணிந்தவரும், நாகம் - சர்ப் பங்களை, கழிய - மிகவும், ஆர்த்தார் - (அணிகளாகக்) கட்டிக் கொண்டவருமான சிவபெருமான், நமக்கு ஓர் காப்பு - நமக்கு ஒரு இரக்ஷகர், எ - று.

இப்பாட்டிலும் முற்பாட்டிலும், "ஒருபொருண்மேற் பல பெயர்" என்கிற [பொதுவியல் சூ-ம்] சூத்திரத்தின்படி பல எழுவாய்ப் பெயர்கள் ஒருபொருளைக் குறித்தனவாய்ஒருவினை கொண்டு முடிந்தன.

அவையடக்கம்.

வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின் [யில்
தந்துவினாற் கட்டச் சமைவதொக்கும் - பைந்தொடை
தேன்பாடுந் தார்நளன்றன் றெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்ற விது.

As is the tying of the furious and angry elephant with the sweet-smelling fibre of the lotus plant, so is this attempt of mine to sing the divine and excellent history of Nala, who ornaments himself with wreaths made of fresh flowers, upon which the bees sing.

(இ - ள்.) பைந் தொடையில் - பசுமையான மலர்களில், தேன் பாடும் - வண்டுகள் பாடப்பெற்ற, தார் - மாலையணிந்த நளன்தன் - நளனுடைய, தெய்வத் திருக்கதையை - தெய்வத் தன்மையுள்ள சிறப்பான கதையை, யான் பாடலுற்ற இது - நான் பாடத்தொடங்கிய இச்செய்கை, வெம்தறு கண் - உக்கிரமான கோபம் உள்ள, வேழத்தை - யானையை, வெறி கமலத்தின் - வாசனையுள்ள தாமரையினது, தந்துவினால் - நூலினால், கட்ட - கட்டுதற்கு, சமைவது - முயன்றதை, ஒக்கும் - ஒத்திருக்கும், எ - று.

ஆசிரியன் பெயர்.

பாரார் நிடத பதிநளன்சீர் வெண்பாவாற்
பேரார் புகழேந்தி பேசினன்—தாரார்
செழியனையுஞ் சென்னியையுஞ் சேரத் திறைகொள்
மொழியின் சுவையே முதிர்ந்து.

The famous Pukazhanthi, whose poetical excellence obliged Pandia and Chola kings adorned with victorious garlands to protect him, related the renowned history of Nala, the king of the great country of Nidhatha, in Venba metre, clothed in words pregnant with meaning.

(இ-ள்) தார் ஆர் - (வெற்றி) மாலைகள் பொருந்திய, செழியனையும் - பாண்டியனையும், சென்னியையும் - சோழனையும், சேர - ஒருமிக்க, திறைகொள் - அடிமையாக்கிய, மொழியின் சுவை - சொற்சுவையானது, முதிர்ந்து - முதிர, வெண்பாவால் - வெண்பாக்களால், பார் ஆர் நிடதம் - பூமியில் (பெருமை) பெற்றிருந்த நிடததேசத்தில், பதி - அரசனாகிய, நளன் சீர் - நளமகாராசனுடைய சிறப்புள்ள சரித்திரத்தை, பேர் ஆர் - (நல்ல) பேர் பெற்ற, புகழேந்தி - புகழேந்திப்புலவர், பேசினன் - பாடினார், எ - று.

புகழேந்திப் புலவருடைய கவித்திறத்தை நன்கறிந்து வரகுண பாண்டியனும் குலோத்துங்க சோழனும் ஆதரித்து வந்ததைக் குறிக்க "தாரார் செழியனையுஞ் சென்னியையுஞ் சேரத்திறைகொள்" என்றார்.

கடவுள் துணை.

நளவெண்பா

மூலமும் உரையும்.

நளனைக்குறித்துச் செய்யப்பட்ட வெண்பா என்பது பொருளாம். வெண்பா - வெண்பாவாலாகிய நூல்; இது கருவி ஆகுபெயராய் நின்றது. நளசரித்திர முணர்த்திய வெண்பாவாலாகிய நூல் என்பது திரண்டபொருள். இதை நளனது வெண்பா என ஆறும் வேற்றுமைத் தொகையாக் கொண்டாலும் பொருந்தும். விஷயமாயிருத்தல் வேற்றுமை பொருளாகிய சம்பந்தம்; ஆகவே நளனை விஷயமாகக் கொண்டவெண்பா என்பதாம், இருவகையிலும் கருத்திற் பேதமில்லை.

சுயம்வர காண்டம்.

தமயந்தியின் சுயம்வரத்தைக்குறித்துக் கூறிய காண்டம் எனப் பொருள் கொள்க. சுயம் - தன்னாலே, வரம்-வரித்தல், [இவன் கணவன் என்று ஏற்படுத்திக்கொள்ளல்.]; காண்டம் என்பதற்குக் கூட்டம் என்பது பொருள். ஆதலின் சுயம்வரத்தைக் குறித்த கதைகளின் கூட்டத்தை யுணர்த்திய பிரிவு என்பது கருத்து.

நூல்.

1. பாண்டவரின் முன்தோன்றல் பார்முழுதுந்தோற்
றொருநாள், ஆண்டகையே தூதுவனாய்ச் சென்
றவனி—வேண்ட, மறுத்தா னிருந்தானை மண்
ணொடும் போய் மாளப், பொறுத்தா னிருந்தான்
புலர்ந்து.

1. Dharmah, the first born of the sons of Pandu whose patience after the loss of his dominions at the game at dice, saw the destruction of Thuriyothana with his great armies, and who (latter) one day refused to restore the lost dominions at the request of Krishna who went to him as a mediator, lived downcast in a forest.

(இ-ள்.) பார்முழுதும் - பூமிமுழுதையும், தோற்று - தோற்றுவிட்டு, ஒரு நாள் - ஒருகாலத்தில், ஆண் தகையே - ஆண்மைக்குண நிறைந்த கண்ணனே, தூதுவனாய் - தூதனாகி சென்று - போய், அவனி - பூமியை, வேண்ட - தரும்படி கேட்கவும், மறுத்தான் - (அங்கீகரியாமல்) தடுத்தவனாகிய துரியோதனன், இரு தானை - பெரிய சேனையோடும், மண்ணோடும் - பூமியோடும், போய் -, மாள - நாசமாகும்படி, பொறுத்தான் - (மனங்கோணாமல்) பொறுத்துக் கொண்டிருந்த, பாண்டவரின் முன் தோன்றல் - பாண்டு குமாரருக்குள் முதல்வனாகிய அரசன் [யுதிட்டிரன்], புலர்ந்து - (துக்கத்தினால்) வாடி, இருந்தான் - (வனத்தில் வாசஞ்செய்துகொண்) டிருந்தனன், எ-று.

கண்ணன் தூதுசென்று பூமிவேண்டியது வனவாசத்தின் பின்னதாயினும், இந்நூல் செய்வதற்கு முற்பட்டதாகலின் அவர் பொறுமையைச் சிறப்பிக்கும் பொருட்டு ஈண்டு எடுத்துக் கூறினரென அறிக.

பாண்டவர்—பாண்டு என்கிற அரசனுடைய புத்திரர், தத்திதாந்த வடமொழி. தோன்றல்—தோன்றுதல், அதாவது விளங்கல், அல்லது உதித்தல், தொழிற்பெயர்; தோன்று-பகுதி, அல் - விகுதி, உகரக்கேடு - சந்தி, ஆகுபெயராய் அரசனைக்காட்டியது, இந்த அல் விகுதியையே அநுபவத்தினால் கர்த்தாப் பொருளைக் காட்டுவதெனக் கொள்வது நேர். முன்தோன்றல்— முன்னாய தோன்றலெனப் பண்புத் தொகையாகக் கொள்ளலாம். முன்தோன்றல் - முன் பிறந்தவன், தமையன் எனவும் பொருள் கொள்ளலாம். தோற்று—வினையெச்சம், இருந்தான் என்பதைக்கொண்டு முடிந்தது. தோல்—பகுதி ல் ற் ஆனது சந்தி, ற் - இறந்தகால இடைநிலை, உ - விகுதி. ஒருநாள்—பண்புத்தொகை. தகை—தகுதி, அதாவது நற்குணம், இது தொழிலடியாகப்பிறந்த தானாலும் பொருளாற் பண்புப்பெயர்; தகு - பகுதி, ஐ - விகுதி; முற்றியலுகரமாயினும் "முற்று மற்றொரோவழி" என்பதனால் உகரம் கெட்டது; உடையவனுக்கு ஆகுபெயர். பறவை என்பதில் போல ஐ கர்த்தாவைக் காட்டுவதெனவுங் கொள்ளலாம். ஆண்

தகை—இது பண்புப் பெயராயின், ஆறும் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்; கர்த்தாப்பெயராயின், பண்புத்தொகை; ஆணாகிய தகை என விரியும்; கருத்தில் ஆண்மைக்குணமுள்ளவனென்பதாம். இங்கு ஏகாரம் சிறப்பில் வந்ததெனக் கொள்ளல் வேண்டும். தூதுவன்—தூது (=தூதத்தன்மை) - பகுதி அன் - ஆண்பால் விகுதி, குற்றுகரம் கெடாது வகர வுடம்படு மெய் தோன்றியது சந்தி. வேண்ட என்பது காரணப்பொருட்டாய் வந்த செயவெனெச்சம். இதன்மேல் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மறுத்தான்—வினையாலணையும் பெயர், மறு - பகுதி, ஆன் - விகுதி, த் - இடைநிலை, த் - சந்தி. மறுத்தான் இருந்தானை—தரமாட்டேன் என்று மறுத்துத் தான் ஸ்திரமாயிருந்த துரியோதனனை என்றும் பொருளுரைக்கலாம். அப்போது மறுத்தானென்பது முற்றெச்சம், இருந்தான் என்பது வினையாலணையும் பெயர். மாள—காரியப்பொருட்டாய் வந்த செயவெனெச்சம். இகழப்பட்டவர் பொறுத்தல் இகழ்ந்தோர்க்குக் கேடாதலின், 'இருந்தானை மண்ணொடும்போய் மாள' என்றார். இருந்தானைமண்—உம்மைத் தொகையுமாம். முதலும்மை முற்றுப்பொருளது: இரண்டாவது எச்சவும்மை. (க)

2. நாட டின்கண் வாழ்வைத் துறந்துபோய் நான்மறை
   ஈட்டங்கள் சூழ விருந்தானைக்—காட்டில் [யோர்
   பெருந்தகையைக் கண்டார்கள் பேரெழிற்றோள்
   வருந்தகைய ரெல்லாரும் வந்து. [வேந்தர்

2. Dharma, having left his wealth behind him in his country, lived in a forest surrounded by a crowd of Brahmins, where kings with beautiful shoulders, who were fit visitors, came to see him.

(இ-ள்). நாட்டின்கண் வாழ்வை-நாட்டில் உண்டாகிய போகத்தை, துறந்து போய்-விட்டுபோய், நால் மறையோர்-பிராமணருடைய, ஈட்டங்கள்-கூட்டங்கள், சூழ-சுற்றிக்கொண்டிருக்க, காட்டில்-வனத்தில், இருந்தானை-வாசஞ்செய்துக்கொண்டிருந்தவனாகிய, பெருந்தகையை - பெரியகுணமுள்ள யுதிட்டிர மகாராஜனை, வரும் தகையர் - வளருங் குணமுள்ள வரான

பேர் எழில் தோள் - மிகுந்த அழகுள்ள புஜங்களையுடைய, வேந்தர் எல்லாரும்-அரசர் யாவரும், வந்து - (அக்காட்டிற்கு) வந்து, கண்டார்கள்—, எ-று.

காட்டின்கண் என்னுமிடத்தில் சாரியை னகரமாதலின் "இடையுரி" என்கிற [மெய் - புணரியல் ௩௪-ஆம்] சூத்திரப் படி றகரமாகத் திரியவில்லை. "ஒரு பொருண்மேல்" என்கிற சூத்திரவிதியை "இருந்தானைப் பெருந்தகையை" என்னுமிடத்துக்கொள்க. நான்மறையோர்—நான்கு வேதங்களை ஓது பவர் எனக்காரணக்குறி. மறை—யாவர்க்கும் சாதாரணமா காமல் மறைக்கப்படுதலால் மறை; செயப்படு பொருள் விகுதி குன்றியது. எட்டம்—எண்டு - பகுதி, அம் - தொழிற்பெயர் விகுதி, ணகரம் டகரமாக வலித்தது விகாரம்; சேர்ந்தவர்க ளுக்கு ஆகுபெயர். பெருந்தகை—பண்புத்தொகை, இதன் மேற் பிறந்த அன்மொழித்தொகையு மாகலாம். ஆண்டகை என்பதனையும் இவ்வாறு கொள்ளலாம். வருந்தகையர்—வரு வதற்குத் தகுதி யுள்ளவர்கள் எனவும் உரைக்கலாம் - தோ ளுக்கு எழிலாவது திரண்டு ஓங்கி வீரத்தனத்தைக் குறிப்பிக் கும்படியான நிலை. கண்டார்கள்—வினைமுற்று, (காண் குறு கி) கண் - பகுதி, ட் - இடைநிலை, ஆர், கள் - விகுதிகள்.(௨)

3. கொற்றவேற் றானைக் குருநாடன் பாலணைந்தான்
எற்றுநீர் ஞாலத் திருணீங்க—முற்றும்
வழிமுறையே வந்த மறையெல்லாந் தந்தான்
மொழிமுறையே கோத்த முனி.

3. The sage Vyasa, who, to remove the dark ignorance of the world which is surrounded by the moving waters, taught his disciples the Vedas which were traditionally handed over to him, and who embodied the puranas in a compact form, came and visited Dharma, the king of the Kuru country, who possessed armies with victorious weapons.

(இ-ள்.) எற்றும் - எறிகிற, நீர் - கடல்சூழ்ந்த, ஞாலத்து - பூமியிலுள்ள, இருள் - (அஞ்ஞான) இருள், நீங்க-நீங்கும்பொ ருட்டு, முற்றும் - முழுவதும், வழிமுறையே - ஆசார்ய பரம் பரையால், வந்த - (தனக்கு) ஓதக்கிடைத்த, மறை எல்லாம் -

நான்கு வேதங்களையும், தந்தான் - சிஷர் மூலமாகப் பரவச் செய்தவனாகிய, மொழி - (புராண) மொழிகளை, முறையே - வரன் முறையாக, கோத்த - (சுருக்கி) நூல்செய்த, முனி - வியாசமுனி, கொற்ற வேல் தானை - ஜயமுள்ள வேலேந்திய சேனையையுடைய, குரு நாடன்பால் - குருநாட்டின் அரசனாகிய யுதிட்டிரனிடத்து, அணைந்தான் - வந்து சேர்ந்தான், எ-று.

"வழிமுறையே வந்த மறையெல்லாந் தந்த மொழிமுறையே" எனவும்பாடம். தந்தமொழிமுறையே—அவ்வவற்றின் வாக்கியக் கிரமங்களின்படி எனப் பொருள்கொள்க; அதாவது இருக்கு முதலியவைகளைத் தனிதனியே ஒன்றாகச் சேர்த்தவர் என்பது கருத்து. ஆதியில் வேதங்களும் புராணங்களும் ஒன்று யுண்டாயினவென்று சாஸ்திர மிருப்பதால் மொழி என்பதற்கு வேதமல்லாத மொழி புராணம் என்று பொருள் கொள்ளப்பட்டது. வரன்முறையாவது எந்தெந்தச் சரித்திரம் எதெதி லிருக்கவேண்டுமோ அவ்வவ்வகையாம். முதல் இரண்டு என்கிறவரிசை யெனினும் ஒக்கும்.

கொற்றம்—கொல் - பகுதி, அம் - தொழிற்பெயர் விகுதி, து - சாரியை, பகுதி லகரமும் சாரியைத் தகரமும் றகரமானது சந்தி, உகரக்கேடும் அதுவே; ஜயம் என்பது பொருள்.

நீங்க என்பது, தந்தான் கோத்த என்பவைகளோடு கூடும். புராணங்கள் அவரவரால் செய்யப்பட்டவாயினும் நெடுங்காலமானது பற்றிச் சிதைந்துபோயின வாதலால் அவற்றை முறையே கோத்தார் வியாசமுனிவர். தந்தான் என்பதை முனியோடு ஒட்டுக. (௩)

4. மறைமுதல்வ நீயிங்கே வந்தருளப் பெற்றேன்
பிறவிப் பெருந்துயர மெல்லாம்—அறவே
பிழைத்தேன்யா னென்றானப் பேராழி யானை
அழைத்தேவல் கொண்ட வரசு.

4. The king (Dharma), who sent for Krishna, and employed him as his messenger, addressing Vyasa said: "O thou author of the Vedas; I have had the pleasure of seeing you come hither, and have in consequence escaped the great troubles arising from transmigration.

(இ - ள்) அப் பேர் ஆழியானை-அந்தப் பெரிய சக்கராயுதமுடைய கண்ணனை, அழைத்து-(தம்மிடம்) வருவித்து, ஏவல் கொண்ட -(தூது செல்லும்படி) ஏவலாளாகக்கொண்ட, அரசு-யுதிட்டிர மகாராஜன்,(அம்முனிவரைநோக்கி) மறை முதல்வ-வேதத்துக்கு ஆதாரமானவனே, பிறவி பெரு துயரம் எல்லாம் - பிறவியைப்பற்றிவரும் மூவகைத்துன்பங்களும், அற - நீங்க, நீ இங்கே—, வந்து அருளப்பெற்றேன்-கிருபைசெய்து வரப் பாத்திரமானேன், (ஆதலால்) யான் - நான், பிழைத்தேன் - தப்பினேன் [கடைத்தேறினேன்], என்றான் - என்று சொன்னான், எ-று.

நீ யிங்கே வந்தருளப்பெற்றேன் அதனால் பிறவிப் பெருந் துயரமெல்லாம் அறவே அற்றதனால், பிழைத்தேன் என்றான் எனக் கூட்டியு முரைக்கலாம். வந்து அருள - வந்து கிருபை செய்ய, பெற்றேன் என்னவுமாம். பெறுதல் செய்யப்படுபொருள் குன்றாவினையாதலால் செயவெ னெச்சத்தைத் தொழிற்பெயராகக் கொண்டு செயப்படுபொருளாக்குக. பிறவிபற்றிய துன்பங்களாவன :— ஆத்தியாத்துமிகம், ஆதிபவுதிகம், ஆதிதெய்விகம் என்பன. ஆத்தியாத்துமிகம் என்பது சரிரத்தைப்பற்றிவருந் தலைநோய் முதலியவையும் மனதைப்பற்றிய காமக்குரோத முதலியவையுமாம். ஆதிபவுதிகம் என்பது, மனிதர் மிருகம் பிசாசு முதலியவைகளால் நேரிடுவதாம். ஆதி தெய்விகம் என்பது, காற்று மழை வெயில் முதலியவைகளா லுண்டாவதாம்.

என்றான்—என் - பகுதி, இடைச்சொல்; விதம் என்பது அதன்பொருள்; ற் - இறந்தகால இடைநிலை, ஆன்-ஆண்பால் விகுதி; என்று சொன்னான் - இவ்விதமாகச் சொன்னானென்பது பொருள். என்று, என்றால், என, முதலிய எச்சங்களுக்கும் இவ்வாறே யுரைத்துக்கொள்க. (௪)

5. மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றா
ஓக்கிருக்கு முள்ளத் துரவோனே—சித்தம்[லும்
வருந்தியவா வென்னென்றான் மாமறையா லுள்ள
திருந்தியவா மெய்த்தவத்தோன் றேர்ந்து. [ம்

5. The great sage Vyasa whose mind is purified by the Vedas, seeing Dharma uneasy, addressed him thus "O thou who art equable in temper whether true prosperity or heavy affliction befalls thee what is the cause of thy sorrow?

(இ - ள்.) மா மறையால் - பெருமையான வேதத்தினால், உள்ளம் திருந்தி - மனம் சுத்தமாகி, அவாம்- இச்சிக்கத்தக்க, மெய்தவத்தோன் - மெய்யான தவஞ்செய்பவனாகிய வியாச முனிவன், தேர்ந்து - (காரியத்தை) அறிந்து, (அரசனை நோக்கி) மெய் திரு - மெய்யாகிய செல்வம், வந்து உற்றாலும் - வந்து சேர்ந்தாலும், வெம் துயர் - கொடிதான துன்பம், வந்து உற்றாலும்—, ஒத்திருக்கும் - (மாறுபடாமல்) ஒரு தன்மையதாய் இருக்கின்ற, உள்ளத்து - மனத்தை யுடைய, உரவோனே - பலமுள்ள அரசனே, சித்தம் - (உமது) மனம், வருந்தியஆறு- வருத்தப்பட்ட விதம், என் என்றான் - என்னவென்றுவினாவினான், எ-று.

மெய்த்திருவாவது நன்மைக்கு காரணமாயும் நிலைபெற்றிருக்கத்தக்கதுமான செல்வம்.

உற்றால்—உறு- பகுதி, உற்று என விகாரப்பட்டு, ஆல்என்னும் எதிர்கால வினையெச்சவிகுதி புணர்ந்தது. அவாம்-அவாவும் என்னும் செய்யுமென் வாய்பாட்டுப் பெயரெச்சம்; "செய்யுமெனெச்ச வீற்று" என்கிற [வினையியல் - உஉ- ஆம்] சூத்திரத்தினால் வு - என்னும் உயிர்மெய் கெட்டு வந்தது. திருந்தி என்னும் எச்சம், சினைவினையாதலின் அவாம் என்பதைக்கொண்டது; காரணப்பொருட்டாய் வந்த செயவெனெச்சத் திரிபெனவுங் கொள்ளலாம். உள்ளம் திருந்தியதனால் மெய்த்தவத்தை அவாவினவன் என்பது கருத்து.உரவோன்— உரம் - பகுதி, ஆன் - ஆண்பால் விகுதி, மகரக்கேடும் வகாரந் தோன்றியதும் சந்தி, ஆ ஓ ஆயிற்று; உரவு - பகுதி யெனினும் ஒக்கும். என்—எவன் என்கிற அஃறிணை வினைக் குறிப்பு இடைகுறைந்தது- இது அகர ஐகாரச் சாரியைகளைப் பெற்று என்ன என்னை என்றும் வரும். (ரு)

6. அம்பொற் கயிலைக்கே யாகத் தரவணிவார்
தம்பொற் படைக்குத் தமியனா—எம்பியைமுன்
போக்கினே னென்றுரைத்தான் பூதலத்து மீத
வாக்கினே ரில்லாத மன். [லத்தும்

6. The king (Dharma) whose veracity was matchless, alike on earth or in heaven, answered (Vyasa) saying—" I have already sent my brother, alone to the resplendant Kailasa, which is fabricated of silver, to obtain a golden weapon from Him whose body is adorned with serpants."

(இ - ள்.) பூதலத்தும் - பூமியிலும், மீதலத்தும் - மேலுலகத்திலும், வாக்கில் - (சத்திய) வசனத்தில், நேர் இல்லாத - ஒப்பில்லாத, மன் - யுதிட்டிரராஜன், அம் பொன் - அழகிய வெள்ளியாலாகிய, கயிலைக்கு - கயிலாசமலைக்கு, ஆகத்து-திருமேனியில், அரவு அணிவார்தம் - சர்ப்பங்களை ஆபரணமாகத் தரித்த சிவபிரானது, பொன் படைக்கு-பொன்போற் சொலிக்கும் அஸ்திரம் பெறுவதற்காக, எம்பியை - என் தம்பியாகிய அருச்சுனனை, தமியன் ஆ - ஒருவனாக, முன் - முன்னமே, போக்கினேன்- அனுப்பினேன், என்று—, உரைத்தான்- (அம்முனிவருக்குச்) சொன்னான், எ - று. ஏ - அசை.

பொன் என்பது பசும்பொன், செம்பொன், வெண்பொன், கரும்பொன் என்று பலவற்றிற்கும் பொதுப்பெயராகிற்றலின் இங்கு வெள்ளிக்குக் கொள்ளப்பட்டது.

கயிலைக்கு—குவ்வுருபு இடப்பொருளில்வந்து மயங்கிற்று படைக்கு—குவ்வுருபு பொருட்டுப்பொருளில் வந்தது. ஆ—ஆக என்பதில் ஈறுதொக்கது.

போக்கினேன்—பிறவினை, போக்கு - பகுதி, [போ - தன்வினைப்பகுதி, கு - பிறவினைவிகுதி], இன் - இடைநிலை, ஏன் - விகுதி. (௬)

7. காண்டா வனந்தீக் கடவுளுணக் கைக்கணையால்
நீண்ட முகிறடுத்து நின்றாற்கு—மீண்டமரர்
தாளிரண்டு நோவத் தனித்தனியேயோடியநாள்
தோளிரண்டு மன்றோ துணை.

7. On the day that he defeated the celestials, and made them flee, each in his own way, thus causing pain to both feet, were not his two shoulders a help to him who in order that the God of fire might consume the forest, of Kanda, standing, prevented, with an arrow he held in his hand, the wide-spread clouds from pouring down rain."

(இ - ள்.) காண்டா வனம் - காண்டவமென்கிற வனத்தை, தீ கடவுள் உண - அக்கினி தேவன் உண்ணும்படி, கைக்கணையால் - கையில் தரித்த அம்பினால், நீண்ட முகில் - பெரிய மேகங்களை, தடுத்து - (மழைபெய்ய வொட்டாமல்) நிறுத்தி, நின்றாற்கு - நின்ற அர்ச்சுனனுக்கு, அமரர் - தேவர்கள், மீண்டு - (அங்கு நின்றும்) திரும்பி, தாள்இரண்டும் - இரண்டுபாதங்களும், நோவ - துன்பப்பட, தனித்தனியே - ஒருவரோடு ஒருவர் சேராமல், ஓடிய நாள் - ஓடிப்போன காலத்தில், தோள் இரண்டும் அன்றோ - இரண்டு புஜங்களும் அல்லவோ, துணை - துணையாயிருந்தன, எ-று.

துஷ்டரான அசுரர் முதலானோர்கள் சேர்ந்து மிக்க நெருக்கமும் கொடுமையுமாயிருந்த காண்டவவனம் என்கிற பெருங்காட்டை அக்கினிபகவான் எரிக்க நினைத்துத் தேவேந்திரன் தன் தோழனாகிய தக்ஷகனுடைய குடும்பத்திற்காக அதைப் பாதுகாத்து வந்ததனால் அவனுக்கு அஞ்சி ஒரு பிராமணன் போல் வந்து அர்ச்சுனனை யாசிக்க அவன் ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய அனுமதியினால் எரிக்கும்படி உத்தரவு கொடுக்கவே அக்கினி அதிற் பற்றிக்கொண்டு தகித்தது. அப்போது இந்திரன் மேகங்களைக்கொண்டு மழை பொழிகையில் அதை அருச்சுனன் தடுத்தமையால் தேவதைகள் தன்மேல் எதிர்த்துவர அவர்களை முறியவடித்து ஓட்டினான் என்பது பாரதகதை. இப்படிப்பட்ட சுத்தவீரனுக்காக நீயேன் மனக்கவலை படுகிறாயென்று முனிவர் அரசனுக்குச் சொன்னார்.

காண்டாவனம்... காண்டவவனம் என்பதின் திரிபு. தீக்கடவுள் - தீயினது கடவுள், தீயாகிய கடவுள், என ஆறும் வேற்றுமைத் தொகையும் பண்புத் தொகையுமாம். முகிறடுத்து— "குறில் செறியாலள" என்கிற சூத்திரத்தில் 'உள பிற' என்

பதனால் வேற்றுமையிலும் லகரம் கெட்டதெனக் கொள்க. ஓசை நயம் பயன். (எ)

8. பேரரசு மெங்கள் பொருந்திருவுங் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானஞ் சேர்தற்குக்—காரணந்தான்
யாதோவப்பாவென்றா னென்றுந்தன் வெண்குடைக்
தீதோவப் பார்காத்த சேய். [கீழ்த்

8. The king (Dharma) who always, under his white umbrella, i. e. upright rule, protected his kingdom from evil, said;—"O Father, I know not the cause which led me to lose my extensive dominions, and my great wealth, and to come to this inaccessible and sultry desert.

(இ - ள்.) [இப்படிச்சொன்ன முனிவரை நோக்கி] என்றும் - எப்போதும், தன் வெண் குடைக்கீழ் - தன்னுடைய வெண்மையான குடை நிழலில், தீது - துன்பம், ஓவ-ஒழிந்துபோக, பார்-பூமியை, காத்த சேய் - பரிபாலனஞ் செய்த அரசன் [தருமராஜன்], அப்பா - அப்பனே, எங்கள் - எங்களுடைய, பேர் அரசும் - பெருமையான அரசாட்சியும், பெருதிருவும் - பெரிய செல்வமும், கைவிட்டு - இழந்து, சேர்வு அரிய - சேர்தற்குக் கூடாத, வெம் கானம்-கடினமான கானகத்தை, சேர்தற்கு - அடைதற்கு, காரணம் யாது - என்னகாரணம், என்றான்—எ-று.

தான் - ஓ - அசை. அப்பா என்பது இரக்கச் சொல்லுமாம்.

பேர்—பெருமையில் மை கெட்டு உயிர் முதன்மொழி வந்ததனால் ஈறுகெட்டு முதல் நீண்டது. "முற்றுமற்றொரோவழி" என்பதனால் உகரம் கெட்ட தென்னவுமாம். பெருந்திரு—இங்கு இனமிகல். சேர்வு—தொழிற்பெயர், நான்காம் வேற்றுமைத் தொகை. வெண்குடைகீழ் பார்காத்தலாவது நல்லரசாட்சியால் ஜனங்களைக் காத்தல். (அ)

9. கேடில் விழுச்செல்வங் கேடெய்தச் சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண்—வாடிக்
கலங்கலைநீ யென்றுரைத்தான் காமருவு நாடற்
கிலங்கலைநூன் மார்ப னெடுத்து.

9. The sage (Vyasa) whose breast was adorned with the shining and moving thread said to him (Dharma) who possessed the kingdom which was surrounded by extensive groves:—"Faint not thou in despair, for dost thou not see that it is the nature of kings, who wear garlands of petal-opened flowers, to play at dice, which is fatal to their inexhaustible and great wealth."

(இ-ள்.) கேடு இல்- கெடுதியில்லாத, விழு செல்வம்-பெருமையான செல்வம், கேடு எய்து- நாசம் அடையத்தக்க, சூது ஆடல்-சூதம் ஆடுவது, ஏடு அவிழ்-பூவிதழ்கள் விரியப்பெற்ற, தார் - மாலையணிந்த, மன்னர்க்கு - அரசருக்கு, இயல்பே-சுபாவமேயாம்; (ஆனதால்) நீ வாடி கலங்கலை - நீ உடம்பு மெலிந்து மனங் கலங்க வேண்டாம், என்று—, கா மருவு - சோலை நெருங்கின, நாடற்கு - நாட்டையுடைய அரசனுக்கு, [யுதிட்டிரனுக்கு], இலங்கு - விளங்கா நின்ற, அலை - அசைகின்ற, நூல் மார்பன் - பூணூலை மார்பில் அணிந்த முனிவன், எடுத்து உரைத்தான் - எடுத்துச் சொன்னான், எ-று.

இலங்கலை நூர்மார்பன் என்பதற்கு விளங்கா நின்ற அலை போலுஞ் சொற்பெருக்குடைய சாஸ்திரங்களை இருதயத்தில் தரித்தவன் எனவும் பொருள் கொள்ளலாம்.

ஏகாரம் தேற்றத்தில் வந்தது. காண் - அசை; நீபார் என்றும் பொருள் கொள்ளலாம். கலங்கலை என்பதில் ஐ சாரியை, கலங்கல் - எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. கலங்கு என்பதோடு எதிர்மறையைக் காட்டும் அல் சேர்ந்த கலங்கல் என்னும் பகுதி மேல் ஐ முன்னிலை யொருமை விகுதி வந்ததெனவுங் கொள்ளலாம். ஆயினும் மறுத்தலே பொருளான இல் எதிர்மறைவினைக்கு வருமல்லது (பர்யுதாஸம்) மற்றொன்றைத் தழுவும் பொருளதான அல் என்பது வருவது நோன்றென அறிக. இலங்குஅலை என்னும் இரண்டுவினைத்தொகையுமடுக்கினால் என்னும் பெயரைக் கொண்டன. விழுச்செல்வம்—விழுப்பமாகிய செல்வம் எனப் பண்புத் தொகை. எய்துசூது—வினைத் தொகை நிலைத்தொடர். எடுத்து உரைத்தலாவது காரணங்களோடு விவரித்துச் சொல்லுதல். (க)

10. கண்ணிழந்து மாயக் கவருடிக் காவலர்தா
மண்ணிழந்து போந்து வனநண்ணி—விண்ணிழந்த
மின்போலு நூன்மார்ப மேதினியில் வேறுண்டோ
என்போ லுழந்தாரிடர்.

10. O thou that hast on thy breast, thread as bright as lightning descended; Are there any kings on this earth who like myself have lost their wisdom and involved themselves in difficulties and troubles, by playing at deceitful dice, thus losing their kingdom and being forced to retire to the forest ?

(இ-ள்.) விண் இழந்த - வானத்தை விட்டுவந்த, மின் போலும் - மின்னலை யொத்த, நூல் மார்ப - பூணூலோடுகூடிய மார்பையுடையவனே, மேதினியில் - பூமியில், என்போல் - என்னைப்போல, கண் இழந்த - விவேகங்கெட்டு, மாய கவறு - மோசத்துக்கிடமாகிய சூதை, ஆடி—, மண் இழந்து - பூமியைத் துறந்து, போந்து - போய், வனம் - காட்டை, நண்ணி - சேர்ந்து, இடர் - ஆபத்தினுல், உழந்தார் - வருந்தினவரான, காவலர் - அரசர். வேறு உண்டோ—, (என்று யுதிட்டிரன் வினவினன்,) எ-று. தாம் - அசை.

கண்—உவமையாகு பெயர், காண் என்னும் பகுதி முதல் குறுகி கருவிப்பொருள் விகுதி கெட்டு வந்தது; காண்பதற்கு கருவியாயுள்ளது; அல்லது கண் = கண்ணுதல்—சிந்தித்தல், இப்பகுதிமேல் அவ்விகுதி குன்றிவந்த தெனவுங் கொள்ளலாம். போந்து—போ - பகுதி, உ - விகுதி, த் - இறந்தகால இடைநிலை, சந்தியால் இரட்டித்த தகரம் நகரமாய் விகாரப்பட்டது. இது புகுந்து என்பதின் விகாரம் எனவுங் கொள்வர். காவலர்—காவல் அர் எனப்பிரித்து காக்கும் அதிகாரமுடையவர் எனவும், கா வலர் எனப் பிரித்து காத்தலில் வல்லவர் எனவும் கொள்ளலாம். புரவலர் முதலானவையு மிப்படியே. கா - முதனிலைத் தொழிற் பெயர். வேறு—குறிப்பு வினையாலணையும் பெயர், "வேறில்லை யுண்டைம் பானூ விடத்தன" [வினை - உ0 - சூத்திரம்.] (க0)

11. சேமவேன் மன்னனுக்குச் செப்புவான் செந்தனிக்
காமவேற் காளை நளனென்பான்—யாமத் [கோல்

தொலியாழி வைய மொருங்கிழப்பப் பண்டு
கலியால் விளைந்த கதை.

11. (Vyasa) related to king Dharma, who was possessed of dreadful weapons, the story of the hero Nala, who had a straight unequalled sceptre, and who at midnight was made by Kali to lose the whole of his kingdom, which was surrounded by the roaring ocean.

(இ-ள்.) செம் தனி கோல்-செம்மையாகிய ஒப்பற்ற செங்கோலையும், நாமம் வேல் - பயத்தை யுண்டாக்கும்படியான ஆயுதத்தையும் உடைய, காளை - வீரனான, நளன் என்பான் - நளன் என்று சொல்லப்பட்டவன், யாமத்து - நடு இராத்திரியில், ஒலி - (விசேஷமாக) ஒலிக்கின்ற, ஆழி - சமுத்திரஞ் சூழ்ந்த, வையம் - பூமியை, கலியால் - கலிபுருஷனால், ஒருங்கு—ஒருமிக்க [சேர்ந்ததாய்], இழப்ப - இழந்துபோகும்படி, பண்டு - பூர்வத்தில், விளைந்த கதை - நேர்ந்தகதையை, சேமம் - காவல் செய்யத்தக்க, வேல் - ஆயுதத்தைத் தரித்த, மன்னனுக்கு - தருமபுத்திர மஹாராஜனுக்கு, செப்புவான் - சொல்லத்தொடங்கினான் (அந்த வியாசமுனி), எ-று.

ஒலி—வினைத்தொகை. ஒருங்கு—வரிப்புனைபந்து என்பது போல் முதனிலையே வினையெச்சமாக வந்தது. செப்புவான் என்பது இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமானது. [பொதுவியல் - ௩௩-வது - சூ.] ஆழி—ஆழ் - பகுதி, இ - இடப்பொருளைக்காட்டும் விகுதி, எதுவும் அமிழ்ந்துபோகுமிடம் என்பது பொருள்; அல்லது ஆழ்தல்—தாழ்தல், அதனையுடையது எனவுமாம். அப்போது விகுதி கர்த்தாவைக்காட்டும். நளனென்பான் என்னு மெழுவாய் இழப்ப என்பதிலும், இழப்ப என்னும் வினையெச்சம் விளைந்த என்னும் பெயரெச்சத்திலும் முடிந்தன. வியாசமுனி—தோன்றா எழுவாய்; செப்புவான் - பயனிலை; கதை - செயப்படுபொருள். (கக)

12. காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் றளையவிழப்-பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு. [ழ்

12. The country (of Nala), where the tank fish glide along gracefully, where the buds of the dark-lily blossom, and where the good honey-comb of the lotus bursts open, and which is worthy of pre-eminence in this good earth surrounded by water, is like the sporting of the eyes of the goddess of the earth.

(இ-ள்.) சாகரம் சூழ் - சமுத்திரம் சூழ்ந்த, நல் நாட்டில் - நல்ல தேசங்களில், முன் காட்டும் - முதலிலே வைக்கத்தக்க, நாடு - (நளனுடைய) தேசமானது, காமர் - அழகாகிய. கயல்-மீன்கள், புரள - புரண்டுவருதலாலும், காவி முகை-நீலோற்பல முகிழ்கள், நெகிழ - மலர்தலாலும், தாமரையின் - தாமரைப்பூவினது, செம் தேன் தனை - நல்ல தேனோடுகூடிய கட்டானது, அவிழ - விரிதலினாலும், பூமடந்தைகள் - திருமகளுடைய, நாட்டம் போலும்- கண்ணையொத்த, தகைமைத்து-குணமுள்ளது, எ-று. ஏ - அசை-

கண்ணானது புரளுங் கயல்போலவும் மலர்கின்ற குவளையும் தாமரையும் போலவும் இருக்கும், ஆதலால் நீர்வளப்பத்தாலாகிய பொலிவுபற்றி அந்நாடு திருமகளின் கண்ணோடு உவமிக்கப்பட்டது. அன்றியுந் தன்னாட்டம் என்பதில் ஆட்டம் எனப் பதம் பிரித்துத் திருமகளின் நர்த்தனம்போ லிருந்ததெனப் பொருள்கூறினு மமையும்; அந்தப்பக்ஷத்தில் கயல் என்பதைக் கண்ணாகவும், காவி - சிவந்த, முகை - (அல்லி) மொக்குள், எனக்கொண்டு, இதழாகவும், தாமரை என்பதை முகமாகவும், செந்தேனைப் பாடும் பாட்டாகவும், உருவகவுயர்வு நவிற்சியணியாகக் கொள்ளவேண்டும்; ஆடுங்கால் கண் புரள்வதும், உதடு விரிந்து தோன்றுவதும், முகம் மலர்ந்து இனிய பாடல் உண்டாவதும் முறையாதலா லென்க.

பூமடந்தை - தாமரைமலரில் வீற்றிருக்கும்பெண், பூதேவி என்று பொருள் கொள்ளலுமாம். தன்—தான் என்பதின் விகாரம். அந்நாட்டின்பெயர் நிடதம், புரள முதலிய செயவெனெச்சம், மழைபெய்ய நெல்விளைந்த தென்பதிற்போலக் காரணப்பொருட்டாய் வந்தன, காமர்—உரிச்சொல். நாட்டம்—நாடு - பகுதி, அம் - கருவிப்பொருள் விகுதி, "நெடிலோடுயிர்த்தொடர்" என்னுஞ் சூத்திரத்தில்மிக என்றதனால்

இங்கேயும் டகரம் இரட்டித்தது; உகரம் கெட்டது சந்தி. ஆட்டம்—ஆடு - பகுதி, அம்- தொழிற்பெயர்விகுதி, மற்றவை முன்போல். தகைமைத்து—ஒன்றன்பால்குறிப்புவினைமுற்று, தகைமை-பண்புப்பெயர்ப்பகுதி, து - விகுதி, த் - சந்தி. (கஉ)

13. கோதை மடவார்தங் கோதின் மெயிற்றி மிர்ந்த
சீத களபச் செழுஞ்சேற்றுல—வீதிவாய்
மானக் கரிவழுக்கு மாவிந்த மென்பதோர்
ஞானக் கலைவாழ் நகர்.

13. There is a town called Mavindum, which abounded in living literature and science, and in whose streets the elephants slid on the rich and cool mixture of sandal which the garland-bedecked females daub on their bodies.

(இ - ள்.) கோதை மடவார்தம் - மாலைசூடிய பெண்களுடைய, கோது இல் - குற்றமில்லாத, மெய்யில் - உடம்பில், திமிர்ந்த - பூசிய, சீத களபம் - குளிர்ச்சியான கலவைச் சாந்தாகிய, செழும் சேற்றுல் - வளமான சேற்றினால், வீதிவாய் - தெருக்களில், மானம் கரி - பெருமையான யானைகள், வழுக்கும் - சறுக்கிவிழப்பெற்ற, மாவிந்தமென்பது - மாவிந்தமென்று சொல்லப்பட்ட, ஞானம் கலை - ஞானசாஸ்திரங்கள், வாழ் - வாழும் இடமான, ஓர் நகர் - ஒருபட்டணம் (உண்டு,) எ-று.

அப்பெண்கள் நீராடுவதினுற் சந்தனச்சேறு உண்டாயிற்று என்பது கருத்து. இதனுல் அந்நகரத்தின் செல்வமிகுதி குறிப்பிக்கப்பட்டது. கோதைபோன்ற மடவார் எனவுங் கொள்ளலாம்.

வாழ்—வினைத்தொகை, இது பெயரெச்சத்தின் விகாரமாதலின் பெயரெச்சத்தின் முடிபுகளைக்கொள்ளும். "செய்வதாதியறுபொருட்பெயரு மெஞ்சநிற்பது பெயரெச்சம்மே" என்ற [வினையியல் உக-ம்]சூத்திரப்படி வாழ் என்பது நகர் என்னும் இடத்தைக்கொண்டது. சீதகளபம் என்பது வடநூன் முடிபாதலின், இயல்பாயிற்று. சீதக்களபம் என்று தமிழ்முடிபாகவும் கொள்ளலாம். 'கொங்கைமிசைத்திமிர்ந்த' எனப்பாடமும் உண்டு. (கங)

**14. நின்றுபுயல் வானம் பொழிந்த நெடுந்தாரை
என்று மகில்கமழு மென்பரால்—தென்றல்
அலர்த்துங் கொடிமாடத் தாயிழையா ரைம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து.**

14. They say that long streaks of water which the standing clouds pour from the sky always smell of sandal, since on the terraces of lofty houses, upon which the flags flutter in the south wind, the maidens who are adorned with the choicest jewels, (after bathing) dry their hair in the smoke (of the sandal incense) which goes up into the skies.

(இ - ள்.) தென்றல் - தென்காற்று, அலர்த்தும் - அசையச் செய்கின்ற, கொடி - கொடிச்சீலைகளையுடைய, மாடத்துக் உபரிகைகளில், ஆய் இழையார் - ஆய்ந்த ஆபரணங்களைத் தரித்த பெண்கள், ஐம்பால்-கூந்தல்களை, புலர்த்தும்-உலர்த்துகிற, புகை - அகிற்புகை, வான் புகுந்து-வானத்திற் பிரவேசித்து (இருப்பதினாலே,) வானம் - ஆகாசத்தில், நின்று - இருந்து, புயல் - மேகம், பொழிந்த - பெய்த, நெடு தாரை - பெரிய மழைத் தாரையானது, என்றும் - எப்போதும், அகில் கமழும் - அகில் வாசனைவீசும், என்பர்-என்றுசொல்வர்,எ-று. ஆல் - அசை.

இதுவும் அந்நகரத்தின் வளத்தைக் குறித்தது. புகுந்து என்னும் செய்தென் எச்சம் கமழும் என்னும் பிறசுருத்தாவினையோடு முடியாதாதலின் 'இருப்பதினால்' என்பது வருவிக்கப்பட்டது. "சொற்றிரியினும்" என்கிற [வினையியல் உஎ-ம்] சூத்திரவிதியினால் புகுந்து என்பது புக என்பதில் திரிபெனக்கொண்டு காரணப்பொருட்டாய்க் கொள்ளினும் பொருந்தும். ஐம்பால் - ஐந்து பகுப்பினை யுடையது; அவையாவன— உச்சியில் முடிதலாகிய முடியும், பக்கத்தில் முடித்தலாகிய கொண்டையும், பின்னே செருகலாகிய சுருளும், சுருட்டி முடித்தலாகிய குழலும், பின்னிவிடுதலாகிய பனிச்சையுமாம்.

அலர்த்தும் கொடி—பெயரெச்சம், செயப்படு பொருளைக் கொண்டது. புலர்த்தும்புகை—இக்கேகருவியைகொண்டது.

15. வெஞ்சிலையேகோடுவனமென்குழலேசோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன—கஞ்சம்
கலங்குவன மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு.

15. The only curved things in this city are the cruel bows; the only thing which gets loose is the soft hair of females; the only things which open their mouths and lament are the ankle ornaments; the only thing which trembles is water, the only things, which go astray from the right path are the eyes of the maidens who sit on the terraces of houses.

(இ-ள்) வெம் சிலையே - கடுமையான வில்லே, கோடுவன- கோணலாகுவன (மற்றவையும் அல்ல); மெல் குழலே — மெல்லிய கூந்தலே, சோருவன - தளர்ச்சியடைவன ; அம் சிலம்பே - அழகிய சிலம்பு என்னும்(ஆபரணமே,)வாய்விட்டு- வாய்திறந்து, அரற்றுவன - கதறுவன; கஞ்சம் - தண்ணீரே, கலங்குவன-கலங்கிப்போவன ; (அல்லது) [கஞ்சம் - கைத்தாளங்கள், கலங்குவன - பல ஒன்றாய்ச் சேர்ந்து ஒலிப்பன]; மாளிகை மேல் - வீடுகளின்மேலுள்ள காரிகையார் - பெண்களுடைய, கண்ணே - கண்களே, மெய்நெறியை விட்டு- நேரானவழியை விட்டு, விலங்குவன - ஒதுங்கிப்போவன, எ-று.

கஞ்சம் என்பது சங்குமாம்; தாளத்தை யுணர்த்தும்போது இது காம்ஸ்யம் என்னும் ஆரியத்தின் திரிபேயாதலால் வெண்கலத்தினாற் செய்த பலதாளங்களுக்குமாமென அறிக. கம் - நீரில், சங்கு-சங்குகளே, அலங்குவன-அலைந்து கொண்டிருப்பன எனவுங் கொள்ளலாம்.

மற்றவையும் அல்ல என்பதை ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் ஏகாரத்தைக் கஞ்சம் என்பதோடுங் கூட்டிக் கொள்க. அந்நகரிலுள்ளாரில் யார்க்கும் கோடுதல் முதலான துர்க்குணங்களில்லையென்பது கருத்து. இதுவும் அந்நகரின் பெருமையை யுணர்த்தியது.

காரிகை - அழகு, அதனையுடையார் காரிகையார். காரிகை— பெண் எனக் கொள்ளின், ஆர் பலர்பால் விகுதி.

பெண்கள் அன்பினாலும், நாணத்தினாலும், கோபத்தினாலும், நேராகப் பாராமல் கீழ்வளைத்துப் பார்த்தல் இயல்பாதலால் மெய்க்நெறியைவிட்டுவிலக்குந்தன்மைஅக்கண்களுக்கேயன்றி மற்றவைகளுக்கு இல்லை என்பது. [உயிர் புணரியல் அ-ம் சூத்திரம்] "குறில்வழி யத்தனி யைந்நொதுமுன்மெலி மிகலு மாம்" என்பதனால் மெய்க்நெறியென நகர மிகுந்தது. ஏகாரங்கள் பிரிநிலையில் வந்தன. (கரு)

16. தெரிவன நூ லென்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே—ஒருபொழுதும்
இல்லா தனவு மிரவே யிகழ்ந்தெவரும்
கல்லா தனவுங் கரவு.

16. That which is ever studied is literature and science; that which is never seen is the waist of females, who wear striped bangles; that which is never found is beggary; and that which is ever despised by all and never studied is deceit.

(இ-ள்.) என்றும் தெரிவன-எக்காலமும் யாவராலும் அறியப்படுவன, நூல் - சாஸ்திரங்களே (அன்றிமந்திராலோசனை முதலியவையல்ல); தெரியாதனவும்-காணப்படாதனவும், வரிவளையார் தங்கள் - சித்திரரேகைகளுள்ள வளைகளையணிந்த பெண்களுடைய, மருங்கே - இடையே (அன்றி ஞாயமுதலானவையல்ல;) ஒருபொழுதும் - எப்போதும், இல்லாதனவும்- இல்லாத பொருள்களும், இரவே - இரக்குந்தொழிலே (அன்றிச் சுகந்துக்கு வேண்டியவையல்ல) ; எவரும் - எப்படிப்பட்டவரும், இகழ்ந்து - தூஷித்து, கல்லாதவனும் - கல்லாமல் விட்டவையும், கரவு - வஞ்சனையே (அன்றி மற்ற மெஞ்ஞான வகைகள் அல்ல) ; எ-று.

இவ்விரண்டு பாட்டும் ஒழித்துக் காட்டல் அணி.

கல்லாதன என்பது "செயப்படு பொருளை" என்கிற [பொருளியல் சகூ-ம்] சூத்திரவிதியைக் கொண்டது. (கசா)

17. மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி [பூந்
தாமரையாள் வைகுந் தடந்தோளான்— காமரு

தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி.

17. We may say that the capital of king Nala, who rules the earth is like the city of Muranai, the capital of king Swarki, who is as beautiful as the moon, who was born to uphold the great institutes of Manu, upon whose broad shoulders Lakshmi dwells, and who is decked with garlands of beautiful flowers.

(இ-ள்.) மா மனு நூல் - பெருமை பொருந்திய மனுதரும நூலானது, வாழ - வாழ்வதற்கு, வரு-உற்பவித்த, சந்திரன்-சந்திரன் போன்றவனும், தாமரையாள் - திருமகள், வைகும்-வாழ்கின்ற, தடம் - விசாலமாகிய, தோளான்-தோளையுடையவனும், காமர் - அழகிய, பூந்தாரன் - பூமாலை தரித்தவனும் ஆகிய, சுவர்க்கி - சுவர்க்கி யென்பவனுடைய, முரணை-முரணை யென்னும், நகர்தான்என்று - நகர் இது என்று, சாற்றலாம்-சொல்லக்கூடும், பார் ஆளும் - பூமியை ஆளுகின்ற, வேந்தன்-நளமகாராஜனுடைய, பதி-ஸ்தானமாகிய மாவிந்த நகரத்தை, எ-று.

சந்திரன் சுவர்க்கியென்று ஒரு பெயராகவுங்கொள்ளலாம். இவ்வரசன் இந்நூலாசிரியர்க்கு உதவி செய்தவன், ஆனது பற்றி இவனை எற்குமிடமறிந்து புகழ்ந்து பேசுவர். வேந்தன் பதியை முரணைநகர் என்றுசாற்றலாம் எனக்கூட்டிக்கொள்க. சாற்றல் - எழுவாய், ஆம் - பயனிலை. வேந்தன்பதி - எழுவாய்; சாற்றல் ஆம் - பயனிலை என்னவுமாம்; சாற்றற்கு ஆம் என்பது பொருள். இவன் திருமாலின் அவதாரம் எனக் குறிப்பித்தற்கு, "தாமரையாள்வாழுந் தடந்தோளான்" என்றார். (கஎ)

18. ஓடாத தானை நளனென் றுளனொருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ—டேடா
முருகுடைய மாந்தர் முகைநெகுந் தண்டார்
அருகுடையான் வெண்குடையா னங்கு.

18. There was one Nala, who commanded armies that never retreated in battle, who ruled his country under a white umbrella, and who decorated his chest with garlands

abounding in honey which wets the faces of men and feeds friendly bees.

(இ-ள்.) ஆங்கு - அப்பட்டணத்தின்கண், பீடு - பெருமை, ஆரும் - நிறைந்த, செல்வம் - செல்வமுள்ள, பெடை - பெண் வண்டு, வண்டோடு - ஆண்வண்டோடு, ஊடா - பிணங்கினதனால், முருகு உடைய - உள்ளிருந்த தேன் பெயர்ந்துவர, அருகு-சமீபத்திலுள்ள, மாந்தர் முகம் - மனிதருடைய முகத்தை, நனைக்கும் - நனைக்கும்படியான, தண் தார் - குளிர்ச்சியான மாலையை, உடையான் - உடையவனும், வெண்குடையான் - வெண்மையான குடையுடையவனும் ஆகிய, ஓடாத தானை - தோற்காத சேனையுள்ள, நளன் என்று-நளனென்று சொல்லப்பட்டு, ஒருவன் - ஓரரசன், உளன் - இருந்தான், எ-று.

வண்டு ஊடுகையில் விசையாய் மலர்களின்மேல் உழுதுகொண்டு செல்வதனால் உள்ளிருந்த தேன் வெளிப்பட்டதென அறிக. வண்டுக்குச் செல்வமாவது பொன்சிறகுடைமை.

ஊடா என்பதைக் காரணப்பொருட்டாய் வந்தசெயவென்னெச்சத்தின் திரிபெனக் கொள்க. "மாதர் முலை நனைக்கும்" என்றும் பாடம் உண்டு. (கஅ)

19. சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் றனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்தும்
ஒரு கூட்டில் வாழ வுலகு.

19. The garland bedecked Nala governed the world alone, under a cool moon-like umbrella that justice might prosper un-interrupted and that the green parrots, which feed by the side of women, might live together in the same cage with the kite, which is naturally enemies.

(இ-ள்.) தாது அவிழ் - வாசனைப்பொடி உதிருகின்ற, பூ தாரான் - பூமாலையையுடைய நளமகாராஜன், சீதமதி - குளிர்ச்சியான சந்திரனைப்போன்ற, குடைகீழ் - குடையின் கீழ், அறம் - தருமம், செம்மை - நன்றாக, கிடப்ப - இருக்கும்படியும், மாதர் - பெண்கள், அருகு - சமீபத்தில், ஊட்டும் - (பால் முதலியவைகளை) உண்பிக்கப்பெற்ற, பை இனியும் -

பசுமையான கிளியும், ஆடல் பருந்தும் - போர் செய்கின்ற பருந்தும், ஒரு கூட்டில் - ஒரே கூண்டில், வாழ - வாழும்படியும், உலகு - உலகத்தை, தனு - ஒப்பில்லாமல், காததான் காப்பாற்றினன், எ-று.

குடையென்பது ஆகுபெயராய் அதிகாரத்தையுணர்த்திற்று. இடப்பு, வாழ, என்பவை வினைச்செவ்வெண் ஆதலின் எண்ணும்மை வருவிக்கப்பட்டது. (கக)

20. வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினன்-தேங்குவ
தேனாடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன் [ளைத்
பூநாடிச் சோலை புக.

20. Nala, who possessed a well watered country in which the bees, having bathed in the sweet honey of the kuvalai flower, dried their wings on his way to the flower garden, went through the forest of the gazing eyes of females, whose faces resembled the moon, and whose hands were adorned with bangles.

(இ - ள்.) தேங்குவளை - வாசனை பொருந்திய குவளைப்பூவினது, தேன் - தேனிலே, ஆடி - நீராடி, வண்டு - வண்டுகள், சிறகு உலர்த்தும்-சிறகுகளை உலர்த்தும்படியான, நீர் நாடன் - நீர்வளமுள்ள நாடுடைய நளன், பூ நாடி - மலர்களை இச்சித்து சோலை புக - தோட்டத்திற் போவதற்கு, வாங்கு-கொண்ட, வளை கையார்- வளையல்களுள்ள கைகளையுடைய பெண்களின், வதன மதி - முகமாகிய சந்திரனிடத்து, பூத்த —, பூ குவளை காடு இடையே-(பார்வையாகிய) அழகிய நீலோற்பலக்காட்டினடுவில், போயினன் - போனன், எ-று.

நளன் பெண்கள் தன் கட்டழகை வியந்து பார்த்துக்கொண்டிருக்கச் சென்றான் என்பது கருத்து.

பூநாடி என்பதற்குப் பூக்கும்படியான நாம்புள்ள என்று பொருள்கொண்டு சோலைக்கு விசேடணமாக்கினு மமையும். வாங்கு என்பதற்கு வாங்கிப்போன [கழன்றுபோன], வளைக்கையார் எனவும் பொருள் கொள்ளலாம்; அப்போது அவனைப் பார்த்துக் காதல்கொண்டமையால் உடம்புமெலிய வளைகழன்

றது என்பது கருத்தாம். வாங்குதல் அழைத்தலுமாதலால் தம்மொலியால் அரசனை அழையாநின்ற என்னவுமாம். (உ0)

21. வென்றி மதவேடன் வில்லெடுப்பவீதியெலாம்
தென்றன் மதுநீர் தெளித்துவர—நின்ற
தளவேனல் மீதலருந் தாழ்வரைசூழ் நாடற்
கிளவேனில் வந்த தெதிர்.

21. The morning sun shed its rays against Nala, who possessed the vale-girt country, where the jessamine branches out over the millet and flower, where cupid uses his bow (with flowered arrows,) and where the south wind sprinkles honeyed water all through the streets.

(இ - ள்) வீதி எலாம் - தெருக்களில் எல்லாம், வென்றி-வெற்றி பொருந்திய, மதன் வேடன் - மன்மதனாகிய வேடன் வில் எடுப்ப - வில்லையெடுத்து நிற்கும்படியாகவும், தென்றல்-தென்காற்று, மது நீர் - தேனாகிய நீரை, தெளித்து வர - தெளித்துக்கொண்டு வரவும், நின்ற-நிலைபெற்ற, தளவு - முல்லைக்கொடி, ஏனல் மீது - தினையின் மேல், அலரும் - மலரும்படியான, தாழ் வரை - மலைகளின் தாழ்வரைகள், சூழ் - சூழ்ந்த, நாடற்கு - நாடுடைய நளனுக்கு, இள வேனில் - இளவேனிற் காலமானது, எதிர் வந்தது - எதிர்ப்பட்டது, எ - று [இளவேனில் - வசந்தகாலம்].

ஒரு பிரபு வருகையில் மெய்காப்பாளன் விற்பிடித்து உடன்வருதலும் வாசனை நீரை வழியில் தெளித்திருத்தலும் இயல்பாதலின், வசந்தன் பிரபுவாக அங்ஙனம் அமைந்தானென்பதும், அந்தப்பிரபு சோலைக்குரியவனாதலின் அரசனை எதிர்கொண்டான் என்பதும் குறிப்புப்பொருள். மன்மதன் வில்லெடுக்க என்பது பெண்கள் ஆசைகூர என்கிறபடி.

வென்றி—வெல் - பகுதி, றி - தொழிற்பெயர் விகுதி, லகரம் றகரம் ஆனது சந்தி, றகரம் னகரம் ஆனது மெலித்தல் விகாரம். மதன் வேடன் என்பது "சிலவிகாரமா முயர்திணை" என்பதனால் மதன்வேடன் என்றாயிற்று; அன்றி, வேள் தன்னைப்பிரிக்கினும் அமையும். இளவேனில் எதிர்வந்தது என்றால்தென்றல்முதலியகுறிப்பாற்றோன்றியதென்கிறபடி.(உக)

22. தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனனனைப்ப வேயடைந்தான்-கார்வண்டு
தொக்கிருந் தாலித் துழலுந் தூங்கிருள்வெய் யோற்
புக்கிருந்தா லன்ன பொழில்

22. Nala, the dust of whose car (flying about) gets soaked in the scented water on the flower-bedecked hair of jewelled maidens retired into a grove, where the black bees swarmed together, flying about joyfully, and where abounded perpetual darkness, which retreated before the rays of the sun.

(இ-ள்.) தேரின் - தேரினின்றும் உண்டாகிய, துகளை - பொடியை, திருந்து இழையார் - திருத்தமான ஆபரணம் பூண்ட பெண்களினுடைய, பூங்குழலின்-பூச்சூடிய கூந்தலி னுண்டாகிய, வேரிபுனல் - வாசனைநீர், நனைப்ப - நனைக்கும் படி, கார் வண்டு - கறுத்தவண்டுகள், தொக்கு இருந்து - சேர்ந்திருந்து, ஆலித்து - களித்து, உழலும் - சுழலப்பெற்ற, தூங்கு இருள் - அசையாத இருட்டு, வெய்யோற்கு - சூரிய னுக்கு, ஒதுங்கி—, புக்கு - புகுந்து, இருந்தால் அன்ன - இருந் தா லதை யொத்திருக்கின்ற, பொழில் - சோலையை, அடைந் தான் - (நளன்) சேர்ந்தான், எ - று. ஏ - அசை.

இவன் போக்கைப் பெண்கள் கூந்தல்சோர வியந்து பார்த் துக்கொண் டிருக்கையில் துகள் கூந்தலில் படிந்து வாசனை நீரால் நனைக்கப்படுகின்ற தென்பதாம்.

இங்கு உழலும், அன்ன, இவ்விரண்டு பெயரெச்சங்களும் அடுக்கிப் பொழில் என்பதைக்கொண்டன.சூரியனுக்குஒதுங்கி என்றால் சூரியனுக்கு அஞ்சி என்பது கருத்து. தேரின்—இன் - ஐந்தனுருபு, எதுப்பொருளில் வந்தது; ஆறனுருபோடு வந்த சாரியையுமாம். வேரிப்புனல்-பூந்தேன்' காலையில் நீராடி நிற் கும் பெண்களின் கூந்தலினீர் என்னவுமாம். தொக்கு—செய் தென்வாய்பாட்டு வினையெச்சம், தொகு - பகுதி, உ-விகுதி, ககரம் இரட்டித்துக் காலங்காட்டிற்று, உ - கெட்டது சந்தி. அன்ன—குறிப்புப்பெயரெச்சம், அ - பகுதி, இடைச்சொல், அ-விகுதி, ன்-சாரியை, சாரியையாய்வந்த னகர மிரட்டியது

சந்தி. அன் - பகுதி என்னவுமாம். சுட்டின்மேல் விதத்தைக் காட்டும் ன் என்கிறவிகுதிசேர உண்டாகியதோர் இடைப்பகுபதமென்பது நியாயத்திற்கு ஒத்திருக்கின்றது. இன்ன என்பது மிப்படியே. அங்கு அன்று முதலியவைகளுக்கும் இவ்வாறே உறுப்பமைத்தல் தக்கது. (உஉ)

23. நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன், தா
ணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணி
றத்தான், முன்னப்புட் டோன்று முளரித் தலை
வைகும் அன்னப்புட் டோன்றிற்றே யாங்கு.

23. Before the upright Nala, appeared in the garden a swan that lived on a lotus in the tank, changing the dark hun of the garden with the bright colour of his body and imparting to the waters the red-colour of its long feet.

(இ-ள்.) ஆங்கு - அச்சோலையில், மாண் நிறத்தான் - பெருமையான குணமுள்ள நளனுக்கு, முன் - எதிரில், நீள் நிறத்தால் - பிரகாசமான தனது தேகநிறத்தினால், சோலை-அந்தத் தோட்டம், நிறம் பெயர - நிறம் மாறிநிற்க, நீடிய - மிகுந்த, தன் தாள் நிறத்தால் - தன்னுடைய பாதத்தின் நிறத்தினால், பொய்கை தலம் - தடாகத்தின் இடம், சிவப்ப - சிவந்து காண, அப்புள் - தண்ணீரில், தோன்றும் - உண்டாகிய, முளரித்தலை - தாமரையின்மேல், வைகும் - வாசஞ்செய்கின்ற, அன்னப்புள் - அன்னப்பக்ஷி, தோன்றிற்று - காணப்பட்டது, எ-று. ஏ - அசை.

மாணிறத்தான்- மாட்சியுள்ள மார்புடையவன் எனவுமாம். உடம்பெல்லாம் வெளுத்து மூக்கும் காலுஞ் சிவந்திருக்கும் ராஜஹம்சம் என்பர்.

நீடிய என்பது நிறத்தின் விசேடணம். பெயர, சிவப்ப—இவ் விரண்டெச்சங்களும் தோன்றிற்று என்பதில்முடிந்தன, அப்பு—வடசொல். (உ௩)

24. பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்

கடித்துதான் முத்துமிழும் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து.

24. Nala, who possessed the country through which the Ganges flowed, and in which the herd of buffalows, breaking the tender sugar cane, chewed it so that its pearls dropped out (of their mouths,) said—"O maid; approach that beautiful swan gently, and without missing catch it and bring it here.

(இ - ள்.) மேதி குலம் - எருமைக்கூட்டம், ஏறி - (சோலையிற்) பிரவேசித்து, மெல் கரும்பை - மென்மையான கரும்பங்கழிகளை, கடித்து கோதி - கடித்துக்கொழித்து, முத்து - (அக்கரும்பினின்றும் வாயில் விழுகின்ற) முத்துக்களை, உமிழும் - உமிழ்ந்து விடப்பெற்ற, கங்கை நீர் - கங்காசலம் சூழ்ந்த, நாடன் - நாட்டையுடைய நளன், பெயர்ந்து - (அங்கே) போய், பேதை - பெண்ணே, மட அன்னந் தன்னை - அழியாமையுள்ள அன்னப் பறவையை, பிழையாமல் - தப்பாமல், பிடித்து தா என்றான்—, எ - று. தான் - அசை.

கரும்புக்கு மென்மையாவது செழிப்பு, உமிழும் என்னும் பெயரெச்சம் நாடென்னு மிடப்பெயர்கொண்டது. கங்கை என்றது சிறந்த ஆற்றுக்கும் ஆம்.

பேதை என்பது "அண்மையினியல்பும்" என்னும் [பெயரியல் ௩௬-ஆம்] சூத்திரத்தால் விளியில் இயல்பாயிற்று.

மடமை - இளமையாக்கொண்டு பேதமையாகிய இளவன்னத்தை எனவு முரைக்கலாம். அங்கிருந்த ஒரு பெண்ணை எனச் செயப்படுபொருள் வருவித்துக்கொள்க. (உசு)

25. நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

25. Like a number of fair peacocks, the tender maidens with their long fine silk-like hair, went and surrounded the young swan, and having caught it, brought and presented it humbly to their king.

(இ - ள்.) நாடி-(அரசன் பேச்சை) மனதிற் கொண்டு, நல்ல மயில் குழாம் - நல்ல மயில்களின் கூட்டம், ஓடி வளைகின்றது - ஓடி வளைத்துக் கொள்வதை, ஒப்ப-ஒத்திருக்க, நீடிய - நீண்ட, நல் பைங் கூந்தல் - நல்ல பசுமையான கூந்தல்களை யுடைய, வல்லியர்கள் - கொடிபோன்ற மாதர்கள், மட அன்னத்தை-மடப்பமுள்ள அன்னத்தை, பற்றிகொடு - பிடித்துக் கொண்டு, போந்து - வந்து, தம் கோவின் முன் - தங்கள் அரசனுக் கெதிரில், தாழ்ந்து - வணங்கி, வைத்தார் — எ-று.

ஏ - அசை.

கொண்டு என்பது கொடு என இடைகுறைந்தது. மடப்பம் - அழகு எனவுமாம்.

அரசன் ஒருத்தியை நோக்கிச் சொன்னாலும் பலரும் நான் முன் நான்முன் என் றோடுவது சேவகரின் இயற்கை யாதலின் அங்ஙனஞ் செய்தாரெனக் கொள்க.

கூந்தலுக்குப் பசுமையாவது வளப்பம், பசுமையையும் கருமையையும் ஒருவகையில் அபேதமாச் சொல்வது முண்டு.

26. அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டு
போய், மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே —
அன்னம், மலங்கிற்றே தன்னுடைய வான்கிளை
யைத் தேடிக், கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

26. As soon as the swan was brought in the presence of the king by the maidens adorned with the choicest jewels, it was much terrified and tremblingly looked round in despair for its numerous relations.

(இ-ள்.) அங்கு - அவ்விடத்தில், அன்னந்தனை பிடித்து — அம்ச பக்ஷியைப்பிடித்து, ஆய் இழையார் - ஆய்ந்த ஆபரணமுள்ள பெண்கள், கொண்டுபோய்—, மன்னன் திருமுன்னர் - அரசனுடைய மேன்மையான சந்நிதானத்தில், வைத்தலுமே - வைத்தவுடனே, அன்னம் - அந்த அம்சபக்ஷி, தன்னுடைய—, வான் கிளையை - பெரிய சுற்றத்தை, தேடி—, மலங்கிற்று - அலைந்ததாகி, மன்னவனை கண்டு - அரசனைப்பார்த்து, கலங்கிற்று - மனக்கலக்கமுற்று, எ - று.

ஏ - அசை. அங்கு - அசையுமாம்.

வைத்தலும்—இதோர் வகை வினையெச்சம். உம் - பிற் பொருட்டு விகுதி, தொழிற்பெயர்மேல் வரும். (உ௬)

27. அஞ்சன் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

27. The king, who was adorned with garlands of flowers, of which the joyous bees might be proud, said:—"Fear not, O young swan I caught you merely to see which was better, your graceful walk, or the elegant gait of the ladies, who are as tender as creepers"

[அரசன் அன்னத்தைப்பார்த்துச் சொன்னது.]

(இ - ள்.) மட அனமே - மடமை பொருந்திய அன்னமே, அஞ்சல் - பயப்படாதே; உன்றன் - உன்னுடைய, அணி நடையும் - அலங்காரமான நடையும், வஞ்சி அனையார் - வஞ்சிக் கொடியொத்த பெண்களுடைய, மணி நடையும் - அழகுள்ள நடையும் (ஆகிய இவற்றுள்,) விஞ்சியது காண - அதிகப்பட்டதைக் காணும் பொருட்டு, பிடித்தது - உன்னைப்பிடித்தது என்றான் - என்று சொன்னான், களி வண்டு - மதர்த்திருக்கும் வண்டுகள், மாண - பெருமை பெறும்படி, பிடித்த - கட்டிய, தார் - மாலையணிந்த, மன் - அரசன், எ-று. காண்-அசை.

அரசன் என்றானெனக் கூட்டுக. பிடித்தது என்னும் எழுவாய்க்கும் ஆம் என்னும் பயனிலை எஞ்சிநின்றது. பிடித்தது-தொழிற்பெயர்; பிடி - பகுதி, து - விகுதி, த் - இறந்தகால இடைநிலை, த் - சந்தி, அ- சாரியை, இந்தத் துவ்விகுதி காலங்காட்டு மிடைநிலைகளைப் பெற்றுவரும்; பிடிக்கின்றது, பிடிப்பது எனவுங் காண்க. மை விகுதியும் சிறுபான்மை இவ்வாறு வரும்: பிடித்தமை, பிடிக்கின்றமை முதலியவற்றைக்காண்க. அஞ்சல்—எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. மாண—மாண் என்னும் பண்படியாகப்பிறந்த செயவென்னெச்சம்.

அரசன் முதலில் இங்ஙனம் கூறியது கருணையாலன்றி அப்பறவை உணர்ந்துகொள்ளுமெனக் கருதியன்று. (உ௭)

28. செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்—வெய்ய

அடுமாற்ற மில்லா வரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான்.

28. The matchless swan, which was caught by a maiden, who resembled Lakshmi of the red lotus, hearing the words of the king who entertained no cruel intentions, did at once recover from its fear and trembling.

(இ-ள்,) செய்ய கமலம் திருவை - சிவந்த தாமரையில் வாசஞ்செய்கின்ற இலக்குமியை, நிகரான - ஒத்த, தையல் - பெண், பிடித்த—, தனி - ஒப்பில்லாத, அன்னம்—, வெய்ய- கொடிதான, அடு மாற்றம் - கொல்லும்படியான பகை, இல் லா - இல்லாத, அரசன் சொல் - நளன் பேச்சை, கேட்டு—, தடுமாற்றம் - துன்பம், தீர்ந்தது - நீங்கப் பெற்றது, எ - று. ஏ - தான் - அசைகள்.

செய்ய—செம்மையென்னும் பண்படியிற் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். வெய்ய—இதுவும் அப்படியே.வெம்மை யென் பது பண்படி. அன்னந் தடுமாற்றந் தீர்ந்தது என்பது[பொது வியல் உ௲-ம்] சூத்திரவுரையால் அமைந்தது.உ௩-ம் பாட்டில் "சோலை நிறம் பெயர" என்பது மிவ்வாறே.

அடுமாற்றம்—அடுதலுக்கு ஏதுவாகிய மாற்றம்; இங்கு வினைத்தொகை, பெயரெச்சத்தின் விகாரமாதலால் கருவிப் பெயர்கொண்டது.

மாற்றம்-மாறு என்பதிற்பிறந்தது; தடுமாற்றம்—தடுமாறு என்னும் பகுதியிற் பிறந்தது; இரண்டுந் தொழிற்பெயர்; பொருளாற் பண்பு. (உஅ)

29. திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்ற
இசைமுகந்த தோளுக் கசைவாள்—வசையில்[ன்
தமயந்தி யென்றோதுந் தையலாண் மென்றோள்
அமயந்தி யென்றோ ரணங்கு.

29. The swan, (addressing Nala,) said :—"O charioteer whose white umbrella spreads through all the regions, there is a maiden named Damayanti, a goddess-like damsel, who is of good report, whose rounded shoulders, are like soft bamboos, will match well with your renowned shoulders."

(இ - ள்.) திசை முகந்த - திக்குகளைத் தன்னு ளடக்கிய, வெண் கவிகை - வெண்குடையுள்ள, தேர் வேந்தே-இரதாதிபதியான அரசனே, உன்றன்—, இசை முகந்த - கீர்த்திபெற்ற, தோளுக்கு - புயங்களுக்கு, மெல் தோள் - மென்மையான தோள், அமை - மூங்கிலை, அந்தி - சேர்ந்தது, என்ற- என்று சொல்லப்பட்ட, ஓர் அணங்கு - ஒரு தெய்வப்பெண் போன்ற, வசை இல் - குற்றம் இல்லாத, தமையந்தி என்று-, ஓதும் - சொல்லப்பட்ட, தையலாள் - ஒருமாது, இசைவாள்- பொருந்தியிருப்பாள் (என்று அன்னஞ் சொல்லிற்று,)எ-று.

அந்தி என்னு முதனிலை, நேர் என்பதுபோல இங்கே வினைமுற்றாயிற்று. வினையியல் ௬௨-ம் சூத்திரத்தின் உரையைக் காண்க. வெண்கவிகை—இதில் ளகரம் (இடையுரிவடசொல்லின்) என்பதனால் டகரமாத்திரியாது ணகரமாத் திரிந்ததென்க. தையல் - அழகு, அதையுடையாள் தையலாள்.(உ௮)

30, அன்ன மொழிந்த மொழிபுகா முன்புக்குச் [மயில்
கன்னி மனக்கோயில் கைகொள்ளச்—சொன்ன
ஆர்மடந்தை யென்றா னநங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து.

30 No sooner had the words of the swan reached Nala's ear, than maiden took possession of his heart, and the king who may be styled the husband of the earth troubled by cupid who aimed his bow at him, enquired of the swan:—"Whose daughter is she of whom you spoke?"

(இ - ள்.) பார் மடந்தை கோமான்-பூமியாகிய பெண்ணுக்குத் தலைவனான அரசன், அன்னம் மொழிந்த - அன்னஞ் சொன்ன, மொழி புகா முன்-சொல்(காதிற்) பிரவேசிப்பதற்கு முன்னமே, கன்னி - தமயந்தியானவள், புக்கு - பிரவேசித்து மனக்கோயில் - தன் மனமாகிய கோயிலை, கைக்கொள்ள - சுவாதீனஞ் செய்துகொண்டதனால், அநங்கன் - மன்மதன், சிலை வளைப்ப - வில்லை வளைக்கவே, பதைத்து - துடித்து, சொன்ன மயில் - நீ சொல்லிய மயிலுக்கொப்பானவள், ஆர் மடந்தை - யாருடைய மகள், என்றான் - என்று சொன்னான் (அன்னத்தை நோக்கி,) எ-று.

மனதில் தமயந்தியின் சிந்தை உண்டானதால் காமத்தோடு அவளுடைய செய்தியைக் கேட்கத் தலைப்பட்டான் என்பது கருத்து.

புகாமுன் என்றது துரிதத்தைக் குறிப்பித்தது; அதிசய அணி. கைக்கொள்ள என்னும் செயவெனெச்சம், சிலவலைப்ப என்பதில் காரணவகையால் முடிந்தது. வலைப்ப என்பது புதைத்து என்பதில் அவ்வகையே முடிந்தது.

சொன்னமையால் என்பதற்குப் பொன்மயிலெனப்பொருள் கூறினும் ஒக்கும். சொன்ன—சொல்லின என்பதில் இன் இடைநிலையின் முதல்குறைய [மெய் - புணரியல் உச - ஆம்] சூத்திர விதியால் பகுதி லகரம் னகரமாகத்திரிய உண்டாயிற்று. பொன் எனப் பொருளாகும்போது ஸ்வர்ணம் என்கிற ஆரிய மொழிச்சிதைவு. (௩௦)

31. எழுவடுதோண் மன்னு விலங்கிழையோ ரூண்ட
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.

31. "O king whose shoulders resemble pillars the maiden is the daughter of the benevolent king of Vidarpa, where the kuvalai flowers, which are dug up and thrown aside by the ploughs as they are guided by the peasants pour forth honey in such abundance as to water the place, and where the waters make a noise (as they flow).

(இ - ள்.) எழு அடு தோள் - கம்பத்தை யொத்த தோளையுடைய, மன்னு - அரசனே, இலங்கு இழை - விளங்கும் அணிகளையுடைய அந்தப்பெண், உழுநர் - உழுவர், ஏர் தூண்ட-உழுமாடுகளைத் தூண்டும்பொழுது, கொழு நுதியில்-காறுமுனையினால், சாய்ந்த - பெயர்ந்து வீழ்ந்த, குவளை - நீலோற்பலங்களினின்றும், மடை நீர்மடைகளை, மிதிப்ப - மிதிக்கும்படி, தேன் பாயும் - தேன்பாயப்பெற்ற, மாடு - இடமுள்ள, ஒலிநீர் - ஒலிக்கின்ற நீர்பொருந்திய, நாடன் - நாட்டையுடையவனாகிய, கொடை - ஈகைக்குணமுள்ள, விதர்ப்பன் - விதர்ப்பராஜன், பெற்றது - பெற்ற, ஓர்கொம்பு - ஒப்பற்ற பூங்கொம்பைப் போன்றவள், எ - று.

அந்நாட்டின் பெயர் விதர்ப்பம்; அதனால் விதர்ப்பத்தை யுடையவன் விதர்ப்பன் என அரசனுக்கும் பெயர் வந்தது. இலங்கிழை - எழுவாய், கொம்பு - பயனிலை. கொம்பு என்னும் அஃறிணை நோக்கிப் பெற்றது எனப் பிரயோகிக்கப்பட்டது. பெற்றது - வினையாலணையும் பெயராகக்கொண்டு இருபெயராகக்கொண்டு இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக்குக.

உழுநர்மிதிப்ப—மிதிக்கையில் தேன்பாயு மெனவுமுரைக்கலாம். முன்னுரையில் மடையை மிதித் தடக்கும்படியாகத் தேன்பாய்கிற தென்பதாம். பின்னதில் மிதிக்கமிதிக்கப் பாய்கிற தென்பதாம்.

அண்ட, மிதிப்பு,—இரண்டிற்கும் உழுநரே கர்த்தா. உழுநர்—இதில் நர் - பலர்பால் விகுதி. (௩௧)

32. நற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா, ஆர்க்குஞ்சிலம்பேயணிமுரசா—வேற்படையும், வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ் ஆளுமே பெண்மை யரசு.

32. That maiden rules her female kingdom, under the umbrella of her moon-like face having her four dispositions as her four armies, her five senses as her good prime ministers, her sounding anklets as beautiful drums, and her eyes as her lance and sword.

[இதுமுதலிய நான்கு பாட்டால் அவளை வருணித்தல்.]

(இ - ள்.) நால் குணமும் - (அச்சம் நாணம் மடைமை பயிர்ப்பு என்கிற) நான்கு குணங்களும், நால் படை ஆ - (தேர் யானை குதிரை காலாள் என்கிற) நால்வகைச் சேனை யாகவும், ஐம் புலனும் -(மெய் வாய் கண் மூக்கு செவி என்கிற) பஞ்சேந்திரியங்களும், நல் அமைச்சு ஆ - நல்ல மந்திரிகளாகவும், ஆர்க்கும் - ஒலிக்கின்ற, சிலம்பே - பாதசரமே, அணிமுரசு ஆ - மேன்மையான பேரிகையாகவும், கண் - கண்கள், வேல் படையும் - வேலாயுதமும், வாளும் - கத்தியும், ஆ - ஆகவும் வதனமதி - முக சந்திரனாகிய, குடைகீழ் - குடையின் கீழே, பெண்மை அரசு - பெண்தன்மையான ராச்சியத்தை, ஆளும் - ஆளுவாள், எ-று. ஏகாரங்கள்-அசை, பிரிநிலை என்னவுமாம்.

அச்சம் - பயம், நாணம் - வெட்கம், மடமை - கபடமின்மை, பயிர்ப்பு - அறுவருத்தல்; இந்நான்கும் பெண்களுக்கு உரிமையான குணம். ஆ-ஆக என்னும் செயவெனெச்சம், ஈறு குறைந்தது.

ஓரரசனுக்குப் படை தன்னைக் காக்கவும் பிறரை வெல்லவுந் துணையாவதுபோல நாற்குணமும் பெண்மையைக் காக்கவும் ஆடவர்க்கு ஆசை கொளுத்தி வயப்படுத்தவுந் துணையென்றும், அமைச்சர் அரசன் செய்கைக்கு ஒன்றி நிற்பதுபோல் ஐம்புலன்களும் மீறிப்போகாமல் நல்லொழுக்கத்துக்குஇசைந்தன வென்றும், முரசினால் பெருமை வெளிப்படுவதுபோல், நடைக்கேற்பச் சிலம்பொலித்தலினால் நடையழகு காணாதவர்க்குந் தோன்று மென்றும், கண்பார்வையால் ஆயுதங்களாற்பட்டவர் போல் ஆடவர் சோர்ந்து விழுவரென்றும், சந்திரன் போன்ற குடை செங்கோன் மேன்மைக்குக் குறியாயிருப்பது போலச் சந்திரன் போன்ற முகமும் யாவரும் பணியும்படியான மோகங் காரணமாய்ப் பெண்மையைச் சிறப்பிக்கின்றதென்றும், இவ்வாறு உருவகப்படுத்தினாரென்க. ஆகவே தமயந்தி எல்லா பெண்களுக்கு மேலான அழகும் நற்குணங்களும் அமைந்தவளென்பது திரண்ட கருத்து.

கண் முந்தி இந்திரியமாகிய தன்மையால் அமைச்சாகச் சேர்ந்தது; பிந்தி உருவமிருக்குந் தன்மையால் ஆயுதத்திற் சேர்ந்ததெனஅறிக. கண்—பால்பகா வஃறிணைப்பெயர்.

33. மோட்டிளங் கொங்கை முடியச்சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு—நாட்டேன்
அலம்புவார் கோதை யடியிணையில் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூண்டு.

33. The anklets seeing that her waist was not able to support her soft mount-like breasts, having fallen down at the feet of Damayanti adorned with a fresh garland full of honey, caressed them and wept.

(இ - ள்) இடை - இடுப்பு, மோடு இள கொங்கை - உயர்ந்த இளமை பொருந்திய முலைகளை, முடிய - நெடுங்காலம் சுமந்து ஏறமாட்டாது - சுமந்து நிற்கமாட்டாது, என்று—,

நாள் தேன் - அப்போதே யுண்டாகிய தேன் [புதியதேன் என்றபடி], அலம்பு - ஊறுகின்ற, வார் - நீண்ட, கோதை - மாலையணிந்த தமயந்தியின், அடி இணையில் - இரண்டு பாதங்களிலும், வீழ்ந்து—, பூண்டு - (அவைகளுக்கு) ஆபரணமாகி, நூபுரங்கள் - சிலம்புகள், வாய்விட்டு—, புலம்பும் - கூவும், எ - று. ஆம் - அசை.

கோதை கூந்தலுமாம். அலம்புவார்கோதை—அடுக்கின வினைத்தொகைத் தொடர்மேற் பிறந்த அன்மொழித்தொகை.

தனபாரத்தினால் அசைந்து மெல்லென நடக்க அதற்கேற்ப வொலிக்குஞ் சிலம்புகள் அம்மென்மையைத் தெரிவித்தலால் இவ்வாறு குறித்தார். முடிய—வினையெச்சம். (௩௩)

34. என்று நுடங்கு மிடையென்ப வேழுலகும்
நின்ற கவிகை நிழல்வேந்தே—ஒன்று
அறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசும்
சிறுகாற்றுக் காற்றாது தேய்ந்து.

34. O king, the shade of whose umbrella covers the world divided into seven islands they say that her slender waist, unable to withstand the gentle breeze caused by the fluttering wings of the six legged bees, wastes away and is ever unsteady.

(இ - ள்.) ஏழுலகும் - ஏழு தீவாய்ப்பிரிந்திருக்கும் பூமி முழுதும், நின்ற-நிலைபெற்றிருக்கு மிடமாகிய, கவிகை நிழல்-குடை நிழலையுடைய, வேந்தே - அரசனே, இடை - (அவளுடைய) இடையானது, அறு கால் சிறு பறவை-ஆறு கால்களையுடைய வண்டு என்னும் சிறியபக்ஷி, ஒன்றி - அவளைச்சேர்ந்து, அம் சிறகால் - அழகிய சிறகுகளினால், வீசும் - உண்டாக்குகிற, சிறு காற்றுக்கு-அற்பமாகிய காற்றுக்கு, ஆற்றாது பொறுக்கமாட்டாமல், தேய்ந்து—, என்றும் - எப்போதும், நுடங்கும் - அசைந்துகொண்டிருக்கும், என்ப - என்பார்கள் (கண்டவர்கள்,) எ-று.

இடைமிகவும் நுணுக்கமானது என்பது கருத்து.

என்ப—என் - பகுதி, ப - பலர்பால் விகுதி, இது அசையுமாம். அஞ்சிறகு—அகஞ்சிறகெனினு மமையும். (௩௪)

35. செங்தேன் மொழியாள் செறியளக பந்தியின்கீழ்
இந்து முறியென் றியம்புவார் வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ் சிலைசார்த்தி
ஏவாளி தீட்டு மிடம்.

35. They say that the crescent-like forehead which is under the row of profuse hair of the sweet-worded Damayanti is the place where (Cupid) the Lord of the flowered arrows, bends his bow and sharpens his arrows.

(இ - ள்.) பூவாளி வேந்தன் - மலராகிய அம்புகளை யுடைய அரசன் [மன்மதன்], என்றும் வந்து—, பொரு வெம் சிலை - சண்டை செய்யத்தக்க உக்கிரமானவிற்களை, சார்த்தி-வைத்து ஏ ஆளி - அம்புகளின் வரிசையை, தீட்டும் இடம் - தீட்டுகிற இடமானது, செம் தேன் மொழியாள் - செம்மையான தேன் போன்ற சொற்களுள்ள தமயந்தியினுடைய, செறி அளக பந்தியின் கீழ் - நெருங்கின முன்னெற்றி மயிர் வரிசையின் கீழே (இருக்கிற), இந்து முறி - இளஞ்சந்திரன், என்று—, இயம்புவார் - சொல்லுவார்.

இங்கு இந்துமுறி என்றது நெற்றியை. புருவங்களை மன்மதன் வில்லாகவும், நெற்றியைச் சாணைக்கல்லாகவும், அலங்கலை அம்புகளாகவும், குறித்தார். அலங்கல் நெற்றியிற் றொங்கும் பூமாலை. அளகங்களையே அங்ஙனங் குறித்த தென்னவுமாம். முறி - தளிர். இப்பாட்டினால் அழகின்சிறப்புக் கூறப்பட்டது.

ஏவாளி—"ஏமுனிவ்விருமையும்" என்றுயினும் ஓரெழுத்தொருமொழியாகிய பெயர்ச்சொல்லின்முன் வகர வுடம்படுமெய்யே வருமெனக் கொள்க. செறி—வினைத்தொகை. அளக, பந்தி,—இரண்டும் வடச்சொல்லாதலால்வலிமிகவில்லை. பூவாளி —பண்புத்தொகைப் புறத்துப்பிறந்தஅன்மொழித்தொகை.

36. அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னாவி
உன்னவே சோரு முனக்கவளோ—டென்ன
அடைவென்றான் மற்றந்த வன்னத்தை முன்னே
நடைவென்று டன்பா னயந்து.

36. Nala, burning with lust towards her, who outrivalled the swan in her gait, said:—" O swan when I

think of the maiden (lit- swan) of whom you spoke to me my soul melts within me. What acquaintance does there exist between you and her "

(இ-ள்.) [இப்படி அன்னஞ் சொல்லக்கேட்டு அரசன் அந்த அன்னத்தை அந்த அம்சபக்ஷியை, முன்னே - முன்னே தானே, [இளம்பருவத்திலேயே], நடை வென்றாள் தன்பால் - தன்நடையினால்ஜயித்தவளாகிய தமயந்தியினிடத்தில்,நயந்து - ஆசைப்பட்டு, அன்னமே—, நீ உரைத்த - நீ சொன்ன, அன்னத்தை-அன்னம்போன்றவளை,உன்ன - சிந்திக்க, என் ஆவி - என் உயிர், சோரும் - தளர்கின்றது; உனக்கு—, அவளோடு—, என்ன அடைவு - என்ன சம்பந்தம், என்றான்—, ஏ-மற்று - அசை.

உரைத்த என்பது செயப்படுபொருளைச் செய்ததுபோலுரைக்கப்பட்டது. "செய்யு நிகழ்பெதிர்வும்" என்றமையின் சோரும் என்பது இங்கு நிகழ்காலத்ததாயிற்று. என்ன—எவன் என்னுங் குறிப்பு முற்று இடை குறைந்து அகரச்சாரியை பெற்றது. (௩௬)

37. பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவடன்
மாமனைவாய் வாழு மயிற்குலங்கள்—காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் [பாத
நடைகற்பான் வந்தடைந்தே நாம்.

37. We, the race of birds that live on flowers wishing to study the gait of her who is adorned with gold bracelets are (continually near her), like the race of peacocks that live in her palace, where Cupid resorts to learn his drill.

(இ-ள்.) பூ மனைவாய் வாழ்கின்ற - தாமரைப்பூவாகிய மாளிகையிலே வாசஞ்செய்கின்ற, புட்குலங்கள் - பறவைக் கூட்டங்களாகிய, யாம்—, அவள் தன் - அவளுடைய, மா மனைவாய் வாழும் - பெரியமாளிகையில் வாசஞ் செய்கின்ற, மயில் குலங்கள்-மயில்களின் கூட்டங்களா யிருக்கின்றோம்; காமன்- மன்மதன், படைகற்பான் - ஆயுதவித்தை கற்கும் பொருட்டு வந்து அடைந்தான் - (அவளிடம்) வந்துசேர்ந்தான்; நாம் -, நாங்கள், பைக்தொடியாள் பாத நடை-பசுமையான வளைகளை

யணிந்த அவளுடைய கால் நடையை, கற்பான் - கற்பதற்கு, வந்து அடைந்தேம் - வந்து சேர்ந்தோம், எ - று.

தாமரைத் தடாகத்தினும் அவள் மாளிகை மிகவும் விரும்பும்படி யிருப்பதனால் எங்களுக்கு வசதியாயிருக்கின்றது என்பதாம். அவளுக்குப் பருவம் வந்தவுடனே அவளுடைய நோக்கம் பேச்சு முதலியவை ஆடவர் மனதை ஆகர்ஷிப்பதனால் அவற்றை மன்மதனுக்கு ஆயுதமாகக் குறித்தார். அவள் நடை மிகவும் அழகிது, ஆனதால் அதைக் கற்க நாம் அங்கே வந்தேம் என்பதுங் கருத்து. இது 'அவளோடுனக்கென்ன அடைவு என்பதற்கு உத்தரவு. கற்பான்—பான் ஈற்று வினையெச்சம். (௩௭)

38. இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காதல்
அற்றது மான மழிந்தது நாண்—மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்
தீயுடைய நெஞ்சுடையான் றேர்ந்து. [காமத்

38. He, whose heart burned like fire, exhausted with lust, said:—"My heart is broken, great lust has arisen, my honor is lost, shame is destroyed; hereafter my life rests on the words of thy month."

(இ - ள்) [இதுகேட்டு நளன்,] வெம் காமத் தீ உடைய - வெப்பமான காமாக்கினி பொருந்தின, நெஞ்சு உடையான் - மனமுள்ளவனாகி, தேர்ந்து - துணிந்து,(அன்னத்தை நோக்கி) நெஞ்சம் இற்றது - மனம் விண்டுபோயிற்று, இரு காதல் - பெரிய ஆசை, எழுந்தது - உண்டாயிற்று, மானம் கவுரவம், அற்றது - போய்விட்டது, நாண் - வெட்கம், அழிந்தது - நாசமாயிற்று, மற்று - இதிருக்கட்டும், இனி - இனிமேல், என்னுடைய வாழ்வு—, உன் வாய் உடையது - உன்வாயினிட மிருக்கின்றது, என்றான் —, [நீ அவளிடம்போய்ப் பேசிக்காரிய மனுகூலப் படுத்தினால்தான் நான் வாழ்ந்திருப் பேனென்றபடி,] எ - று.

மற்று என்பது வினைமாற்றில் வந்தது. நெஞ்சுடையான் என்னுங் குறிப்பு முற்று ஈண்டு வினையெச்சமாக் கொள்ளப்பட்டது. இனி—எதிர்காலங் காட்டு மிடைச்சொல். இற்றது,

அற்றது, அழிந்தது,—இவைநிச்சயம்பற்றிவ திர்காலம் இறந்த காலமாயின.

39. வீமன் றிருமகளா மெல்லியலை யன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையா யென்றுரைத்து நீங்கியதே யன்
ஒடுங்கிடையா டன்பா லுயர்ந்து. [னம்

39. "O good king of the long umbrella that affords protection, I shall cause Bhima's beautiful daughter to join your broad shoulders." So saying, the swan flew away to her who had a slender waist.

(இ - ள்.) சேமம் - க்ஷேமஞ் செய்கின்ற, நெடு குடையாய் - பெரியகுடையை யுடையவனே, வீமன் திருமகள் ஆம் - வீமன் மகளாகிய, மெல்லியலை - மென்மையான தன்மையுள்ள தம யந்தியை, உன்னுடைய—வாமம் - அழகான, நெடு புயத்து - பெரிய தோள்களினிடத்திலே, வைகுவிப்பேன் - சேரச்செய் வேன், என்று—, உரைத்து-சொல்லி, அன்னம்—, உயர்ந்து- மேலெழும்பி, ஒடுங்கி இடையாள் தன்பால் - சிறுத்த இடை யையுடைய தமயந்தியினிடத்து, நீங்கியது-போயிற்று, எ-று. ஏகாரங்கள் - அசை.

என்று—இங்கு இடைச்சொல். [இடையில் ரு-ஆவது சூ.] வினையோடுவந்து அவ்வினையே பொருளாகக் கொண்டது; விதம் என்பது அதன்பொருள். "வீமன் திருமடந்தை மென் முலையை" எனவும் பாடமுண்டு. (௩௯)

40. இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்
கொல், இவ்வளவிற் காத லியம்புங்கொல்—இவ்
வளவில், மீளுங்கொ லென்றுரையா விம்மினான்
மும்மதநின், ருளுங்கொல் யானை யரசு.

40 The king who possessed killing elephants that ruled their three-fold lusts, sorrowing said:—"Will it (i. e the swan) have reached her by this time? will it by this time have seen her? will it by this time have told her my lust? or will it by this time have started back on its return?"

[இது முதல் ஐந்து பாட்டால் நளனது கைக்கிளை கூறப்படும்.]

(இ - ள்.) மும்மதம் நின்று-மூன்று மதவொழுக்கு நிற்கப் பெற்று, ஆளும் - ஆளுகை செய்யும்படியான, கொல் யானை - கொல்லுகின்ற யானையையுடைய, அரசு-நளமகாராசன், இவ்வளவில் செல்லுங்கொல்-இந்தக்காலத்திற் சென்றிருக்குமோ இவ்வளவில் காணுங்கொல்-இந்நேரத்திற் பார்த்திருக்குமோ, இவ்வளவில்—, காதல் இயம்புங்கொல் - (நமது) ஆசையைச் சொல்லியிருக்குமோ, இவ்வளவில்—, மீளுங்கொல்-திரும்புமோ(அன்னம்,)என்று உரையா-என்று சொல்லி, விம்மினான்-(துக்கத்தினால்) தேம்பிக்கொண்டிருந்தான், எ-று.

கைக்கிளையாவது ஒருதலைக்காமம்; விரகவேதனையென அறிக. விரகம் - பிரிந்திருத்தல், வேதனை - துன்பம்.

உரையா—செய்யா என்னும்வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம் மும்மதங்களாவன, இரண்டு கன்னங்களிலும் வாற் புறத்திலும் ஒழுகுவன. கொல்—ஐயப்பொருளில் வந்த இடைச் சொல். [இடையியல் சுூ - ம் சூ.] "கொல்யானை யென்னு மிடத்து வினைத்தொகை. 'மும்மதநின்றாளும்' என்றது மதங்களுக்குப் பரவசமா யிருக்கிற தென்பதாம். (௪0)

41. சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல்
கேட் டாவி யுருகி யழிந்திட் டான்—பூவின்,
இடையன்னஞ் செங்கா லிளவன்னஞ் சொன்ன,
நடையன்னந் தன்பா னயந்து.

41 Hearing the sweet note of the male pheasant as it conversed with its mate, Nala swooned away actuated by lust towards Damayanti, whose gait resembled that of the swan, who resembled Lakshmi that resides in the lotus, and of whom the red web-footed young swan, had spoken to him.

(இ - ள்.) பூவின் இடை அன்னம் - பூவில் வாசஞ்செய்கிற திருமகளையொத்த, செம் கால் இள அன்னம் - சிவந்த காலை யுடைய இளமையான அன்னப்பக்ஷி, சொன்ன—, நடை அன்னம் தன்பால் - நடையில் அன்னத்தை யொத்த தமயந்தியினிடத்தில், நயந்து - காதல்கொண்டு, சேவல் - ஆண்குயில்,

குயில் பெடைக்கு - பெண்குயிலுக்கு, பேசும் - சொல்லுகின்ற, சிறு குரல் - மெல்லிய த்தொனியை, கேட்டு—, ஆவி உருகி - உயிர் தளர்ந்து; அழிந்திட்டான் - மூர்ச்சித்தான் (நளன்), எ - று.

முதலும் மூன்றாவதும் அன்னம் உவமையாகுபெயர், பூவி னிடையன்னமென்பதும் இளவன்னம் சொன்ன என்பதும் நடையன்னத்துக்கு அடை. குயிற்பெடைக்கு — இருபெய ரொட்டுப் பண்புத்தொகை, நான்கனுருபு கோடற்பொருளில் வந்தது. ஆவி உருகி அழிந்திட்டான் என்பதில் உருகி என் னுஞ் செய்தெனெச்சம் சினைவினை யாதலால் முதல் வினையில் முடிந்தது. (சக)

42. அன்ன முரைத்த குயிலுக் கலசுவான்
மென்மயிறன் றோகை விரித்தாட—முன்னதனைக்
கண்டாற்றா துள்ளங் கலங்கினான் காமநோய்
கொண்டார்க் கிதன்றோ குணம்.

42. He, who anxiously longed for the pheasant-like Damayanti of whom the swan spoke, seeing the gentle peacock spread out its tail and dance before him, was unable to bear it, and his heart was troubled. Is not this the nature of all those who are attacked with a lustful disease?

(இ - ள்.) அன்னம்—, உரைத்த - சொல்லிய, குயிலுக்கு - குயில்போன்றவளுக்காக, அலசுவான் - மனமேங்கி நிற்கிற அரசன், மெல் மயில் - மென்மையாகிய மயிற்பறவை, தன் தோகை விரித்தாட - தன்வாலை விரித்தாடாநிற்க, முன் - எதி ரில், அதனை கண்டு—, ஆற்றாது - பொறாமல், உள்ளம் கலங் கினான் - மனங்கலங்கிநின்றான்; காமநோய் கொண்டார்க்கு - காமவியாதி யுள்ளவர்களுக்கு, இது அன்றோ குணம் - இப் படித் தளர்வதல்லவோ இயல்பு, எ - று;

அரசன் உள்ளங்கலங்கினான் என்பதை "உயர்திணை தொடர்ந்த" என்கிற விதியாலமைத்துக்கொள்க. குயிலுக்கு — இக்கு குவ்வுருபு பொருட்டுப்பொருளில் வந்தது. (சஉ)

43. வாரணியுங் கொங்கை மடவா ளுடங்கிடைக்குப்
பேருவமை யாகப் பிறந்துடையீர்—வாரிர்

கொடியா ரெனச்செங்கை கூப்பினா னெஞ்சந்
துடியா நெடிதுயிராச் சோர்ந்து.

43. Nala, troubled in mind and downcast heaving a sigh- said, uplifting his rosy hands:-"Come, O ye creepers for ye are born as emblems of the flexible waist of the maiden, whose breasts are enveloped in a bodice."

(இ-ள்.) [நளன்] நெஞ்சம் துடியா-மனந்துடித்து, நெடிது உயிரா - நெடுமையாக மூச்செறிந்து, சோர்ந்து - தளர்ந்து, கொடியார் - கொடிகளே, வாரணியுங் கொங்கை - கச்சுஇடப் பெற்ற முலைகளையுடைய, மடவாள் - தமயந்தியினுடைய, நுடங்குஇடைக்கு - துவளுகின்ற இடைக்கு, பேருவமையாக- பெரிய உபமானப்பொருளாக, பிறந்துடையீர் - பிறந்திருக்கிறீர்கள், (ஆதலால்) வாரீர் - வாருங்கள், என - என்று, செம் கை - சிவந்தகைகளை, கூப்பினான்,—எ - று.

அஃறிணையாகிய கொடிகளை கொடியார் என்று உயர்திணையாகக் கூறியது, "உவப்பினு முயர்வினும்" என்னும் [பொதுவியல் உ௮ - ம்) சூத்திரத்தின்படி சிறப்பு பற்றி. சிறப்பு பெண்ணிடைக்கு உவமையா நிற்றல். கொடியாரென்பதற்குச் சிலேடையினால் கொடுமையானவர்களே எனவும் பொருள் கொள்ளலாம். கூப்பினான்—கூப்பு - பிறவினைப்பகுதி, கூம்பு-தன்வினைப்பகுதி. மெல்லொற்று வல்லொற்றானது பிறவினைக்குறி. (சங)

44. கொங்கை யிளநீராற் குளிர்ந்தவிளஞ்சொற்கரும்
பாற், பொங்குசுழி யென்னும் பூந்தடத்தின்—
மங்கைநறுங், கொய்தாம வாசக் குழனிழற்கீ
ழாறேனோ, வெய்தாமக் காம விடாய்.

44. "May I not quench the thirsty longings of my burning lust beneath the shade of the sweet-smelling and flower bedecked hair of Damayanti, whose breasts are like the tender cocanuts which are pregnant with water, whose soft and pleasant speech is as sweet as the sugar-cane, and whose beautiful naval is like the lotus bearing tank."

(இ - ள்.) கொங்கை இளநீரால்- தனங்களாகிய இளநீர்க்காய்களினாலும், குளிர்ந்த இள சொல் கரும்பால் - குளிர்ச்சி

யானமெத்தென்ற பேச்சாகிய கருப்பஞ்சாற்றினாலும், பொங்கு சுழி என்னும் பூ தடத்தில் - பொலிவான உந்திச்சுழியாகிய தாமரைத்தடாகத்தி னிடத்தில், மங்கை - தமயந்தியினது, நறு - வாசனையுள்ள, கொய் - கொய்து கட்டிய, தாமம் - மாலைகளின், வாசம் - சுகந்தம்பொருந்திய, குழல் - கூந்தலின், நிழற்கீழ் - நீழலின்மேலே, வெய்து ஆம் - வெப்பமான, அக் காமவிடாய் - அந்தக் காமவருத்தத்தை, ஆறேனோ - ஆறப்பெறேனோ (என்று அரசன் ஏங்கினான்), எ - று.

மங்கை என்பதை ஒவ்வொரு அவயவங்களிலுங் கூட்டிக் கொள்க. இங்கு ஓகாரம் (ஆசாஸநம்,) கோரிக்கை என்கிற பொருளில் வந்தது. இதுவும் புதியன புகுதல்.

இளநீர் — இளமையாகிய நீரையுடைய காய், அன்மொழித் தொகை. (சச)

45. மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற, அன்னம்
போய்க் கன்னி யருகணைய — நன்னுதலும், தன்
னாடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை,
யென்னாடல் சொல்லென்றா ளீங்கு.

45. On the beautiful swan, despatched by Nala, approaching the damsel, she who had a beautiful forehead leaving her game went to a retired spot and said:— "Tell me what is the news you bring?

(இ - ள்.) மன்னன் விடுத்த - அரசன் அனுப்பிய, வடிவில் திகழ்கின்ற - ரூபத்தினால் விளங்குகின்ற, அன்னம் போய் —, கன்னி அருகு - தமயந்தியின் பக்கத்தை, அணைய - சேர்ந்த பின், நல் நுதலும் - நல்ல நெற்றியையுடைய தமயந்தியும், தன் ஆடல் விட்டு - தன்விளையாட்டைத் துறந்து, தனி இடஞ் சேர்ந்து - தனித்த இடத்திலே வந்து, அதனை - அவ்வன்னத்தைநோக்கி, ஈங்கு - இவ்விடத்தில், என் நாடல் - என்னவிரும்பியது, சொல் —, என்றாள் —, எ - று. ஆங்கு - அசை.

விடுத்த, திகழ்கின்ற —, இரண்டும் அன்னத்தின் விசேஷணம். வடிவில் — ஐந்தனுருபு, ஏதுப்பொருளில் வந்தது, நாடல் — ஆகுபெயர். (சரு)

46. செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள், தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை, நள னென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான், உளனென்பான் வேந்த னுனக்கு.

46. The swan in reply said;—"There lives a king named Nala, who is possessed of a virtuous heart, benevolent disposition, a right sceptre, and broad shoulders that attract the mind of maidens. He is great in heaven and on earth. In truth he is your king (i. e. husband.)"

(இ - ள்.) [அன்னஞ்சொல்லத்தொடங்கிற்று.] செம்மனத்தான் - செம்மையான மனமுள்ளவன், தண் அளியான் - குளிர்ச்சியான கிருபையுள்ளவன், செங்கோலான் - செவ்வையான ஆளுகையுள்ளவன்; மங்கையர்கள்தம் - பெண்களுடைய மனத்தை - மனங்களை, வாங்கும் தடம் தோளான் - இழுக்கும்படியான பெரிய புசங்களையுடையவன், மேல் நிலத்தும் - மேலுலகத்திலும், நால் நிலத்தும் - நால் வகைப்பட்ட பூமியிலும், மிக்கான் - மேம்பட்டவனாகி, உளனென்பான் - இருக்கிறவனென்று சொல்லப்பட்ட, நளனென்பான் - நளனென்பவன், உனக்கு—, வேந்தன்-அரசன் [கணவன் என்கிறபடி,] மெய்ம்மை - இது சத்தியம், எ - று.

'உளனென்பால்' எனப்பாடமோதல் நன்று; அப்போது மிக்கான - மேம்பட்டவனாகிய, நளனென்பான் - நளனென்று சொல்லப்பட்டவன், உனக்கு வேந்தன் - உனக்குத்தலைவனாக, என்பால் உளன் - என்வசத்திலிருக்கின்றான், எனப்பொருள் அமையும். என்பான்—அசையென்னவுமாம். இப்படிப்பட்டவனை உனக்குக் கணவனாக்குகிறேன் என்பது கருத்து.

அன்றியும், நளன் என்பான் உனக்கு வேந்தனுளன் - கணவனாகத் தக்கவனா யிருக்கின்றானெனவு முரைக்கலாம்.

நான்குநிலங்களாவன,—குறிஞ்சி முல்லைபாலைமருதம்நெய்தல் என்பவைகளில், பாலை நீங்க நன்மக்கள் குடியிருப்பதற்குரிய மற்றை நான்குமாம். நானிலம் - நாற்கடல் சூழ்ந்த நிலமென உரைப்பாருமுளர். (சகூ)

47. அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு.

47. If the red-eyed, powerful Vishnu cannot in this extensive and beautiful world, be compared to Nala in the possession of the most virtuous heart, benevolent eyes and victorious shoulders, who then among the charioteers can be compared to him?

(இ - ள்.) அம் கண் மா ஞாலத்து - அழகிய இடம் பெரிதான பூமியில், அவற்கு - அந்த நளனுக்கு, அறம் கிடந்த - தருமம் தங்கிய, நெஞ்சும் - மனமும், அருள் ஒழுகு - தயாரசம் பொழிகின்ற, கண்ணும்—, மறம் கிடந்த - வீரம்நிலைத்த, திண் தோள் வலியும் - உறுதியான புஜ பலமும், (ஆகிய இவைகளினால்) திறம் கிடந்த - சகலசாமர்த்தியமும் பொருந்திய, செம் கண் மால் - சிவந்த கண்களையுடைய விஷ்ணுவே, அல்லனேல், - ஒப்பல்லாமற்போனால், தேர் வேந்தர் - (மற்ற) ரதாதிபதிகளாகிய அரசர், ஒப்பரோ - ஒப்பார்களோ [ஒவ்வார்கள்], எ-று.

திருமாலே யன்றி அவனுக்கு யாரையும் ஒப்பிடக்கூடாதென்பது கருத்து. பின் ஒப்பர் என்பதனால், அல்லனேல் என்பதனோடும் ஒப்பு என்பது கூட்டப்பட்டது. ஏல், எனில், என்றால், ஆனால், இவற்றோடுசேர்ந்த வினைமுற்று வினையெச்சப் பொருளைத்தரும். (௪௭)

48. புள்ளின் மொழியினொடு பூவாளி தன்னுடைய
உள்ளங் கவர வொளியிழந்த—வெள்ளை
மதியிருந்த தாமென்னவாய்ந்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப் பொன்.

48. Damayanti upon whose soft tresses swarms of bees alighted, on hearing the word of the swan, was pierced in the heart by the flowered arrows (of Cupid), and looked like the moon that had lost its splendour.

(இ - ள்.) வண்டின் பொதி - வண்டின் கூட்டம், இருந்த—, மென் ஓதி - மெல்லிய கூந்தலையுடைய, பொன் - திருமகள்

போன்ற தமயந்தி, புள்ளின் மொழியினொடு-அன்னப் பறவையின் பேச்சோடுகூடவே, பூவாளி - மலரம்பு, தன்னுடைய—, உள்ளம் கவர - மனதைக் கிரகிக்க, ஒளி இழந்த - காந்தியற்ற, வெள்ளை மதி - வெண்மையாகிய சந்திரன், இருந்தது ஆம் என்ன - இருந்ததைப்போல, வாய்ந்து - (வெண்ணிறத்தைப்) பொருந்தி, இருந்தாள்—, எ - று.

புள்ளின் மொழியினொடு என்றது விரவைக் காட்டுகின்றது. முன்னமே நளனைக்கேட்டு ஆசைகொண் டிருந்தவளாதலால் அன்னம் உனக்குப் புருஷனுக்குவே னென்றவுடனே காமமிருந்து அதனால் உடம்பு வெளுத்திருந்தாள் என்பது கருத்து. பூவாளி மன்மதனுமாம்.

கவர-காரணப்பொருட்டாய்வந்த செயவெனெச்சம்.(சஅ)

49. மன்னன் மனத்தெழுந்த மையனோ யத்தனையும்
அன்ன முரைக்க வகமுருகி—முன்னம்
முயங்கினாள் போற்றன் முலைமுகத்தைப் பாரா
மயங்கினா ளென்செய்வாள் மற்று.

49. On the swan relating to her the extent to which lust had arisen in the heart of Nala, Damayanti's heart melted within her, and imagining herself as havingalready embraced him, she gazed upon her breasts and become quite intoxicated (with lust.) What else could she do ?

(இ-ள்.) மன்னன் மனத்து-நளன் மனதில், எழுந்த - உண்டாகிய, மையல் நோய் அத்தனையும் - காமநோயை யெல்லாம், அன்னம்—, உரைக்க - சொல்ல, அகம் உருகி-மனந்தளர்ந்து, முன்னம் - முன்னதாக, முயங்கினாள்போல் - தழுவிக்கொண்டவள்போல், தன் முலைமுகத்தை—, பாரா - பார்த்து, மயங்கினாள் - மயக்கம்பொருந்தியிருந்தாள் (தமயந்தி,) மற்று என் செய்வாள் - இன்னம் யாதுசெய்யமாட்டுவாள், எ - று.

நளனுக்குத் தன்மேல் அதிக ஆசை இருப்பதைக் கேட்டவுடனே அவனைத் தழுவிக்கொண்டதாகவே பாவித்துத் தலைவிழ்த்து ஒன்றுந் தோன்றாமல் மயங்கியிருந்தாள் என்பது கருத்து. இங்கு மற்று பிறிதென்னும் பொருளில் வந்தது. 'முயங்கினான்' எனவும்பாடமுண்டு, அப்போது அவன் தன்னைத்

தழுவிக்கொண்டதாக என்று உரைத்துக்கொள்க பாரா—செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம், விகுதியே காலங்காட்டும்.

50. வாவி யுறையு மடவனமே யென்னுடைய, ஆவி யுவந்தளித்தா யாதியால்—காவினிடைத், தேர் வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி யென்றுரைத்தாள், பார்வேந்தன் பாவை பதைத்து.

50. The daughter of him who ruled the earth (i. e. king Bhima) being troubled in mind, said :—" O thou young swan that livest in tanks thou hast become the means of causing joy to my soul. Return to the garden, and tell the king who rides in chariots, my state of mind.

(இ - ள்.) பார்வேந்தன் பாவை - வீமராஜனுடைய மகளாகிய தமயந்தி, பதைத்து - மனம்பொறுமல், வாவி உறையும் - தடாகத்தில் வாசஞ்செய்கிற, மடஅனமே-மடமைபொருந்திய அன்னமே, என்னுடைய—, ஆவி - உயிரை, உவந்து அளித்தாய் - சந்தோஷித்துக் கொடுத்தவனாக, ஆதி,-ஆகிறாய், காவினிடை - தோட்டத்தில், சென்று - போய், தேர் வேந்தற்கு - நளமகா ராசனுக்கு, என் நிலைமை - என்னுடையகாதல்விஞ்சியிருக்கும் விதத்தை, உரைத்தி - சொல், என்று—, உரைத்தாள் - சொல்லினாள் தமயந்தி, எ - று. ஆல் - அசை.

ஆ என்னு முதனிலை, முன்னிலை இகரவிகுதி தகர எழுத்துப் பேறுபெற்று ஆதி ஆயிற்று. தி - விகுதி என்பதேநேர். வருதி, நிற்றி முதலியவையும் இத்தன்மையவே. இவை நிகழ்காலமுன்னிலை யொருமை முற்றும் ஏவலொருமை முற்றும் வரும். (ருo)

51. மன்னன் புயங்கள் மலர்க்கைக்குக் கச்சாகும், என்ன முயங்கு விப்பே னென்றன்னம் — பின்னும், பொருந்தவன்பா லோதியலர்ப் பூங்கணைகள் பாய இருந்தவன்பாற் போன தெழுந்து.

51. " I shall cause the shoulders of the king to become a covering to your soft hand," said the swan ; and so saying, after a few adapted words about Nala, it arose and flew

away to him who was pierced by the flowered arrows of cupid.

(இ - ள்.) மன்னன் புயம் - நளனுடைய புஜமானது, நின் - உன்னுடைய, மலர் கைக்கு - பூபோன்ற கைத்தலத்துக்கு, கச்சு ஆகும் - கஞ்சுகம் ஆகும், என்ன-என்று சொல்லும்படி, முயங்கு விப்பேன் - அணையச்செய்வேன், என்று—, அன்னம்—, பின்னும் - மேலும், பொருந்த - பொருந்தும்படி, அன்பால் - இஷ்டத்தினால், ஓதி - சொல்லி, எழுந்து - அவ்விடம் விட்டு எழும்பி, மலர் பூ கணைகள் - மலர்களாகிய அழகான அம்புகள், பாய இருந்தவன்பால் - பாயும்படி இருந்தவனாகிய நளனிடத்து, போனது - போயிற்று, எ - று.

நளன் உன்னைக் கலியாணஞ்செய்யும்படி செய்வேனென்று தமயந்திக்குச் சொல்லி அன்னம் காமமுற்றிருந்த நளனிடம் சென்றதென்பது கருத்து.

பாணிக்கிரகணத்தில் பெண்கையைப் புருஷன் தன்கையாற் பிடிப்பதாகையால், மன்னன்புய நின்மலர்க்கைக்குக் கச்சாகும் என்றது. "வளமுலைக்குக் கச்சாகும்" எனவும்பாடம். (௫௧)

52. கொற்றவன்றன் றேவிக்குக் கோமகடன் றோழி
யர்கள், உற்ற தறியா வுளநடுங்கிப் — பொற்றொ
டிக்கு, வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்
றதனைக், கூறினாள் பெற்ற கொடி.

52. The (attendant) maidens of the king's daughter, not knowing what had happend, became afraid and told the king's wife that some thing had taken possession of Damayanti ; and the Queen mother mentioned the whole affair to the king.

(இ - ள்.) கோமகள் தன் - இராஜகுமாரியாகிய தமயந்தியினுடைய, தோழியர்கள் - தோழிமார், உற்றது - (அவளுக்கு) சேர்ந்ததை, அறியா - அறியாமல், உளம் நடுங்கி—, கொற்றவன்றன் தேவிக்கு - வீமராஜனுடைய மனைவியுடன், பொன் தொடிக்கு - பொன்னாலாகிய வளையலையுடைய தமயந்திக்கு, வேறுபாடு - வேற்றுக்லை (யாதோ,) உண்டு என்றார் - உண்டாயிருக்கிறதென்று சொல்லினார்கள் ; பெற்றகொடி - (அவளை)

பெற்றவளாகிய அரசி, அதனை - அச்செய்தியை, வேந்தனுக்கு கூறினாள் - வீமராசனுக்குச் சொன்னாள், எ-று. மற்று-அசை.

நடுங்கி என்னும் செய்தெனெச்சம் உளத்தின் வினையாதலால் "சினைவினை" என்கிற சூத்திரவிதிப்படி 'என்றாள்' என்னும் பிறகருத்தாவின் வினையில் முடிந்தது. வேறுபாடாவது உடம்புவெளுத்தது முதலியன. வேறுபாடு—வேறு+படு, இரண்டு மொருசொல்லாய்ப் பகுதியாயிற்று. பாடு - முதனிலை விகாரப்பட்ட தொழிற்பெயர். அறியா - அறிந்து என்று பொருள் கூறினும் அமையும். கொடி - உவமையாகுபெயர். தேவிக்கு—நான்கனுருபு கொடைப்பொருளில் வந்தது. (ருஉ)

53\. கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப்
பைங்கால், மருங்குலவ வார்முரச மார்ப்ப—
நெருங்கு, புரிவளை நின்றேங்கப் போய்ப்புக்கான்
பெற்ற, வரிவளைக்கை நல்லாண் மனை.

53\. Surrounded by dark-haired damsels, who with their fair hands fanned him with chowries causing refreshing breeze on both sides, and amid the beating of drums and the blowing of the twisted conchs, king Bhima entered the apartment of her, whose hands were ornamented with striped bangles-

(இ - ள்.) [அதுகேட்டு வீமராசன்.] கரு குழலார் - கருமையான கூந்தலுள்ள பெண்களுடைய, செம்கையினால்-செம்மையாகிய கையினால், வெண்கவரி - வெண்சாமரையினது, பைங்கால் - பசுமையானகாற்று [இளங்காற்று], மருங்கு - பக்கங்களில், உலவ - வீச, வார் முரசம் - வாரிறுக்கிக்கட்டிய பேரிகை, அல்லது பெரியபேரிகை, ஆர்ப்ப - சப்திக்க, நெருங்கு - நெருங்கியிருக்கிற, புரி - சுருளாயிருக்கிற, வளை - சங்குகள், நின்று ஏங்க - நிலைபெற்றுச் சப்திக்க, போய்—, பெற்ற - தான் பெற்ற, வரி வளை கை - நல்ல ரேகையுள்ள வளையல்களணிந்த கையையுடைய, நல்லாள் - தமயந்தியினது, மனை — மாளிகையில், புக்கான் - பிரவேசித்தான்.

நின்றென்பது அசையும் ஆம். "கருங்குழலார்செங்கையினால் வெண்கவரி பைங்கால்" என்று ஒன்றோடொன்று மாறுனபொருள் குறித்தமையினால் இது முரண்டொடை.

உலவ—உலவு - பகுதி, இது "குறியதன்கீழா" என்பதினால் உலாஎன்பது உலஎனக்குறுகி, உகரச்சாரியையேற்றது. உலவ, ஆர்ப்ப, ஏங்க,—இவை வினைச்செவ்வெண். (௫௩)

54. கோதை சுமந்த கொடிபோ லிடைநுடங்கத்,
தாதை திருவடிமேற் றான்வீழ்ந்தாள் — மீதெல்
லாம், காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றரற்றும்,
பூந்தார மெல்லோதிப் பொன்.

54. Damayanti, who resembled Lakshmi and whose soft hair was decorated with garlands of flowers, over which, the joyous bees flew humming beautiful airs, like a creeper bearing a garland, bending her waist prostrated herself at the sacred feet of the father.

(இ - ள்.) மீதெல்லாம் - மேலெல்லாம், நின்று—, காந்தாரம் பாடி - இசையைப்பாடி, களிவண்டு - களிக்கின்ற வண்டுகள், அரற்றும் - கூவப்பெற்ற, பூந்தார் - பூமாலைசூடிய, அ - அந்த, மெல் ஓதி - மேன்மையான கூந்தலையுடைய, பொன் — திருமகளோடொத்த தமயந்தி கோதை சுமந்த - மாலைசுமந்த கொடிபோல் - கொடியைப்போல், இடை—, நுடங்க-அசைய, தாதை திருவடிமேல்-தந்தையின் அழகிய பாதங்களின்மேல், வீழ்ந்தாள்—, [தொழுதாளென்றபடி], எ-று. தான் - அசை.

கொடிபோல் வீழ்ந்தாளென்று கூட்டுக. பூந்தார் என்பது குறிப்புப்பெயரெச்சமுமாம். அரற்றும் என்கிற பெயரெச்சம் பூந்தார் என்கிற இடப்பெயரைக்கொண்டது. கோதைசுமந்த-கூந்தலைச்சுமந்த எனவுமுரைக்கலாம். (௫௪)

55. பேரழகுசோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப்—பாரக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளு மணம்.

55. The king of the solar race saw his daughter who stood with her crescent-like forehead, shedding forth great beauty and dripping with perspiration, and thought of that kind of marriage, by which a husband is selected by wearing a garland round his neck.

(இ - ள்.) பேர் அழகு-பெரிய அழகு, சோர்கின்றதுஎன்ன-வழிகிறது என்னும்படி, பிறை நுதல் மேல் - சந்திரப்பிறை

போன்ற நெற்றியின்மேல், நீர் அரும்ப - வியர்வை நீர் துளிக்க, நின்றாள் - நின்றவளாகிய, தன் பேதையை - தன்மகளை, பாரா - பார்த்து, குல வேந்தன் - நற்குலத்திலுதித்த விதர்ப்பராசன், கோ வேந்தர் தம்மை - பூமியை ஆளுகின்ற ராசாக்களை, மலர் வேய்ந்து - பூமாலைசூட்டி, கொள்ளும் - கொள்ளத்தக்க, மணம் - கலியாணத்தை, சிந்தித்தான் - நினைத்தான், எ-று.

நெற்றி வியர்த்தது தண்டமிட்டு எழுந்த வருத்தத்தினால், உளன்மேல் காமசிந்தையினாலெனினுமொக்கும். வியர்வையை அழகு ஒழுகுவது என்று குறித்தார். (நரு)

56. மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரசம்
எங்கு மறைகென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு.

56 The king (Bhima) who possessed the good country in which the water of the Ganges flows in wavelets upon the leaves of the green Arecanut palm, sent messengers to kings and commanded the drummers to proclaim, everywhere that seven days were fixed for Damayanti's Swayamvaram.

(இ - ள்.) பைங்கமுகின் - பசுமையான பாக்குமரங்களின், கூந்தல்மேல் - மடல்களின்மேல், கங்கை கொழுந்து - கங்காநதியின் சிறிய நீர்த்தாரை, ஓடும்-பெருகப்பெற்ற, நல் நாடன் - நல்லநாட்டையுடைய விதர்ப்பராஜன், வேந்தர்மேல்-ராஜாக்களிடம், தூது ஓடவிட்டு - தூதரைப்போகவிட்டு, மங்கை - தமயந்தியின், சுயம்வர நாள் - இயம்வரத்திற்கு உரிய நாள், ஏழ் என்று—, வார் முரசம் - பெரிதானபேரிகையை, எங்கும் - எவ்விடத்திலும், அறைக என்று-அடியுங்கள் என்று, இயம்பினான் - சொன்னான், எ-று.

கொழுந்து—உவமையாகுபெயர், கங்கையின் அலைகளினின்றுந் தெறிக்குந் தண்ணீர். ஸ்வயம்வரம் என்கிற ஆரியமொழி சுயம்வரம், சயம்வரம், சயமரம் எனச் சிதைந்து வழங்குகின்றது. அறைகென்றான்—அறைக என்பதில் ஈறுதொகுத்தல். ()

57. மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டிரைக்குந், தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி - நாமத்தார், பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே, கோவேந்தர் செல்வக் குழாம்.

57. Just as the name of Swarki, who may be compared to Harichandran, whose white umbrella is adorned with precious pearls, who possesses great war elephants, and who is decked with garlands of flowers upon which the bees sing, is universally known, being made the subject of sweet Tamil verse, so spread far and wide the illustrious assemblies of kings of this earth.

(இ - ள்.) மா - பெரிய, முத்தம் - முத்துகளணிந்த, வெண் குடையான் - வெள்ளைக் குடையுடையவனும், மால் களிற்றான் - பெருமைபொருந்திய யானையுடையவனும், வண்டு—, இரைக்கும் - கூவப்பெற்ற, தாமத்து - பூமாலையுள்ள, அரிச்சந்திரன் - அரிச்சந்திரனைப்போலச் சத்தியவானும் ஆகிய, சுவர்க்கி-சுவர்க்கி என்பவனுடைய, நாமம் தார்-நாமமாலையை, பா வேய்ந்த - பாடல்களினு லணியப்பெற்ற, செந்தமிழ் ஆம் என்ன - செவ்வியதமிழ்ப் பிரபந்தம்போல், கோ வேந்தர் - பூமி ஆளும் அரசருடைய, செல்வம் - செல்வம் பொருந்திய, குழாம் - கூட்டமானது, பரந்தது - வியாபித்தது, [அரசர் குழாம் விழககரம் வரும்பொருட்டு நாற்றிசையும்] பரவிற்று என்-று. ஏ - அசை.

மால்—உரிச்சொல்லாதலின் "இடையுரிவடசொல்" என்கிற விதியினுல் திரியாது நின்றது. (நள)

58. செந்தடையும் வண்டுறைதார்ச் செய்யாள் வளர் மார்பன், கந்தடையும் வேழக் கடைத்தலைவாய்— வந்தடைந்த, பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரி லீண்டிற்றே, கோவேந்தன் மாதைக் குறித்து.

58. The attendants of the earthly sovereigns, who coveting Damayanti arrived at the court-yard, where the elephants are tied, of king Bhima who wears beautiful armour, who is decked with garlands of flowers upon which the bees sing and upon whose chest the Goddess of courage dwells, came crowding to the golden capital.

(இ - ள்.) செத்தடையும் - கல்லகவசமும், வண்டு உறை தார் - வண்டுகள் வாசஞ்செய்கின்ற மாலையும், செய்யாள் - ஸ்ரீதேவியும், வளர் - வளர்கின்ற, மார்பன் - மார்பை யுடையவனாகிய வீமராஜனது, கந்து - கட்டுத்தறியை, அடையும் - அடைந்திருக்கிற, வேழம் - யானையை யுடைத்தாயிருக்கிற, கடைத்தலைவாய்-தலைக்கடையில், கோ வேந்தன் - வீமராஜனுடைய, மாதை குறித்து - மகளாகிய தமயந்தியைக் குறித்து, வந்து அடைந்த - வந்து சேர்ந்த, பூவேந்தர் தங்கள் - பூபாலர்களுடைய, இனை - பரிவாரமானது, பொன் நகரில் - அழகான நகரத்தினிடத்தில், ஈண்டிற்று-நெருங்கிற்று, எ-று. ஏ - அசை.

வீமராஜன் அரமனைவாசலில் வந்த அரசருடைய சேனை முதலானவைகள் அந்நகரத்தில் இடம்இன்றி நெருங்கின என்பது கருத்து. தார், செய்யாள், என்னும் இடங்களில் உம்மை விகாரத்தால் தொக்கன.

செய்யாள்—செம்மை - பகுதி, பண்பு, ஆள் - பெண்பால் விகுதி, மைகெட்டு முன்னின்ற மகரமெய் யகரமாகத் திரிந்து தனிக்குறின் முன்னொற்றுதலால் இரட்டி முடிந்தது. (௫௮)

59. புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும், உள்ளும் புறமு மினிதுறைந்தார்—தெள்ளரிக்கண், பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன், கோமகளைத் தம்மனத்தே கொண்டு.

59. With their minds filled with thoughts of the valiant king of Vidarpa's daughter, whose beauty shone like gold, and whose eyes were as clear as those of Lakshmi, they, with heartfelt joy, took up their abode in the groves where the birds lived, and by the tanks in which grew the flower of the lotus.

(இ - ள்.) தெள் அரி கண் - தெளிவான ரேகைகளுள்ள கண்களையுடைய, பூமகளை - இலக்குமிக்குச் சமானமானவளும், பொன்னை-பொன்போல் விளங்குகிறவளுமான, பொரு வேல்-யுத்தஞ்செய்யவல்ல ஆயுதம்(தரித்த), விதர்ப்பன் தன் -

விதர்ப்ப ராஜனுடைய, கோமகளை-மேன்மையான மகளாகிய தமயந்தியை, தம் மனத்தே கொண்டு - தங்கள் மனங்களிற் சிந்தித்துப் (பலநாட்டரசரும்), புள் உறையும் - பக்ஷிகளிருக்கின்ற, சோலைகளும் - தோட்டங்களிலும், பூ கமல வாவிகளும் - அழகிய தாமரைத் தடாகங்களிலும், உள்ளும் புறமும் - மனதின் உள்ளும் வெளியிலும், இனிது - சந்தோஷமாக, உறைந்தார் - வாசஞ்செய்தார்கள், எ - று.

வந்த அரசர் ஊரில் இடம்போதாமையால் தோப்புகளிலும் குளக்கரைகளிலும் வசித்தார்களென்பது கருத்து.

கோ என்பது இலக்கணையால் மேன்மையை யுணர்த்திற்று. அவ்விடங்களின் பொலிவினாலும் தமயந்தியைக் காண்போமென்கிற எண்ணத்தினாலும் உள்ளும் புறமும் இனிது என்றது. அச்சோலை முதலியவைகளின் உள்ளிடத்திலும் வெளியிடத்திலும் எனினும்பொருந்தும். பூமகளைப்பொன்னைக் கோமகளை என்னுமிடத்தில் "ஒருபொருள்மேல்" என்கிற சூத்திரவிதியை அமைத்துக்கொள்க. பூமகள் என்பதைப் பூதேவிக்கும், பொன் என்பதைச் சிதேவிக்கும் கொள்ளினுமமையும்.()

60. வழிமேல் விழிவைத்து வாணுதலா ணாம
மொழிமேற் செவிவைத்து மோகச்—சுழிமேற்
றன் நெஞ்சோட வைத்தயர்வான் கண்டா னெடு
வானில், மஞ்சோட வன்னம் வர.

60. With his eye fixed upon the path of the swan, with his ear on the name of her who possessed a bright forehead, and with his heart tossed about in the whirlpool of his own lustful desires, he, who was cast down and dejected, saw in the heaven, the swan returning with resplendent beauty.

(இ-ள்,) வழிமேல்-அன்னம் போனவழியில், விழி வைத்து-கண்ணைவைத்து, வாள் நுதலாள் - பிரகாசமான நெற்றியையுடைய தமயந்தியினது, நாம மொழிமேல்-பெயராகிய சொல்லின்மேல், செவிவைத்து - காதைவைத்து, மோக சுழிமேல் - மோகமாகிய நீர்ச்சுழிமேல், தன் நெஞ்சு - தன்மனதை, ஓட வைத்து-ஓடும்படிவைத்து, அயர்வான் - வருந்துகின்ற நளன்,

நெடு வானில் - பெரியவானத்தில், மஞ்சோடு - அழகுடனே, அ அன்னம் - அந்த அன்னப்பக்ஷி, வர கண்டான்—, எ-று.

மஞ்சு—காரியம் அனுகூலப்படுத்தி வருகையால் விசேஷமான பொலிவு. மஞ்சோடு - மேகத்தோடு எனவும் பொருள் கொள்ளலாம். மேகமண்டலத்தின் இடைப்பறந்து வந்தது என்பது கருத்து. வர என்பதைத் தொழிற்பெயராக் கொண்டு கண்டான் என்பதற்குச் செயப்படு பொருளாக்குக.

மஞ்சு—இது அழகின்பேராம், பொது வடசொல். மெல்—எழனுருபு. (சுo)

61. முகம்பார்த் தருணோக்கி முன்னிரந்து செல்வர்
அகம்பார்க்கு மற்றோரைப் போல—மிகுங்காதல்
கேளா விருந்திட்டா னன்னத்தைக் கேளாரை
வாளால் விருந்திட்ட மன்.

61. Like the mendicant who, perceiving the mind of the rich man, stands before him, beggingly gazing at his face and craving his compassion, so the king Nala who, with his sword slew his enemies, and made a feast of them, was through excessive lust, eagerly listening to the words of the swan.

(இ - ள்.) முகம் பார்த்து—, அருள் நோக்கி - தயையைக் கண்டு, முன் - எதிரிற் சென்று, இரந்து - யாசித்து, செல்வர் - பணமுள்ளவர்களுடைய, அகம் - மனதை, பார்க்கும் - எதிர் பார்க்கிற, அற்றோரைப்போல - தரித்திரரைப்போல, மிகு காதல் - மிகுந்தகாதலினால், அன்னத்தை—, கேளா இருந்திட்டான் - (தமயந்தி சங்கதியைக்) கேட்டிருந்தான், (யாரெனில்), கேளாரை - பகைவரை, வாளால் - கத்தியினால், விருந்து இட்ட - (கூளிமுதலியவைகளுக்கு) விருந்தாகச்செய்த, மன் - நளமகாராஜன், எ - று.

அன்னம் பொலிவோடு வரக்கண்ட சந்தோஷத்தினால் ஒன்றுந் தோன்றாமல் சிறிதுநேரம் யாதுங்கேளாமல் இருந்தான் எனவுமாம். அன்னத்தைக் கேள் ஆ - உறவினரைப் போற் கொண்டு, விருந்திட்டான் - உணவு முதலியவைகளால் உபசரித்தா னென்பதும் அமையும்.

ஆ—ஈறுதொக்க வினையெச்சம். கேளா—செய்யா என்னும் உடன்பாட்டு வினையெச்சம்; கேளாமல் என்றபோது எதிர்மறை வினையெச்சம். பார்த்துமுதலிய வினையெச்ச வடுக்குக் காரணகாரியப் பொருத்தத்தால் வந்தது. (௬௧)

62. அன்னக் குலத்தி னரசே யழிகின்ற, என்னுயி
ரை மீள வெனக்களித்தாய் - முன்னுரைத்த, தே
மொழிக்குத் தீதிலவே யென்றான் றிருந்தாரை,
ஏமொழிக்கும் வேலா னெடுத்து.

62. He, whose duty it was to damp the joys of his enemies, asked, "O king of the race of the swan you have restored to life my soul which was well nigh perishing. Is the honey-mouthed maiden, of whom you spoke before, safe from evil?"

(இ-ள்.) திருந்தாரை-சத்துருக்களை, ஏம் ஒழிக்கும்-களிப்பு ஒழியச்செய்கிற, வேலான்-வேலையுடையவனான நளன், அன்னம் குலத்தின்-அன்னங்களின் கூட்டத்துக்கு, அரசே-அரசனாகிய ஓ பெரிய அன்னமே, அழிகின்ற-நாசமடையும்படியிருந்த, என் உயிரை-என்பிராணனை, மீள-திரும்பவும், எனக்கு—, அளித்தாய்-கொடுத்தாய், முன் உரைத்த-(நீ) முன்சொன்ன, தேமொழிக்கு-தேன்போலும்பேச்சையுடைய தமயந்திக்கு, தீது இலவே-துன்பங்கள் இல்லையே, எடுத்து என்றான்-இப்படியாக எடுத்துச் சொன்னான், எ-று.

நளன் தன்காதலினால் அவளுக்குத் தீங்கு ஒன்றும் இல்லாதிருக்கிறதா என்று தமயந்தியின் க்ஷேமத்தை விசாரித்தான் என்பது கருத்து. தேமொழி — உவமத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, தேன் என்பதில் "தேன்மொழி" சூத்திரத்தினால் னகரங்கெட்டது. எடுத்துச்சொல்லுதல்-பிரதானமாகச் சொல்லுதல், மேன்மைப்படுத்தி எனவுமாம். ஏம்—ஏமம் இடைகுறைந்தது.

தீதிலவே என்னுமிடத்து தீது தீமை என்பதுபோல் பண்புப்பெயர்; து-பண்புப்பெயர் விகுதி; ஒன்றன்பால் விகுதியன்று; ஆதலால் இது பால்பகா வஃறிணைப்பெயர், இங்கு பன்மைக்காய் பன்மை வினைகொண்டது. (௬௨)

63. கொற்றவன்ற னேவலினற் போயக் குலக்கொடி பால், உற்றதுவு மாங்கவடா னுற்றதுவும் — முற்றும், மொழிந்ததே யன்ன மொழிகேட் டரசற், கழிந்ததே யுள்ள வறிவு.

63. The king was bereft of his farmer reason on hearing the words of the swan, which gave him a full account of its going according to his sovereign command, and its meeting with her who came of a noble race.

(இ - ள்.) அன்னம்—, கொற்றவன் தன்-அரசனுடைய, ஏவலினல்-கட்டளையினல், அக் குலக்கொடியால்-அந்த நற்குலத்திற்பிறந்த கொடிபோன்ற தமயந்தியினிடத்து, போய்—உற்றதுவும் - சேர்ந்ததும், அவள்—, ஆங்கு - அப்படி, உற்றதுவும் - பொருந்திய கருத்தும், முற்றும் - முழுதும், மொழிந்தது - சொல்லிற்று ; மொழிகேட்டு - அச்சொல்லைக்கேட்க, [கேட்டதனல்,] அரசற்கு - நளனுக்கு, உள்ள அறிவு- முன்னிருந்த அறிவும், அழிந்தது - கெட்டது, எ - று. தான் - ஏ - அசைகள்.

அன்னமொழி - அப்படிப்பட்டசொல்லை எனவும் கொள்ளலாம். அப்போது அன்னம் என்பதுவருவிக்கவேண்டும். குலக்கொடி என்பதற்குக் குலாசலம் குலமணி என்பதுபோலமேன்மையுள்ள கொடி எனவும் பொருளுரைக்கலாம். அவள் தன்னிடத்தில் மிகுந்தகாதல்கொண்டு வருந்துகிருள் என்பதைக் கேட்க அரசனுக்கு ஒன்றுந் தோன்றமல் மோகமாயிற்றுஎன்பது கருத்து.

கேட்க என்பதுகேட்டு எனத்திரிந்தது. [வினையியல்உள-ம் சூத்திரம்;] ஈண்டுஅவ்வெச்சம் காரணப்பொருட்டாய்வந்தது. "உயிர்வரினுக்குறள் ஒடும்" என்றதனல்உகரம் கெடாமல் உற்றதுவும் என உடம்படுமெய் பெற்றது. (சுங)

64. கேட்ட செவிவழியே கேளா துணர்வோட
ஓட்டை மனதோ டுயிர்தாங்கி— மீட்டும்
குழியிற் படுகரிபோற் கோமான் கிடந்தான்
தழலிற் படுதளிர்போற் சாய்ந்து.

64. His mind not catching the words of the swan, but departing through his organ of hearing, and supporting

his life with an empty heart, the king, like an entrapped elephant in a pit, dropped down on a side, like a tender leaf in the fire.

(இ - ள்.) கேட்ட செவிவழியே-அச்செய்தி கேட்டகாதின் வழியாக, உணர்வு - அறிவு, கேளாது - கேளாமல்,ஓட- ஓடிப் போக, ஓட்டை மனத்தோடு-ஓட்டையான மனத்தினால், உயிர் தாங்கி - பிராணனைத் தாங்கிக்கொண்டு, மீட்டும்-திரும்பவும், கோமான் - அரசன், தழலில் படுதளிர்போல் - நெருப்பில் பட்ட துளிரைப்போல், சாய்ந்து - வாடிவீழ்ந்து, குழியில்படு கரிபோல் - படுகுழியிலேவீழ்ந்த யானையைப்போல், கிடந்தான் - (ஓய்ந்து) கிடந்தான், எ - று.

கேளாது ஓட என்பதற்கு எவ்வளவு வலிந்துநின்றாலும் அறிவுமயங்கிற் றென்பது கருத்து.

கோமான்—இதில் மான் விகுதி. (௬௪)

65. கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப, ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினார்—போதில், பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாடன், அடையாத வாயி லகம்.

65. In order to proclaim distinctly to the kings, the day of Damayanti's Swayamvaram, accomplished messengers arrived at the ever open (i. e,)hospitable door of him who possessed a country, where the male and female bees sleep together in the same flower, and where the noisy din of the waters is heard.

(இ - ள்.) கோதை சுயம்வர நாள்-தமயந்தியின் சுயம்வரத்துக்கு இட்டநாளை, கொற்றவனுக்கு-அரசனுக்கு, உற்று உரைப்ப - நன்றாய்ச்சொல்லும் பொருட்டு, ஏதம் இலா - குற்றம் இல்லாத, காட்சியர்-அறிவை யுடையவராகிய தூதர்,போதில்-பூவில், பெடையோடு - பெண்வண்டுகளுடனே, உண்டு உறங்கும் - வண்டுகள் தூங்கப்பெற்ற, பேரொலி நீர் நாடன் - மிகுந்த வொலியுள்ள நீர்வளம் பொருந்தின நாட்டையுடையவனது, அடையாத - (என்றும்) மூடாத, வாயில் அகம் - வாசலினிடத்து, வந்து எய்தினார்-வந்து சேர்ந்தார்கள், எ-று.

வாசல் கூடாதிருத்தல் அச்சம் இல்லாமையாலும் எப்போதும் கொடுப்பதற்கு யாசகரை யெதிர்பார்ப்பதினாலும் என்று அறிக. (சுரு)

66. காவலன்றன் றூதர் கடைக்கா வலர்க்கறிவித்
தேவலிற்போ யீதென் றியம்புதலும்—மாவின்
பொலிந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து,

66. When the messengers of king Bhima, entered the Court of Nala on his permission, and related the news (of Damayanti's marriage), he whose withered shoulders were pierced by the flowered arrows (of Cupid), ordered his magnificent horse chariot to be made ready.

(இ-ள்.) காவலன் தன் தூதர்-விதர்ப்பராஜனுடையதூதர்கள், கடை காவலர்க்கு-வாசல் காப்போருக்கு, அறிவித்து—, ஏவலின் - (அரசனுடைய) உத்தரவினால், போய் - உள்ளே போய், ஈதென்று - காரியம் இன்னது என்று, இயம்புதலும்- சொன்னவுடனே, பூவாளி பாய - மலரம்பு பாய்வதினால், மெலிந்த தோள் - தளர்ந்த புயங்களையுடைய, வேந்தன் - நளமகாராஜன், விரைந்து - துரிதப்பட்டு, மாவின் - குதிரைகளை, பொலிந்த தேர் - அழகியதேரில், பூட்டு என்றான்-(சாரதியை நோக்கி) கட்டு என்று சொன்னான், எ - று.

மாவின் என்னும்ஐந்தாம்வேற்றுமையுருபு செயப்படு பொருளில் மயங்கிவந்தது "யாதனுருபில்" என்கிற[பெயரியல்-௩0] சூத்திர விதிப்படி; அல்லது இன் சாரியை யாகவும், ஐ உருபு தொக்கதாகவும் கொள்ளலாம். (சுசு)

67. கொட்ட கிழமருங்கிற் கீழ்மகளிர் நீள்வரம்பில்
இட்ட பசுங்குவளை யொடித்த—கட்டி
கரையத்தே னூறுங் கடனாட னூர்க்கு
விரையத்தே ரூரென்றான் வேந்து.

67. The king (Nala) commanded (his charioteer) saying "Drive quickly to the country of Vidarpa which is by the sea-shore, where the lumps of earth dug up by the plough are dissolved in the honey which gushes out of the tender kuvala flowers, which are cast on the embank-

ments of the fields by the low cast females whose waists are so slender that they are apt to break.

(இ - ள்.) கெட்ட - அழியத்தக்க, சிறு மருங்குல் - சிறிய இடையையுடைய, கீழ் மகளிர் - பள்ளச்சிகள், நீள் வரம்பில் - நீண்டவரப்புகளிலே, இட்ட - களைந்துபோட்ட, பசு குவளை - பசுமையான நீலோற்பல மலர்கள், ஏர் அடித்த - உழுமாடுகள் பெயர்த்த, கட்டி - மண்கட்டிகள், கரைய - கரையும்படி, தேன் ஊறும் - தேன்சுரந்து ஒழுகப்பெற்ற, கடல் நாடன் - கடற்கரையின்நாடுள்ள விதர்ப்பராஜனுடைய, ஊர்க்கு - நகரத்திற்கு, விரைய - துரிதமாக, தேர் ஊர் - தேரைச்செலுத்து, என்ருன் - என்றுசொன்ஞன், வேந்து - நளமகாராஜன்[சாரதியைநோக்கி,] எ - று.

களை பிடுங்கும்போது பிடுங்கிப்போட்ட குவளைகளினின்றும் ஒழுகுகின்ற தேனால் ஏரடித்த மண்கட்டிகள் கரையத்தக்க வளப்பமுள்ளதும் கடைசியருஞ் சுந்தரமா யிருக்கப்பெற்றதும் அந்நாடு என்பதாம்.

விரைய என்னும் வினையெச்சம் இங்கு வினையுரி. (௬௭)

68. சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்ஞடுபின்ஞக், கடற்ருனை முன்ஞகக் கண்டான் — அடற்கமைந்த. வில்லியரும் பொற்ரும வீமன் றிருமகளா, நல்லுயிரும் வாழு நகர்.

68. Nala saw behind him, his country which yielded clusters of good golden paddy, and before him his sea-like army of brave and valiant archers, extending to the city where lived his sweetheart, Bhima's beautiful daughter, who was decked with a garland of gold,

(இ - ள்.) சடை செந்நெல் - சடைபற்றிய செந்நெல்லானது, பொன்விளைக்கும் - பொன்னை விளைவிக்கின்ற, தன்நாடு - தன் இராச்சியம், பின் ஆக - பின்புறத்ததாக, கடல் தானை - கடல் போன்ற சேனை, முன் ஆக - முன்புறத்தாக, அடற்கு - வீரத்திற்கு, அமைந்த - பொருந்தின, வில்லியரும் - வில்லுடைய வீரரும், பொன் தாமம் - பொன்மாலையணிந்த, வீமன் திருமகளாம் - வீமராஜனுடைய அழகுள்ள மகளான தமயந்தியாகிய,

நல்உயிரும்- (தன்னுடைய) நல்ல உயிரும், வாழும்நகர் - வாழ்கின்ற குண்டினபுரியை, கண்டான்—(நளன்) எ - று.

மாவிந்த நகரமுதல் குண்டின நகரம்வரையில் நளன்சேனை நின்றது என்பது கருத்து. செந்நெல் பொன்விளைக்குமென்றால் பொன்போன்ற தானியங்களை விளைக்குமென்பது; அல்லது அந்நெற்களால் மிகுந்த திரவியமுண்டாகு மென்பது தாற்பரியம்.

அடற்கு—குவ்வுருபு செயப்படுபொருளில் வந்ததெனவும் கொள்ளலாம். (சுஅ)

69. நெற்றித் தனிக்கண் ணெருப்பைக் குளிர்விக்கும், கொற்றத் தனியாழ்க் குலமுனிவன்—உற்றடைந்தான், தேனாடுந் தெய்வத் தருவுந் திருமணியும், வானாடுங் காத்தான் மருங்கு.

69. The sage Narada, whose matchless guitar could cool even the fiery temper of Siva whose forehead is adorned with a single eye, approached him (Indra), who guarded the celestial trees (around which the bees flew,) the precious gem of Swerga, and the regions of Heaven.

(இ - ள்.) நெற்றி தனி கண் - நெற்றியில் ஒப்பற்ற கண்ணையுடைய சிவபெருமானது, நெருப்பை - கோபாக்கினியையும், குளிர்விக்கும் - குளிரும்படி செய்யவல்ல, கொற்றம் - ஜயமுள்ள, தனி யாழ் - உபமான மில்லாத வீணையையுடைய, குல முனிவன்-மேன்மையான நாரதமுனிவன், தேன்- வண்டுகள், நாடும்-குறித்துச்செல்லப்பெற்ற, தெய்வதருவும்-தெய்வ விருட்சங்களையும் [கற்பகமரங்கள்], திருமணியும் - மேன்மை பொருந்திய சிந்தாமணி என்கிற ரத்நக்கல்லையும், வான்நாடும்- சொர்க்க லோகத்தையும், காத்தான் மருங்கு - காப்பவனாகிய இந்திரனிடத்து, உற்று அடைந்தான் - குறித்துச்சென்றான், எ - று.

தேன் ஆடும்—தேன்கூடுகள் ஆடிக்கொண் டிருக்கப்பெற்ற எனவும் பொருள்கூறலாம். நெற்றித்தனிக்கண்—அன்மொழித்தொகை, சிவனது நெற்றித் திருக்கண்ணின் நெருப்பை எனினும் ஒக்கும். சிறப்பும்மைதொக்கு நின்றது. இதனால் நாரதர் வீணை வாசிக்குஞ் சிறப்புக் கூறப்பட்டது.

குலம்என்பது மேன்மைக்குறிப்பென்று முன்னமே சொல்லப்பட்டது. திருமணி—செல்வத்தைத்தரு மணி எனவுமாம். தெய்வத்தரு—தெய்வத்தன்மை பொருந்திய தரு, அதாவது, தெய்வங்கள்போல் அடுத்தவர்க்கு இஷ்டத்தைக் கொடுக்குமரம். (௬௯)

70. வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்றார்
ஆருமிலராலென் றையுற்று—நாரதனார்
நான்முகமே நோக்கினா னாகஞ் சிறகரிந்த
மின்முகவேற் கையான் விரைந்து.

70. Indra, who held in his hand a diamond weapon which glittered like lightning, and who stripped the mountains of their wings, said:—"None of the heroes and powerful kings of the earth have ever attained to Heaven," and doubtingly gazed at the beautiful face of Narada.

(இ - ள்.) நாகம் - மலைகளினுடைய, சிறகு அரிந்த - சிறகுகளை வெட்டின, மின் முக வேல் கையான்-மின்னலை முகத்தினுடைய வச்சிராயுதத்தைக் கையில் தரித்தவனாகிய இந்திரன், வீரர் - வீரரான, விறல் வேந்தர் - பெருமையுள்ள அரசர், ஆரும் - எவரும், விண் நாடு - சொர்க்கத்தை, சேர்கின்றார் இலர் - சேராதிருக்கிறார்கள், என்று—, ஐயுற்று - சந்தேகப்பட்டு, விரைந்து - துரிதமாய், நாரதனார் நல் முகமே - நாரதமாமுனிவருடைய தெளிவான முகத்தையே, நோக்கினான் - பார்த்தான், எ - று. ஆல் - அசை.

ஏகாரம் - பிரிநிலை. அவர் முகத்தெளிவினால் ஏதோ விசேஷஞ் சொல்லவந்தாரென நினைத்துத் தன் ஐயத்தைக்குறித்து யாதும் வினாவினானில்லை என்பது கருத்து. எதிர்மறைக்குறிப்புமுற்று உடன்பாட்டு முற்றோடுசேர்ந்து தொழிலை மறுத்ததனால் சேர்கின்றாரிலர் என்பது உடன்பாட்டெதிர்மறைமுற்று. வீரர் சொர்க்கத்துக்குச் செல்வது பெரும்பாலும் போர்பற்றியாதலின் ஏன்போரில்லையென்று வினாவினான் எனறதாயிற்று.

முன்னாளில் மலைகள் சிறகுள்ளனவாயிருந்து பறந்து ஜனங்களின்மேல் விழுந்து அழிந்துக்கொண்டிருந்ததனால் இந்திரன் அவற்றின் சிறகரிந்தான என்றது புராணகதை. (௭௦)

71. வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சயம்வரத்து—மாமன்னர்
போயினா ரென்றான் புரந்தரற்குப் பொய்யாத
வாயினான் மாதவத்தோர் மன்.

71. The chief of the great devotees, whose mouth was never guilty of a lie, said to Indra:—"The great sovereigns have gone to the marriage of Bhima's daughter, in order that they may wear the sweet smelling (marriage) garland at her Swayamvaram."

(இ - ள்.) பொய்யாத வாயினான்-பொய்சொல்லாத வாயை யுடையவனாகிய, மாதவத்தோர் மன்-பெருந்தவ முடையவர்க் குச் சிரேஷ்டனாகிய நாரதமுனி, புரந்தரற்கு - இந்திரனுக்கு, சயம்வரத்து - சயம்வரத்தில், வீமன் மடந்தை மணத்தின் - வீமராஜன் புத்திரியாகிய தமயந்தியின் கலியாணத்திற்காக, தொடுத்த-கட்டிய, விரை-சுகந்தமுள்ள, தாமம் - மாலையை புனைவான் - அணிந்துகொள்ளுதற்கு, மா மன்னர்-பெரிய அரசர்கள், போயினார் என்றான்—, எ - று.

பயனும் ஏதுவாகக் கொள்ளப்படுமாதலின் ஈண்டு மணத்தின் என்னும் ஐந்தனுருபு பொருட்டில் வந்தது.

நாரதர் தமயந்தியின் சயம்வரத்தையே தெரிவிக்கவந்தவர் இந்திரன் குறிப்பையும் அறிந்து கூறியதனால் வினாவும் விடையும் பொருந்தின என்றுணர்க. (எக)

72. அழகு சுமந்திளைத்த வாகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் றிருவுக்கோர் காப்பு.

72. She, whose body was exhausted beneath her load of beauty upon whose raven tresses the beetles became domesticated, and who was a true light in the family of Bhima who resembled a young elephant, is a safe-guard of the treasures of Cupid

(இ - ள்.) [அந்தத்தமயந்தி] அழகு சுமந்து இளைத்த ஆகத் தாள் - அழகைச் சுமப்பதினால் இளைத்துப்போன தேகமுள்ள வள், வண்டு பழகு கரு கூந்தல் பாவை - வண்டுகள் பழகி

வரும்படியான கரிய கூந்தலையுடைய பிரதிமைபோன்றவள்; மழ களிற்று வீமன் குலத்துக்கு-இளமையுள்ள யானைபோன்ற வீமராஜன் வமிசத்துக்கு, ஓர் மெய் தீபம் - ஒரு மெய்யான விளக்கு; மற்று - மேலும், அவளே - அத்தமயந்தியே, காமன் திருவுக்கு - மன்மதனுடைய செல்வத்துக்கு, ஓர் காப்பு - ஒரு ரக்ஷிப்பாக இருக்கிறாள், எ - று.

களிற்றையுடைய வீமனென்று மாம். ஆகத்தாள், பாவை, தீபம் இம்மூன்றும் அவளுக்கு விசேஷணமுமாம். காமனுக்குச் செல்வமாவது, உலகத்தாரையெல்லாம் தன்வயத்தி லிருக்கச்செய்தல். பாவை, தீபம்,—ஆகுபெயர். மற்று—மொழிமாற்றில் வந்தது என்னவுமாம். (எ௨)

73. மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தாலும் வானவரும், கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய, விண்ணாடு நீங்கி விதர்ப்பன் றிருநகர்க்கு, மண்ணாடு நோக்கி மகிழ்ந்து.

73. He who cleft the huge mountains with his diamond weapon, as well as the other gods, (viz. Agni, Yama, and Varuna) gazing at the earth with joy, left the glorious regions of heaven, and started to the sacred city of Vidarpa (to compete) for the (marriage) garland of her who was adorned with beautiful bangles.

(இ - ள்.) [எடறு நாரதர் சொல்லியதைக் கேட்டு] மால்வரையை - பெரியமலைகளை, வச்சிரத்தால் - வச்சிராயுதத்தால், ஈர்ந்தாலும் - பிளந்தவனாகிய இந்திரனும், வானவரும் - (அக்கினி இயமன் வருணன் என்கிற) தேவர்களும், கோல்வளைதன் - அழகான வளையல்களை யுடையவளான தமயந்தியின், மாலை குறித்து-மணமாலையைக்குறித்து, மண் நாடு நோக்கி - பூலோகத்தைப்பார்த்து, மகிழ்ந்து - சந்தோஷப்பட்டு, சால்புடைய - மேன்மையுள்ள, விண் நாடு - சொர்க்கத்தை, நீங்கி-விட்டு, விதர்ப்பன் திருநகர்க்கு - விதர்ப்பராசனுடைய பட்டணத்திற்கு, எழுந்தார் - (போக) எழுந்தார்கள், எ - று.

கோல்—கோலம் என்பதின் விகாரம்; கோல் - வட்டமான எனவு முரைக்கலாம். தேவர்க்குத் தமயந்தி மணத்திலிருந்த

ஆசையினால் பூலோகமே மேன்மையாகத் தோன்றின தென்பது கருத்து.

வானவர் என்கிற பொதுச்சொல் இங்கு சந்தர்ப்பத்தால் அக்கினி முதலானோர்க்குக் கொள்ளப்பட்டது. (எ௩)

7ட. பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற்போயி
னதன், சிந்தை கெடுத்ததனைத் தேடுவான்—
முந்தி, வருவான்போற் றேர்மேல் வருவானைக்
கண்டார், பெருவானிற் றேவர் பெரிது.

74. The gods of the spacious heavens distinctly saw him (*i e* Nala) who was riding in his chariot, and who having lost his affection which had gone after the daughter of the armed king (Bhima) who was decked with green garlands, was as one of the first to go in search of it.

(இ - ள்.) பைந் தெரியல் வேல் வேந்தன் பாவைபால் - பசுமையான மாலையையும் வேலாயுதத்தையு முடைய வீமராசன் மகளாகிய தமயந்தியினிடத்தில், போயின தன்சிந்தை-சென்ற தன்மனதை, கெடுத்து-போக்கடித்து, அதனை தேடுவான் - அதைத் தேடும்பொருட்டு, முந்தி வருவான் போல் - முன்னதாகவருகின்றவன்போல், தேர்மேல் வருவானை-தேர்மேலேறி வருகின்ற நளமகாராசனை, பெரு வானில் தேவர் - பெரிய சொர்க்கலோகத்தி லிருக்கும் இந்திரன் முதலாகியதேவர்கள், பெரிது - பெரிதாக, கண்டார் - பார்த்தார்கள், எ - று.

ஒருபொருளைப் போக்கடித்தவன் பிறர் அவ்விடம் போவதற்குமுன் போய்த்தேடுவது இயற்கை யாதலால் முந்தி என்றார். அவாவினால் நளன் முந்திச்சென்றான் என்பதாயிற்று. தேவர் நளனைக்கண்டது தங்கள் காரியத்துக்கு உதவியென்று நினைத்ததனால் பெரிது என்றார்.

போயின—போ - பகுதி, இன்-இறந்தகால இடைநிலை, அ- பெயரெச்சவிகுதி, யகரம் "எகரவினமுன்" என்கிற சூத்திரத்தில் "நெறியே" என்றதினால் வந்ததெனக் கொள்க. "இடையுரி வடசொலின்" என்பதினால் வந்த வுடம்படுமெய் என்பது பொருந்தாதெனஅறிக. (எச)

75. காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்
கோன், ஏவற் றொழிலுக் கிசையென்றான்—
ஏவற்கு, மன்னவனு நேர்ந்தான் மனத்தினான்
மற்றதனை, இன்னதென வோரா திசைந்து.

75. (Indra) the sovereign of heaven, seeing king Nala who possessed the umbrella beneath which the world was protected, asked him to undertake the work which he was about to command him to do; and king (Nala) not considering in his mind what that (work) might be, consented to obey his commands

(இ-ள்.) காவல் குடை வேந்தை - உலகத்துக்குக் காவலாகிய குடையையுடைய நளமகாராசனை, கண்ணுற்று-பார்த்து, விண்ணவர் கோன் - தேவராசனாகிய இந்திரன், ஏவல்தொழிலுக்கு - (நாம்) ஏவுகிறதொழிலுக்கு, இசை என்றான்-(நீ)ஒத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னான்; மன்னவனும்-நளமகாராசனும், மனத்தினால்—, அதனை - அத்தொழிலை, இன்னதென ஓராது - இப்படிப்பட்டதென்று நினையாமல், ஏவற்கு இசைந்து - ஏவலுக்குஒத்துக்கொண்டு, நேர்ந்தான் - வாக்குக் கொடுத்தான், எ - று. மற்று - அசை.

வாக்கு என்பது தகுதியால் வருவிக்கப்பட்டது.

கண்ணுற்று—கண் உறு என்பன ஒருசொற்றன்மையதாய்ச் சேர்ந்த வொருபகுதி. (எரு)

76. செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட வியல்வீமன்—மங்கைபால்
தூதாக வென்றானைத் தோகையைத்தன் னாகத்
கோதாக வென்றானக் கோ. [தாற்

76 O king, that ridest in chariots and resemblest fiery-eyed and lust-burning elephants! you must act as our messenger to the daughter of the good king Bhima, that one of us may wear the honey'd garland. That king (Nala)therefore banished that maiden from his mind as something sapless.

(இ-ள்.) செம் கண்மதயானை தேர் வேந்தே-சிவந்த கண்ணுள்ள மதயானைபோன்ற ரதாதிபதியாகிய நளமகாராஜனே,

தே மாலே - தேன்பொழிகின்ற மாலையை, எங்களிலே - எங்களுக்குள் (ஒருவனுக்கு), சூட்ட - சூட்டும்படி, இயல் வீமன் மங்கைபால் - நற்குணமுள்ள வீமன் புத்திரியினிடத்து, தூது ஆக - (நீ) தூதனாகவேண்டும், என்றான் - என்றுசொன்னான் (இந்திரன்); அக் கோ-அவ்வரசன், அத் தோகையை - அந்தத் தமயந்தியை, தன் ஆகத்தால் - தன்மனதினால், கோது ஆக - சாரமற்ற பொருளாக (நினைத்து), வென்றான் - (மனங் கவராவண்ணம்) ஜயித்தான், எ - று.

சத்தியசந்தனாதலால் வாக்குக்கொடுத்துத் தப்பாமலிருக்கும்படி நளன் தமயந்திபால் ஆசையை ஒழிக்கலுற்றான் என்பது கருத்து.

செங்கண் என்பது வீரத்தின்குறி. நளனுக்கு விசேஷணமுமாம். தூதாக என்பதில் ஆக—ஆ என்னு முதனிலையிற் பிறந்த வியங்கோள் வினைமுற்று. கோதாக என்பதில் ஆக—அப்பகுதியிற் பிறந்த வினையெச்சம். (எ௬)

77. தேவர் பணிதலைமேற் செல்லுந் திரிந்தொருகால், மேவுமிளங் கன்னிபான் மீண்டேகும்—பாவிற், குழல்போல நின்றுழலுங் கொள்கைத்தே பூவின், நிழல்போலுந் தண்குடையா னெஞ்சு.

77. The heart of him (Nala), whose cool umbrella is like the shade covering the whole world, at one time submitted to the commands of the kings which he had received, and at another time, changing again, went after the youthful maiden who was courted by all, just as the reel in a weaver's warp is continually tossed about.

(இ - ள்.) பூவின் - பூமிக்கு, நிழல் போலும் - நிழலைப்போலிருக்கின்ற, தண் குடையான்-குளிர்ச்சியானகுடையையுடையவனது, நெஞ்சு - மனமானது, தேவர் பணி - தேவதைகளின் கட்டளையை, தலைமேல்-தலையின்மேலதாக, செல்லும்-போம், ஒரு கால் - ஒருதரம், திரிந்து - சஞ்சரித்து (அல்லது) மாறி, மேவும் - விரும்பப்பட்ட, இள கன்னிபால் - தமயந்தியினிடத்து, மீண்டு ஏகும் - திரும்பிப்போம், பாவில் - நூற்பாவில், குழல் போல - (அதனைச் செலுத்தும்) மூங்கிற்குழல்போல,

நின்று உழலும் - நிலைபெற்றுச் சுற்றும்படியாகிய, கொள்கைத்து - தன்மையையுடையது, எ-று. ஏ - அசை.

காதல் பதிந்திருந்த வாசனை சடுதியில் விடுவது அருமையாதலின் சத்தியந் தப்பாமல் தேவதைகளின் பேச்சின்படி துணிந்தும் நளன்மனம் ஒருகால் தமயந்தியையும் நாடிநின்றது என்பது கருத்து.

இன் உருபு ஏற்றுக்கோடற் பொருளில் வந்தது; சாரியையாக்கி ஆறனுருபு தொக்கதாக்கொண்டு சம்பந்தப் பொருளெனினும் அச்சம்பந்தமும் இதுவேயாம்.

78. ஆவ துரைத்தா யதுவே தலைநின்றேன்
தேவர்கோ னேயத் திருநகரிற்—காவல்
கடக்குமா றென்னென்றான் காமநீ ராழி
அடக்குமா றுள்ளத் தவன்.

78. He (Nala) who know the way to shut in the sea of lust said (to Indra) :—" O king of the gods ! you have spoken that which can be done, to that alone have I submitted; but how am I to pass the sentry in that beautiful city ?"

(இ - ள்.) காமம் நீர் ஆழி - காமமாகிய நீர் நிறைந்த சமுத்திரத்தை, அடக்குமாறு - அடக்கும் வகையை யுடைத்தான, உள்ளத்தவன் - மனமுடைய நளன, தேவர் கோனே-தேவேந்திரனே, ஆவது - ஆகவேண்டிய காரியத்தை, உரைத்தாய் - சொன்னாய், அதுவே தலைநின்றேன் - அதுவே முக்கியமாகக் கொண்டுநின்றேன்; அ திருநகரில் - அந்த மேன்மைபொருந்திய பட்டணத்தில், காவல் கடக்கும் ஆறு என் - (அந்தப்புரத்துக்) காவலைத்தாண்டிப் போகும் வகை என்ன, என்றான்—,

அடக்குமாறு — அடக்கும் மாறு எனப்பிரித்து, அடக்கும்படியான மாறுதலையுடைய எனவு முரைக்கலாம். மாறுதலாவது முன்னிலையில் வேறுபடுதல். (௭௮)

79. வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான் மால்வ
ரையைப், போர்வெஞ் சிறகறுத்த பொற்றோ
ளான்—யாருமுனைக், காணார்போய் மற்றவனைக்
காணென்றான் கார்வண்டின், பாணாறுந் தாரா
னைப் பார்த்து.

79. The golden-shouldered god, who with his diamond weapon hewed off the world-covering wings of the huge mountains, except those of the lofty and frightful mount Minaka looking at Nala who was decked with garlands swarming with humming bees, said;—"Go and see her, none will be able to see you."

(இ - ள்.) வார் - நீண்ட, வெம்சிலை - உக்கிரமான மைநாக மலையானது, ஒழிய-நீங்க, வச்சிரத்தால் - வச்சிராயுததினால், மால் வரையை - (மற்ற) பெரியமலைகளை, போர் வெம் சிறகு அறுத்த-உலகத்தைப் போர்க்கும்படியான கொடியசிறகுகளை வெட்டின, பொன் தோளான் - அழகியதோள்களை யுடையவனாகிய இந்திரன், கார் வண்டின்-கறுத்த வண்டுகளினுடைய, பாண் நாறும் - பாடல் தோன்றப்பெற்ற, தாரானை - மாலை தரித்த நளனை, பார்த்து—, யாரும் உனை காணார் - எவரும் உன்னைக் காணமாட்டார்கள், போய் அவளை காண் - நீபோய் அந்தத் தமயந்தியைப்பார், என்றான்—, ஏ-று மற்று - அசை.

'வார் வெஞ்சிலை ஒழிய' என்பதற்கு, வார் - அதிகமான, வெம் - கடுமையான, சிலை - ஒலி, ஒழிய - நீங்கும்படி, எனப் பொருள்கூறி மலைகள் சிறகாற்சென்று போய் வீழ்வதனால் ஜனங்கள் நசுங்கிக் கதறிக்கொண்டிருந்த கோஷம் போய் விடும்படி என்று கருத்துக்கொள்வதும் தகுதி. மைநாகமலை தப்பி யோடியதனால் அது ஒழிய என்றார். (எகூ)

80. இசைமுகந்த வாயு மியறெரிந்த நாவுந்
திசைமுகந்தா லன்ன தெருவும்—வசையிறந்த
பொன்னாடு போந்திருந்தாற் போன்றதே போர்
நளனுடர் கோமா னகர். [விதர்ப்ப

80. The capital of king Bhima, the sovereign of the warlike people of Vidarpa, with its fame-giving gates, its architectural buildings, and its streets which embrace the four corners of the earth, seems as if the irreproachable golden country (of Swerga) had left (its celestial sphere) and come down to the earth.

(இ - ள்.) போர் - போர்செய்ய வல்ல, விதர்ப்ப நன்னாடர் கோமான் - விதர்ப்ப மென்னும் நல்ல நாட்டாருக்கு அரசனாகிய வீமராசனது, நகர் - பட்டணமானது, இசை முகந்த வா

யும்-கீர்த்தியை முகந்துகொண்டிருக்கிற வாசல்களும், இயல் தெரிந்த நாவும் லக்ஷணந்தெரிந்து செய்யப்பெற்ற நடுவிடங்களும், திசைமுகந்தால் அன்ன தெருவும்-திக்குகளை முகந்தது போலிருக்கிற தெருக்களும் (இருப்பதனால்), வசை இறந்த - நிந்தனை இல்லாத, பொன் நாடு - தெய்வலோகம், போந்திருந்தால் போன்றது-வந்திருந்ததுபோ லிருந்தது, எ-று ஏ அசை.

இசை முகந்த வாயும் என்பதற்குச் சங்கீதம் பொருந்திய வாசல்களும் என்றும், இயல்தெரிந்தநாவும் என்பதற்குஇலக்கணந்தெரிந்த நடுவிடங்களும் என்றும் பொருள் கூறலாம்; ஆகவே எங்கும் பலர் கூடி ராகம் பாடப்பெற்ற கோபுரத்துவாரங்களும், பலர்கூடி இலக்கண இலக்கிய முதலானசாஸ்திரம் பயிலப்பெற்ற சபாமண்டப முதலான நடுவிடங்களும், திசைகளுள்ளளவும் நீண்ட பெரிய தெருக்களுமுள்ள அப்பட்டணம் சொர்க்கலோகம்போ லிருந்ததென்பது கருத்து. அன்றியும் வாய் நா என்பவை மனிதர் அவயவமேயாகி வீதி என்பது ஒழுங்கு என்றாகிச் சங்கீத சாகித்தியங்கள் பொருந்திய வாய் நாக்குகளும் திசையேறிக் கீர்த்திபெற்ற ஒழுங்குமுள்ள ஒருமனிதனைப் போலவே அங்ககாத்தை ரூபித்தார்.

அப்பட்டணத்தின் நிலைமை இந்திரபட்டணத்தோடொத்திருத்தலால் அதுவே இங்கு வந்திருக்கிறதோ என்று குறித்தார். இது தற்குறிப்பேற்றவணி. (அ0)

81. தேங்குவளை தன்னிலே செந்தாமரைமலராப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே—ஆங்கு
மதுநோக்குந் தாரானும் வாணுதலுந் தம்மிற்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது.

81. When in that place he (Nala) who was decked with honey'd garlands, and she (Damayanti) who had a bright forehead, stood *vis a vis*, gazing at each other. their looks resembled the flowering of the red lotus on the black நெய்தல் and the blooming of the black நெய்தல் on the red lotus.

(இ - ள்.) ஆங்கு-அவ்விடத்தில், மது நோக்கும்-தேன்(வெளிப்பட) பாாகின்ற, தாரானும் - மாலையை யணிந்த நளனும், வாள் நுதலும்-பிரகாசமான நெற்றியையுடைய தமயந்

தியும், தம்மில் - தங்களில், பொது நோக்கு - பொதுமையான நோக்கத்தினால், எதிர் நோக்கும்போது - எதிர்நின்று பார்த்த காலத்தில், தேம் குவளை தன்னிலே-வாசனையுள்ள கருநெய்தற் பூவிலே, செந்தாமரை - சிவந்த தாமரைப்பூவானது, மலரா - மலர்ந்திருக்க, தாமரைக்கு - தாமரையில், பூ குவளை-அழகிய கருநெய்தற்பூ, பூத்தது - பூத்ததுபோலாயிற்று, எ - று. ஏ - அசை.

பொதுநோக்கு—ஆசை கொள்ளாததுபோன்ற பார்வையுமாம். ஆகவே, "யானோக்குங் காலை நிலநோக்கு நோக்காக்கால், தானோக்கி மெல்ல நகும்" என்பதுபோலப் பார்த்தார்கள் எனவுங் கருத்துக்கொள்ளலாம். தமயந்தியின்கண்ணொளியைக் குவளைப்பூவாகவும் நளனுடைய கண்ணொளியைத் தாமரைப்பூவாகவும் ரூபித்தார்; ஆகவே, அவள் பார்வையில் இவன் பார்வையும், இவன் பார்வையில் அவள் பார்வையுங் கலந்தனவென்றபடி; ஒருவரை யொருவர் பார்த்தாரென்பது திரண்ட கருத்து.

தாமரைக்குஎன்பதில்குவ்வுருபு இடப்பொருளில்வந்தது. ()

82\. நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
தீண்டு மளவிற் றிறந்ததே—பூண்டதோர்
அம்பின்றாழ் கூந்தலாள் வேட்கை யகத்தடக்கிக்
கற்பின்றாழ் வீழ்த்த கதவு.

82\. Damayanti, whose tresses hung down from her head, checking her lustful desires, bolted with chastity the door of her modesty which opened no sooner her kuvali-like eyes touched the lotus-like face of Nala.

(இ - ள்.) பூண்டது - கொண்ட, ஓர் அம்பின் - ஒரு அன்பினால், தாழ் கூந்தலாள் - தொங்குங் கூந்தலையுடைய தமயந்தியினது, வேட்கை - காதலை, அகத்து அடக்கி - உள்ளேதள்ளி, கற்பின் தாழ்-கற்பாகிய தாழ்ப்பாளை, வீழ்த்த-போடப்பெற்ற, கதவு - (நிறையாகிய) கதவானது, நீண்ட கமலத்தை-உயர்ந்த தாமரைப்பூவை, நீலக்கடை-நீலோற்பலத்தின் நுனி, சென்று-போய், தீண்டும் அளவில் - பரிசிக்கும் வரையில், திறந்தது - திறந்துகொண்டது, எ - று. ஏ - அசை.

அற்பின் என்பதில் இன் ஏதுப்பொருளில் வந்தது. நிறைக் கதவு திறந்ததற்கு அன்பு காரணம். அன்பு - சாதாரணமான ஆசை; காதல் காமரூபமாகிய ஆசை. அற்பின்குழ்கூந்தலாள் என்பதற்கு, அல் - இருளை, பின் - பின்னியிருக்கின்ற தாழ் கூந்தலாள் எனப் பொருளுரைக்கவுமாம். இங்கே நீண்டகமலம் என்றது நளன்முகத்தை. நீலக்கடை யென்றது தமயந்தியின் கண்ணுனியை. ஆகக்கருத்து என்னவெனில், முன் பொதுநோக்காய் நோக்கினதில் தமயந்திக்கோர் அன்புண்டாக அதனால் அந்தப்புரத்துக் கன்னியர் இச்சையோடு யாரையுநோக்குவது கூடாதென்னும் ஒருநிறை அவளிடத்து இருந்தும் கடைக்கண்ணால் அவன்முகத்தைப் பார்க்குமளவு கருத்துண்டாயிற்று எனபதாம்.

கற்பின் என்பதில் இன் - சாரியை. அற்பின் என்பதில் இன்னுருபின் ஈறு எதுகைநோக்கி இயல்பாகவே நின்றது. ()

83. உய்ஞ்சு கரையேற வொட்டுங்கொ லொண்டொ
டெஞ்சுதட வுநெடுங்கண்கள் — விஞ்சவே[டியாள்
நீண்டதோ வங்ஙனே யிங்ஙனே நீண்மலரான்
ஆண்டதோண் மன்ன னழகு.

83. The beauty of Nala, upon whose shoulders Lakshmi of the long-lotus dwells, increased on every part as Damayanti looked at him; while so, will the long eyes, that captivate every one's mind, of her who is adorned with golden bracelets permit her to escape and survive?

(இ - ள்.) ஒள் தொடியாள்-பிரகாசமான வளைகளை யணிந்த தமயந்தியுடைய, நெஞ்சு தடவும்-(நோக்குவோருடைய) மனங்களைப் பரிசிக்கிற, நெடு கண்கள் - நீட்சியான கண்கள், விஞ்சவே - வளரவே, நீள் மலராள் - நீண்ட தாமரை மலரிலிருக்குந் திருமகள், ஆண்ட-கைப்பற்றிய, தோள்-தோள்களையுடைய, மன்னன்-நளனுடைய, அழகு - அழகானது, அங்ஙனே இங்ஙனே - அப்படியும் இப்படியும், நீண்டதோ-நீட்சியானதோ, (ஆதலால்), உய்ஞ்சு-உய்ந்து [தப்பி,] கரை ஏற ஒட்டுங்கொல்-கரையிலேற வொட்டுமோ, [ஒட்டாது.] எ-று.

நளன் அழகைப் பார்க்கப்பார்க்கத் தமயந்திக்கு ஆசை யொழியவில்லை. அதைக் குறித்துக் கவிசொல்லுகிறார், அவன் கண்

மலர்ந்து நோக்க நோக்க இவன் அழகு நீண்டுகொண்டே வந்ததோ என்று அப்படி அழகு வளர்ந்தால் பார்வைக்கு முடிவு இல்லையென்பதாம்.

ஓகாரம் எதிர்மறையில் வந்தது. கொல்—ஐயப் பொருளில் வந்த இடைச்சொல். உய்ஞ்சு என்பது போலி. (அங)

84. மன்னாகத் துள்ளழுந்தி வாரணிந்த மென்முலையும், பொன்னாணும் புக்கொளியப் புல்லுவனென்—றுன்னா, எடுத்தபே ரன்பை யிடையே புகுந்து, தடுத்ததே நாணாந் தறி.

84 "I will throw myself" thought Damayanti "on the chest of king Nala, and embrace him so that my breasts which are enveloped in a bodice, and the gold thread (I wear) may become hid." But a sense of shame having arisen in the midst of her great lustful desires, it drove them away completely.

(இ-ள்.) மன் - அரசனுடைய, ஆகத்துள்-மார்பிலே, அழுந்தி—, வார் அணிந்த - கஞ்சும் அணிந்த, மெல் முலையும் - மெல்லியதனங்களும், பொன் நாணும் - பொன் நூலும், புக்கு ஒளிப்ப - புகுந்து ஒளிக்கும்படி, புல்லுவன் என்று - தழுவிக் கொள்வேன் என்று, உன்னா - நினைத்து, எடுத்த - கொண்ட, பேரன்பை-பெரிய ஆசையை, நாண் ஆம்-வெட்கமாகிய, தறி-கட்டுத்தறி (அல்லது) கம்பம், இடையே புகுந்து-நடுவில் பிரவேசித்து, தடுத்தது - தடைசெய்தது. எ-று. ஏ - அசை.

தமயந்தி ஆசைப் பெருக்கத்தினால் தான் அவனைக் கட்டிக் கொள்வேனென்று நினைத்து, இடையே தோன்றிய வெட்கத்தினால் அந்நினைப்பை யொழித்தாள் என்பது கருத்து. ஒருவன் ஓடுகையில் தூண்முதலியவை தடுக்க ஓட்டம் நின்றுபோவது போல் என அறிக. தறி முளையுமாம். (அச)

85. காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தா யாவனோ விஞ்சைக் கிறைவனோ—தேவனோ உள்ளவா சொல்லென்றா ளூசற் குழைமீது வெள்ளவா ளீச்சோர விட்டு.

85. Damayanti shedding glistening tears as plentiful as the water in the sea, on her swinging ear-rings, said—"Who art thou that hast passed the guards, and entered our maiden apartment? Art thou the chief of the magicians? Or art thou an inhabitant of heaven? Tell me the truth."

(இ - ள்.) ஊசல்குழைமீது-ஊசலாடுங்காதணிகளின்மீது, வெள்ளவாள் நீர் சோரவிட்டு-கடல்போன்ற கண்களினுடைய பிரகாசமான நீரை ஒழுகவிட்டு, காவல் கடந்து - காவலைத் தாண்டி, எங்கள் கன்னிமாடம்-எங்களுடைய கன்னிகா அந்தப்புரத்தில், புகுந்தாய்-புகுந்தவனே (நீ,) யாவனோ - எவனோ, விஞ்சைக்கு இறைவனோ - மாயவித்தைக்கு அதிபதியாகிய வித்தியாதரனோ, தேவனோ - தேவலோகத்தானோ. உள்ளஆ - உள்ளபடி, சொல்—, என்றாள்-என்று சொன்னாள். (தமயந்தி) எ - று.

கண்ணீர்க்குக் காரணம் தனக் கிப்படிப்பட்ட புருஷன் நேராமை.

புகுந்தாய்—விளிப்பெயர்; முன்னிலை வினைமுற்றாயுங்கொள்ளலாம். குறிலணைந்த யகரமன்றி ஏனையகரம் யகரமுதன் மொழிவரின் கெடுமென அறிக. ஆற என்பது ஈறுகுறைந்து நின்றது. (அரு)

86. தீராத காமத் தழலைத்தன் செம்மையெனும்
நீரா லவித்துக் கொடுநின்று—வாராத [ன்
பொன்னாடு ரேவலுடன் போந்தவா சொல்லித்த
நன்னாடுஞ் சொன்னா னவன்.

86. Nala having extinguished the unquenchable fire of his lust with the water of his good disposition, related (to Damayanti) all the circumstances under which he had come at the command of the Gods, whom this earth is not worthy to receive, and then informed her of his good country.

(இ - ள்.) தீராத காம தழலை - ஒழியாத காமாக்கினியை, தன் செம்மை எனும் - தன் சற்குணமாகிய, நீரால் - தண்ணீரால், அவித்துக்கொடு - தணியச் செய்துகொண்டு, நின்று—, வாராத-(பூலோகத்துக்கு) வரத்தகாத, பொன்னாடர்-சொர்க்

சுலோகத்தாருடைய, ஏவலுடன் - கட்டளையினால், போந்தது - வந்தவிதத்தை, சொல்லி—, நளன், தன் - தன்னுடைய, நல் நாடும் - நல்லநாட்டையும், சொன்னான்—, எ - று.

உடன் என்னுஞ் சொல்லுருபு ஏதுப்பொருளில் வந்தது, ஏவலுடன் போந்தவா - ஏவலைக்கொண்டு வந்தவிதம் எனவுமுரைக்கலாம். (அசு)

87. என்னுரையை யாதென் றிகழா திமயவர்வாழ்
பொன்னுலகங் காக்கும்புரவலனை—மென்மாலை
சூட்டுவா யென்றான் றொடையிற்றேன் றும்பிக்
கூட்டுவா னெல்லா முரைத்து. [கே

87. Nala who fed the bees with the honey on his garlands, having related all, said "disregard not my words, but bestow the soft garland on the brave Indra, the protector of the golden country which is inhabited by the gods."

(இ - ள்.) தொடையில்-மாலையில், தேன் - தேனை, தும்பிக்கே - வண்டுகளுக்கே, ஊட்டுவான்- உண்பிப்பவனாகிய நளன், எல்லாம் உரைத்து - எல்லாவற்றையுஞ் சொல்லி, என் உரையை-என்பேச்சை, யாதென்று - யாதோவென்று, இகழாது - அலக்ஷியஞ்செய்யாமல், இமையவர் வாழ்-தேவர் வாசஞ்செய்கிற, பொன் உலகம் - சொர்க்கலோகத்தை, காக்கும் - ரக்ஷிக்கிற, புரவலனை-வீரனாகிய இந்திரனுக்கு, மென் மாலை - மெல்லிய மாலையை, சூட்டுவாய் என்றான்-(நீ) சூட்டு என்றுஉரைத்தான், எ - று.

பிறரை நீ மதியாவிடினும் இந்திரன் மிக்க மேன்மையுடையவனாதலால் அவனையாகிலுங் கலியாணஞ் செய்துகொள் என்றான் என்பது கருத்து.

புரவலனை என்பதில் ஐயுருபு கோடற் பொருளில் மயங்கியது. மாலைசூட்டு என ஒருசொல்போல எடுத்து அதற்கு கலியாணஞ்செய்துகொள் என்பதைப் பொருளாகக்கொண்டு, புரவலனை செயப்படுபொருளாகக் கொள்ளலுமாம். இகழ்ச்சிக்குறிப்பாகிய ஓகாரம் வருவித்து யாது என்பதோடு கூட்டப்பட்டது. (அஎ)

88. இயமரநின் றார்ப்ப வினைவளைநின் றேங்க
வயமருதோண் மன்னா வகுத்த — சுயம்வரந்தான்
நின்பொருட்டா லென்று நினைகென்றா ணீள்கு
தன்பொருட்டா லைவா டளர்ந்து. [டையான்

88. Damayanti, who was quite pensive on account of the king of the long umbrella, being troubled in mind said "O king, blessed with powerful shoulders, consider that the day fixed for the Swayamvaram, on which the guitars will be played and the conchs blown, is all done for your sake"

(இ-ள்.) [இப்பேச்சைக் கேட்டபோது] நீள் குடையான் தன்பொருட்டால்-பெரியகுடையுடைய நளன் நிமித்தம், ஐ வாள் - வாடுகின்றவளாகிய தமயந்தி, தளர்ந்து - மனஞ் சோர்ந்து, வயம்மரு - பலம் பொருந்தின, தோள் மன்னா - தோளையுடைய அரசனே, இயமரம்-வாத்தியங்கள், நின்று - நிலைத்து, ஆர்ப்ப-ஒலிக்கவும், இன வளை - இனமாகிய சங்குகள், நின்று—, ஏங்க-ஒலிக்கவும், வகுத்த சுயம்வரம் - ஏற்படுத்திய சுயம்வரமானது, நின் பொருட்டால் தான் என்று - உன் நிமித்தம் என்று, நினைக என்றாள் - நினையென்று சொல்லினாள், எ - று.

பொருட்டால் என்பதில் ஆல்-அசை. நீயாகிய உத்தேசத்தினால் என்றும் பொருள் கூறலாம். இயமரம்—வாத்தியத்துக்கே ஒருபேராக்கொள்ளவேண்டும். அங்ஙனம் ஒருமொழி இல்லையென்றால், இயம் மரம் என வைத்து வாத்தியமாகிய மரம், அதாவதுமரத்தினாற்செய்த வாத்தியம் எனப் பொருள் கொள்ளலாம். அல்லது அரம் எனப் பிரித்து அலம் என்பதின் போலியாகிய அரம் என்கிற வடசொல்லாகக்கொண்டுமிகவும் என்று பொருள் கொள்ளலாம். நினைக என்னும் வியங்கோள் ஈற்றகரந் தொக்கது. வியங்கோள் செய்யுளில் பெரும்பாலும் இவ்வாறு வருமென்று அறிக. நின்று - அசையுமாகும். (அஅ)

89. போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்
தான், ஆதரித்தார் தம்மோ டவையகத்தே—
சோதிச், செழுந்தாள வெண்குடையாய் தேவர்
களு நீயும், எழுந்தருள்க வென்றா ளெடுத்து.

89. The maiden (Damayanti) who had eyes as brilliant as the lotus flower said "O thou whose white umbrella is

adorned with the brilliant pearls may the Gods and yourself be pleased to appear in the assembly with the avaricious kings who come to wear the beautiful garland."

(இ-ள்) போது - தாமரைமலர்போன்ற, அரிகண் - ரேகை பொருந்தின கண்ணுள்ள, மாதராள் - தமயந்தி, சோதி செழு தாளம் - காந்தியுள்ள செழுமையான முத்துக்கள் பதித்த, வெண் குடையாய் - வெள்ளைக்குடை யுடையவனே, பொன் மாலை சூட்ட - அழகான மாலையைச் சூட்டுதற்கு, ஆதரித்தார் தம்மோடு - ஆசைப்பட்டவர்களாகிய அரசர்களோடு, அவையகத்தே-சபையில், தேவர்களும் நீயும்—, எழுந்தருள்க- எழுந்தருளவேண்டும், என்றாள் எடுத்து - என்று எடுத்துச் சொன்னாள், எ - று. தான் - அசை.

முற்பாட்டிற் சொல்லியபடி சுயம்வரம் உனக்காகச் செய்ததனால் தேவர்களை மாத்திரம் வரவிட்டு நீ நின்றுபோக வேண்டாமென்று வேண்டினபடி.

மாதர் - அழகு ; மாதராள் - அழகுடையவள். (அகூ)

90. வானவர்கோ னேவல் வழிச்சென்று வாணுதலைத், தானணுகி மீண்டபடி சாற்றவே—தேனமுரலும், வண்டார் நளன்போந்து வச்சிரா யுதற்றொழுதான், கண்டா ருவப்பக் கலந்து.

90. To the delight of the celestials that were present, Nala who wore garlands upon which the bees sung, worshipped him (*i. e.* Indra) who possessed the diamond weapon, in order to relate all that had taken place on his going at the command of the king of Heaven and on his meeting with her who had a bright forehead.

(இ ள்.) வானவர் கோன் - தேவேந்திரனுடைய, ஏவல்வழி- கட்டளையின்படி,சென்று-போய், வாள்நுதலை - தமயந்தியை, தான் அணுகி - தான்சேர்ந்து, மீண்டபடி-திரும்பியவிதத்தை, சாற்ற - சொல்லுதற்கு, தேன் முரலும் வள் தார் நளன் - தேன்வண்டுகள் ஒலிக்கப்பெற்ற அழகான மாலைதரித்த நளமகாராஜன், போந்து - போய், கண்டார் - பார்த்த தேவர், உவப்ப-சந்தோஷிக்கும்படி, கலந்து-சேர்ந்து, வச்சிராயுதன் - இந்திரனை, தொழுதான் . வணங்கினான், எ-று. ஏ-அசை.

இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலின் வச்சிராயுதன் என்னும் உயர்திணைப்பெயர் ஈறுதிரிந்தது; (உருபுபுணரியல் கஉ-ம் சூத்திரப்படி.) வானுதல்—அன்மொழித்தொகை. வன்தார் - பண்புத்தொகை; ஆதலின் ளகரம் ணகரமாயிற்று. ()

91. விண்ணவர்தமேவலுடன்வீமன்றிருமகள்பால்,
நண்ணு புகழ்நளனு நன்குரைத்த—பெண்ணணங்கின்,
வன்மொழியுந் தேவர் மனமகிழத்
தான்மொழிந்த, மென்மொழியுஞ் சென்றுரைத்
தான்மீண்டு.

91. The famous Nala who went on an embassy to the pure daughter of king Bhima at the command of the celestials, related on his return, the well-spoken yet hard words of the goddess of woman (Damayanti), and also the soft words which he (in return) had addressed her, which gladdened the hearts of the Gods.

(இ-ள்.) விண்ணவர்தம் ஏவலுடன் - தேவர் கட்டளையினால், வீமன் திருமகள்பால் - தமயந்தியிடத்து, புகழ் நண்ணும் நளன்-கீர்த்திபெற்ற நளன், நன்கு உரைத்த - நன்றாய்ச் சொன்னவைகளைக் குறித்து, பெண் அணங்கின் - தமயந்தியின், வன்மொழியும் - கடினமான வார்த்தையும், தான் மொழிந்த - (அதற்கு) தான்சொன்ன, மென் மொழியும் - மெருவான வார்த்தையையும், தேவர் மனமகிழ-தேவதைகளுடைய இதயம் சந்தோஷிக்கும்படி, மீண்டு சென்று உரைத்தான் - திரும்பிவந்து சொன்னான்.

விண்ணவர் தம் மேவலுடன் எனப்பிரித்துத் தேவர்களுடைய ஆசையினால் என்றும் உரைக்கலாம். பெண் அணங்கு - பெண்களின் தெய்வம், இவன் உடன்படுத்த வேண்டினதால் மென்மொழியென்றும் அவள் இகழ்ந்ததனால் வன்மொழியென்றுங் கூறினர். உரைத்த—வினையாலணையும்பெயர், இரண்டாம் வேற்றுமைத்தொகை. (கூக)

92. அங்கி யமுதநீ ரம்பூ வணியாடை [யறப்
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கை
பெற்று யெனவருண னுகண் டலன்றருமன்
மற்றேனு மீந்தார் வரம்.

92 Varuna, Indra, Yama and Agni, blessed Nala, thus, "In whatever place you desire, in that very place you will unfailingly obtain fire, food, water and beautiful clothes."

(இ-ள்.) அங்கி-நெருப்பையும், அமுத நீர் - அன்னத்தையும் தண்ணீரையும், அம்பூ அணி ஆடை - அழகிய பூப்போன்ற உடுக்கத்தக்க வஸ்திரத்தையும், எங்கு நீவேண்டினை - எங்கே நீ விரும்புவாயோ, அவ்விடத்தே—, சங்கைஅற - சந்தேகமில்லாமல், பெற்றாய்-பெறுவாய், என - என்று, வருணன் - வருணதேவனும், ஆகண்டலன் - இந்திரனும், தருமன் - யமதருமராசனும், மற்றோனும் - மற்றொருவனாகிய அக்கினி தேவனும், வரம் - வரத்தை, ஈந்தார் - கொடுத்தார்கள், எ-று. மற்று - அசை.

வேண்டினை, பெற்றாய், என்பவற்றுள் நிச்சயத்தினால் எதிர்காலம் இறந்தகாலமாயிற்று. [பொதுவியல் - சூ - நூ] இந்திரன்—யாகத்தில் தான் பிரத்தியக்ஷமாய்வந்து அவிர்ப்பாகம் பெறுவதாகவும் கடைசியில் உத்தமமான பதவியடையும்படியாகவும், அக்கினி—நினைத்தவிடத்தில் நெருப்பைப் பெறும்படியாகவும் சோதிலோகம்-பெறும்படியாகவும், யமன்—தருமத்தியில் மனநிலை யிருக்கும்படியாகவும் வேண்டுமிடத்துஅன்னரசம் பெறும்படியாகவும், வருணன்—தண்ணீரும் உத்தமமான பூமாலை முதலானவைகளும் வேண்டும்பொழுதுபெறும்படியாகவும், வரங்கொடுத்தார் என்று, ஸ்ரீமஹாபாரதத்திற் சொல்லி யிருக்கின்றது. தமிழ் நைடதத்திலும் சற்றேறக் குறைய இவ்வரங்களை யளித்தாரென்றே சொல்லி யிருக்கின்றது; ஆதலின் இப்பாட்டுக்குமக்கருத்துக்கிஞ்சித்துப் பொருந்தும்படி, உரை செய்யப்பட்டது. பூ அணி ஆடை - பூவும் அணியத்தக்க ஆடையும் என்றும் உரைக்கலாம்.

மற்றோனும்—உம்மைஎச்சப்பொருளது; [இடை - சூ - அ] படி - செவ்வெண்ணி னீற்றிலே வந்தது. (கூ௨)

93. அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்றவர்கள், தங்களொடுந் தார்வேந்தன் சார்ந்தனன்மேல்—மங்கை, வயமருவுகின்ற மணக்காவலர்க்குச், சயமரந்தான் கண்டோர் சார்பு.

93. Having thus received the requisite gifts bestowed by the Gods, the garland-bedecked king, accompanied by them, proceeded to the marriage pandal erected for the reception of the kings whose loving heart were set upon the maiden (Damayanti).

(இ - ள்.) தார்வேந்தன் - மாலைதரித்த நளமகாராஜன், அங்கு - அவ்விடத்தில், அவர்கள் - தேவர்கள், வேண்டும் வரம் கொடுக்கப்பெற்று - வேண்டிய வரங்களைத் தரப்பெற்றுக் கொண்டு, மேல் - பின்பு, மங்கை வயம் - தமயந்தி வசத்தில் மருவுகின்ற - (ஆசையோடு) பொருந்துகின்ற, மனம் - மனமுள்ள, காவலர்க்கு - அரசர்க்கு (ஏற்படுத்திய), சயமரம் கண்டது - சுயம்வரஸ்தானமாகக்கண்ட, ஓர் சார்பு - ஓரிடத்தை, அவர்கள் தங்களொடு - அத்தேவர்களோடு, சார்ந்தனன் - சேர்ந்தான், எ - று. தான் - அசை.

காவலர்க்குச் சார்பாகக்கண்ட ஓர்சயமரம் எனவுங் கூட்டலாம். மேன் மங்கை எனக்கூட்டி மேலானமங்கையெனவும் பொருள் கொள்ளலாம். (௯௩)

94. தூதுவந்த காதலனைச் சொல்லிச் செலவிடுத்த
மாதுவந்து பின்போன வன்னெஞ்சால்—யாதும்
அயிர்த்தா ளுயிர்த்தா ளணிவதன மெல்லாம்
வியர்த்தா ளுரைமறந்தாள் வீழ்ந்து.

94. The maiden who opened her mind to the king who had been sent as a messenger, having pleasingly allowed her heart to follow him, doubted whatever she saw, heaved a sigh, perspired all over her beautiful face and swooning away forgot speech.

(இ - ள்.) தூது வந்த காதலனை - தூதாகவந்த அரசனை, சொல்லி - (சொல்லவேண்டியவைகளைச்) சொல்லி, செலவிடுத்த - போம்படி அனுப்பின, மாது - தமயந்தி, உவந்து - சந்தோஷித்து, பின்போன - (அவன்) பின்னே சென்ற, வன்னெஞ்சால் - கடினமான மனதினால் [மனஞ்சென்றதினால்,] யாதும் அயிர்த்தாள் - எதையுஞ் சந்தேகித்தாள், உயிர்த்தாள் - பெருமூச் செறிந்தாள், அணி வதனமெல்லாம் - அழகான முகத்திலெல்லாம், வியர்த்தாள் - வியர்வை யடைந்தாள், வீழ்ந்து - (தரையில்) சாய்ந்து, உரைமறந்தாள் - பேச்சையு மறந்தாள், எ - று.

கருத்து முற்றும் நளன்மேல் நின்றதனால் பலவகையால் கவலை அடைந்தாள் என்றபடி. (கூச)

95. உள்ளம்போய் நாண்போ யுரைபோய்வரிநெடுங் கண், வெள்ளமபோய் வேகின்ற மென்றளிர் போல்—பிள்ளைமீன். புள்ளரிக்கு நாடன் றிருமடந்தை பூவாளி, உள்ளரிக்கச் சோர்ந்தா ளுயிர்.

95. On Cupid overpowering her mind, the daughter of the sovereign of Vidarpa, where the birds snatch up the little fish (from the water,) lost her reason, her shame, her power of speech and the power of her long and sea-like eyes; and like the tender green leaf consumed in the fire, her spirit became downcast and dejected.

(இ - ள்.) பிள்ளைமீன் - மீன்குட்டிகளை, புள் - பறவைகள், அரிக்கும் - கொண்டுபோகின்ற [அல்லது மீன்குட்டிகள் பறவைகளை அரிக்கின்ற,] நாடன் திருமடந்தை - விதர்ப்பநாட்டையுடையவன் மகள், பூவாளி - மன்மதன், உள் அரிக்க - அந்தக்கரணத்தைக் கவர, உள்ளம் போய் - மனம்போய், நாண்போய் - வெட்கம்போய், உரைபோய் - பேச்சுப்போய், வரி நெடு கண் வெள்ளம் - இரேகைகள் பொருந்திய நெடுமையான கண்ணாகிய கடல் [கடல்போன்ற கண்], போய்—, வேகின்ற மென் தளிர் போல் - வெந்து கொண்டிருக்கிற மெல்லிய தளிரைப்போல, உயிர் சோர்ந்தாள்-பிராணன் தளரப் பெற்றாள், எ - று.

போய் என்பது காரணப்பொருட்டாய்வந்த செயவெனெச்சத்திரிபு, உயிர்சோர்ந்தாள் என்பது 'உயர்திணைதொடர்ந்த' என்கிற விதியாலமைந்தது. (கூரு)

96. பூவின்வாய் வாளி புகுந்த வழியேயென்
ஆவியார் போனாலு மவ்வழியே—பாவியேன்
ஆசைபோ காதென் றழிந்தா ளணியாழின்
ஓசைபோற் சொல்லா ளுயிர்த்து.

96. She whose speech was like the sound of the beautiful harp (யாழ்), heaving a sigh, exclaimed, "Although my soul may depart from my body through the path caused by the flower-tipped arrow (of Cupid), yet the love of this wretch (herself) will not depart.

(இ - ள்.) அணி யாழின் ஓசைபோல்-அழகான வீணாநாதம் போன்ற, சொல்லாள் - சொற்களையுடைய தமயந்தி, பூவின் வாய் வாளி - பூவை முனையிற்கொண்ட மன்மத பாணங்கள், புகுந்த வழியே-பிரவேசித்த வழியாலே, என் ஆவியார் போனாலும் - என் உயிர் போனாலும், அவ்வழியே - அந்தவழியினாலே, பாவியேன் ஆசை - பாவியாகிய என்னுடைய ஆசையானது, போகாது - செல்லாது [அழியாது], என்று - என்று சொல்லி, உயிர்த்து - பெருமூச் செறிந்து, அழிந்தாள் - விசனப்பட்டாள், எ - று.

மன்மதனுடைய அம்பு தைத்த துவாரத்தினால் என்னுயிர் வெளிப்புறப்பட்டுப் போனாலும், என்னாசை நிலைநிற்குமேயன்றிப் போய்விடமாட்டாது; மறுபிறப்பிலும் தொடரும் என்றபடி. ஆவியார் என்றது மயிலார் குயிலார் என்பனபோல உயர்வில் வந்த திணைவழுவமைதி [பொதுவியல்-உஅ-ம்-சூ.] பூவின்வாய்வாளி—பூக்களால் பொருந்திய அம்புகள் எனவும் பொருள்படும். என்று—வினையெச்சம். (கூசு)

97. வையம் பகலிழப்ப வானமொளியிழப்பப்
பொய்கையுநீள்கழியும்புள்ளிழப்பப்—பையவே
செவ்வாய வன்றி றுணையிழப்பச் சென்றடைந்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு. [தான்

97. The burning-mouthed sun, who sheds his rays (all over the earth) gradually arrived towards the mountain (அஸ்தமயம்) so that the earth lost its daylight and the heaven its brightness; the birds deserted the tanks and the long channels, and the red-mouthed Andril lost its help-mate.

[இதுமுதல் நான்குபாட்டால் அந்திப்பொழுதையும் பின் இரண்டுபாட்டால் சந்திரோதயத்தையும் வர்ணிக்கின்றார்.]

(இ - ள்.) வையம் - பூமி. பகல் இழப்ப - பகலை இழக்கவும், வானம்—,ஒளி இழப்ப - பிரகாசத்தை இழக்கவும், பொய்கையும் - தடாகங்களும், நீள் - நீண்ட, கழியும் - கழிகளும், புள் இழப்ப - நீர்ப்பறவைகளை இழக்கவும், செவ்வாய-சிவந்த வாயுள்ள, அன்றில் - அன்றிற் பறவைகள், துணை இழப்ப - கூடிமருவும்படியாகிய சகாயங்களை இழக்கவும், வெவ்வாய் -

உஷ்ணமான வாயையுடைய, விரிகதிரோன் - விரிந்த கிரணங்களையுடைய சூரியன், பைய - மெல்ல, வெற்பு - அஸ்தமய மலையை, சென்று அடைந்தான் - போய்ச்சேர்ந்தான், எ - று. ஏ - அசை.

துணை என்பதை ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமெனக் கொள்க.

இழப்ப முதலியவை எல்லாம்மைகள் தொக்குநின்றன, வினைச்செவ்வெண். "வினையொடுவரினும்" என்னும் சூத்திரத்தில் ஏற்பன என்றமையின் [இடையியல் கூ-ம்] சூத்திரவிதிப்படி தொகைபெற்றில.

பைய — குறிப்புவினையெச்சம்; பை - பகுதி = (மந்தம்) பண்பு, அ-விகுதி, ய் - உடம்படுமெய். வெவ்வாய் என்பது கதிருக்கு விசேஷணம். (கஎ)

98. மாயிரு ஞாலத் துயிர்காண வானரங்கிற்
பாயிரு ளென்னும் படாம்வாங்கிச்—சேய்நின்
றறைகதா ரணம்பாட வாடிப்போய்வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை.

98. In the theatre of the heavens, removing the curtain of darkness the sun, like an actor, having for his spectators the people of the extensive world, performed his part while the sacred lyrics were sung at a distance, and hid himself at last behind the western mountains.

(இ - ள்.) மா இரு ஞாலத்து - பெரிய பூமியிலிருக்கின்ற, உயிர் காண - பிராணிகள் பார்க்கும்படி, வான் அரங்கில் - ஆகாசமாகிய நாட்டிய சாலையில், பாய் இருள் என்னும் படாம் வாங்கி - பாய்கின்ற இருட்டு என்கிற திரைச்சீலையை தள்ளி, சேய் நின்று - தூரத்தில் நின்று, அறைந்து-உரத்துச் சொல்லி, ஆரணம் பாட - வேதம் பாட, ஆடி போய் - நாட்டியஞ்செய்துபோய், வெய்யோன் - சூரியன், குடபால் வரை - மேற்குமலையில், மறைந்தான் - காணாமற்போனான், எ - று.

சூரியன் வானத்தில் உலாவிச்சென்றதை ஒரு கூத்தாடி அரங்கிலாடிப் போனதுபோல் ரூபித்தார். மா, இரு,—இரு

பொருட் பன்மொழியாகிய இவ்விரண்டும் [பொதுவியல் - சுஎ - ம்] சூத்திரத்தினுல் பொருந்தின.

மா—உரிச்சொல்லாதலின் "இடையுரிவடசொலின்" என்பதனுல் வகரம்பெருது யகரம்பெற்றது. பூமியில்உண்டாகும் வேதகோஷத்தைப் பாட்டாக ரூபிக்கிருர், ஆதலாலே சேய்நின்று என்றுர். பாட என்பதற்கு ஆரணம் எழுவாய். (சுஅ)

99. மல்லிகையே வெண்சங்கா வண்டூதவான் கருப்பு,
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப — முல்லை
யென்னும், மென்மாலை தோளசைய மெல்ல
நடந்ததே, புன்மாலை யந்திப் பொழுது.

99. While the bees were blowing the jessamine flowers as the white conchs, and the long sugar-cane bowed Cupid with chosen arrows, protected her body, the evening slowly approached like a king upon whose shoulders moved the soft garlands of the wild jessamine.

(இ - ள்,) மல்லிகையே - மல்லிகையரும்பையே, வெண்சங்கா - வெண்மையான சங்கமாகக் கொண்டு, வண்டு—, ஊத—, வான் கருப்பு வில்லி - பெரிய கரும்பு வில்லையுடைய காமன், கணை தெரிந்து - அம்புகளை ஆராய்ந்தெடுத்து, மெய்காப்ப - உடம்பைக் காத்துக்கொண் டிருக்க, முல்லை எனும் மென் மாலை - முல்லைப்பூ என்கிற மெல்லிய மாலையானது, தோள் அசைய - தோளில் ஆடாநிற்க, புன்மாலை அந்திப்பொழுது - இழிவான தன்மையுள்ள (அல்லது அற்பமான வேலநிறமுள்ள) அந்திப்பொழுதானது, மெல்ல நடந்தது—, எ - று. ஏ - அசை.

மெல்ல—குறிப்புவினையெச்சம். மெல் - பகுதி, (பண்படி) அ - விகுதி, லகர மிரட்டியது சந்தி.

அந்திப்பொழுதை ஓர் அரசன் நடப்பதுபோல் ரூபித்தார். இங்கும் வினையெச்சங்களுக்கு சுஎ-ம் பாட்டிற் சொன்ன இலக்கணங்களை அமைத்துக் கொள்க. (சுகு)

100. புற்கென்று ரந்தி புனைமலர்க்க ணீரரும்ப
நிற்கின்ற தந்தோ நிலங்காப்பான்—முற்கொண்

டடைஇன்ற வேந்தர்க்கு மாண்டஞ்சினோர்க்கும்
இடைநின்ற காலம்போ லின்று.

100. The evening twilight spread forth its gloom, causing tears in the eyes of those that are striken by love, and resembled the intervening moments of anxiety passed by those that hurried forward for the acquisition of the object of their aim, and by those that, apprehensive of disappointment remained at home.

(இ - ள்.) அந்தி - அந்திக்காலமானது, புற்கென்றார் - விரகத்தினால் கபிலநிறமானவர்களுடைய, புனை மலர் கண் - அழகான மலர்போன்ற கண்களில், நீர் அரும்ப - நீர் துளிக்கும்படி, நிலம் காப்பான் - இராச்சியத்தைக் கைப்பற்றிக் காக்கும் பொருட்டு, முற்கொண்டு - முற்பட்டு, ஆண்டு அடைஇன்ற வேந்தர்க்கும் - அந்த ராச்சியத்திற் சேரும் அரசருக்கும், அஞ்சினோர்க்கும் - அங்கு செல்லப் பயப்பட்ட ராஜாக்களுக்கும், இடைநின்ற காலம்போல்-நடுவேநிற்கிற காலம்போலே, நிற்கின்றது—, அந்தோ - ஐயோ, எ - று. இன்று - அசை.

போலின்றஎன்பதில்இன்சாரியை எனக்கொண்டுபோன்று எனவுமுரைக்கலாம்.

ஒருராச்சியத்தைக் கைப்பற்றத் துணிந்துமுன்சென்றவர்க்கும் அதற்கு அஞ்சி நின்றவர்க்கும் வெற்றி தோல்விகளால் மகிழ்ச்சியும் துயரமு மேற்படாமல் கலக்கமாயிருக்கும் நடுக்காலம்போலே பகலுக்கும் இரவுக்கும் நடுவாய் அஞ்சி நின்றதென்பது கருத்து.

அந்திப்பொழுது சூரியனால் விடப்பட்டும் சந்திரனால் கைப்பற்றப்படாமலு மிருந்தலால் இவ்வனங் கூறப்பட்டது. நிலங்காப்பான் என எனக்கொண்டு அவனை முன்னிட்டு அங்கே போனவர்களுக்கும் அஞ்சிநின்றவர்க்கும் நடுக்காலம் தமயந்தி மாலைசூட்டும் விஷயம் தேராமலிருப்பது போலெனவுமாம். புற்கென்று ஆர் அந்தி எனப்பிரித்து நிறைந்த அந்திப்பொழுதானது கபிலநிறம்பெற்று மலர்களாகிய கண்களில்தேனாகிய நீர் அரும்பும்படி நிற்கின்றதெனப் பொருள்செய்து அந்தியையே ஒரு காமியைப்போல் உருவகப்படுத்தினரெனினு

மொக்கும். கபிலநிறமாவது கருமைகலந்த பொன்னிறம். சாயங்காலத்துக்குச் சூரியகிரண சம்பந்தஞ் சிறிதும் இருளின் சம்பந்தஞ் சிறிதுமாயிருத்தலால் கபிலநிறமுண்டென அறிக. புற்கு - கபிலநிறம். இதனோடு என்றார் என்பது சேர அந்நிற முடையவர்கள் எனப்பொருள் படுகின்றது. அந்தி—அந்தியம் என்கிற வடமொழித்திரிபு, கடைசி என்பது பொருள், "உயர் திணை தொடர்ந்த" என்கிற விதியினால், 'புற்கென்றார் கண்ணீர் அரும்ப' எனவும் கூட்டலாம். அந்தோ—இரக்கக்குறிப்பான இடைச்சொல். (௧௦௦)

101. பைந்தொடியா ளாவி பருகுவா னிற்கின்ற,
அந்தி முறுவலித்த தாமென்ன — வந்ததால்,
மைபார்வேற் கண்ணாள் வனமுலைமே லாரழ
பெய்வா னமைந்த பிறை. [லைப்

101. The crescent moon which was destined to pour thick fire on the beautiful breasts of the piercing-eyed maiden, began to rise, displaying a splendour which resembled the laugh of the evening twilight which stood intending to take away the soul of her who was adorned with green bracelets.

(இ - ள்.) பைந்தொடியாள் ஆவி - பசிய வளையணிந்த தமயந்தியின் உயிரை, பருகுவான் - குடிப்பதற்கு, நிற்கின்ற—, அந்தி-அந்திப்பொழுது. முறுவலித்தது ஆமென்ன-சிரித்தது என்று சொல்லும்படி, மை ஆர் வேல் கண்ணாள் - மையிடப் பெற்ற வேல்போன்ற கண்களையுடைய தமயந்தியின், வன முலைமேல் - அழகுள்ள தனங்களின்மேலே, ஆர் அழலை - நிறைந்த நெருப்பை, பெய்வான் - பெய்வதற்கு, அமைந்த - ஏற்பட்ட, பிறை - சந்திரப் பிறையானது, வந்தது-உதித்தது, எ - று. ஆல் - அசை. (௧௦௧)

102. கூட்டுமை போற்சிறந்த கூரிருளைக் கூன்கோட்
டால், கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள்—
ஈட்டுமணிப் பூணிலா மென்முலைமேற் போ
தச் சொரிந்ததே, நீணிலா வென்னு நெருப்பு.

102. The cool crescent moon which with its curved horns dug up, as if it were mud, the exceeding thick dark-

ness which was even blacker than prepared ink, poured abundant fire from its long beams upon the soft breasts of Damavanti, which sparkled with the diamond ornaments, with which they were profusely studded.

(இ - ள்.) கூட்டு மை போல் சிறந்த - கூட்டப்பட்ட மை போல் நிறஞ்சிறந்த, கூர் இருளை - மிகுதியான இருளை, கூன் கோட்டால் - வளைவாகிய கொம்பினால், கோட்டு - பெயர்த்து, மண் கொண்ட - மண்ணைக் கொண்டிருக்கின்ற, குளிர் திங்கள் - குளிர்ந்திருக்கிற சந்திரன், ஈட்டும் - சேர்க்கப்பட்ட, மணி பூண் - ரத்தினாபரணங்கள், நிலாம் - விளங்குகின்ற, மென்முலை மேல் - மெல்லிய முலைகளின்மேல், நீள் நிலா என்னும் நெருப்பு - அதிகமான நிலா என்கிற நெருப்பை, போத சொரிந்தது - நிறையப் பெய்தது, எ - று. ஏ - அசை.

சந்திரனை மதம்பிடித்த விருஷபத்தைப்போலக் குறித்தார், அது நிலத்தைப் பெயர்த்துக் கொம்பில் மண்கொண்டிருப்பதுபோல் சந்திரனிருளைநீக்க அவ்விருளிற் சிறிது கோட்டில் ஒட்டியிருப்பதாகக் களங்கத்தைக் குறித்தார். நிலாப்படுவது அவருக்கு நெருப்புப்படுவதுபோலிருந்ததென்பது கருத்து. நிலாவும் என்கிற பெயரெச்சம் ஈற்று உயிர்மெய்கெட்டு நின்றது, [வினையியல் உஉ - ஆம் சூத்திரத்தைக் காண்க.] (க0உ)

103\. அன்னங்கா ணீங்களுமவ் வாதித்தன் றானும்
போய், மன்னும் படியகலா வல்லிரவில்—மின்
னும், மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கு
நாங்கள், பிழைத்தால்வந் தேனென்னும் பேர்.

103\. "O Swans! said Damayanti, you as well as that sun are now retiring; but if we escape from the darkness of night, lightning and rain, and from the north wind during this perpetually dark night, then you may return and enquire after our health."

[இது முதல் இருபத்திரண்டு பாடல்களால் தமயந்திக்கு உண்டாகிய காதற்றுன்பம், அதாவது விரகவேதனை பல வகையிற் கூறுகின்றார்].

(இ - ள்.) அன்னங்காள் - அன்னங்களே, நீங்களும்—, அ— அந்த, ஆதித்தன்றானும் - சூரியனும், போய்—, மன்னும்படி -

நிலைபெறும்படி, அகலா - நீங்காத, வல் இரவில் - கடினமான ராத்திரியில், மின்னும் - மின்னலைச்செய்கின்ற, மழை - மேகங்களினுடைய, தாரை - நீரொழுக்காகிய, வல் இருட்கும் - வலிமையுள்ள இருளுக்கும், வாடைக்கும் - வடகாற்றுக்கும், நாங்கள் - நானும் என்போன்றவர்களும், பிழைத்தால் - தப்பினால், வந்து - (நீங்கள்) வந்து, பேர் - பெயரைக் (குறித்து), என் என்னும் - என் க்ஷேமமா என்று வினவுங்கள், எ - று.

பேர் என்பது பேர்ந்து என வினையெச்சமாகக் கொண்டு பேர்ந்து வந்து - திரும்பிவந்து எனவும் உரைக்கலாம். "வினைமுற்றே" என்கிற [வினை - ௩௨ - ம்] சூத்திரத்தின் உரையைக் காண்க.

என்னும்—முன்னிலை ஏவற்பன்மைமுற்று. [வினையியல் - ௨௯ - ஆம் - சூ.] "பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற் செல்லாதாகுஞ் செய்யுமென் முற்றே" என்றாராதலால் இது முன்னிலையிலே வருகின்ற வேறு முற்றெனக் கொள்க. வா என்னு முதனிலையில் வரும் என்பது செய்யுமென்முற்று, வாரும் என்பது முன்னிலை யேவற்பன்மை;நட என்பதில் நடக்கும் என்பது செய்யுமென்முற்று, நடவும்என்பதுமுன்னிலைமுற்று. இவ்வாறே பார்க்கும் - பாரும், களிக்கும் - களியும், முதலிய வேறுபாடு காண்க. சிலமுற்றும் எச்சம்போல் வேறுபாடின்றி யுளவாயினும் பொருள் வேற்றுமை யொழியாது.

நிலவுதோன்றியுந் திடீரென்று சிறிது மழையும் மழைக்காற்றும் நேர்ந்ததாகப் புலம்பினா ளெனக் கருத்துக் கொள்ள வேண்டும். மழைக்காலம் சூரியனுக்கும் அன்னங்களுக்கும் விரோத மென்பது விளக்கம். சுவ்வுருபு நீக்கப்பொருளில் மயங்கி வந்தது. (௧௦௩)

104. செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்,
கொப்புளங் கொண்ட குளிர்வானை - இப்பொழு
து, மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்
கொலோ, தேன்பொதிந்த வாயாற் றெரிந்து.

104. "O ye maidens! how now do you assert with your honeyed mouths, that the cool heavens upon whose expanse the heat of the moon causes blisters, is nothing but

the star-spangled firmament, knowing as you do the real cause."

(இ-ள்.) செப்பு இளம் கொங்கைமீர் - செப்பைப்போலும் இளமையாகிய முலைகளையுடைய பெண்களே, இப்பொழுது—, திங்கள் சுடர் பட்டு - சந்திரகிரணம் பட்டதனால், கொப்புளம் கொண்ட - கொப்புளங்களை யுடைத்தான, குளிர் வானை - குளிர்ச்சியான ஆகாயத்தை, தெரிந்து - அறிந்திருந்து, தேன் பொதிந்த வாயால்-தேன் நிறைந்த வாயினால், மீன் பொதிந்து நின்ற விசும்பு என்பது - நட்சத்திரங்கள் நிறைந்திருக்கின்ற ஆகாயம் என்றுசொல்வது, என்கொலோ - என்ன காரணத்தினாலாகியதோ, எ-று.

கொங்கைமார் என்கிற பல்லோர்படர்க்கைப் பெயர் "ரவ் வீற்றுயர்பெயர்க் களபெழுவீற்றயல்" என்கிற [பெயரியல்-நஉ-ஆம் சூ] விதியால் ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகத் திரிந்து விளியாயிற்று. (௧0௪)

105. கானுங் தடங்காவுங் காமன் படைவீடு, வானுந் தேர் வீதி மறிகடலும்—மீனக், கொடியாடை வையமெல்லாங் கோதண்ட சாலை, பொடியாடி கொன்றதெல்லாம் பொய்.

105 "The forests and the extensive groves constitute the arsenal of the God of love, the heaven is the highway upon which his chariot rolls, the wave-bounded ocean is his banner marked with the insignia of a fish, the whole earth is a depository for his arrows; therefore it is false to assert that he Cupid has been destroyed by Siva."

(இ-ள்.) கானும் - காடும், தடம் காவும் - விசாலமான தோட்டங்களும், காமன் - மன்மதனுக்கு, படை வீடு - ஆயுதம் வைத்திருக்கும் வீடு; வானும்-ஆகாயமும், தேர் வீதி - தேரைச் செலுத்தும்படியான தெரு; மறி கடலும் - தடுக்கின்ற சமுத்திரமும், மீனக் கொடியாடை-மச்சம் எழுதப்பெற்ற கொடிச் சீலை; வையம் எல்லாம் - பூமியெல்லாம், கோதண்ட சாலை வில்லெடுத்துப் பயிலுமிடம்; (இப்படி யிருப்பதனால்) பொடியாடி - சிவன், கொன்றதெல்லாம்-(காமனைக்) கொன்றதாகச் சொல்வதெல்லாம், பொய் - அபத்தம், எ-று.

காலையும் காவையும் பூநிறைவுபற்றி மன்மதனுக்குப் படைவீடு என்றும், வானை நிலாத்தோற்ற நிறைவுபற்றித் தேர்வீதியென்றும், மீன் நிறைந்து நீண்டு அலைத்துக்கொண்டிருத்தலால் கடலைக் கொடிச்சிலை யென்றும், இப்படியாகப் பூமியிலெங்கும் காமன் தோன்றுதலால் அதைக் கோதண்டசாலையென்றும் உருவகப்படுத்தினர். எல்லாம் காமவெழுச்சிக்குக் காரணமானதனு லென அறிக. (௧0௫)

106. கொள்ளைபோ கின்ற துயிரென்னுங் கோளரா
வின், முள்ளெயிறே மூரி நிலாவென்னும்—
உள்ளம், கொடிதிரா வென்னுங் குழையுந் தழல்
போல, நெடிதிரா வாய்புலரா நின்று.

106. "My life is being plundered. Is the brutal crescent of the moon the thorny tooth of the deadly serpent? The heart of Night is hardened and unfeeling — and so saying, she fainted away as if by the igneous influence of fire, and during the long night she lost her power of speech.

(இ - ள்.) உயிர் கொள்ளைபோகின்றதென்னும் - பிராணன் கொள்ளைபோகிற தென்று சொல்லுவாள்; மூரி நிலா - பலமுள்ள சந்திரனது, கோள் அரவின் - கொலைசெய்யும் பாம்பினது, முள் எயிறே-முள்ளைப்போன்ற பல்லோ, என்னும்—; இரா - இராத்திரி, உள்ளம் கொடிது - மனம் கொடுமையாயிருக்கப்பெற்றது, என்னும்— ; நெடிது இரா - பெரிய இரவில், தழல்போல் - நெருப்பிற் பட்டாற்போல், வாய் புலரா நின்று - வாய் உலர்ந்து, குழையும் - வாடுவாள் (தமயந்தி,), எ - று.

நெடிது இரா என்பதற்கு நெடுங்காலம் நிலைபெற்றிராமல் (அதாவது சஞ்சலப்பட்டுக்கொண்டு) என்று முரைக்கலாம், அல்லது நெடிது குழையும் என்றுங் கூட்டலாம். (௧0௬)

107. வெங்கதிரோன் றன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை யனலிற் கொளுந்தியோ - திங்கள்
விரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தேயோ
எரிகின்ற தென்னோ விரா.

107. "Wherefore is the night so hot? says Damayanti, is it because it has swallowed up the burning sun

that it is so hot? or is it the fire which arises out of the breasts of maidens like myself that thus burns? or is it the heat caused by the silvery rays of the moon?"

(இ - ள்.) வெம் கதிரோன்தன்னை - வெப்பமான சூரியனை, விழுங்கி - கபளீகரித்து, புழுங்கியோ - வெப்பங்கொண்டோ, கொங்கை அனலில் - (என்போன்றவர்களுடைய) முலையில் எழுகின்ற அக்கினியினால், கொளுந்தியோ - எரிந்தோ, திங்கள் - சந்திரனிடத்தில், விரிகின்ற - பரந்திருக்கின்ற, வெண் நிலவால் - வெண்மையாகிய நிலாவினால், வேகின்றதேயோ - வேகிறதினாலோ, என்னோ - எதனாலோ, இரா - இராத்திரி, எரிகின்றது - சொலிக்கின்றது (என்று அவள் புலம்பினாள்,) எ - று. ()

108. ஊழி பலவோ ரிரவாயிற் றோவென்னும்
கோழி குரலடைத்த தோவென்னும் - ஆழி
துயிலாதோ வென்னுஞ் சுடர்மதியங் கான்ற
வெயிலா லுடலுருகா வீழ்ந்து.

108. The body of Damayanti languishing under the burning influence of the rays shed by the moon she dropped down saying "Have innumerable ages been blended into this one night? Has the cock stopped its crowing altogether? Will the great deep never slumber?"

(இ - ள்.) சுடர் மதியம் - பிரகாசமுள்ள சந்திரன், கான்ற வெயிலால் - கக்குகின்ற (நிலவாகிய) வெய்யிலினால், உடல் உருகா - உடம்பு உருகி, வீழ்ந்து -, ஊழி பல - அநேக யுகங்கள், ஓர் இரவு ஆயிற்றோ - ஒருராத்திரியாகச் சமைந்ததோ, என்னும் - என்பாள்; கோழி குரல் அடைத்ததோ - கோழியானது கூவாமலிருக்கும்படி குரல் அடைக்கப்பெற்றதோ, என்னும் - என்பாள்; ஆழி துயிலாதோ - சமுத்திரம் தூங்காதோ, என்னும் - என்பாள், எ - று.

உருகா என்கிற செய்யாவென்னும் வாய்பாட் டெச்சம் [வினையியல் உகூ - ம்] சூத்திரத்தினால் "வீழ்ந்து" என்னுந் தன்கருத்தாவின் வினையைக்கொண்டது. (க0அ)

109. ஆடிவரியவன்ன டருகே பறக்கவே
வாடி மெலிவாள் வளமுலைமேல் - ஓடிப்

பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ மோ
துறைவா யடங்காத் துயர். [கத்

109. When the striped bees, after bathing in honey were flying by the maiden, she languished and her beautiful breasts swole out, and became heavy, so that she fainted away under their weight. Can she bear the uncontrollable affliction arising from lust?

(இ - ள்.) வரிவண்டு - இரேகைகளையுடைய வண்டு, ஆடி - (மகரந்தத்தில்) மூழ்கி, அருகேபறக்க - சமீபத்திலேபறக்கும் போது, வாடி மெலிவாள் - வாட்டங்கொண்டு இளைத்துப் போவாள்; வனம் முலை - அழகைப்பொருந்திய முலைகள், மேலோடி - பூரித்து, பொறையாக - பாரமாயிருப்பதினால், சோர்வாள் - தளர்ந்துபோவாள்; மோகம் துறைவாய் - காமவழியில், அடங்கா துயர் - அடங்காத துன்பத்தை, பொறுக்குமோ-பொறுப்பாளோ (பொறுக்கமாட்டாள் தமயந்தி,)எ-று. ஏ - அசை.

மெலியாள் முதலியவை இயல்பினால் இறந்தகாலம் எதிர் காலமாயின. முலைகள் பருத்திருப்பது விரகத்தினால் பாரமாயிற்று. (௧0௯)

110. ஈர மதியே யிளநிலவே யிங்ஙனே
சோர்குழலின் மீதே சொரிவதென்—மாரன்
பொரவளித்தான் கண்ணி யுனக்குப் புலரா
இரவளித்தா னல்லனோ வின்று.

110. "O cool moon! why do you thus shed your soft beams upon my disordered tresses? Has not Cupid to whom we are indebted for this never ending night, given you garlands of victory to war against?"

(இ - ள்.) ஈரமதியே - குளிர்ச்சியுள்ள சந்திரனே, இளநிலவு - இளமையான நிலவை, இங்ஙனே - இப்படி வெப்பமாயிருக்குமாறு, சோர் குழலின்மீது - தளர்ந்துவிழுங் கூந்தலையுடைய பெண்மேல், சொரிவது - பொழிவது, என்-என்ன? இன்று - இன்றைக்கு, புலரா இரவு அளித்தான்-நீங்காத இரவைக் கொடுத்தவனாகிய, மாரன் - காமன், பொர - போர் செய்ய, உனக்கு—, கண்ணி அளித்தான்-வெற்றிக்குரியமாலையைத் தந்தவன், அல்லனோ - அல்லாதவனோ, எ - று.

கண்ணி—பறவைகளைப் பிடிக்கும்படியான ஓர் கருவியெனி னும் தகும். நீங்காத இரவைக்கொடுத்ததே உனக்குக் கண்ணி தந்ததுபோலும் என்பது கருத்து. எவன் என்பது அஃறிணை யிருபாற்கும் பொது வினாவினைக் குறிப்புமுற்று [வினையியல் ௩௧ - ஆம் - சூ.] (௧௧0)

111. தாங்கு நிலவின் தழல்போய்த் தலைகொள்ளத்,
தேங்குழல்சேர் வண்டு சிறைவெதும்ப—ஓங்கு
யிர்ப்பின், தாமங் கரியாத் தனியே தளாகின்
ருள், யாமங் கரியாக வின்று.

111. On the falling moon-beams striking upon the head of Damayanti, the wings of the bees which swarmed together in her beautiful tresses became singled; and heaving a deep sigh, her hot breath burned to cinders the garland on her breast; and in her solitnoe, with only the silent watch of midnight to bear witness to her sufferings, she fainted away.

(இ - ள்.) தாங்கும்- சுமக்கின்ற, நிலவின் தழல்-நிழலாகிய நெருப்பு, போய்—, தலைகொள்ள - தலைக்கேற்றலினால் [மிகு தியாக,] தேம் குழல் சேர் - வாசனை பொருந்திய கூந்தலைச் சேர்ந்த, வண்டு—, சிறை வெதும்ப-இறகுவெந்துசிறக, ஓங்கு உயிர்ப்பின் - மேலெழுந்த மூச்சினால், தாமம் கரியா - பூமாலை கரியாகும்படி, இன்று-இந்நாளில் யாமம் - இரவு, கரி ஆக - சாக்ஷியாக, தனியே தளர்கின்றாள் - ஒன்றியாயிருந்து வாடு கின்றாள் (தமயந்தி,) எ - று.

தழல் தலைக்கொள்வது சிறைவெதும்புதற்குக் காரணம்.

112. மையிட்ட கண்ணருவி வார வளைசோரக், கை
யிற் கபோலத் தலமவைத்து—மெய்வருந்தித்,
தேனிருந்த பூங்கணையே தீயாகத் தேமொழி
யாள், தானிருந்து செய்வா டவம்.

112. When the tears came streaming down from her blackened eyes, and when her bangles had become loose on her wasted wrists, the honey-speeched maiden, resting her cheek upon her hand, while her body suffered, resembled one performing penance, having the honey-charged flowered arrows of Kama for the fire.

(இ-ள்.) தேமொழியாள் - தேன்போலுஞ் சொல்லையுடைய தமயந்தி, மை இட்டகண் - மை தீட்டிய கண்ணினின்றும், அருவி - நீர்வெள்ளம், வார - பெருக, வளை - வளையல், சோர - தளர்ந்துவிழ, கையில்—, கபோலத்தலம் - கன்னத்தை, வைத்து—, மெய் வருந்தி - உடம்பு வருத்தப்பட்டு, தேன் இருந்த பூங்கணையே - வண்டுகளிருக்கின்ற பூவாகிய அம்பையே, தீயாக-அக்கினியாகக்கொண்டு, இருந்து—, தவம்செய்வான் - தவஞ் செய்பவளைப்போலிருந்தாள், எ - று. தான்- அசை. ()

113. அள்ளிக் கொளலா யடையத் திரண்டொன்றா
ய்க், கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய் - உள்
ளம், புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள்
இதயமே போன்ற திரா.

113. The night, whose darkness was so solid, that is could almost be grasped by the hand, and so thick that even fire at the end of a brand could not penetrate its dense obscurity, was as dark as the hearts of harlots, whose attractions impressed every soul.

(இ - ள்.) இரா - இராத்திரியானது, அள்ளிக்கொளல்ஆய்- அள்ளிக் கொள்ளும்படியாகி, அடைய திரண்டு - முற்றுஞ் சேர்ந்து, ஒன்றாய்—, கொள்ளிக்கும் விள்ளாத - கொள்ளிக் கட்டையினாலும் பிரிக்கக்கூடாத, கூர் இருளாய் - நிறைந்த இருளுள்ளதாய், உள்ளம் - (அனைவோருடைய) மனம்,புதையவைத்த - நன்றாய்ப் பதியும்படி காட்டிவைத்த, பொதுமகளிர் தங்கள் - வேசிகளுடைய, இதயம் - மனதை, போன்றது - ஒத்திருந்தது, எ - று. ஏ - அசை.

இப்படி யிருக்கையில் சந்திரன் அஸ்தமித்து இருள் கூர்ந்தது. அவ்வண்ணமாகிய இரவு நிற்கக்கூடாததாய் மயக்கந் தருவதாய்த் துன்பத்திற்கு ஏதுவா யிருப்பதுபற்றி இத்தன்மையுள்ள வேசிமனதை உவமித்தார். (௧௧௩)

114. ஊக்கிய சொல்ல சொலிக்குந் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர்—காக்க
இடையாமங் காவலர்கள் போந்தா ரிருளின்
புடைவா யிருள்புடைத்தாற் போன்று.

114. The watchmen who were bold of speech, whose voices were as the sounding of the kettle-drum, who were girt with belts and armed with lances and swords, entered the city at midnight to see that all was safe, and as they walked their rounds the darkness of their sable-clad forms seemed to be in conflict with the darkness which opposed them.

(இ - ள்.) ஊக்கிய சொல்லர் - மேலோங்கிய சொல்லை யுடையவர்களும், ஒலிக்கும் துடி - ஒலிக்கின்ற துடியென்னும் வாத்தியம் போன்ற, குரலர் - குரலை யுடையவர்களும் வீக்கிய கச்சையர் - சல்லடத்தைக் கட்டியவர்களும், [கவசமுள்ளவர் களு மென்றுமாம்,] வேல் வாளர்-வேல் வாள் முதலிய ஆயுத முள்ளவர்களுமான, காவலர்கள் - காவற்காரர், இருளின் புடைவாய்-இருட்டிலே, இருள் புடைத்தால் போன்று-இருட் டைக் குத்தித் தள்ளினதுபோலே, இடை யாமம் காக்க - நடு ராத்திரியிற் காக்கும்பொருட்டு, போந்தார் - வந்தார்கள், எ - று.

துடியென்பது மலைப்பக்கங்களிலும் பாலை நிலங்களிலும் அடிக்கிற தம்பட்டம். புடை, வாய்,—இரண்டும் ஏழுனுருபு. இருள் உள்ள இடத்தில் என்பதும் ஒக்கும். துடியின் குரலை யுடையவர்கள் என்றுமாம். (ககச)

115. சேமங் களிறுபுகத் தீம்பாலின் செவ்வழியாழ்
தாமுன் னுறைபுகுதத் தார்வண்டு—காமன்றன்
பூவாளி யைந்திற் புகத்துயில் புக்கதே
ஓவாது முந்நீ ருலகு.

115. When the elephants had retired into their stables, when the guitar (செவ்வழியாழ்) whose notes were as sweet (to the ear) as milk (to the taste) had been put into its case, when the flower-freqwenting bees had nested themselves in the flowered arrows of Kama, the sea girt earth was wrapt in undisturbed slumber.

(இ - ள்.) களிறு - யானை, சேமம் புக - காவலிடஞ்சேர, தீம் பாலின்-மதுரமான பால்போன்ற, செவ்வழியாழ் - செவ் வழியென்னும் இராகம் பாடுகிற வீணைகள், உள்ளுறை - உறையின் உள்ளே, புகுத-பிரவேசிக்க, தார் வண்டு - முல்

மொய்க்கும் வண்டுகள், காமன் தன்-மன்மதனுடைய, பூவாளி ஐந்தில் - ஐவகைப்பட்ட புஷ்பங்களாகிய அம்புகளில், புக - பிரவேசிக்க, முந்நீர் உலகு-சமுத்திரஞ் சூழ்ந்த உலகமானது, ஓவாது - வி...ாமல், துயில் புக்கது - தூக்கம் பொருந்திற்று, எ-று. தாம் - ஏ - அசை.

யாழ் வாசித்தல் முதலானவை யொழிந்து யாவரும் தூங்கினரென்பது கருத்து. (கக௫)

116 ஊன்றின் றுவகையா லுள்ள வுயிர்புறம்பே
தோன்றுங் கழுதுந் துயின்றதே—தான்றன்
உரைசோரச் சோர வுடல்சோர வாயி
னிரைசோரக் கைசோர நின்று.

116. The evil spirits which having fed upon human flesh, through joy gave outward vent to their inward feelings, went to sleep standing, each one's voice gradually dying away, his body gardnally vanishing, the food gradually slipping out from the mouth, and his hands gradually dropping down by his sides.

(இ - ள்.) ஊன் தின்று - மாமிசம் புசித்து, உவகையால் - சந்தோஷத்தினால், உள்ள உயிர் - உள்ளே அடங்கியிருந்த மூச்செல்லாம், புறம்பே தோன்றும் - வெளியில் காணப்படும்படியான, கழுதும் - பேயும், தன் உரை - தன் சொல், சோரச் சோர - மிகவுந் தளர, உடல் சோர—, வாயின் இரை சோர வாயிலிருந்து உணவு விழ, கை சோர நின்று-கையுந் தளரும்படி நின்று, துயின்றது - தூங்கிற்று, எ - று. ஏ - தான்-அசை.

நடு இராத்திரியில் ஒரு முகூர்த்தகாலம் பேயுந் தூங்கும் என்பது வழக்கு. கழுதும் என்கிற உம்மை இழிவு சிறப்பு. (கக௬)

117. அன்றி லொருகண் டுயின்றொருகண் ணார்வத்
தால், துணைமேல் வைத்துறங்கு மென்னு
ஞ்சொல்—இன்று, தவிர்ந்ததே போலரற்றிச்
சாம்புகின்ற போதே, அவிழ்ந்ததே கண்ணி
ரவட்கு.

117. The old saying, that the Andril bird sleeps with one eye closed, through love watching his sweet consort with the other, has this night been proved to be false. So

Damayanti, (missing the watchful eye of Nala) lamented, as she pined (for him), the tear-drops falling from her eyes.

(இ - ள்.) அன்றில்-அன்றில் பறவை, ஒரு கண் துயின்று - ஒருகண்ணினால் தூங்கி, ஒரு கண் - மற்றொருகண்ணை, ஆர்வத்தால் - அன்பினால், இன் துணைமேல் வைத்து - பிரியமான தன் இணையின்மேல் வைத்து, உறங்கும் - தூங்கும், என்னுஞ் சொல்—, இன்று தவிர்ந்ததே போல் - இன்றைக்கு விட்டது போல், அரற்றி - கூவி, சாம்புகின்றபோது - கூட்டில் அடையும்போது, அவட்கு - தமயந்திக்கு, கண்ணீர்—, அவிழ்ந்தது - ஒழுகிற்று, எ - று. ஏ - அசை.

துணை என்பது ஆணுக்கும் பெண்ணுக்குமாம் ஆதலின் பொதுப்பட இணையென்றோம். (௧௧௭)

118. ஏழுலகுஞ் சூழிருளா யென்பொருட்டால் வேகின்ற, ஆழ்துயர மேதென் றறிகிலேன்—பாழி வரையோ வெனுநெடுந்தோண் மன்னாவோ தின்னும், இரையோ விரவுக் கியான்.

118. "I know not why the seven world have been clothed with darkness, or what is the cause of this heavy sorrow which thus burns on my account O king, whose broad shoulders are like great mountains! Am I to be the prey of this night ?"

(இ - ள்.) ஏழ் உலகும் - ஏழு லோகங்களும், சூழ் இருளாய்-சூழ்ந்த இருளுள்ளனவாய், என் பொருட்டு—, வேகின்ற - வேகத்தினால் உண்டாகிய, ஆழ் துயரம் - ஆழ்ந்த துன்பமானது, ஏதென்று - எக்காரணத்தால் வந்தது என்று, அறிகிலேன் - அறியமாட்டேன்; பாழி வரையோ - பலமுள்ள மலையோ, எனும் - என்று சொல்லப்பட்ட, நெடு தோள் மன்னா - நெடுமையான தோளையுடைய நளமகாராஜனே, ஓ - ஐயோ, யான் - நான், இரவுக்கு - இராத்திரிக்கு; தின்னும் இரையோ-புசிக்கும் புசிப்போ (எனத் தமயந்தி புலம்பினாள்,) எ - று. ஆல் - அசை.

மன்னாவோ என்பதில் ஓவைப்பிரியாமல் விளியுருபு எனவுங் கூடும். [பெயரியல் ௫௬ - ம் சூத்திரத்தின்] "புலம்பினாலு

மாகும்" என்றதைக்காண்க. வேகின்ற என்னும் பெயரெச்சம் அம்புபட்டபுண், சங்குசுட்ட சுண்ணாம்பு என்பவைகளிற்போல் துயரம் என்னும் காரியப்பெயரைக் கொண்டது. இதைக் கரு வியில் அடக்குவாரு முண்டு. அறிகிலேன்—அறி-பகுதி, ஏன்-தன்மை யொருமை விகுதி, கு - சாரியை, இல் - எதிர்மறைப் பண்படி இடைநிலையாயிற்று, உகரம் கெட்டது சந்தி.(௧௧அ)

119. கருவிக்கு நீங்காத காரிருள்வாய்க் கங்குல்
உருவிப் புகுந்ததா லூதை—பருகிக்கார்
வண்டுபோ கட்ட மலர்போன் மருண்மாலை
உண்டுபோ கட்ட வுயிர்க்கு.

119. "Like the flower, which alone is left after the black bees have sucked out of honey, is my life which alone remains after the drowsy evening has imbibed my spirits; and to take away this remaining life has this chill blast of wind come this night, piercing through the black darkness which no instrument can dispel.

(இ - ள்.) கருவிக்கு நீங்காத கார் இருள்வாய் - கருவி கொண்டு நீக்கக்கூடாத கரிய இருட்டிலே, பருகி - (தேனைக்) குடித்து, கார் வண்டு - கரியவண்டு, போகட்ட மலர்போல் - போய்விட்ட பூவைப்போல், மருள் மாலை-மயக்கத்தைச் செய்கின்ற மாலைப் பொழுது, உண்டு போகட்ட - உண்டுபோய் விட்ட, உயிர்க்கு - (என) உயிர்க்காக, ஊதை-காற்று, கங்குல் உருவிப் புகுந்தது - இரவை நடுவே பிளந்துகொண்டு வந்தது, எ - று. ஆல் - அசை.

மாலைப் பொழுதினாலே வாடி, வண்டு குடித்துப்போன பூவைப்போல் நிசாரமாயிருக்கும் என் உயிரைக் குடிக்க இக் காற்று வந்ததென்று தள்ளிரவில் உண்டாகிய காற்றைத் தமயந்தி வெறுத்தாள் என்பது கருத்து. இக்காலத்துப் போகட்ட என வழங்கியதுபோலும். (௧௧௯)

120. எழுந்திருக்கு மேமாந்து பூமாந் தவிசின்,
விழுந்திருக்குந் தன்னுடம்பை மீளச்—செழுந்
தாளத், துணையோடு சேர்க்குந் துணையேது மில்
லாதே, நாணும் நின்மழிவா ணைந்து.

120. With great anxiety she rises on her beautiful bed of tender leaves, and then her body again resumes its recumbent posture, and not having any help-mate, she embraces the pillar of shining pearls by her side, till she is overpowered with shame, and becomes quite exhausted.

(இ - ள்.) (அத்தக்கன்னி) பூ மா தவிசின் - அழகிய மாந்த தளிர் பரப்பிய ஆசனத்தினின்றும், ஏமாந்து-(நினைப்பின்செறிவால் நளன் வந்ததாய் நினைத்து) சந்தோஷித்து, எழுந்திருக்கும்-எழுந்திருப்பாள்; விழுந்திருக்கும்- (அத்தோற்றம் பொய்யானதால்) விழுந்துகிடப்பாள்; மீள மறுபடியும், தன் உடம்பை—, செழு தாள முத்தூண் - செழுமையான முத்துப் பதித்த கம்பத்தோடு, சேர்க்கும் - சேர்ப்பாள்; துணை ஏதும் இல்லாது - ஒருதுணையும் இல்லாமல், நைந்து நின்று - தளர்ந்திருந்து, நாணொடு - (தன் செய்கையில் தனக்கே யுண்டாகிய) வெட்கத்தினால், அழிவாள்-வருந்துவாள், எ - று. ஏ - அசை.

ஓடு—கருவிப்பொருளில் மயங்கிவந்தது. (௧௨௦)

121. விரிகின்ற மெல்லமளி வெண்ணிலவின் மீதே,
சொரிகின்ற காரிருள்போற் சோரும்—புரிகுழ
லைத், தாங்குந் தளருந் தழலே நெடிதுயிர்க்
கும், ஏங்குந் துயரோ டிருந்து.

121. She who supports her wavy tresses that loosened themselves on the soft mattress by her side, like the black darkness which sheds itself on the bright moon-light faints away by weariness, heaves a deep sigh with fiery breath, gasps and is overcome with grief.

(இ - ள்.) (அவள் இன்னும்) விரிகின்ற - பரவியிருக்கின்ற, மெல் அமளி - மெல்லிய படுக்கையின், வெள் நிலவின்மீது - வெள்ளை நிலாவின்மேல், சொரிகின்ற கார் இருள்போல் - பொழிகின்ற கரிய இருளைப்போல, சோரும் - அவிழ்ந்து விழுகின்ற, புரி குழலை - சுருளாயிருக்கின்ற கூந்தலை, தாங்கும் - சுமப்பாள்; தளரும் - தளர்வாள்; தழலே - நெருப்பாகவே, நெடிது உயிர்க்கும் - நீட்சியாக மூச்சு எறிவாள்; துயரோடு இருந்து - துன்பத்தோடிருந்து, ஏங்கும்-இரங்குவாள், எ-று. ஏ - அசை.

துயரோடு — இவ் ஒடு உருபு உடனிகழ்ச்சிப் பொருளைத் தாராமல் விசேஷணப்பொருளைத் தரும், துயருள்ளவளா யிருந்தாளென்பது கருத்து.

நெடிது உயிர்க்கும்—நெடிது - நெடுமையென்னும் பண்படியிற் பிறந்தபெயர், இங்கு வினையை விசேடித்தமையால் வினையுரிச்சொல், இதைக் குறிப்புமுற்று எச்சமாயிற்று எனினு மொக்கும்; அப்போதும் வினையுரியேயாம். இவ்வாறே சில செயவென்னெச்ச முதலியவைவையும் வினையை விசேடித்துவரின் வினையுரியேயாம், சொல்வகையிலே அவ்வவ் விதத்தைக் கொள்க. (௧௨௧)

122. உடைய மிடுக்கெல்லா மென்மேலே யோச்சி,
விடிய மிடுக்கின்மை யாலோ—கொடியன்மேல்
மாகாதல் வைத்ததோ மன்னவர்த மின்னருளோ, வேகாத தென்னோ விரா.

122. "Is it because the night has exhausted all its strength on me that it has not any strength remaining to dawn? or has it fixed its affections on the cruel king (Nala)? or is it the king's pleasure (that it should be so)? Why does not the night pass away?',

(இ-ள்.) உடைய மிடுக்கு எல்லாம் - தான் கொண்டிருந்த பலமெல்லாம், என்மேலே—, ஓச்சி - செலுத்தி, விடிய - விடிவதற்கு, மிடுக்கு இன்மையாலோ - பலம் இல்லாமையாலேயோ, கொடியன்மேல் - கொடியவனாகிய நளன்மேலே, மா காதல் வைத்ததோ - பெருங்காதலை வைத்ததனாலோ, மன்னவர் தம் - அந்த நளமகாராஜருடைய, இன் அருளோ - இனிமையானகிருபையினாலோ, என்னோ - எக்காரணத்தினாலோ, இரா—, வேகாதது - வெந்து போகாமலிருப்பது (விடியாமலிருப்பது) எ-று.

என் உடம்பின் வெப்பத்தால் வேகாத தெனினுமமையும். காதல் கொண்டவர் வேண்டியவனை யிழிவாகவும் உயர்வாகவும் சொல்வது இயல்பு. (௧௨௨)

123. மயங்குந் தெளியு மனநடுங்கும் வெய்துற்
றுயங்கும் வறிதேயுலாவும்—வயங்கிழையோய்

சோருந் துயிலுந் துயிலாக் கருநெடுங் கண்
ணீருங் கடைசோர நின்று.

123. Her mind becomes clouded, and then clears again; hea heart trembles through fear till exitement brings on vexation; and she paces up and down abstractedly; with her glittering jewels all gone, she dozes through exhaustions, while tears pour through the sleepless corners of her long black eyes.

(இ - ள்.) (அவள்) மயங்கும் - மயக்கம் அடைவாள்; தெளியும் - தெளிவு பெறுவாள்: மனம் நடுங்கும் - மனது சஞ்சலிக்கப் பெற்றிருப்பாள்; வெய்துஉற்று - தாபம்பொருந்தி, உயங்கும் - வருந்துவாள்; வறிதே - சும்மா, உலாவும் - திரிவாள்; வயங்கு - விளங்குகின்ற, இழை - ஆபரணம், போய் - விழும்படி, சோரும் - தளர்வாள்; துயிலா - தூங்காத, கரு நெடுங் கண் - கரிய நெடுமையான கண்களினுடைய, நீர் —, கடை - கண்நுனியில், சோரநின்று - பெருகும்படியிருந்து, துயிலும் - தூங்குவாள்போல் இருப்பாள், எ - று. உம் - அசை.

போய் என்பது செய்தெனெச்சத்தின் திரிபு. வெய்து — வெம்மை - பகுதி, து - பகுதிப்பொருள் விகுதி, மை கெட்டு முன்னின்ற மகரமெய் யகரமாகத் திரிந்தது. வெம்மை புள்ளை நோய் என்று பொருள் கொண்டால், து - உடைமைப்பொருளில் வந்த விகுதியென அறிக. (௧௨௩)

124. விழுது படத்திணிந்த வீங்கிருள்வாய்ப் பட்
டுக், கழுதும் வழிதேடுங் கங்குல்—பொழுதி
டையே, நீருயிர்க்குங் கண்ணோடு நெஞ்சுருகி
வீழ்வார்தம், ஆருயிர்க்கு முண்டோ வரண்.

124. During the night, whose increasing darkness has become (as it were) so solid and condensed that even Devils lose their way in it, is there any protection to the lust-fallen beings, whose eyes stream with tears, and whose hearts melt within them?"

(இ - ள்.) விழுதுபட - விழுது உண்டாகும்படி, திணிந்த - பலப்பட்ட, வீங்கு இருள்வாய்-வளர்ந்த இருட்டிலே, பட்டு - துன்பப்பட்டு, கழுதும் - பிசாசம், வழி தேடும் - வழியைத்

தேமேம்படியான, கன்குல் பொழுதிடையே; இராக்காலத்தில், நீர் உயிர்க்கும் கண்ணோடு - நீர் சொரியுங் கண்களோடுகின்ற, நெஞ்சு உருகி வீழ்வார்தம் - மனம் கரைந்து நிலைபெறமாட்டாத காமுகருடைய, ஆர் உயிருக்கும் - நிறைந்த உயிர்க்கும், அரண் - காப்பு, உண்டோ - இருக்கின்றதோ [இல்லை], எ-று. தம் - சாரியை.

ஆருயிர் - அருமையான உயிர் எனினுமாம். (௧௨௪)

125. பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுத மும் முகிழ்ப்பக், காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப—வாசம், அலர்ந்ததேங் கோதையா ளாழ்துயரத் தோடு, புலர்ந்ததே யற்றைப் பொழுது.

125 When the hands of the Brahmins were clasped together (in morning worship), and the water-lily had closed petals, when the inhabitants of the earth awoke from the sleep, and the lotus flower opened its eyes, the day dawned; and with the night departed the deep sorrow of the maiden who was adorned with fragrant honeyed garlands.

(இ - ள்.) பூசுரர்தம் - பிராமணருடைய, கைம்மலரும் - கைகளாகிய மலரும், பூ குமுதமும் - அழகிய ஆம்பல்களும், முகிழ்ப்ப - குவிய, காசினியும் - பூமியிலுள்ளோரும், தாமரையும் - கமலங்களும், கண் விழிப்ப - கண்திறக்க [மலர], வாசம் - பரிமளம், அலர்ந்த - பரவின, தேம் கோதையாள் - வண்டுமொய்த்த கூந்தலையுடைய தமயந்தியின், ஆழ் துயரத்தோடு - ஆழ்ந்த துன்பத்தோடு, அற்றைப்பொழுது-அன்றைக் காலம், [அவ்விரவு], புலர்ந்தது-நீங்கிற்று, எ-று. ஏ-அசை.

துயரோடு—ஓடு உருபு உடனிகழ்ச்சிப்பொருளைத் தராமல் விசேஷணப்பொருளைத் தரும்; துயருள்ளவளா யிருந்தாளென்பது கருத்து.

பொழுது விடிந்தது, தமயந்தி துயரமும் நீங்கிற்று என்பது கருத்து. பிராமணர் கைகூப்பிச் சூரியனைத்தொழுது அநுட்டானஞ் செய்வாராகலின் பூசுரர் கைம்மலரும் முகிழ்ப்பஎன்றார். குமுதமும் முகிழ்ப்ப எனுமிடத்துமகரம் விரித்தல்விகாரம். ஒப்புமைக்கூட்டவணியும் புணர்நிலையணியுங் கலப்பு. (௧௨௫)

126. வில்லி கணையிழப்ப வெண்மதியஞ் சீரிழப்பத்
தொல்லை யிருள்கிழியத் தோன்றினான்—வல்லி
மணமாலை வேட்டிடுதோள் வாளரசர் முன்னே
குணவாயிற் செங்கதிரோன் குன்று.

126. When the God of Love had laid aside his flower-tipped shafts, when the beauty of the pale moon had begun to wane, when the veil of primeval darkness was rent (by the sun's rays,) the golden-rayed sun rose into the east, before the broad-shouldered and sword girt sovereigns, who anxiously desired the marriage garland of the creeper-like maiden.

(இ - ள்.) வல்லி - கொடிபோன்ற தமயந்தியினது, மணமாலை - கலியாணமாலையை, வேட்டிடு - விரும்பியிருக்கின்ற, தோள் - தோள்களையுடைய, வாள் அரசர்முன்னே - வாளாயுதந் தரித்த ராஜாக்களுக்குமுன்னே, செங்கதிரோன்-செம்மையான கிரணங்களையுடைய சூரியன், குணவாயில் - கீழ்த்திசையில், குன்று - மலையில், வில்லி - கரும்புவில் ஏந்திய காமன், கணை அழப்ப - அம்புகளை இழக்கவும், வெண்மதியம், வெள்ளையான சந்திரன், சீர் இழப்ப - சிறப்பை இழக்கவும், தொல்லை இருள் - பழமையாகிய அந்தகாரம், கிழிய, நீங்கிப் போகவும், தோன்றினான் - உதயமானான், எ - று.

மதியம்—அம் - சாரியை. சூரியன் உதயமானபின் காமுகருக்குத் துன்பம் சிறிது தணியுமாதலின் வில்லிகணையிழப்ப என்றார். நளன் தோன்றியதுபோல் என்பது இங்கு குறிப்பு, (ஒட்டணி.) (௧உ௬)

127. முரசெறிந்த நாளேழு முற்றியபின் சொற்று,
வரைசெறிந்த தோண்மன்னர் வந்தார்—விரை
செறிந்த, மாலை துவள முடிதயங்க வாலவளை
யும், காலை முரசுங் கலந்து.

127. When the seven days were over which were appointed for the beating of the drums, victorious kings whose shoulders were like mountains, came with sweet smelling garlands flowing over their bodies, and crowns glittering on their heads, amid the mingled notes of the twisted conchs and the morning drums.

3897

(இ - ள்.) முரசு எறிந்த நாள் ஏழும் முற்றியபின் - சுயம்வரத்துக் கென்று பேரிகையடித்த ஏழுநாளுங் கிறைவேறின பின்பு, கொற்ற வரை செறிந்த தோள் மன்னர் - வெற்றிபொருந்திய மலையோடு ஒத்த தோள்களையுடைய அரசர், விரை செறிந்த - பரிமளஞ்சேர்ந்த, மாலை துவள - பூமாலைகள் அசைய, முடி தயங்க - கிரீடங்கள் விளங்க, வால் வளையும் - வெண்மையான சங்குகளும், காலை முரசம் - காலையில் அடிக்கத்தக்க பேரிகைகளும், கலந்து - சேர்ந்துநிற்க [சேர்ந்து ஒலிக்க], வந்தார் —, எ - று.

கலப்ப என்னும் எச்சம் கலந்து எனத்திரிந்தது. (௧௨௭)

128. மன்றலங்கார் மன்னர் நடுவணைய வந்திருந்தா
ன், கன்று குதட்டிய கார்நீல—முன்றில், குறு
விழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணி
ன், சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய்.

128. The king who performed penance for the side-long glances from the large eyes of the daughter of the king of the extensive country of Vidarpa, where the dark-hued water lilies, which are trampled upon by the calves, blossom before the doors of the houses, came in and occupied a middle seat in the assembly of kings who were decked with fragrant garlands.

(இ - ள்.) கன்று - (ஆண்) கன்றுகள், குதட்டிய - மிதிக்கப் பெற்றிருந்த, கார் நீலம் - கறுத்த குவளைமொட்டுகள், முன்றில் - வாசல்களிலே, குறு விழிக்கும் - சிறிது மலரப்பெற்ற, நேர் - செவ்வையான, நாடன் - ராச்சியமுள்ள பீமராஜனுடைய, கோதை - மகளாகிய தமயந்தியின், பெருங் கண்ணின் - பெரிய கண்களினுடைய, சிறு விழிக்கு - நுட்பமான பார்வைக்கு, நோற்று இருந்த - தவஞ்செய்திருந்த, சேய் - ராஜகுமாரனாகிய நளன், மன்றல் அம் தார் மன்னர் - வாசனைவீசும் அழகிய மாலைதரித்த அரசர்களுடைய, நடு - நடு இடத்தை, அணைய - பொருந்தும்படி, வந்திருந்தான் —, எ - று.

குறுவிழிக்கும் — குறுமையாக விழிக்கும் என விரித்து உரைத்துக்கொள்க. (௧௨௮)

129. நித்திலத்தின் பொற்றோடு நீலமணித் தோடாக
மைத்தடங்கண் செல்ல வயவேந்தர்—சித்தம்
மருங்கே வரவண்டின் பந்தர்க்கீழ் வந்தாள்
அருஞ்சேழ் மணிப்பூ ணணங்கு.

129. The dark shade of her jetty eyes changing into the hue of a sapphire the pearl set in her golden ear-ring, and the affections of the kings accompanying her as beetles, the maiden who resembled a nymph adorned with jewels set with rare-coloured gems, came under the Pandal.

(இ-ள்.) நித்திலத்தின் - முத்துக்களையுடைய, பொன் தோடு - பொன்னாலாய காதணிகள், நீல மணி தோடு ஆக - நீலகல்பதித்தகாதணி யாகும்படி, மை தடம் கண் - மைதீட்டிய விசாலமானகண்கள், செல்ல - செல்லுகையில், வயவேந்தர் சித்தம்-பலம்பொருந்திய அரசர்களுடைய மனம், வண்டின் - வண்டைப்போல், மருங்கேவர - பக்கத்தில் வர, அருசேழ் மணிப்பூண் - அருமையான நிறமுள்ள ரத்திநாபரணங்களைத்தரித்த, அணங்கு- தெய்வப்பெண்ணையொத்த தமயந்தி, பந்தர் கீழ் - பந்தலிலே, வந்தாள்—, எ - று.

பந்தல்—பந்தர் எனப் போலியாய் வந்தது. கண் காந்திபடவே முத்துக்கட்டிய பொன்னாபரணம குவளைபோற்றோன்றிய தெனவும் அதனைக்குறித்து மனமாகிய வண்டுகள் ஓடி வந்தன வெனவும் குறிப்பான கருத்து. யாவர் மனமும் அவள்முகத் தின்மே லிருந்தன என்றபடி. (௧௨௯)

130. பேதை மடமயிலைச் சூழும் பிணையான்போல்
கோதை மடமானைக் கொண்டணைந்த—மாதர்
மருங்கின் வெளிநுழைய மன்னவர்கண் புக்கு
நெருங்கினவே மென்மே னிறைந்து.

130. Like the does which surround the simple and elegent peacock were the damsels who surrounded the garland bedecked maiden (*ignorant deer*) while the eyes of the kings increasing in number, one above another, sought to catch a glimpse at her, by peeping through the openings left between the waists (of the maidens)

(இ-ள்.) பேதை மட மயிலை - பேதையான மடப்பம் பொருந்திய மயிலை, சூழும் பிணை மான் போல் - சூழ்ந்திருக்...

லின்ற பெண்மான்களைப்போல், கோதை மட மானை - மாலை யணிந்த மடப்பமுள்ள மானைப்போன்ற தமயந்தியை, கொண்டு அணைந்த மாதர்-இட்டுக்கொண்டுவந்த பெண்களுடைய, மருங்கின் வெளிவழியே-இடையினிடத்தில் காணப்படும் வெளியின் வழியாக, மன்னவர் கண் புக்கு-அரசர் கண்கள் புகுந்து, மேல்மேல் நிறைந்து - மேலேமேலே நிரம்பி, நெருங்கின - நெருக்கமாயின, எ - று, ஏ - அசை.

அவளைப் பெண்கள் பலர் சூழ்ந்து இருப்பதனால் பார்க்கப் பெறாமல் அப்பெண்களுடைய சிறந்த இடைக்கு இடையிலுள்ள சந்துகளால் பார்த்தார்கள் என்பது கருத்து. (௧௩௦)

131. மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே,
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்-மின்
னிறத்துச், செய்யதாள் வெள்ளைச் சிறையன்
னஞ் செங்கமலப், பொய்கைவாய்ப் போவதே
போன்று.

131. Like the bright-hued, red footed, white-feathered swan proceeding to the tank where the red lotus grows (**Damayanti**), who was as beautiful as a golden idol, proceeded to the marriage pandal where the eyes of the kings blossomed like the lotus flowers.

(இ - ள்.) மின் நிறத்து - மின்னலைப்போன்ற நிறத்தையுடைய, செய்ய-சிவந்த, தாள்-கால்களையும், வெள்ளை சிறை - வெண்மையான சிறகுகளையு முடைய, அன்னம் - அன்னப் பக்ஷி, செம் கமலப் பொய்கைவாய் - செந்தாமரைத் தடாகத்தில், போவது போன்று - போவதையொத்து, பொன்னின் மட பாவை - பொன்னாற்செய்த இளமைபொருந்திய பதுமை போன்ற தமயந்தி, மன்னர் விழி தாமரை பூத்த - அரசர்களுடைய கண்களாகிய தாமரைமலர்கள் பூத்திருந்த, மண்டபத்து - மண்டபத்தில், போய் புக்காள் - போய்ப் புகுந்தாள், எ - று. ஏகாரங்கள் - அசை.

மன்னர் விழித்தாமரை பூத்த என்பதற்கு ஏற்ப மண்டபத்தில் என்பதை மண்டபமாகிய தடாகத்தில் எனக் கொள்ள வேண்டும். இது ஏகதேச வுருவகம். (௧௩௧)

132. வடங்கொள் வனமுலையாள் வார்குழைமே லோடும், நெடுங்கட் கடைபார்த்து நின்றான் — இடங்கண்டு, பூவாளி வேந்தன்றன் பொன்னாவம் பின்னேயிட், டேவாளி நாணின்மே லிட்டு.

132. The lord of the flowered arrows hanging his golden quiver at his back, and fastening a row of arrows on his bow-string, chose a convenient spot, and stood there watching the corners of the eyes which glanced at the long tresses of the damsel, whose beautiful breasts were adorned with pearls.

(இ-ள்.) பூவாளி வேந்தன் - மலரம்புகளையுடைய மன்மதன், இடம் கண்டு - இடம்பார்த்து, தன் பொன் ஆவம் - தன்னுடைய அழகிய அம்புக்கூட்டை, பின் இட்டு - பின்னே கட்டி, ஏவாளி - அம்புகளின் வரிசையை, நாணின்மேல் இட்டு - வில்லின் வயிற்றின்மேல் சேர்த்து, வடம் கொள்வன முலையாள் - முத்துமாலைகளையணிந்த அழகுள்ள தனங்களையுடைய தமயந்தியின், வார் குழைமேல் - நீண்ட காதுகளின் மேல், ஓடும் - ஓடியிருக்கிற, நெடும் கண் கடை - நெடுமையான கண்களின் நுனிகளை, பார்த்து நின்றான் - எதிர்பார்த்திருந்தான், எ - று. ஏ - அசை.

குழல் என்கிற பாடம் பொருந்தாதென அறிக. அவள் கடைக்கண்பட்ட இடத்தில் காமன் அதிகமாய்ப் பாதிக்கும்படியிருந்தான் என்பது கருத்து.

133. மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியம்பணங்கு — முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டி
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. [னாள்

133. A goddess-like maiden of good disposition knowing all the chariot warrior kings, stood forward and pointed out to the matchless daughter of the garland-bedecked king (Bhima) each sovereign, describing at the same time the several characteristics of their respective families, titles, and fertile countries.

(இ-ள்.) இயல் அணங்கு - சற்குணமுள்ள தெய்வப்பெண் போன்ற ஒருத்தி, தேர் வேந்தர் தம்மை - தேர் ஏறிச்சண்டை

செய்யவல்ல அரசர்களை, தெரிந்து - அறிந்து, மன்னர் குலமும் - அந்தந்த ராஜாக்களுடைய வமிசங்களும், பெயரும் - நாமதேயமும், வளநாடும் - வளப்பமுடைய நாடும், இன்ன பரிசு என்று - இப்படிப்பட்ட தன்மையுள்ளன என்று, தார் வேந்தன் பெற்ற - வெற்றிமாலையையணிந்த வீமராஜன் பெற்ற, தனி கொடிக்கு - ஒப்பற்ற கொடிபோன்ற தமயந்திக்கு, முன் நின்று - எதிரில்நின்று, காட்டினாள் - காண்பித்தாள், எ - று.

காட்டு என்பது காண் என்னுந் தன்வினைமேற் பிறந்த பிறவினைப்பகுதி.

இயலணங்கு என்பதற்குச் சரசுவதியெனவும் பொருள் கொள்ளலாம். அது "காவலரைத் தன்சேடிகாட்ட" என்பதோடு ஒவ்வாமையின் பொருந்தாது. இயலணங்கு - இயற்றமிழுக்குரிய தெய்வப்பெண். (௧௩௩)

134. பொன்னி யமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்,
சென்னி தடவுந் திருநாடன்—பொன்னிற்,
சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரிற் றுன்னா
ர், கணங்கவிழ்ந்த வேலனிவன் காண்.

The king here introduced is the king of the Chola country.

134. O maiden, whose jewelled breast is resplendent with golden-hued spots! In this armed king before you, who destroys his enemies in the thick of battle, you see the possessor of the sacred country, where the wavelets formed by the waters of the Cauvery, cast their spray to the tops of the Arecanut palm trees.

(இ - ள்.) பொன்னின் - பொன்போல், சுணங்கு - தேமல், அவிழ்ந்த - விரிந்திருக்கப்பெற்ற, பூண் முலையாய் - ஆபரணந்தரித்த முலைகளையுடையவளே! சூழ் அமரில் - சூழ்ந்த யுத்தத்தில், துன்னார் கணம் - பகைவர் கூட்டம், கவிழ்ந்த - வீழ்வதற்கு ஏதுவான, வேலன் இவன் - ஆயுதமுடைய இவன், பொன்னி - காவேரி யாற்றினுடைய, அமுதம் - தண்ணீரினது, புது கொழுந்து - புதிய அலைதிவலைகள், பூ கமுகின் -

அழகிய பாக்குமரங்களினது, சென்னி - உச்சியை, தடவும் - வியாபிக்கும்படியான, திருநாடன்-செல்வம் பொருந்தியகாட்டின் அரசன், காண் - நீ பார், எ-று. காண் - அசையெனினு மொக்கும்.

இவன் சோழராஜன் என்பது கருத்து. எவரும் தமதுநாட்டை முந்திக்கூறுவது இயல்பு. (கஙச)

135. போர்வாய் வடிவேலாற் போழப் படாதோருஞ், சூர்வாய் மதாரிக்கட் டோகாய்கேள்—பார்வாய்ப், பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டால், திரித்தகோ விங்கிருந்த சேய்.

The king here referred to is பாண்டியன்.

135. O thou peacock-resembling maiden, whose red-lined eyes beaming with joy, captivate those who have escaped from the well-made lance on the battle field! listen:—this monarch you see is the king who once upon a time removed from its position one of the highest mountains in the world by (striking it with) a ball.

(இ-ள்.) போர்வாய் - யுத்தத்தில், வடிவேலால் - வடித்த வேலாயுதத்தினால், போழப்படாதோரும் - பிளக்கப்படாத வீரரும், சூர் - சுழலும்படியான, வாய் - வழியையுடைய, மதர் - களித்திருக்கின்ற, அரி - இரேகைகள் பொருந்தின, கண் - கண்களையுடைய, தோகாய் - மயில்போன்றவளே! கேள்—, இங்கிருந்த சேய் - இங்கே வீற்றிருக்கின்ற ராஜகுமாரன், பார்வாய் - பூமியில், பருத்து ஓர் - பருத்த ஒரு, மால் வரையை - பெரிய மலையை [மேருவை,] பண்டு-முன்பு, ஒரு கால் - ஒரு காலத்தில், செண்டால் - பந்தினால், திரித்த கோ - திரியச்செய்த அரசன், எ - று.

இவன் பாண்டியன் என்பதாம்: உக்கிரபாண்டியன் மேருமலையைச் செண்டால் அடித்துத் திருப்பினான் என்னுங்கதையைத் திருவிளையாடலில் காண்க. (கஙரு)

136. வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில்போற், குன்றருவி பாயுங் குடநாடன்—நின்

றபுகழ், மாதேயிவன்கண்டாய் மானத் தனிக்
கொடியின், மீதே சிலையுயர்த்த வேந்து.

The king here referred to is சேரன்.

136. O maiden of immortal fame! this king whom you see before you, whose matchless banner is adorned with the insignia of a bow is the sovereign of the country of Coorg, where the rivers flow from the mountains like the white flowing robes on the soft breasts of the warlike goddess of the earth.

(இ-ள்) நின்ற புகழ் - நிலைபெற்ற புகழையுடைய, மாதே - பெண்ணே! இவன்—, வென்றி நில மடந்தை - வெற்றிபொருந்திய பூமிதேவியினுடைய, மெல் முலைமேல் - மெல்லியமுலை என்று சொல்லத்தக்க கொல்லி மலையின்மேல், வெள் துகில் போல் - வெண்மையான உத்தரீயம்போல், குன்று அருவி பாயும் - மலையருவி பாயப்பெற்ற, குடநாடன் - குடநாட்டின், அதிபதியாகிய, மான தனி கொடியின் மீதே - பெருமையுள்ள தனித்த கொடிமரத்தின்மேல், சிலை உயர்த்த - வில்லை ஏற்றிவைத்த, வேந்து - அரசன், எ - று. கண்டாய் - அசை.

இவன் சேரராஜனென்பதாம். (கநகூ)

137. ஆழிவடி யம்பலம்ப நின்றானு மன்றொருகால்
ஏழிசைநூற் சங்கத் திருந்தானும் - நீள் விசும்பில்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானுங் கண்டாயிச் சேய்.

137. The king you see here is he who stood and washed his well-formed arrows in the deep, who at another time presided at the assembly of musicians, who acted as an ambassador to the Gods who live in the blue mountains, and who came off victorious at the great war of Mahabaratham.

(இ - ள்.) ஆழி - கடலில், வடி அம்பு - வடித்த அம்பை, அலம்ப - கழுவும்படி, நின்றானும் - நின்றவனும், அன்று ஒரு கால் - ஒருகாலத்தில், ஏழ் இசை நூல் சங்கத்து - ஏழுவகைச் சுரங்களை விளக்கும் சங்கீத சாஸ்திர சபையில், இருந்தானும் - தலைவனாய் இருந்தவனும், நீள் விசும்பில் - பெரிய ஆகாசத்தில் இருக்கின்ற, நல் தேவர் - நல்ல தேவதைகளுக்கு, தூது

நடந்தானும் - தூதுவனாகச் சென்றவனும், பாரதப்போர் செற்றானும் - பாரதயுத்தத்தை ஜயித்தவனும், இச்சேய் - இந்தக் குமாரன், எ - று.

கண்டாய் - அசை. பார்த்தாயா எனவும் பொருள் கூற லாம். இவ்வரசன் மதுரா நகரத்தை யாண்டுவந்த யதுவமி சத்தன்போலும்; இக்குலத்திற் கீர்த்திமானான கார்த்தவீரி யார்ச்சுன னென்பவன் நருமதாநதி சங்கமத் தண்டையில் இராவணனை மீட்கும்படிவந்த இராக்ஷதரைக்கொன்று கட லில் ஆயுதங் கழுவினனென்றும், நாரத முனிவருக்கும் விசு வாவசு என்னுங் கந்தருவனுக்கும் சங்கீதவாதம் நடந்தபோது சங்கத்தின் தலைவனா யிருந்தானென்றும் புராணத்திற் சொல் லிய கதை யொன்றுண்டு. அக்குலத்தானாகிய கண்ணன், தேவதைகளின் அமிசமாய்ப்பிறந்த பாண்டவருக்குத் தூது நடந்ததும் பாரதப்போரை வென்றதும் பாரததால் விளங் கும், அப்படிப்பட்டவருடைய குலத்திற் பிறந்தானை அப்படி யாகவே உபசரித்துச் சொல்வது உலகவியற்கை. கண்ணன் நளனுக்குப் பிற்காலத்தானாயினும் இக்கவிக்கு முற்பட்டவ னாகலின் முரனை நகரத்தையும் உக்கிரபாண்டியனையுங் கூறி யதுபோலக் கவிவழக்காய்க் கூறியதென்பது ஒருவகை. அல் லது அக்குலத்தில் ரஜீ என்பவ னொருவனைத் தேவதைகள் இந்திரன்விடுத்த தூதாகவந்து இட்டுக்கொண்டுபோய் அரக் கரைக் கொல்லுவித்தார்கள். இக்கதையையும் புராணங்க ளிற் காணலாம். அப்போது பொருள் செய்யவேண்டும் வகை யாதெனில், கற்றேவர் தூதாகவர நீள்விசும்பிற் சென்றானும், பார் அதம் போர் - பூமி நாச மாகத்தக்க யுத்தத்தைச் செயித் தவனும் என்பதாம். இவனையும் பாண்டியனென்று கொள் ளலாம்; ஆயினும், ௧௩௫ - ம் பாட்டோடு கூறியது கூற லாம். அனைனமாயும் யாதவரைச் சொல்ல வேறுபாட் டில்லையாம். (௧௩௭)

138. தெரியி லிவன்கண்டாய் செங்கழுநீர் மொட் டை, அரவின் பசுந்தலையென் றஞ்சி - இரவெல் லாம், பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புட் டாலாட்டும், வள்ளைக் குருநாடர் மன்.

138. If you enquire, you will recognize in the monarch you see before you, the king of the Curu country abounding with வள்ளை creepers, where the mother bird rocks to sleep its young ones, which, mistaking the bud of the water-lily for the green head of a serpent, becomes afraid and troubled during the whole night.

(இ-ள்.) தெரியில் - யோசித்தால், இவன்—, செங்கழுநீர் மொட்டை-செங்கழுநீரின் முகிழை, அரவன் பசு தலை என்று-பாம்பின் பசுமையான தலையென்று நினைத்து, அஞ்சி-பயந்து, பிள்ளைக் குருகு - பறவைக் குஞ்சு, இரங்க - துன்பப்பட, பேதை புள் - பெண் பக்ஷியானது, இரவெல்லாம்—, தாலாட்டும் - (அதற்கு அவ்வச்சம் தீரும்படி) தாலாட்டுகின்ற, வள்ளை-வள்ளையென்னுங் கொடிகளுள்ள, குருநாடர் மன் - குருநாட்டாருடைய அரசன், கண்டாய்—, எ - று.

பிள்ளைக்குருகு - அன்றிற்குஞ்சு அல்லது நாரைக்குஞ்சு என்னவுமாம். (கநஅ)

139. தேமருதார்க் காளை யிவன்கண்டாய் செம்மலர்
மேல், காமருசங் கீன்ற கதிர்முத்தைத்—தாம
ரைதன், பத்திரத்தா லேற்கும் படுகர்ப் பழ
னஞ்சூழ் மத்திரத்தார் கோமான் மகன்.

139. The youth who is decked with sweet smelling garlands is the son of the king of inhabitants of Muttra which is surrounded by meadows and fields, in which the lotus plant support on its leaf the glittering pearl which the beautiful conch drops on its flower.

(இ-ள்.) தே மரு தார் - வாசனைபொருந்திய மாலைதரித்த, காளை - யௌவன புருடனை, இவன்—செம்மலர்மேல் - சிவந்த பூவின்மேல், காமரு - விரும்பும்படியான, சங்கு—, ஈன்ற - பெற்ற, கதிர் முத்தை - பிரகாசமுள்ள முத்தை, தாமரை - தாமரைக் கொடியானது, தன் பத்திரத்தால் - தனது இலையினால், ஏற்கும் - தாங்கிக்கொள்கின்ற, படுகர் - பள்ளங்களையுடைய, பழனம் சூழ் - வயல்சூழ்ந்த, மத்திரத்தார் - மத்திர தேசத்தாருடைய, கோமான - அரசனுக்கு, மகன் - குமாரன், கண்டாய்—, எ - று. (கநகூ)

140. அஞ்சாயன் மானே யிவன்கண்டா யாலைவாய்,
வெஞ்சாறு பாய விளைந்தெழுந்த—செஞ்சாலிப்,
பச்சைத்தாள் மேதிக் கடைவாயிற் பாலொழு
கும், மச்சத்தார் கோமான் மகன்.

140. O maiden, resembling a beautifully colored deer! This prince is the son of the king of the inhabitants of மச்ச country where the milk flows out of the corners of the buffoloes' mouths as they chew the tender stalks of beautiful paddy, which spring up from being watered by the pleasant juice which flows out of the sugar-cane press.

மச்சதேசம்—Dinajpur and Rangpur. *One of the middle divisions of India.*

(இ-ள்.) அம் சாயல் மானே-அழகிய சாயலையுடைய பெண்ணே, இவன்—, ஆலைவாய் வெம் சாறு - ஆலையினிடத்தில் உண்டாகிற விரும்பும்படியான கருப்பஞ்சாறு, பாய - பாய்வதினாலே, விளைந்து எழுந்த - விளைந்து ஓங்கிய, செம் சாலி- செம்மையான சம்பாப் பயிர்களினுடைய, பச்சை தாள் - பசுமையான தாள்களினின்றும், மேதி கடைவாயில் - எருமைகளுடைய கடைவாயிலே, பால் ஒழுகும் - பாலொழுகுகின்ற, மச்சத்தார் கோமான் - மச்சநாட்டாருக்கு அரசனுடைய, மகன் - புத்திரன், கண்டாய்—, எ - று.

சாயலாவது ஐம்புலன்களாலும் அனுபவிக்கக்கூடிய ரூப முதலிய மேன்மையாம். (௧௪௦)

141. வண்ணக் குவளை மலர்வவ்வி வண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்தப் பைங்குவளை-உண்ணா
தருங்கடா நிற்கு மவந்திநா டாளும்
இருங்கடா யானை யிவன்.

141. This youth is the noble male elephant, who rules the country of Malwa where the buffaloe calves spare the tender kuvali flowers, their rapture, as they listen to the sweet tunes of the bees sucking the honey out of those flowers, preventing them from eating them.

அவந்தி—Malwa.

(இ - ள்.) இவன்—, வண்ணம் குவளை மலர் - அழகான நீலோற்பலப்பூவை, வவ்வி-கிரகித்து, [அதின் தேனையுண்டு,]

வண்டு - வண்டுகள், எடுத்த பண்ணில் - தொடங்கின பாட்டில், செவி வைத்து - காதைப் புகுத்தி, அப் பைங்குவளை-அந்தப் பசுமையான குவளைகளை, உண்ணாது - உண்ணாமல், அரு கடா - அருமையான எருமைக் கடாக்கள், நிற்கும் - நிற்கின்ற அவந்தி நாடு - மாளவ நாட்டை, ஆளும் - ஆளுகின்ற, இரு கடா யானை - பெருமையான ஆண் யானை போன்றவன், எ-து.

எருமைக்கடாக்களும் சங்கீதரசம் அறிந்தவையானால் அந்நாட்டார் எவ்வளவு சங்கீதரசிகர் என்பது கருத்து. இவ்வகையாக நாட்டின் வளப்பமும் மேன்மையும் பலவகைக்குறிப்பால் வர்ணிக்கப்பட்டுவருவதை முன்னும் பின்னும் உய்த்துணர்க.

142. விடக்கதிர்வேற் காளை யிவன்கண்டாய் மீனின்,
தொடக்கொழியப் போய்நிமிர்ந்த தூண்டில்—
மடற்கமுகின், செந்தோடு பீறித்தேன் செந்நெற்
பசுந்தோட்டில், வந்தோடு பாஞ்சாலர் மன்.

142. This youth who is armed with weapons bright and poisonous, is the king of the country of Punjab, where the fish-hook which is cast into the air (so swiftly) as to cause the bait to drop out of it, tearing the tender bark of the Arecanut Palm causes the honey to gush out and flow among the tender blades of beautiful paddy.

பாஞ்சாலம்=Punjab.

(இ-ள்.) விடம் கதிர் வேல் - விஷத்தையொத்த காந்தியுள்ள ஆயுதந்தரித்த, காளை - கட்டிளமை யுடையவனான, இவன்—மீனின் - மச்சங்களினது, தொடக்கு - அசுத்தம், ஒழிய - நீங்கும்படி, போய்—, நிமிர்ந்த - மேலோங்கின, தூண்டில் - தூண்டிலானது, மடல் கமுகின் - மடலோடுகூடிய பாக்குமரத்தின், செம் தோடு - சிவந்த பூவிதழ்களை, பீறி - கிழிக்க, தேன்-(அவற்றின்) தேனானது, செந்நெல் பசுதோட்டில் - செம்மையான நெற்பயிர்களின் பசுமையான குருத்திலைகளிலே, வந்து ஓடு - வந்து பாயப்பெற்ற, பாஞ்சாலர் - பாஞ்சால நாட்டாருடைய, மன் - அதிபதி, கண்டாய்—, எ-று.

விடக்கதிர்வேல்—விடக்கு அதிர் வேல் எனப்பிரித்து ஊன் அசைந்துகொண்டிருக்கின்ற வேல் என்றும் பொருள் கொள்ளலாம். (கசஉ)

143. அன்னந் துயிலெழுப்ப வந்தா மரைவயலில்
செந்நெ லரிவார் சினையாமை—வன்முதுகில்
கூனிரும்பு தீட்டுங் குலக்கோ சலநாடன்
தேனிருந்த சொல்லாயிச் சேய்.

143. O thou honey-speeched maiden! This prince is the sovereign of the excellent country of கோசலம் where the reapers who cut the good paddy in the field of beautiful lotus plants, sharpen their scythes of curved iron on the hard back of the dark-hued turtle, so as to disturb the slumber of the swans.

கோசலம்—*The province of Oudh.*

(இ-ள்.) தேன் இருந்த சொல்லாய் - தேனின் மதுரம் இருக்கப்பெற்ற வார்த்தை யுடையவளே! இச் சேய் - இந்த ராசகுமாரன், அன்னம் - அம்சபக்ஷிகளை, துயில் - தூக்கத்தினின்றும், எழுப்ப - எழுப்பும்படியாக, அம் தாமரை வயலில் - அழகான தாமரைகள் நிறைந்த கழனிகளில், செந் நெல் அரிவார் - செம்மையான நெற்கதிர்களை அரிகிற பள்ளர், சினை ஆமை - கருத்தரித்திருக்கிற ஆமைகளின், வன் முதுகில் - கடினமான முதுகின் ஓட்டில், கூன் இரும்பு - வளைவான இருப்பு ஆயுதங்களை, [அரிவாள்களை], தீட்டும் - கூர்செய்யப் பெற்ற, குல கோசல நாடன் - மேன்மையான கோசலநாட்டின் அரசன், எ - று.

பள்ளர் அரிவாளைத் தீட்டும் ஓசையால் அன்னந் துயிலெழும்படி யிருந்தது. (கசங)

144. புண்டரிகந் தீயெரிவ போல்விரியப் பூம்புகை
போல், வண்டிரியுந் தெண்ணீர் மகதர்கோன்—
எண்டிசையில, போர்வேந்தர் கண்டறியாப்
பொன்னாவம் பின்னுடைய, தேர்வேந்தன் கண்
டாயிச் சேய்.

144. The chariot-driving prince before you, who has never yet given the warlike kings of the eight corners of the earth an opportunity of seeing the golden quiver at his back, is the sovereign of the inhabitants of the well-

watered country of Magada, where the beautiful lotus flowers blossom with the glow of fire, and the bees fly about over them in swarms like curling smoke.

(இ - ள்.) எண் திசையில் - எட்டுத் திக்குகளிலும், போர் வேந்தர் - சண்டையில் வல்லவராகிய அரசர்கள், கண்டு அறியா - பார்த்தறியாத, பொன் ஆவம் - பொன்னாற் செய்த அம்புக்கூட்டை, பின் உடைய - பின்புறத்தி லுடையவனாகிய தேர் வேந்தன் - ரதாதிபதியான, இச்சேய் - இந்த ராசகுமாரன், புண்டரிகம் - செந்தாமரைகள், தீ எரிவபோல் - அக்கினி சொலிப்பதுபோல, விரிய - மலர, பூம் புகைபோல் - அழகிய புகைபோல, வண்டு—, இரியும்-(அவற்றின்மேல்) ஓடிக்கொண்டிருக்கிற, தெள்நீர் - தெளிந்த நீர்நிறைந்த, மகதயர்கோன் - மகத தேசத்தாருடைய அதிபதி, கண்டாய்—, எ - று.

இவன் புறங்காட்டாதவ னென்பது கருத்து. (கசச)

145. கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறித், தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால்—வான்கடல்வந், தந்தோ வெனவெடுக்கு மங்கநா டாளுடையான், செந்தேன் மொழியாயிச்சேய்.

145. O maiden, whose speech is as sweet as honey! This prince is the ruler of அங்கநாடு where the expansive sea with its wave-like hands comes with a loud mournful sound, and takes away the young one of the round conchs, which stumbles against the rock of creeping-coral, and falls into the honey-flowing estuary.

(இ - ள்.) செம்தேன் மொழியாய்-செவ்விய தேன்போன்ற சொல்லை யுடையவளே, இச்சேய்—, கூன் சங்கின் பிள்ளை - வளைவுள்ள சங்கின் குட்டியானது, கொடி பவளக் கோடு - கொடிய பவளத்தின் கொம்பில், இடறி - தடுக்கி, தேன் கழியில் - தேனுலாகிய கழியிலே, வீழ - விழும்போது, திரை கரத்தால் - அலையாகிய கையினால், வான் கடல்- பெரியசமுத்திரமானது, வந்து—, அந்தோ என - ஐயோ வென்றிரங்கி, எடுக்கும் - எடுக்காநின்ற, அங்க நாடு - அங்கதேசத்தை, ஆளுடையான் - ஆள்கின்றவன், எ - று.

146. வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப்-புள்ளோடு
வண்டிரியச் செல்லு மணிநீர்க் கலிங்கர்கோன்
தண்டெரியற் றேர்வேந்தன் றான்.

146. The chariot-driving king who is adorned with cool garlands is the sovereign of the inhabitants of the pearly-watered Kalinga where the white hued male வாளை fish arouse the buffaloe herd (in the water,) and these rushing into the jungle of honey-flowing lotus plants, tread upon them, and drive away the birds and bees.

(இ-ள்.) தண் தெரியல் - குளிர்ச்சியான மாலையை யணிந்த, தேர் வேந்தன்—, வெள் வாளை காளை மீன் - வெண்மையான வாளைகளென்கிற யவ்வனமுள்ள மீன்கள், மேதி குலம் - எருமைக் கூட்டத்தை, எழுப்ப - (வாலால் அறைந்து) எழுந்திருக்கச் செய்வதினாலே, (அவை) கள் வார்ந்த - தேன் ஒழுகுகின்ற, தாமரையின் காடு - தாமரை வனத்தை, உழக்கி - கலக்கி, புள்ளோடு - பறவைகளுடனே, வண்டு—, இரிய - ஓடும்படி, செல்லும் - போவதற்கு இடமாகிய, மணி நீர் - முத்தைப்போன்ற நீரையுடைய, கலிங்கர் கோன் - கலிங்க நாட்டாருடைய அதிபதி, எ - று. தான் - அசை.

மேதிக்குலம் எழுப்ப வாளைமீன் இப்படியாக எனவும் பொருள் கொள்ளலாம். "செய்வதாதி அறுபொருட் பெயரும் எஞ்ச நிற்பது பெயரெச்சம்" என்றமையின் செல்லுமென்பது நீர் என்னும் இடப்பெயரைக் கொண்டது. (கசகூ)

147. அங்கை வரிவளையாய யாழித் திரைகொணர்ந்த
செங்கண் மகரத்தைத் தீண்டிப்போய்-சங்கை
யிடைச், சேல்குளிக்குங் கேகயர்கோன் றெவ்
வாடற் கைவரைமேல், வேல்குளிக்க நின்று
ளிவ்வேந்து.

147. O thou whose beautiful hands are adorned with a row of bangles! This king who buries his lance in the mountain-like shoulders of his powerful adversaries, is the sovereign of the inhabitants of கேகயநாடு, where the sel-fish [சேல்] touching the red-eyed crocodile, which the

waves of the sea bring ashore, retreats into the waters of the Ganges.

(இ - ள்.) அம் கை வரி வளையாய் - அழகிய கையின்கண் வரிசையான வளையல்களை யுடையவளே, ஆழி திரை - கடலின் அலை, கொணர்ந்த - கொண்டுவந்து விட்ட, செங் கண் மகரத்தை - சிவந்த கண்ணுள்ள மகரமீனை [முதலையை,] தீண்டிப் போய் - பரிசித்துச் சென்று, சேல் - கெண்டைமீன்கள், கங்கையிடை - கங்கா நதியிலே, குளிக்கும் - அமிழ்கின்ற, கேகயர் கோன் - கேகய நாட்டாருடைய அரசன், தெவ் - சத்துருக்களுடைய, ஆடல் கை வரைமேல் - போர்வல்லமையுள்ள புசமாகிய மலையின்கண், வேல் - (தன்) ஆயுதம், குளிக்க அமிழும்படி, நின்றான் - நின்றவனாகிய, இவ்வேந்து - இவ்வரசன், எ - று.

வேந்து - எழுவாய்; கோன் - பயனிலை. (கஙஎ)

148. மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகு மன்னந் தனிக்கயிற்றில்—போநீள்
கழைக்கோ தையரேய்க்குங் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன்.

148. O maiden, whose tresses are like the clouds! This king is the sovereign of *காந்தாரம்* where the swans which walk on the valiei creeper, which grows in the deep large ponds, are like the female rope-dancers, who walk on a single rope, and who are able to play on long poles.

காந்தாரம்=Candahar.

(இ - ள்.) மழை கோதை மானே - மேகம்போன்ற கூந்தலை யுடைய பெண்ணே, இம் மன் - இவ்வரசன், மா நீர் நெடு கயத்து - மிகுதியான நீருள்ள பெரிய கசத்திலே, வள்ளை கொடிமீது - வள்ளையென்னுங் கொடியின்மேல், ஏகும் - செல்லுகின்ற, அன்னம் - அன்னங்கள், தனி கயற்றில் - தனிமையான கயற்றின்மேல், போம் - நடந்து போகின்ற, நீள் கழை கோதையர் - நீண்ட மூங்கிற்கெடை கட்டி யாடுந்தன்மையுள்ள தொம்பச்சிகளை, ஏய்க்கும் - ஒத்திருக்கும்படியான, காந்தார நாடன் - காந்தார நாட்டின் அரசன், எ - று. தான் - அசை.

149. அங்கை நெடுவேற்க ணாயிழையாய் வாவியின்
வாய், சங்கம் புடைபெயரத் தாள்கலங்கிச்—

செங்கமலப், பூச்சிந்து நாட்டேறல் பொன்வி
ளைக்குந் தண்பணைசூழ், மாச்சிந்து நாட்டானிம்
மன்.

149. O thou adorned with well-made jewels and possessing eyes like long lances held in the hand! This king is the sovereiegn of the great country of Scinde, where the shells in the tanks, moving about agitate the waters, and cause the lotus flowers to spill their fresh honey which water the golden paddy growing in the valley surrounding the countries.

(இ - ள்.) அங்கை நெடு வேல் கண் - அகங்கையிலுள்ள நெடுமையான வேல்போன்ற கண்களையுடைய, ஆய் இழையாய் - ஆராய்ந்து செய்த ஆபரணங்களை யுடையவளே, இம் மன்—, வாவியின்வாய் - தடாகங்களில், சங்கம் - சங்குகள், புடை பெயர - இடம் பெயர, கலங்கி - கலக்கமுற்று, செங் கமல பூ - செந்தாமரைப் பூவானது, சிந்தும் - சொரிகிற, நாள் தேறல் - புதியதேன், பொன்-பொன் போன்ற நெல்லை, விளைக்கும் - விளையச்செய்கிற, தண் பணை சூழ் - குளிர்ச்சியான கழனிகள் சூழ்ந்த, மா சிந்து நாட்டான் - பெரிய சிந்து நாட்டை யுடையவன், எ - று. தான் - அசை.

அங்கைபோலும் நெடுவேல்போலும் என்று இரண்டு உபமானமாயு முரைக்கலாம். (கசக)

150. காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்,
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்-பூவரைந்த,
மாசிலாப் பூங்குழலாண் மற்றவரைக் கண்ணுற்றின்,
றாசலா டுற்ற ளுளம்.

150. When her female slaves pointed out the king to her, the four gods assumed the form of Nala and stood among the kings; and the flowers bedecked pure and fair-haired maiden, on seeing those Gods became disturbed in her mind.

(இ - ள்.) காவலரை - அரசரை, தன் சேடி - தனக்குப் பணி செய்யுந் தோழியானவள், காட்ட-காண்பிக்க, கண்டு—, ஈர் இருவர் தேவர் - நால்வர் தேவதைகள், நளன் உருவாய் -

ளன் ரூபத்தைக்கொண்டு, சென்று இருந்தார் - (சபையில்) போயிருந்தார்கள்; பூ வரைந்த - மலர்சூட்டப்பெற்ற, மாசு இலா - குற்றம் இல்லாத, பூ குழலாள் - அழகான கூந்தலையுடைய தமயந்தி, அவரை கண்டு நின்று - அத்தேவர்களைப் பார்த்து, உளம் - மனமானது, ஊசல் ஆடு - ஊசலாடுவதுபோலச் சஞ்சலமாயிருக்குந் தன்மையைய, உற்றாள் - பொருந்தினள், எ - று. மற்று - அசை.

தேவர்—முன்கண்ட இந்திரன், அக்கினி, இயமன், வருணன் என்பவர்கள். (௧௫௦)

151. பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக் கால, நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்— நீணிலத்து, மற்றெவர் வாராதார் வானவரும் வந் திருந்தார், பொற்றேர் நள னுருவாய்ப் போந்து.

151. When they saw the maiden who was adorned with gold bracelets, and who lent additional beauty to her jewels, the strong minded kings lost all sense of modesty. Is it possible that any of the kings of the great earth should have been absent when even the heavenly beings came in the form of Nala, the possessor of the golden-chariot?

(இ - ள்.) பூணுக்கு - ஆபரணத்திற்கு, அழகு அளிக்கும் - அழகைத்தருகின்ற, பொற்றொடியை - தமயந்தியை, கண்டக்கால் - பார்த்தால், நாண் - வெட்கம், உகு - கெட்டு, நெஞ்சுடைய நல் வேந்தர் - மனவுறுதியுள்ள நல்ல அரசர், நீள் நிலத்து - பெரியபூமியில், வாராதார் - வராதவர், மற்றுஎவர் - மற்றும் யார்; வானவரும் - தேவர்களும், பொன் தேர் நளன் உருவாய் - பொன்னாற்செய்த தேரையுடைய நளமகாராஜன் ரூபமாக, போந்து - ஆகி, வந்திருந்தார்—, எ - று.

வாராத அரசர் யாரெனக் கூட்டிக்கொள்க, நெஞ்சுக்கு நாண் உடைய - மனதில் வெட்கங்கெட எனவுமுரைக்கலாம். "ஏ இருவழிக்கும்" என்றமையின் ஏவர் எனவந்தது. போந்து என்பது இங்கு அசையுமாகலாம். (௧௫௧)

152. மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மை சேர், கன்னியா ளுகிற் கடியாலே- அன்னந்தான்.

சொன்னவனைச் சூட்ட வருளென்றாள் சூழ்விதி
யின், மன்னவனைத் தன்மனத்தே வைத்து.

152. With her mind occupied with thoughts of the God of Fate, (Damayanti) said "If I am a virtuous maiden in the true family of Bhima who is adorned with shining garlands, grant that I may cast this fragrant garland on him, of whom the swan spoke.

(இ - ள்.) [அந்தமயந்தி] சூழ் விதியின் - சேர்ந்த விதிவசத்தால், மன்னவனை மகாராஜனை, தன் மனத்தே வைத்து - தன் இருதயத்தில் இருத்தி [நினைத்து] பின்னும் தார் வீமன் தன் - பிரகாசிக்கிற மாலையை யணிந்த வீமராஜனுடைய, மெய் மரபில் - சத்தியமுள்ள குலத்தில், யான் —, செம்மை சேர் - நற்குணஞ்சேர்ந்த, கன்னி ஆகில் - (பிறந்த) கன்னியாயிருப்பேனாகில், அன்னந்தான் சொன்னவனை - அன்னப்பக்ஷி சொன்ன அரசனுக்கு, கடி மாலை சூட்ட அருள் - மணமாலை சூட்டும்படி அருளவேண்டும், என்றாள் - என்று (தெய்வத்தைப்) பிரார்த்தித்தாள், எ - று.

விதியாவன நன்மை தீமைகள். அவற்றின் மன்னவன் - அப்பயனை யளிக்கின்ற கடவுளை எனப்பொருள் கொள்வதும் பொருந்தும். ஐயுருபு கோடற்பொருளில் வந்தது. (கருஉ)

153. கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் றோய்த
லால், வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னாள்,
அறிந்தா ணளன்றன்னை யாங்கு.

153. The maiden who resembled Lakshmi with the beautiful fore-head, who resides in the fragrant lotus flowers, discovered Nala by noticing his winking eyes, his earth-touching feet and his fading garland of beautiful flowers.

(இ - ள்.) நறு தாமரை விரும்பும் - சுகந்தமான தாமரை மலரை விரும்புகின்ற, நன்னுதலே அன்னாள் - இலக்குமியையொத்த தமயந்தியானவள், ஆங்கு - அவ்விடத்தில், கண் இமைத்தலால் - கண்கள் இமைகொட்டுதலாலும், அடிகள் காசினியில் தோய்தலால் - பாதங்கள் பூமியில் படிந்திருத்த

லாலும், வண்ண மலர் மாலை - அழகிய பூமாலை, வாடுதலால்-வதங்குவதினாலும், எண்ணி-யோசித்து, நளன் தன்னை அறிந்தாள் - நளனைத் தெரிந்துகொண்டாள், எ - று.

தேவதைகளுக்குக் கண்ணிமைத்தல் முதலிய இலக்கணங்கள் இல்லாமையால் அவர்களில் இவனைப்பிரித்து அறிந்தாள்.

154. விண்ணரசரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூற—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

154. When the maiden who resembled Lakshmi, cast the golden garland on the powerful king (Nala,) all the heavenly beings became ashamed and humbled in spirit while the wide world rejoiced, and the minds of the earthly sovereigns became clouded with jealousy.

(இ - ள்.) விண் அரசர் எல்லாரும் - சொர்க்கலோகத்துக்கு அரசராகிய இந்திரன்முதலான தேவர்யாவரும், வெள்கி - வெட்கப்பட்டு, மனம் சுளிக்க - மனம் சுருங்கிநிற்க, கண் அகல் ஞாலம் - இடம் விசாலமாகிய பூமியிலுள்ளோர், களி கூற - சந்தோஷ மிகுந்திருக்க, மண் அரசர்—, வன் மாலை - வலிய மயக்கத்தை, தம் மனத்தே சூட - தம் இதயங்களிலே பொருந்த, வய வேந்தை - பலமுள்ள நளமகாராஜனுக்கு, பொன் மாலை - பொன் மலராலாகிய மாலையை, சூட்டினாள் - சாத்தினாள், பொன் - இலக்குமிக்குச் சமானமான தமயந்தி, எ - று.

பிற அரசரும் ஓர்வயத்தில் ஓர் மாலை சூட்டினார் என்று கவி பரிகாச சாதுரியமாக் குறிப்பித்தார். (கருச)

155. திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்,
வெண்டா மரையாய் வெளுத்தவே—
ஒண்டாரைக் கோமாலை வேலான் குலமாலை
வேற்கண்ணாள், பூமாலை பெற்றிருந்த போது.

155. When the king who possessed a lance as bright and sharp as a diamond weapon, received the flowered garland at the hands of the maiden whose eyes were as lances, and who was as the garland of the family (of Bhima), the faces of the broad-shouldered and powerful

kings, which were like the red lotus, became as pale as the white lotus.

(இ-ள்.) ஒள் தாரை - பிரகாசமான கூர்மையை யுடைய, கோ - வச்சிராயுதத்தினது, மாலை - இயல்புள்ள, வேலான் - ஆயுதமுடைய நளன், குல மாலை - குலத்திற்குப் பூமாலை போன்ற, வேல் கண்ணாள்-வேல்போலுங் கண்களையுடைய தமயந்தியினது, பூமாலைபெற்று இருந்தபோது- பூக்களினாலாகிய மாலையை யடைந்திருந்த வளவில், திண் தோள் வய வேந்தர்-திடமான புஜபலமுள்ள அரசர்களினுடைய, செம் தாமரை முகம் - சிவந்த தாமரைமலரை யொத்திருந்த முகங்கள், போய் - மாறி, வெண் தாமரை ஆய்- வெண்மையான தாமரை போலாகி, வெளுத்த - வெள்ளையாயின, எ-று. ஏ-அசை.

தமயந்தி நளனை வரிக்கவே மற்ற அரசர் முகம் ஒளியிழந்தது என்பது கருத்து. மாலையென்பது மாறிமாறி வந்ததனால் சொற்பின் வருநிலையணி. (கருரு)

156. மல்லல் மறுகின் மடநாகு உடனாகச், செல்லு
மழவிடைபோற் செம்மாந்து — மெல்லிய
லாள், பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்
பட்டான், நன்மாலை வேலா னளன்.

156. Nala who was armed with a well-made lance, departed with his shoulders adorned with the golden garland of the soft maiden and hailed with joy like the young bull which parades the broad street in company with beautiful cows.

(இ-ள்.) நல் மாலை - நல்ல இயல்புடைய, வேலான் - வேலைத் தரித்தவனாகிய, நளன்—, மல்லல் - பெருமையுள்ள, மறுகில் - வீதியில், மடம் நாகு - மடப்பமுள்ள பசுவானது, உடன் ஆக - கூடச் செல்வதாயிருக்க, செல்லும் - நடக்கின்ற, மழ விடைபோல் - இளமையான விருஷபம்போல், செம்மாந்து - களிப்படைந்து, மெல் இயலாள் - மென்மையான சுபாவமுள்ள தமயந்தியினது, பொன் மாலை பெற்ற - பொன் மலர்மாலை யணிந்த, தோளோடு - புசத்தோடு, புறப்பட்டான்—, எ-று. உம் - அசை.

ஒடு உருபு இங்கு உபலக்ஷணம், அதாவது ஓர் விசேஷத்துக்குரியான பொருளில் வந்தது, ஆகவே அட்டமிட்டதோன் ஒரு விசேஷமாய்க் காண என்பதாம். காலு—இங்குத் தகுதியால் பசுவுக்குக் கொள்ளப்பட்டது.

செம்மார்த்து—செம்மா - பகுதி, இதன் செயவெனெச்சம் செம்மாப்ப; செயினெச்சம் செம்மாப்பின், செம்மார்த்தால். இப்படியே ஏமார்த்து, இறுமார்த்து முதலியவைகளுக்குங் கொள்க. இப்பகுதிகள் பிறவினை யாம்போது தவ்விகுதி பெற்று ஏமாத்து, இறுமாத்து, செம்மாத்து என்றும், ஏமாத்தினன், இறுமாத்தினன், செம்மாத்தினன் என்றிப்படி படைபெயரும் என அறிக. (௧௫௬)

157. வேலை தராவமுதம் வீமன் றிருமடந்தை
மாலை பெறாதகலும் வானவர்—வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியி லாக்
கும் இருங்கலியைக் கண்டா ரெதிர்.

157. The divinities, who were disappointed in not obtaining the garland from Bhima's pure daughter, who was like the ambrosia which could not be yielded by the sea, as they retired, saw before them the great Kali, who leads into wicked ways the inhabitants of this earth which is washed by the clear waters of the sea.

(இ - ள்.) வேலை தரா அமுதம் - கடல் ஈனாத அமுதமென்னும்படியான, வீமன் திருமடந்தை - வீமன்மகளுடைய, மாலை பெறாது - மணமாலையைப் பெறாமல், அகலும் - நீங்கிப் போகின்ற, வானவர் - தேவதைகள், வேலை பொரும் - கரையை மோதுகின்ற, கலி நீர் ஞாலத்தை - ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த பூமியிலுள்ளோரை, புன் னெறியில் ஆக்கும் - இழிவானவழியில் செலுத்துகின்ற, இரு கலியை - பெருமையான கலிபுருஷனை, எதிர் - எதிரிலே, கண்டார்—, எ - று.

கலிக்குப் பெருமையாவது இழிவில், எதிர்மறை யிலக்கணையால் தாழ்மையுமாம். (௧௫௭)

158. ஈங்குவர வென்னென் றியமரர்தங் கோன்வினவ
[illegible]

விருப்பான வீமன் திருமடந்தை யோடும்,
இருப்பான் வருகின்றேன் யான்.

158. On the king of the celestials asking him the cause of his coming there, Kali, the great propagator of evil, answered : "I have come to unite myself (in marriage) to the daughter of Bhima whom you have all desired."

(இ - ள்.) ஈங்கு வரவு என் என்று-இங்கே வருதல் என்ன காரணமென்று, இமையவர்தம் கோன் - தேவேந்திரன், வினவ - வினவ, தீங்கு தரு கலியும் - தீமை விளைக்கின்ற கலி புருடனும், நீங்கள் விருப்பான- நீங்களும் விரும்பும்படியான, வீமன் திருமடந்தையோடு - தமயந்தியோடு, இருப்பான் - மருவியிருப்பதற்காக, வருகின்றேன் யான் - நான் வருகிறேன் (என்று), செப்பினான் - சொன்னான், எ - று.

உங்களைப்போல் நானும் தமயந்தியைக் கலியாணஞ்செய்ய வந்தேனென்றான் என்பது கருத்து. உம் - அசை, பிரித்து யான் என்பதோடு கூட்டவுமாம்.

வினா என்பது "குறியதன் கிழாக் குறுகலும்" என்கிற [உயிர் புணரியல் உஉ - ம் - சூ] விதியினால் வின எனக் குறுகி அதனோடு உகரமேற்றது என்னவுமாம். (கருஅ)

159. மன்னவரில் வைவேல் நளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டான்—உன்னு
டைய, உள்ளக் கருத்தை யொழித்தே குகி
யென்றான், வெள்ளைத் தனியானை வேந்து.

159. The king, who possessed the matchless white elephant said (to Kali), 'Nala who possess the sharpest lance among the earthly kings, has obtained the marriage garland from the moon-faced virgin ; your intentions therefore being frustrated, you had better return."

(இ - ள்.) [அக்கலியைநோக்கி] வெள்ளை தனி யானை வேந்து - வெண்மையான ஒப்பற்ற ஐராவதம் என்னும் யானைக்கு அதிபதியாகிய இந்திரன், மன்னவரில் - அரசர்களுள், வை வேல் நளனே - கூர்மையான வேலுள்ள நளமகா

ராஜனே, மதி வதன கன்னி - சந்திரன்போன்ற முகமுள்ள தமயந்தியினுடைய, மண மாலை—, கைக்கொண்டான் - பெற்றான் (ஆதலின்,) உன்னுடைய—, உள்ளக்கருத்தை - மனதின் எண்ணத்தை, ஒழித்து - போக்கி, ஏகுதி - போ, என்றான்—, எ - று.

ஏகுதி—இதில் தி - ஏவலொருமை விகுதி எனக்கொள்ளுதல் நன்று. (கரு௫)

160. விண்ணரசர் நிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசர்க் கீந்த மடமாதின்—எண்ணம்
கெடுக்கின்றேன் மற்றவடன் கேள்வனுக்குங்
கீழ்மை, கொடுக்கின்றே னென்றான் கொதித்து.

160. (Hearing this, Kali) being displeased, said: "I shall destroy the intentions of the simple maiden who, when there were celestial kings present, bestowed the fragrant and honey-filled marriage garland upon an earthly king:—and moreover, I shall lower the pride of her husband."

(இ - ள்.) [அதுகேட்டுக்கலி] கொதித்து - மனஸ்தாபம் அடைந்து, விண் அரசர் நிற்க-தேவர்கள் இருக்க, வெறிதேன் மணம் மாலை - வாசனையுள்ள தேன் நிறைந்த மணமாலையை, மண் அரசர்க்கு ஈந்த - பூமி ராஜாக்களுக்குக் கொடுத்த, மடமாதின்-மடமையையுடைய தமயந்தியினது, எண்ணம் கெடுக்கின்றேன் - இஷ்டத்தை யழிக்கின்றேன், மற்று - மேலும், அவள் தன் கேள்வனுக்கும்-அவளுடைய கணவனுக்கும், கீழ்மை கொடுக்கின்றேன் - தாழ்மைவரும்படி செய்கிறேன், என்றான்—, எ - று.

இங்கு மடமாதென்றது, தாரதமியந் தெரியாதென இகழ்ந்தபடி. "வெறிதே" எனப்பாடமாயின், விண்ணரசர் வெறிதேநிற்க - பிரயோசன மில்லாமலிருக்க என்று பொருள் கொள்க.

கேள்வன்...கேண்மை என்னும் பண்படியாகிய கேள் - பகுதி, அன் - விகுதி, எ - சந்தி. "எகர விறுமுச்சுட்டின் முன்னர்" என்னுஞ் சூத்திரத்தில் "நெடியே" என்பதனால் அமைந்தது. கேண்மை - நேசம். (கசுO)

161. வாய்மையுஞ் செங்கோல் வளனு மனத்தின்கண்
தூய்மையு மற்றவன் றோள்வலியும்—பூமா
நெடுங்கற்பு மற்றவற்கு நின்றுரைத்துப் போனான்
அடுங்கொற்ற வச்சிரத்தா னாங்கு.

161. Indra, the possessor of the deadly diamond war-weapon, then related to Kali, the veracity, the justice, the purity of mind, and the strength of the shoulders of Nala as well as the great chastity of the maiden who resembled Lakshmi residing in the lotus, and then departed.

(இ - ள்.) அடும் கொற்ற வச்சிரத்தான் - கொல்கின்ற வெற்றிபொருந்திய வச்சிராயுதமுடைய இந்திரன், அவன் - அந்த நளனுடைய, வாய்மையும்-சத்தியத்தையும், செங்கோல் வளனும்-துரைத்தனச் சீரையும், மனத்தின்கண்-மனதிலுள்ள, தூய்மையும் - பரிசுத்தத்தையும், தோள்வலியும் - புஜபலத்தையும், பூ மா-பூவிலிருக்கும் திருமகள்போன்ற தமயந்தியினது, நெடு கற்பும் - பதிவிரதா நிலைமையையும், ஆங்கு - அவ்விடத்தில், அவற்கு - அந்தக் கலி புருடனுக்கு, நின்று உரைத்து - நிலைபெறச் சொல்லி, போனான் - (தன்னிடம்) சென்றான், எ - று. மற்று இரண்டும் - அசை.

நளனிடத்தில் உன் மிடுக்குச் செல்லாதென்று சொன்னா னென்பது கருத்து. பூமான் என்றும் பாடமுண்டு. பூமான் - பூமியென்றுரைப்பாருமுளர். (கசுக)

162. செருக்கதிர்வேற் கண்ணியுடன் றேர்வேந்தன்
இருக்கத் தரியே னிவரைப்—பிரிக்க [கூட
உடனாக வென்றா னுடனே பிறந்த
விடநாக மன்னான் வெகுண்டு.

162. (Hearing this) Kali, who resembled a serpent venomous from its birth, becoming enraged said: "I cannot bear to see this chariot-driving king united to the maiden whose eyes are like bright war-lances, you must allow me to separate these two.

(இ - ள்.) [இப்பேச்சைக்கேட்டு] உடனே பிறந்த-கூடவேயுண்டான, விடம்-விஷம்பொருந்திய, நாகம் அன்னான் - சர்ப்பத்தையொத்த கலிபுருடன், வெகுண்டு - கோபித்து, செரு-

யுத்தஞ்செய்யவல்ல, கதிர் - காந்தியுள்ள, வேல் - வேல் போன்ற, கண்ணியுட - கண்களையுடைய தமயந்தியோடு, தேர் வேந்தன்-ரதாதிபதியான நளமகாராஜன், கூடி இருக்க-கூடியிருப்பதை, தரியேன்-சகியேன், இவரை - இந்தத்சம்பதிகளை, பிரிக்க-பிரிப்பதற்கு, உடன் ஆக-நீ உடன்பட வேண்டும், என்றான் - என்றுசொன்னான் (இந்திரனோடு) எ - று.

செருக்கதிர்வே லென்பதை செருக்கு அதிர் வேல் எனப் பிரித்து அகங்காரத்தினால் சப்திக்கிற அல்லது அசைந்து கொண்டிருக்கிற வேல் என்றும் பொருள் கொள்ளலாம். உடனே என்பதற்கும் இந்திரன் பேச்சைக்கேட்டு உடனே கலியிப்படி என்றான் எனப் பொருளாகும். (௧௬௨)

163. வெங்கதிரோன் றானும் விதர்ப்பன்றிருமடந்தை
மங்கலநாட் காண வருவான்போல்—செங்குமு
தம், வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கு நன்னெஞ்
சில், தீயடங்க வேறினான் றேர்.

163. Even the burning rayed sun, like one coming to witness the marriage of the pure daughter of the king Vidarpa, appeared riding in his chariot, thus causing, (by its rays) the red water-lily to close its petals, and subduing the fire in the pure heart of the king and the creeper-like maiden.

(இ - ள்.) வெங்கதிரோன் தானும்-சூரியனும், விதர்ப்பன் திருமடந்தை - தமயந்தியினது, மங்கல நாள் காண-கலியாணதினத்தைப் பார்க்க, வருவான் போல் - வருகிறவன் போல், செம் குமுதம் - செவ்வல்லிகள், வாய் அடங்க - முகம் குவியவும், மன்னற்கும் - நளனுக்கும், வஞ்சிக்கும் - தமயந்திக்கும், நல் நெஞ்சில் - நல்ல மனதில், தீ அடங்க - விரகாக்கினி தணிந்துபோகவும், தேர் ஏறினான் - தன் இரதததின்மேல் ஏறினான், எ - று.

சூரியோதயமாயிற்றென்பது கருத்து. மங்கலநாண் என்று பாடமோதின் மங்கல சூத்திரத்தை யெனப் பொருள் கொண்டு விவாகத்துக்கு ஆகுபெயராக்கவேண்டும். தான் அசை.()

164. இன்னுயிர்க்கு நேரே யிளமுறுவ லெண்கின்ற
பொன்னழகைத் தாமே புதைப்பார்போல்—

மென்மலரும், சூட்டினார் சூட்டித் துடிசேரிடை
யாளைப், பூட்டினார் மின்னிமைக்கும் பூண்.

164. The maiden covered Damayanti with soft garlands as if wishing to conceal the beauty of her whose soft smile inspired her admirers with sweet life; and having thus covered her, they adorned with shining jewels the maiden whose waist was as small as that of a drum.

(இ - ள்.) இள முறுவலே - இளமையான நகைப்பே, இன் உயிர்க்கு நேர் - (ஆடவருடைய) இனிமையான உயிர்க்கு ஒத்தது, என்கின்ற - என்று சொல்லும்படியான, பொன் - திருமகள் போன்ற தமயந்தியினது, அழகை—, தாமே புதைப்பார் போல் - தாங்களே மறைப்பார்போல, மென் மலரும் - மெல்லிய மலர் மாலைகளையும், சூட்டினார் - தரிக்கச் செய்தார்கள்; சூட்டி - தரிப்பித்தபின், துடி சேர் இடையாளை - உடுக்கை வாத்தியத்தோடொத்த இடையையுடைய தமயந்தியை, மின் இமைக்கும் - மின்னல்போல் பிரகாசிக்கின்ற, பூண் - அணிகளை, பூட்டினார் - பூணச்செய்தார்கள், எ - று.

ஏகாரம் பிரித்து முறுவலோடு சேர்க்கப்பட்டது; அது பிரிப்பில் வந்தது. ஆகப் புன்சிரிப்பொன்றே உயிர்க்கு நிகரென்றால் ஏனைய அவயவங்கட்கு நிகரில்லை யென்பதாயிற்று. உயிரிற்சிறந்தபொருள் விலைகொடுக்க வேறில்லை. "கடன்மணெல்லாம் விலையோவென மிளிருங்கண்ணி" என்று ஆழ்வார் அருளிச்செய்தார். இளமுறுவல் என்பதை அன்மொழித் தொகையாகக்கொண்டு இன்னுயிர்க்குநேரே தமயந்தியென இசைப்பாருமுளர். அழகை நேரேகண்டால் திருஷ்டிதோஷம் தாங்கு மென்று மாலைகளாலும் அணிகளாலும் மறைத்தனாபோலும் என்று குறித்தார். (கசுச)

165. கணிமொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார்,
அணிமொழிக்கு மண்ணலவர்க்கும்—பணிமொழியார்,
குற்றேவல் செய்யக் கொழும்பொன்
னறைபுக்கார், மற்றெவரு மோவ்வார் மகிழ்ந்து.

165. On the day predicted by the astrologers, (king Bhima) celebrated the marriage between the sweet-speeched maiden and the renowned king; and the match-

less pair entered the apartment of burnished gold, while the obsequeous domestics performed little acts of service for them (as they passed)

(இ - ள்.) கணி மொழிந்த நாளில் - சோதிடசாஸ்திரி சொல்லிய நன்னாளில், அணிமொழிக்கும் - அழகான சொல்லையுடைய தமயந்திக்கும், அண்ணலவர்க்கும் - பெருமையையுடைய நளமகாராஜனுக்கும், கடி மணமும் செய்தார் - புதிய கலியாணமுஞ் செய்தார், (விதர்ப்பராஜன் முதலினோர்,) மற்று ஒருவரும் ஒவ்வார் - (தங்களோம் தாங்களே யல்லது) பிறர்யாரும் உபமான மாகமாட்டாத சிறப்புடைய அவ்விருவரும், பணிமொழியார் - வணக்கமான சொல்லையுடைய சேடிமார், குறு ஏவல் செய்ய - சிறிய ஏவற்றொழில்களைச் செய்துவர, மகிழ்ந்து - களித்து, கொழும் பொன் அறை - சிறந்த பொன்னாற்செய்த அறையை, புக்கார் - அடைந்தார்கள், எ - று.

கலியாண மானவுடனே தன்னிடஞ்சென்று சில சடங்கு செய்யும்படி சாஸ்திர மிருத்தலால் அறைபுக்கார் என்றார். கணி - கணிப்பவன், கணித்தல் - கிரகவோட்டத்தைக் கொண்டு காலத்தை யேற்படுத்தல். கடிமணம் - சிறப்பாகிய கலியாண மெனினுந்தகும். [உயிரியல் - கசு - ஆம் சூ.]

அண்ணலவர்க்கு—அண்ணல் (பெருமை) பகுதி, அன் - விகுதி, அ - சாரியை, வ் - உடம்படுமெய்; அண்ணலவன் என்றாக்கிக் குவ்வுருபேற்றாக. அண்ணலாகிய அவர்க்கு எனப் பண்புத்தொகையாகவுங் கொள்ளலாம். (கசுரு)

166. செந்திருவின் கொங்கையினுந் தேர்வேந்த னாகத்
தும், வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து—
வெந்தீயும், நஞ்சுந் தொடுத்தனைய காம மலர்
வாளி, அஞ்சுந் தொடுத்தா னவன்.

166. In order that they might pierce the heart of the maiden who resembled the accomplished Lakshmi, and the chest of the chariot-driving king, Cupid bending his bow, let fly his five flowered arrows which were as deadly as if they were charged with burning fire and poison.

இதுமுதல் காண்ட முடிவுவரையில் புணர்ச்சி வகை கூறப்படுகின்றது. இது மகாகாப்பியத்திற்

கூறவேண்டியதோர் பொருளாதலின், தண்டி யலங்காரம் அ - ம் சூத்திரம், மற்றவைகளையும் ஆங்காங்கு வர்ணித்திருப்பதை யறிந்துகொள்க.

(இ - ள்.) செம் திருவின் கொங்கையினும் - செம்மையான திருமகளையொத்த தமயந்தியின்தனங்களிலும், தேர்வேந்தன் ஆகத்தும்-நளமகா ராஜனுடைய மார்பிலும், வந்து உருவ - பிரவேசித்து உருவும்படி, வார் சிலையை - நீண்டவில்லை, கால் வளைத்து - நுனிகளோடு வளைத்து, வெம் தீயும் - வெப்பமான நெருப்பையும், நஞ்சும் - விஷத்தையும், தொடுத்தனைய - தொடுத்தாற்போலிருக்கிற, நாமம்- அச்சந்தருகிற, மலர்வாளி அஞ்சும்-ஐந்து புஷ்பபாணங்களையும், அவன் - அவ்வம்புகளை யுடைய மன்மதன், தொடுத்தான் - எய்தான், எ - று.

மன்மதன் அம்புகள் ஐந்தாவன—தாமரை, அசோகு, மா, சாதிமல்லிகை, கருநெய்தல் இவ்வைந்து பூவுமாம். பூவெல் லாம் அம்பாயினும் இவை சிறந்தவை என்றபடி. (கசுசு)

167. ஒருவ ருடலி லொருவ ரொதுங்கி
இருவரெனுந் தோற்ற மின்றி—பொருவெங்
கனற்கேயும் வேலானுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று.

167. He (Nala) whose war lance may be compared to burning fire and the maiden (Damayanti) each pressing so close to the other's body as not to appear two bodies, became united like water mixed with water.

(இ - ள்) பொரு - யுத்தஞ்செய்யத்தக்க, வெம் கனற்கு - வெவ்விய நெருப்புக்கு, ஏயும் - ஒத்திருக்கிற, வேலானும் - ஆயுதமுடைய நளனும், காரிகையும் - தமயந்தியும், ஒருவர் உடலில் - ஒருவருடைய தேகத்தில், ஒருவர் ஒதுங்கி - ஒருவர் லயப்பட்டு, இருவர் எனும் தோற்றம் இன்றி - இருவரென்கிற அறிவு இல்லாதிருக்கும்படி, புனற்கு-தண்ணீரில், புனல் கலந்தால் போன்று - தண்ணீர் கலந்ததையொத்து, சேர்ந்தார்—, எ - று. (கசுஎ)

168. குழைமேலுங் கோமா னுயிர்மேலுங் கூந்தன்
மழைமேலும் வாளோடி மீள—விழைமேலே

அல்லோடும் வேலா னகலத் தோடும் பொரு
தாள், வல்லோடுங் கொங்கை மடுத்து.

168. As her lance like eyes wandered from her ear-ornaments to the life of her husband and thence to her tresses which were like dark clouds, she with her breasts which excelled chessmen of conical shape, waged war against the breast of him, the bright rays of whose weapon cloud dispise even darkness, as her (lustful) desire increased.

(இ - ள்.) குழைமேலும் - காதுகளின் மேலும் அல்லது காதணிகள் மேலும், கோமான் உயிர்மேலும் - நளமகாராஜனுடைய பிராணன்மேலும், கூந்தல் மழைமேலும் - கூந்தலாகிய மேகத்தின் மேலும், வாள் ஓடி மீள - கண்ணாகிய வாளானது ஓடித் திரும்பும்படியாக, விழைமேல் - ஆசைப் பெருக்கத்தினால், அல் ஓடும் வேலான் - இருள் ஓடிப்போகத் தக்க காந்தியுள்ள ஆயுத முடைய அரசனது, அகலத்தோடு - மார்புடனே, வல் ஓடும் கொங்கை - சொக்கட்டான் காய் தோற்று ஓடும்படியான தனங்களை, மடுத்து - நெருக்கி, பொருதாள் - யுத்தஞ்செய்தாள் (தமயந்தி), எ - று.

ஒருவீரன் வாள்வீசி யானையைமுட்ட நெருங்கிப் போர் செய்தாற்போ லென்பது குறிப்பு. இது பெண்புணர்ச்சி. முன்புறச் தொங்கி யலையுமளகத்தை மழையென்றது. (கசுஅ)

169. வீரனக லச்செறுவின் மீதோடிக குங்குமத்
தின், ஈர விளவண்ட விட்டதே—நேர்பொருத,
காராரு மெல்லோதிக் கன்னியவள் காத
லெனும், ஓராறு பாய வுடைந்து.

169. The river of lust which flowed from the virgin with soft raven tresses who was engaged in this conflict, breaking its confines oveflowerd on the field-like breast of the hero (Nala) and there drying left a fragrance like that of the sandal-mixture.

(இ - ள்.) நேர் பொருத - நேரே புணர்ச்சிசெய்த, காராரும் மெல் ஓதி - கருமைநிறைந்த மென்மையான கூந்தலையுடைய, கன்னியவள் - தமயந்தியின், காதல் எனும் ஓர் ஆறு - ஆசையென்று சொல்லப்பட்ட ஒரு நதி, பாய உடைந்து - பாய்வதி

னால் மடையுடைந்து, வீரன் அகலம் செறுவின்மீது-வீரனாகிய நளனுடைய மார்பாகிய கழனியில், ஓடி - வெள்ளம் புரண்டு, குங்குமத்தின் ஈர இள வண்டல்-குங்குமச்சாந்தின் குளிர்ந்த இளவண்டலை, இட்டது - உண்டாக்கிற்று, எ - று. ஏ-அசை. குங்குமச்சாந்து அவன்மார்பில் வியர்வையால் நனைந்தது. (0)

170. கொங்கை முகங்குழையக் கூந்தன் மழைகுலை
யச், செங்கயற்க ணோடிச் செவிதடவ—அங்
கை, வளைபூச லாட மடந்தையுடன் சேர்ந்தான்,
விளைபூசற் கொல்யானை வேந்து.

170. The king who possessed the elephants which inflicted death in the raging battle, joined himself with that maiden while her breasts assumed a faded appearance, her cloud-like tresses were dishevelled, her red fish-like eyes sought her ears, and the bracelets on her beautiful hands rattled against each other.

(இ - ள்.) பூசல் விளை - சண்டையை விளைக்கின்ற, கொல் - கொல்லும்படியான, யானை-ஆனைச்சேனையையுடைய, வேந்து-நளமகாராஜன், கொங்கை முகம் குழைய - தனங்களின் முகங்கள் அடங்கவும், கூந்தல் மழை குலைய - மேகத்தோடொத்த அளகபாரம் அவிழ்ந்து விழவும், செம் கயல் கண் - சிவந்த மீன்போன்ற கண்கள், ஓடி—, செவி தடவ-காதுகளை யளாவவும், அம் கை வளை- அழகிய கையின்கணுள்ள வளையல்கள், பூசல் ஆட - ஒன்றோடொன்று தாக்கி யொலிக்கவும், மடந்தையுடன் - தமயந்தியுடனே, சேர்ந்தான், எ - று.

இஃது ஆண்புணர்ச்சி. (கஎ0)

171. தைய லளிர்க்கரங்க டன்றடக்கை யாற்பற்றி
வையம் முழுது மகிழ்தூங்கத்—துய்ய
மணந்தான் முடித்ததற்பின் வாணுதலுந் தானும்
புணர்ந்தா னெடுங்காலம் புக்கு.

171. After their marriage ceremony had been concluded by his grasping the tender hands of his bride in his broad palm, while joy reigned over the whole earth, the maiden with the bright forehead and himself enjoyed together for a long time.

(இ - ள்.) தையல் தளிர் கரங்கள் - தமயந்தியின் தளிர் போன்ற கைகளை, தன் தடம் கையால் பற்றி - தன்னுடைய விசாலமான கையிற்பிடித்து, வையம் முழுதும் - பூமியிலுள்ளோரெல்லாம், மகிழ் தூங்க - சந்தோஷம் நிலைத்திருக்க, தூய்ய மணம் - சுத்தமான கலியாணத்தை, முடித்ததன்பின் - நிறைவேற்றியபின்பு, வாணுதலும் தானும் - தமயந்தியும் தானும், புக்கு - தன்னிடஞ்சென்று, நெடு காலம் புணர்ந்தான் - நெடுங்காலஞ் சேர்ந்திருந்தான் (நளன்), எ - று.

காண்டமுடிவாதலால் தொகுத்துக் கூறினர். இங்கு நளன் தமயந்தியும் தானும் புணர்ந்தான் என்பது "தானுந் தேரும் பாகனும்வந்தென் னலனுண்டான்" என்பதுபோல் "திணைபால் பொருள்பல" என்கிற சூத்திரத்தினால் ஆண்பாலும் பெண்பாலும் விரவி ஒருமுடிபேற்றதெனக் கொள்க. [பொதுவியல் உஎ-வது சூத்திரம்,] தன்னிடமாவது தான்வந்திருக்கும் விடுதியிடம்.

தூய்ய—தூய்மை என்னும் பண்படி, தூய் - பகுதி, அ-பெயரெச்ச விகுதி; யகர மிரட்டியது சந்தி, குறிப்புப் பெயரெச்சம்; தூய்மை குறுகிற்றெனவுங் கொள்ளலாம். (கஎக)

சுயம்வரகாண்டம் முற்றிற்று.

இரண்டாவது.

கலிதொடர் காண்டம்.

கலிபுருடன் நளமகாராஜனைத் தொடர்ந்ததனு லாகிய சரித்திரம் கூறப்படுதலின் இக்காண் டத்துக்கு அப்பெயர் வந்தது.

காப்பு.

முந்தை மறைநூன் முடியெனலாந் தண்குருகூர்ச்
செந்தமிழ் வேத சிரமெனலாம்—நந்தும்
புழைக்கைக்கு நேயப் பொதுவர் மகளிர்க்கும்
அழைக்கைக்கு முன்செல் லடி.

The feet of Vishnu, which went to help before being invoked by the grieved elephant and the lovely shepherd matrons, may be called the crown of the Vedas, and the head of the Tamil Vedas (திருவாய்மொழி.)

(இ - ள்.) நந்தும் - துன்பப்பட்டுக் கொண்டிருந்த, புழைக் கைக்கும் - யானைக்கும், நேயம் - நேசமுள்ள, பொதுவர் மகளிர்க்கும்-இடையருடைய பெண்களுக்கும், அழைக்கைக்கு முன் - அழைப்பதற்கு முன்னாகவே, செல் அடி - சென்றபா தம், முந்தை - ஆதியிலுண்டான, மறை நூல் - வேதத்தின், முடி - கிரீடம், எனலாம் - என்றுசொல்லத்தகும்; தண் குரு கூர்-குளிர்ச்சியான திருக்குருகூரில் உண்டாகிய, செம்தமிழ்- செவ்வையான தமிழ்ப்பாஷையின் வடிவான, வேதம் - வேத த்தினது, சிரம் சிரசு, எனலாம்-என்று சொல்லத்தகும். எ-று.

அது எமக்குக் காப்பென்பது இசையெச்சம். இவ்விசேட ணங்களால் திருமாலின் திருவடி என்பது பெறப்படும். குரு கூரி லுண்டாகிய வேதம், சடகோபமுனிவரால் அருளிச்செய் யப்பட்ட திருவாய்மொழி முதலிய பிரபந்தங்கள். அடி—எழு வாய்; எனலாம் இரண்டும்—பயனிலை. எனலுக்கும் ஆம்என் றுரைத்துக்கொள்க. அடி - அடியை என இரண்டாம் வேற் றுமையிற கொண்டு, எனல் - என்று சொல்லுதல், ஆம் என்

ருயினும் கூட்டிக்கொள்க. அப்போது எனல் - எழுவாய், ஆம் - பயனிலை.

செக்கர் நெடுவானிற் றிங்க ணிலாத்துளும்பி
உக்கதெனச் சடைமே லும்பர்நீர்—மிக்கொழுகும்
வெள்ளத்தான் வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்பர்
உள்ளத்தா னெங்கட் குளன்.

He is to us a protection, upon whose tresses the water of the Ganges overflows like the moon-beams which shed themselves all over the red heavens, who resides on the silvery mountains (Kailasam) and who dwells in the hearts of true lovers.

(இ - ள்.) செக்கர் - சிவப்பான, நெடு வானில்-பெரிய ஆகாயத்தில், திங்கள்-சந்திரனுடைய, நிலா - காந்திவெள்ளமானது, துளும்பி-ததும்பி, [தத்தளித்து,] உக்கது என - பெருகியது போல, சடைமேல்—, உம்பர் நீர் - கங்கை, மிக்கு ஒழுகும் - மிகுந்து ஓடிவருகின்ற, வெள்ளத்தான் - பிரவாகத்தையுடையவனும், வெள்ளி நெடு கிரியான் - வெள்ளியினு லமைக்கப்பட்ட பெரிய கைலாசமலையை யுடையவனும், மெய் அன்பர் உள்ளத்தான் - மெய்யான பக்தியுள்ளவர்களுடைய மனதில் எழுந்தருளி இருப்பவனும் (ஆகிய சிவபெருமான்.) எங்கட்கு—, உளன் - (இரக்ஷகனாக) இருக்கின்றான், எ - று.

செந்நிறச்சடையின்மேல் வெண்ணிறக்கங்கை யொழுகுவது செவ்வானிடத்து நிலாவொழுகியது போலுமென்றுமின்றும், அந்தியில் நடனஞ்செய்யுங்காற் செவ்வானிற் றோன்றிய நிலவில் முடிதாக்க, ஒழுகிய அந்நிலவின் சாரமெனக் கங்கை யொழுக்கு குறிக்கப்பட்ட தென்றுயினும், அக்காலத்துச் செவ்வானளாவிய முடியின்கணுள்ள நிலாத்துடைத்து நீரே துளும்பியொழுகி யதுபோலு மக் கங்கை வெள்ளமெனக் குறிக்கப்பட்ட தென்றுயினும் கருத்துக்கொள்க. இது ஐயக்கலவையணி.

172. தவளத் தனிக்குடையின் வெண்ணிழலுந் தையல், குவளைக் கருநிழலுங் கொள்ளப்—பவளக்
கொழுந்தேறிச் செந்நெற் குலைசாய்க்கு நாடன்
செழுந்தேரி லேறினான் சென்று.

172. The king of the country, where the tender coral creeping upon the ears of beautiful paddy bear them down (with their weight), ascended his splendid chariot, while the bright shade of his matchless white umbrella, and the dark shade of the Kuvalai-like eyes of the maiden, cast themselves upon him.

(இ - ள்.) பவள கொழுந்து - பவளக்கொடியின் கொழுந்துகள், ஏறி—, செந்நெல் குலை - செவ்விய நெற்கதிர்களை, சாய்க்கும் - சாய்ந்துபோகச்செய்கிற, நாடன் - நிடதநாட்டையுடைய நளன், தவள தனி குடையின் - வெண்மையான ஒப்பற்ற குடையினது, வெள் நிழலும் - வெளுப்பான நிழலும், தையல் - தமயந்தினது, குவளை கரு நிழலும் - (கண்களாகிய) நீலோற்பலங்களுடைய கருமையான நிழலும், கொள்ள - தன்னைக்கொண்டிருக்க, சென்று—, செழு தேரில் - வேலைப்பாட்டு வளமுள்ள இரதத்தின்மீது, ஏறினன்—, எ - று.

தவளத் தனிக்குடையாவது முத்துக்குடை யென்பதாம். ஆகவே சந்திரனொளிபாயக் குவளைவாய்திறந்து ஒளியெறிப்பதுபோல என்னும் உவமை குறிப்பிக்கப்பட்டது. குடைமலர்த்திப் புறப்படவே தமயந்தி உடன்செல்லும் வேட்கைப் பெருக்கத்தால் கண்மலர்ந்து காதலனை நோக்கினள் என்பது கருத்து. இதனால் பிறந்தகத்துச் சிறிதும் பற்றிலளெனக் குறிப்பித்தாள் போலும். பவளக் கொழுந்தேறிச் செந்நெற் குலைசாய்க்குமென்பது நாட்டின் வளப்பமுணர்த்தியதனோடு, வீரத்தினால் மேற்சென்று வணங்காமுடி மன்னரையும் வணக்குமவ்வரசன்போலவே விளங்கியது அப்பவளக்கொடி யென்பதையுங் குறிப்பிக்கின்றது. இக்குறிப்பெல்லாம் பொருளாற்றலடியாக வுண்டான தொனிகள். இவற்றி னிலக்கண முதலியவைகளை யாமியற்றிய தண்டியலங்கார சாரத்திற் காணலாம்.

சாய்க்கும்—செய்யுமென் வாய்பாட்டுப் பிறவினைப்பெயரெச்சம்; சாய் - பகுதி, இதுவே தன்வினைக்குப்பகுதி, புடைபெயர்ச்சியில் முக்காலத்திலு முறையே மெல்லொற்று மிகுவதும், மிகாமையும், வகர இடைநிலை பெறுதலும், தன்வினைக்குறி.

(உ - ம்.) சாய்ந்தான், சாய்கின்றான், சாய்வான்.

வல்லொற்று மிகுதலும் பகர இடைநிலை பெறுதலும் பிறவினைக்குறி.

(உ - ம்.) சாய்த்தான், சாய்க்கின்றான், சாய்ப்பான்.

மாய், தோய், தேய், மேய், மீள், சேர், விரி, மறை, ஒழி, அழி, முடி, உடை, கரை, உறை, அவி முதலியவைகளு மிவ்வாறே.

ஏறினான்—இது பிறவினையாங்காலத்து ஓரொற்றுமிகுந்து ஏற்று, ஏற்றினான், ஏற்றுவான் முதலாக வரும்; உருகு, விலகு, ஆடு, பாடு முதலியவைகளு மிவ்வாறே யாம். (க)

173. மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்தடையப், பொங்கி யெழுந்த பொறிவண்டு—கொங்கோ, டெதிர்கொண் டணைவனபோ லேங்குவன முத்தின், கதிர்கொண்ட பூண்முலையாய் காண்.

173. Look, O thou whose beautiful breasts glitter with the sheen of pearls! when those maidens approach the fragrant flowers to pluck them, the spotted bees which rise up buzzing, fly against them, laden with honey as if wishing to embrace them, singing while.

[இப்பாட்டுமுதற்பதினான்கு பாட்டுகளால் தன்னுடன் வருபவர் வழியில் பூக்கொய்ததும் நீர்விளையாடியதும் நளமகாராஜன் தமயந்திக்குக் காட்டியதாகச் சொல்லுகிறார்.]

(இ - ள்.) முத்தின் கதிர்கொண்ட - முத்துமாலையின் காந்திகளை ஏற்றிருக்கிற, பூண் முலையாய் - அணிகளைத்தரித்த தனங்களை யுடையவளே! மங்கையர்கள் - பெண்கள், வாச மலர் - சுகந்தமான புஷ்பங்களை, கொய்வான் - பறிக்கும்பொருட்டு, வந்து அடைய-வந்துசேர, பொங்கி எழுந்த - உயர்ந்து எழுந்திருந்த, பொறி வண்டு - புள்ளிகளையுடைய வண்டுகள், கொங்கோடு - தேனோடு, எதிர்கொண்டு—, அணைவன போல் - சேர்கின்றவைபோல், ஏங்குவன-ஒலிக்கின்றன, காண்-பார், எ-று.

மேலானவர் வருங்கால் அங்குற்றோர் காணிக்கை கொண்டு எதிர்வந்து பிரார்த்தித்தல் போலுமெனக் கருத்துக்கொள்க.

174. பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே,
பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு—மேவி
யவர், பொன்னடியிற் றாழ்ந்தனவே பூங்குழ
லாய் காணென்றான், மின்னெடுவேற் கையான்
விரைந்து.

174. "See quick, O thou fair haired one!" exclaimed he who holds in his hand a long glittering lance—"Who is there who will not bow in submission at a female touch? Even the flowered stalk, at the touch of a woman, bends and falls down at her beautiful feet."

(இ - ள்.) மின் நெடு வேல்கையான்-ஒளிபொருந்தியபெரிய வேலேந்திய கையையுடைய நளன், பாவையர் - பெண்கள், கைதீண்ட - கையினாற் பரிசிக்க, பணியாதார் - வணங்காதவர்கள், யாவரே - யார், பூவையர் - நாகணவாய்ப் புட்களுக்குச் சமானமாகிய ஸ்திரீகள், கை தீண்டலும்-கையினால் தீண்டின வுடனே, அ பூ கொம்பு - அந்தப் பூவுள்ள கிளைகள், மேவி - பொருந்தி [விரும்பி,] அவர் பொன் அடியில் - அப் பெண்களினுடைய அழகான பாதங்களில், தாழ்ந்தனவே - வணங்கி யிருக்கின்றனவே, விரைந்து - துரிதப்பட்டு. காண் - பார், பூங்குழலாய் - மலர் சூடிய கூந்தலை யுடையவளே! என்றான்—, எ - று.

மலர்கொய்தவுடன் அக்கொம்பு நிமிர்ந்துபோ மாதலால் விரைந்து காண் என்றான். ஏகாரம் தேற்றப் பொருட்டாய்க் காரியநிறைவேறி யிருக்கின்ற தென்னுங் கருத்தைக் காட்டுகின்றது. முற்பாட்டிலும் இங்ஙனமே கொள்க. கையான் என்பதை மூன்றாம்வேற்றுமையாக் கொண்டு கையினாற் காட்டினான் எனவுங் கொள்ளலாம். (௩)

175. மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்
தைப், பங்கயமென் றெண்ணிப் படிவண்டைச்—
செய்கையால், காத்தாளக் கைம்மலரைக் காந்த
ளெனப் பாய்தலுமே, வேர்த்தாளைக் காணென்
றான் வேந்து.

175. "Look at that terrified maiden" said the king- the bee mistaking the bright countenance of that, flower gathering damsel for a lotus, comes to alight on it; and when she raises her rosy hand as a protection, mistaking that flower-like hand for a kantal blossom, it flies against it."

(இ - ள்.) மங்கை ஒருத்தி-ஒருபெண், மலர் கொய்வாள்-பூப்பறிப்பவளாகி, வாள் முகத்தை - (நீரில் தோன்றும்) பிரகாசமுள்ள தன்முகத்தை, பங்கயம் என்று எண்ணி- தாமரை மலரென்று நினைத்து,படி வண்டை - (அம்முகத்தின்கண்)படியும்வண்டை, செம்கையால்-சிவப்பான கையினால், காத்தாள்-படியவொட்டாமல் தடுத்தாள்; அ கை மலரை - அந்த மலரொத்த கையை, காந்தள் என - காந்தட் பூவென்றுநினைத்து, பாய்தலுமே - (அவ்வண்டு) பாய்ந்தவுடனே, வேர்த்தாளை - (அச்சத்தினால்) வியர்வை கொண்டிருக்கிற பெண்ணை, காண்-என்றான் - பார் என்றான், வேந்து - நளமகாராஜன், எ - று.

கைம்மலர் முகபங்கயம் முதலிய விடத்து மலர்முதலிய உவமானப்பொருள் பின்னிற்பினும் பொருளொக்கத்தால் உவமைத் தொகையாகக் கொள்க. இப்படிப்பட்ட தொகைநிலைத் தொடரை "உபமா ஞோத்தர பதகர்ம தாராய சமாசம்" என்பர் வடநூலார். தமிழருக்கு இது இலக்கணப் போலியாம். கையாகிய மலர் எனவேண்டுமிடத்துப் பண்புத்தொகையாகக் கொள்க.

எண்ணி—இந்தவினையெச்சம் படி என்னும் வினைத்தொகையைக்கொண்டது. பாய்தலும் — இவ்வினையெச்சம் வேர்த்தாள் என்கிற வினையாலணையும் பெயரைக் கொண்டது. (ச)

176. புல்லும் வரிவண்டைக் கண்டு புனமயில்போல்
செல்லு மடந்தை சிலம்படவித்து—மெல்லப்
போய், அம்மலரைக் கொய்யா தருந்தளிரைக்
கொய்வாளைச், செம்மலரிற் றேனே தெளி.

176. "O thou that art as sweet as the honey in the beautiful flower! Look at the maiden whose gait is like that of the wild peacock, who seeing the copulating striped bees, silencing her ankle ornaments, approaches slowly,

and without plucking that flower, breaks off the tender stalk by its side."

(இ-ள்.) செம்மலரில் தேனே- செவ்விய பூவினிடத்துள்ள தேன்போன்ற பெண்ணே, புல்லும் வரி வண்டை - புணர்கின்ற ரேகைகளுள்ளவண்டை, கண்டு - பார்த்து, புனமயில் போல் - காட்டிலுள்ள மயில்போல், செல்லும் மடந்தை-நடக்கின்ற தன்மையுள்ள பெண், சிலம்பு அவித்து-சிலம்பு ஓசையை நிறுத்தி, மெல்ல போய் - மிருதுவாகப் போய், அம்மலரை தொய்யாது - அப்பூவைப் பறியாமல், அரு தளிரை கொய்வாளை - அருமையான துளிர்களைப் பறிக்கின்ற பெண்ணை, தெளி - அறி, எ - று.

செம்மலரிற்றேன் இலக்குமி என்னவுமாம். புல்லுங்கால் இடையூறு நேரிடின் உண்டாம் வருத்தமறிந்தவளானதுபற்றிச் சிலம்பவித்து மெல்லச் சென்றாள்.

தெளி—இப்பகுதி அறிவுசுத்தம் முதலிய பொருளை யுணர்த்துங்கால் தன்வினையில் கரை முதலானவை போலவும், சிந்துதல் முதலான பொருளை யுணர்த்துங்கால் பிறவினையில் அவைபோலவும் வரும். (உ-ம்.) தெளிந்தான், தெளித்தான், பிறவினையானபோது முன்னது தெளிவித்தானென விவ்விகுதி சேர்ந்தும், பின்னது தெளிப்பித்தானென பிவ்விகுதி சேர்ந்தும் வரும். தொழிற்பெயரிலும் தெளிவு, தெளிதல், தெளிப்பு, தெளித்தல் இவ்வாறுவரும். துணிவு முதலியவு மிப்படியே. ()

177. கொய்த மலரைக் கொடுங்கையி னாலணைத்து,
மொய்குழலிற் சூட்டுவான் முன்வந்து—தையலாள்,
பாதார விந்தத்தே சூட்டினான் பாவையிடைக்,
காதார மில்லா தறிந்து.

177. He who collects together in his folded arms the plucked flowers, and comes before her with the intention of entwining them in her thick tresses, knowing that the waist of the maiden possesses no support in itself, casts them at the lotus-like feet of that maiden.

(இ-ள்.) கொய்தமலரை - பறித்தபூவை, கொடு கையினால்- உட்புறம் வளைந்த கையினால், அணைத்து - சேர்த்து, மொய்

குழல்-நெருங்கிய கூந்தன்முடியில், சூட்டுவான் - சூட்டுதற்கு, முன்வந்து-எதிரில்வந்து,பாவைஇடைக்கு - பெண்ணினுடைய இடுப்புக்கு, ஆதாரம் இல்லாது -(தாங்கும்) ஆதாரம் இல்லாமையை, அறிந்து - தெரிந்துகொண்டு, தையலாள் - அப்பெண்ணினுடைய, பாத அரவிந்தத்தே - தாமரைபோன்ற பாதங்களிலே, சூட்டினன் - வைத்தான், எ - று.

இங்கு மொய்குழல் என்பதை முன்புறம் வளைத்து முடிந்திருக்கும் ஒருவகை மயிர்முடியெனக் கொள்க. எதிரில் வந்து தனபாரங் காண்கையால் இப்பூச் சுமையுஞ் சேரின் இடைக்கு அபாயம் நேரிடுமெனக் கருதிப் பாதத்திற் சூட்டினன் என்பது கருத்து. அம்மலர்கள் அவள் பாதாரவிந்தத்து விழுந்து கிடக்கப்பாலன வெனக் கருதினு னெனவுங் கொள்க. (சு)

178. ஏற்ற முலையார்க் கிளைஞ ரிடும்புலவித்
தோற்ற வமளியெனத் தோற்றுமால்—காற்ற
சைப்ப, உக்க மலரோ டுகுத்தவளை முத்தமே
லெக்கர் மணன்மே லிசைந்து.

178. The mound of sand upon which the flowers shaken by the trees by the blowing of the wind fall, mixed with the pearls produced by the shells, is like the bed &c."

(இ-ள்.) காற்று அசைப்ப- காற்று அசையச் செய்வதினால், உக்க - உதிர்ந்த, மலரோடு—, வளை உகுத்த-சங்குகள் ஈன்ற, முத்தம்-முத்துக்கள், மேல் இசைந்து-மேலேசேர்ந்து (இருத்தலின்), எக்கர் - எக்கலாகிய, மணல் - மணற்பரப்பு, ஏற்ற முலையார்க்கு - பெண்களுக்கு, இளைஞர் - பருவமுள்ள ஆண்மக்கள், இடும் - செய்த, புலவி-ஊடலினால், தோற்றம் - உண்டாதலையுடைய, அமளி என - படுக்கைபோல், தோற்றும் - காணப்படும், எ - று. ஆல் - ஏ - அசை.

தடாகதீரங்களில் மணற்பரப்பின்மேல் பூவும் முத்தும் சேர்ந்திருப்பதைப் பார்க்க, கூடியிருக்கையில் ஆண்மக்கள் செய்யாதொருதவறுகண்டு பிணங்கின பெண்கள் பூக்களையும் முத்துக்களையும் கழற்றி யெறிந்துபோன படுக்கைபோலிருந்த தென்பது கருத்து. ஏற்றமுலையார் என்பதற்குத் தகுதியான தனங்களை யுடையார் எனவும், முலைகளைத் தாங்கினவர்கள்

எனவும் பொருள் கொள்ளலாம். எக்கலாவது வெள்ளம் ஏறியபோது படிந்தமணல்.

தோற்றும்—தோன்று-பகுதி, இது தோன்றும் என இயல்பாய் வருவதுமன்றித் தோற்றும் என வலிந்தும் வரும். இப்படியே நினை, ஒளிமுதலிய சிலபகுதிகளும் யாதொருபொருள் வேற்றுமையு மின்றி, நினைந்தான் நினைத்தான், ஒளிந்தான் ஒளித்தான் என வல்லொற்றும் மெல்லொற்றுமாய் வரும். ஒளித்தான் என்பது பிறவினையுமாம். இப்படி வினைகள் பல வகை யிருப்பதைக் காண்க. (எ)

179. அலர்ந்த மலர்சிந்தி யம்மலர்மேற் கொம்பு
புலர்ந்தசைந்து பூவணைமேற் புல்லிக்—கலந்
தொசிந்த, புல்லென்ற கோலத்துப் பூவைய
ரைப் போன்றதே, அல்லென்ற சோலை யழகு.

179. "The beauty of the dark grove in which the dried branches wave over a full-blown flowers, which fall from the trees, is like the faded beauty of the exhausted maiden as she lies .... on her bed of flowers".

(இ-ள்.) அலர்ந்த மலர் சிந்தி - மலர்ந்தபூக்கள் உதிர்ந்து கிடக்க, அம் மலர்மேல் - அந்த புட்பங்களின்மேல், கொம்பு - இளங்கிளை, புலர்ந்து - வாடி, அசைந்து - அசைந்து கொண்டிருப்பதினால், அல் என்ற சோலை அழகு - இருள் என்று சொல்லத்தக்க தோப்பின் அழகானது, பூ அணைமேல் - புஷ்ப சயனத்தின்மேல், புல்லி கலந்து- தழுவிப்புணர்ந்து, ஒசிந்த - வாடியசைந்த, புல் என்ற - ஒளியழுங்கின, கோலத்து - அழகுடைய, பூவையரை போன்றது - பெண்களை ஒத்திருந்தது, ஏ - று. ஏ - அசை.

சிந்தி, அசைந்து, என்பன சிந்த, அசைய, என்னுஞ் செயவனெச்சத்தின் திரிபு; அல்லது சிந்தி என்பது சினையவினையாதலின் அசைந்து என்பதைக் கொண்டது எனவும், அசைந்து என்பது [இருத்தலால்] என்னும் வருவிக்கப்பட்ட தொழிற்பெயரைக் கொண்டதெனவும் அறிக. (அ)

180. கொங்கை முகத்தணையக் கூட்டிக் கொடுங்கை
யால், அங்கணைக்க வாய்நெகிழ்ந்த வாம்பற்பூ—
கொங்கவிழ்தேன், வார்க்கின்ற கூந்தன் முகத்
தை மதியென்று, பார்க்கின்ற தென்னலாம் பார்.

180. "Look" said the king "we may say that the full blown water lilies, which that maiden gathers together in her folded arms, and presses against her breasts, mistake the face of the maiden, whose tresses drip with fragrant honey, for the moon (and therefore blossom)

(இ-ள்.) கொங்கை முகத்து-தனங்களின் முன்புறத்திலே, அணைய - சேரும்படி, கூட்டி - சேர்த்து, கொடு கையால் - முன்வளைந்த கையினால், அணைக்க - கட்டிக்கொள்ள, வாய் நெகிழ்ந்த - மலர்ந்த, ஆம்பல் பூ—, கொங்கு அவிழ் - வாசனை வீசப்பெற்ற, தேன் வார்க்கின்ற - தேனைவார்க்கின்ற, கூந்தல் - தலைமயிருள்ள பெண்ணின், முகத்தை—, மதி என்று - சந்திரனென்று, பார்க்கின்றது - நினைக்கின்றது, என்னலாம் என்று சொல்லலாம், பார்—எ - அங்கு - அசை. (க)

181. கொய்த குவளை கிழித்துக் குறுநுதன்மேல்
எய்தத் தனிவைத்த வேந்திழையாள்—வையத்
தார், உண்ணாக் கடுவிடத்தை யுண்ட வொரு
மூன்று,கண்ணனைப் போன்றனளே காண்.

181. "She, the maiden adorned with pendent jewels, who breaks off the plucked kuvalai, and places it all by itself in her small forehead, resembles the three-eyed Siva who swallowed the rank poison, which no earthly being could swallow."

(இ-ள்.) கொய்த குவளை - பறித்த கருநெய்தற்பூவை, கிழித்து—, குறு நுதல்மேல்-சிறிய நெற்றியின்மேல், எய்த - சேரும்படி, தனி வைத்த - தனியாகவைத்த, ஏந்திழையாள் - பெண், வையத்தார் - உலகத்திலுள்ளோர், உண்ணா-உண்ணாத

கடு விடத்தை - கடுமையான விஷத்தை, உண்ட - பக்ஷித்த, ஒரு மூன்று கண்ணனை - மூன்றுகண்களையுடைய சிவனை, போன்றனள் - ஒத்திருக்கின்றனள், காண் —, எ-று. ஏ-அசை.

ஒரு என்பது மூன்றை விசேடித்து நின்றது, பாஷையின் இயல்பு. வையம்—ஒழிந்தவுலகங்களையுங் கொண்டது [பொருவியல் எ - ஆம் - சூத்திரம்.] இப்பாட்டிலு முற்பாட்டிலும் நீர்ப்பூக்கொய்தல் சொல்லியதனால் நீர்விளையாட்டுச் சொல்லியதாயிற்று. இது மேற்பாடல்களில் விளங்கும். (கo)

182. கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்
செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள்—
கெழுமியவக், கோமகற்குத் தானினைந்த குற்றங்க
ளத்தனையும், பூமகட்குச் சொல்லுவாள்போல்.

182. She who faces her blooming face close beside the lotus flower, being ticked by the water which her husband throws at her from the cool stream, appears as if she were confessing to the goddess who resides in that flower, all the evil intentions she meditated against that excellant husband.

(இ-ள்.) கொழுநன் - கணவன், கொழு தாரை நீர் - கொழுமையான வொழுக்குள்ள தண்ணீரை, வீச - (மேலே) எறிய, கூசி- கூச்சம் அடைந்து, கெழுமிய - பொருந்திய, அ கோ மகற்கு - அந்த மேன்மையான புருடனிடத்தில், தான் நினைந்த - தான் எண்ணின, குற்றங்கள் அத்தனையும் - குற்றங்களையெல்லாம், பூ மகட்கு - இலக்குமிக்கு, சொல்லுவாள் போல் - அறிவிப்பாள்போலே, செழுமுகத்தை - பொலிவுள்ள முகத்தை, தாமரைக்கே - தாமரையினிடத்தே, சேர்த்தாள்— எ - று.

போல்—குறிப்புப் பொருளில் வந்தது. (கக)

183. பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதி
ரண்டிற், பெய்து முகமூன்று பெற்றாள்போல்—

எய்த, வருவாளைப் பாரென்றான் மாற்றாரை
வென்று, செருவாளைப் பார்த்துவக்குஞ் செய்.

183. The king who destroyed his enemies, and joyfully regarded the victorious weapon in his hand, exclaimed "Look at thatmaiden who is coming before us, and who in play has placed two lotus flowers on both her ears looking as if she had three faces."

(இ-ள்.) மாற்றாரை வென்று - பகைவரைச் செயித்து, செரு வாளை பார்த்து - சண்டைசெய்யும் வாளாயுதத்தைப் பார்த்து, உவக்கும் - மகிழ்கின்ற, சேய் - ராஜகுமாரன், [நளன்,] பொய்தல் - விளையாட்டில், கமலத்தின் போது இரண்டை - இரண்டு தாமரை மலர்களை, காது இரண்டில் - இரண்டு காதுகளின்மேல், பெய்து - தரித்து, மூன்று முகம் பெற்றாற்போல் - மூன்று முகங்களை யடைந்தவளைப் போலே, எய்த - (நம்மைச்) சேர, வருவாளை - வருகின்ற பெண்ணை, பார் என்றான்—, எ-று.

உவக்கும்—உவ-பகுதி, இப்பொருள்கொண்ட உக என்கிற பகுதியுமுண்டு; உகந்தான் முதலிய உதாரணம். (கஉ)

184. பொன்னுடைய வாசப் பொகுட்டு மலரலைபத்
தன்னுடனே மூழ்கித் தனித்தெழுந்த—மின்னு
டைய, பூணு டிருமுகத்தை புண்டரிக மென்
றயிர்த்துக், காணு தயர்வானைக் காண்.

184 Look at that man who, bathing with his wife, so as to agitate the flowers filled with golden- dued filaments and fragrant seeds, on seeing the pure face of her, adorned with bright jewels, who rose first (out of the water) and mistaking it for a lotus flower, is quite perplexed.

(இ-ள்.) பொன் உடைய - பொன்போன்ற மகரந்தப் பொடிகளைச் (சுற்றிலும்) உடைய, வாசம் - வாசனையுள்ள, பொகுட்டு - கொட்டையையுடைய, மலர் - தாமரைமலர்கள்

அலைய - அலையும்படி, தன்னுடனே மூழ்கி-தன்னோடு கூடவே நீரில் அமிழ்ந்து, தனித்து - தனியாக, எழுந்த -(நீரினின்றும்) எழுந்த, மின்னுடைய - காந்தியுள்ள, பூணாள் - ஆபரண மணிந்த பெண்ணின், திரு முகத்தை - அழகுள்ள முகத்தை, புண்டரிகம் என்று - தாமரைப்பூ வென்று, ஐயிர்த்து - சந்தேகித்து, காணாது - அவனைக்காணாமல், அயர்வானை - வருந்துகின்றவனை, காண் - பார், எ-று.

பொன் இலக்குமி யெனவுங் கொள்ளலாம் (கஅ)

185. சிறுக்கின்ற வாண்முகமுஞ் செங்காந்தட் கை
யான், முறுக்குநெடு மூரிக் குழலும்—குறிக்கின்,
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட
காட்சி, அரும்பாம் பணைமுலையா யாம்.

185. O thou whose full-developed breasts are like buds! If we compare that small bright face, and those long beautiful tresses, which are twised with those hands which resemble red kuvali- flowers they are like the pale moon which is seized by the seble-hued serpant (Raghu.)

(இ - ள்.) அரும்பு ஆம் - அரும்புகின்றனவாகிய, பணை முலையாய் - பருத்த முலையையுடையவளே, சிறுக்கின்ற - சுருங்கிவருகின்ற, வாள் முகமும் - ஒளிபொருந்திய முகத்தையும், செம் காந்தள் கையால் - சிவந்த காந்தட்பூப்போன்ற கையினால், முறுக்கும் - முறுக்கப்பட்ட, நெடு - நீட்சியான, மூரி - பெருமை பொருந்தின, குழலும் - கூந்தலையும், குறிக்கின் - குறித்தால், கரு பாம்பு - இராகுவென்னுங் கருமையான பாம்பு, வெள் மதியை-வெளுமையான சந்திரனை, கைக்கொண்ட காட்சி - கிரகித்த தோற்றம், ஆம், எ-று.

மூரி - வலிவு என்றும் பொருள் கொள்ளலாம். உருவகித்தலாவது ஒருபொருளை மற்றொருபொருளின் தன்மையை ஏற்றிப்பற்றி இது அப்பொருளா யிருக்கலாமென்று ஊகித்தல். கசு)

186. சோர்புனலின் மூழ்கி யெழுவாள் சுடர்நுதன்
மேல், வார்குழலை நீக்கி வருந்தோற்றம்—பாராய்,

விரைகொண் டெழுந்தபிறை மேகத் திடையே,
புரைகின்ற தென்னலாம் பொற்பு.

186. "Look we may say that the appearance of the maiden, who having bathed in the running streamlet, rises up, and brushes aside the long tresses which fall over her bright forehead, is like the beauty of the crescent moon, which suddenly bursting forth, makes its appearance from among the clouds.

(இ - ள்.) சோர புனலிற் மூழ்கி - ஓடுகின்ற தண்ணீரில் அமிழ்ந்து, எழுவாள் - எழுகின்ற ஒருபெண், சுடர் நுதல்மேல் விளக்கமான நெற்றியின்மேல், வார் குழலை - நீட்சியான அளகங்களை, நீக்கி வரும் தோற்றம் - நீக்கி வருகிற சொரூபம், விரை கொண்டு எழுந்த - பிரகாசத்தோடு உதித்த, பிறை - சந்திரப் பிறையே, மேகத்து இடை - மேகத்தின் நடுவிலே, புரைகின்றது என்னல் ஆம் - தோன்றுகின்றதென்று சொல்லும்படியான பொற்பு - அழகுடைமையை - பாராய் - பார், எ - று. ஏ - அசை

187. செழுநீல நோக்கெறிப்பச் செங்குவளை கொய்வாள், முழுநீல மென்றயிர்த்து முன்னர்க்—கழுநீரைக், கொய்யாது போவாளைக் கோல்வளைக் குக் காட்டினன், வையாரும் வேற்றடக்கை மன்.

187. The king, who held in his hand a long sharp lance, pointed out to her, who was adorned with beautiful bangles, the maiden the shade of whose bright blue eyes falling on the red Kuvali which she was about to pluck, and who, thinking the flower before her was wholly blue went away without touching it.

(இ - ள்.) வை ஆரும் வேல் - கூர்மைபொருந்தியவேலை, தடம் கை மன் - பெரிய கையிற்கொண்ட அரசன், செழு நீலம் - செழிப்பான நீலநிறத்தை, நோக்கு - பார்வையானது எறிப்ப - எறிகிறதினால், செங்குவளை கொய்வாள் - செங்கழுநீர்ப்பூவைப் பறிக்கவந்தவள், முழுநீலம் என்று - முழுதும்

நீலமாகிய கருங் குவளைப்பூ என்று, அயிர்த்து - சந்தேகித்து முன்னர்-எதிரில் கழுநீரை-செங்கழுநீர்ப்பூவை, கொய்யாது போவாளை - கொய்யாமற் போகின்றவளை, கோல்வளைக்கு-தமயந்திக்கு, காட்டினான் - காண்பித்தான், எ - று.

கொய்யுங்கால் தன் கண்ணின் காந்திபட்டுக் கறுத்துத் தோன்றுகிற செங்குவளையைக் கருங்குவளையென்று மயங்கிக் கொய்யாமற் போனாளென்பது கருத்து.

எறிப்ப—எறி-பகுதி, இது ஆயுதமுதலானவைகளை வீசுகிற தென்னும் பொருள்படவர்ததால் எறிய என்றாகும். இதுவும் தெளி என்பதைப்போலவே எறிந்தான், எறித்தான் முதலாக வரும், (கசு)

188. காவி பொருநெடுங்கட் காதலியுங் காதலனும்
வாவியு மாறுங் குடைந்தாடித்—தேவின்
கழியாத சிந்தையுடன் கங்கைநதி யாடி
ஒழியா துறைந்தா ருவந்து.

188. The wife, whose long eyes resembled water lilies and her husband, having bathed in all the tanks and rivers, and having also in accordance with the unchangeable supplication to the Almighty bathed in the river Ganges, lived a joyful and inseparable life-

(இ - ள்.) காவி பொரு நெடு கண் காதலியும் - நீலோத்பலத்தையொத்த நெடுமையான கண்களையுடைய நாயகியும், காதலனும் - நாயகனும், [தமயந்தியும் நளனு மென்றபடி,] வாவியும் ஆறும்-குளங்களையும் நதிகளையும், குடைந்து ஆடி - அலைத்து நீராடி, தேவின்-கடவுளின், கழியாத சிந்தையுடன்-நீங்காத தியானத்தோடு, கங்கை நதி ஆடி - கங்கையாற்றில் ஸ்நானஞ்செய்து, உவந்து - சந்தோஷித்து, ஒழியாது - பிரியாமல், உறைந்தார் - இருந்தார், எ - று.

வாவியும் ஆறும் என்பன வழியிலுள்ளன, கங்கைநதிமாவிந்தத்தின் அருகில் உள்ளது. 'தேவின் கழியாத சிந்தையுடன்' என்றமையின் மற்றநதி முதலியவற்றுள் நீராடியது விளையாட்

டென்றும், கங்கையி லாடியது தெய்வபத்தியினு லென்றும் விளங்கும். இதனால் நளனுந் தமயந்தியும் பூக்கொய்தலும் நீர் விளையாட்டுஞ் செய்தாரென்பது விளக்கப்பட்டது. (கஎ)

189. நறையொழுக வண்டுறையு நன்னகர்வாய் நாங்கள்
உறையு மிளமரக்கா வொக்கும்—இறைவளைக்கைச்
சிற்றிடையாய் பேரல்குற் றேமொழியாய் மென்
பொற்றொடியாய் மற்றிப் பொழில். [முறுவர்

189. "O thou adorned with striped baugles, thou slender waisted one, whose words are as honey thou softly smiling being, adorned with golden bracelets This grove before us, resembles the groves of tender trees which we frequently resort to in our good country which is frequented by honey - making bees.

இ - ள்.) இறை வளை கை - பெருமையான சங்குவளைகள் அணிந்த கைகளுள்ள, சிறு இடையாய்-சிறிய இடையையுடையவளே! பேர் அல்குல்-பரந்த அல்குலுடைய, தேமொழியாய்-மதுரமான வசனமுள்ளவளே! மெல் முறுவல்-இளமையான சிரிப்புள்ள, பொன் தொடியாய்-பொன் வளையல்களுடையவளே! இப்பொழில் - இந்தத்தோட்டம், நறை ஒழுக - தேன் ஒழுகுதலால், வண்டு உறையும் - வண்டுகள் குடியிருக்கப்பெற்றிருக்கிற, நல் நகர்வாய் - நல்லபட்டணத்தில், நாங்கள் உறையும்-நானும் என்னுடையவரும் வசிக்கிற, இள மரம் கா-இளமரங்களை யுடைத்தாயிருக்கிற தோட்டத்தை, ஒக்கும் - ஒத்திருக்கின்றது, எ-று. மற்று - அசை.

மிறைவளையென்று எடுத்து வருந்திச் செய்யப்பட்ட வளைகள் எனப்பொருள் கொள்வதும் ஒன்றும். 'நன்னகர்வாய்' என்பது நன்னகரைப் பொருந்திய என்று உரைக்கவுமாம். வண்டுறையும் நாங்கள் உறையும் என்பவற்றை இளமரக்கா என்பதோடு முடிக்க. வாய் என்பதை வினைத்தொகையாக் கொள்ளின் அதையும் அப்பெயரோடே முடிக்க; ஏழனுருபாகக் கொள்ளின் இடைப்பிற வந்ததாகக் கொள்க. [பொதுவியல் ரு - வது சூத்திரம்.] (கஅ)

190 கன்னியர்தம் வேட்கையே போலுங் களிமழலை
தன்மணிவா யுள்ளே தடுமாற—மன்னவனே
இக்கடிகா நீங்க ளுறையு மிளமரக்கா
ஒக்குமதோ வென்றா ளுயிர்த்து.

190. Her gladdening words stammering in her beautiful mouth like the restrained desire of a virgin, Damayanti heaving a sigh, said "O king! is this fragrant grove really like the groves of tender trees in which you reside ?"

(இ - ள்.) கன்னியர்தம்-பெண்பிள்ளைகளிடத்துண்டாகிய, வேட்கையே போலும் - ஆசையேபோல் காணப்படுகின்றது, (இவ்வாறு கூறியதற்குக் காரணம் என நினைத்து), களிமழலை-களிக்கத்தக்க மழலைச்சொற்கள், தன் வணிவாயுள்ளே-தனது மாணிக்கம்போன்ற வாயினுள்ளேயே, தடுமாற - தடுமாறிக்கொண்டிருக்க, உயிர்த்து-பெருமூச்செறிந்து, மன்னவனே - அரசனே, இக் கடி கா - இந்த வாசனையுள்ள தோட்டம், நீங்கள் உறையும்-நீயும் உனக்குப் பிரியமானவர்களும் வசிக்கின்ற இள மரக்கா ஒக்குமதோ - இளமரத்தோப்பை ஒத்ததோ, என்றாள் - என்றுசொன்னாள் (தமயந்தி), எ - று.

இப்பாடலில் இசையெச்சமே வேண்டாது 'கன்னியர்தம் வேட்கையே போலும், என்பதற்கு கன்னிமாருடைய ஆசையைப்போல் வெளிப்படாமல் உள்ளே நிற்கத்தக்க என்று மழலைக்கு விசேடணமாக்கிப் பொருளுரைப்பது நேர். முற்பாட்டில் அரசன் இப்பொழில் நாங்கள் உறையும் இளமரக்கா ஒக்குமென்று சொன்னதினால் அரசனுக்குப் பிரியமாய்ப்பொழில் விளையாட்டுக்கு உரியமாதர்பலர் உளர்போலும் என்று நினைத்துத் தமயந்தி மனம் வருந்தி இவ்வாறு குறிப்பாய் உரைத்தனள் என்பது கருத்து. இது மேற்பாட்டில் வெளியாம். (கக)

191 கொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதன் மேல்
வெண்டரள மென்ன வியர்வரும்பக்—கொண்டை
கடைசிவப்ப நின்றாள் கழன் மன்னர் வெள்ளைக்
குடைசிவப்ப நின்றான் கொடி.

191. With her lips, as red as the கொவ்வை fruit, quivering with the perspiration dropping like the white pearls from her bright forehead, and with her fish-like eyes inflamed at the corners, stood the daughter of the king Bhima, who reddened (*i e.* dyed with their blood) the white umbrellas of the monarchs, adorned with ankle ornaments.

(இ - ள்.) கழல் மன்னர்-வீரக்கழலணிந்த அரசர்களுடைய வெள்ளை குடை—, சிவப்ப-(உதிர வெள்ளத்தினால்) சிவந்து போகும்படி, நின்றான் - நின்றவனாகிய வீமராஜனுடைய, கொடி - மகளாகிய தமயந்தி, தொண்டை கனி வாய் துடிப்ப - கொவ்வைப்பழம்போன்ற உதடுகள் துடிக்கவும், சுடர் நுதல்மேல்-பிரகாசமான நெற்றியில், வெண் தரளம் என்ன-வெண்மையான முத்தைப்போல், வியர்வு அரும்ப - வேர்வை துளிக்கவும், கெண்டைகடைசிவப்ப - கெண்டைபோன்றகண்களின் கடைகள் சிவந்துபோகும்படியும், நின்றாள்—, எ - று.

சிவப்ப—சிவ - பகுதி, செம்மையின் விகாரமென்னலாம்; இது குச்சாரியைசேர்ந்து சிவக்க எனவும், பகுதி விகாரப்பட்ச் செய்ய எனவும் வரும். (௨௰)

192. தங்கள் புலவித் தலையிற் றனித்திருந்த
மங்கை வதன மணியரங்கில்—அங்கண்
வடிவாண்மேற் கால்வளைத்து வார்புருவ மென்
னுங், கொடியாடக் கண்டானோர் கூத்து.

192. He (Nala) saw the brows on the face of the maiden who had stood apart on account of the recent quarrel dance over her beautiful eyes, like the legs of the dancing girl crossing the curved lance in the brilliant assembly.

(இ-ள்.) தங்கள் புலவித்தலையில் - தங்களுக்கு நேரிட்ட ஊடலில், தனித்து இருந்த-ஒன்றியாயிருந்த, மங்கை - தமயந்தியின், வதனம் - முகமாகிய, மணி அரங்கில்-இரத்தினசபையில் அம் கண் வடிவாள்மேல் - அழகிய கண்ணாகிய வடித்த கத்திகளின்மேல், கால் வளைத்து - நுனியைவளைத்து [காலை வளைத்து,] வார் புருவம் என்னும்கொடி -நீண்டபுருவமென்று

சொல்லப்பட்ட கொடி [பெண்,] ஓர் கூத்து - ஒருகூத்தை, ஆடக்கண்டான்—, [நளன்,] எ - று.

தமயந்திக்குக் கோபத்தினால் புருவம் வளைந்து துடித்துக் கொண்டிருந்த தென்பது கருத்து. தமயந்தியின் முகத்தை நாட்டிய சாலையாகவும், கண்களைக் கத்திகளாகவும், புருவம் வளைந்து துடிப்பதை அக்கத்திகளின்மேல் கால்களை வளைத்து வைத்துப் பெண்கள் நாட்டியஞ் செய்வதாகவும் சிலேடை யுதவியாக்கொண்டு உருவகப்படுத்தினார். கால் - கொடி என்ப வற்றுட்சிலேடையைக் காண்க. (உக)

193. சில்லரிக் கிண்கிணிமென் றெய்வமலர்ச் சீறடி யைத், தொல்லை மணிமுடிமெற் சூட்டினான்— வல்லை, முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த செழுநீல் மாறுச் சிவப்பு.

193. He placed upon his old gem-studded crown the small tender lotus-like feet (of Damayanti) which were adorned with ankle rings of noisy rattles; and immediately the inflamed eyes which blossomed upon her face, surrounded by dark blue tresses, lost in their red hue.

(இ - ள்.) சில் அரி கிண்கிணி - ஒலியையுடைய பருக்கைக ளுள்ள சதங்கைகளை யணிந்த, மெல் தெய்வ மலர் - மெல்லிய தாமரைப்பூப்போன்ற, சீறடியை-சிறிய (அவளுடைய) பாதங் களை, தொல்லை மணி முடிமேல் - பழமையான தன் ரத்தின கிரீடத்தின்மேல், சூட்டினான்-அணிந்தான் (நளன்,)(அதனால்) முழு நீல கோதை - முழுதுங் கறுப்பான தலைமயிரையுடைய தமயந்தியின், முகத்தே - முகத்திலே, செழு நீலம் - செழிப் பான குவளைகள் [கண்களென்றபடி,] வல்லை - சீக்கிரத்தில், சிவப்பு- (கோபத்தினாலுண்டான) சிவந்தநிறம், மாறு - மாறி, மலர்ந்த - மலர்ந்தன, எ - று. (உஉ)

194. அங்கைமேல் மன்னனை மலமேனுஞ் செறுவில் கொங்கையேர் பூட்டிக் குறுவியநீர் - அங்கடைத் துக், காதல் வரம்பொழுக்கிப் காமப் பயிர் விளைத்தாள், கோதைவரின் மேலான கொம்பு.

194. Damayanti whe excelled all other woman in beauty, ploughing with her breasts the field-like chest of the king who possessed beautiful weapons, and watering it with drops of perspiration enclosed by ridges of lust cultivated on it a harvest of concupicence.

(இ-ள்.) கோதையரின் மேலான கொம்பு - பெண்களுக் கெல்லாம் சிறந்தவளான பூங்கிளைக்கு ஒப்பாகிய தமயந்தி, அம் கை வேல் மன்னன் - அங்கையில் வேலேந்திய நளமகா ராஜனுடைய, அகலம் எனும் செறுவில் - மார்பு என்கிற கழனியில், கொங்கை ஏர் பூட்டி - தனங்களாகிய ஏரை நடத்தி, குறு வியர் நீர் - சிறிய வியர்வை நீரை, அங்கு அடைத்து - அவ்விடத்துப்பாய்ச்சி, காதல் வரம்பு - ஆசையாகிய வரம்பை ஒழுக்கி - சேர்ப்படுத்தி, காமம் பயிர் - காமமாகிய பயிரை விளைத்தாள் - விளையச்செய்தாள், எ-று.

ஊடல் தீரவே தழுவினள் என்பது கருத்து. (உங)

195. வேரி மழைத்துளிக்கு மேகக் கருங்கூந்தல்
காரிகையுந் தானும்போய்க் கண்ணுற்றான் -மூரித்
திரையேற மென்கிடங்கிற் சேலேற வாளை
கரையேறுங் கங்கைக் கரை.

195. The maiden whose tresses of cloud-like blackness rained honey-drops together with himself (Nala) went and saw the banks of the Ganges where the rise of the powerful waves impels the shell-fish into the soft hollows, and forces the valai to ascend to the shore.

(இ-ள்.) மூரி திரை - பெருமையான அலைகள், மெல் கிடங்கில் ஏற - மென்மையான அகழியில் ஏறும்போது, சேல் ஏற - கெண்டைமீன்கள் ஏற, வாளை - வாளைமீன்கள், கரை ஏறும் - கரையில் ஏறத்தக்க, கங்கை கரை - கங்கை யாற்றங் கரையை (நளன்,) வேரி மழை - தேன்மழையை துளிக்கும் - சொட்டும்படி செய்கின்ற, மேகம் கரு கூந்தல் - மேகம்போன்ற கரியகூந்தலையுடைய, காரிகையும் - தமயந்தி யும், தானும்—, போய்—, கண்ணுற்றான் - கண்டான், எ-று.

முன் கங்கை நீராடி என்றது கங்கையின் அக்கரையில்) கங்கையின் இக்கரை நகரத்தி னருகிலுள்ளது. (உச)

19[illegible]. சூதக் கனியூற லேற்ற சுருள்வாழை
கோதி னறவேற்குங் குப்பியெனா—மாதரார்
ஐயுற்று நோக்கு மகன்பொழில்சென் றெய்தினான்
வையுற்ற வேற்றானை மன்.

196. The king who possessed armies with bright lances arrived at the extensive groves where the maidens gaze doubtfully at the tender roll of the plantain leaf into which the juice of the Mango drops, mistaking it for a decanter of honey.

(இ-ள்.) வை உற்ற - கூர்மை பொருந்திய, வேல் தானை - ஆயுதமுள்ள சேனையையுடைய, மன் - நளன், சூதக்கனிஊறல் ஏற்ற - மாம்பழங்களின் ரசத்தை ஏந்திக்கொண்டிருக்கிற, சுருள் வாழை - சுருளாயிருக்கிற வாழைக்குருத்துகளை, கோது இல் நறவு ஏற்கும் - குற்றமற்ற மதுவை ஏந்திக்கொண்டிருக்கிற, குப்பி என - குப்பிகளென்று, மாதரார் - ஸ்திரீகள், ஐயுற்று நோக்கும் - சந்தேகப்பட்டுப் பார்க்கின்ற, அகல் பொழில் - பெரியசோலையை, சென்று எய்தினான் - போய்ப் பொருந்தினான், எ - று.

குப்பியாவது ஓர்வகைக் கிண்ணம். (உரு)

197. வான்றோய நீண்டுயர்ந்த மாடக் கொடிநுடங்கத்
தான்றோன்று மற்றித் தடம்பதிதான் — வான்
றோன்றி, வில்விளக்கே பூக்கும் விதர்ப்பனுடானு
டையான், நல்விளக்கே யெங்க ணகர்.

197. "O bright looking daughter of the king of Vidarpa the glittering lights of which cast their rays up to the heavens! the extensive city before us, in which you see the flags waving on the terrace which reach as high up as the sky, is our capital."

(இ - ள்.) வான் தோன்றி - வானத்தில் காணப்பட்டு, வில் விளக்கே பூக்கும் - இரத்தின காந்திகளாகிய விளக்குகளே பூத்திருக்கப்பெற்ற, விதர்ப்ப நாடு - விதர்ப்ப தேசத்தை, ஆளுடையாள் - ஆளுகின்றவனாகிய பீமராஜாவிடத் துண்டாகிய, நல் விளக்கே - நல்ல விளக்குப்போன்ற பெண்ணே, வான் தோய - வானத்திற் படியும்படி, நீண்டு - நீட்சியாகி, உயர்ந்த-மேலோங்கியிருக்கிற, மாடம் கொடி-மாளிகைகளின் கொடிச் சீலைகள், நுடங்க - அசைந்தாடும்படி, தோன்றும் - காணப்படுகின்ற, இத் தடம் பதிதான் - இந்தப் பெரிய இடந்தான், எங்கள் நகர் - எங்களுடைய பட்டணம் (என்று தமயந்திக்கு அரசன் உரைத்தான்,) எ-று. தான் - மற்று-அசைகள்

வில் - இந்திரவில்லெனக்கொண்டு அதுபோல் பலநிறமான விளக்கென்னவுமாம். விளக்குகூட்டின் காந்தியாலேனும் சுவர்களின் காந்திகளாலேனும்பலவண்ணமாம். வில்உமிழும் விளக்கெனல் சிறப்பில்லை. மாடங்கள் மிகவுயர்ந்திருப்பதுபற்றி வான்றோன்றி யென்றது; பூத்திருப்பவை நக்ஷத்திரங்களென மயங்கவேண்டாம், விளக்குகள்தாம் என ஏகாரங் கூறுகின்றது, (உகூ)

198. பொய்கையும் வாசப் பொழிலு மெழிலருவிச்
செய்குன்று மாறுந் திரிந்தாடித்—தையலுடன்,
ஆறிரண்டாண் டெல்லை கழித்தா னடையல
ரைக், கூறிரண்டாக் கொல்யானைக் கோ.

198. The king who possessed the killing elephants which ripped up into two parts the bodies of his enemies spent twelve years with his wife in rambling about among the large tanks, the fragrant groves, the beautiful water-falls, and the artificial hills.

(இ - ள்.) அடையலரை - சத்துருக்களை, கூறு இரண்டு - இரண்டு துண்டாக, கொல்-கொல்லுகின்ற, யானை -யானையையுடைய, கோ-நளமகாராஜன், தையலுடன்-தமயந்தியுடனே, பொய்கையும் - தடாகங்களும், வாசம் பொழிலும் - பரிமள

முள்ள தோட்டங்களும், எழில் அருவி -அழகுள்ள அருவிகள் பொருந்தின, செய் குன்றும் - கற்பித்த மலைகளும், ஆறும் - நதிகளும், திரிந்து-சஞ்சரித்து, ஆடி - நீராடி அல்லது விளை - யாடி, ஆறு இரண்டு - பன்னிரண்டாகிய, ஆண்டு எல்லை - வருஷகாலத்தை, கழித்தான் - போக்கினான், எ - று.

கூறிரண்டாக் கொல் என்றது வீரத்தின் மேன்மையைக் குறிக்கின்றது. (உஎ)

199. கோல நிறம்விளர்ப் பக்கொங்கை முகங்கருக
நீல நிறமயிர்க்கா னின்றெறிப்ப—நூலென்னத்
தோன்றாத நுண்மருங்கு றோன்றச் சுரிகுழ
லாள், ஈன்றாள் குழவி யிரண்டு.

196. The beautiful color of her body turning pale, the surface of her breasts assuming a dark hue, the roots of her hair shining with a bluish gloss upon her head, and her slender waists which before were as invisible as thread, now swelling on the sight, she who possessed curly ringlets was delivered of twins.

(இ - ள்.) [இவ்வளவு காலத்துக்குப்பின்] கோல நிறம் விளர்ப்ப-அழகியநிறமானது வெளுத்துப்போகவும், கொங்கை முகம் கருக - முலைக்காம்புகள் கறுத்துப்போகவும், மயிர் கால்-மயிரின் ஒழுங்கு, நீல நிறம் எறிப்ப - நீலவாணத்தை வீசவும், நூல் என்ன-பஞ்சுநூல்போல், தோன்றாத - காணப் படாத, நுண் மருங்குல்-நுட்பமான இடையானது, தோன்ற வெளிப்படக் காணும்படியாகவும் (கருவாய்த்திருந்து,) சுரி குழலாள் - வளைந்த அளகபாரத்தை யுடையதமயந்தி, இரண்டு குழவி - இரண்டு குழந்தைகளை, ஈன்றாள் - பெற்றாள், எ - று நின்று - அசை.

நிறம்விளர்ப்பக் கொங்கை முகங்கருக மயிர்க்கால் நீலநிற மெறிப்ப நூலென்னத் தோன்றாத நுண்மருங்குல் தோன்ற, நின்று-இருந்து, எனவுங்கூட்டுக. இதனால் கருவாய்த்திருந்து என்பது அமையும், இவையெல்லாம்கருக்குறியாதலின்.(உஅ)

200. ஆண்டிரண்டா றெல்லை,யளவுந் திரிந்தேயும்,
காண்டகைய வெங்கலியுங் காண்கிலான்—நீண்
டபுகழ்ச், செந்நெறியாற் பார்காத்த செங்கோ
னிலவேந்தன், தன்னெறியால் வேறோர் தவறு.

200. The cruel Kali, having closely pursued **N**ala in all his ways even for a space of twelve years, was unable to find a fault in the renowned and unstraying paths of the king, who ruled the earth with an upright sceptre.

(இ-ள்.) காண் தகைய-காணுந்திறனுள்ள, வெம் கலியும் - உக்கிரனை கலிபுருடனும், இரண்டு ஆறு ஆண்டு எல்லை அளவும் - பன்னிரண்டு வருஷமாகிய அளவையுடைய காலமெல்லாம், திரிந்தேயும்-(அவன் சென்றவிடத்தி லெல்லாம்)திரிந்து கொண்டிருந்தும், நீண்ட புகழ் செம் நெறியால் - வளர்ந்த புகழ்பெற்ற செவ்வையான ஒழுக்கத்தினால், பார் காத்த - பூமியைக் காப்பாற்றின, செங்கோல் - செங்கோலையுடைய, நில வேந்தன் - நளமகாராஜனுடைய, நெறியால் - கிரமத்தினால், வேறு ஓர் தவறு - நன்மைக்கு வேறாகிய ஓர் குற்றத்தையும் காண்கிலான் - காணமாட்டாமற்போனான், எ-று. தன்-அசை

எல்லையளவும் என்னுமிடத்து உம்மை அக்காலத்தின் ஒவ்வொருகணமும் விடாமல் என்னும் பொருளைத் தருதலால் முற்றும்மை. மற்றிரண்டும் சிறப்பும்மை. செங்கோல் நில வேந்தன்- செங்கோலுக்கு நிலமாகிய வேந்தன் எனவும் பொருள்படும். திரிந்தே என்னுமிடத்து ஏகாரம் - அசை, தேற்றம் எனவுமாம். வேறோர் தவறு—இனிக்காட்டப்படும் தவறுதவிர மற்றொன்று என்று பொருள் கொள்ளவும் தகும். தவறு—முதனிலைத் தொழிற்பெயர். (உக)

201. சந்திசெயத் தாள்விளக்கத் தாளின்மறுத் தான்
கண்டு, புந்தி மகிழப் புகுந்துகலி—சிந்தை
யெல்லாம, தன்வயமே யாக்கித் தமைய னுட
னிருந்தான், பொன்னசல மார்பற் புகைந்து.

201, When Nala was performing his evening ablutions of washing his feet Kali seeing a dry spot, where the

water had not touched the filth, became angry with Nala whose breast resembled the golden mountain (Meru,) and entering into him, with an exulting mind, became master of his dispositions, and then joined himself to his friend Putcaran.

(இ-ள்.) [இப்படி இருக்கையில் ஒருகால்] சந்தி செய - சந்தியாவந்தனஞ் செய்யும்பொருட்டு, தாள் விளக்க - பாதத்தைச் சுத்திசெய்யும்போது, தாளில் - பாதத்தில், மறு - அழுக்கை, கண்டு—, புந்தி மகிழ - மனங்களிக்க, புகுந்து - (அரசனிடத்தில்) பிரவேசித்து, கலி - கலியானவன், சிந்தையெல்லாம் - (அரசனுடைய) புத்தியையெல்லாம், தன் வயமே ஆக்கி - தன் சுவாதீனத்தி லிருக்கச்செய்து, பொன் அசலம் மார்பன் - பொன்மலையோடு ஒத்த மார்பையுடைய நளனை புகைந்து - கோபித்து, தமையனுடன் - நளனுக்குத் தமையன் முறை கொண்டவனாய் ஓர் சிற்றரசுள்ளவனா யிருந்த புஷ்கரன் என்பவனோடு, இருந்தான் - அவனுக்குச் சகாயஞ் செய்யும்படி இருந்தான், எ-று. தான் - அசை.

"இயல்பின் விகாரமும்" என்கிற [உருபுபுணரியல் கரு-ம்] சூத்திரத்தினால் மார்பன் என்னும் உயர்திணைப்பெயர் ஈறு திரிந்தது. பொன்னசலம் - மேருமலை. செய—இது பயனைக் குறித்தமையால் எதிர்காலத்தது. விளக்க—இது பிறவினைக்குக் காலக்குறியானதினால் நிகழ்காலத்தது. (உய)

202. நாராயணாய நமவென் றவனடியிற், சேராரை
வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்—பாராளும்,
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்
மைநெறி, கற்றவனைச் சேர்ந்தான் கலி.

202. Just as great evil will happen to those who do not approach Vishnu in adoration, so Kali entered into Nala who ruled the earth, who resembled Vishnu the husband of the goddess of the earth. and who was a follower of truth.

(இ-ள்.) நாராயணாய நம என்று - நாராயணனுக்கு நமஸ்காரம் என்கிற பொருளுள்ள மந்திரத்தைச்சொல்லி, அவன் அடியில் சேராரை - அந்தக்கடவுளின் பாதங்களிற்சேராதவர்களை, வெம் துயரம் சேர்ந்தால்போல் - உக்கிரமான சம்சார துக்கஞ் சேர்வதுபோல், பார் ஆளும் கொற்றவனை - பூமியை ஆளும்படியான வல்லமையுள்ளவனும், பார் மடந்தை கோமானை - பூதேவியின் கணவனாகிய திருமால்போன்றவனும், வாய்மைநெறி கற்றவனை - சத்தியமாகிய தருமவழிகளைக் கற்றவனுமாகிய நளனை, கலி - கலிபுருடன், சேர்ந்தான்—, எ - று.

பார்மடந்தை - உரோகிணி நட்சத்திரமாகிய பெண் என்று கொண்டு சந்திரனைப்போன்றவன் என்றும் உரைக்கலாம். பார்மடந்தை கோமான்—உவமையாகுபெயர். நாராயணாய நம என்பதின் விசேடப்பொருள்களை வைஷ்ணவநூல்களிற் பரக்கக்காணலாம். கொற்றவனை, கோமானை, கற்றவனை, என்பவை ஒருபொருளை நாடிவந்த பெயர்களாதலின் "ஒருபொருண்மேற் பல" என்ற [பொதுவியலின் ௪௧-ம்] சூத்திரத்தினால் ஒரு வினைகொண்டு முடிந்தன. (௩௧)

[புட்கரனென்கிறவனோடு கலி இவ்வாறு சொல்லினான்.]

203. நன்னெறியில் சூதா னளனைக் களவியற்றத்,
தன்னரசுவாங்கித் தருகின்றேன்—மன்னவனே
போதுவா யென்னுடனே யென்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்றா னெடுத்து.

203. Kali, who was a fit person for the depths of Hell, addressing Putcaran, said:—"O King, come with me and gamble at dice with Nala, and by deceitful means I shall cause you to win his Kingdom.

(இ-ள்.) புலை நரகுக்கு - நீசமாகிய நரகத்துக்கு, ஏதுவாய் நின்றான் - காரணமாக நின்ற கலி, நல் நெறி இல் - நல்வழியில்லாத, சூதால்-சூதாட்டத்தினால், நளனை—, களவுஇயற்றி- வஞ்சனைசெய்து, தன் அரசு - அவனுடைய இராச்சியத்தை, வாங்கி தருகின்றேன் - பறித்துக் கொடுக்கின்றேன், மன்னவனே - அரசனே, என்னுடனே போதுவாய் - என்னோடுவா, என்றான் எடுத்து - என்று எடுத்துச் சொன்னான், எ-று.

இவ் சூது—(மெய்யீறு - கூ0) சூத்திரத்தினல் இயல்பாயிற்று. தருகின்றேன் — தெளிவுபற்றி எதிர்காலம் நிகழ்காலமாயிற்று (பொது - சூ - உக.) (கூஉ)

204. புன்னை நறுமலரின் பூந்தா திடை யொதுங்கும்,
கன்னி யிளமேதிக் காற்குளம்பு—பொன்னு
ரைத்த, கல்லேய்க்கு நாடன் கவருடப் போயி
னன், கொல்லேற்றின் மேலேறிக் கொண்டு.

204. Putcaran, who ruled the Kingdom where the hoofs of the young buffaloes, as they tread on the pollen which falls from the beautiful flowers of the Punnai tree, resemble the stone on which gold is tested, mounted a furious bull and went to play at dice (with Nala).

(இ - ள்.) புன்னை நறு மலரின் - புன்னைமரத்தின் வாசனை பொருந்திய புட்பங்களினுடைய, பூந்தாது இடை - அழகிய மகரந்தப் பொடிகளினடுவே, ஒதுங்கும் - ஒதுங்கிப்போகின்ற, கன்னி - அழகான, இள மேதி - இளமையான எருமைகளின், கால் குளம்பு - பாதங்களின் குளம்புகள், பொன் உரைத்த- பொன்னை யுரைக்கப்பெற்ற, கல் ஏய்க்கும் - உரைகல்லை ஒத்திருக்கின்ற, நாடன் - நாட்டை யுடையவனாகிய புட்கரன், கொல் எற்றின் மேல் - கொல்லுந்திறமுள்ள எருதின்மேல், ஏறிக்கொண்டு—,கவறு ஆட - சொக்கட்டாட, போயினன்- போனன், எ - று.

கடற்கரையில் அவன் ஒரு சிற்றரசனுகையால் புன்னைநாடன் என்றார். கலியேயெருதாக வந்தானென்றுபாரதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. கன்னி இள என்பவைகளை ஒருபொருட் பன்மொழியாக்கொண்டு முரைக்கலாம்.

கன்னி—இளமை அழகுகளை யுணர்த்துமாயின் உரிச்சொல். பெண் முதலியவைகளை யுணர்த்தும்போது பெயர்ச்சொல்.

205. வெங்கட் சினவிடையின் மேலேறிக் காலேறிக்
கங்கைத் திரைநீர் கரையேறிச்-செங்கதிர்ப்பைம்,

பொன்னொழியப் போதும் புறம்பணை சூழ்நன்னாடு,
பின்னொழியப் போந்தான் பெயர்ந்து.

205 Putcaran, mounted on the fiery-eyed bull, left behind him his beautiful country which is surrounded by fields covered over with the bright gold cast upon them by the overflowing of the sluices, which are filled with the waters of the Ganges.

(இ - ள்.) வெம் கண் - உக்கிரமான கண்களையும், சினம்-கோபத்தையுமுடைய, விடையின்மேல் ஏறி - எருதின்மேலே ஏறி, கங்கை திரை நீர் - கங்காநதியின் அலைகளின் தண்ணிரானது, கால் ஏறி - வாய்க்கால்களில் ஏறி, கரை ஏறி - கரை புரண்டு, செம் கதிர் - சிவந்த காந்தியுள்ள, பைம்பொன் ஒழிய பசும் பொன் தவிர, போதும் - ஓடுகின்ற, புறம் பணை சூழ்நல் நாடு - புறத்து வயல்கள் சூழ்ந்த நல்ல தேசமானது, பின் ஒழிய - பின்புறமா நீங்கியிருக்கும்படி, பெயர்ந்து -புறப்பட்டு, போந்தான் - போனான், எ - று.

காலேறி - காற்றுவீசுவதினால் என்றுமாம். செங்கதிர்ப் பைம்பொன் - பசும்பொன்போன்ற செவ்விய நெற்கதிர்கள் அல்லது செவ்விய நெற்கதிர்களாகிய பசும்பொன், நெற்கதிர்கள் தவிர மற்றையவைகளைத் திரட்டிக்கொண்டு போகின்ற வெள்ளமென்பது கருத்து.

புட்கரன் தன் பட்டணம்விட்டுச் சென்றானென்று முன் சொன்னதையே வேறுவகையிற் சொல்லினார். இவ்வாறு கூறுவதும் ஒருவகைக் கவிநெறி. நன்னாடுபின்னொழிய என்பதற்கு பிற்காலத்தில் தன் ராச்சியந் தன்னைவிட்டு நீங்கும்படி எனவும் பொருள் கொள்ளலாம்; கடையில் அவனுடைய நாட்டையும் நளன் வெல்வதனாலென அறிக. (ருசு)

206. அடற்கதிர்வேன் மன்ன னவனேற்றின் முன்போய்
எடுத்தகொடி யென்னகொடி யென்ன-மிடற்கூது
வெல்லுங் கொடியென்றான் வெங்கலியா லங்கவன்
மேல், செல்லுங் கொடியோன் றெரிந்து.

206. Nala. who possessed the victorious lance, confronting his bull, asked, "What flag is that which you carry?" The wicked Putcaran, who went against him at the instigation of the cruel Kali, replied "This is the flag which conquers in the difficult game at dice."

(இ - ள்.) அடல் கதிர் வேல் மன்னன் - கொல்லுந் திறமையுள்ள காந்திபொருந்திய வேலையுடையநளமகாராஜன், அவன் அந்தப் புட்கரனுடைய, ஏற்றின் முன் போய் - எருதின் எதிர் சென்று, எடுத்த கொடி - நீ எடுத்த துவசமானது, என்ன கொடி என்ன-என்ன துவசம் என்றுவினவ, வெம் கலியால்- உக்கிரமான கலிபுருடனால், அங்கு - அவ்விடத்தில், அவன் மேல் செல்லும் - அந்த நளன்மேலே செல்லுகின்ற, கொடியோன் - கொடுங்குணமுள்ள புட்கரன், தெரிந்து - (நளன் கருத்தை) அறிந்து, மிடல் சூது வெல்லும் கொடி - பலமான சூதாட்டத்திற் பிறரைச் செயிக்குங் குறியான துவசம், என்றான்—, எ - று.

நளன் கருத்தாவது, சூதாட்டத்தில் பிரியமுடைமை. (௩௫)

207. ஏன்றே மிதுவாயின் மெய்ம்மையே யெம்மோடு,
வான்றோய் மடற்றெங்கின் வான்றேறல்—
தான்றேக்கி, மீதாடி வாளைவயல் வீழ்ந்துழக்கு
நன்னாடன், சூதாட வென்றான் துணிந்து.

207. Nala, who possessed the good country in which the valai fish leaping into the toddy on the high Cocoanut trees, so as to make it fill over, and then after bathing in it falls down again, disturbing the field, addressing Putcaran, said "If you are willing to play the dice, let us play."

(இ - ள்.) வான் தோய் - வானத்திற் படிந்திருக்கின்ற, வான் தேறல் - அதிகமான கள்ளை, தேக்கி - தேங்கச்செய்து, மீது ஆடி - அதன்மேல் வீழ்ந்து குளித்து, வயல வீழ்ந்து—, வாளை - வாளைமீன்கள், உழக்கும் - (பயிரை) அலைக்கின்ற நல்

3829

நாடன் - நல்ல நாட்டையுடைய நளன், துணிந்து- நிச்சயித்து, இது மெய்ம்மையே ஆயின் - நீ இப்படிச்சொல்வது மெய்யே யானால், ஏன்றோம் - ஏற்றுக்கொண்டோம் [அங்கீகரித்தோம் என்றபடி], எம்மோடு சூது ஆட - நம்மோடு சூதினை ஆடக் கடவாய், என்றான்—, எ - று.

ஆடுக என்றது ஆட என மருவியது; அல்லது அகரவிகுதியும் வியங்கோளுக்கு வருமெனக்கொள்க. தான் - அசை. ஏன்றோம்—ஏல் - பகுதி, இது லகரம் றகரமாகி ஏற்றோம், என வருவதுமன்றி மெலிந்து இப்படியும் வரும். (கசுசு)

208. காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழி
தல், ஈதன் மறுத்த லிவைகண்டாய்—போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி.

208. " O King of the beautiful country, in which the pregnant turtles abide in flowers! The characteristics of the unvirtuous are, excessive lust, gambling, drinking, lying, and preventing of the exercise of charity.

(இ - ள்.) [அப்போது மந்திரி முதலானோர் சொல்லுகின்றனர்.] போதில் - தாமரை முதலிய பூவில், சினை ஆமை வைகும் - கருவுற்ற ஆமைகள் வாசஞ்செய்கிற, திருநாடா - சிறப்பான நாட்டையுடையவனே, காதல் - (பெண்மேல் விசேஷ) மோகம், கவறு ஆடல்-சூதாடுதல், கள் உண்டல் - மதுபானஞ் செய்தல், பொய்மொழிதல் - பொய்சொல்லுதல், ஈதல் மறுத்தல் - (பிறர்) கொடுப்பதைத் தடுத்தல், இவை-ஆகிய இக்காரியங்கள், செம்மை நினையாமை - தருமத்தை சிந்தியாமையை, பூண்டார் - அடைந்தவர்களுடைய, நெறி - ஒழுக்கமாம், கண்டாய்—, எ - று.

இங்கு செவ்வெண்ணின்தொகை விகாரத்தால் தொக்கது. சினையாமை - ஆமைக்குட்டிகள் என்னலுமாம். (கஎ)

209. அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்

தையே,பூண்டுவிரோத ஞ்செய்யும்பொய்ச்சூதை
மிக்கோர்கள், தீண்டுவரோ வென்றார் தெரிந்து.

209. As gambling (at dice) uproots virtue, sends people to the worst of Hells, begets a hard heart, prevents mercy, and causes anger to beget enmity, will the great indulge themselves in deceitful dice? Thus spoke the prince's ministers after deliberation.

(இ - ள்,) [சூது] அறத்தை - தருமத்தை, வேர் - வேரிலே, கல்லும் - பெயர்க்கும், அருநரகில் - அருமையான நரகத்தில், சேர்க்கும் - சேரச்செய்யும், திறத்தையே கொண்டு - வலிமையையே பிரதானமாகவைத்துக்கொண்டு, அருளை-இரக்கத்தை, தேய்க்கும் - நாசப்படுத்தும், மறத்தையே - கோபத்தையே, பூண்டு - அடைந்து, விரோதம் செயயும் - பகையை யுண்டாக்கும், பொய் சூதை - (இப்படிப்பட்ட) வீணான சூதை, மிக்கோர்கள் - மேலானவர், தெரிந்து-அறிந்து, தீண்டுவரோ-தொடுவார்களோ, என்றார் - என்று சொன்னார்கள், எ - று.

கல்லும் என்பது முதலியவற்றைப் பெயரெச்சமாகக் கொண்டு சூதுக்கு விசேடணமாக்கி ஒரு முடிபா வுரைக்கலாமாயினும் கருதியது அப்பிரதானம் ஆகும் என்பது பற்றி இங்ஙனம் உரைத்ததெனை அறிக.

210. உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.

210. Gambling destroys brightness, overthrows the greatness arising from truth, wastes the wealth that may be given in charity, destroys every noble quality and prevents the love of friends. The evils arising from gambling ara not a few. Will the great therefore, gamble at dice?

(இ - ள்.) [சூது] உரு அழிக்கும் - பொலிவைக்கெடுக்கும், உண்மை உயர்வு அழிக்கும் - சத்தியத்தின் மேன்மையைப் போக்கும், வண்மை திரு - ஈகைச்செல்வத்தை, அழிக்கும்—, மானம் சிதைக்கும் - கவுரவத்தை அழிக்கும், மருவும் ஒருவரோடு - சிநேகிக்கும் ஒருவருடனே, அன்பு-பிரியத்தை, அழிக்கும்—, ஒன்று அல்ல - (சூதால் வருங்கேடு) ஒன்றேயன்று, (இப்படிப்பட்ட பலவுமாம் ஆதலால்,) தக்கோர் - யோக்கியர், சூது - சூதை, புரிந்து- விரும்பி, பொருவரோ-ஆடுவார்களோ [ஆடமாட்டார்கள்] எ - று.

பொருதல் - யுத்தஞ்செய்தல். சூதாட்டமும்அப்படிப்பட்டதாதலால் பொருவரோ என்றார். திருவழிக்கும் என்பதில் வழிக்கும் எனப்பிரித்து வழிந்துப்போடும் என்றும் உரைக்கலாம். (உகூ)

211. ஆயம் பிடித்தாரு மல்லற் பொதுமகளிர்
நேயம்பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரின் னூலோர் வழக்கு.

211. What do those say who are learned in the Shastras written by studious and clear rishis? Do they not say that gamblers at dice and those who place their affections in ruinous harlots, are those only who have deceit in their minds?

(இ - ள்.) ஆயம் பிடித்தாரும் - பாச்சிகையை கைக்கொண்டவர்களும், அல்லல் - துன்பமுள்ள, பொது மகளிர் நேயம் - வேசிகளுடைய சிநேகத்தை, பிடித்தாரும்—, நெஞ்சிடை - மனதில், மாயம் - வஞ்சனையை, பிடித்தாரின்-கொண்டவர்களைக் காட்டிலும், வேறு அல்லர் - வேறாகமாட்டார், என்று உரைப்பது அன்றே - என்று சொல்லுகிறதல்லவா, வடித்தார் - தீமை நீக்கி நன்மையெடுத்த முனிவர்களுடைய, இன் - இனிமையான, நூலோர் - சாஸ்திரங்களைக் கற்றவர்களது, வழக்கு - விவகாரம் [பேச்சு என்கிறபடி,] எ - று.
ஏ - அசை.

மனதில் வஞ்சனையுள்ளவர் பிறரை மோசம்போக்கி அவர் பொருளைக் கவர்வது முதலிய பாதகஞ் செய்ய உடன்படுவா ராதலின் அவரில் வேறல்லர் என்றார். (௬௦)

212. தீது வருக நலம்வருக சிந்தையாற்
சூது பொரவிசைந்து சொல்லினோம்—யாதும்
விலக்கலிர்நீ ரென்றான் வராலேற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று.

212. Nala, who possessed the country filled with the rippling water which is disturbed by the buffaloes, as they come against the veral fish, answered and said—" I care not if good or ill comes of dice I have of my own will consented to play. Do not prevent me"

(இ - ள்.) [இவ்வாறு மந்திரி முதலியோர் சொல்லியதைக் கேட்டு,] வரால் ஏற - வரால் மீன்கள் ஏறுவதினால், மேதி - எருமைகள், கலக்கு - கலக்குகின்ற, அலை - அலைகின்ற, நீர் - நீரை யுடைத்தான, நாடன் - நிடதநாட்டையுடைய நளன், கனன்று - கோபித்து, தீது வருக - தீமைவரட்டும், நலம் வருக - நன்மை வரட்டும், சிந்தையால் - மனதினால், சூது பொர - சூது ஆடுகிறதற்கு, இசைந்து - ஒத்துக்கொண்டு, சொல்லினோம் - (பிறனுக்குச்) சொல்லினோம், நீர் - நீங்கள், யாதும் - எதையும், விலக்கலிர் - தடுக்காதேயுங்கள், என் றான் —, எ - று.

சொன்னபேச்சைத் தவிர்த்தல் கூடாதென எண்ணி இங் ஙன முரைத்தா னென்றபடி. விலக்கலிர்—எதிர்மறை யேவற் பன்மை வினைமுற்று. விலக்கு - பகுதி, அல் (எதிர்மறைப்பண் படி) - இடைநிலை, இர் - விகுதி. (௬௧)

213. நிறையில் கவறுட னீநினைந்தாயாகில்
இறையிற் கதிற்முத்தஞ் சிந்தும்—துறையில்
கரும்பொடியா மள்ளர் கடாவடிக்கு நாடா
பொரும்படியா தென்றானிப் போது.

213. Putcaran, addressing Nala, said—"O Nala, who possessest the country in which the ploughmen drive, with broken pieces of sugarcane, the buffaloes on the river bank, on which lie scattered priceless brilliant pearls! If you have agreed to play at this wicked game of dice what is to be your wager?

(இ - ள்.)[இப்படி நளன் துணிந்திருக்கையில் அவனைநோக்கிப் புட்கரன்,] திறைஇல் - விலையில்லாத, கதிர் முத்தம் - ஒளியுள்ள முத்துக்களை, சிந்தும்-உதிர்க்கிற, துறையில் - நீர்த்துறைகளில், கரும்பு ஒடியா - கருப்பங்கழியை யொடித்து, மள்ளர் - திண்ணியர், கடா - எருமைகடாக்களை, அடிக்கும் - அடித்து ஓட்டுகிற, நாடா - நாடுடையவனே, நிறையில் - சற்குணமில்லாத, கவறு ஆடல்-சொக்கட்டானாட்டத்தை, நீ—, நினைந்தாயாகில் - மனங்கொண்டிருந்தால், இப்போது—,பொரும்படி - சூது ஆடும்படியான, (பணையம்) யாது என்றான் - எது என்று வினவினான், எ-று.

இங்கு படியென்பது விதத்துக்கு வாராமல் அதனையுடையதற்கு வந்ததெனக் கொள்க. (சஉ)

214. விட்டொளிர்வில் வீசி விளங்குமணிப் பூணா
ரம், ஒட்டினே னுன்பணைய மேதென்ன—மட்
டவிழ்த்தார், மல்லேற்ற தோளானும் வான்ப
ணைய மாகத்தன், கொல்லேற்றை வைத்தான்
குறித்து.

214. Nala replied. " I have staked my necklace of jewelled rubies which emit bright and twinkling rays; what is your wager? To which Putcaran whose shoulders strong in wrestling, were adorned with fragrant garlands, stated as his great wager, his murderous bull.

(இ - ள்.) [புட்கரனை நோக்கி நளன் கூறியது,] விட்டு - விலகி, ஒளிர் வில் வீசி - பிரகாசிக்குங் காந்தியை வியாபிக்கச் செய்து, விளங்கும் - ஜொலிக்கின்ற மணி - இரத்தினங்க

ளாலாகிய பூண் ஆரம் - பூணத்தக்க மணிமாலையை, ஒட்டினேன் - பணையமாகவைத்தேன், உன் பணையம் ஓது என்ன-நீ வைக்கும் பந்தயப்பொருளைச் சொல் என்றுவினவ, மட்டு அவிழ் - வாசனை வீசப்பெற்ற, தார் - மாலையணிந்த, மல் ஏற்ற - மல்ல யுத்தத்தை ஏற்கத்தக்க, தோளானும் - தோளையுடைய புட்கரனும், தன் கொல் ஏற்றை-தன்னுடைய கொல்லுந் திறமுடைய விருஷபத்தை, வான் பணையம் ஆக-பெரிய பந்தயமாக, குறித்து - ஏற்படுத்தி, வைத்தான்—, எ - று.

வில் என்பது வில்போல் வளைவான காந்தி. இரத்தினங்கள் அசையும்போது அவற்றின் காந்திகள் வளைவாய் வீசுமாதலால் வில் என்னப்பட்டன. நட்சத்திரங்களைப்போல் அக்காந்திகள் இடையிட்டுக் காணப்படுதலால் விட்டொளிர் வில் வீசி யென்றார். கொல்ஏறு என்றுங் குறித்து என்றுங் கூறியது நீ வைத்த ஆரத்தினும் மேலான பொருள் யான்வைத்தபணையம் என்பதைக் குறிப்பிக்கின்றது. (சக)

215. காரேயுங் கூந்தலார் காரிகைமேற் காதலித்த
தாரேயுந் தோளான் றனிமனம்போல்—நேரே
தவறாய்ப் புரண்ட தமையனொடுங் கூடி
கவறாய்ப் புரண்டான் கலி.

215. Just as the mind of Nala, whose shoulders were decked with garlands, and who loved the cloudy tressed Damayanti, became bent on one subject, so did Kali, uniting himself with Putcaran, whose mind was changed to evil, uniformly roll as the dice.

(இ - ள்.) கார் ஏயும் கூந்தல் ஆர் - மேகத்தையொத்த தலை மயிர் நிறைந்த, காரிகைமேல் - தமயந்தியின்மேல், காதலித்த - ஆசைப்பட்ட, தார் ஏயும் - மாலையைப் பொருந்தின தோளான் - தோளையுடைய நளனது, தனி மனம்போல் - ஒன்றியான மனதைப்போல், நேரே - நேராக, தவறாய் - தப்பாய், புரண்ட - மாறின, தமையனொடும் கூடி - தமையனு

கிய புட்கரனேடுகூடிக்கொண்டு, கலி - கலிபுருஷன், கவருய்- பாய்ச்சிகையாய், புரண்டான்—, எ-றி.

பந்தயம் ஒன்று வீழ்ந்தால் வேறென்ருகக்கூறுதல், கட்டங்களை மாற்றுதல், இவைகளால் சத்தியத்தினின்றும் புரண்டவனுகிய புட்கரனுக்குச் சகாயமாய் நேரே கவருகவே நின்று கலிபுரண்டானெனக் கருத்துக்கொள்க. தமையனென்பதை கலிக்குத் தமையனுகிய துவாபரன் என்றுஞ் சொல்லலாம்.

216. வைத்த மணியாரம் வென்றேன் மறுபலகைக்
கொத்தபணைய முரையென்ன—வைத்தநிதி
நூருயிரத்திரட்டி நூறுநா ருயிரமும்
வேருகத் தோற்ருனவ் வேந்து.

216. Putcaran addressing Nala said, " I have won from you your necklace of jewelled rubies. What will you stake for the next game ? And Nala thus lost to him innumerable treasure.

(இ - ள்.) வைத்த - (பந்தயமாக) வைத்த, மணியாரம் - இரத்தின மாலையை, வென்றேன் - ஜயித்துக்கொண்டேன், மறுபலகைக்கு - மற்றொரு ஆட்டத்திற்கு, ஒத்த - பொருந்தின, பணையம்—, உரை - சொல்லு, என்ன - (புட்கரன்) சொல்ல, அவ்வேந்து - அந்த நளமகாராஜன், வேருக - வேறு வேருக, வைத்த - (பணையமாக) நிறுத்தின, நிதி - திரவியமாகிய, நூருயிரத்து - நூராயிரத்தையும், இரட்டிநூறு நூருயிரமும் - இரட்டித்த அநேக லக்ஷங்களையும், தோற்ருன் - தோற்றுப் போனுன்—, எ-று.

பலகை - சொக்கட்டான்பலகை, ஆட்டத்துக்கு ஆகுபெயராயிற்று. இரட்டி - இரட்டுதலையுடையது அல்லது வினைத் தொகையாகிய இரட்டித்த என்பதுமாம். (சரு)

217. பல்லா யிரம்பரியும் பத்துநா ருயிரத்துச்
சொல்லார் மணித்தேருந் தோற்றதற்பின்—வில்
லாட்கள், முன்ருேற்று வானின் முகிருேற்கு
மல்யானை, பின்ருேற்றுத் தோற்ருன் பிடி.

217. After losing many thousands of heroes, and a million of jewelled chariots of fame; Nala lost his army of archers; then his male elephants superior even to the clouds in the heavens and lastly his female elephants.

(இ-ள்.) பல்லாயிரம் - அநேக ஆயிரம், பரியும் - குதிரைகளும், பத்து நூறாயிரத்து - பத்து லக்ஷம், சொல் ஆர் - புகழ் நிறைந்த, மணி தேரும் - இரத்தின ரதங்களும், தோற்ற தன்பின்—, வில் ஆட்கள் - வில்வீரராகிய காலாட்களை, முன் தோற்று - முந்தித்தோற்று, வானில் - ஆகாயத்திலிருக்கிற, முகில் - மேகங்கள், தோற்கும் - தோற்றுப்போம்படியான, மால் யானை - பெரிய ஆண்யானைகளை, பின்தோற்று - பின்பு தோற்றுவிட்டு, பிடி -பெண்யானைகளை, தோற்றான்—,(நளன்) எ - று.

ஆண் யானையைக் காட்டிலும் பெண்கள் ஏறும்படியான பெண்யானைகள் சிறந்தவையாதலின் அவற்றைப் பின்தோற்றான் என்றார். (௪௬)

218. சாதுரங்கம் வென்றேன் தரும்பணைய மேதென்
ன, மாதுரங்கம் பூணா மணித்தேரான்—சூதரங்
கில், பாவையரைச் செல்வழியாழ்ப் பண்ணின்
மொழிப் பின்னாகுழற், பூவையரைத் தோற்றான்
பொருது.

218. Putcarau then said :—" I have won from you your four kinds of armies What is your next wager ?" and Nala, who possessed the jewelled chariot drawn by huge horses, lost by dice, the damsels who resembled dolls, and whose words were as sweet as the maritime tunes played on the harp, and whose tresses were plaited together at the back of their heads.

(இ - ள்.) சாதுரங்கம் வென்றேன் - யானை குதிரை தேர் காலாள் என்கிற நால்வகைச் சேனைகளையும் ஜயித்தேன், தரும் - (மேலாட்டத்திற்குக்) கொடுக்கத்தக்க, பணையம்—

ஏது என்ன - எது என்று (புட்கரன் கேட்க), மா தரங்கம் பூணும் - பெரிய குதிரைகள் அணிந்திருக்கிற, மணி தேரான் - இரத்தினமிழைத்த தேரையுடைய நளன், சூது அரங்கில் - சூதமாடுஞ் சபையில், பொருது - சூதாட்டச் சண்டைசெய்து, பாவையரை - பதுமைபோன்றவராகிய, செவ்வழியாழ் - செவ்வழியென்னும் இராகம் பாடுகின்ற நெய்தனிலத்து வீணையினது, பண்ணின் - பாட்டைப்போன்ற, மொழி - சொற்களையும், பின்னு - பின்னியிருக்கிற, குழல் - கூந்தல்களையு முடையவரான, பூவையரை - பெண்களை, தோற்றான் —, எ-று.

சதுரங்கம் என்பது முதல் நீண்டது. (சஎ)

219. கற்பின் மகளிர்பா னின்றுந் தமைக்கவட்டின்
விற்கு மகளிர்பான் மீண்டாற்போல் — நிற்கும்
நெறியானை மெய்ம்மைவாய் நின்றானை நீங்கிச்
சிறியானைச் சேர்ந்தா டிரு.

219. Lakshmi left the virtuous and upright Nala and joined the base Putcaran, as if one deserted the chaste damsels and joined the harlots who sold themselves by deceit.

(இ - ள்.) கற்பின் - பதிவிரதாகுணமுள்ள, மகளிர்பால் நின்றும் - பெண்களிடத்திலிருந்து [அவர்களை விட்டென்கிறபடி,] தமை - தம்மை, கவட்டின் - கபடத்தினால், விற்கும் - பணங் கொடுப்பவர்க்கு விற்றதுபோல் காட்டுகின்ற, மகளிர் பால் - வேசிப்பெண்களிடத்தில், மீண்டாற்போல் - திரும்பியதுபோலே, நிற்கும் நெறியானை - நிலைபெற்ற நல்லொழுக்கமுள்ளவனும், மெய்ம்மைவாய் நின்றானை - சத்தியத்திலிருந்தவனுமாகிய நளனை, நீங்கி - விட்டு, திரு - இலக்குமி, சிறியானை - குணங்களில் தாழ்ந்தவனாகிய புட்கரனை, சேர்ந்தாள் அடைந்தாள், எ - று.

இலக்குமி என்பது ஈண்டு செல்வத்தை ; அது கற்புடையாரிடத்திருப்பது நீதி. கலை யல்குல் விற்கு மகளிர் எனவும்பாட

முண்டு ; அப்போது மேகலாபரணந்தரித்த அல்குலை விற்கு மகளிர் எனப்பொருள் கொள்க. (சஅ)

220. மனைக்குரியா ரன்றே வருந்துயரந் தீர்ப்பார்
சினைச்சங்கின் வெண்டலையைத் தேனல் - நனைக்
கும், குவளைப் பணைப்பைந்தாட் குண்டுநீர்
நாடா, இவளைப் பணையந்தா வின்று.

220. Putcaren said: "O Nala, who possessed the fertile country, in which the heads of the pregnant conch become moistened in the honey which falls from the blue lotus, whose thick green stalk springs up from the depths of the water! should not a wife relieve the troubles of her husband? Therefore, stake Damayanti as your next wager."

(இ - ள்.)[இப்படி யெல்லாந் தோற்றபின் புட்கரன் சொல்வது,] சினை சங்கின் - கருவுற்றிருக்கிற சங்குப் பூச்சிகளின், வெண் தலையை - ஓட்டை, [சங்குகளை யென்றபடி,] தேனல் நனைக்கும் - தேன்பெருக்கால் நனைக்கின்ற, குவளை - நீலோற்பலங்களுடைய, பணை - பருத்த, பைந்தாள் - பசுமையான தாள்களையுடைய, குண்டு நீர் நாடா - ஆழமான ஜலமுள்ள நாட்டையுடைய நளனே, மனைக்கு உரியார் அன்றே-இல்லறத்துக் குரியவர்களாகிய மனைவிகளல்லவோ, வரும் துயரம் தீர்ப்பார் - (கணவர்க்கு) வரும் துயரத்தை தீர்க்கத்தக்கவர், (ஆதலின்) இன்று - இப்போது, இவளை-இந்தத்தமயந்தியை, பணையம் தா - பணையமாகக் கொடு, என்று சொன்னனென முடித்துக் கொள்க, எ - று. (சகூ)

221. இனிச்சூ தொழிந்தோ மினவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூ
தப், பூம்போ தவிழ்க்கும் புனனாடன் பொன்
மகளே, நாம்போது மென்றா னளன்.

221. Nala, addressing Damayanti, said:—"O that excellent daughter of king Bhima, who possesses the

fertile country in which the swarms of bees, in the groves of fruitful and lofty mango trees, ploughing and shaking and humming on the bright flowers, make them to blossom! We have renounced dice from this time. We shall now go."

(இ-ள்.) [நளன் எல்லாந்தோற்று வறியனாய் நிற்கையில்தமயந்தியைப் பந்தயமாக வைக்கும்படி புட்கரன் சொன்னதைக் கேட்டுச் சொன்னது] நளன்—, இன வண்டு கிண்டி - கூட்டமாகிய வண்டுகள் குடைந்து, கனி - பழங்களையுடைய, சூதம் - மாமரங்களுடைய, வார் பொழிலின்கண் - பெரிய தோட்டத்திலே, பனிச்சு - அசைந்து, ஊத - ஊதுவதினால், பூ போது அவிழ்க்கும் - பூ அரும்புகளை விரியச்செய்கிற, புனல் நாடன் - நீர்வளமுள்ள விதர்ப்பநாட்டரசனுடைய, பொன் மகளே - பொன்போன்ற மகளே, இனி - இனிமேல், சூது ஒழிந்தோம் - சூதாட்டத்தை விட்டோம் (ஆதலின்) நாம்—, போதும் - போவோம், என்றான்—, எ-று. ஏ-அசை.

பனித்து என்னும் வினையெச்சத்தில் தகரத்துக்குச் சகரம் போலியாய் வந்தது. போதும்—உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று [வினையியல் - கரு - - சூ.] (௫0)

222. மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்
மலரைப், புன்காகங் கொள்ளத்தான் போனாற்
போல்—தன்கால், பொடியாடத் தேவியொடும்
போயினா னன்றே, கொடியானுக் கப்பார்
கொடுத்து.

222. Just as the soft-footed and downy-feathered swan resigns to the mean crow, the soft lotus flower on which she sat with pride, so Nala gave up to the cruel Putcaran, his kingdom; and in company with Damayanti walked away, the dust cleaving to his feet.

(இ-ள்.) மெல் கால் - மென்மையான பாதங்களையும், சிறை- சிறகுகளையு முடைத்தான, அன்னம் - அம்சபக்ஷியானது,

வீற்றிருந்த - (தான்) பெருமையோடு உட்கார்ந்திருந்த, மெல் மலரை - மெல்லிய தாமரைப்பூவை, புன் காகம் - அற்பத் தன்மையுள்ள காக்கை, கொள்ள - கைப்பற்றிக்கொள்ள, தான் - அது, போனால் போல் - போய்விட்டதைப்போல். அப் பார் - அந்த இராச்சியத்தை, கொடியானுக்கு-கொடியவனான புட்கரனுக்கு, கொடுத்து—, தன் கால் - தன் பாதம். பொடி ஆட - தூளிலேபடியும்படி, தேவியொடு - மனைவியோடுகூடி, அன்றே போயினான் - அன்றைக்கே போனான் (நளன்), எ-று.

உம்—அசை. இப்படியே பிறவிடத்தும் பொருளில்லாத உம்மையை அசையெனக் கொள்க. (ருக)

223. கடப்பா ரெவரே கடுவினையை வீமன், மடப்
பாவை தன்னுடனே மன்னன் — நடப்பான்
வனத்தே செலப்பணித்து மாயத்தாற் சூழ்ந்த
தனைத்தே விதியின் வலி.

223. The powers of Fate, having caused Nala to go to the wilderness in company with Damayanti, the daughter of Bhima, seemed to surround them with deceit. There-fore, no one can escape the evil caused by cruel Fate.

(இ - ள்.) கடு வினையை - கடுமையான விதியை, கடப்பார் எவர் - தாண்டிச்செல்ல வல்லவர் யாவர்? விதியின் வலி - தீவினையின் வல்லமையானது, வீமன் மட பாவை தன், னுடனே - தமயந்தியுடனே, மன்னன் - நளமகாராஜன், நடப்பான் - நடப்பவனாகி, வனத்தே செல பணித்து - காட்டிற் போம்படி செய்து, மாயத்தால் - வஞ்சனையினால், சூழ்ந்தது அனத்தே - சுற்றிக்கொண்டதுபோ லிருந்தது, எ-று.

விதி வேண்டுமென்று நளனை இப்படிச் செய்யவஞ்சனையால் ஆலோசித்ததே யல்லது, நளன் அப்படியாகுந் தன்மையனல் லன் என்று குறித்து விதியைக் கடக்க யார் திரம் என்று ஸ்தாபித்தார், ஏ - அசை. (ருஉ)

224. ஆருயிரின் றாயே யறத்தின் பெருந்தவமே,
பேரருளின் கண்ணே பெருமானே — பாரிடத்
தை, யார்காக்கப் போவதுநீ யாங்கென்றார் தங்
கண்ணின், நீர்வார்த்துக் கால்கழுவா நின்று.

224. The inhabitants of the town of Mahavindum, washing the dust of their feet with tears, addressing Nala, said:—" O thou, that art a mother to our precious lives: that resemblest the great penance done by virtue, that art like the eye of tender mercy, O king; Whom have you appointed to protect this town that you leave it and go away ?"

(இ-ள்.) [அப்பொழுது அந்நகரத்தார் அரசனை நோக்கி] தம் கண்ணின் நீர் வார்த்து - தம் கண்ணீர்களை யூற்றி, கால் கழுவா நின்று - பாதங்களை யலம்பிக்கொண்டு, ஆர் உயிரின் தாயே - அருமையான உயிர்களினுடைய தாய்போன்றவனே, அறத்தின் பெரு தவமே - தருமத்தினது பெரிய தவத்தோடு ஒத்தவனே, பேர் அருளின் கண்ணே-பெரிய இரக்கத்தினது கண்ணுக்குச் சமானமானவனே, பெருமானே - அதிபதியே, பார் இடத்தை - (இந்தப்) பூமியின் இடத்தை, [தேசத்தை யென்கிறபடி], யார் காக்க - எவன் இரட்சிக்கவிட்டு, நீ— ஆங்கு - அவ்விடத்தில், போவது - போகிறது, என்றார்- என்று சொன்னார், எ-று.

போவது தொழிற்பெயர் எழுவாய், உண்டானது என்பது தோன்றாப்பயனிலை.

துக்கத்தினால் தலையிறங்கி நின்றதனால் காலின்மேல் கண்ணீர் ஒழுகிற்று. (௫௩.)

225. வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழுந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்.

225. "Though the sea should overflow its bank, and the Vedas depart from their own rules, though all the inhabitants of the earth should depart from justice, will the sceptered monarch swerve from the right path? Will they violate the truth in any one instance?"

(இ-ள்.) [அவர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொள்வது] வேலை கரை இழந்தால் - சமுத்திரம் கரையைக் கடந்தாலும், வேதம் நெறி பிறழ்ந்தால் - வேதமானது சத்தியகதியினின்றும் மாறினாலும், ஞாலம் முழுதும் நடு இழந்தால் - பூமியெல்லாம் நடுநிலைமையை விட்டாலும், செங்கோலவர் - செவ்வையான துரைத்தனமுடையவர், சீலம் ஒழிவரோ - நல்லொழுக்கத்தினின்றும் நீங்குவார்களோ, செம்மை உரை - செவ்வையாகிய சொற்கள், திறம்பா செய்கை - மாறாத செய்கை, அழிவரோ - அழியப்பெறுவார்களோ, (சத்தியம் தப்புவார்களோ என்பதாம்), எ-று.

வினையெச்சங்கள் செவ்வெண். (ருச)

226. வடியேறு கூரிலைவேன் மன்னவோ வுன்றன்
அடியேங்கட் காதரவு தீரக்—கொடிநகரில்
இன்றிருந்து நாளை யெழுந்தருள்க வென்றுரைத்
வென்றிருந்த தோளான்றாள் வீழ்ந்து. [தார்

226. Worshiping at the feet of Nala, who possessed victorious shoulders, they said:—"O king, who possessest leaf-like lance, sharp and powerful as a thunder bolt! to oblige us, your servants, remain in this town, adorned with flags, and go on the morrow."

(இ-ள்.) [மேலும் அவர்கள்] வென்றிருந்த-ஜயம்வீற்றிருந்த, தோளான் - புஜமுள்ள நளனுடைய, தாள் வீழ்ந்து - பாதத்தில் வீழ்ந்து, வடி - வடித்த, ஏறு - இடிபோன்ற, கூர் - கூர்மையான, இலை - இலையொத்த, வேல் - வேலாயுதமுடைய மன்னவோ - மன்னனே, உன்றன் அடியேங்கட்கு - உன் அடியார்களாகிய எங்களுக்கு, ஆதரவு தீர-ஆசைதீரும்படி, கொடி

நகரில் - கொடிகள் விளங்கும் இப்பட்டணத்தில், இன்று இருந்து - இன்றைக் கிருந்து, நாளை எழுந்தருள்க -நாளைக்குப் போகவேண்டும், என்று உரைத்தார் - என்று பிரார்த்தித்துச் சொன்னார்கள், எ - று.

மன்னவோ—புலம்பலில் ஓகாரம் விளியுருபாய் வந்தது. வென்றி - வெற்றி, ஈறுதொக்கது ; வென்று வினையெச்சமாக் கொண்டு ஜயித்திருந்த என்று பொருள்கூறின் பிற்காலத்து அத்திறமை யில்லையெனத் தோன்றிச் சிறப்பில்லதாம். வென்று எனவே ஒருபெயராச் சிலர் கூறுகின்றனர். கொடு இ நகரில் என்று பிரித்து, கொடுமையான இந்தப்பட்டணத்தில் என்றும் உரைக்கலாம். (௫௬)

227. மன்றலிளங் கோதை முகநோக்கி மாநகர்வாய்
நின்றுருகு வார்கண்ணி னீர்நோக்கி—இன்றிங்
கிருத்துமோ வென்று ளிளங்குதலை வாயாள்
வருத்தமோ தன்மனதில் வைத்து.

227- Addressing the fragrant and soft-tressed Damayanti, Nala, asked:—“ Shall we remain here to-day ?”—Was this because he saw the tears of the yeoplewho wept in the great town ? Or was it because he contemplated the suffering of his wife whose speech was like the prattling of an infant ?

(இ - ள்.) மா நகர்வாய்நின்று - பெரிய பட்டணத்தின்கண் இருந்து, உருகுவார் - மனந்தளர்ந்து வருந்துகிறவர்களுடைய கண்ணின் நீர் நோக்கியோ - கண்ணீரைப்பார்த்தோ, இளம் குதலைவாயாள் - இளமையான மழலைச்சொல்லை வாயிலுடைய மனைவியினது, வருத்தம் - வருத்தத்தை, தன் மனத்தில்வைத்தோ - தன் இருதயத்தில் எண்ணியோ (நளன்,) மன்றல்-கலியாணஞ் செய்துகொண்ட, இளம் கோதை -இளம்பெண்ணான தமயந்தியின், முகம் நோக்கி - முகத்தைப்பார்த்து, இன்று - இன்றைக்கு, இங்கு - இந்நகரத்திலே, இருத்துமோ - இருப்போமா, என்றான்—, எ - று.

இருத்தும்—தன்மைப்பன்மை யுளப்பாட்டு வினைமுற்று; தும் விகுதி எதிர்காலங் காட்டியது[பதவியல் கஅ - ம் - சூ.] ஓகாரம் வினா. வருத்தமோ என்னும் ஓகாரத்தை நோக்கி, வைத்து என்பவைகளிற் கூட்டினும்; இது ஐயப்பொருள்.

228. வண்டாடுந் தார்நளனை மாநகரில் யாரேனுங்
கொண்டாடி னார்தம்மைக் கொல்லென்று —
தண்டா, முரசறைவா யாங்கென்றான் முன்னே
முனிந்தாங், கரசறியா வேந்த னழன்று.

228. Putcaran, who knew not how to sway the sceptre, becoming enraged as before, addressing one of his followers said:—"Let it be proclaimed by coutinued beating of the drums that those shall be put to death who shew attention to Nala, who is adorned with a garland on which the bees swarm.

(இ - ள்.) [இப்படி யிருக்கையில்] அரசு அறியா வேந்தன் - துரைத்தனத்தை அறியாத புட்கரராசன், முன்னே முனிந்தாங்கு அழன்று - முன்பு கோபித்ததுபோலக் கோபித்து, மா நகரில் - இந்தப் பெருநகரத்தில், வண்டு ஆடும் தார் - வண்டுகள் களிப்போடு அசைந்தாடிக்கொண் டிருக்கப்பெற்றபூமாலை தரித்த, நளனை—, யாரேனும் கொண்டாடினார் தம்மை - யாராகிலும் உபசரித்து ஆதரித்தவர்களை, கொல் என்று - நீ கொன்றுபோடு என்று (ஒருவனுக்குக் கட்டளையிட்டு,) தண்டா முரசு அறைவாய் - ஓயாத பேரிகையை அடித்து ஓசைப்படுத்து என்றான்—, எ - று.

ஆங்கு - அசை. முன்னே என்றது சூதாடும்போது; ஆட்டத்தில் ஆவேசங்கொண்டு கோபித்தல் இயல்பு. கொண்டாடினவரைக் கொல்லென்று பாடமோதின் மிகநேர். வண்டாடுந் தார் முதலிய விசேஷணங்கள் முன்பிருந்த நிலைநோக்கி.

229. அறையும் பறையரவங் கேட்டழிந்து நைந்து
பிறைநுதலாள் பேதைமையை நோக்கி — முறு

வலியா, "இந்நகர்க்கீ தென்பொருட்டா வந்த
தென வுரைத்தான், மன்னகற்றுங் கூரிலைவேன்
மன்.

229. Nala, who possessed a sharp leaf-like lance with which he destroyed his royal foes, becoming depressed, as he listened with sorrow to the beating of the drums, gazed at Damayanti, whose forehead resembled the crescent moon, and smiling at her simplicity, said:—" It is on my account that troubles have come upon this city."

(இ-ள்.) மன் அகற்றும் - பகைமன்னர் நீங்கும்படியான, கூர் இலை வேல் மன் - கூர்மையான இலைபோன்ற வேலைத் தரித்த நளமகாராசன், அறையும் பறை அரவம் - அடிக்கின்ற வாத்தியத்தின் ஓசையை, கேட்டு,— அழிந்து - மனநொந்து, நைந்து - சோர்ந்து, பிறைநுதலாள் - தமயந்தியின், பேதைமையை - நுட்பம் அறியாததன்மையை, நோக்கி,— முறுவலியா - நகைத்து, இந்நகர்க்கு - இப்பட்டணத்துக்கு, ஈது - இந்தத்துன்பம், என் பொருட்டு ஆ - என் நிமித்தமாக, வந்தது என - உண்டாயிற்றென்று, உரைத்தான் - சொல்லினன், எ - று. (உஉ௯)

230. தன்வாயின் மென்மொழியே தாங்கினனீங்கு
நகர்ப், பொன்வாயில் பின்னாகப் போயினன்—
முன்னாளில், பூமகளைப் பாரினொடு புல்லி
னன் றன்மகனைக், கோமகளைத் தேவியொடுங்
கொண்டு.

230. Nala, who once possessed riches and a kingdom taking his son and his daughter with his wife, and speaking in gentle tone, left behind him the golden gate of that fertile city.

(இ - ள்.) முன்!நாளில்-இதற்குமுந்தியகாலத்தில், பூமகளை - இலக்குமியை, பாரினொடும் புல்லினன் - பூமிதேவியோடு

அணிந்தவனாகிய நளமகாராஜன், [செல்வமும் இராச்சியமும் பெற்றவனென்றபடி,] தன் மகனை - தன் குமாரனையும், கோமகளை - தன் புத்திரியாகிற ராச கன்னிகையையும், தேவியொடு - மனைவியான தமயந்தியோடு, கொண்டு - இட்டுக்கொண்டு, தன் வாயில் - தன்னுடைய வாக்கிலே, மெல் மொழியே - மெதுவான சொல்லையே, தாங்கினான் - உடையவனாகி, ஓங்கும் நகர் - உயர்ந்த பட்டணத்தின், பொன் வாயில்- பொன்னாற்செய்த வாசலானது, பின் ஆக - பின்புறத்தது ஆகும்படி, போயினான்,— எ - று.

பூமகளைப் பாரினொடும் புல்லினான்-திருமால்என்றுகொண்டு அவன்முன்னாளில் அதாவது ராமாவதாரத்தில் சென்றதுபோலென்பது குறிப்பு.

மனைவியையு மக்களையும் இட்டுக்கொண்டு யாரிடத்துங் கடினமான சொல்லில்லாமல் நற்பேச்சையே பேசிக்கொண்டு நகரைவிட்டுத் திரும்பிநோக்காது சென்றானென்பது கருத்து.

231. கொற்றவன்பாற் செல்வாரைக் கொல்வான்
முரசறைந்து, வெற்றியொடு புட்கரனும் வீற்றி
ருப்ப—முற்றும், இழவு படுமாபோ லில்லங்க
டோறும், குழவிபா லுண்டிலவே கொண்டு.

231. While Putcaran being elated with victory, commanded the drums to be beaten, and a proclamation issued, that all should be put to death who followed Nala, every house in the city was in mourning, as if there were a death in it, and even the infants ceased to drink their mothers' milk.

(இ-ள்.) கொற்றவன்பால் செல்வாரை - நளமகாராசனிடத்திற் போகின்றவர்களை, கொல்வான் - கொலலுதற்கு, முரசு அறைந்து - பேரிகை அடிப்பித்து, வெற்றியொடு-ஜயத்தோடு புட்கரனும்—, வீற்று இருப்ப-பெருமையா யிருக்குமளவில் முற்றும் - அப்பட்டனமுழுதும், இழவுபடும் ஆறு போல் -

இழவுபட்ட விதத்தைப்போல், இல்லங்கள் தோறும்- வீடுகள் தோறும், குழவி - குழந்தைகளும், பால் - பாலை, கொண்டு - விருப்பங்கொண்டு, உண்டிலவே - உண்ணவேயில்லை, எ-று.

ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது. குழவி என்னுமிடத்துச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. உண்டில—உடன்பாட்டெதிர்மறை வினைமுற்று. (௩0)

232. சந்தக் கழற்றா மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரு நோவப் பதைத்துருகி—எந்தாய்
வடந்தோய் களிற்றாய் வழியான தெல்லாங்
கடந்தோ மோ வென்றார் கலுழ்ந்து.

232. The feet of his son, which were encircled with ankle-rings and which resembled the lotus flower, and the feet of his daughter, which were adorned with ankle ornaments, and were as tender as a young leaf, became painful : and the children faint and weary, exclaimed weeping:—" O father and mother who possessed male elephants ! Have we come to the end of our journey ?"

(இ-ள்.) [அப்போது நளனுடைய புத்திரனும் புத்திரியும் பெற்றோரை நோக்கிக் கூறுவது.] சந்தம் - அழகுள்ள, கழல்- வீரகண்டை யணிந்த, தாமரையும் - தாமரைபோன்ற பாதங்களும், சதங்கை அணி - பாதசரம் அணிந்த, பைந்தளிரும் - பசுமையான துளிரைப்போன்ற பாதங்களும், நோவ - நொந்ததினால், பதைத்து - தவித்து, உருகி - மனந்தளர்ந்து, கலுழ்ந்து - கலங்கி, எந்தாய் - எம் தகப்பனே, எம்தாயே ! வடம் தோய் - பெரியமணிமாலை அணிந்திருக்கிற, களிற்றாய் - யானையை யுடையவனே உடையவளே! வழியானதெல்லாம் - வழிமுழுவதையும், கடந்தோமோ - தாண்டினோமோ, என்றார்—, எ-று.

கழற்றாமரை யென்பதை ஆண்பிள்ளைக்கும், சதங்கையணி பைந்தளிர் என்பதை பெண்பிள்ளைக்குங் குறியாக் கொள்க;

பட்டத்து யானைக்குச் சிறந்த மணிவடமொன்று அணிவது வழக்கம். ஆகவே அப்படிப்பட்ட யானையை யுடையீர் அஃ தின்றி இவ்வாறு கால்நோவ நடக்க நேர்ந்ததுவென்னக் குறிப்பாய் அங்ஙனம் விளித்தாரென அறிக; ஆன்றோர் மக்கட்கு இளமைதொட்டு ஆழ்ந்துபேசுதல் இயல்பாம். எந்தை என்ப தற்கு [பெயரியல் சஉ - சஅ - ம்] சூத்திர விதிகளினால் ஈறு திரிபும்; எந்தாய் என்பதற்கு ஈறுஇயல்பும்வந்தன. களிற்றாய் என்பதற்கு [பெயரியல் ரு0-ருக-ம்] சூத்திரங்களினாலும்விளி யுருபுவந்தது. ஒரு சொல்லையே பெற்றோரிருவர்க்கும்அமைத் தார். வழியானதெல்லாம் என்பது ஒருமையிற் பன்மைவந்த வழுவமைதி; [பொதுவியல் உகூ-ம் சூ.] (சுகஉ)

233. தூயதன் மக்க டுயர்நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி—யாதுந்
தெரியாது சித்திரம்போ னின்றிட்டான் செம்மை
புரிவான் றுயராற் புலர்ந்து

233. The virtuous Nala, regarding the sorrow of his innocent children and contemplating the destructive power of Fatewhich surrounded them, became insensible through sorrow, and stood as immoveable as a picture.

(இ-ள்.) செம்மை புரிவான்-நன்மை செய்யவல்ல நளமகா ராசன், தூய - சுத்தரான, தன் மக்கள் - தன் குமாரருடைய, துயர் நோக்கி - வருத்தத்தைப் பார்த்து, சூழ்கின்ற - (தன்னைச்) சுற்றிக்கொண்டிருக்கின்ற, மாய விதியின் - மோசஞ் செய்ய வல்ல விதியினது, வலிநோக்கி-பலத்தையும் பார்த்து, துயரால் புலர்ந்து - துக்கத்தினால் உலர்ந்து, யாதும் தெரி யாது - எதுவுந் தோன்றாமல், சித்திரம்போல்- எழுதப்பட்ட சொரூபத்தைப்போல, நின்றிட்டான் - நின்றான், எ-று.

நின்றிட்டான் என்பதில் இடு-அசைநிலை; இப்படியே இருந்திரு, என்பவைகளையுங் கொள்க, எழுந்திருந்தான் போதந் தான் என்பன உதாரணம்; இவற்றைத் துணைவினையென இக் காலத்தார் வழங்குவர். முற்பாட்டில் இருவரையு நோக்கி மக்

கள் சொன்னதாகக் கொண்டபோது இப்பாட்டில் இருவரும் சித்திரம்போல் நின்றிட்டார் என்னவேண்டுவ தன்றேவெ னின் வேண்டுவதே, ஆயினும், இத்துன்பத்திற்குக் காரணமாக நின்றவனுனதினால் அரசன் மிக்க துயரமுற்றானென்பது தோன்ற இங்ஙன முரைத்தாரென அறிக. (கூஉ)

234\. காத லிருவரையுங் கொண்டு கடுஞ்சுரம்போக்
கேத முடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்
வீமன் றிருநகர்க்கே மீளென்றான் விண்ணவர்
முன், தாமம் புனைவாளைத் தான்.

234\. Addressing Damayanti, who placed on him the marriage garland before the Gods, Nala said;—" O thou fair one! It would be a sin for us to take, into the dense forests, these two children who are worthy of our love. Therefore take them with you and go to the beautiful town of your father, Bhima."

(இ-ள்.) விண்ணவர் முன் - தேவர்களுக்ெகதிரில், தாமம் புனைவாளை - (தனக்கு) மாலைசூட்டின (தமயந்தியை நோக்கி,) மாதராய் - அழகுடையவளே, காதல் இருவரையும்கொண்டு-நம் அன்புக்குரிய இம்மக்களிருவரையும் இட்டுக்கொண்டு, கடுசுரம் போக்கு - கடுமையான காட்டில் போவது, ஏதம் உடைத்து-குற்றமுள்ளது (ஆதலின்,) நீ—, இருவரைக்கொண்டு - இம்மக்களை யிட்டுக்கொண்டு, வீமன் திருநகர்க்கே-(உன் தந்தையாகிய) வீமராசனுடையசிறப்புள்ள பட்டணத்துக்கே, மீள் - செல், என்றான்—, (நளன்) எ-று. தான் அசை.

சுரம் - பாலைநிலமுமாம். போக்கு-தொழிற்பெயர்; போ - பகுதி, கு - விகுதி. (கூங)

235\. குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்,
பெற்றுக் கொளலாம் பெறலாமோ—கொற்றவனே
நோக்கா தலனைக் குலமகளுக் கென்றுறைத்தாள்,
நோக்கான் மழைபொழியா நொந்து.

235. The tears flowing like rain drops from her eyes and sorely distressed, Damayanti replied, "O king! to the lady of high birth innocent and prattling children may be born; but can she get a high born husband?"

(இ-ள்.) [அதுகேட்டுத் தமயந்தி] நோக்கால்-நேத்திரத்தினால், மழை பொழியா - மழையைப் பொழிந்துகொண்டு[அழுதுகொண் டென்கிறபடி,] நொந்து - வருந்தி, கொற்றவனே, அரசனே, குல மகளுக்கு - நற்குலத்துப் பிறந்தபெண்ணுக்கு-குற்றம் இல் - தோஷமில்லாத, காட்சி - தோற்றத்தையும், குதலை வாய் - மழலைச் சொல்லுள்ள வாயையுமுடைய, மைந்தரையும் - மக்களையும், பெற்று கொளலாம் - பெற்றுக் கொள்ளக்கூடும், கோ காதலனை பெறலாமோ, - மேன்மையான கணவனைப் பெறக்கூடுமோ, என்று—, உரைத்தாள்-சொன்னாள்,, எ-று.

குலமகளுக்கு என்பதில் குவ்வுருபு கர்த்தாப்பொருளில்வந்தது. மைந்தரையும் என்னுமிடத்து உம்மை சிறப்புப் பொருளது; அச்சிறப்பே விசேஷணங்களாற் காட்டப் பட்டது.

236. கைதவந்தா னீக்கிக் கருத்திற் கறையகற்றிச்,
செய்தவந்தா னெத்தனையுஞ் செய்தாலும்—மை
தீர், மகப்பெறா மானிடர்கள் வானவர்தம் மூர்க்
குப், புகப்பெறார் மாதராய் போந்து.

236. Nala then said;—"O Damayanti! the man who does not beget children who remove sin, may cast aside deceit and banish sin from his mind, and perform every conceivable penance, but he can never enter the heavenly regions (Swerga) where the Gods reside."

(இ-ள்.) [அதற்கு நளன் சொல்வது] மாதராய் - தமயந்தியே, கைதவம் நீக்கி - வஞ்சகத்தை விட்டு, கருத்தில் - மனதில், கறை அகற்றி - குற்றத்தை நீக்கி, எத்தனை செய் தவம் செய்தாலும் - அநேக நல்ல தவங்களைப் பண்ணினாலும், மை தீர் - பாவத்தைத் தீர்க்கும்படியான, மக - மக்களை,

பெறு - ஈனுத, மானிடர்கள் - மனிதர், வானவர்தம்-தேவர்களுடைய, ஊர்க்கு-ஊராகிய சொர்க்கத்தில், போந்து-போய், புக பெறுர் - பிரகவசிக்க மாட்டார்கள், எ-று.

தான்-இரண்டும் அசை. செய்தவம் என்பதில் செய் என்பது செம்மையின் விகாரம். [பதவியல் கூ - ஆம்] சூத்திரத்தினுல் ஈறுகெட்டு முன்னின்ற மெய் திரிந்தது. உம் - அசை; முற்றும்மை யென்னவுங் கொள்ளலாம். மக என்பது ஆண் பெண்ணுக்குப் பொதுவாய் நின்று மகவை மகவால் எனவேற்றுமைப்படும். (கூரு)

2ஊ7. பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடி
சில், புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ்
செய்யவாய், மக்களையுங் கில்லா தவர்.

237. " Though one possess wealth and fame and all things else, if he does not beget children. whose lotus-like hands dabble in the delicious food, and whose rosy mouths are as fragrant as a flower, he is destitute.

(இ - ள்.) [அதற்கு நளன் கூறியது.] இன் அடிசில் - இனிமையான சோற்றிலே, புக்கு - பிரவேசித்து, அளையும் - அளைகின்ற, தாமரைக்கை - தாமரைப்பூப்போன்ற கைகளையும், பூநாறும் - பூவைப்போல் பரிமளிக்கிற, செய்யவாய் - சிவந்த வாயையுமுடைய, மக்களை - புத்திரர்களை, இங்கு - இவ்வுலகத்தில், இல்லாதவர் - அடையாதவர், பொன் உடையரேனும் திரவியத்தை யுடையவர்களானுலும், புகழ் உடையரேனும் - கீர்த்தியை யுடையவர்களானுலும், மற்று - இன்னும் என் உடையரேனும் - எதை யுடையவர்களானுலும், உடையரோ - உடையவர்க ளாவார்களோ, [ஆகார்கள்.] எ-று. ஓ-எதிர்மறை

[குறள்.] " அமிழ்தினு மாற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்."

இல்லை யென்பது இன்மையைமாத்திர முணர்த்துமாயின் செயப்படுபொரு ளில்லாததாம். உடைத்தாகாமையை யுணர்த்துமாயின் செயப்படுபொருளுள்ளதாம் (கூகூ)

23?. சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தா லும், என்ன பயனுடைத்தா மின்முகத்து—
முன்னங், குறுகுதலைக் கிங்கிணிகாற் கோமக் கள் பால்வாய்ச், சிறுகுதலை கேளாச் செவி.

238 "The ear that has heard all the precepts of the Vedas, what benefit it has derived, if it has not listened to the soft prattling which proceeds from the mouths smelling of milk, on the sweet faces of the high born infants, whose feet are adorned with ankle rings which taper when they meet and clasp."

(இ - ள்.) இன் முகத்து-இனிமையான முகத்தினிடத்திலே முன்னம் - எதிரில்,குறுகு - குறுகின, தலை - தலைப்பக்கங்களை யுடைய, கிங்கிணி - சதங்கைமாலை யணிந்த, கால் - பாதங்களுள்ள, கோமக்கள் - மேன்மையான புத்திரருடைய, பால் வாய் - பாலுண்ணும் வாயின்கணுண்டாகிய, சிறு - சிறுமையான, குதலை - மழலைச்சொற்களை, கேளா - கேளாத, செவி - காது, சொன்ன - எண்ணிச்சொன்ன, கலையின் - சாஸ்திரங்களின், துறை அனைத்தும் - விஷயங்க ளெல்லாவற்றிலும், தோய்ந்தாலும் - படிந்தாலும், என்ன பயன் - என்ன பிரயோஜனத்தை, உடைத்து ஆம் - உடையது ஆம், எ - று.

இன் முகத்து என்பதைப் பால்வாயுடன் கூட்டிக்கொள்க. ஆம் - அசை. எத்தனை சாஸ்திரவிஷயங்களைக் கேட்டாலும் மக்கள் குதலையைக்கேட்ட இன்பம் இராதென்பது கருத்து.

" குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

எத்தனை சாஸ்திரம் படித்தாலும் மக்களில்லாதார்க்குக்கதி யில்லை யெனக் கருத்துக் கொள்வாரு முளர். கிங்கிணி—திரியாது வந்த வடசொல், கிண்கிணி—திரிந்தது. (கூஎ)

239. போற்றரிய செல்வம் புனனாட் டொடும்போகத்,
தோற்றமையும் யாவர்க்குந் தோற்றாதே — ஆற்
றலாய், எம்பதிக்கே போந்தருளா யென்றா
ளெழிற்கமலச், செம்பதிக்கே வீற்றிருந்த தேன்.

239. Damayanti, who was as the excellent honey in the beautiful lotus-flower, addressing Nala said;—"O thou strong one; no one shall know that you have lost your immeasurable wealth and your ferlile country. Come therefore to my father's capital

(இ - ள்.) [புத்திரரே பிரதானமென்று கணவனுரைத்தது கேட்டு] எழில் கமலம் - அழகுள்ள தாமரைப்பூவாகிய, செம்பதிக்கு - செவ்வையான இடத்தில், வீற்றிருந்த - பெருமையாயிருந்த, தேன் - தேனுக்கு ஒப்பாகிய தமயந்தி (அரசனை நோக்கி,) ஆற்றலாய்-சாமர்த்தியமுள்ளவனே, போற்று அரிய காப்பதற்குக் கூடாத,[அல்லது புகழ்தற்கு எளிதாகாத,]செல்வம் - சம்பத்து, புனல் நாட்டொடு போக - நீர்வளமுள்ள தேசத்தோடு போய்விடும்படி, தோற்றமையும் - தோற்றுப் போனதும், யாவர்க்கும் தோற்றாதே - எவர்க்குந் தெரியாமல், எம்பதிக்கே-எங்கள் ஊர்க்கே, போந்தருள்க - கிருபை செய்து வரக்கடவாய், என்றாள்—, எ - று.

கு—இடப்பொருளில் வந்தது; முதல் ஏகாரம் அசை; இரண்டாவது பிரிநிலை. மற்றெங்கும் போகவேண்டாமென்றபடி. தோற்றமையும்—இதில் உம்மை இழிவு சிறப்பு, எச்சமுமாம். மற்று நேர்ந்த வறுமை முதலியது என்றபடி; அசை என்பது நேர். (கூஅ)

240. சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற்
சென்றீ, எனக்கென்னு மிம்மாற்றங்கண்டாய்—
தனக்குரிய, தானந் துடைத்துத் தருமத்தை
வேர்பறித்து, மானந் துடைப்பதோர் வாள்.

240. Nala replied;—" O Damayanti whose eyes are as bright as angry lance, Were a man to go to one possessing wealth, and say to him, 'Give to me'; that request would be like the sword which destroys his hopes of attaining the future world, which roots up the seeds of virtue and overthrows greatness."

(இ-ள்.) [இதற்கு நளன் உரைப்பது.] சினம் கதிர் வேல் கண் மடவாய் - உக்கிரமும் பிரகாசமுமுள்ள வேல்போன்ற கண்ணையுடைய பெண்ணே, செல்வர் பால் சென்று - திரவியவான்களிடத்துப்போய், எனக்கு ஈ என்னும்-எனக்குக்கொடு என்கிற, இ மாற்றம் - இச்சொல்லானது, தனக்கு உரிய - (அவன்செய்த புண்ணியத்தினால்) அவன் பெறுதற்குரித்தான, தானம் துடைத்து - லோகத்தை யழித்து, தருமத்தை—, வேர் பறித்து - வேரோடு பிடுங்கி, மானம் துடைப்பது - பெருமையை யழிக்கவல்லதாகிய, ஓர் வாள் - ஒருகத்தி, கண்டாய்,— எ - று.

துடைப்பது—வினையாலணையும்பெயர். கண்டாய்—ஸ்வரத்தினால் வினாப்பொருளாயிற்று ; அசையெனினுமாம். [பொதுவியல் ருசு - ஆம் - சூத்திர] விதிப்படி ஈண்டு ஈ எனப் பிரயோகிக்கப்பட்டது. (சுசக)

241. மன்னராய் மன்னர் தமையடைந்து வாழ்வெய்தி
இன்னமுதந் தேக்கி யிருப்பாரேல்—சொன்ன
பெரும்பே டிகளலரேற் பித்தரே யன்றோ
வரும்பேடை மானே யவர்.

241. " O thou that resembled a rare doe, If monarchs were to go to monarchs and obtain from them wealth and good food, they are like the eunuchs spoken of in the shastras, or madmen.

(இ-ள்.) அரு பேடை மானே - அருமையான பெண் மான்போன்றவளே, மன்னர் ஆய் - அரசராயிருந்து, மன்னர் தமை அடைந்து - பிற அரசரைச் சேர்ந்து, வாழ்வு எய்தி -

வாழ்வைப்பொருந்தி, இன் அமுதம் தேக்கி - இனிமையான அமுதத்தையும் நிறைத்து, இருப்பாரேல் - இருப்பாராஞல், அவர்—, சொன்ன - நூல்களிற் சொல்லப்பட்ட, பெரு பேடிகள்- பெரிய பேட்டுப் பெண்களாயிருக்கவேண்டும், அலரேல்- அப்படிப்பட்டவர் அல்லாதவராஞல், பித்தரே அன்றே - பைத்தியம் பிடித்தவரே யல்லவோ, எ - று. (எ0)

242. செங்கோலா யுன்றன் றிருவுள்ள மீதாயின்
எங்கோன் விதர்ப்ப னெழினகர்க்கே—நங்கோ
லக், காதலரைப் போக்கி யருளென்ருள் காதல
ருக், கேதிலரைப் போல வெடுத்து.

242. Damayanti, as if she bore enmity towards the children, who were the objects of their affection, said;— " O sceptred king, if such be your determination, then send our lovely chidren to the beautiful capital of our king, the king of Vidarpa."

(இ - ள்.) [அதற்குத் தமயந்தி] காதலருக்கு - ஆசைத்திருமக்களுக்கு, ஏதிலரை போல - பகவரைப்போல் நின்று, செங்கோலாய் - அரசனே, உன்தன் திருவுள்ளம் - உன்னுடைய கருத்து, ஈது ஆயின் - இதுவாஞல், நம்-நம்முடைய கோலம் காதலரை - அழகுள்ள மக்களை, எம் கோன்-எங்களுடைய அரசனுகிய, விதர்ப்பன்-விதர்ப்பராஜனுடைய, எழில் நகர்க்கே - அழகுபொருந்திய பட்டணத்துக்கே, போக்கி அருள் என்ருள் எடுத்து - அனுப்பி அருள் என்று தூக்கிச் சொன்ஞள், எ - று.

ஏ - பிரிநிலை. பிரிய மனந்துணிந் துரைத்தமையின் ஏதிலரைப்போல வென்ருர். (எக)

243. பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன் — தா
தைக்குக், காட்டுநீ யென்ருன் கலங்காத வுள்ளத்
தை, வாட்டுநீர் கண்ணிலே வைத்து.

243. Nala, whose calm mind was disturbed by the tear-drops in his eyes, addressing a Brahmin said;—" Go and shew to king Bhima, the father of Damayanti, their beloved children to whom I am still attached though their mother's feelings are estranged from them."

(இ - ள்.) [நளன்] கலங்காத உள்ளத்தை - எந்தத் துன்பத்தினாலுங் கலங்கமாட்டாத வலிமையுள்ள மனத்தை, வாட்டும் - வெதும்பச் செய்கிற, நீர் - ஜலத்தை, கண்ணிலே வைத்து—, பேதை பிரிய - தமயந்தி மனம்பிரிய, பிரியாத - நீங்காத, பேர் அன்பின்-மிகுந்த அன்புள்ள, காதலரை- பிரியமான புத்திரரை, கொண்டுபோய்—, காதலிதன் தாதைக்கு - வீமராஜனுக்கு, நீ காட்டு - நீ காண்பி, என்றான்-என்று (ஒரு பிராமணனை நோக்கிச்) சொன்னான், எ - று.

புத்திரர் குமாரர் முதலிய வடசொற்களும் மக்கள் என்னுந் தமிழ்ச்சொல்லைப்போல ஆண்பிள்ளைக்கும் பெண்பிள்ளைக்கும் பொதுவாய் வருமென அறிக. (எஉ)

244. தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்
தாள், இந்து முகத்தை யெதிர்நோக்கி—எந்
தம்மை, வேறாகப் போக்குதிரோ வென்றார்
விழிவழியே, ஆறாகத் தண்ணீ ரழுது.

244. The children, looking at the handsome face of their father, and gazing at the moon-like countenance of the mother that begot them, and weeping till their tears flowed like a river from their eyes said;—" Are you going to separate us from yourselves by sending us away.

(இ - ள்.) [அப்பிள்ளைகள்] தந்தை திருமுகத்தை நோக்கி- தகப்பனுடைய சிறப்பான முகத்தைப்பார்த்து, தமை பயந்தாள் - தங்களைப் பெற்றவளுடைய, இந்து முகத்தை எதிர் நோக்கி- சந்திரனைப்போன்ற முகத்தை எதிரேபார்த்து, விழி வழியே - கண்களினிடத்தே, கண்ணீர் ஆறாக அழுது -

கண்ணீர் ஆறுபோல்வடிய அழுதுகொண்டு, எந்தம்மை-எங்களை, வேறாக போக்குதிரோ - வேறாய்ப்போகச் செய்கிறீர்களோ, என்றார்—, எ - று.

போக்குதிர்—நிகழ்கால முன்னிலைப் பன்மை வினைமுற்று போக்கு - பிறவினைப்பகுதி, திர் - முன்னிலைப் பன்மைவிகுதி இர் - விகுதி, தகரம் எழுத்துப்பேறு என்பர் பெரும்பாலார், தி - என்பது மிப்படியே, விகுதிகளே காலங்காட்டும். (எங)

245. அஞ்சனந்தோய் கண்ணி லருவிநீ ராங்கவர்க்கு,
மஞ்சனநீ ராக வழிந்தோட—நெஞ்சுருகி, வல்
லிவிடா மெல்லிடையாண் மக்களைத்தன் மார்
போடும், புல்லிவிடா நின்றாள் புலர்ந்து.

245. Damayanti, whose waist was as slender as a creeper, shedding from her blackened eyes, tears which fell, like the water-fall from a mountain, sufficient for her children to bathe in, and becoming sorrowful in mind and faint in body, hugged her offsprings to her bosom.

(இ-ள்.) வல்லிவிடா - கொடித் தன்மையை விடாத, மெல் இடையாள்-மெல்லியஇடையுள்ள தமயந்தி, அஞ்சனம்தோய் கண்ணில் - மைபடிந்த கண்களில், அருவி நீர் - மலையருவி போல் வருகின்ற நீர்வெள்ளம், அவர்க்கு - அந்த மக்களுக்கு, மஞ்சன நீர் ஆக - குளிக்கச்செய்கின்ற தண்ணீராய், வழிந்து ஓட - வழிந்து ஓடும்படி, நெஞ்சு உருகி - மனங்கரைந்து, புலர்ந்து - வாடி, மக்களை - தன் குழந்தைகளை, தன் மார் போடும்—, புல்லிவிடா நின்றாள் - கட்டிக்கொண்டாள்,எ-று. ஆங்கு - அசை.

அப்படி கட்டிக்கொண்டது அடிக்கடி நிகழ்ந்தமையின்நிகழ் காலவினைகூறப்பட்டது; அல்லது புல்லி-அணைத்துக்கொண்டு, விடா - விட்டு, நின்றாள் - சும்மாவிருந்தாள், என்றாயினும் கொள்க- [பொதுவியல் சாங-ம் சூத்திரத்தினல்] சுட்டுப்பெயர் முன்வந்தது. (எச)

246. இருவ ருயிரு மிருகையால் வாங்கி, ஒருவன்
கொண் டேகுவா னொத்து—வருமறையோன்,
கோமைந்த னோடிளைய கோதையைக்கொண்
டேகினான், வீம னகர்க்கே விரைந்து.

246. Like, one, who has received in both his hands and taken away the lives both of Nala and Damayanti, the Brahmin who came there taking away the princess with the prince, went in haste to the capital of king Bhima.

(இ - ள்) இருவர் உயிரும் - (நளன் தமயந்தியாகிய) இவ்விருவருடைய பிராணன்களை, இரு கையால் வாங்கி - இரண்டு கைகளினாலே பறித்து, கொண்டு ஏகுவான் - கொண்டுபோகின்ற, ஒருவன் ஒத்து - ஒருவனைப்போன்று, வரும் மறையோன் - அங்கே வந்த பிராமணனொருவன், கோ மைந்தனோடு - இராசகுமாரனோடு, இளைய கோதையை கொண்டு - இராசகுமாரியையும் இட்டுக்கொண்டு, வீமன் நகர்க்கே - குண்டினபுரிக்கே, விரைந்து ஏகினான் - துரிதப்பட்டுச் சென்றான், எ-று.

ஓடு என்னு முடனிகழ்ச்சி கொண்டென்னும் வினையில் என அறிக. ஓடு என்பதை உம் என்பதுபோல் கொள்ளினுமாம்.

247. காத லவர்மேலே கண்ணோட விண்ணோடும்
ஊதை யெனநின் றுயிர்ப்போட—யாதும்
உரையாடா துள்ள மொடுங்கினான் வண்டு
விரையாடுந் தாரான் மெலிந்து.

247. Nala who was adorned with a garland, on which the bees bathed in the honey, gazing at his loving children, and sighing as the wind which sweeps the air became, faint, silent and insensible.

(இ-ள்.) வண்டு—, விரை ஆடும் தாரான் - தேனில் குளிக்கப்பெற்ற மாலையை யுடையவன், காதலவர் மேலே - பிரியமான குமாரர்கள்மேலே, கண் ஓட - பார்வை போய்க்கொண்

டிருக்க, விண் ஓடும் ஊதை என - வானத்தில் ஓடுகின்ற காற்றைப்போல். உயிர்ப்பு-மூச்சு, ஓட—, மெலிந்து - தளர்ந்து, யாதும் உரையாடாது - ஒன்றும் பேசாமல், உள்ளம் ஒடுங்கினான் - மனஞ் சுருங்கிப்போனான், எ-று.

நின்று - அசை. [இடையியல் உ௨-ஆம் சூ.] (எசு)

248. சேலுற்ற வாவித் திருநாடு பின்னொழியாக், கா
விற்போய்த் தேவியொடுங் கண்ணுற்றான்—ஞா
லஞ்சேர், கள்ளிவே கத்தரவின் கண்மணிக
டாம்பொடியாய்த், துள்ளிவே கின்ற சுரம்.

248. Leaving behind him his beautiful country, in which the *sel*fish glides in the tanks, Nala, walking with his wife, saw the desert in which the gems (on the heads of snakes, were burnt to ashes by the intense heat of the Kulli plants, and the reptiles themselves writhed in agony.

(இ-ள்.) சேல் உற்ற வாவி - கெண்டைகளைப் பொருந்தின தடாகங்களுள்ள, திரு நாடு - சிறப்பான தேசம், பின் ஒழிய - பின்புறத்தில் ஒழிந்துபோக, தேவியொடும் - மனையாளோடும் காலின் போய் - காலினால் நடந்துபோய், ஞாலம் சேர் - பூமியைச்சேர்ந்த, கள்ளி வேகத்து - கள்ளிச்செடியின் கடுமையினால், அரவின்கண் மணிகள் - சர்ப்பங்களினிடத்துள்ள ரத்தினங்கள், பொடியாய்-வெந்து சாம்பலாய்போக, துள்ளி வேகின்ற சுரம்- (அப்பாம்புகள்) துள்ளிவிழுந்து எரிகின்ற பாலைநிலத்தை, கண்ணுற்றான் - பார்த்தான் (நளன்), எ-று. தாம் - அசை.

ஞாலம் சேர் என்பது, களித்துத் தூங்குதற்கிடமான பூமியில் துன்பப்பட்டு வேகின்ற இடமுமுண்டு. நல்லதிலுந் தீயதுண்டா யிருத்தல் இவ்வுலகத்தி னியற்கை யாதலின் என்பதைக் குறிப்பிக்கின்றது. அல்லது பூமியாவுங் கெடுமிடமாதலால் சுரமிருத்தல் தகுதியென்று குறிப்பிக்கின்றதெனவுமாம்

ஞாலல் - நாலுதல், அதாவது தூங்கலும் விழுதலுமாம், ஞகரம்போலி, [நன் - எழுத்து-கு-சூக-ன்] உரையைக் காண்க. "பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே" என்றபடி அவ்விடத்துக்குரித்தாய் நின்று கள்ளிவேவது இயற்கையாதலின் மணிகளும் பொடியாய் என்றார். வெந்து என்பது செயவெனெச்சத்தின் திரிபு. சினைவினை யெனக் கொள்ளினு மிழுக்காது. செடிகளை நிலத்துக்கு உரோமமாக வடநூலில் வர்ணித்திருப்பதுண்டு. இங்கு [நன்-வினை-உஎ-உகூ]சூத்திரங்களை நினைத்து உபயோகித்துக் கொள்க. (எஎ)

249. கன்னிறத்த சிந்தைக் கலியுமவன் முன்பாகப்,
பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான் -
நன்னெறிக்கே, அஞ்சிப்பா ரீந்த வரசனையுந்
தேவியையும், வஞ்சிப்பான் வேண்டி வனத்து.

249. The hard-hearted Kali who wished to deceive Nala, who fearing the truth gave up his country to his enemies, as well as Damayanti appeared before the former as a golden-hued bird.

(இ - ள்.) நல் நெறிக்கே அஞ்சி - தரும மார்க்கத்துக்குப் பயப்பட்டு, பார் ஈந்த அரசனையும் - பூமியைப் பகைவர்கை யிற் கொடுத்துவிட்ட நளனையும், தேவியையும் - அவன் மனைவியையும், வஞ்சிப்பான் - வஞ்சிப்பதற்கு, வேண்டி - விரும்பி, வனத்து - அப்பாலை வனத்திலே, கல் நிறத்த - கல்லின் குணமுள்ள, சிந்தை - மனதையுடையவனான, கலியும் - கலிபுருடனும், அவன் முன்பாக - அவ்வரசனுக்கெதிராக, பொன் நிறத்த - பொன்னின் வர்ணமுள்ள. புள் வடிவுஆய்-பக்ஷியின் ரூபமாகி, போந்து இருந்தான் - போயிருந்தான், எ - று.

போந்து என்பது புகுந்து என்பதின் திரிபு என்பர் சிலர்; போ என்பதற்கே இப் புடைபெயர்ச்சி எனப் பிறர்கொள்வர். ஏ - பிரிநிலை; வீரத்துக்கு அஞ்சியன்று என்பதாம். (எஅ)

250. தேன்பிடிக்குந் தண்டுழாய்ச் செங்கட் கருமுகி
லை, மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்—

தான்பிடிக்கப், பொற்புள்ளைப் பற்றித்தா வென்
றாள் புதுமழலைச், சொற்கிள்ளைவாயா டொழுது.

250. As Sita, who resembled a peacock, asked Rama who wore a garland of cool Thulasis, on which the bees swarmed, whose eyes were red and whose body was like the blue clouds, to seize and bring to her a deer, so did Damayanti, whose speech resembled the hesitating and prattling words of the parrot, beseech Ñala to seize for her the golden-hued bird, that she might have it in her hand.

(இ-ள்.) புது மழலை சொல் - புதுமையான மழலைச் சொல்லைச் சொல்லுகின்ற, கிள்ளை வாயாள் - கிளிபோன்ற வாயையுடைய தமயந்தி, தொழுது-(தன்கணவனை) கும்பிட்டு, தேன் பிடிக்கும்-வண்டுகள் பற்றியிருக்கின்ற, தண் துழாய்-குளிர்ச்சியான துளசிமாலை யணிந்த,செம் கண்-சிவந்தகண்களையுடைய, கரு முகிலை - நீல மேகம்போன்ற இராமனை, மான் பிடிக்கச் சொன்ன - மானைப்பிடித்துத் தரச்சொல்லிய, மயிலே போல்-மயிலின் சாயலுள்ள-சீதையைப்போலே, தான் பிடிக்க-தன் கையிற்பிடித்துக்கொள்ளும்படி, பொன் புள்ளை-பொன் நிறப் பறவையை, பற்றித் தா - பிடித்துக்கொடு, என்றாள்—, எ-று. [மழலைக்குப் புதுமையாவது அதிசயமாயிருத்தல்.] (எக)

251. பொற்புள் ளதனைப் பிடிப்பா னளன்புகுதக்
கைக்குள்வரு மாபோற் கழன்றோடி - எய்க்கும்
இளைக்குமா போல விருந்ததுகண் டன்றே
வளைக்குமா றெண்ணினான் மன்.

251. When Nala endeavoured to catch it, the golden hued bird waiting till he came very near, flew away and sat down looking exhausted. And Nala seeing it thus faint, hoped to secure it.

(இ-ள்.) நளன்—, பொன் புள் அதனை - பொற்பறவையை, பிடிப்பான் புகுத - பிடிக்கப்போகையில் (அது,) கைக்குள் வரும் ஆறுபோல்-கையினுள்ளேஅகப்படுவதைப்போலிருந்து,

கழன்று ஓடி - அங்கிருந்து பெயர்ந்து ஓடிப்போய், எய்க்கும்-வருந்தி யிருக்கும், இளைக்கும் ஆறுபோல இருந்தது கண்டு - வருந்துவதைப்போல் (அது) நிற்பதைப்பார்த்து, மன்-அரசன், வளைக்கும் ஆறு - வளைத்துக்கொள்ளும்படி, எண்ணினான்—, எ-று. அன்று - ஏ அசைகள்.

புகுத என்பதில் த-சாரியை. ஆறு—ஈறு குறைந்தது-எய்க்கும் என்றது அங்ஙனம் அடிக்கடியாகு மியல்பு பற்றி. (அ0)

252. கொற்றக் கயற்கட் கொடியே யிருவோரும், ஒற்றைத் துகிலா லுடைபுனைந்து—மற்றிந்தப், பொற்றுகிலாற் புள்வளைக்கப் போதுவோ மென்றுரைத்தான், பற்றகலாவுள்ளம் பரிந்து.

252. Nala with love filling his mind in which affection still existed, said!—" O thou creeper-like maiden whose victorious eyes resemble the *sel*fish Let us both envelope ourselves in one robe, and with this beautiful garment let us catch the bird."

(இ-ள்.) [அப்போது நளன்] பற்று அகலா-ஆசை நீங்காத, உள்ளம் - மனமானது, பரிந்து - அன்பு கூர்ந்து, கொற்ற கயல் கண் கொடியே - வெற்றிபெற்ற மீன்போன்ற கண்களையுடைய கொடிபோன்றவளே, இருவோரும் - நாம் இருவரும், ஒற்றை துகிலால் - ஒரு வஸ்திரத்தினால், உடை புனைந்து - வஸ்திரத்தைக் கட்டிக்கொண்டு, இந்த பொன் துகிலால் - இந்த அழகிய வஸ்திரத்தினால், புள் வளைக்க-பட்சியை வளைத்துக்கொள்ள, போதுவோம் - செல்லுவோம், என்று உரைத்தான் - என்று சொன்னான், எ - று.

பரிந்து என்பது உள்ளத்தின் வினையாதலின் போதுவோமென்னு முதல்வினையோடு முடிந்தது. [வினை-சூ-உக.] இருவோரும்—இடவழுவமைதி [பொது-சூ-உக.] இருவேமும் எனப் பாடங்கொள்வது நன்று. (அக)

253. எற்றித் திரைபொரநொந் தேறி யிளமணலிற்
பற்றிப் பவளம் படர்நிழற்கீழ்—முத்தீன்று

வெள்வளைத்தா யோடுநீர் வேலைத் திருநாடன்
புள்வளைத்தா னாடையாற் போந்து.

253. Nala, who possessed the country which is surrounded by the full ocean, into which run the mother oysters after they have left their pearls under the shade of the coral creepers, which fasten themselves among the small grains of sand, on which they are cast, disturbed by the waves as they beat ashore, threw the garment at the bird.

(இ - ள்.) திரை எற்றி - அலைகள் வீசி, பொர - கரையை மோத, நொந்து-வருந்தி, இள மணலில்-சிறுமணலிலே [அப்போதே படிந்த மணலிலே,] ஏறி—, பற்றி - பிடித்துக் கொண்டு, பவளம் படர் நிழல் கீழ் - பவளக் கொடிகள் படர்ந்த நிழலிலே, முத்து ஈன்று - முத்துக்களைப்பெற்று, வெள் வளை தாய் - வெண்மயமான சங்குகளாகிய தாய்கள், ஓடும் - ஓடப்பெற்ற, நீர் - தண்ணீருள்ள, வேலை - கடல் சூழ்ந்த, திருநாடன் போந்து - மேன்மையான நாட்டையுடைய நளன் போய், ஆடையால் - வஸ்திரத்தினால், புள் வளைத்தான் - பக்ஷியை வளைத்துக்கொண்டான், எ-று.

நிடதமென்பது மத்திய இந்துஸ்தானத்தில் கீழ்ப்புறமாதலால் அந்நாட்டிற்குக் கடலு மெல்லை யென அறிக. (அஉ)

254. கூந்த லிளங்குயிலுங் கோமானுங் கொண்ட
ணைத்த, பூந்துகில்கொண் டந்தரத்தே போய்
நின்று—வேந்தனே, நன்னாடு தோற்பித்தோ னா
னேகா ணென்றதே, பொன்னாடு மானிறத்த புள்.

254. That bird of a beautiful golden color, which was so coveted, flying away with the beautiful vestment, which was cast upon it by Nala and the youthful Damayanti, whose tresses were arranged in plaits on her head and who resembled a cuckoo, and hovering above in the

air, said;—“ O king; look, it is I that caused you lose your good kingdom.”

(இ - ள்.) கூந்தல் இளம் குயிலும்- அளகபாரமுள்ள இளங் குயிலையொத்த தமயந்தியும், கோமானும் - நளமகாராசனும் கொண்டு அணைத்த - கொண்டுவளைத்த, பூதுகில் கொண்டு- அழகிய வஸ்திரத்தைத் தூக்கிக்கொண்டு,அந்தரத்தே-வானத் திலே, போய் நின்று—,பொன்-பொன்னினது, மால் நிறத்து- பெருமை தங்கிய வர்ணத்தை யுடைத்தான, ஆடும் - அசைந்து கொண்டிருக்கிற, புள் - அந்தப்பறவையானது, வேந்தனே - அரசனே, நல்நாடு - நல்ல நாட்டை, தோற்பித்தோன் - உன் னைத்) தோற்கச் செய்தவன், நானே—, காண் - அறி, [பார்] என்றது—, எ - று. ஏ - அசை. (அரு)

255. காவிபோற் கண்ணிக்குங் கண்ணியந்தோட் கா
ளைக்கும், ஆவிபோ லாடையுமொன் றானதே—
பூவிரியக், கள்வேட்டு வண்டுழலுங் கானத்
திடைக்கனகப், புள்வேட்டை யாதரித்த போது.

255. When Damayanti, whose eyes resembled the blue lotus, and the hero Nala, whose beautiful shoulders were adorned with garlandsdesired the hunt of the golden-hued bird, in the forest where the honey seeking bees swarm on the opening flowers, the garment in which they were en - veloped became to them as their life.

(இ - ள்.) பூவிரிய - மலர் மலருகையில்,கள் வேட்டு-தேனை விரும்பி, வண்டு உழலும்-வண்டுகள்திரிகின்ற, கானத்திடை- காட்டிலே, கனகப் புள் வேட்டை- பொற்பறவையின் வேட் டையை, ஆதரித்தபோது - விரும்பினபோது, காவி போல் கண்ணிக்கும் - நீலோற்பலம்போன்ற கண்ணுள்ள தமயந்திக் கும், கண்ணி அம்தோள் - மாலைதரித்த அழகிய தோள்களை யுடைய, காளைக்கும் - வீரனான நளமகாராஜனுக்கும், ஆவி போல் - உயிரைப்போல், ஆடையும்-துகிலும், ஒன்று ஆனது- ஒன்றே யாயிற்று, எ - று. ஏ - அசை.

ஆவி ஒன்றுயிருப்பது அன்பின் மிகுதியால். (அச)

256. அறம்பிழைத்தார் பொய்த்தா ரருள்சிதைத்தார் மானத், திறம்பிழைத்தார் தெய்வ மிகழ்ந் தார்—புறங்கடையில், சென்றூர் புகுநரகஞ் சேர்வாய்கொ லென்றழியா, நின்றுள் விதியை நினைந்து.

256. Damayanti, addressing the bird said—" You will go to that hell where those, who beg alms at the door of those who have relinquished virtue, those who are liars, those who destroy mercy, those who have lost their dignity and those who mock God,' will go."

(இ-ள்.) அறம் பிழைத்தார் - தருமத்தைத் தப்பினவரும், பொய்த்தார் - பொய் சொன்னவரும், அருள் சிதைத்தார் - தயையைக் கெடுத்தவரும், மானம் திறம் பிழைத்தார்-கௌரவத்தின் மேன்மையைத் தப்பினவரும், தெய்வம் இகழ்ந் தார் - தேவநிந்தை செய்தவரும், (ஆகிய இவர்களுடைய) புறங்கடையில் சென்றூர்-வாசலில் (இரக்கச்) சென்றவர்கள், புகும் - போகின்ற, நரகம் சேர்வாய் என்று - நரகத்தை அடைவாயென்று (கலியைக்குறித்துச்)சொல்லி, விதியைநினை ந்து - விதியையெண்ணி, அழியா நின்றுள் - மனம் வருந்திக் கொண்டிருந்தாள் (தமயந்தி,) எ - று. கொல் - அசை.

வானத்தினின்று சொன்ன கலியைப் பழித்தான். பாவிகளி லும் அவரைக்கிட்டிப் பொருள் கொள்பவருக்குப் பாவம் அதிகமாம், அல்லது அவரும் அவர் புறங்கடை சென்றவரும் என வுரைக்கலாம். (அரு)

257. வையந் துயருழப்ப மாயம் பலசூழ்ந்து, தெய் வங் கெடுத்தாற் செயலுண்டோ·மெய்வகையே, சேர்ந்தருளி நின்றதனிச் செங்கோலா யிங் கொழியப், போந்தருளு கென்றுள் புலர்ந்து.

257. Damayanti sorrowing, said:—" O king who hast attained the true path, and art merciful, and possessest an unrivalled sceptre When god himself wishes to afflict the world, and employs deceit, can any act of ours oppose him ? Let us go away and have nothing more to do in this place.

(இ - ள்.) [தமயந்தி] புலர்ந்து - துக்கப்பட்டு, மெய் வகையே - மெய்யான விதத்தையே, சேர்ந்து - அடைந்து, அருளி - யாவர்க்குங் கருணைபுரிந்து, நின்ற - இருந்த, தனி செங்கோலாய் - தனித்த செங்கோலுடையவனே, வையம் துயர் உழப்ப - பூமி துக்கத்தினால் வருந்த, பல மாயம் சூழ்ந்து-பலமோசங்களைக்கருதி, தெய்வம் கெடுத்தால்-தெய்வமே கெடுக்கமுயன்றால், செயல் உண்டோ-எதிரான செய்கையுண்டோ (இல்லையாதலின்,) இங்கு ஒழிய - இவ்விடத்துச்செய்கையை யொழித்து, போந்தருளுக - வந்தருளவேண்டும், என்றாள்,—எ - று.

தருமந் தப்பாமல் செங்கோல் செலுத்தின உனக்குத் தெய்வம் வேண்டுமென்று இவ் வவஸ்தையை வருவித்தல் நாம் என்ன செய்யலாம் வாவென்றாள் என்பது கருத்து. (அசு)

258. அந்த நெடுஞ்சுரத்தின் மீதேக வாங்கழலும்,
வெந்தழலை யாற்றுவான் மேல்கடற்கே — எந்
தை, குளிப்பான்போற் சென்றடைந்தான் கூரி
ருளாற் பாரை, யொளிப்பான்போற் பொற்றே
ருடன்.

258. When these two were journeying on the great desert, our father the sun, in order to assuage the intense and burning heat that existed there, went down with his golden chariot, as one bathing in the western ocean, and as if wishing to veil the whole earth in darkness.

(இ - ள்.) [அவ்விருவரும் இப்படியாக] அந்த நெடு சுரத்தின்மீது ஏக - அந்தப் பெரிய பாலைவனத்திலே போகும்

போது, ஆங்கு - அவ்விடத்துண்டான, அழலும் - கெடுதியா நின்ற, வெம் தழலை - உக்கிரமான சூட்டை, ஆற்றுவான் - ஆறச்செய்வதற்கு, மேல் கடற்கு - மேற்குச்சமுத்திரத்தில் குளிப்பான்போல் - ஸ்நானஞ் செய்கிறவன்போல, எந்தை - என்தந்தையாகிய சூரியபகவான், கூர் இருளால் - மிகுந்த இருட்டினால், பாரை - பூமியை, ஒளிப்பான்போல் - ஒளித்து விடுகிறவன்போலே, பொன் தேருடன் - பொன்னாலாகிய இரதத்தோடுகூட, சென்று அடைந்தான் - போய்ச்சேர்ந்தான், எ - று.

அந்தப் பாலைவனத்தின்சூடு தன்மேல் உறைத்ததனால் அதனைப்போக்கக் கடலுக்குச் சென்றான்போலுஞ் சூரியன் எனவும், மண்டலமே பொற்றேர் அதனைக் கொண்டுபோனது நளனுக்குத் துன்பம்விளைத்த பூமியை இருட்டினால் மூடிப்போடுதற்குப்போலு மெனவும் குறித்தார். சூரியன் அஸ்தமித்தான் என்பதாம். அந்த—இது சுட்டின் மரூஉ; இந்த எந்த என்பவையு மிப்படியே.

'சூரியன்தேருமோடாதுமாகமீ' என்று கம்பருங்கூறினர்,

259. பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததற்பின்,
கான மடம்பின் கவட்டிலைகள் - மானின், குளம்
பேய்க்கு நன்னாடன் கோதையொடுஞ் சென்
றான், இளம்பேய்க்குந் தோன்றா விருள்.

259. When the great car of the sun had entered the roaring ocean, Nala who possessed the good country in which the split leaves of the creeper அடப்பம் the forest, resembled the cloven hoofs of the deer, entered with Damayanti, the darkness in which even the Devils, imps found their sight fail.

(இ - ள்.) பானு - சூரியனது, நெடு தேர் - பெரிய தேர், படு கடலில் - ஒலியாநின்ற கடலிலே, பாய்ந்ததன்பின் - பிரவேசித்தபிறகு, கானம் அடம்பின் - காட்டிலுள்ள அடப்பங்கொடிகளின், கவடு இலைகள் - பிளவாயிருக்கும் இலைகள், மானின்

குளம்பு ஏய்க்கும் - மான்குளம்புகளை ஒத்திருக்கின்ற, நல் நாடன் - நல்லநாட்டையுடைய நளன், கோதையொடும் - தமயந்தியோடு, இளம் பேய்க்கும்-இளமையான பிசாசுகளுக்கும் தோன்று - காணக்கூடாத, இருள் - இருட்டிலே சென்றான்—, எ - று.

சூரியன் தேர் கடலில் வீழ்வது அஸ்தமயம். இளம்பேயென்றது மூப்பின் குற்றமில்லாத பேயை : (அ௮)

260. எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள்வழி போய், வெங்கா னகந்திரியும் வேலைதனில்— அங்கேயோர், பாழ்மண் டபங்கண்டான் பால் வெண் குடைநிழற்கீழ், வாழ்மண் டபங்கண் டான் வந்து.

260. While they, seeking for a place of shelter for the night and traversing the dark pathways, wandered about in the sultry forest, Nala, who beheld the earth do penance to live under the shade of his milk-white umbrella, saw there the ruins of a dilapidated building (மண்டபம்).

(இ - ள்.) எங்கு - எவ்விடத்தில், புகல் இடம் ஆம் என்று எண்ணி - பிரவேசிக்குமிடங் கிடைக்குமென்று சிந்தித்து, இருள் வழி - இருட்டு சூழ்ந்த மார்க்கத்திலேயே, போய்—, வெம் கானகம் திரியும் வேலைதனில் - வெப்பமான காட்டிலே சஞ்சரிக்குங் காலத்தில், பால் வெண் குடைநிழல் கீழ் - பாலை யொத்த வெள்ளைக்குடையின்நிழலில், வந்து—, வாழ் மண் தபம் கண்டான் - வாழ்கின்ற பூமியின் தவத்தைக்கண்டவனாகிய நளன், அங்கே—, ஓர் பாழ் மண்டபம் - ஒரு பாழான மண்டபத்தை, கண்டான்—, எ - று.

261. மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்
சாரு மிடமற்றுத் தானில்லை—சோர்கூந்தல்
மாதராய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா யென்றான் புலர்ந்து.

961. Nala, addressing Damayanti said " O thou fair one with loosened tresses ! the darkness of the night is increasing, and we can find no other place for shelter - Come, let us sleep in this buliding."

பூமி இவனது அரசாட்சியிலே வந்து வாழ்வுறத் தவஞ்செய்திருக்கும்படியான சிறப்புள்ளவன் என்றபடி, புகலிடம்—புகுதற்குரிய இடம் என்று நான்கனுருபும் பயனுமுடன் றொக்கதொகை. (அசு)

(இ - ள்.) [அரசன்] புலர்ந்து - வாடி, சோர் கூந்தல் மாதராய் - தளர்ந்து விழும்படியான கூந்தலையுடைய சுந்தர முள்ளவளே, மூரி இரவும் போய் - சிற்றிருளுள்ள இராத்திரி மாறி, முற்று இருளாய் மூண்டதால் - நிறைந்த இருளுள்ளதாய் அமைந்ததனுல், மற்று சாரும் இடம் - வேறு தங்கும் இடம், இல்லை—, நாம் இந்த மண்டபத்தே—, கண் துயில - நித்திரை செய்யும்பொருட்டு, போதராய் - வா, என்றான்—, ஏ-று தான் - அசை

மூண்டதால்—தொழிற்பெயர், மூன்றும் வேற்றுமை. மூண்டது — முற்று, ஆல் — அசை என்னவுமாம். மூரி என்பது சோம்பலை யுணர்த்துவது, ஆகுபெயராய் மந்தத்துக்கு வந்து, சிற்றிருளென இடத்திற்கு ஏற்பப் பொருள் பட்டது. போதராய்—ஏவல்முற்று ; போ என்பதோடு தா என்பது துணைவினையாச் சேர்ந்த போதா - பகுதி. (கூ0)

262. வைய முடையான் மகரயாழ் கேட்டருளுந்,
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல்—இவ்விரவில், கேட்டவா வென்றழுதாள் கெண்டையங்க ணீர்சோரத், தோட்டவார் கோதையாள் சோர்ந்து.

262. " How hard it is that the noble ears of the emperor of the world, which has been accustomed to the music of the மகர guitar should this night be obliged to

listen to the meaner noise of the musquitoes !" So saying, Damayanti, whose plaited tresses were adorned with the petals of flowers, became faint, and wept so that the tears fell from her beautiful eyes, which resembled the carp fish.

(இ - ள்.) வையம் உடையான் - பூமிக்குச் சக்கிரவர்த்தியானவனுடைய, மகர யாழ் கேட்டருளும்-மகரவீணையின் நாதத்தைக் கேட்டருளுகின்ற, தெய்வ செவி - மகிமைபொருந்திய காது, இவ் விரவில் - இந்த இராத்திரியில், கொதுகின் சில் பாடல் - கொசுக்களுடைய அற்பமான பாட்டை, கேட்ட ஆ - கேட்டவகை (என்னகொடிது,) என்று - என்றுசொல்லி, தோட்ட - பூவிதழ்களையுடைய, வார் கோதையாள் - நீண்ட கூந்தலையுடைய தேவி, சோர்ந்து - தளர்ந்து, கெண்டை அம் கண் நீர் சோர - கெண்டை மீனையொத்த அழகிய கண்களில் நீர் வடிய, அழுதாள்—, எ-று.

துக்கத்திலும் வியப்பிலும்ஆறுஎன்பது தோன்றுப்பயனிலையுடைத்தாய் வருவது இப்பாஷையின் நடை. தோட்ட— தோடு என்னும் பொருளடியிற் பிறந்தகுறிப்புப் பெயரெச்சம்

263. பண்டை வினைப்பயனைப் பாரிடத்தி லார்கடப்
பார், கொண்ட னிழலிற் குழைதடவுங்—கெண்
டை, வழியனீ ரென்ருன் மனநடுங்கி வெய்துற்,
றழியனீ யென்ருன் னரசு.

263. Nala addressing Damayanti said—" Who on this earth is able to escape the evil destiny which is the consequence of a former sin? Weep not, so that the tears from your eyes, which resemble the carp fish, touch the ear-rings which are under the shade of your cloud-like tresses. Do not let sorrow excite you, and trouble your mind."

இ - ள்.) [அவளைநோக்கி] அரசு - அரசன், பண்டை வினை பயனை - பழமையான தீவினையின் விளைவை, பாரிடத்தில் -

பூமியில், ஆர் கடப்பார் - யார் தாண்டமாட்டுவார், கொண்டல் நிழலில் - கூந்தலாகிய மேகத்தின் சாயலிலே, குழை தடவும்-காதணிகளைத் தடவுகின்ற, கெண்டை - கண்களாகிய கெண்டைமீன்களிலிருந்து, நீர் வழியல் - ஜலம் பெருகும்படி யாக வேண்டாம், என்றான் —; மனம் நடுங்கி - மனம் நடுக்கமுறும் படியாகி, வெய்து உற்று - வெப்பம் பொருந்தி, நீ அழியல் - நீ வருந்தாதே, என்றான் —, எ-று.

வழியல், அழியல், —எதிர்மறையேவல் ஒருமைகள். வியங்கோளுமாம். (கூஉ)

264. விரைமலர்ப்பூ மெல்லணையு மெய்காவல் பூண்ட
பரிசனமும் பள்ளி யறையும்- அரசேநான் [ப்
காணேனிங் கென்னுக் கலங்கினாள் கண்பனிப்ப
பூணேர் முலையாள் புலர்ந்து.

264. The jewel-bedecked Damayanti, shedding tears and becoming faint and sorrow-stricken, said—' O king! I do not see here the beautiful and soft bed of fragrant flowers, or my personal attendents or my sleeping apart-ments."

(இ - ள்.) பூண் நேர் முலையாள் - ஆபரணம் இசைந்திருக்கிற தனங்களுடைய தமயந்தி, விரை மலர் - வாசனையுள்ள மலர்களாகிய, பூ மெல் அணையும் - அழகிய மெதுவான படுக்கையையும், மெய் காவல் பூண்ட - தேகத்தைக் காக்குந் தொழிலைக்கொண்ட, பரிசனமும் - ஏவல் ஆட்களையும், பள்ளி அறையும் - படுக்கை யறையையும், அரசே - அரசனே, இங்கு நான் காணேன் - இங்கே நான் பார்க்கின்றேனில்லை, என்னு - என்று, கண் பனிப்ப-கண்ணீர் வடிய, புலர்ந்து - வாடி, கலங்கினாள் - கலக்கமுற்றாள், எ - று.

[பதவி-கஅ-ம்-சூத்.] "எதிர்மறை மும்மையும் ஏற்கும்" என்றதனால் காணேன் என்பது இங்கு நிகழ்கால மாயிற்று. பூண் ஏர் முலை எனவும் பிரிக்கலாம். (கூஙு)

265. தீய வனமுந் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதாற் பேர்யாமம்—நீயுமினிக்
கண்மேற் றுயில்கை கடனென்றான் கைகொடுத்
மண்மேற் றிருமேனி வைத்து. [து

265. Nala stretching his body on the ground and giving his arm as a help to Damayanti, said—"The dense forest,, the four corners of the earth, and even the devil are asleep. At this late hour of the night you also should go to sleep."

(இ - ள்.) [அரசன்] மண் மேல் திருமேனி வைத்து-மண்ணின்மேல் தேகத்தைவைத்து, கை கொடுத்து - தேவிக்குக் கையை யாதரவாகக்கொடுத்து, தீய வனமும் துயின்று - கடுமையான காடுந் தூங்கி, திசையும் துயின்று - திக்குந் தூங்கி, பேயும் துயின்றது-பிசாசுந் தூங்கிற்று, பேர் யாமம்-பெரிய இராத்திரியில், நீயும்—, இனி - இனிமேல், கண்மேல்-கண்ணில், துயில்கை - தூங்குவது, கடன் - கடமை, என்றான்—, எ - று. ஆல் - அசை.

துயின்று என்பது துயில் என்பதின் திரிபு. துயில்கையாவது செய்கையொழிந் திருக்கை. (௬௪)

266. புன்கண்கூர் யாமத்துப் பூமிமேற் றான்படுத்துத்
தன்கண் டுயில்வாளைத் தான்கண்டு—மென்கண்
பொடியாதா லுள்ளாவி போகாதா னெஞ்சம்
வெடியாதா லென்றான் விழுந்து.

266. Lying down on the earth, Nala said:—"How is it that thought on this night of great sorrow, I behold the sleeping form of my wife reposing in the dust, my eyes have not turned to ashes, my life has not departed and my heart has not broken?"

(இ - ள்.) புன்கண் கூர் யாமத்து - துன்ப மிகுந்த இராத்திரியில், பூமிமேல் படுத்து - புழுதியில் படுத்துக்கொண்டு,

தன்கண் துயில்வானை - தன் கண்ணினால் தூங்குகின்ற மன்னை யானை, தான் கண்டும்—, விழுந்து—, (நளன்) என்கண்பொடி யாதால் - என் கண் சாம்பலாக வில்லையே, உள் ஆவி போகா தால்-உள்ளே யிருக்கும் ஆவிபோக வில்லையே, நெஞ்சம்வெடி யாதால் - மனம் வெடிக்க வில்லையே, என்றான்—, எ - று.

தானும், ஆல் மூன்றும் - அசை. (கூரு)

267. முன்றிறனின் மேற்படுக்க முன்றானையுமின்றி
இன்று துயில விறைவனுக்கே — என்றனது
கைபுகுந்த தென்னுடைய கால்புகுந்த தென்ற
மைபுகுந்த கண்ணீர் வர. [ழுதாள்

267. "As the king has not this night even the end of the garment to spread out and sleep upon in the front verandah of this building, my hands and legs alone must be of use to him." So saying Damayanti wept, so that the tears fell from her blackened eyes.

(இ - ள். இறைவனுக்கு-அரசனுக்கு, இன்று துயில - இன் றைக்குத் தூங்குவதற்கு, முன்றில் தனில் மேல் படுக்க - கட் டிடத்தின் முன்புறத்தின் மேலே பரப்பும்படி, முன் தானை யும் இயன்றி - வஸ்திரத்தின் தலைப்பு மில்லாமல். என்றனது கை புகுந்தது-என் கையானது பிரவேசித்தது, என்னுடைய கால் புகுந்தது—, என்று-என்றுசொல்லி, மை புகுந்த கண்-மைதீட்டிய கண்ணினின்றும், நீர் வர - தண்ணீர் ஒழுக. அழுதாள்—, எ - று.

முன்றில், முன்றானை, இரண்டும் இலக்கணப்போலி. பாழ் மண்டபமாதலின் அதன்முன்றில் படுக்கலாயிற்று. முன்திற னில் எனப்பிரித்து முன்பாகத்தில் எனவும் பொருள்கொள் ளலாம். என் கை கால்களே கீழே பரப்பும் பரப்பாயின என்றபடி. (கூசு)

268. வீமன் திருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாம மெனக்களித்த தையலாள்—யாமத்துப்

பாரே யணையாப் படைக்கண் டுயின்றாண்மற்
றாரே துயரடையா ராங்கு.

268. "If the noble daughter of king Bhima, the damsel who bestowed upon me the garland which even gods could not obtain, has io make the earth her bed this night, who is there that does not feel sorrow?" said Nala.

(இ-ள்.) வீமன் திருமடந்தை-வீமராசனுடைய மேன்மையான மகளான(தமயந்தி), விண்ணவரும்பெற்றிலா-தேவரும் பெறாத, தாமம் - மாலையை, எனக்கு அளித்த-எனக்குத்தந்த, தையலாள்-பெண், யாமத்து - இரவில், பாரே-பூமியே, படை-மெத்தையாகிய, அணை ஆ-படுக்கையாக, கண் துயின்றாள் - தூங்கினாள், ஆங்கு - அவ்விடத்தில், ஆரே துயர் அடையார் - யார்தாம் துக்கப்பட மாட்டார்கள், எ-று. மற்று-அசை.

தையல் - அழகு, அதனை உடையவள் தையலாள். (கஎ)

269. பெய்ம்மலர்ப்பூங் கோதை பிரியப் பிரியாத,
செம்மை யுடைமனத்தன் செங்கோலான் —
பொய்மை, விலக்கினா னெஞ்சத்தை வேறாக்கி
நின்று, கலக்கினான் வஞ்சக் கலி.

269. The deceitful Kali changed and perplexed the mind of king Nala, who swayed his sceptre, who was truthful, and whose virtuous affections remained unaltered towards the maiden whose fair hair was bedecked with flowers.

(இ-ள்.) பெய் மலர் - சொரிகின்ற புட்பங்களையுடைய, பூ கோதை பிரிய - அழகான கூந்தலுள்ள தமயந்தி நீங்கும்படி, பிரியாத-மாறாத, செம்மை உடை மனத்தன் - நற்குணமுள்ள மன முடையவனும், செங்கோலான்-செங்கோலையுடையனும், பொய்மை விலக்கினான் - பொய்யை நீங்கினவனுமாகிய நளனுடைய, நெஞ்சத்தை - மனதை, வஞ்ச கலி-வஞ்சனைசெய்யுங் கலிபுருடன், வேறு ஆக்கி-வேறாகச்செய்து, கலக்கினான் - கலங்கச்செய்தான், எ-று. நின்று - அசை.

செம்மையுடைய மனத்தன் முதலான மூன்று விசேஷணங்களும் பலவகையிலும் காக்கவேண்டுங் கடமையை விளக்குகின்றன. (கூஅ)

270. வஞ்சக் கலிவலியான் மாகத் தராவளைக்குஞ்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல்—விஞ்ச
மதித்ததேர்த் தானை வயவேந்த னெஞ்சத்
துதித்ததே வேறோ ருணர்வு.

270. As by the intervention of the serpent Raghu, the sun in the heavens changes its golden rays and becomes darkened, so the deceitful Kali changed the mind of king Nala who commanded an army of invaluable charioteers.

(இ-ள்.) மாகத்து - வானத்தில், அரா - இராகுவென்னும் பாம்பு, வளைக்கும் - சூழ்ந்துகொள்ளப்பெற்ற, செம் சுடரின் வந்த - சிவந்த கிரணங்களையுடைய சூரியனிடத்திற் றோன்றிய, கரு சுடர்போல் - கருமையான ஒளியைப்போல, விஞ்ச மேலாக, மதித்த தேர்தானை-எண்ணப்பட்ட தேர்ச்சேனையையுடைய, வய வேந்தன் - நளனுடைய, நெஞ்சத்து - மனதில் வஞ்ச கலி வலியால் - வஞ்சகனுன் கலியின் வலிமையினால், வேறு ஓர் உணர்வு - வேறாகிய ஒரு எண்ணம், உதித்தது - உண்டாயிற்று, ஏ-று, ஏ-அசை.

உதித்தது—உதி - பகுதி, வடசொல்; அது உத் என்னுமுபசர்க்கத்தோடு கூடிய இ என்னுந்தாது. உதயம் என்பதும்இப் பகுதியிற் பிறந்ததே. ஆரியத்தில் எந்த ஈற்றதாயினும் பெயராயினும் தமிழில் வினைப்பகுதியாம்போது இகர வீறாகவே வரும்.

(உ - ம்.) பால, பாலி; பட, படி; சஞ்சர, சஞ்சரி; கடாக்ஷ கடாக்ஷி; சந்தோஷ, சந்தோஷி; சித்திர, சித்திரி; எனக்காண்க. தமிழிலும் பெயர் இகரவிகுதி பெற்றே வினைப்பகுதியாய் வரும். (உ - ம்.) கடைக்கணி, முறுவலி. (கூகூ)

271. காரிகைதன் வெந்துயரங் காணாமை னீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கு மோருயிர்போ லெய்தியதோ ராடை
அரிதற் கவனினைந்தா னாங்கு.

271 Wishing to desert Damayanti in her great sorrow and separate from her in that dense darkness, he (Nala) rose, and contemptated dividing in to halves the garment which was to them as their common life.

(இ - ள்.) காரிகையின் - தமயந்தியின், வெம் துயரம்காணாமல் நீத்து - கொடுமையான துக்கத்தைப்பாராம லிருக்கும்படிவிட்டு, அந்த கூர் இருளில் - அந்த நிறைந்த அந்தகாரத்திலே, போவான் -அப்புறம்போக,குறித்து எழுந்து-நினைத்து எழுந்து, நேரே - நேராக, இருவர்க்கும் ஓர் உயிர்போல்எய்திய து-தம்ச விருவர்க்கும் ஒரே பிராணனைப்போலப் பொருந்தியிருக்கின்ற, ஓர் ஆடை - ஒரு வஸ்திரத்தை, அவன்-அந்த நளமகாராசன், அரிதற்கு நினைந்தான் - இடையில் அறுப்பதற்கு எண்ணினான். எ - று. ஆங்கு - அசை.

அவ்விடத்தில் என்னவுமாம். நீத்து—நீ - பகுதி, செயவெனெச்சம் - நீப்ப, எதிர்காலத்தில் நீப்பான், எதிர்மறையில் - நீவான் எனவும் வரும் ; செய்யுமென்வினை-நீக்கும். இப்பகுதியே குச்சாரியைபெற்று நீக்கு என்றும். அது நீக்கினான், நீக்குவான் முதலாகவரும். (௲00)

272. எண்ணிய வெண்ணமுடிப்ப விகல்வேந்தன்,
கண்ணி யதையறிந்து காய்கலியும் — பண்ணி
னுக்குக், கேளான தேமொழியை நீக்கக் கிள
ரொளிசேர், வாளாய் மருங்கிருந்தான் வந்து.

272. Knowing the thoughts of the valiant king, the angry Kali came and attached himself to the waist of Nala in the form of a bright knife, to enable him to fulfill his design of deserting the maiden whose speech was as pleasant as the flow of music.

(இ - ள்.) பண்ணினுக்கு-இசைக்கு, கேளான - உறவான, தேன் மொழியை - மதுரமான பேச்சுள்ள தமயந்தியை, நீக்க-நீக்கும்படி, எண்ணிய எண்ணம் முடிப்ப-சிந்தித்த சிந்தனையை நிறைவேற்றுவதற்கு, இகல் வேந்தன் - போர்செய்ய வல்ல அரசன், கண்ணியதை அறிந்து - நினைத்ததை அறிந்து காய் கலியும் - கோபிக்குங் கலிபுருடனும், வந்து—, கிளர் ஒளி சேர் - விளங்குகிற காந்திபொருந்தின, வாளாய் - கத்தியாய் மருங்கு இருந்தான் - இடுப்பில் இருந்தான், எ - று.

வாளாய் மருங்கிருந்தான். என்பது வாள்வடிவாக வந்திருந்தா னென்பதாம். அன்றியும் எனக்கு அவன் அஷ்டம சனியானன் என்பதுபோலக் கலியின் செய்கைக்கு உரித்தாயிருந்தது பற்றி அவ்வாறு ஆரோபித்ததெனவுங் கொள்ளலாம்.

273. ஒற்றைத் துகிலு முயிரு மிரண்டாக
முற்றுந்தன் னன்பை முதலோடும்—பற்றி
அரிந்தா னரிந்திட் டவணிலைமை நெஞ்சில்
தெரிந்தா னிருந்தான் றிகைத்து.

273. Nala then divided the garment, as if he were separating the two lives and rooting up his affections.. And having done this, he brooded over Damayanti's state, and stood motionless.

(இ - ள்.) ஒற்றை துகிலும்-ஒற்றை வஸ்திரமும், உயிரும் பிராணனும், இரண்டு ஆக- இரண்டாகும்படி, முற்றும்-முழுமையும்,தன் அன்பை - தன் ஆசையை, முதலோடும் பற்றி - வேரோடு பிடித்து, அரிந்தான் - அறுத்தான், (நளன்) அரிந்திட்டு - அறுத்தபின், அவள் நிலைமை - அந்தத் தேவியின் நிலையை,நெஞ்சில் தெரிந்தான் - மனதில் சிந்தித்து, திகைத்து இருந்தான் - பிரமித்து இருந்தான், எ - று.

"காவிபோற் கண்ணிக்குங் கண்ணியந்தோட் காளைக்கு மாவிபோ லாடையுமொன்றானதே" என்று முன்கூறியிருப்பதனால் "ஒற்றைத்துகிலு முயிருமிரண்டாக, என்றார். உயிர்

ஒன்றி யிருப்பதன்காரணம் அன்பாதலின் அதனை அறுத்து உயிரைப் பிரிந்தான். ஆடையுமுயிரும் பிரயாவிடின் அவன் தனித்துச் செல்வது அமையாதென்பது கவிசாதுரியக்கருத்து அவள் நிலைமையாவது செல்வமக்களைப் பிரிந்ததைக்குறித்தும் எவ்வளவேனுங் கலங்காமற் கணவனுக்கு நேர்ந்த இத்துன்பத் திற்கே கலங்கி அவனோடிருத்தலே தனக்குப் பெரும்பேறாக எண்ணி "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்" என்றிருக்குந்தன்மை. இறைப்பொழுதும்பிரிவாற்றாத்தன்மை யெனினுமாம். தெரிந்தான்—முற்றெச்சம், [வினை-சூ-கஉ.]

274. போயொருகால் மீளும். புகுந்தொருகால் மீண்
டேகும், ஆயர் கொணர்ந்த வடுபாலின் —
தோயல், கடைவார்தங் கைபோலு மாயிற்றே
காலன், வடிவாய வேலான் மனம்.

274. The mind of Nala, who possessed a lance as cruel as Yama, yearned after Damayanti and then returned to him; then went after her again and then again returned to him resembling the hands of the damsels who churned the hardened curds formed from the boiled milk brought by cowherds.

இ-ள்.) காலன் வடிவு ஆய - எமனுடைய ரூபமான, வேலான் - வேலையுடைய நளனது, மனம்—, ஒரு கால் போய் மீளும் - ஒருதரம் அவளிடஞ்சென்று திரும்பும், ஒரு கால் புகுந்து மீண்டு ஏகும் - ஒருதரஞ் சென்று திரும்பிச் செல் லும் (ஆதலின்,) ஆயர் கொணர்ந்த-இடையர் கொண்டு வந்த அடு பாலின் - காய்ச்சின பாலினது, தோயல் - தோய்வாகிய தயிரை, கடைவார்தம் கைபோல் - கடைகிற ஆய்ச்சிகளுடைய கையைப்போல், ஆயிற்று-ஆனது, எ-று. உம், ஏ,—அசைகள்.

காடுகளிலிருந்து காலிமந்தையைக் கறந்து சேரிக்குப் பால் கொண்டுவருவது வழக்கமானதுபற்றி "ஆயர்கொணர்ந்த வடு பாலின்" என்றார். தோயல்—தொழிலாகுபெயர். (கOகூ)

275. சிந்துரத்தாற் றெய்வ முனிவர் தெரிந்துரைத்த
மந்திரத்தாற் றம்பித்த மாநீர்போல்—முந்த
ஒலித்ததேர்த் தானை யுயர்வேந்த னெஞ்சம்
வலித்ததே தீக்கலியால் வந்து.

275. As the floods, once on a time ceased flowing by the power of the prayer of the sage Narada, who was informed of the flood by the elephant Iravatham, so by the wicked Kali, the mind of the noble Nala, before whom once marched the noisy army of charioteers, was hardened.

(இ - ள்.) சிந்துரத்தால்-ஐராவதமென்னும் யானையினால், தெய்வ முனிவர் தெரிந்து - நாரதமுனிவர் அறிந்து, உரைத்த மந்திரத்தால் - சொல்லிய மந்திரமகிமையினால், தம்பித்த - அசையாமல் நின்ற, மா நீர் போல் - பெருவெள்ள நீரைப் போலே, முந்த - முன்னதாக, ஒலித்த - முழங்கும்படியான, தேர் தானை - தேர்ச்சேனையுள்ள, உயர் வேந்தன் நெஞ்சம் - உயர்வான நளமகாராசனுடைய இருதயமானது, தீ கலியால் - தீமையான கலியினால், வலித்தது - வலிமையாயிற்று, [தயாதாக்ஷிணியங்களில்லாததாயிற்று என்கிறபடி], எ - று ஏ - அசை.

"அம்மவோ கொடியவாவாறே' 'போவதே நோயதாகி" என்னுமிடங்களிற்போல் இரக்கக்குறியாய் வந்ததெனவுங் கொள்ளலாம்; வந்தென்பதையும் அசையென்று கொள்ளவேண்டும்.

ஒருகால் நாரதமாமுனி முனிக்கணங்களோடு ஹரிநாமசங்கீர்த்தனஞ் செய்துகொண்டு ஆனந்த பரவசராய்த் தம்மை மறந்து நிலவுகாயுமிரவில் கங்கைக்கரையண்டை வந்தபோது, அக் கங்காநதி தனக்கு அவர் வணக்கஞ் செய்யவில்லையென்று கோபித்து அம்முனிகுழாம் அமிழ்ந்துபோகும்படி அடங்காப் பெருவெள்ளமாய்ப் புரண்டுவர, அதை யம்முனிவர் அறியாமலிருந்ததனால் ஐராவதம் வந்து தண்ணீர்குடிக்கும் பாவனை வாய்த் தும்பிக்கையினாலே தண்ணீரைவாரி முனிவர்மே லி

றைக்க, அவர் வெள்ளத்தையுணர்ந்து ஒருமந்திரஞ் செபித்த தனால் கங்கை அசையத் திறனில்லாமல் தம்பித்து அம்மகா முனிவரைவேண்டி யநுக்கிரகம்பெற்றுச் சாதாரண நிலையி னின்றுளென்று ஜைமினிபாரதத்தி லோர்கதை யிருப்பதாய்ப் பெரியபவுராணிக ரொருவராற் கேள்வியுற்ருே மாதலின், "சிந் துரத்தாட்டெய்வமுனிவர்" என்பதை "சிந்துரத்தாற் றெய்வ முனிவர்" என்று மாற்றினேமென அறிக. வசிட்டர், விசுவா மித்திரருக்குச் சிலவுணவு தம் சிஷர்கையிற் கொடுத்தனுப்பிய தாயும்அச்சிஷர் இடையேவந்து ஆற்றுவெள்ளத்தைக் கடக்க மாட்டாமல் தடுமாறினபோது அத்தண்ணீர் தம்பிக்கும்படி வசிட்டர் ஒரு மந்திர முரைத்ததாயும் ஒருவர் ஒருகதை எமக் குச்சொன்னுர் ஆயினும் அது இன்னபுராணத்ததென்று தெரி யாததுமன்றிக் கதை விவரம் விளங்காமையினுலும்"சிந்துரத் தாள்" என்பதற்குச் சிவந்தபாதத்தினை யுடைய வென்றே பொருள்கொள்ள அது சிறப்பாய்ப் பொருந்தாமையானும் யாமதனைக் கொண்டிலம்; அப்பாடத்தையே நிலைநாட்டிப் பொருந்தவுரைப்பாராயின் அதுஎமக்கு முக்கியமான ஒப்பாம்.

276. தீக்கா னகத்துறையும் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின் — நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போற் போகின்றேன் யான்.

276. "O thou Gods, who exist even in this forest, filled with dangers! Be a protection to the noble daughter of king Bhima; for in this dark night I intend deserting as an enemy would do, and leave without any help this constant and confiding maiden."

(இ - ள்.) தீகானகத்து உறையும் - தீமையான காட்டில் இருக்கின்ற, தெய்வங்காள் - தேவர்களே, வீமன்தன் கோ காதலியை - வீமராசனுடைய மேன்மையான மகளை, குறி கொண்மின் - (இரக்ஷிப்புக்கு) இலக்காகக் கொள்ளுங்கள், நீக்காத - நீக்கக்கூடாத, காதல் அன்பு மிக்காளை - ஆசையும்

பத்தியுமுடைய இவளை,இன்று - இன்றைக்கு, கார் இருளில்-கறுத்த இருட்டில், கைவிட்டு - ஆதரவு அற நீக்கிவிட்டு,யான் நான், எதிலன்போல் - சத்துருவைப்போல், போகின்றேன்-போய்க்கொண் டிருக்கிறேன், எ - று.

இவ்வாறு நளன் வனதேவதைகளைப் பிரார்த்தித்தான். ()

277. ஏந்து மிளமுலையா ளின்னுயிருந் தன்னருளும்
பூந்துகிலும் வேறாகப் போயினான் — தீந்தேன்
தொடைவிரவு நாண்மாலை சூட்டினா டன்னை
இடையிருளிற் கானகத்தே யிட்டு.

277. Leaving, in the forest, at dead of night, the maiden who cast upon him the garland of fresh flowers filled with sweet honey, Nala went away, parting the beautiful raimant, withdrawing his mercy, and dividing the sweet life of Damayanti, who possessed tender rising breasts.

(இ - ள்.) தீ தேன் - மதுரமான தேன், தொடை - மலர்களில் அல்லது பூங்கொத்துகளில், விரவும் - கலந்திருக்கிற நாள் மாலை சூட்டினான் தன்னை - புதிய மாலையை (தனக்குச்) சூட்டிய தமயந்தியை, இடைஇருளில் - நடுராத்திரியில், கானகத்தே இட்டு - காட்டில் விட்டு, ஏந்தும் - ஏந்தத்தக்க, இள முலையாள் - இளமையான முலைகளையுடையதமயந்தியின் இன் உயிரும் - இனிமையான பிராணனும், தன் அருளும் - தன் கிருபையும்,பூதுகிலும்-அழகிய வஸ்திரமும், வேறுஆம்-வேறுபடும்படி,போயினான் - சென்றான், எ - று.

தன்பத்தால் பிரிந்துபோகுமாதலால் அங்ஙனம் போகாமல் காக்கத்தக்கது அவளுயிரென்பார் 'ஏந்தும்' என்றார். - ()

278. தாருவெனப் பார்மேற் றருசந் திரன்சுவர்க்கி,
மேருவரைத் தோளான் விரவார்போல்—கூரி
ருளில், செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட்
டேகினான், வெங்கா னகந்தனிலே வேந்து.

278. Like the enemies of king Swarki who was on earth, as beneficent as the கற்பகம் tree in Swerga, and whose shoulders were as the mountain Meru, Nala went on his way after having left his wife, alone in the sultry forest, on that dark night, the nails on his fair feet becoming bruised.

(இ - ள்.) தாரு என - கற்பக மரம்போல், பார் மேல் - பூமியின் மீது, தரு - கொடுக்கின்ற, சந்திரன் - சந்திரன் போன்றவனும், மேரு வரை தோளான் - மேருமலை யொத்த புஜமுள்ளவனுமாகிய, சுவர்க்கி-சுவர்க்கியென்பவனுடைய, விரவார்போல் - சத்துருக்களைப் போல், கூர் இருளில் - நிறைந்த இருட்டுள்ள ராத்திரியில், தேவியை விட்டு-நாயகியை ஒன்றியாகவிட்டு, வெம் கானகந்தனிலே - வெப்பமான காட்டிலே, செம் கால் நகம் சிதைய - சிவந்த காலின் நகம் சிதையும்படி ஏகினன் - போயினன், வேந்து - நளமகாராசன், எ - று.

தரு என்கிற வடசொல் முதல்நீண்டு தாருமாயிற்று. தரு— மரப்பொதுப்பெயர், சிறப்பாய்க்கற்பகவிருக்ஷத்துக்குவந்தது. விரவுதல் - சேர்தல், விரவார் - சேராதவர். போல் என்பதை ஏகினன் என்பதோடு கூட்டுக. சந்திரன் சுவர்க்கிஎன ஒருபெயராயும் வரும். இவன் இக்கவியை ஆதரித்து இந்நூல் செய்வித்த ஓரரசன். கூரிருள் — அன்மொழித்தொகையாய் ராத்திரிக்கு வந்தது; நிறைந்த இருட்டில் எனவுங் கொள்ளலாம்; வினைத்தொகை. (கoஎ)

279. நீல மளவே நெகிழ நிரைமுத்தின்
கோலமலரின் கொடியிடையாள்-வேல்வேந்தே
எங்குற்று யென்னு வினவளைக்கை நீட்டினள்
அங்குத்தான் காணு தயர்ந்து.

279. Damayanti, whose waist resembled a blossoming creeper, who awoke after Nala had thus gone, shedding tears, which were as beautiful as a row of pearls from her lotus-like eyes, and not seeing the king there, becoming

sorrowful, exclaimed:—"O king, armed with a lance! where hast thou gone?" and stretched forth her hands which were adorned with smooth bangles.

(இ-ள்.) [இவ்வாறுநளன்சென்றவுடன்விழித்துக்கொண்ட] மலரின் கொடி இடையாள்-மலருள்ள கொடிபோலும் இடையையுடைய தமயந்தி, நிரை முத்தின் கோலம் - வரிசையான முத்தின் அழகு, [கண்ணீர்த்துளி யொழுக்கென்றபடி] நீலம் அளவே - கண்களென்ன நீலோற்பலத்தின் அளவாக, நெகிழ- பெருக, அங்கு - அவ்விடத்தில், தான் காணாது - (அரசனைத்) தான் காணமல், அயர்ந்து - துயரப்பட்டு, வேல் வேந்தே - வேல் தரித்த அரசனே, எங்குற்றாய் என்று - எங்கேபோனு யென்று, இன வளை கை-ஒத்தவளைகள் அணிந்த கைகளை, நீட்டினுள்—, எ - று,

இருட்டாதலால் பக்கத்திற் காணுமல் எங்கே புரண்டிருக்கிருரோவென்று கைநீட்டித் தடவிப்பார்த்தாள் என்கிறபடி.

காணாது—எதிர்மறை வினையெச்சம். (௯௦அ)

280. வெய்ய தரையென்னு மெல்லமளி யைத்தட
விக், கையரிக்கொண் டெவ்விடத்துங் காணு
மல்—ஐயகோ, என்னப்போய் வீழ்ந்தா ளின
மேதி மென்கரும்பைத், தின்னப்போ நாடன்
திரு.

280. The Lakshmi-like Damayanti the daughter of king Bhima who ruled the country where the herds of baffaloes seek for the tender sugar-canes to eat them, feeling with her hands on the floor, which was her soft bed, and not finding Nala, exclaimed:—"Alas O king!" and going out fell on the earth.

(இ-ள்.) இன மேதி-கூட்டமாகிய எருமைகள், மெல்கரும்பை - மெல்லிய கரும்புகளை, தின்ன போம் - தின்னுதற்குச் செல்கின்ற, நாடன் - நாட்டையுடைய வீமனது, திரு - (மகளாகிய) திருமகள் போன்றவள், வெய்ய தரை என்னும் -

வெப்பமான தரையாகிய, மெல் அமளியை-மெதுவான படுக்கையை, தடவி—, கையரிக்கொண்டு - தேடி, (நளனை) எவ்விடத்தும் காணுமல் - எங்கும் பார்க்காமல், ஐயகோ - ஐய அரசனே, என்ன போய் வீழ்ந்தாள் - என்று கூவிக்கொண்டு போய் நிலத்தில் விழுந்தாள், எ - று.

வெய்ய—குறிப்புப்பெயரெச்சம். வெம்மையில் மை போய் நின்ற வெம்-பகுதி, அ - விகுதி, முன்னின்ற மெய்திரியுமென்பதனுல் மகரம் யகரமாகித் தனிக்குறின்முன் ஒற்றுதலால் இரட்டியது. என்ன—என்று என்பதில் திரிபு. கோ என்பது அவலத்துக் கூவும் ஓரொலி யென்னவுமாம். நாடன் திரு-நளனுடைய செல்வம் போன்றவள் என்றுஞ் சொல்லலாம். மெல் என்பதின் லகரம் னகரமாகத்திரிந்தது. பண்படிகளில் லளக்கள் னணக்களாகும்; லற ஆகி மெலிந்த தென்னவுமாம். திரு-உவமையாகுபெயர். (க0க)

281. அழல்வெஞ் சிலைவேட னம்புருவ வாற்ரு, துழலுங் களிமயில்போ லோடிக்—குழல்கண், டெழுந்தோட வீழ்ந்தா ளிருகுழைமேற் கண்ணீர்க், கொழுந்தோட வீமன் கொடி.

281. As the joyous peacock, which when it is pierced by the arrow of the huntsman who hands a bow as destructive as fire, unable to endure the agony, rushes about from place to place, so Damayanti ran from one place to another, falling down at times, so that the bees flew away from her plaited tresses and the tear-drops moistened her ears.

(இ - ள்.) அழல் - அக்கினிபோன்ற, வெம் சிலை வேடன் - உக்கிரமாள வில்லேந்திய வேடனது, அம்பு உருவ - அம்பு பொத்துப் பாய்ந்தபோது, ஆற்ருது-சகிக்கமாட்டாமல், உழலும்-ஓடித்திரிகிற, களிமயில் போல் - களிப்படைத்தமயிலைப் போல், [பருவமுள்ள மயிலென்பபடி,] வீமன்கொடி-தமாந்தி குழல் வண்டு எழுந்து ஓட - அளகபாரத்திலிருந்த வண்டுகள்

எழுந்து ஓடவும், இருகுழைமேல்-இரண்டு காதுகளின்மேல், கண்ணீர் கொழுந்து ஓட - கண்ணீரின் துளிகள் ஓடவும், ஓடி - அங்கிங்கே யோடி, வீழ்ந்தாள்—, எ - று. (கக0)

282. வான்முகிலு மின்னும் வறுநிலத்து வீழ்ந்தது
போல், தானுங் குழலுந் தனிவீழ்ந்தாள் —
ஏனம், குளம்பான் மணிகிளைக்குங் குண்டுநீர்
நாடன், இளம்பாவை கைதலைமே லிட்டு.

282 As if the clouds and lightning fell upon the bare ground, so the young doll-like daughter of king Bhima, who possessed the country in which the hoofs of the pigs dig up the precious stones in the ditches of water, placing her hands upon her head, alone as she was, fell to the ground with her plaited tresses.

(இ-ள்.) ஏனம் - பன்றிகள், குளம்பால் மணி கிளைக்கும் - குளம்புகளால் ரத்தினங்களைக் கிண்டுகின்ற, குண்டுநீர்நாடன் - பள்ளத்து நீருள்ள நாட்டையுடைய வீமனது, இளம் பாவை - இளமையான பதுமைபோன்ற மகள், தனி-ஒன்றியாகி, கை தலைமேல் இட்டு - கையைத் தலைமேல் வைத்துக்கொண்டு, வான் முகிலும் - பெரிய மேகமும், மின்னும் - மின்னலும், வறு நிலத்து வீழ்ந்தது போல் - வெற்றுத்தரையில் வீழ்ந்தது போலே, தானும் குழலும் - தானும் தன் கூந்தலும், வீழ்ந்தாள் —, எ - று.

குழலுக்கு முகிலும் மின்னுக்குத் தானும் உபமேயமாக கொள்க. "களிறுங்கந்தும் போல நளிகடற் கூம்புங் கலனுந் தோன்றும்" என்பது போல் இது எதிர் நிரனிறைப்பொருள் கோள் - [பொதுவியல் சூ-ம்-கு.] தானும் குழலுமென்னும் மிரண்டும் ஒருமைமுடிபு கொண்டதற்கு [பொ-உஎ-சூத்திர]

உரையைக்காண்க. முகிலும் மின்னும் என்னும் எழுவாய்கள் வினைமுதற்பொருளாய் வீழ்ந்தது என்னும் தொழிற்பெயரில் முடிந்தது ; அத்தொழிற்பெயர், போல என்னும்வினையெச்சத்தில் முடிந்தது.வறுநிலம்...பண்புத்தொகை. தனி—முதனிலை வினையெச்சமானது "வினைமுற்றே வினையெச்சம்" என்னுஞ் சூத்திரவுரையைக் காண்க. (கககூ)

283. தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறைக்கான், கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை, வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பன போற், கூவினவே கோழிக் குலம்.

283. Unable to endure the sorrow of Damayanti, the fowls, striking their sides (lit-stomachs) with their wings made a noise, as if inviting the sun, in the dreadful darkness, to come with his chariot of prancing horses.

(இ-ள்.) தையல் துயர்க்கு தரியாது - தமயந்தியினது துக்கத்துக்குச் சகியாமல், தம் சிறகு ஆம் கையால் - தம்முடைய இறகுகளாகிய கைகளினால், வயிறு அலைந்து - வயிற்றை அடித்துக்கொண்டு, கார் இருள்வாய் - பயங்கரமான இருட்டில், வெய்யோனை - சூரியனை, வாவு பரி தேர் ஏறி-தாவுகின்ற குதிரைகள் கட்டிய தேர்மேலேறிக்கொண்டு, வா என்று—, அழைப்பன போல் - அழைக்கின்றவைகளைப்போல, கோழி குலம் - கோழிக்கூட்டங்கள், கூவின - கூச்சலிட்டன, எ-று. ஏ - அசை.

விடியற்காலமானதால் கோழி சிறகடித்துக்கொண்டு கூவினதைச் சூரியனை வரும்படியழைத்ததாகக்குறித்தார். தையல் என்பது ஆகுபெயராய்ப் பெண்ணுக்காயிற்று. (ககஉ)

284. வான நெடுவீதி செல்லு மணித்தேரோன்
தான மடைந்தைக்குத் தார்வேந்தன்—போன

நெறி, காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்
கக் கானூடே, நீட்டுவான் செங்கரத்தை நின்று.

284. As if pointing out to that damsel the direction taken by Nala, the wearer of the victorious garland, the sun whose jewelled chariot traverse the great pathway of heaven, standing in the midst of that forest from which the darkness had retreated, stretched forth his golden-rayed hand.

(இ-ள்.) வான நெடு வீதி செல்லும்-ஆகாசமாகிய பெருந் தெருவிலே போகின்ற, மணி தேரோன் - ரத்தினத்தேரை யுடையவனானசூரியன், அமடைந்தைக்கு-அந்தப்பெண்ணுக்கு, தார் வேந்தன் போன நெறி-வெற்றிமாலையணிந்த நளமகாரா சன் போன வழியை, காட்டுவான் போல்-காட்டுகிறவனைப் போல், இருள் போய் - இருட்டுப்போய், கைவாங்கு - பின்னி டுகின்ற, அ கானூடே-அந்தக் காட்டினடுவே, நின்று—,செம் கரத்தை - சிவந்த கிரணமாகிய கையை, நீட்டுவான் - நீட்டி னான், எ - று. தான் - அசை.

நின்று என்பதை அசையென்னலுமாம். கைவாங்க - பின் னிடுகையில், எனவு முரைக்கலாம்.

சூரியகிரணம் நீண்டுவீழ்ந்ததைச் சூரியன் கைநீட்டிஅரசன் சென்ற வழியைக் காட்டினதாகக் குறித்தார். கரம் என்னும் வடசொல் கைக்கும் கிரணத்துக்கும் பெருதலால் கிரணமா கிய கையை என உரைத்தாம். இது சிலேடைப்பற்றிய உரு வகம். நீட்டுவான்—இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமாயி ற்று. 'செங்கதிரை' எனவும் பாடமுண்டு. அம்மடந்தை என் பதில் மகரம் தொகுத்தலாய் அ மடந்தை என நின்றது. போல்—குறிப்புப்பொருளில் வந்தது. (ககங)

285. செய்தபிழை யேதென்னுங் தேர்வேந்தே யென்
றழைக்கும், எய்துதுய ரக்கரைகா ணேனென்
னும்—பையவே, என்னென்னு தென்னென்னு

மிக்கானின் விட்டேகு, மன்னென்னு வாடு
மயர்ந்து.

285. Then Damayanti would ask:—' What fault have I done?' She would call out ' O king that possessest great chariots' and exclaim—' I cannot see the shore turminating the sea of sorrow which I have now attained' and fainting, would ask, ' why do you not reply to my cries? O king, who deserted me in that forest!' Thus exclaiming she would continue sorrowing and swoon away.

(இ - ள்-) [அக்காலத்தில் தமயந்தி,] செய்த பிழை ஏது என்னும்-நான்செய்த குற்றம் யாது என்பாள்; தேர் வேந்தே என்று அழைக்கும்-மகாரதமுள்ள அரசனே என்று அழைப்பாள்; எய்து துயரம் கரை காணேன் என்னும்-அடைந்திருக்கின்ற துக்கசாகரத்தினது கரையைக் காணமாட்டேன் என்பாள்; பைய - தளர்ந்து, என் என்னுது என் என்னும் - என்னவென்று கேளாமை என்னகாரண மென்பாள்; இ கானில் - இந்தக்காட்டில், விட்டு ஏகும் - (என்னை) விட்டுச் செல்கின்ற, மன் என்னு-அரசனே என்றுசொல்லி, அயர்ந்து-துக்கப்பட்டு, வாடும்-வாடிப்போவாள் ; எ-று. ஏ - அசை.

துயரக்கரை என்பதைத் துயர் அக்கரை யெனவும் பிரிக்கலாம். இக்கரை ஆரம்பமாதலால் அதை அறிவேன், அக்கரை முடிவு, அதையே அறியேன் என்பது கருத்தாம். கரை என்றமையின் துயரமாகிய சாகரமென்றும். (௧௧௪)

286. அல்லியந்தார் மார்ப னடித்தா மரையவடன்,
நல்லுயிரு மாசையும்போ னுறுதலும்—மல்
லூறுதோள், வேந்தனே யென்னு விழுந்தாள்
விழிவேலே, சாய்ந்தநீர் வெள்ளத்தே தான்.

286. When she saw, as if they were her own good life and her desire, the foot prints, of the lotus-like feet of Nala, whose breast was adorned with a garland of lilies [அல்லி] Damayanti exclaimed:—" O king, possessed of

powerful shoulders!" and bathed herself in the flood of tears which flowed from her sea-like eyes.

(இ - ள்.) அல்லி அம் தார் - அல்லிப் பூமாலையணிந்த, மார்பன் - மார்புள்ள நளனுடைய, அடி தாமரை - பாதங்களாகிய தாமரை மலர்கள், அவள் தன் - அந்தத் தமயந்தியினுடைய, நல் உயிரும் ஆசையும் போல்-நல்ல பிராணனும் விருப்பமும் போலே, நாறுதலும் - தோன்றினவுடனே, [பரிமளித்தவுடனே,] மல் உறு தோள்-பலம்பொருந்திய தோளையுடைய, வேந்தனே என்று-அரசனே என்று கூவி, விழி வேலை - கண்ணாகிய கடலினின்றும், சாய்ந்த நீர் வெள்ளத்தே - பெருகிவரும் ஜலப்பிரவாகத்திலே, விழுந்தாள்—எ-று. தான்-அசை.

அல்லியந்தார் என்பதில் அம் - சாரியை, அழகான என்று பொருள் கொள்ளலுமாம். அடித்தாமரை என்றமையின், நாறுதல்-பரிமளித்தல் எனவுங் கொள்ளப்பட்டது. என்று, நாறுதலும் இரண்டும் வினையெச்சம். அங்கு அரசனது பாதச்சுவடு காணப்பட்டது அவளுக்குத் தன் உயிரும் விருப்பமும் தோன்றினதுபோல் இருந்ததென்பது கருத்து. அது கண்டவுடனே கண்ணீர்வெள்ளம் பெருக அங்கேயே வீழ்ந்தா ளென்றதாயிற்று. (உஅசு)

287. வெறித்த விளமான்காண் மென்மயில்கா ளிந்த,
நெறிக்க ணெடிதூழி வாழ்வீர் — பிறித்தெம்
மைப், போனாரைக் காட்டுதிரோ வென்னுப்
புலம்பினாள், வானாடர் பெற்றிலா மான்.

287. The deer Damayanti that even the Gods of the celestial kingdom could not obtain, cried, exclaiming:—"O herd of deer that are stunned through fright! O soft peacocks! you will live for many ages to come in this place. Will you shew me him who separated from me?"

(இ-ள்.) வான் நாடர் - தேவலோகத்தார், பெற்றிலா மான்-பெறாத பெண், [தமயந்தி,] வெறித்த - (அச்சத்தினால்) செய்

கையற்று நிற்கிற, இள மான்காள் - இளமையான மான்களே மெல் மயில்காள் - மென்மையான மயில்களே, இந்த நெறிக்கண் - இந்தவழியில், நெடிது ஊழி - பெரிய யுகமுடிவு வரையில், வாழ்வீர் - வாழக்கடவீர், எம்மை பிரித்து போனாரை - எம்மை வெறுக்கிப் போன எம் அரசரை, காட்டுதிரோ என்று - காட்டுவீரோ என்று சொல்லி, புலம்பினாள் - அழுதாள், எ - று.

நெடி தூழி வாழ்வீர் என்பதை விளிப்பெயராக்கொண்டு நெடுங்காலம் வாழ்கின்றவர்களே என்றும் பொருளுரைக்கலாம். எம்மை என்பதுஉயர்வினால் வந்த ஒருமையிற் பன்மை; என்னையும் என்மக்களையும் எனினும் ஒக்கும். நெடிது-குறிப்பு முற்றுப்பெயர், நெடு - பகுதி து - விகுதி, இடையுகரம் இ ஆயிற்று ; ஊழிக்கு விசேஷணம். ஊழி—ஊழ்-பகுதி, நாசஞ் செய்தல், இ-கர்த்தாப்பொருள்விகுதி, ஏழாம் வேற்றுமைத் தொகை. வடநூலிலக்கணத்தின்படி இரண்டாம் வேற்றுமையெனக்கொண்டு நெடிய ஊழிகாலமெல்லாமெனப் பொருளுரைப்பது நேர். "அங்பந்த சம்யோகே துவிதியை" என்பர் காட்டுதிர்—நிகழ்கால முன்னிலைப்பன்மை வினைமுற்று,காட்டு பிறவினைப்பகுதி, (காண் - பகுதி, டு - பிறவினைவிகுதி) இர் - முன்னிலைப்பன்மை விகுதி, த்-எழுத்துப்பேறு, விகுதி காலங் காட்டும்,எதிர்கால மென்னவுமாம். (கசகூ)

288. வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியான்
மோட்டு வயிற்றரவு முன்றோன்ற — மீட்டதனை
ஓரா தருகணைந்தா ளுண்டே னறற்கூந்தற்
போரார் விழியாள் புலர்ந்து.

288. Damayanti, upon whose tresses resembling layers of black sand swarms of bees sipped honey, and whose eyes seemed as if disposed to war with each other, seeing before her a rock snake which, from excessive hunger, had swallowed an elephant, and now lay with its stomach bloated, not knowing it was a snake, approached it.

(இ - ள்.) உண் தேன் - மது உண்கின்ற வண்டு மொய்த்த, அறல் - கருமணற் படிபோலிருக்கிற, கூந்தல் - கூந்தலை யுடைய, போர் ஆர் விழியாள்-போர் செய்யுங் குணம் பொருந், திய கண்ணையுடைய தமயந்தி, புலர்ந்து-வாடி, பெரு பசியால் - அதிகப் பசியினால், வேட்ட - விரும்பின, காரியை - யானையை, விழுங்கி - கபளீகரித்து, மோட்டு வயிற்று - உப்பியிருக்கிற வயிற்றையுடைய, அரவு - மலைப்பாம்பு, முன் தோன்ற - எதிரில் காணப்பட, அதனை-அப்பாம்பை, மீட்டு - திரும்பி, ஓராது - அறியாமல், அருகு - சமீபத்தில், அணைந்தாள் - சேர்ந்தாள், எ - று,

கூந்தல், விழி, இரண்டையும் உம்மைத் தொகையாகக் கொண்டு மேல் ஆள் விகுதியைச் சேர்க்கவுமாம். உண்டேன் - அன்மொழித்தொகை. வண்டுமொய்த்தல்கூந்தலுக்குக் கொள்க. உண் தேனும் அறலும்போன்ற எனவுமாம். போர் ஆர் விழி என்பது காண்போர் மனங் கலங்கலுக்குக் குறிப்பு வேட்ட — வேள் - பகுதி, ட் - இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி, ளகரம் டகரமானது சந்தி. வேட்டான், வேட்கின்றான், வேட்பான் எனவரும். மீண்டு என்பது வலித்தலால் மீட்டு ஆயிற்று; மீள் - பகுதி, ட்-இடைநிலை, உ-விகுதி, ளட ஆனது சந்தி. திரும்புதல் அறிதற்குக் காரணம். (கஅஎ)

289. அங்கண் விசும்பி னவிர்மதிமேற் சென்றடையும், வெங்க ணரவுபோன் மெல்லியலைக் — கொங்கைக்கு, மேலெல்லாந் தோன்ற விழுங்கி யதே வெங்கானின், பாலெல்லாந் தீயுமிழும் பாம்பு.

289. Like the fiery-eyed serpent Raghu, which approaches the bright moon on the beautiful expanse of the heavens, the rock snake, which emitted fiery poison all over the sultry desert, swallowed up the soft natured Damayanti, so that only that part of her body above her breasts was visible.

(இ - ள்.) அம் கண் - அழகிய இடமுள்ள, விசும்பின் அவிர் மதிமேல் - வானத்தில் விளங்குஞ் சந்திரன்மேல், சென்று அடையும் - போய்ச் சேருகின்ற, வெம் கண் அரவு போல் - உக்கிரமான கண்ணுள்ள அல்லது கோபமுள்ள இராகுவென்னும் பாம்புபோல், வெம் கானின் - வெம்மையான காட்டினுடைய, பால் எல்லாம் - இடமெங்கும், தீ உமிழும் பாம்பு - (விடமாகிய) அக்கினியைக் கக்குகின்ற அந்த மலைப்பாம்பு, மேல் இயலை - மென்மையான சுபாவமுள்ள தமயந்தியை, கொங்கைக்கு மேல் எல்லாம் தோன்ற - முலைக்குமேற்பட்ட அவயவமெல்லாங் காணப்படும்படி, விழுங்கியது - உண்டுவிட்டது, எ - று. ஏ - அசை.

அவிர்மதி—வினைத்தொகை. விழுங்கியது—விழுங்கு-பகுதி, இன் - இடைநிலை, ஈறுகெட்டது, அ - சாரியை, து - விகுதி, ய் - உடம்படுமெய்; இடைநிலை, யீறுகெடாதபோது இச்சாரியை வராது; விழுங்கிற்று-இவ்விடைநிலை முதல் கெடுதலுமுண்டு; போனான். (கஅ)

290. வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவ
நின், தாளடைந்து வாழுந் தமியேனைத் —
தோளால், விலக்காயோ வென்றழுதாள் வெவ்
வரவின் வாய்க்கிங், கிலக்காகி நின்றாளெடுத்து.

290. Damayanti, who had fallen a victim to the mouth of that cruel snake in the forest, crying aloud, said:—"O king! before I die a victim in the mouth of this glittering serpent, can you not with your powerful shoulders save me who am fit to live doing service to your feet?

(இ-ள்.) இங்கு - இக்காட்டில், வெம் அரவின் வாய்க்கு-உக்கிரமானபாம்பின் வாய்க்கு, இலக்கு ஆகி நின்றாள் - லக்ஷியமாகின்ற தமயந்தி, [பாம்பினால் விழுங்கப்பட்ட தமயந்தியென்றபடி,] மன்னவ - நளமகாராசனே, வாள் அரவின் வாய்பட்டு - பிரகாசமுள்ள பாம்பின் வாயில் வீழ்ந்து, மாயா முன் -

சாகா முன்னமே, நின்தாள் அடைந்து வாழும்-உன்பாதத்தை யடைந்து வாழத்தக்க, தமியேனை - ஆதரவற்ற என்னை, தோளால் விலக்காயோ - புஜபலத்தினால் விலக்கிக் காக்கமாட்டாயோ, என்று—, எடுத்து - குரலெடுத்து, அழுதாள்—, எ-று.

வாளரவு என்பதற்கு வாள்போன்ற அரவென்று பொருள் கூறுவது நேர். (௨௯௦)

291. வென்றிச் சினவரவின் வெவ்வா யிடைப்பட்டு
வன்றுயராற் போயாவி மாள்கின்றேன்—இன்
றுன், திருமுகநான் காண்கிலேன் றேர்வேந்தே
யென்றாள், பொருமுகவேற் கண்ணாள் புலர்ந்து.

291. Damayanti, whose eyes were as a lance sharpened for battle, fainting exclaimed:—" O Nala who possessest chariots I have fallen into the cruel mouth of this conquering and angry snake, and through excessive sorrow I am dying. I cannot this day see your handsome face."

(இ - ள்.) பொரு முகம் - போர் செய்யத்தக்க முகமுள்ள, வேல் கண்ணாள் - வேல்போன்ற கண்களையுடைய தமயந்தி, புலர்ந்து - துக்கத்தால் வாடி, தேர் வேந்தே - ரதாதிபதியான நளமகாராஜனே, வென்றி சினம் அரவின் - வெற்றி பெறும்படியான கோபமுள்ள பாம்பினது, வெம் வாயிடை பட்டு - வெம்மையான வாயில் வீழ்ந்து, வல் துயரால் - கடினமான துக்கத்தினால், ஆவி போய்-பிராணன்போய், மாள்கின்றேன் - சாகின்றேன், இன்று - இன்றைக்கு, உன் திரு முகம் - உன்னுடைய அழகிய முகத்தை, நான்—, காண்கிலேன் என்றாள் - காணத் திறமற்றிருக்கிறேனென்று சொன்னாள், [புலம்பினாளென்றபடி,] எ-று.

பொருமுகம் — வினைத்தொகை. காண்கிலேன் — காண் - பகுதி, இல்-ஆற்றலைக்காட்டும் விகுதி, அனைத்துமொரு பகுதி, ஏது - தன்மையொருமைவிகுதி. எதிர்மறை ஆகாரவிகுதி கெட்டது; அல்லது கு - சாரியை, இல் - எதிர்மறை குறிக்கும் பண்படி எனவும் கொள்ளலாம். (௨௯௧)

292. மற்றொடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினை யேன், பெற்றெடுத்த மக்காள் பிரிந்தேகும்—கொற்றவனை, நீரேனுங் காண்குதிரோ வென் றழுதா ணீள்குழற்குக், காரேனு மொவ்வாள் கலுழ்ந்து.

292. Damayanti to whose long tresses even the clouds cannot be compared, weeping exclaimed:—' Though I am separated from the shoulders of Nala, strong in wrestling; O my children, begotten and reared up by my who am now lingering in death through me great sin, will you at least see the king who has parted from me ?"

(இ - ள்.) நீள் குழற்கு - நீண்ட கூந்தலுக்கு, காரேனும் - மேகமானாலும், ஒவ்வாள் - சமானமாகப் பெறாதவளாகிய தமயந்தி, கலுழ்ந்து - கலங்கி, மல் தொடுத்த தோள் - மல்லுத் தஞ் செய்யவல்ல (நளமகாராஜனது) தோளை, பிரிந்தும் - பிரிந்துபோயும், மாயாத - மரண மடையாத, வல்வினையேன் - வன்மையான பாவமுள்ள நான், பெற்று எடுத்த மக்காள் - பெற்றுவளர்த்த குமாரர்களே, பிரிந்து ஏகும் கொற்றவனை - என்னைப்பிரிந்துபோகின்ற அரசனை, நீரேனும் காண்குதிரோ - நீங்களாயினுங் காண்பீர்களோ, என்று அழுதாள்—, எ - று.

மக்காள்—ஈற்றயல் நீட்சி விளியுருபு. ஏகும் — "செய்யு நிகழ்பெதிர்வும்" என முற்றுக்குக் கூறியதை அவ்வாய்பாட் டுப் பெயரெச்சத்திற்குங் கொண்டு, நிகழ்காலத்தில் வந்த தென்னலாம். மற்றொடுத்ததோள் — அன்மொழித் தொகை யாய் அரசனுக்கு மாகும். ஏன் — ஓரிடைச்சொல், உம்மை யோடு கூடியேவரும். காரேனும் என்பதில்சிறப்புப்பொருள்; நீரேனும் என்பதில் விகற்பம், இது பிரிவினையுங் காட்டும்; ஏனும் என்று ஒரு மொழியென்பாரு முளர். காண்குதிர் — காட்டுதிர் என்பதுபோல் கொள்க; எதிர்காலம், கு - சாரியை; உகரச்சாரியைபெற்றுக் காணுதிர் எனவும் வரும். (உஉக)

293. அடையுங் கடுங்கானி லாடரவின் வாய்ப்பட்,
டுடையுமுயிர் நாயகனே யோகோ — விடை
யெனக்குத், தந்தருள்வா யென்றுதன் றாம
ரைக்கை கூப்பினாள், செந்துவர்வாய் மென்
மொழியா டேர்ந்து.

293. Damayanti with a mouth like red coral, and soft speeched, having fallen into the mouth of the dancing snake, in the dence forest which she was traversing, was distracted in mind. Being sure of death, she clasped her lotus-like hands and exclaimed:—" Alas husband of my life, you must now allow me to bid you farewell"

(இ-ள்.) செம்துவர் வாய் - சிவந்த பவளம்போன்ற வாயையுடைய, மென் மொழியாள் - மெத்தென்ற பேச்சையுடைய தமயந்தி, அடையும் கடு கானில் - தான் அடைந்த கடுமையான காட்டில், ஆடு அரவின் வாய் பட்டு - ஆடுகின்ற பாம்பின்வாயில் விழுந்து, உடையும் - (மனம்) உடைந்துபோவாள்; தேர்ந்து - (தன் மரணத்தை) நிச்சயித்து, உயிர் நாயகனே, ஓகோ - ஐயோ, எனக்கு விடை தந்தருள்வாய் என்று - எனக்கு உத்தரவு தந்தருளவேண்டுமென்றுசொல்லி, தன் தாமரை கை கூப்பினாள் - தனது தாமரைபோன்ற கையைக் குவித்தாள், எ - று.

ஓகோ - அவயக்குறிப்பிடைச்சொல்; உடையும் என்பதை பெயரெச்சமாக்கொண்டு எனக்கு என்பதோடு கூட்டலாம்.

294. உண்டோ ரழுகுரலென் றுற்றி வருகின்ற
வெண்டோடன் செம்பங்கி வில்வேடன் —
கண்டான், கழுகுவாழ் கானகத்துக் காரரவின்
வாயின், முழுகுவா டெய்வ முகம்.

294. A hunter, with pendants of bleached bones to his ears, and red locks of hair, passing close by with a bow and hearing the sound of cries, saw the divine face of her

who was half swallowed by the mouth of the great snake in the forest where the vultures lived.

(இ-ள்.) ஓர் அழு குரல் உண்டு என்று-(இக்காட்டில்) அழுகின்றன ஓசை ஒன்று கேட்கப்படுகிறதென்று, ஒற்றி-உற்றுக் கேட்டு, வருகின்ற- வருகிறவனாகிய, வெள் தோடன் - வெள்ளெலும்பினாற் செய்த காதணி யுடையவனும், செம் பங்கி - சிவந்த தலைமயிருள்ளவனும் ஆகிய, வில் வேடன் - வில்லை யுடைய வேடன், கழுகு வாழ் கானகத்து - கழுகுகள் வாழ்கின்ற காட்டில், கார் அரவின் வாயில்-பெரும்பாம்பினது வாயிலே, முழுகுவாள் - அமிழ்கின்றவளுடைய, தெய்வ முகம் - தெய்வத்தன்மை பொருந்திய முகத்தை, கண்டான்—, எ-று.

வெள்தோடன் என்னுமிடத்துத் தகுதிபற்றி வெள்ளெலும்பெனக் கொள்ளப்பட்டது. முகத்துக்குத் தெய்வத்தன்மையாவது, பார்த்தவுடனே இவள் தேவாமிசம் பொருந்தினவளென்று தோன்றுகை; கழுகுவாழ் கானகம்என்றது காட்டின் கொடுமைக்குக் குறிப்பு. (௧௨௩)

295. வெய்ய வரவின் விடவாயி னுட்பட்டேன்
ஐயன்மீ ருங்கட் கபயம்யான்—உய்ய
அருளீரோ வென்னா வரற்றினா ளஞ்சி
இருளீரும் பூணா ளெடுத்து.

292 Damayanti, the brightness of whose jewels dispelled the darkness, full of fear exclaimed; "O sir I have fallen into the venomous mouth of this terrible serpent. I take refuge in you. Will you not have mercy on me and bid me live?'

(இ - ள்.) வெய்ய அரவின் விட வாயினுள் பட்டேன் - உக்கிரமான சர்ப்பத்தினுடைய விஷம் பொருந்திய வாயில் விழுந்தேன், ஐயன்மீர் - ஐயமாரே, உங்கட்கு யான் அபயம்- உமக்கு யான் அடைக்கல மாகின்றேன், உய்ய அருளீரோ - (நான்) பிழைக்கும்படி கிருபை செய்யமாட்டீர்களா, என்னா- என்று, இருள் ஈரும் பூணாள் - இருளை நீக்குகின்ற ஆபரணங்

கணையுடைய தமயந்தி, அஞ்சி - பயப்பட்டு, எடுத்து ஆற்றி னாள் - குரல் எடுத்துக் கூவினாள் எ-று.

ஐயன் என்பது ஆர்யன் என்னும் வடசொல்லின் திரிபு; மரியாதை செய்யத்தக்கவன் என்பது பொருள்; உயர்வினால் ஒருமையிற் பன்மை வந்தது. ஐயன் என்னுஞ் சொல்லின்மேல் "அன் ஆன்" என்னுஞ் சூத்திரத்தில் "பெயரினுஞ் சிலவே" என்பதனால் பலர்பாலுக்கு மார் விகுதி வந்தது. [பொதுவியல் ருஉ-ம் சூ] "ரவ்வீற்றுயர் பெயர்க் களபெழல்" என்னுஞ் சூத்திரத்தில் "ஆண்டையா ஈ ஆதல்" என்றமையின் அயல் ஆகாரம் விளியில் ஈகாரமாயிற்று. (௧௨௪)

296. சங்க நிதிபோற் றருசந் திரன்சுவர்க்கி, வெங்க
லிவாய் நின்றுலக மீட்டாற்போல்—மங்கையை
வெம், பாம்பின்வாய் நின்று பறித்தான் பகை
கடிந்த, காம்பின்வாய் வில்வேடன் கண்டு.

296. As Chandraswarki, who like the golden conch of Kuvera could bestow any thing, recovered the world from the cruel **Kali**, the hunter who possessed a bamboo bow with which he slew **his enemies**, seeing what hap-pened, drew Damayanti out from the mouth of the cruel snake.

(இ - ள்.) சங்க நிதி போல் - சங்கமென்கிற ஒரு நிதியைப் போல, தரு - கொடுக்கின்ற, சந்திரன் சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கி யென்பவன், வெம் கலிவாய் நின்று - வெப்பமான கலியினிடத்திருந்து, உலகம் மீட்டால் போல் - உலகத்தை மீட்டுக்கொண்டு வந்ததுபோல, பகை கடிந்த - சத்துருவை நீக்கவல்ல, காம்பின் வாய் - மூங்கிலினால் வாய்த்த, வில் - வில்லையுடைய, வேடன்—, கண்டு - பார்த்து, வெம் பாம்பின் வாய் நின்று - உக்கிரமான பாம்பின்வாயிலிருந்து, மங்கையை தமயந்தியை, பறித்தான் - இழுத்துப்போட்டான், ஒ-று.

உலகத்தைக் கலிவாயினின்று மீட்டலாவது, அயோக்கிய காரியங்களி னின்றுந் திருப்பித் திருத்தச்செய்தல். வாய் —

காய்த்த என்னும் பெயரெச்சந்திரிந்த வினைத்தொகை, வாய் நின்று — நின்று ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு நீக்கப் பொருளில் வந்தது. (௧௨௫)

297. ஆருயிரு நானு மழியாம லேயாவிப்
பேரரவின் வாயிற் பிழைப்பித்தாய்—தேரில்
இதற்குண்டோ கைம்மா றெனவுரைத்தாள்
வென்றி, விதர்பன்றான் பெற்ற விளக்கு.

297. Damayanti, the daughter of the victorious king of Vidarpa addressing the hunter said:—"O sir you have saved me from the mouth of this huge serpent, and prevented my precious life and myself from being destroyed. When we consider the matter, is there any retnrn obligation of equal value? No."

(இ-ள்.) வென்றி விதர்ப்பன்-வெற்றியுள்ள விதர்ப்பராஜன் பெற்ற விளக்கு - தமயந்தியானவள், ஐயா—, ஆர் உயிரும் - அருமையான உயிரும், நானும்—, அழியாமல் - நாசமாகாமல், இப்பேர் அரவின் வாயில் - இந்தப் பெரும்பாம்பின்வாயினின்றும், பிழைப்பித்தாய் - பிழைக்கச்செய்தாய், தேரில் - நன்றாய் யோசித்துப் பார்த்தால், இதற்கு கைம்மாறு உண்டோ - இதற்குப் பதிலுபகாரமுண்டோ, என் உரைத்தாள் என்று சொன்னாள் (அவ்வேடனை நோக்கி,) எ-று-தான்- அசை

"தனியைந்நொது முன்மெலி மிகலுமாம்" என்றமையின் கைம்மாறு என்பதில் மகரமிகுந்தது. (கை-உபகாரம். மாறு - மாறுவது,) மாறுவதாகிய உபகாரம். (௧௨௬)

298. இந்து நுதலி யெழிலேநோக்கி யேதோதன்
சிந்தை கருதிச் சிலைவேடன்—பைந்தொடிநீ
போதுவா யென்னுடனே யென்றான் புலேநரகுக்
கேதுவாய் நின்றா னெடுத்து.

298. Regarding the beauty of Damayanti, whose forehead was like the cresent moon, and entertaining an

immoral desire at heart, this archer who was worthy of the depths of hell, said;—"O thou adorned with bangles of burnished gold, Come with me"

(இ-ள்.) இந்த நுதலி-சந்திரன்போன்ற நெற்றியையுடைய தமயந்தியினது, எழில் நோக்கி-அழகைப்பார்த்து, ஏதோ - எதையோ, தன் சிந்தை கருதி - தன் மனதில் நினைத்து, புலை நரகுக்கு-ஈனமான நரகத்துக்கு, ஏதுவாய் நின்றான் - பயனாய் நின்றவனாகிய, சிலை வேடன் - வில்லையுடைய வேடன், பைந்தொடி - பசும்பொன்னாலாகிய வளைகளை யணிந்தவளே, நீ—, என்னுடனே போதுவாய்-என்னோடுவா, என்றான் எடுத்து - என்றெடுத்துச்சொன்னான், எ - று.

பயனும் ஏதுவாம். பைந்தொடி — பசுமையில் ஈறுபோய் அடி அகரம் ஐயாகி சு என்பதும் கெடநின்ற பை என்பதின் முன் வருமெழுத்துக்கு இனமிகுந்து தொடி என்பதோடு புணர்ந்தது ;பண்புத்தொகைப்புறத்துவந்த அன்மொழித்தொகை; அண்மை விளியாதலின் இயல்பு. தற்காலம் வளையில்லாவிடினும் கையில் வளையணிந்திருந்த வடுநோக்கி அங்ஙனம் விளித்தானெனக் கொள்க. போதுவாய்—புகுது போதுஆயிற்று ; ஆய் - ஏவலொருமை விகுதி - சிந்தித்தலுக்குக் கருவியாதலால் சிந்தை—ஐ கருவிப்பொருள் விகுதி, பகுதி இகரங் கெட்டது சந்தி. (௪௨௭)

299. வேட னழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன் மயில்போ லலமரா—ஓடினாள்
தூறெலா மாகச் சுரிகுழல்வேற் கண்ணினீர்
ஆறெலா மாக வழுது.

299. On the hunter calling her, Damayanti who possessed curly locks, blinking with her eyes and drawing a hot breath, and becoming troubled like a dancing peacock, cried; so that the streets flooded with the tears from her lance-like eyes and rushed among the bushes

(இ-ள்.) வேடனழைப்ப - வேடன் அழைக்கையில், விழி பதைத்து - கண்பதைத்து, வெய்து உயிரா - வெப்பமாக மூச்செறிந்து, ஆடல் மயில் போல்-ஆடுதலையுடைய மயிலைப்போல், அலமரா - வருத்தப்பட்டு, சுரி குழல் - சுரிந்த அளகத்தையுடைய தமயந்தி, வேல் கண்ணின் நீர் - வேல்போன்ற கண்ணின் நீரானது, ஆறெலாம் ஆக - வழியெல்லாம் ஓடும்படி அழுது—, தூறெலாம் - புதர்களிலெல்லாம், ஓடினாள்—, எ-று

தூறெலாமாக என்னுமிடத்தி லுள்ள ஆக என்பது அசை அலமரா — அலமரு - பகுதி, செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். (௧௨௮)

300. தீக்கட் புலிதொடரச் செல்லும் சிறுமான்போல்
ஆக்கை தளர வலமந்து—போக்கற்றுச்
சீரா விழித்தாள் சிலைவேட னவ்வளவில்
நீறாய் விழுந்தா னிலத்து.

300. Like the young deer, which flees when pursued by the fiery-eyed tiger, Damayanti through fear became faint in body, and troubled, and not finding any way to escape, turned and started at him angrily and the archer fell to the ground in ashes.

(இ - ள்.) தீ கண் புலி தொடர - நெருப்புப்போன்ற கண்ணையுடைய புலியானது தொடர்ந்து வருவதினால், செல்லும் - ஓடுகின்ற, சிறுமான்போல் - இளமானைப்போலே, ஆக்கை தளர - (பயத்தினால்) உடம்பு தளர்ந்துபோக, அலமந்து- அங்குமிங்குஞ் சுற்றிச்சுழன்று. போக்கு அற்று - போகும்வழி இல்லாமல், சீறா - சீறி [கோபித்து], விழித்தாள்-கண்திறந்து பார்த்தாள் ; அவ்வளவில்-அக்காலத்தில், சிலைவேடன்-வில்லையுடைய வேடன், நீறு ஆய் - சாம்பலாய், நிலத்து விழுந்தான்- தரையிலே விழுந்தான், எ - று.

மகா பதிவிரதையாதலால் கோபித்துப் பார்த்தவுடனே அந்தக் கொடியவன் சாம்பலானானென்பதாம்.

அலமந்து—அலமா - பகுதி ; இது, வா, தா, என்பனபோல நிகழ் எதிர்காலங்களில் அலமரு எனத் திரிந்துவரும். அலமரு பகுதி யெனில் இறந்தகாலப் புடை பெயர்ச்சி பொருந்தாது. சீற — செய்யா என்னும் வாய்பாட்டெச்சம். போக்கு — வழிக்கு ஆகுபெயர். (கஉக)

301. வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வான்குடிபோ
றீத்தழன்மீ, மண்டு கொடுஞ்சுரத்தோர் மாடி
ருந்து—பண்டையுள, வாழ்வெல்லாந் தானி
னைந்து மற்றழுதாண் மன்னிழைத்த, தாழ்வெல்
லாந் தன்றலைமேற் றந்து.

301. Damayanti, recalling her former days of greatness and attributing the king's behaviour to her own fate, stood aside and wept in that forest which burnt with fire, like the large families who opposed the sages versed in fertile Tamil lore.

(இ - ள்.) வன் தமிழ் வாணர் - அழகிய தமிழில் வல்லவரை, பிழைத்த - தப்பின, [அவர்க்கு அபராதப்பட்ட], வான் குடி போல் - மேன்மையான வம்சத்தைப்போல், தீ தழல் - தீய அக்கினி, மீ மண்டு - மேற்கொண்டு நெருங்கப் பெற்றிருக்கிற, கொடும் சுரத்து - கொடுமையான பாலை வனத்திலே, ஓர் மாடு இருந்து - ஒரு புற மிருந்து, பண்டை உள - முன்பிருந்த, வாழ்வு எல்லாம் நினைந்து - போகங்களையெல்லாம் நினைத்து, மன் இழைத்த - அரசன் செய்த, தாழ்வு எல்லாம் - தாழ்மைகளை யெல்லாம், தன் தலைமேல் தந்து - தன் தலைவிதியின்மேல் வைத்து, அழுதாள் —, எ - று.

வித்துவான்கள் திறத்தில் அபராதப்பட்ட குடி தீப்பட்டு வேவதுபோல் வெந்துகொண் டிருக்கிறது சுரம் என்றபடி. அரசன் தனக்குச் செய்த தீங்குகள் தன் விதிவசத்தால் நேர்ந்தனவே யன்றி அவன் கொடுமையால் செய்தனவை யல்லவென நினைத்தா ளென்பதை " மன்னிழைத்த தாழ்வெல்லாந் தன்

றலைமேற் றந்து" என்றார். தா ஆ - மற்று - அசைகள். "வண் டமிழ் வாணர்ப் பழித்த" எனவும் பாடமுண்டு. வாணர்ப் பிழைத்த—உயர்திணைப் பெயராயினும், இரண்டாம் வேற்று மைச் சிறப்புவிதியால் வலிமிக்கது. [மன் - உருபு புணர் - சூ - கசு.] இரண்டனுருபு ஏற்றுக் கோடற்பொருளில்வந்தது [பெயர். சூ - ௩௧.] பண்டை—பண்டு என்னுங் குற்றுகரம் ஐகாரச்சாரியை பெற்றது [உயிர். - ௩௫.]

தமிழ்வாணர்—வாள் (ஒளி) - பகுதி, நர் - உடைமைப்பொரு ளில்வந்த பலர்பால்விகுதி, சந்தியில் ளகர நகரங்கள் ணகர மாகி முந்திய ணகரம் கெட வாணர் என்றும். தமிழில் வாணர்—விளங்குவோர், தமிழ்வாணர்; அல்லது வாழ்நாள் என்பது வாணாள் என்றனதுபோல் வாழ்நர் என்பது வாணர் என்று யிற் றெனக்கொண்டு முன்போலக் கூட்டிக் கொள்ளலாம். கீர்வாணர் என்பதற்கு வடநூலார், கீர் - வாக்கை, வாணர் - பாணமாக வுடையவர் என்று பொருள்கூறியதுபோல் தமிழ் ஆகிய பாணத்தை யுடையவரெனவும் பொருள் கொள்ளத் தகுமென்று எமக்குத் தோன்றுகின்றது. கீர்வாணர் தேவர் வாக்கைக்கொண்டே ஜயிக்கவல்லவர் என்பது அதன் பொருள் அப்படியே தமிழ்வாணர், தமிழைக்கொண்டு வெல்ல வல்லவர் என்பதுபொருளாம். தமிழ் என்பதுதிரமிடமென்னு மாரியத் தின்சிதைவு. (௩௰)

302. அவ்வளவி லாதிப் பெருவழியி லாய்வணிகள்
இவ்வளவு தீவினையே னென்பாடன் — மெய்வடி
வைக், கண்டானை யுற்றுன் கமலமயி லேயென்
றுன், உண்டாய தெல்லா முணர்ந்து.

302. At that time, a thoughtful merchant passing along the broadway, saw the physical beauty of Damayanti, who reproached herself with being a great sinner, and doubting when he saw all that had happened, thought she could be no other than the goddess who resides in the lotus.

3821

(இ - ள்) அவ்வளவில்-அக்காலத்தில், ஆதி பெரு வழியில் - முதன்மையான பெரியவழியில் போகின்ற, ஆய் வணிகன் - ஆராயுந்தன்மையனானவர்த்தகன்,இவ்வளவு தீவினையேன் இவ்வளவு தீவினை செய்தவள் யான், என்பாள் தன் -என்றுசொல்லுகிற தமயந்தியின், மெய் வடிவை - தேகத்தின் அழகை, கண்டான்—,ஐயுற்றான் - சந்தேகித்தான், கமல மயிலே என்றான் -தாமரை மலரில்வீற்றிருக்கும் பெண்ணாகிய திருமகளே என்று சொன்னான், உண்டாய தெல்லாம் - உண்டான காரியங்களை யெல்லாம், உணர்ந்து - அறிந்து, எ - று. [உணர்ந்து சொன்னான் எனக் கூட்டிக்கொள்க.]

இவ்வாக்கியம் மேற்பாட்டோடு குளகமாக முடியுமென அறிக. குளகமாவது பலபாட்டு ஒரு முடிபாய் வருவது. அங்ஙனமின்றித் தனியே முடிவது முத்தக மெனப்படும்.

புசித்து வாடி சோர்ந்து கண்ணீரொழுக மனங்கலங்கித் தவிப்பதை "உண்டாயதெல்லாம்" என்றார், இவள் வடிவைப் பார்க்க இவள் சகல சுலக்ஷணங்களோடுங் கூடிச் சகல பாக்கியங்களையும் பெறத்தக்கவள் இவ்வளவுதீவினையேன் என்பது என்னென்று "ஐயுற்றான்" என்பதாம். தெய்வப் பெண்ணோ மானிடப்பெண்ணோ என ஐயுற்றானெனினு மொக்கும். ஆய் வணிகன் — வினைத்தொகை; காரியங்களை யோசித்து அறிய வல்லவன் என்றபடி. ஐயுற்றான்—காமம் உற்றான் காமுற்றான் என்பதுபோல்,ஐயமுற்றான் ஐயுற்றான் என்று ஆயிற்று.(கநக)

303. எக்குலத்தா யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்
பேர், ரெக்குருகி நீயழுதற் கென்னிமித்தம்—
மைக்குழலாய், கட்டுரைத்துக் காணென்றான்
கார்வண்டு காந்தாரம், விட்டுரைக்குந் தார்வணி
கர் வேந்து.

303. The chief of the merchants, who wore a garland on which the beautiful bees hum, addressing Damayanti, said;—" O thou raven-tressed one! In what family were

you born? Whose wife are you? Which is your native place? What is your name? Why do you thus weep and why are you faint and troubled in mind? Explain all this to me clearly"

(இ - ள்.) கார்வண்டு - கறுப்பான (அல்லது) அழகான வண்டுகள், காந்தாரம் விட்டு உரைக்கும் - இராகத்தை வாய் விட்டுச் சொல்லுகிற, தார் - தார்மாலையைத்தரித்த, வணிகர் வேந்து - வர்த்தகருடைய தலைவன், மை குழலாய் - கறுப்பான கூந்தலுள்ளவளே, நீ—, எக் குலத்தாய் - எந்த வமிசத்திற் பிறந்தவள், யார் மடந்தை - யாருடைய மனைவி, உன் ஊர் யாது - உன் வாசஸ்தலமெது, உன்பேர் யாது - உன் நாமதேயமென்ன, நெக்கு-தளர்ந்து, உருகி-மனங் கரைந்து, அழுதற்கு நிமித்தம் என் - அழக்காரணம் யாது, கட்டுரைத்து காண் என்றான்-திருத்தமாய்ச் சொல்லு என்றுசொன்னான் (தமயந்தியை நோக்கி), எ - று.

காண் - அசை. அல்லது உரைப்பதனால் வரும் பயனைப்பார் எனவும் பொருள்கொள்ளலாம். நீயேன் வினவுகின்றாயென்று இகழாமல் உரை யென்பதாம். மைக்குழலாய்—விளி. [பெய - ரிக - சூத் - விதியால்] ள் - ய் ஆயிற்று. எக்குலத்தாய்—முன்னிலை யொருமைக் குறிப்பு முற்று; ஆய் - விகுதி. நெக்கு — முதனிலையே வினையெச்சப்பொருளில் வந்தது. எக்குலத்தாய் எக்குலத்திற் புகுந்தவள், யார்மடந்தை - யாருடையமகள் எனவுமாம். தனிக்குறிலணையாத யகரம் யகரம் வரக் கெடும் ஆதலின் எக்குலத்தா யார் என்றாயிற்று. (௩௱௨)

[தமயந்தி வணிகனை நோக்கி]

304. முன்னை வினையின் வலியால் முடிமன்னன்
என்னைப் பிரிய விருங்கானில்—அன்னவனைக்
காணு தழுகின்றே னென்றாள் கதிரிமைக்கும்
பூணாரம் பூண்டாள் புலர்ந்து.

304. Damayanti, who wore glittering brilliants, said;—"On account of the wretchedness of my sin, committed

in a former birth, the excellent Nala, who wears a noble crown, deserted me in this forest and on that account, being unable to find him, I weep."

(இ - ள்.) கதிர் இமைக்கும் - கிரணங்கள் பிரகாசிக்கிற, பூண் ஆரம் பூண்டாள் - முத்துமாலைகளைத் தரித்தவளாகிய தமயந்தி, புலர்ந்து—, முன்னை வினையின் வலியால் - (நான்) பூர்வ சன்மத்திற் செய்த பாவத்தின் கொடுமையினாலே, முடி மன்னன் - (யாவர்க்கும் மேலானவ னென்று, சிறந்த கிரீடந் தரித்த மகாராசன், இரு கானில் - பெரிய காட்டினிடத்தில், என்னை பிரிய - என்னைவிட்டு நீங்கினதினால், அன்னவனை காணாது-அவனைக் காணாமல், அழுகின்றேன் என்றாள்—,எ-று.

யான் இன்னான்மகள் இன்னான்மனைவி என்று எல்லாவற்றை யுங் குறிப்பா யுரைத்ததைக் கவி சுருக்கிப் பாடினாரென அறிக "கதிரிமைக்கும் பூணாரம் பூண்டாள்" என்பது முந்தியநிலைமை யைக்கொண் டுரைத்தபடி. அது இங்கே அவையிழந்து நிற்கு நிலையைக் குறிப்பிக்கின்றது. பூண் ஆரம் - பூணத்தக்க பல ஹாரங்களையும் எனவுமாம். "பூணார் முலையாள்" எனவும் பாட முண்டு. (கஙக)

305. சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டப்
போதிற் கொடைவணிகன் போயினான்—நீதி
யிடத்துவான் மன்னவர்தங் கீர்த்தியினைப் பார்
நடத்துவான் வட்டை நடந்து. [மேல்

305. Then taking the Lakhmi-like Damayanti and leaving her in a town in the சேதி country, that charitable merchant who was able to support justice and who published abroad the glory of kings, went on his way.

(இ - ள்.) அப்போதில்- அக்காலத்தில்,திருவை - இலக்குமி போன்ற தமயந்தியை, சேதி நகர்க்கு செலவிட்டு - சேதி தேசத்துப் பட்டணத்துக்குப் போகச்செய்து, பார்மேல் நீதி யிடத்துவான் - பூமிமேல் நீதியைத் தங்கச்செய்ய வல்லவனும்

மன்னவர்தம் கீர்த்தியினை நடத்துவான் - அரசருடைய புகழை வியாபிக்கச் செய்ய வல்லவனுமாகிய, கொடை வணிகன் - கொடுக்குந் தன்மையுள்ள அந்த வர்த்தகன், வட்டை நடந்து போயினான்-வழியில்நடந்து போனான், எ-று.

வட்டை-தேர் எனக்கொண்டு, தேரால் நடந்து சென்றானெனினு மமையும்; வட்டை என்பது வாட்டை என வழங்குகின்றது. ஏ - அசை. வாணிகம் பொய்கலந்த மெய்யாயினும் இவன் ஒப்புரவாய் நடப்பவனென்பது பற்றி நீதிகிடத்துவாய் என்றும், இந் நல்லொழுக்க முடையவன் பலநாட்டிலுஞ் சென்று வருதலாலும் வாணிக வளப்பத்தாலும் அரசர்க்குப் புகழ் விளங்குகின்றதென்பதுபற்றிக் கீர்த்தியினை நடத்துவானென்றுங் கூறினார். நல்வணிகர் நாட்டிலிருப்பது அரசர்க்கு மேன்மையென்று நீதிசாஸ்திரம். செலவிட்டு நடத்துவான் எனக் கூட்டிக்கொள்க. (கூ௦ரு)

306. அற்ற துகிலு மறுதொழுகு கண்ணீரும்
உற்ற துயரு முடையளாய்—மற்றொருத்தி
நின்றாளைக் கண்டே நிலவேந்தன் பொற்றேவி
என்றார் மடவா ரெடுத்து.

306. Some of the damsels in the harem, addressing the Queen said;—"O thou beautiful consort of the ruler of the earth We saw in this town, a maiden with half a garment, shedding tears incessantly, and afflicted with great sorrow."

(இ - ள்.) மடவார் - அந்தப்புரத்துப் பெண்கள் சிலர், நிலவேந்தன் பொன் தேவி-நிலத்தையாளு மரசனுடைய பொன் போன்ற மனையாளே, அற்ற துகிலும் - பாதியறுந்த வஸ்திரமும், அறு தொழுகு - நீங்காமல் ஒழுகுகின்ற, கண்ணீரும்—, உற்ற துயரும் உடையளாய் -அதிகமான விசனமு மடைந்தவளாய், நின்றாளை - நின்றவளாகிய, ஒருத்தி - ஒரு பெண்ணை, கண்டேம்-பார்த்தோம் (இந்நகரில்,) என்றார் எடுத்து-என்று, இப்படி குறித்துச்சொன்னார்கள், எ - று.

மற்று - அசை. சேதிராசன் தேவிக்குத் தமயந்தியின் நிலைமையைச் சிலபெண்கள் தெரிவித்தார்க ளென்பதாம். [வினையியல்-௬௩-ஆம்-சூ.] "எம் ஏம் ஓம்இவை படர்க்கையாரையும் எனறதனுல்யாமேயன்று இந்நகர்க்கண்பலருங்கண்டார் என்றதாயிற்று. (௩௬௫)

307. போயகலா முன்னம் புனையிழையாய் பூங்குயிலை
ஆய மயிலை யறியவே—நீயேகிக்
கொண்டுவா வென்றுடன் கொவ்வைக் கனிதிற
வண்டுவாழ் கூந்தன் மயில். [ந்து

307. The consort of the king of சேதி upon whose tresses the bees lived, opening her lips which resembled the red கொவ்வை fruit, addressed one of her maidens saying;—"O thou adorned with jewels! Before she departs, go and bring that damsel, who resembles a beautiful pheasant or a choice peacock, that I may see her."

(இ - ள். வண்டு வாழ் கூந்தல் மயில் - வண்டுகள் வாழுகின்ற கூந்தலையுடைய சேதிராசன் மனைவி, தன் கொவ்வைகனி - தன்னுடைய கொவ்வைப் பழம்போன்ற வாயை, திறந்து—, புனை இழையாய்-அலங்கரித்துக்கொண்ட ஆபரணமுடையவளே, போய் அகலா முன்னம் - அவள் போய் நீங்காமுன்னமே, பூ குயிலை - அழகிய குயில்போன்ற, ஆய் அமயிலை அறிய - ஆராய்ந்த அந்த மயில்போன்ற பெண்ணையறிந்துகொள்க, நீ ஏகி கொண்டுவா என்றுள் - நீ போய் அழைத்துக்கொண்டு வாவென்று சொன்னுள், எ-று. ஏ-அசை-

அம்மயிலை என்பதில் மகரம் தொக்கது. ஆய எனப் பெயரெச்சமாகக்கொண்டு நன்மையான மயிலை என்றுஞ் சொல்லலாம் - அவளை இன்னுளென்று யானறிந்து கொள்வதற்குஇட்டுக்கொண்டுவா என்று ளென்பதாம் (௩௬௬)

308. அந்தா மரையி லவளேயென் றையுற்றுச், சிந்தா
குலமெனக்குத் தீராதால் — பைந்தொடியே,

உள்ளவா றெல்லா முரையென்று ளொண்மல
ரின், கள்ளவார் கூந்தலாள் கண்டு.

308. The consort of the king சேதி whose long tresses were moistened with the honey from the bright flowers looking at Damayanti, and doubting whether this was not the goddess who resided in the beautiful lotus, exclaimed;—" O thou adorned with green bangles as my mind is still in suspense, tell me everything truthfully."

(இ - ள்.) [அந்த நகரத்தில் அவளைப்பார்த்து] ஒள் மலரின் விளக்கமான புஷ்பங்களினுடைய கள்ள - தேனையுடைய, வார் கூந்தலாள் - நீண்ட கூந்தலையுடைய, சேதியரசி,கண்டு - (தமயந்தியைப்) பார்த்து, அம் தாமரையிலவளே என்று - (இவள்) அழகிய தாமரையி லிருக்கிற திருமகளோ என்று ஐயுற்று - சந்தேகித்து, பைந்தொடியே-பசிய வளைகளையணிந்தவளே, சிந்தாகுலம் எனக்கு தீராது - சிந்தைக்கலக்கமெனக்குத் தீரவில்லை,உள்ளவாறு எல்லாம் உரை -உள்ளவிதமாக எல்லாவற்றையுஞ் சொல், என்றாள் —, எ-று.

பெண்ணே உன்னைப்பார்க்க எனக்குப் பலவிதமாகச்சிந்தை கலங்கி வருத்த முண்டாகின்றது. அதனால் உண்மையாக உன் சங்கதிகளைச் சொல்லென்றான் என்பது கருத்து - உதிர சம்பந்த முண்டா யிருப்பதனால் இன்னாளென்று அறியாத போதும் தற்செயலாய் மனம்பதைப்பது உலகவியல்பு. இவளைக் கண்டவுடனே ரூபலாவணியங்களினால் திருமகளென்று சந்தேகித்தும் படுந்துன்பநோக்கி மனம் வியாகுலப்பட்டாள் என்க. ஆல் - அசை. (கூஎ)

309. என்னைத் தனிவனத்திட் டெங்கோன் பிரிந்தேக, அன்னவனைக் காணா தலமருவேன்—இந்நகர்க்கே, வந்தே னிதுவென் வரவென்றாள் வாய்புலராச், செந்தேன் மொழிபதறச் சேர்ந்து.

309, Damayanti, her lips being parched, and her speech which was as sweet as pure honey, faltering said—" Not being able to find my husband, who separated from me and left me alone in the desert, I was troubled and come to this town. This is my history."

(இ - ள்.) [தமயந்தி] வாய் புலரா - வாய் நீரின்றி வற்றி, செம் தேன் மொழி-செம்மையான தேன்போன்ற சொற்கள், பதறு சேர்ந்து - நடுங்கிச்சேர்ந்து, என்னை—, தனி வனத்து இட்டு - ஒன்றியாக காட்டில் விட்டு, எங்கோன் - எங்கண வன், பிரிந்து ஏக - பிரிந்து போக, அன்னவனை காணாது - அவனைக் காணாமல், அலமருவேன் - வருத்த முற்றவளாகி, இந்நகர்க்கு - இந்தப் பட்டணத்துக்கு, வந்தேன்—, இது என் வரவு - இதுதான் எனது வரலாறு, எனறாள்—, எ - று.

அவ்வரசி தனக்கும் சிற்றன்னையாதலின் தாய் தந்தையர் களை யறிவிக்க வெட்கித் தனக்குத் துன்பமுண்டான முக்கிய சரித்திரமாத்திர முரைத்தாளென்க. புலரா, சேர்ந்து என்னும் வினையெச்சங்கள் சினைவினையாதலின், என்றாள் என்னு முதல் வினையைக்கொண்டது. [வினை. சூ-உசூ.] ஏ - அசை. (கூடு அ)

310. உன்றலைவன் றன்னை யொருவகையா னாடியே
தந்து விடுமளவுந் தாழ்குழலாய்—என்றனுடன்
இங்கே யிருக்க வினிதென்றா ளேந்திழையைக்
கொங்கேயுந் தாராள் குறித்து.

310. " The consort of the சேதி king, who was adorned with fragrant garlands, addressing Damayanti, said:—' O thou, with flowing tresses! till we find your husband. by some means or another, you must remain joyfully in this town with me."

(இ-ள்.) கொங்கு எயும் தாராள்-வாசனைபொருந்திய மாலை யுடைய அவ்வரசி, ஏந்திழையை குறித்து - தமயந்தியைக் குறித்து, தாழ் குழலாய் - தொங்குகின்ற கூந்தலுடையவளே

உன் தலைவன் தன்னை - உன் நாயகனை, ஒரு வகையால் - ஒரு விதத்தினால், நாடி - தேடி, தந்துவிடும் அளவும் - கொடுக்கும் வரையில், இங்கே - இந்நகரிலே, என்றனுடன் - என்னோடு கூட, இனிது இருக்க - சந்தோஷமாயிருக்கக்கடவை, என்றாள்—; எ - று. ஏ - அசை.

இனிது—குறிப்புமுற்று. இங்கே வினையெச்சமாகி வினையுரியாகின்றது. ஏந்திழை-ஏந்தப்படும் ஆபரணங்களையுடையவள்; அன்மொழித்தொகை; ஆபரணங்களைத் தாங்குகிறவளென்றபடி; பெருமையான ஆபரணமுள்ளவள் என்னவுமாம்.(கூ௧கூ)

311. ஓடும் புரவித்தேர் வெய்யோ னொளிசென்று
நாடு மிடமெல்லா நாடிப்போய்—கூடினான்
போதிற் றிருநாடும் பொய்கைத் திருநாடாஞ்
சேதித் திருநாடு சென்று.

311. Having searched every place warmed by the rays of the sun which possesses a chariot drawn by swift horses, the Brahmin sent by king Bhima, arrived at the சேதி country, which abounded in tanks, and to which even Lakshmi who dwells in the lotus, would be partial.

(இ-ள்) [இப்படி யிருக்கையில்] ஓடும் புரவி தேர் - ஓடுகின்ற குதிரைகள் பூட்டிய தேரையுடைய, வெய்யோன் ஒளி சென்று - சூரியனுடைய காந்தி பரவி, நாடி போய் - தேடிப்போய், போதில் திரு நாடும் - பதுமத்திலிருக்குந் திருமகள் விரும்பத்தக்க, பொய்கை - தடாகங்களை யுடைத்தான, திரு நாடு ஆம் - நல்ல தேசமாகிய, சேதி திருநாடு சென்று கூடினான் - சேதிதேசத்தைப் போய்ச்சேர்ந்தான், எ - று.

ஓர்ந்தணன் என்பது தோன்றா எழுவாய்; பிற்பாட்டாற் காண்க. சூரியகிரணம் வியாபிக்கும்படியான பூமியெல்லாந் தேடித்திரிந்தான் என்றபடி. (௩௰௦)

312. தாமஞ்சே ரோதித் தமயந்தி நின்றாளை
ஆமென் றறியா வருமறையோன்—வீமன்

கொடிமேல் விழுந்தழுவான் கொம்புமவன்
செம்பொன், அடிமேல் விழுந்தா ளழுது.

312. That Brahmin, recognizing Damayanti in the maiden, with garland-bedecked tresses before him, fell on the daughter of king Bhima and wept; and Damayanti, who resembled a branch covered with flowers, fell at the fair golden feet of the Brahmin and wept.

(இ - ள்.) அருமறையோன் - (அந்தப்) பிராமணன், நின்றானை - அங்கிருந்தவனை, தாமம் சேர் ஓதி - மாலைசேர்ந்த கூந்தலுள்ள, தமயந்தி ஆம் என்று அறியா - தமயந்தியாயிருக்கிறாளென்று அறிந்து, வீமன் கொடிமேல் - வீமராசன் மகளாகிய தமயந்திமேல், விழுந்து அழுதான்—; கொம்பும் - பூங்கிளை போன்ற அவளும், அவன் செம்பொன் அடிமேல் - அந்தப் பிராமணனுடையசெம்பொன்போன்றபாதத்தின்மேல், அழுது விழுந்தாள்—, எ - று.

விழுந்தழுதாள் எனக்கூட்டுக. விகுதி இடைச்சொல்லைப் பிரித்து வேண்டுமிடங் கூட்டுவதும் தமிழர் வழக்கம்.

அருமையான மறைகளைக் கற்றவன் அருமறையோன். மறை - வேதம். இவன் பீமராசனால் அனுப்பப்பட்டு முற்றுந் தேடி இங்குவந்து தமயந்தியைக் கண்டான். கொம்பும் என்னுமிடத்து உம்மை யிறந்தது தழுவிய எச்சவும்மை. (கசஉ)

313. மங்கை விழிநீர் மறையோன் கழல்கழுவ
அங்கவன்றன் கண்ணீ ரவளுடன்மேற்—பொங்கக்,
கடல்போலுங் காதலார் கையற்றார் தங்கள்
உடல்போலு மொத்தா ருயிர்.

313. Damayanti's tears washing the feet of that Brahmin, and the tears of that Brahmin trickling profusely down Damayanti's body, her relations whose affection was as vast as the sea, sorrowing, clung to Damayanti, as the life is attached to the body.

(இ - ள்.) மங்கை விழி நீர் - தமயந்தியின் கண்ணீர், மறையோன் கழல் கழுவ - பிராமணனுடைய பாதங்களை அலம்ப, அவன் தன் கண்ணீர் - அந்தப் பிராமணனுடைய கண்ணீரானது, அவள் உடல்மேல் பொங்க - அவளுடைய தேகத்தின் மேலே அதிகப்பட, கடல் போலும் காதலர் - சமுத்திரம் போன்ற ஆசையையுடைய சுற்றத்தார், கைபற்றுர் - தளர்ந்தவராகி, தங்கள் உடல் - தங்களுடைய தேகங்கள், உயிர் போலும் - உயிர்களை யொத்தார்போல், ஒத்தார் - (அவளைப்) பொருந்தி யிருந்தார்கள், எ - று. அங்கு - அசை.

சேதியரசன் முதலாயினோர் இந்த மறையோனை நன்றுயறிந்திருப்பவ ராதலின் அவன் அவளைத் தமயந்தியென்று கண்டு விசனப்படும்போது, யாவரும் அறிந்து உடல் உயிரைப் பொருந்தினதுபோல் மிக்க காதலோடு அவளைப் பொருந்தி யிருந்தார் என்பது கருத்து. பொங்க - என்பதனால் கண்ணீர் அவள் மேற்பட வெந்நீர்போல் கொதித்த தென்பதாம்.(கசஉ)

314. மாரி பொருகூந்தன் மாதராய் நீபயந்த, காரி
கைதான் பட்டதுயர் கண்டாயோ—சோர்குழ
லும், வேணியாய் வெண்டுகிலும் பாதியாய்
வெந்துயருக், காணியாய் நின்றுளயர்ந்து.

314. The Brahmin, addressing the Queen of the சேதி country, said, " O thou whose tresses resemble the clouds! Have you seen the sorrow which has fallen your daughter? With her hair dishevelled and matted and her clean garment rent in half, she is transfixed in her sorrow, as the linch-pin in a chariot.

(இ - ள்.) [அவ்வரசியைநோக்கிப்பார்ப்பான்சொல்லியது.] மாரி பொரு கூந்தல் மாதராய் - மேகத்தை யொத்த கூந்தலையுடைய பெண்ணே, நீ பயந்த காரிகை - நீ பெற்ற பெண், பட்ட துயர் கண்டாயோ - அனுபவிக்கிற துன்பத்தை யறிந்தையோ, சோர் குழலும் - தொங்குங் கூந்தலும், வேணி ஆய் - சடையாய், வெண் துகிலும் - சுத்தமான வஸ்திரமும்,

பாதியாய்—, அயர்ந்து - வருந்தி, வெம் துயருக்கு - கடின மான துக்கத்திற்கு, ஆணியாய் நின்றாள் - அச்சாணிபோல் [ஆதாரமாய்] நின்றாள், எ-று.

மாதர் - அழகு, அதையுடையாள் மாதராள். விளியில் ளகரம் யகரமாயிற்று. வெண்மை இலக்கணையால் சுத்தத்திற்குக் கொள்ளப்பட்டது. தான் - அசை, உம்மைகள் எண்ணுப் பொருளில் வந்தன. (௩௪௨)

315. தன்மக ளாவ தறியாத் தடுமாறுப் ,பொன்வடி
வின் மேலழுது போய்வீழ்ந்தாள்—மென்மல
ரைக், கோதிப்போய் மேதி குருகெழுப்புந்
தண்பணைசூழ், சேதிக்கோன் றேவி திகைத்து.

315. The consort of சேதி the king of country, which is surrounded by cool fields, in which the buffaloes disturb with their horns the flowers in the water, and frighten away the cranes, becoming faint, and recognizing her as her daughter, was agitated, and wept falling on Damayanti.

(இ - ள்.) மென் மலரை - மெல்லிய நீர்ப்பூக்களை, கோதிப் போய் - கொம்புகளாற் கொந்திப்போய், மேதி - எருமைகள், குருகு எழுப்பும்-நாரைகளை யெழுப்புகின்ற, தண் பணை சூழ் - குளிர்ச்சியான வயல் சூழ்ந்த, சேதி கோன் தேவி - சேதி தேசத் தரசன் மனைவி, திகைத்து - பிரமித்து, தன் மகளாவது அறியா - தன்புத்திரியா யிருப்பதை யறிந்து, தடுமாறு - தத்தளித்து, போய்—, பொன் வடிவின்மேல் - தமயந்திமேல், அழுது வீழ்ந்தாள் - வீழ்ந் தழுதாள், எ-று.

தடாகங்களிற் பூவைக் கொம்பாற்கோதி எருமைகள் வருவதனால் நாரைகள் பயந்து ஓடிப்போகின்றன என்பதனால், நாட்டு வளப்பங் கூறப்பட்டதென அறிக. பொன்வடிவு — உவமத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, (௩௪௩)

316. கந்தனையுங் கன்னியையுங் கண்டாயி னுஞ்சிறிது
தன்றுயரந் தீர்ந்து தனியாறத்—தந்தை

பதியிலே போக்கினான் சேதியர்கோன் பண்டை
விதியிலே போந்தாளை மீண்டு.

316. The king of the country of சேதி sent Damayanti to the capital of Bhima, that her sorrow might be somewhat abated at the sight of her children, for she was suffering the painful consequences of a former sin.

(இ - ள்.) சேதியர் கோன் - சேதி தேசத்தாருடைய அரசன், பண்டை விதியிலே போந்தாளை - பழமையான தீவினையிலே அகப்பட்டிருக்குந் தமயந்தியை, மீண்டு - திரும்பி, கந்தனையும் - மகனையும், கன்னியையும் - மகளையும், கண்டாயினும் - பார்த்தாவது, சிறிது-கொஞ்சம், தன் துயரம் தீர்ந்து-தன் துக்கம்போய், தனி ஆற - தனியே ஆறும்படி, தந்தை பதியிலே - தகப்பனான வீமன் பட்டணத்திலே, போக்கினான்-அனுப்பினான், எ-று.

கந்தன் என்பது தெலுங்குமொழி, திசைச்சொல்லாய்த் தமிழில் வந்தது. சிறிது—இனிதுபோற் கொள்க. முன் தந்தையகத்திருந்ததை மீண்டென்பது குறிக்கின்றது. மீண்டு கந்தனையுங் கன்னியையுங்கண்டு எனவுங் கூட்டலாம். (௧௪௫)

317. கோயிலு மந்தப்புரமுங் கொடிநுடங்கும்
வாயிலு நின்று மயங்கியதே—தீயகொடுங்
கானுளை மக்களையுங் கைவிட்டுக் காதலன்பின்
போனாள் புகுந்த பொழுது.

317. When Damayanti, who totally forsook her children and followed her husband, only to wander in the dangerous and dense forest, arrived at Vidarpa, the palace and the harem, and the city gates on which the flags waved, were filled with a great and mixed crowd.

(இ - ள்.) தீய கொடும் கான் ஆள - தீமையான கொடுமையுள்ளகாட்டை ஆளுதற்கு, [காட்டில் உழல்வதற்கு,] மக்களையும் - புத்திரரையும், கைவிட்டு - பரிச்சேதமாய் விட்டு, காத

லன் பின் போனாள் - கணவன்பின்னே சென்றவளாகிய தம யந்தி, புகுந்த பொழுது - பிரவேசித்த காலத்தில், கோயிலும்- அரமனையும், அந்தப்புரமும் - ராஜஸ்திரீக ளிருக்கு மாளிகை யும், கொடி நுடங்கும் - கொடிகள் ஆடிக்கொண்டிருக்கிற, வாயிலும் - பட்டணத்துத் துவாரங்களும், நின்று - வந்து நின்று, மயங்கியது - கலந்து நின்றது, எ-று. ஏ - அசை;

மக்களையும் என்கிறவும்மை சிறப்பு, மற்றவை எண். மயங்கி யது—பன்மையில் ஒருமை, எல்லாம் ஒன்றாயிற் றென்பதைக் குறிப்பித்தது. அரமனையரசரும் அந்தப்புரத்து ராணிகளும் இவளைப்பார்க்கப் பட்டணத்து வாயிலாரோடு ஒன்றால் அங்கு வந்தார்க ளென்பதாம்: தமயந்தியின் விசேடணம் அவள் கற் பைச் சிறப்பித்தது. (கசசு)

318. அழுவார் விழுவா ரயிர்ப்பார் ருயிர்ப்பார்
தொழுவார் தமரெங்குஞ் சூழ்வார்—வழுவாத
காமநீ ரோதக் கடல்கிளர்ந்தா லொத்ததே
நாமவேல் வீம னகர்.

318. Damayanti's relatives surrounded her on all sides some crying, some falling down, some perplexed, some sighing, and some worshipping; and so the capital of king Bhima, who possessed terrible weapons, looked as if a flood of love came rising on the stormy ocean.

(இ - ள்.) தமர்-(தமயந்தியின்) சுற்றத்தார், அழுவார்-அழு கின்றவராயும், விழுவார் - விழுகின்றவராயும், அயிர்ப்பார் - சந்தேகிப்பவராயும், உயிர்ப்பார் - பெருமூச் செறிகிறவராயும் தொழுவார் - தொழுகின்றவராயும், எங்கும் சூழ்வார் - நாற் புறமுஞ் சுற்றிக்கொள்வா ரானார்கள் ; [இப்படியானதனால்] நாம வேல் வீமன் நகர் -அச்சந் தரும்படியான ஆயுதமுடைய வீமராசனது பட்டணம், வழுவாத - தப்பாத, காமம் - அன் பாகிய, நீர் ஓதம் - ஜலப்பிரவாகமுள்ள, கடல் - சமுத்திரம் கிளர்ந்தால் - பொங்கினால், ஒத்தது - (அதை) ஒத்திருந்தது எ - று. ஏ-அசை.

அயிர்த்தல்-இஃது ஒரு மாயமோ கனவே என்றிவ்வாறு நினைத்தல் துக்கத்துளாழ்ந்தார்க்கு இங்ஙனந் தோன்றுவதும் இயற்கை. தொழுதல் தமது தெய்வத்தை வணங்கல். அழுவார்முதலியவைஇயல்பினுல்வந்தகாலவழுவைமைதி.ஜனங்கள் இவ்வாறு சூழ்ந்தது ஆசையென்னுங் கடலே சூழ்ந்ததுபோலிருந்தது என்று கருத்தாம். அல்லது, வீமன் நகரில் காமம் கிரோதக்கடல் கிளர்ந்தாலொத்ததெனவுரைத்துக்கொள்க. நாமவேல்—நாம் - அச்சம், அகரம் - சாரியை. தமர்—தாம் - பகுதி, அர்விகுதி, பகுதி குறுகியது [உருபு - சூ - அ.] ()

319. தந்தையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீர்
சொரியச், சிந்தை கலங்கித் திகைத்தலமந் —
தெந்தாயான், பட்டதே யென்னப்போய் வீழ்ந்
தாள் படைநெடுங்கண், விட்டநீர் மேலே விழ.

319. When she saw her father before her lotus-like eyes poured forth water, and becoming troubled in mind, and faint and sorrowful Damayanti exclaimed:—" O my father! How can I describe the sorrows I have endured!" Thus saying, she ran, and fell upon her father, so that the tears from her lance-like eyes dropped on him.

(இ - ள்.) தந்தையை-பிதாவை, முன் காண்டலும் - எதிரில் கண்டவுடனே, தாமரை கண் - தாமரை மலர்போன்ற கண்கள், நீர் சொரிய - நீரை ஊற்ற, சிந்தை கலங்கி - மனங் கலங்கி, திகைத்து - பிரமித்து, அலமந்து - துயரமுற்று, எந்தாய் - என்பிதாவே, யான் பட்டதே என்ன - நான்பட்ட துன்பம்(என்னசொல்வேன்,) என்றுசொல்லி, படை நெடும் கண் - வேலாயுதம்போல் நீண்டகண்கள், விட்டநீர்-சொரிந்த நீர், மேலே விழ - தந்தைமேல் விழும்படி, போய் வீழ்ந்தாள் (தமயந்தி)—, எ-று.

பட்டதே—ஏ-துக்கத்தைக் குறியாநின்றது. துக்கம்வியப்பு முதலிய இடங்களில் பயனிலையின்றிச் சொல்வது தமிழ்நடை.

காண்டலும்—வினையெச்சம். எந்தாய் — எந்தை என்பதின் விளி. (கசா)

320. செவ்வண்ண வாயாளுந் தேர்வேந் தனுமகளை
அவ்வண்ணங் கண்டக்கா லாற்றுவரோ — மெய்
வண்ணம், ஓய்ந்துநா நீர்போ யுலர்கின்ற வொத்
ததமர், நீந்தினார் கண்ணீரி னின்று.

320. When the rosy-lipped consort of king Bhima, and king Bhima himself saw their daughter in this state were they able to bear it? They remained motionless; their tongues became parched; and their fond relatives swam in a flood of tears.

(இ - ள்.) செவ்வண்ண வாயாளும் - சிவந்த நிறமுள்ள வாயுடையவளாகிய வீமராசன் மனைவியும், தேர் வேந்தனும்-வீமராசனும், மகளை - தம் புத்திரியை, அவ்வண்ணம் - அவ்விதமாக, கண்டக்கால் - கண்டால், ஆற்றுவரோ - சகிப்பார்களோ, மெய் வண்ணம் ஓய்ந்து - உடம்பின் செயலொழிந்து, நா - நாக்கு, நீர் போய் - நீரற்று, உலர்கின்றது - உலர்ந்து போயிற்று, ஒத்த தமர் - (தாய்தந்தையருக்கு) அனுகூலமான சுற்றத்தார், கண்ணீரில்—, நின்று - நிலைபெற்று, நீந்தினார் - நீந்திக்கொண்டிருந்தார்கள், எ-று.

தாய்தந்தையர் ஒன்றுந் தோன்றாமல் நின்றார்கள்; சுற்றத்தார் மாறாக் கண்ணீரோ டழுதுகொண் டிருந்தார்களென்பதாம். நாவில் நீர் வார்த்து நனைத்தாலும் உலர்ந்துகொண்டேயிருந்ததென்பது தோன்ற உலர்கின்றது என நிகழ்கால வினையைப் பிரயோகித்தார். உலர்கின்றார் எனப் பாடங்கொள்வது நேர். (கசக)

321. பனியிருளிற் பாழ்மண் டபத்திலே யுன்னை, நினை
யாது நீத்தகன்ற போது—தனியேநின், றென்
னினைந்து யென்செய்தா யென்றுப் புலம்பி
னான், பொன்னினைத்தாய் நோக்கிப் புலர்ந்து.

321. **Damayanti's** mother gazing at her daughter, who resembled Lakshmi and fainting through sorrow, cried aloud saying:—" When your husband deserted you in the dreadful darkness, leaving you in the ruined mandapam without considering your natnre,—in your solitude what were your thoughts, and what did you do?"

(இ - ள்.) பனி இருளில் - பயங்கரமான இருட்டிலே, பாழ் மண்டபத்திலே - பாழ்பட்ட மண்டபத்திலே, உன்னை நினையாது-உன் தன்மையை ஆலோசியாமல், நீத்து-விட்டு, அகன்ற போது - (உன் கணவன்) நீங்கினபோது, தனியே நின்று - ஒன்றியா யிருந்து, என் நினைந்தாய் - என்ன நினைத்தையோ, என் செய்தாய்-என்ன செய்தையோ, என்னா-என்றுசொல்லி, தாய் - (தமயந்தியின்) மாதா, பொன்னினை நோக்கி-திருமகள் போன்ற மகளைப்பார்த்து, புலர்ந்து-(துக்கத்தினால்) உலர்ந்து, புலம்பினாள் - கூவியழுதாள், எ-று.

பனி — வினைத்தொகை. பனாத்தல் - நடுங்கல். என்னா— செய்யா என்னு மெச்சம். இது சொல்லெச்சமு மாதலால் "என்று சொல்லி" எனப் பொருள் கொள்ளப்பட்டது. (க௩௰)

கலிதொடர்காண்டம் முற்றிற்று.

மூன்றாவது
கலி நீங்கு காண்டம்.

கலி நளனைவிட்டுநீங்கின சரித்திரஞ் சொன்ன பாடல்களின் கூட்டமாதலின் கலிநீங்கு காண்டம் என்று சொல்லப்பட்டது. கலிதொடர் காண்டம் என்பதுபோல் சொற்றொடரிலக்கணங் கொள்க.

மூலப் பழமறைக்கு முன்னேயுங் காணலாம்
காலிக்குப் பின்னேயுங் காணலாம்—மால்யானை
முந்தருளும் வேத முதலே யெனவழைப்ப
வந்தருளுஞ் செந்தா மரை.

(*This section treats of Kali's departure from Nala.*)

In the பிரணவம் which is at the head of the ancient Vedas in which are inculcated all the virtues, and behind the herd of cows, we may see the sacred feet, which resembled the red lotus, of him who graciously assisted the great elephant, when it summoned him to its assistance, saying:—" O thou who existest before Brahma, and who shewest grace to thy servants before they invoke thee !"

(இ-ள்.) மால் யானை - பெரிய யானை, முந்து அருளும் - (அடியார் வேண்டுவதற்கு) முன்னேயே (அவர்கள் திறத்து) கிருபை செய்கின்ற, வேதமுதலே என அழைப்ப-பிரமனுக்குக் காரணமானவனே யென்று அழைக்கையில், வந்து அருளும்- அதனிடத்துக் கிருபையாற் சென்ற, செம் தாமரை - திருவடியாகிய சிவந்ததாமரைமலரை, மூல பழ மறைக்கு - சகல தருமங்களுக்கும் பிரமாணமாகிய பழமையான வேதத்துக்கு, முன்னேயும் - முதலான பிரணவத்திலேயும், காணலாம்—, காலிக்குப் பின்னேயும் காணலாம் - பசுக்கூட்டத்துக்குப் பின்புறத்திலேயும் பார்ப்பதுகூடும், எ-று.

வேதன் என்பதில் "சில விகாரமா முயர்திணை" என்பத னுல் னகரங் கெட்டது, வேதத்தினுல் ஓதப்பட்ட காரணமே என்னவுமாம். முன்னே, பின்னே,—ஏகாரம் சாரியை "பெரு மையிற் சிறுமை பேரணி" என்கிறபடி "மூலப் பழமறைக்கு முன்னே" என்பதனுலே பெருமையும், "காலிக்குப் பின்னே" என்பதனுல் சிறுமையுங் கூறப்பட்டன. இக்குணமே அன் பர்க்குப் பற்றுக்கோடாவது. சிறுமை. என்பது எளிமை இது ஆனை காத்ததனுல் விளக்கப்பட்டது.

போதுவார் நீறணிந்து பொய்யாத வைந்தெழுத்
தை, யோதுவா ருள்ள மெனவுரைப்பார் — நீதி
யார், பெம்மா னமரர் பெருமா னொருமான்கை,
அம்மானின் றுடு மரங்கு.

The great say that the hearts of those who at all times wear the distinguishing mark of the sacred ashes, and who recite the prayer consisting of the five mystic letters, are the permanent dwelling places of him who is the king of the just, a prince among the gods, and who holds in his hands an incomparable deer.

(இ -ள்.) போது - காலங்களில், வார் நீறு அணிந்து - நீண்ட விபூதிரேகைகளைத் தரித்து, பொய்யாத - சத்திய மான, ஐந்து எழுத்தை ஓதுவார் உள்ளம் - பஞ்சாட்ர மந்தி ரத்தை ஜபிக்கிறவர்களுடைய இருதயமானது, நீதியார் - நீதி மான்களுக்கு, பெம்மான் - அரசனும், அமரர் பெருமான் - தேவதைகளுக் கதிபதியுமாகிய, ஒரு மான் கை - ஒப்பற்ற மானைக் கையில் தரித்த, அம்மான் - அந்தப் பெரியவன், நின்று ஆடுக - நிலைத்து ஆடுகின்ற, அரங்கு என உரைப்பார் - சாலை யென்று சொல்வார்கள் (பெரியோர்) எ-று.

போதுவார் என்பதை வினையாலணையும் பெயராகவேனு முற்றெச்சமாகவேனுங் கொண்டு உரைக்கச் சிறப்பில்லை யாத லில் அங்ஙனம் உரைத்திலம். நீதியார் என்பதை நீதி ஆர் எனப்

பிரிந்து நீதி நிறைந்த என்று பெம்மானுக்கு விசேடணமாக்கலும் கூடும். அம்மான் — மஹாந் என்னும் வடசொல் மான் எனத் திரிந்ததெனக் கொள்க.

322. மன்னா வுனக்கபய மென்னு வனத்தீயிற்
பன்னுக வேந்தன் பதைத்துருகிச்—சொன்ன
மொழிவழியே சென்றான் முரட்கலியின் வஞ்சப்
பழிவழியே செல்கின்றான் பார்த்து.

(*Nala's tale alone will now be related.*)

322. Nala, who trod in the deceitful and mean path made for him by inimical Kali hearing the king of servants who had fallen into a fire in the desert, and was writhing, call out, "O king! you are my refuge," went listening, in the direction of the cry.

[இனித் தமயந்தியைப்பிரிந்த நளன்செய்தி
கூறப்படுகின்றது.]

(இ - ள்.) முரண் கலியின் - பகையான கலியினது, வஞ்ச பழி வழியே - வஞ்சனையான பழிக்கப்பட்ட மார்க்கத்திலே, செல்கின்றான் - நடக்கின்ற நளன், பன்னுக வேந்தன் - ஒரு சர்ப்பராசன், வனம் தீயில்-காட்டுத்தீயில்(விழுந்து),பதைத்து உருகி - துடித்து மனந்தளர்ந்து, மன்னா-அரசனே, உனக்கு அபயம் என்னு சொன்ன -(நான்) உனக்கு அடைக்கலமென்று சொல்லிய, மொழிவழியே - வார்த்தையின் வழியையே, பார்த்து - ஊகித்துக்கொண்டு, சென்றான் - போயினான், எ-று.

அபயம் என்பது பயமின்மையென்னும் பொருளுள்ளதாய் அதனை விரும்புவோனுக்கு ஆகுபெயராயிற்று ; ரக்ஷிக்கத்தக்க பொருளென்றபடி, ஆதலின் உனக்கு என்னும் நான்காம் வேற்றுமை கர்த்தாப்பொருளில் மயங்கியதெனக் கொள்க. பன்னகம் என்னும் வடமொழி, பன்னுகம் என விகாரப்பட்டது. பல் நாகம்-விஷப்பல்லையுடைய நாகம் எனலும் ஒன்றும். (க)

323. ஆருந் திரியா வரையிருளி னங்ஙனே
சோர்குழலை நீத்த துயரோடும்—வீரன்
திரிவானத் தீக்கானிற் செந்தீயின் வாய்ப்பட்
டெரிவானைக் கண்டா னெதிர்.

323. The Hero Nala who wandered about in the solitary midnight, sorrowing at his separation from Damayanti with the dishevelled hair, saw before him the king of the serpents burning in the red fire in that dense forest.

(இ - ள்.) ஆரும் திரியா - எவருஞ் சஞ்சரிக்க மாட்டாத, அரை இருளின் - நடு ராத்திரியில், அங்ஙனே - அப்படியே, [பாழ்மண்டபத்திலிருந்து வந்தபடியே,] சோர் குழலை நீத்த துயரோடும்-தமயந்தியைத் துறந்ததனாலாகிய துக்கத்தோடு, திரிவான்-திரிந்துகொண்டிருக்கின்ற, வீரன் - நளமகாராசன், அதி கானில் - அந்தத் தீமையான காட்டிலே, செம் தீயின் வாய் பட்டு - செம்மையான நெருப்பில் விழுந்து, எரிவானை- எரிந்துகொண்டிருக்கிற சர்ப்பராசனை, எதிர் கண்டான் - எதிரிலே பார்த்தான், எ-று.

துயரோடும்— உம் - அசை ; சிறப்பெனினும் ஒக்கும். அப்போது தன் மனதிற் பற்றியெரிகின்ற பெருந் துயரத்தையுந் தடுத்துத் தீயிற் பட்டவனைக் காக்க விரைந்துசென்றானென்பதாம் ;இதனால் அவனது அருட்பெருமை குறிப்பிக்கப்பட்டது. ஆர்—யார் என்பதின் மரூஉ. இருளின் இன்னுருபு இடப்பொருளின் மயங்கியது. இருளில் எனப் பாடங்கொள்ளுதல் நன்று. (உ)

324. தீக்கடவு டந்த வரத்தைத் திருமனத்தில்
ஆக்கி யருளா லரவரசை—நோக்கி
அடைந்தா னடைதலுமே யாரழலோ னஞ்சி
யுடைந்தான் போய்ப் புக்கா னுவந்து.

324. Remembering in his noble mind the gift bestowed on him by Agni, the God of fire, Nala, beholding the

snake with mercy, went towards it; and as he approached the God of fire, becoming afraid, retired rejoicing at the courage of Nala.

(இ - ள்.) தீ கடவுள் தந்த - அக்கினிதேவன் கொடுத்த வரத்தை—, திரு மனத்தில் ஆக்கி - சிறப்புள்ள மனதிலே கொண்டு, அருளால் - கிருபையினால், அரவு அரசை நோக்கி - சர்ப்பராசனைப்பார்த்து, அடைந்தான்-(அவ்விடம்) சென்றான் (நளன்,) அடைதலுமே - அடைந்தவுடனே, ஆர் அழலோன் அஞ்சி - அக்கினிபகவான் பயந்து, உடைந்தான் - மிடுக்கு அற்றவனாகி, உவந்து - (நளனுடைய மனவுறுதிக்குச்) சந்தோஷித்து, போய் புக்கான் - அப்புறம் போய்விட்டான, எ-று.

அஞ்சுதல் - தான் கொடுத்த வரத்தைக் காக்கவேண்டி அறத்திற்குப் பயப்படுதல். (௩)

325. வேத முனியொருவன் சாபத்தால் வெங்கானில், ஆதபத்தின் வாய்ப்பட் டழிகின்றேன்—
காதலால், வந்தெடுத்துக் காவென்றான் மாலை
மணிவண்டு, சந்தெடுத்த தோளானைத் தான்.

325 Looking at Nala, whose shoulders were adorned with garlands swarming with humming bees, the snake said:—"I am dying, being caught in the fire in this dense forest, owing to the curse of a Rishi well versed in the Vedas; Come and take me out for love's sake, and save me."

(இ-ள்.) மாலை - பூமாலையிலே, மணிவண்டு - அழகியவண்டுகள், (அல்லது மணிபோன்ற வண்டுகள்), சந்து எடுத்த-இராகத்தை எடுத்து நிற்கும்படியான, தோளானை-புசமுள்ளநளனை (நோக்கி,) வேத முனி ஒருவன் சாபத்தால் - வேதமறிந்த ஒருமுனிவனிட்ட சாபத்தினால், வெம் கானில் - உக்கிரமான காட்டில், ஆதபத்தின் வாய் பட்டு அழிகின்றேன் - அக்கினியில் வீழ்ந்து நாசமடைகிறேன், காதலால் - அன்பினால், வந்து

எடுத்து - (இங்கே) வந்து (என்னை) எடுத்து, கா என்றான் - இரக்ஷியென்று சொன்னான் (அந்த நாகராசன்,) எ-று.

ஆதபம்—சூடு, வடசொல்; இங்கு சிறப்பினால் நெருப்புக்குக் கொள்ளப்பட்டது. "மீதார் முலைக்குவட்டின் சந்தெடுத்த தோளான்" எனவும் பாடமுண்டு. தான் - அசை. (ச)

326. சீரியாய் நீயெடுப்பத் தீமை கெடுகின்றேன்,
கூருந் தழலவித்துக் கொண்டுபோய்—பாரில்
விடுகென்றான் மற்றந்த வெந்தழலால் வெம்மைப்
படுகின்றான் வேல்வேந்தைப்பார்த்து.

326. The king of serpents who was burning in that angry fire, addressing Nala, said:—" O thou excellent one! By your taking me out, I shall escape the distress which has befallen me. Therefore destroy this thick fire, and take me out and place me on the earth."

(இ - ள்.) அந்த வெம் தழலால் - அந்த உக்கிரமான அக்கினியினால், வெம்மை படுகின்றான் - தாபத்தை யடைந்து கொண்டிருக்கிற நாகராசன், வேல் வேந்தைபார்த்து - நள மகாராசனைப்பார்த்து, சீரியாய் - சிறப்பானவனே, நீ எடுப்ப - நீ (என்னை) எடுப்பதனால், தீமை கெடுகின்றேன் - நேர்ந்த துன்பம் நீங்கப் பெறுவேன்; (ஆதலால்,) கூரும் தழல் அவித்து - நிறைந்த அக்கினியை நாசஞ்செய்து, (என்னை) கொண்டுபோய்—, பாரில் விடுக என்றான் - பூமியில் விடக்கடவாயென்றுசொன்னான், எ-று.

மற்று - அசை. கெடுகின்றேன்—தெளிவினால் எதிர்காலம் நிகழ்கால மாயிற்று. (ரு)

327. என்றுரைத்த வவ்வளவி லேழுலகுஞ் சூழ்கடலும், குன்றுஞ் சுமந்த குலப்புயத்தான்—வென்றி, அரவரசைக் கொண்டகன்று ஞாணியந் தன்னில், இரவரசை வென்று னெடுத்து.

327. When the serpent thus spoke, king Nala, who bore upon his renowned shoulders (*i. e.*, who protected)

the seven worlds, the seas, and the great mountains which surround these worlds, and who conquered by his bright and gladsome countenance the moon—the manarch, of the night—lifted up the victorious serpent and went on in the forest.

(இ - ள்) என்று உரைத்த அவ்வளவில் - என்றுசொன்ன அந்தக் காலத்தில், ஏழு உலகும் - ஏழுலோகங்களையும், சூழ் கடலும் - உலகத்தைச் சூழ்ந்த ஏழுசமுத்திரங்களையும், குன் றும்-ஏழு குலபர்வதங்களையும், சுமந்த - தாங்கின, குல புயத் தான் - மேன்மையான தோள்களை யுடையவனும், இரவு அரசை - இராத்திரிக்கு அரசனாகிய சந்திரனை, வென்றான் - (முககாந்தியினாலும் சந்தோஷப்படுத்துவதனாலும்) ஜயித்த வனுமாகிய நளமகாராசன், வென்றி அரவு அரசை - வெற்றி பெற்ற சர்ப்பராசனை, எடுத்து கொண்டு - தூக்கிக்கொண்டு, ஆரணியந்தன்னில்-காட்டிலே, அகன்றான்-சென்றான், எ-று.

உலகு கடல் குன்றுகளைச் சுமப்பதாவது அக்குன்றுளோரை யெல்லாங் காத்தல். தண்டனையால் இவ்வுலகத்தையும் வேள்வி முதலிய தருமம் பெருக்கலால் மற்ற யுலகங்களையும் காத்து வருவதனால் ஏழுலகும் என்றார். குலமென்பது இலக்கணையால் மேன்மைக்காயிற்று. அப்போது முகவிலாசத்தை "சந்திரனை வென்றான்" என்றார். அகன்றான்—அகல் - பகுதி, ற் - இடை நிலை, ஆன்-விகுதி, லகரம் சந்தியால் றகரமாகி மெலிந்தது.()

328. மண்ணின்மீ தென்றனைநின் வன்றாளா லொன் றுமுதல், எண்ணித் தசவென் றிடுகென்றான்— நண்ணிப்போர், மாவலான் செய்த வுதவிக்கு மாறாக, ஏவலாற் றீங்கிழைப்பே னென்று.

328 The king of the serpents who, througth ingratitude for the kindness done to him by Nala, who was as powerful as an elephant in the thick of the battle, said within itself 'I will do him evil at his own command' and addressing Nala said:—" Count from one, with your

powerful feet and when you say (தச) ten, place me on the earth."

N. B.... The word (தச) means both ten and bite, and herein is contained the cunning of the snake, which made Nala, by this word to command it to do him evil.

(இ - ள்.) நண்ணி - கிட்டி, போர் மாவலான் - போரில் யானையைப்போல் வல்லவனாகிய நளன், செய்த உதவிக்கு - செய்த உபகாரத்துக்கு, மாறு ஆக - எதிராக, ஏவலால் - (அவனுடைய) கட்டளையினால், தீங்கு இழைப்பேன் - தீமையைச்செய்வேன், என்று - என்று நினைத்து, (அந்த நாகராசனானவன் அரசனைநோக்கி) மண்ணின்மீது - பூமியின்மேல், என்றனை - என்னை, நின் வல் தாளால் - உன்னுடைய வன்மையான பாதத்தினால், ஒன்று முதல் எண்ணி - ஒன்று முதலாகக் கணக்கெண்ணி, தச என்று - தசவென்னுஞ் சொல்லைச் சொல்லி, இடுக என்றான் - போடக்கடவை என்று சொன்னான், எ - று.

தச என்பது ஆரியத்தில் பத்து என்னுமெண்ணுப்பெயரும், கடி என்கிறபொருளுள்ளஏவலொருமை வினைச்சொல்லுமாம். கீர்வாணத்திலேயே அவர்களுக்குச் சம்பாஷணை நடந்ததனால் ஒன்றுமுதல் பத்துவரையிலும்அடியெண்ணிக்கொண்டுபோய் என்னைத் தரையிற்போடு என்றுசொன்னது போலேயிருக்கிற அவ்வார்த்தை (கடி) என்கிற அர்த்தத்தையும் சிலேடையால் தரும். இக்கருத்தினாலேதான் அவனேவலாலே அவனுக்குத் தீங்குசெய்யக்கருதி யென்றார். பாதத்துக்கு வன்மையாவது, பல அரசருடைய கிரீடந் தாங்கியுந் தேயாமலிருத்தல்; இதனால் அரசற்கு மேன்மை குறிப்பிக்கப்பட்டது. (எ)

இடுகென்றான்—வியங்கோளின் ஈறு தொக்கது.

329. ஆங்கவன்று னவ்வா றுரைப்ப வதுகேட்டுத்
தீங்கலியாற் செற்ற திருமனத்தான்—பூங்கழலை
மண்ணின்மேல் வைத்துத் தசவென்று வாய்மை
யெண்ணினான் வைத்தா னெயிறு. [யால்

329. When the king of the serpents had thus spoken in that place, listening to those words, Nala, who possessed an exalted mind, and who had been conquered by the evil Kali, placed his beautiful feet on the earth and truthfully counted (தச) *ten* Then that serpent fixed his fangs on the king's hand.

(இ - ள்.) ஆங்கு அவ்விடத்தில், அவன் - அப்பாம்பரசன், அவ்வாறு உரைப்ப - அப்படி சொல்ல, அதுகேட்டு - அப்பேச்சைக்கேட்டு, தீ கலியால்-தீமையான கலிபுருஷனால், செற்ற-வெல்லப்பட்ட, திரு மனத்தான்-மேன்மையான மனதுடைய நளன், வாய்மையால் - சத்தியத்தினால், பூங் கழலை - அழகான பாதத்தை, மண்ணின்மேல் வைத்து-பூமிமேல் வைத்து, தச என்று எண்ணினான் - தசஎன்றுகணக்கிட்டான், (அப்போது அந்த நாகன் அரசன்கையில்) எயிறு வைத்தான் - பல்லைப் பிரயோகித்தான், [கடித்தா னென்றபடி], எ - று. தான் - அசை.

நெருப்பில் வீழ்ந்து துடிப்பவனைத் தரையிலிடப் போகையில் அவன் தச சொல்லிப் போடு என்பதை யோசித்து அவ்வஞ்சமறிய வல்லவனாயினும் அறியாமற்போனது கலியின் கொடுமையா லாதலின் "தீங்கலியாற் சென்ற திருமனத்தான்" என்றார்.

செற்ற—இறந்தகாலத் தெரிநிலைப் பெயரெச்சம்; செறு பகுதி, அ - விகுதி, றகரமிரட்டிக் காலங்காட்டிற்று. "செயப்படுபொருளைச் செய்ததுபோல்" என்கிற விதியால், செயப்பாட்டுவினை செய்வினையாயிற்று. நளன் - [உயிர் ௩. ரு-வது] சூத்திரத்தினால் பூங்கழல் என மெலி மிகுந்தது. (அ)

330. வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
வாம நெடுந்தோள் வறியோருக்—கேமங்
கொடாதா ரகம்போற் குறுகிற்றே மெய்ம்மை
விடாதான் திருமேனி வெந்து.

330. When it bit him, the body of the truthful Nala assumed a dark hue, and his powerful shoulders, whose beauty the eyes of Damayanti could not fully realize, became shrunken, like the house of the miser who does not give off his gold to the poor.

(இ - ள்.) [கடிக்கவே] மெய்மை விடாதான் - சத்தியந் தவிராத நளனது, திருமேனி வெந்து - அழகுள்ள உடம்பு தீய்ந்து, வீமன் மடந்தை விழி - தமயந்தியின் கண், முடிய கண்டு அறியா - பூர்ணமாகப் பார்த்தறியாத, வாமம் - அழகான அல்லது இடப்பக்கமான, நெடு தோள் - நெடுமையான புஜமானது, வறியோருக்கு - தரித்திருக்கு, ஏமம் கொடாதார் - பொன்னைக் கொடாதவருடைய, அகம் போல் - மாளிகையைப் போல், குறுகிற்று - குறுகிப்போயிற்று, எ - று. ஏ - அசை.

ஏமம் - சந்தோஷமுமாம். அகம் குறுகுதலாவது வாழ்க்கை தாழ்வது. விழிமுடியக் கண்டறியாமையாவது எத்தனை பார்த்தும் அதனழகு அளவிடப்படாமை.

கொடாதார் — கொடு - பகுதி, ஆ - எதிர்மறைவிகுதி, த் - எழுத்துப்பேறு, ஆர் - விகுதி. (கூ)

331. ஆற்ற லரவரசே யாங்கென் னுருவத்தைச்
சீற்றமொன் றின்றிச் சினவெயிற்றால் — மாற்று
தற்கின், றென்கா ரணமென்றா னேற்றமரிற் கூற்
றழைக்கும், மின்கா லயின்முகவேல் வேந்து.

331. Nala, wha possessed a sharp-pointed lance which emitted lightning and which summoned Yama to carry away from the battle field those who opposed him in war, said:—" O thou skilful king of the serpents! Without any enmity existing to cause anger, why have you this day, by your cruel fangs, changed my form?"

(இ - ள்.) ஏற்று - (போர்க்குவந்தவர்களை) ஏற்றுக்கொண்டு அமரில் - யுத்தகளத்தில், கூற்று அழைக்கும் - (அவர்களைக்

கொண்டுபோக) இயமனை அழைக்கின்ற, மின் கால் - மின்ன லைக் கக்குகின்ற, அயில் முகம் வேல் வேந்து - கூர்மையான முகமுள்ள வேலையுடைய நளமகாராசன், ஆற்றல்-சாமர்த்திய முள்ள, அரவு அரசே - சர்ப்பராசனே, சீற்றம் ஒன்று இன்றி கோபகாரணமானபகை யொன்று மில்லாமல், என் உருவத்தை - என் ரூபத்தை, சின எயிற்றால் - உக்கிரமுள்ள பல்லினால், இன்று மாற்றுதற்கு - இன்றைக்கு வேறாக்குவதற்கு, என் காரணம் - என்ன ஹேது, என்றான்—, எ - று. ஆங்கு அசை.

ஏற்றமரில் என்பதற்கு ஏறுபோன்றவரோடு செய்யும்போரில் எனவும் பொருள் கொள்ளத்தகும். சீற்றம், சினம், இரண்டுந் தொழிற்பெயர்; சீறு - பகுதி, அம் - விகுதி, சின- பகுதி, அகரம் கெட்ட அம் விகுதி ; பகைக்கும் உக்கிரத்துக்கும் ஆகுபெயர். உருவம்—ரூபமென்னும் வடமொழித்திரிபு உரு, உருவு எனவும் வரும். என்—எவன் என்னுங் குறிப்பு முற்றின் இடை குறைந்தது. தன்வாயாலேயே கடி என்று சொல்வித்த தந்திரநோக்கி, 'ஆற்றலரசே' என்றான். சண்டையில் வேலால் கொல்வது நிச்சயம் என்பதை, "ஏற்றமரில் வேல்" என்றது. (௬௦)

332. காயுங் கடகளிற்றாய் கார்க்கோ டகனென்பேர்
நீயிங்கு வந்தது யானினைந்து—காயத்தை
மாறாக்கிக் கொண்டு மறைந்துறைதல் காரணமா
வேறாக்கிற் றென்றான் விரைந்து.

332. "O thou who possessed angry and rutting elephants! my name is கார்க்கோடகன் Knowing that you had come to this place, in order that you may live in concealment, I hastened hither and changed your form."

(இ - ள்.) காயும் கட களிற்றாய் - கோபிக்கின்ற மதயானையுள்ளவனே, என் பேர் கார்க்கோடகன்—, நீ இங்கு வந்தது- நீ இவ்விடம் வந்ததை, யான் நினைந்து - நான் எண்ணி, காயத்

தை - (உன்) உடம்பை, மாறு ஆக்கிக்கொண்டு - வேறுருபப் படுத்திக்கொண்டு, மறைந்து உறைதல் -(நீ) மறைந்து வாசஞ் செய்வது, காரணம் ஆ - ஹேது ஆக, விரைந்து-துரிதப்பட்டு வேறு ஆக்கிற்று - (யான்) வேறாக்கியது, என்றான்—, எ-று.

வேறாக்கிற்று—தொழிற்பெயர், யானென்னு மெழுவாயைக் கொண்டது, இதுவும் எழுவாய் பெயராதலின் ஆயிற்றென் னுந் தோன்றாப் பயனிலைகொண்டு முடிக்க. வடநூற் கொள் கையின்படி இது பாவேப்பிரயோகமாம், "அதாவதுகர்த்தாப் பெயர் தொழிற்பெயரால் முடிவது ; அப்பாஷையில் இங்கு கர்த்தாப்பெயர் மூன்றாம் வேற்றுமையில் வரும் ; ஆயினும் பொருள் வேற்றுமை யின்மையால் இங்ஙனங் கொள்ளலாம் இவ்வாக்கியத்தை யுட்கொண்ட என்றானென்னும்பயனிலைநாக ராசன் என்னுந் தோன்றா எழுவாயைக் கொண்டது. ஆக் கிற்று—ஆக்கு - பிறவினைப்பகுதி,று-விகுதி , இன்-இடைநிலை ன் - ற் ஆயிற்று ; அகரச்சாரியைவரின் ஆக்கினது என்றாம்.)

333. கூனிறால் பாயக் குவளை தவளைவாய்த்
தேனிறால் பாயுந் திருநாடா—கானில்
தணியாத வெங்கனலைத் தாங்கினை யிந்த
அணியாடை கொள்கென்றா னங்கு.

333 "O thou, who possessest the beautiful country in which the curved இறால் fish, leaping, causes the honey from the black நெய்தல் flower to flow, as if from a honey comb, into the mouths of the frogs! you have destroyed the unquenchable fire in this forest, Accept therefore this beautiful garment" said கார்க்கோடகன்.

(இ - ள்.) கூன் இறால் பாய - வளைந்த இறால் மீன்கள் பாய்வதினாலே,குவளை - கருநெய்தற் பூக்களி னின்றும்,தவளை வாய் - தவளைகளின் வாயிலே, தேன் - தேனானது, இறால் பா யும்-தேன் கூண்டுபோலே பாயப்பெற்ற, திருநாடா - அழகிய நாட்டையுடையவனே, கானில் - காட்டில், தணியாத - ஆறாத,

வெம் கனலை தாங்கினாய் - வெப்பமான நெருப்பினின்றும் (என்னை) எடுத்தாய், (ஆதலின்) இந்த ஆடை ஆணி - இந்த அழகான வஸ்திரத்தை, கொள்க என்றான் - பெற்றுக்கொள் என்று சொன்னான் (கார்க்கோடகன்), எ - று. ஆங்கு - அசை,

'கூனிறால் — திருநாடா' என்பது நாட்டின் வளத்தை யுணர்த்தியது; அதனால் அரசனது செங்கோற் சிறப்பு குறிப்பிக்கப்படும், இறால்மீன்கள் கரையில் துள்ளி மரங்களின் தேன் கூண்டுகள் மேல் பாய்வதனால் அவை குவளை தவளைகளின் வாயில் பாயும்படியான நாடு எனவு முரைக்கலா மாயினுஞ் சிறப்பில்லை.

கனல் என்பது விஷ அக்கினி எனினும் அமையும். கனலை— இரண்டனுருபு நீக்கப் பொருளில் வந்தது; வேற்றுமை மயக்கம். வெங்கனலிற்றாங்கினாய் என்னலாம். என் விஷ அக்கினியைத் தாங்கினதற்குப் பரிஹாரமாய் இவ்வாடையைக் கொள் என்றானெனினும் அமையும்.

334. சாதி மணித்துகிலீ சாத்தினாற் றண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால்—தாதின்
துளிக்குநா நீட்டுந் துறைநாடர் கோவே
ஒளிக்குநா ணீங்கு முரு.

334. "O king who possessest the country surrounded by water in which the வரால் fish, which forages beneath the cool red kuvali flower, streches out its tongue to re-ceive the drops of honey which fall from the pollen of that flower! If you put on this garment which resembles a genuine gem, the form which has this day left you will shine again"

(இ - ள்.) தண் கழுநீர் போதின்கீழ் - குளிர்ச்சியான செங்கழுநீர்ப் பூவின் கீழ், மேயும் புதுவரால் - மேய்ந்துகொண்டிருக்கிற புதிய வரால்மீன், தாதின் துளிக்கு - அப்பூவின் தேன் துளிக்கு, நா நீட்டும்-நாக்கை நீட்டுகின்ற, துறை நாடர் கோவே - தண்ணீர்த் துறையுள்ள நாட்டாருடைய அரசனே,

சாதி மணி துகில் - சாதி மாணிக்கம்போன்ற இந்த வஸ்திரத்தை, நீ சாத்தினுல் - நீ தரித்தால், நாள் நீங்கும் உரு - இக்காளில் நீங்கிய ரூபம், ஒளிக்கும்-விளங்கும், எ - று.

ஒளிக்கு நாள் - வெளிபடுதற்கு வேண்டிய நாளில், உரு நீங்கும் - இவ்வுரு நீங்கிவிடும் எனவுங் கொள்ளலாம். ஒளிக்கும் என்பது, சித்திரிக்கும் கடைகணிக்கும் என்பவைபோல் ஒளி என்னும் பெயரடியாய்ப்பிறந்த வினைமுற்றென அறிக. தாது—தேனுக்கு ஆகுபெயர். (௩௩)

335. வாகு குறைந்தமையால் வாகுவனென் றுன்னு
மம், ஆக வயோத்தி நகரடைந்து—மாகனகத்
தேர்த்தொழிற்கு மிக்கானீ யாகென்றான் செம்ம
னத்தாற், பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து.

335 Addressing Nala, who excelled in governing the world by his right-mindedness, கார்க்கோடகன் said:—“You shall be known by the name of வாகுவன் on account of your shrunken hand. Go to the town of Oudh and may you there become celebrated in the act of driving the great golden chariot.”

(இ - ள்.) செம் மனத்தால் - செவ்வையான மனதினுல், பார் தொழிற்கு மிக்கானை பார்த்து - பூமி யாளுஞ் செய்கையில் மிகுந்தவனுகிய நளனைப் பார்த்து, வாகு குறைந்தமையால் - கை குறைந்ததனுல், வாகுவன் என்று—, உன் நாமம் ஆக - உன்பேர் ஆகக்கடவது; நீ அயோத்தி நகர் அடைந்து-நீ அயோத்தியா பட்டணத்தைச்சேர்ந்து, மா கனகம் தேர் தொழிற்கு - பெரிய சுவர்ண ரதம் ஓட்டும் வேலையில், மிக்கான் ஆகு - மேன்மை யுடையவனுகக்கடவை, என்றுன்—, (கார்க்கோடகன்), எ - று.

ஆக என்பது வியங்கோள்முற்று, வினையெச்சமுமாம். தொழிற்கு—குவ்வுருபு இடப்பொருளில் மயங்கிவந்தது. காமக்குரோதாதிகளின்றித் தயை தாக்ஷிணிய முதலியவை யுடைய

தாதலின் செம்மனத்தால் என்றார். இது பாராளுந் தொழி லின் மேன்மையாதற்கு ஏதுவாகலின் ஆல் உருபு வந்தது.

வாகுவன்—பாஹுக என்கிற ஆரியத்தின் திரிபு. பாஹு—கை, க என்பது பழிப்புப் பொருளில்வந்த விகுதி, பழிப்பான கையையுடையவனென்பது பொருள். வாகுகன் எனப் பாடங்கொள்ளலே தகுதி. (கச)

336. இணையாரு மில்லா னிழைத்த வுதவி, புணையாகச் சூழ்கானிற் போனான்—பணையாகத், திண்ணாக மோரெட்டுந் தாங்குந் திசையனைத்தும், எண்ணாக வேந்த னெழுந்து.

336. Nala who possessed a heart esteemed by the inhabitants of the eight corners of the world which are supported by eight huge bodied strong elephants, leaving that place went on in the dense forest. the favor done to him by the matchless கார்க்கோடகன் being an assistance to him.

(இ-ள்.) பணை ஆகம் - பருத்த உடம்பையுடைய, திண் நாகம் ஓர் எட்டும்-பலமான யானைகள் எட்டும், தாங்கும் திசை அனைத்தும் - சுமக்கின்ற எல்லாத்திக்குகளும், எண் ஆகம் வேந்தன் -சிந்திக்கும்படியான இருதயமுள்ள நளமகாராசன் எழுந்து - அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, இணையாரும் இல்லான் - ஒப்பில்லாதவனாகிய கார்க்கோடகன், இழைத்த-உதவி செய்த உபகாரம், புணை ஆக தெப்பமாக [சகாயமாக,] சூழ் கானில் - சூழ்ந்த காட்டில், போனான் —, எ - று.

எத்திசையி லுள்ளவரும் தன் உள்ளத்தின் சீரைச்சிந்தித்துக்கொண் டிருக்கும்படியானவன், ரூபம் மாறும்படி கார்க்கோடகன் செய்ததைத் தனக்குச் சகாயமென்றே கொண்டு போனான் என்பதாம். என் நாகவேந்தன் எனப்பிரித்து இழைத்த என்பதோடு கூட்டியு முரைக்கலாம்; அந்தப்பக்ஷத்தில் இணையாருமில்லான்-நளன், சூழ்கானில் எண்ணாகவேந்

தன் - கார்க்கோடகன், இழைத்த வுதவி துணையாக எழுந்து பணையாகத்தினனாக மோரெட்டூர்தாங்குச் திசையனைத்தும் போனான் என அனுவயமுறையிற் பொருள்கொள்க. (கரு)

337. நினைப்பெனனுங் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளுங், கனற்புகைய வேகின்றான் கண்டான் — பனிக்குருகு, தண்படா நீழற் றனிப்பேடை பார்த்திரவு, கண்படா வேலைக் கரை.

337. Nala, whose mind was burning with fire which being fanned by his thought as if by a breeze emitted volumes of smoke, saw before him the sea which was restless even at night and which washed the coast of the country where the timid male birds eyed the solitary female bird which sheltered itself beneath the shade of the long-cool creeper.

(இ-ள்.) நினைப்பு என்னும் காற்று அசைப்ப-சிந்தையாகிய காற்று அசையச் செய்வதனால், நெஞ்சிடையே - மனதிலே, மூளும் கனல் புகைய - பற்றிக்கொள்ளும் நெருப்பு புகையெழும்பி நிற்க, வேகின்றான் -வெந்துகொண்டிருக்கிற நளன் பனி குருகு-அச்சமுள்ள பறவைகள், தண் படாம் - குளிர்ச்சியான பெருங்கொடிகளினது, நீழல் - நிழலில், தனி பேடை - தனித்திருக்கின்ற பெண்பறவையை, பார்த்து—, இரவு - இராத்திரியில், கண்படா - தூங்காமலிருக்கிற, வேலை கரை கடற்கரையை, கண்டான்—, எ - று.

மனதில் தமயந்தியை நீத்த துன்பம் நெருப்பைப்போல மூண்டு நிற்பதனால் தாபமுற்றவனாகி அங்கிருந்து கடற்கரை வழியாகச்சென்றார். துணிந்து பேடையிடஞ் செல்லாமையின் "பனிக்குருகு" என்றார். குருகு — தகுதியால் சக்கரவாகம் எனக் கொள்ளவுமாம். (கசு)

338. கொம்ப ரிளங்குருகே கூரு திருத்தியால்
அம்புயத்தின் போதை யறுகாலால்—தும்பி

திறக்கத்தே னூறுந் திருநாடன் பொன்னை
உறக்கத்தே நீத்தேனுக்கொன்று.

338. " O thou young bird, perched on the bough of the tree You have not a word to say to me who deserted in her sleep, the beautiful daughter of the king of the excellent country of Vidarpa, where the beetles open with their six legs the bud of the lotus flower, thereby causing the honey to gush out."

(இ - ள்.) கொம்பர் இள குருகே-மரக்கொம்பின்மேலிருக்கிற இளமையான பக்ஷியே, அம்புயத்தின் போதை - தாமரை மொட்டை, அறு காலால் - ஆறு கால்களினாலே, தும்பி திறக்க - வண்டுகள் திறக்கையில், தேன் ஊறும் - தேன் சுரக்கும்படியான, திரு நாடன்-சிறப்பான விதர்ப்பநாட்டையுடையவனது, பொன்னை-பொன்போன்ற மகளை, உறக்கத்தே நீத்தேனுக்கு - தூக்கத்தில் விட்ட எனக்கு, ஒன்று-ஒரு பேச்சையும், கூறாது இருத்தி-சொல்லாமலிருக்கிறாய், எ - று. ஆல் - அசை.

நளன் கடற்கரையில் போகும்போது தமயந்தியை நீத்த விசனத்தினால் இவ்வாறு நினைத்துச் சொல்லிக்கொண்டுபோனானென்பதாம்- (கஎ)

339. புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு, கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும் — இன்னருள்கண், டஞ்சினா னாவி யழிந்தா னறவுயிர்த்து, நெஞ்சினா லெல்லா நினைந்து.

339. Nala, observing the sweet grace with which the spotted beetle, after having picked with its legs the beautiful fragrant pollen of the punnai flower, waited till the fair female bee first imbibed the honey, was disturbed in his mind and heaved a deep sigh, and pondering over all that he had done, he felt his life as it were ebbing away.

(இ - ள்.) புன்னை நறு தாது - புன்னைப் பூவின் வாசனையுள்ள பூந்தாதை, கோதி - அலகினால் குத்தி, பொறி வண்டு - புள்ளிகளுள்ள வண்டானது, கன்னி பெடை - அழகிய பெண்வண்டு, உண்ண - (அத்தேனை) யுண்ணுதற்கு, காத்திருக்கும் - காத்துக்கொண்டிருக்கின்ற, இன் அருள் கண்டு இனிமையான கிருபையைப் பார்த்து, அஞ்சினன் - பயப்பட்டவனாகி, அற உயிர்த்து - மிகப் பெருமூச்செறிந்து, நெஞ்சினால் - மனதினால், எல்லாம் நினைந்து - தான் செய்தவைகளையெல்லாம் நினைத்து, ஆவி அழிந்தான் - உயிரழியப் பெற்றான், [மூர்ச்சித்தான் நளன் என்கிறபடி], எ-று.

நாலறிவுயிரான தும்பியும் பெண்பால் வைத்த அருளை யான் கொன்றேனே யென்று அறத்துக்கு அஞ்சினு னென்பதாம். ()

340 காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—நாதம்
அளிக்கின்ற வாழிவா யாங்கலவ வோடி
ஒளிக்கின்ற தென்னோ வுரை.

340. " O crab Tell me why you thus run away from me and hide yourself in the roaring ocean. Is it because you think you should not look upon the face of a sinner like myself, who deserted his dear consort in the thick darkness of the forest ? or is it from any other reason ?"

(இ - ள்.) அலவ - ஓ நண்டே, காதலியை - பிரியமான நாயகியை, கார் இருளில் - மிகுந்த இருட்டிலே, கானகத்தே கைவிட்ட பாதகனை - காட்டிலே அறவிட்ட பாவியை [என்னை,] பார்க்க படாது என்றோ - பார்ப்பது கூடாதென்று நினைத்தோ, நாதம் அளிக்கின்ற ஆழிவாய் - தொனியை யுண்டாக்குகின்ற சமுத்திரத்தில், ஓடி ஒளிக்கின்றது - (நீ) ஓடி ஒளித்துக்கொள்ளுதல், என்னோ - (வேறு காரணம்) யாதோ, உரை - சொல், எ - று. ஆங்கு - அசை.

இங்ஙனம் நன்னடைநோக்கி நளன் கூறினான். இதையும் பாவைப் பிரயோகமாக் கொள்ளலாம். [பெயரியல்-௬௪-வது] சூத்திரத்தினால் அலவ என்று விளியுருபாயிற்று. (௧௯

341. பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவுங்
கானலே வேலைக் கழிக்குருகே—யானுடைய
மின்னிமைக்கும் பூணாளவ் வீங்கிருள்வா யாங்கு
ணர்ந்தால், என்னினைக்குஞ் சொல்வீ ரெனக்கு.

341. " O thou dark-hued kuvali flower O thou sea shore on which blow the fresh south winds which pass through the groves; O crane, who art in the gulf adjoining the sea, Tell me what will be the thoughts of my wife, who is adorned with glittering jewels, when she awakes in that dense forest "

(இ - ள்.) பானலே - நீலோற்பலமே, சோலை - தோட்டங்களோடு கூடிய, பசுந்தென்றல் - பசுமையான தென்றற் காற்று, வந்து உலவும் - வந்து வீசுகின்ற, கானலே - கடற்கரையே, வேலை கழி குருகே - கடலைச்சேர்ந்த கழியினிடத்துள்ள நாராய், யான் உடைய - யான் கலியாணஞ் செய்துகொண்ட, மின் இமைக்கும் பூணாள் - காந்தி விளங்கு மாபரண முடைய தமயந்தி, அவ் வீங்கு இருள்வாய் - அந்தப்பெருத்த இரவில், உணர்ந்தால் - விழித்துக்கொண்டால், என் நினைக்கும் - யாது நினைப்பாள், எனக்கு சொல்வீர் - எனக்குச் சொல்லுங்கள், எ - ஆங்கு - அசை.

சோலையென வேறிருத்தலால் கானல் என்பது கரைக்கே கொள்ளப்பட்டது. (உ0)

342. போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்று மென்போல வார்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொ லின்று.

342. " O sea ! you roll backwards, and forwards, and roaring tremble shaking the ships that float on the surface. Have you also, like myself, who saved the serpent from the fire, deserted your wife this night ?"

N. B.—The king is troubled for having parted his family and is trembling while his tongue falters.

(இ -ள் .) ஆர்கலியே - சமுத்திரமே, போவாய் வருவாய் - போகிறாய் (மறுபடி) வருகிறாய், புரண்டுவிழுந்து—, இரங்கி - ஒலித்து (=பரிதவித்து), நாவாய்-கப்பல்(=நாகக்கோடுகூடிய வாய்), குழற - அலைய (=தடுமாறிப்போக), நடுங்குறுவாய் - நடுங்குகின்றாய் (ஆதலின்,) தீவாய் அரவு அகற்றும்-நெருப்பி னின்றும் பாம்பை நீக்கின, என் போல - என்னைப்போல் (நீயும்,) மாதை - பெண்பிள்ளையை, இன்று - இன்றைக்கு, இரவு - இராத்திரியில், அகற்றி வந்தாய்கொல் - நீங்கி வந்தை யோ, எ-று.

இதில் தனக்குங் கடலுக்குஞ் சிலேடை யிருப்பது காண்க. இவ்வாறு நளமகாராசன் துயரத்தோடு கடற்கறையில் சென் றது, பொதுவியற்றிணையின் பாகுபாடான சுரநடை யென்ப தோடு ஒத்திருப்பதனால் அத்திணையி னேர்துறையாகக் கொள் ளவேண்டும். தமயந்தி புலம்பிச்சென்றதும் முதுபாலையோ டொத்திருத்தலி னிவ்வாறே. குறையுங் குற்றமு மில்லாத ஆரிய வலங்கார நூலின்படி இது கருணாரசத்திற்சேர்ந்து சஞ் சாரி பாவங்களுள் அடங்கும். (உக)

343. முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
நன்னீ ரயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்
முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத்
அருகுடைக்கு நன்னாட் டரசு. [தும்பி

343. The king of the country of Nidatha, where the beetles approaching the excellent flower of the lotus, which surpasses the natural beauty of gold, cause the

honey to flow out of it, passed along the sea-shore where the maidens laughed immoderately at his appearance, and reached the fertile town of Oudh.

(இ - ள்.) பொன் நீர் - பொன்னின் குணமாகிய, முருகு உடைக்கும் - அழகை உடைந்துபோகச் செல்கிற [பொன்னி லும் அழகான என்கிறபடி,] தாமரையின் —, மொய் மலரை - பெருமையான பூவை, தும்பி - வண்டுகள், அருகு - சமீபத் தில் [கிட்டச் சென்று,] உடைக்கும் - தேன் ஒழுகும்படி மலர்த்துகிற, நன்னாட்டு அரசு - நல்ல நிடதநாட்டின் அரசன், முன்னீர் - கடற்கரையிலுள்ள, மடவார் - பட்டினப் பெண் கள், முறுவல் திரள் - சிறிப்பின் கூட்டத்தை, குவிப்ப - சேர்க்க [மிகச்சிரிக்க,] நல் நீர்-நல்ல நீர்வளமுள்ள, அயோத்தி நகர் - அயோத்தியா பட்டணத்தை, அடைந்தான் - சேர்ந் தான், எ-று.

அரசனுடைய விகாரரூபத்தைக் காண்பது சிறித்தற்கேது.

பொன் நீர்-பொன்னின் குணமுள்ள, முருகு உடை-தேனை யுடைய, குந்தா - குந்திநிற்காத படிந்து நிற்கிற,] மரையின்- தாமரையின், எனவும் உரைக்கலாம். அதுவலிமை.

முன்னீர் — முந்திப்படைத்த நீர் ; கடலுக்கு ஆகுபெயர். ஜலத்தை முதலிற்படைத்தார் கடவுள் என்று சாஸ்திரம் ; இச்சொல் முந்நீர் எனத் தந்நகர முடையதா யிருக்கின், அதற் குப்பொருள், படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய மூன்று தொழிலுஞ் செய்யு நீர் என்பதாம். ஆற்றுநீர், ஊற்றுநீர் மழைநீர் ஆகிய மூன்றுநீர் எனப் பொருளுரைப்பாருமுளர்.()

344\. மான்றேர்த் தொழிற்கு மடைத்தொழிற்கு மிக்
 கோனென், றான்றேய்க்கும் வேலா னுயர்நற
 வத்—தேன்றேய்க்குந், தார்வேந்தற் கென்வரவு
 தாணுரைமி னென்றுரைத்தான், தேர்வேந்தன்
 வாகுவனாய்ச் சென்று.

344. King Nala, having gone there under the name வாகுவன் told the attendants to inform the king who possessed a lance strong enough to pierce the flesh of his adversaries, and who was adorned with a garland wet with excellent and fragrant honey, of his arrival, and also to tell him that he was an adept in the art of driving a horse-chariot and of cooking.

(இ - ள்.) தேர் வேந்தன் - நளமகாராசன், வாகுவன் ஆய் சென்று - வாகுவனென்னும் பெயரை யுடையவனாய்ப் போய், மான் தேர் தொழிற்கும் - குதிரைகட்டிய தேரைச்செலுத்துந் தொழிலுக்கும், மடை தொழிற்கும் - சோற்றைச் சமைக்குந் தொழிலுக்கும், மிக்கோன் என்று - (நான்) விசேஷமானவனென்று, ஊன் தேய்க்கும் - பகைவருடைய மாமிசத்தை நாசப்படுத்தவல்ல, வேலான் - வேலையுடையவனாகிய, உயர் நறவம் தேன் - உயர்வான வாசனையுள்ள தேனில், தோய்க்கும் தார் வேந்தற்கு - நனைக்கப்பட்டிருக்கிற மாலைதரித்த அரசனுக்கு, என் வரவு-என்னுடைய வருகையை, உரைமின் என்று சொல்லுங்களென்று, உரைத்தான் - சொல்லினான், எ - று தான் - அசை.

ஊன் தேய்க்கும் வேலான் என்பதைத் தேர்வேந்தனுக்கு விசேஷணமாகவும் உரைக்கலாம். இவ்வாறு அதரோடுசொன்னான். உரைமின் - [வினையியல் கஅ - வது] சூத்திரத்தினால் ஏவற்பன்மைக்கு மின் விகுதிவந்தது. ஊன்றேய்க்கும் வேலான் என்பது, தார்வேந்தன் என்பதோடு இருபெயரொட்டுப் பண்புத்தொகையா முடிந்தது. மான்—னகரம் சாரியை [உருபு - கூ - சூத்திரம்.] நான்மிக்கோன் என்றது ஓரிடம் பிறவிடந் தழுவியது. (உரு)

345. அம்மொழியைத் தூத ரரசற் கறிவிக்கச்
செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே-இம்
மொழிக்குத், தக்கானை யிங்கே தருமி னென
வுரைக்க, மிக்கானுஞ் சென்றான் விரைந்து.

345. When the messengers had delivere dthat message to the king, he thought over it, and believing it to be true, told them to bring him the man who was able to utter those words. And Nala hastened into his presence.

(இ - ள்.) அம் மொழியை - அந்தப்பேச்சை, தூதர் - செய்தியறிவிப்போர், அரசற்கு அறிவிக்க - அவ்வரசனுக்குத் தெரிவிக்கையில், அதனை சிந்தித்து - அப்பேச்சை யாலோசித்து, செம் மொழி ஆ தேர்ந்து - சத்திய வசனமாகத் தெளிந்து, இம்மொழிக்கு தக்கானை - இப்பேச்சுக்குத் தகுந்த யோக்கியதை யுடையவனை, இங்கே தருமின் என்-இவ்விடத்தில் இட்டுக்கொண்டு வாருங்களென்று உரைக்க - (அயோத்தி யரசன்) சொன்னதனால், மிக்கானும்-மேலான நளனும், விரைந்து சென்றான் -துரிதப்பட்டுச் சென்றான், எ-று.

உரைக்க வென்னுஞ் செயவெ னெச்சம் இங்குஇறந்தகாலத்தில் வந்தது. மிக்கானும்—எச்சவும்மை. மிக்கான்—மிகு என்னும்முதனிலைமேற்பிறந்தஇறந்தகால வினையாலணையும்பெயர்; மிகு-பகுதி இரட்டிக் காலங்காட்டியது, ஆன் - விகுதி. (உச)

346. பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்
தன், செய்யமுகமலர்ந்து தேர்வேந்தன்-ஐயாநீ
எத்தொழிற்கு மிக்கா னியாது பெயரென்றான்
கைத்தொழிற்கு மிக்கானைக் கண்டு.

346. Looking at Nala, into whose thoughts a lie never entered, the king of Oudh, his beautiful countenance blooming, asked :—" Sir, in what work do you excel? What is your name ?" Then, addressing the king of Oudh who excelled in the great art of governing.

(இ - ள்.) பொய் அடையா சிந்தை - பொய் சேராத நினைப்புள்ள, புரவலனை நோக்கி - நளமகாராசனைப்பார்த்து, தன் செய்ய முகம் மலர்ந்து - தன்னுடைய செம்மையான முகம்

மலரப்பெற்று, தேர் வேந்தன்-அயோத்தி யரசன், ஐயா நீ—, எத்தொழிற்கு மிக்கான் - எந்தத்தொழிலில் மிகுந்தவன், யாது பெயர் - உன்பேர் என்ன, என்றான்—, * கைத்தொழிற்கு - மேன்மையான தொழிலில் [அரசாட்சியில்,] மிக்கானை கண்டு - மேலான அவ்வயோத்தி மன்னனைப் பார்த்து, எ - று.

* இது பிற்பாட்டோடு சேரத்தக்கது. கைத்தொழிற்கு மிக்கானைக்கண்டு என்பதற்கு நளனைக்கண்டு இப்படி யுரைத்தானெனப் பொருள் கூறலாமாயினும் முதலடியோடு கூறியது கூறலாம், ஆதலின் சிறப்பிலதாம். புரவலன் - புரத்தலிலே வல்லவன், புரத்தல் - காத்தல்.

கையென்பது படைவகுப்புக்கும் பேராதலால் படைவகுப்புத் தொழிலில் மிக்கானெனவும் பொருள் கூறலாம். கையிற் செய்யவல்ல எல்லாத் தொழிலிலும் எனப்பொருள் கூறினும் அமையும். கை - நீட்சி மேன்மைக்கும் பெயர் [மெய் - புணரியல் - கூ - ஆம்] சூத்திரத்தினால் மிக்காணியாது எனவந்தது செம்மையில் மை கெட, பெயரெச்ச விகுதியாகிய அ வர முன்னின்ற மகரம் யகரமாத்திரிந்து தனிக்குறின் முன்னொற்றாகிய அது இரட்டி,செய்ய ஆயிற்று. மலர்ந்து என்னுஞ்சினை வினை என்றானென்னு முதல்வினை கொண்டது. (உகு)

347. அன்ன மிதிப்ப வலர்வழியுந் தேறல்போய்ச்
செங்நெல் விளக்குந் திருநாடர்—மன்ன
மடைத்தொழிலுந் தேர்த்தொழிலும் வல்லன்
யா னென்றான், கொடைத்தொழிலின் மிக்கான்
குறித்து.

347. Nala, who excelled in charity, said:—"O king of the inhabitants of the excellent country in which the honey which flows from the lotus flowers, on which the swans tramble, causes the good paddy to grow! 'I excel in cookery and in the art of chariot-driving.'

(இ - ள்.) கொடை தொழிலில் மிக்கான் - ஈகையில் மிகுந்தவனாகிய [வள்ளலாகிய] நளன், குறித்து - தன் பேச்சுக்கு இலக்காகவைத்து, அன்னம் மிதிப்ப - அம்சபக்ஷிகள் மிதிப்பதனால், அலர் வழியும் - தாமரைமலர்களினின்றும் வழிகின்ற, தேறல் போய் - தேன் ஓடி, செம் நெல் - செந்நெற் பயிரை, விளைக்கும் - விளையச் செய்கிற, திருநாடர் மன்ன - மேன்மையான நாட்டிலுள்ளவர்க்கு அரசனே, யான்—, மடைத்தொழிலும் - சமைக்கும் தொழிலிலும், தேர் தொழிலும் - தேர்செலுத்துந் தொழிலிலும், வல்ல - சாமார்த்தியமுடையேன், என்றான்—, எ-று.

வல்லன்—தன்மை யொருமைக் குறிப்புமுற்று. செந்நெல் எனப் பாடமோதி தேட்கெண்டையென்னு மீன்களை வளர்க்கிற எனப் பொருள்கொள்ளக் கூடுமாயினும் அது சிறப்பன்றென்க. (உகூ)

348. என்னை யிருங்கானி னீத்த விகல்வேந்தன்
தன்னைநீ நாடுகெனத் தண்கோதை—மின்னுப்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
உரைபகர்வ தானு ணர்ந்து.

348. Damayanti, knowing him to be a man of discernment, said to the family priest of king Bhima, who was armed with a lance as bright as lightning, "Go and find out the hero Nala, who deserted me in the wide forest."

(இ - ள்.) தண் கோதை - குளிர்ச்சியான மாலையைத் தரித்தவள் [தமயந்தி,] உணர்ந்து-(இவன் அறிய வல்லவனென்று தெரிந்து, மின்னு புரை - மின்னலை ஒத்திருக்கிற, கதிர் வேல் வேந்தன்-காந்தியுள்ள வேலைத்தரித்த வீமராசனுடைய, புரோகிதனுக்கு - வைதிக காரியஞ் செய்விக்கும் ஆசாரியனுக்கு என்னை—, இரு கானில் நீத்த - பெரியகாட்டில் விட்ட, இகல் வேந்தன் தன்னை - வீரமுள்ள நளமகாராசனை, நீ நாடுக என-

நீ தேடியறி என்று, இந்த உரை - இந்தப்பேச்சை, பகர்வதானுள் - சொன்னாள். எ - று.

பகர்வது - பகர்தல்,ஆனாள் - உண்டாகப்பெற்றாள்; சொல்லலானான் முதலியவைகளையும் மிவ்வாறே கொள்க. "மின்பின் பன் கன் தொழிற்பெயரனைய" என்னுஞ் சூத்திரத்தினால் உகரச்சாரியைப் பெற்று மின்னு என்றாயிற்று."இயல்பினும்விதியினும்"என்கிற பொதுவிதியால் வலிமிகுந்தது.'புரோகிதனுக்கு என நான்கனுருபு கோடற்பொருளில் வந்தது. தண்கோதை - அன்மொழித்தொகை (௨எ)

[தமயந்தி புரோகிதனுக்கு நளனைக்கண்டுபிடிக்கு முபாய முரைத்தது.]

349. காரிருளிற் பாழ்மண்ட பத்தேதன் காதலியைச்
சோர்துயிலி னீத்த றுணிவன்றோ — தேர்வேந்
தற், கென்றறைந்தா னேர்நின் றெதிர்மாற்றந்
தந்தாரைச், சென்றறிந்து வாவென்றா டேர்ந்து.

349. Damayanti after consideration spoke thus:—" Return after finding him out who confronts you and gives an answer to the question, ' Was it not courageous in the Chariot-driving king to desert his beloved consort in the thick darkness, leaving her in the ruined Mandapam when sleep had overcome her senses ?'"

(இ - ள்.) கார் இருளில் - கரிய இருளிலே பாழ் மண்டபத்தே—, தன் காதலியை - தன்னுடைய ஆசைகூர்ந்த மனைவியை, சோர்துயிலில் நீத்தல்-மனமோய்ந் திருக்கும்படியான தூக்கத்தில் விட்டுப்போதல், தேர் வேந்தற்கு - தேராளுமரசனுக்கு, துணிவன்றோ -தைரிய மல்லவோ,என்று அறைந்தால் - என்று சொன்னால், நேர் நின்று - எதிரில்நின்று,எதிர்மாற்றம் தந்தாரை-மறுமொழிகொடுத்தவரை, சென்று அறிந்துவா - போய்த் தெரிந்துகொண்டு வா, என்றாள் தேர்ந்து - என்று நிச்சயித்துச் சொன்னாள் (தமயந்தி), எ - று.

இச்சங்கதி தனக்கு மலனுக்குமே தெரிந்த ரகசியமாதலால் குத்துப்பாடாக இதை யெடுத்துரைக்கும்போது அக்குத்துப் பாடு நெஞ்சிலுறைத்து அவனே மறுமொழி கூறலாவா னென்பது தேர்ந்தெதன்பதின் கருத்து. தந்தாரை யென்பது உயர்வினுல் ஒருமையிற்பன்மை. சோர்ந்துயில் — வினைத்தொகைத் தொடர். கருமையான இருள் - காரிருள், கருமை பெருமை, கறுப்புமாம், நெருங்கிய இருட்டு என்றபடி. (உஅ)

350. மின்னாடு மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்னாடுங் கானகமு நாடினன்—மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
யடைந்தா னயோத்தி நகர்.

350. Having travelled over high mountains upon which the lightning played, and over seas, as well as through the good countries surrounded by the seas and through the forests, he entered the town of Oudh, in search of king Nala, who (once) possessed standing and rutting elephants

(இ-ள்.) [அந்தப் புரோகிதன் மின் ஆடும்-மின்னல் விளங்கப்பெற்ற, மால் வரையும் - பெரிய மலைகளிலும், வேலையும் - சமுத்திரத்திலும், வேலைசூழ் நல் நாடும் - சமுத்திரஞ் சூழ்ந்த நல்ல தேசங்களிலும், கானகமும் - காடுகளிலும், நாடினன் - சென்றலைந்த, மன்னு - நிலைபெற்ற, கடம் தாழ் - மதப்பெருக்கு ஒழுகப்பெற்ற, களி யானை காவலனை - மதயானையையுடைய நளமகாராஜனை, தேடி—, அயோத்தி நகர் அடைந்தான் - அயோத்தியா பட்டணத்தைச் சேர்ந்தான், எ-று.

மின் நாடு எனவும் பிரியும், மேகமண்டலத்தை யளாவியது என்றபடி. வேலை என்பது கடனடுவிலுள்ள தீவுகளை.

கடம்—வடசொல், யானைக்கன்னத்தின்பெயர், அதில் வழியும் மதநீருக் காகுபெயராயிற்று. (உகூ)

351. கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப், போனதுவும் வேந்தற்குப் போதுமோ — தானென்று, சாற்றினா னந்தவுரை தார்வேந்தன் றன்செவியி, லேற்றினான் வந்தா னெதிர்.

351. " Is it fit that a king should desert his wife in the forest and in the thick darkness ?" Thus spake (புரோகிதன்) and Nala, having heard those words, confronted him thus.—

(இ - ள்.) கானகத்து - காட்டில், காதலியை - மனைவியை கார் இருளில் - பேரிருளில், கைவிட்டு போனதுவும் - விட்டு நீங்கிய செயலும், வேந்தற்கு போதுமோ என்று சாற்றினான் - அரசனுக்குத் தகுமோவென்று சொன்னான் (புரோகிதன்; அந்த உரை - அந்த வார்த்தையை, தார் வேந்தன்-நளன் தன்செவியில் ஏற்றினான் - தன்காதிற் கொண்டவனாகி, எதிர் வந்தான் - (புரோகிதனுக்கு) எதிரிலே வந்தான், எ - று தான் - அசை. ஓ - எதிர்மறை (௩0)

[எதிரில்வந்து நளன் சொல்லிய மறுமொழி.]

352. ஒண்டொடி தன்னை யுறக்கத்தே நீத்ததுவும் பண்டை விதியின் பயனேகாண்—தண்டாளப் பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே, நீத்தானென் றையுறே னீ.

352. " Consider the desertion in her sleep of the wife adorned with glittering bangles, as the predestined result of Fate, and do not suppose that the king, whose white umbrella is adorned with circlets of cool pearls, abandoned the beautiful maiden in the sultry forest," said Nala.

(இ - ள்-) ஒள் தொடிதன்னை -பிரகாசமான வளையலணிந்த காதலியை, உறக்கத்தே நீத்ததுவும் - தூக்கத்தில் கைவிட்டதும், பண்டை விதியின் பயனே - பழமையான விதியின்

பலனே, கான் - யோசி; தண் தாளம் பூ தாமம் - குளிர்ச்சி யான முத்துக்களின் அழகிய மாலைகள் சூழ்ந்த, வெள் குடை யான் - வெள்ளைக்குடையுள்ள அரசன், பொன்மகளை - பொன் போன்ற பெண்ணை, வெம் வனத்தே நீத்தானென்று - வெப்ப மான காட்டிலே விட்டானென்று, நீ ஐயுறேல் - நீ சந்தேகப் படாதே, எ - று. பொன் - திருமகளுமாம்.

ஐயுறேல் — எதிர்மறை யேவலொருமை. (ருக)

353. எங்க ணுறைந்தனைகொ லெத்திசைபோய் நாடி
னைகொல், கங்கைவள நாட்டார்தங் காவலனை—
அங்குத், தலைப்பட்ட வாறுண்டோ சாற்றென்
றாள் கண்ணீர், அலைப்பட்ட கொங்கையா ளாங்கு

353. Damayanti, upon whose breasts her tears flowed in wavelets, said:—" Tell me where you went. In what corner of the earth did you seek for my husband, the king of the fertile country of Nidatha, surrounded by the water of the Ganges? Did anything relating to this matter happen?"

(இ-ள்.) [இச்செய்தி தெரிந்து குண்டினபுரஞ் சென்ற புரோகிதனை நோக்கித் தமயந்தி] கண்ணீர் - கண்ணீரானது அலைப்பட்ட - அலைகளைகொண் டிருக்கின்ற, கொங்கையாள் - தனங்களையுடையவளாகிய, எங்கண் உறைந்தனை - எங்கேபோ யிருந்தாய், கங்கைவள நாட்டார்தம் காவலனை - கங்கைசூழ்ந்த வளப்பமுள்ள நிடதநாட்டாருடைய அரசனாகிய என் நாயகனை, எத்திசை போய் நாடினை - எந்தத் திக்கிற்சென்று தேடினாய், அங்கு - நீ சென்ற இடங்களில், தலைப்பட்ட ஆறு - சேர்பட்ட வகை, உண்டோ—, சாற்று என்றாள் - சொல் லென்று சொன்னாள். எ - று.

கொல் - இரண்டும், ஆங்கும் - அசை. தலைப்படுதல் - சேர் படுதல். (ருஉ)

354. வாக்கினுன் மன்னவனை யொப்பான் மறித்தொரு
கால், ஆக்கையே நோக்கி னவனல்லன்—பூக்
கமழும், கூந்தலாய் மற்றக் குலப்பாக னென்
றுரைத்தான், ஏந்துநூன் மார்ப னெடுத்து.

354. That Brahmin, who wore upon his breast the sacred thread, said:—" That charioteer, in his speech resembles a king, and again, if we look at his body, he does not appear a king.'

(இ - ள்.) ஏந்தும் நூல் மார்பன் - பூணூலைத் தாங்கிய மார்பையுடைய அந்தப் பிராமணன், பூ கமழுங் கூந்தலாய் - மலர் வாசிக்கின்ற கூந்தலை யுடையவளே, அ குல பாகன்- (நீசொல்லியபடி பரிக்ஷிக்கப்பட்ட) அந்த மேன்மையான தேர்ப்பாகனொருவன், வாக்கினுல் - பேச்சினுலே, மன்னவனை ஒப்பான் - அரசனை ஒத்திருக்கின்றுன், மறிந்து ஒருகால் -திரும்பி யொருதரம், ஆக்கையே நோக்கில் உடம்பை பார்த்தாலோ, அவன் அல்லன் - அரசன் அல்லன், என்று எடுத்து உரைத்தான்- என்று விளங்கக் காட்டிச்சொன்னுன், எ - று மற்று - அசை

பூக்கமழும் — "பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்" என்றதனுல் வன்மையும் தோன்றிபது. (௩௫௪)

355. மீண்டோர் சுயம்வரத்தை வீமன் றிருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைத்தால் —
நீண்ட, கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்
கோலங் கொள்வான், படைவேந்த னென்றுள்
பரிந்து.

355 " O Brahmin! If you go and say to that charitable king that the excellent daughter of Bhima is holding another Swayamvaram ceremony, king Nala the possessor of armies, will come to this distant place in his disguise of a charioteer." Thus spoke Damayanti, with a troubled mind.

(இ-ள்.)[அதைக்கேட்டுத் தமயந்தி] அந்தண - வேதியனே வீமன் திரு மடந்தை - வீமராசனுடைய சிறப்புள்ள மகள், மீண்டு - மறுபடியும், ஓர் சுயம்வரத்தை பூண்டாள் என்று - ஒரு சுயம்வரச்சடங்கை ஏற்றுக் கொண்டாளென்று, நீ போய் உரைத்தால் -நீ போய்ச் சொன்னால், நீண்டகொடை வேந்தற்கு - மிகுந்த ஈகையுள்ள அவ்வரசனுக்கு, படை வேந்தன் - சேனைகளையுடைய நளமகாராசன், இத்தூரம்-இவ்வளவுதூரத்துக்கு, தேர் கோலம் கொள்வான் -தேரோட்டுங் கோலத்தைப்பூண்பான், என்றாள், பரிந்து - என்று இரங்கிச் சொன்னாள், எ - று.

பரிந்து -அன்புகூர்ந்து, என்னவுமாம்- சுயம்வரம்—தானே புருஷனை ஏற்படுத்திக்கொள்ளல். (௩௫௪)

356. எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரச மறைவித்தான்— செங்கோலாய்
அந்நாளு நாளை யளவென்றா னந்தணன்போய்த்
தென்னாளுந் தாரானைச் சேர்ந்து.

356. That Brahmin, having departed, came to the king of Oudh, who wore a garland which excelled all others in beauty, and said:—" O king! A second Swayamvaram is being held for Damayanti, the daughter of our monarch, who has commanded the drum to be beaten The time is within to-morrow."

(இ-ள்,) அந்தணன் போய் - புரோகிதன் போய், தென் ஆளும் தாரானை - அழகை யாளுகின்ற மாலையையுடைய அயோத்தி யரசனை, சேர்ந்து—,செங்கோலாய் - அரசனே, எங்கோன் - எங்களரசன் மகளுக்கு -தன்மகளாகிய தமயந்திக்கு, இரண்டாம் சுயம்வரம் என்று-இரண்டாவது சுயம்வரம் நடக்கின்றதென்று, அங்கு-அவ்விடத்தில், ஓர் முரசம் அறைவித்தான் - ஒரு பேரிகையை யடிக்கச் செய்து, அந்நாளும் - அந்தத்தினமும், நாளை அளவு - நாளைவரையிலிருக்கின்றது, என்றான்,—எ - று.

தென் என்பது இசையுமாம்; ஆகவே வண்டிசைப்பாட்டை யாளுகின்ற தாரான் எனவுமுரைக்கலாம்.

அந்தணன்—அழகிய தண்மையுள்ளவன், தண்மை -குளிர்ச்சி, அதாவது கிருபை; காரண விடுகுறிப்பெயர். அறைவித்தான்—முற்றெச்சம். (௩௫)

357. வேத மொழிவாணன் மீண்டுஞ் சுயம்வரத்தைக்
காதலித்தாள் வீமன்றன் காதலியென் — றோதி
னான், என்செய்கோ மற்றிதனுக் கென்றா னிகல்
சீறும், மின்செய்த வேலான் விரைந்து.

357. புரோகிதன் who was skilled in the Vedas, said:—" The daughter of Bhima wishes for a second Swayam-varam." And to this, the king of Oudh, who was furious against his adversaries, and who possessed a lance which emitted lightning, replied:—" What shall I do in this matter?"

(இ - ள்.) வேத மொழி வாணன் - வேத சாஸ்திரங்களில் வல்லவனாகிய புரோகிதன், வீமன் தன் காதலி - வீமன் மகள், மீண்டும் - திரும்பியும், சுயம்வரத்தை காதலித்தாள் என்று - சுயம்வரத்தை விரும்பினாளென்று, ஓதினான் - சொன்னான், இதனுக்கு என்செய்கோ-இதற்கு என்னசெய்வேன், என்றான் விரைந்து - என்று துரிதப்பட்டுச் சொன்னான், (யாரெனில்) இகல் சீறும் - சத்துருக்களை கோபிக்கின்ற, மின் செய்த வேலான் - மின்னலை யுண்டாக்கும் வேலையுடைய அயோத்தியரசன், எ - று மற்று - அசை.

தமயந்திமறு சுயம்வரத்தை விரும்பினாளென்று புரோகிதன் சொன்னானே அதற்கு என்செய்வேனென்று நளனை நோக்கி அரசன் விரைந்து சொன்னானென்பதாம். செய்கு — தன்மையொருமை எதிர்காலவினைமுற்று; கு - விகுதியே காலங்காட்டும். ஓ— துன்பக்குறிப்பு.

சுயம்வரத்தில்அயோத்தியரசன்தன்மீதுமிக்ககாதல்கொண்டதை யறிந்திருப்பதினுல் தமயந்தி அங்ஙனம் அவனுக்கே தெரிவித்தாள். "ஆசை கொண்டான் பித்தங் கொண்டான்" என்கிற பழமொழிப்படி அவ்வரசன்இச்செய்திமெய்யென்றே நம்பி பிரயாணமானுனென அறிக. நளன்அவனிடத்துத்தேர்ப் பாகனு யிருப்பதனுல் அவசியம் இங்கு வருவான் என்பது முக்கியக்கருத்து. (உசு)

358. குறையாத கற்பினுள் கொண்டானுக் கல்லால்
இறவாத வேந்திழையா ளின்று—பறிபீறி
நெல்லிற் பருவரா லோடு நெடுநாடா
சொல்லப் படுமோவிச் சொல்.

358. "King of the extensive country in which the large வரால் fish, forcing themselves out of the bag into which they are thrown jump into the field of corn, Can Damayanti, whose disposition is full of chastity, and who thinks of no one else save her husband, be capable, this day, of such speech ?"

(இ-ள்.) [அதற்கு நளன் சொன்னது] பறி பீறி-மீன் போடு கின்ற கொடலையைப் மீறிக்கொண்டு, நெல்லில்-நெற்பயிரில், பரு வரால் ஓடும் - பருத்த வரால்மீன் ஓடப்பெற்ற, நெடு நாடா - பெரிய நாட்டையுடைய அரசனே, குறையாத கற்பினுள் - நிறைந்த பதிவிரதா குணமுள்ள, கொண்டானுக்கு அல்லால் - கலியாணஞ் செய்துகொண்டவனுக்கல்லது, இறவாத - (தன்னை) செலுத்தாத, ஏந்திழையாள் - தமயந்தி, இன்று - இன்றைக்கு, இச்சொல் சொல்லப்படுமோ - இந்தப் பேச்சை சொல்லத் தகுவளோ, எ - று.

கற்பினுள் என்னுங் குறிப்புமுற்று ஈண்டு பெயரெச்சமாக் கொள்ளப்பட்டது. (ருஎ)

359. என்மே லெறிகின்ற மாலை யெழிலனளன்றன்
முன்னே விழுந்ததுகாண் முன்னுளில் — அன்

னதற்குக், காரணந்தா னீதன்றோ வென்றான்
கடாஞ்சொரியும், வாரணந்தா னன்னான்மதித்து.

359. The king of Oudh who resembled a rutting elephant esteeming the words of the புரோகிதன் said:—"The garland of flowers intended to be cast on me at the former Swayamvaram fell on the beautiful Nala. Did not that happen in order to cause this second event?"

(இ-ள்.) கடாம் சொரியும் - மதநீரைப் பொழிகின்ற, வாரணம் அன்னான் - யானையையொத்த அயோத்திராசன், மதித்து - (புரோகிதன் பேச்சை) மெய்யாக மேற்கொண்டு, முன் நாளில் - (சுயம்வரம் நடந்த) பூர்வகாலத்தில், என்மேல் எறிகின்ற மாலை - என்னை நோக்கி எறிந்த பூமாலை, எழில் நளன் தன் முன்னே - அழகுள்ள நளமகாராசன் மேலே, விழுந்தது காண்—, அன்னதற்கு - அப்படி விழுந்தசெய்கைக்கு, காரணம் தான்—, ஈது அன்றோ என்றான் - இது அல்லவா என்று சொன்னான், எ - று.

ஈது என்றது மறுதரஞ் சுயவரங் கோடித்தலை. காண் - தான் - அசைகள். காண் - யோசித்துப்பாரெனினு மொக்கும். இது ஈது ஆனது செய்யுள் விகாரம், "எகரவினா" என்னுஞ் சூத்திரத்தில் சுட்டு நீளி னென்பதைக் காண்க.

எறிகின்ற அக்காலநோக்கி இது நிகழ்காலத்திற் கூறப்பட்டது. கடாம்—கடம் என்பதின் விகாரம். (௩௫௯)

[இப்பாட்டினால் அப்போது நளன் சிந்தித்ததைச் சொல்லுகிறார்.]

360. முன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலாள், என்னைத்தான் காண விசைந்ததோ—தன்
மரபுக், கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட, தெவ்வாறு கொல்லோ விது.

360. "Has this happened, thought Nala, in consequence of an action done at a former birth? or has

Damayanti done this only to discover me? By what means have these words, unworthy of her family, spread through the world?"

(இ - ள்.) முன்னை வினையால் முடிந்ததோ - சன்மாந்தர கர்மத்தினால் நிறைவேறியதோ, மொய் குழலாள் - தமயந்தி, என்னைக் காணத்தான் இசைந்ததோ - என்னைக் கண்டுபிடிக்கத்தான் செய்யலாயிற்றோ, தன் மரபுக்கு - தன் வமிசத்துக்கு, ஒவ்வாத வார்த்தை இது-ஒத்திராத பேச்சாகிய இது, உலகத்து உரைப்பட்டது - உலகத்தில் வழங்கியது, எவ்வாறு கொல்லோ - எவ்விதத்தி லானதோ, எ-று.

கொல் — ஐயப்பொருளில் வந்தது. ஓ - அசை. மொய்குழலாள்—மொய் - நெருங்கிய, குழலாள் - கூந்தலையுடையவள், வினைத்தொகை. (நுக)

361. காவலனுக் கேவற் கடன்பூண்டேன் மற்றவன்
றன், ஏவன் முடிப்ப னினியென்று — மாவிற்,
குலத்தேரைப் பூட்டினான் கோதையர்தங் கொங்
கை, மலர்த்தே னளிக்குந்தார் மன்.

361. "I have accepted to serve the king and therefore I shall here after do the work he commands." Thus soli - loquizing Nala, who was adorned with a garland, from the flowers of which, the dripping honey moistened the breasts of maidens, harnessed the horses to the beautiful chariot.

(இ-ள்.) காவலனுக்கு - இவ்வரசனுக்கு, ஏவல் கடன் பூண்டேன் - ஏவல்செய்யுங் கடமையை ஒத்துக்கொண்டேன் (ஆதலில்,) இனி - இனிமேல், அவன்தன் ஏவல்-அவனிடைய ஏவற்பணியை, முடிப்பன்-நிறைவேற்றுவேன், என்று—, கோதையர்தம் கொங்கை - பெண்களுடைய முலைகளில், மலர் தேன் துளிக்கும் - பூக்களிலிருக்கிற தேன் துளித்து விழும்படியான, தார்மன் - மாலையணிந்த நளமகாராசன், மாவின் - குதிரைக

ளோடு, குலம் தேரை பூட்டினான் - மேலான தேரை இணைத்தான், எ - று. மற்று - அசை. (சo)

362. ஒற்றைத் தனியாழித் தேரென்ன வோடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன் — மற்றி
தற்கே, போந்தேறு கென்றுரைத்தான் பொம்
மென் றளிமுரலத், தீந்தேறல் வாக்குந்தார்ச்
செய்.

362. King Nala, who wore a garland which poured forth honey, as the bees swarmed about it, buzzing, said:—'I have brought you a great victorious chariot which, in speed, can equal the single and matchless wheeled chariot of the Sun. Come and get into it.'

(இ - ள்.) பொம் என்று - பொம் என்னு மோசையொடு, அளி முரல் - வண்டுகள் சப்திக்க, தீ தேறல் வாக்கும்-மதுரமான தேனை ஊற்றுகின்ற, தார் - பூமாலையணிந்த, செய் - நளமகாராசன், ஒற்றை தனி ஆழி - ஒன்றாகிய ஒப்பற்ற உருளையை யுடைத்தான, தேர் என்ன - (சூரியனுடைய) தேரைப் போல், ஓடுவது - ஓடத்தக்க, ஓர் கொற்றம் நெடு தேர் கொடு வந்தேன் - ஒரு ஜயம் பொருந்தின பெரியதேரை, கொண்டு வந்தேன், இதற்கு - இத்தேரில், போந்து ஏறுக என்று உரைத்தான் - வந்து ஏறக்கடவாயென்று சொன்னான், எ - று. ஏ - மற்று - அசை.

நளன் அவ்வரசனை நோக்கிஎன்னசெய்வே னென்றுவிசாரப் படுவதை யொழித்து இந்த மேன்மையானதேரில் ஏறிக்கொள் காரியசித்தியாகுமென்றான் என்பதாம். ஆகவே மற்று—வினை மாற்றில் வந்ததெனக் கொள்ளலாம்.

ஒற்றை = ஒன்று ; இந்த மென்றொடர்க் குற்றியலுகரம் "மென்றொடர்மொழியுள்" என்கிற சூத்திரத்தினால் வன்றொடராகி "ஐயீற்றுடைக்குற் றுகரமுளவே" என்பதனால் ஐகாரச்சாரியை பெற்றது. இரட்டையு மிப்படியே. (சக)

363. முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினுங்கடுகச் சென்றதே — சந்தவிரைத்
தார்குன்று மெல்லோதி தன்செயலைத் தன்மன
த்தே, தேர்கின்று னூர்கின்ற தேர்.

363. Understanding, in his mind, this act of Dama-yanti, whose soft tresses were filled with beautiful and fragrant garland, and forming his resolution, Nala pressed by the acts of his former birth, drove the chariot swifter even than the unquenchable desires in the mind of the king of Oudh.

(இ-ள்) சந்த விரை தார் - அழகும் வாசனையுமுள்ள மாலைகள், குன்று - குறையாத, மெல் ஓதி தன் செயலை - மெல்லிய கூந்தலையுடைய தமயந்தியின்செய்கையை, தன் மனத்தே தேர்கின்றான் - தன்மனதிலே நிச்சயித்துத் தெளிந்த நளமகாராசன், ஊர்கின்ற தேர் - ஏறிச்செலுத்துகின்ற ரதம், முந்தை வினை குறுக - பூர்வ கருமம் நெருங்கினதனால், மூவா மயல் கொண்டான் - தேயாத ஆசை (அல்லது) மயக்கங்கொண்ட ருதுபர்ணனுடைய, சிந்தையினும்-மனதைக்காட்டிலும், கடுக சென்றது - சீக்கிரம் ஓடிற்று,, எ-று. ஏ - அசை.

ருதுபர்ணன் என்பது அயோத்தியாசன்பெயர். இரண்டாஞ் சுயம்வரம் அசம்பவமென்றும் அப்படியானாலும் தன்னையே வரிப்பது சதமன்றென்றும் நினையாமல், அவன் மயல்கொண்டது முந்தைவினைப்பயனென்றபடி. உம்மை— ஆசை மயக்கங்களால் கடுகச்செல்கிறதென்னுஞ் சிறப்பில் வந்தது. சிந்தையின் — இதில் இன் உருபு எல்லைப்பொருளில் வந்தமெனக் கொள்க.

364. மேலாடை வீழ்ந்த தெடுவென்று னவ்வளவில்
நாலாறு காத நடந்ததே—தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதி
மால்கொண்டான் கோல்கொண்ட மா. [ன்

364. " My upper garment has fallen off, pick it up," said the king who esteemed it an honor not to yield to one's enemies, as he rode in his chariot But by this time, Nala, whose mind was turned by the deceit of the angry Kali, plying the whip, had driven the horses a distance ef 4 or 6 kathams. [காதம்=10 miles.]

(இ - ள்.) தோலாமை - எதிரிக்குத் தோற்காதிருப்பதை, மேல்கொண்டான்-மேலாகக்கொண்ட ருதுபர்ணன், ஏறிவர - ஏறிவருகையில், மேலாடை வீழ்ந்தது எடு என்றான் - மேலே தரித்த வஸ்திரங் கீழே வீழ்ந்தது (அதை) எடு வென்று சொன்னான் (அயோத்தியரசன்,) அவ்வளவில் - அந்தக் காலத்துக்குள், வெம்மை கலி சூதின் - கோபமுள்ள கலியின் வஞ்சனையினால், மால்கொண்டான் - மயக்கங் கொண்டநளன், கோல் கொண்ட - சாட்டிகொண்டு தூண்டிய, மா - குதிரை, நாலு ஆறு காதம் நடந்தது - நான்கு (அல்லது) ஆறுகாதவழி ஓடிற்று, எ - று. ஏ - அசை.

நாலாறு - இருபத்து நான்கு என்னவுமாம். குதிரை—சாதியொருமை. மேல்கொண்டான் - தன்னிடத்திற்கொண்டான் எனவு முரைக்கலாம்; இது ஏழாம்வேற்றுமைத் தொடர். முன்னது குறிப்புவினையெச்சத்தொடர். இரண்டுவிதத்திலும் "குறில்செறியாலள" என்கிறவிதியால் லகரம் இயல்பாயிற்றென்றறிக. (சரு)

365. இத்தாழ் பணையி லிருந்தான்றிக் காயெண்ணிற்
பத்தா யிரங்கோடி பாரென்ன—உய்த்ததனில்
தேர்நிறுத்தி யெண்ணினான் றேவர் சவைநடுவே
தார்நிறுத்துந் தோள்வேந்தன் றான்.

365. " Look, if you count the fruits of this huge தான்றி tree, which is on this low field, they will amount to 10,000 crores," said the king of Oudh. And Nala, whose shoulders received the marriage garland in the midst of

the assembly of gods, having halted the chariot in that field, counted them carefully.

(இ-ள்.) (இங்ஙனம் போய்க்கொண்டிருக்கையில்) இத்தாழ் பணையில் - இந்தத் தாழ்மையான வயலில், இரு தான்றி காய் எண்ணில் - பெருமையான தான்றிமரத்தின் காய்களை எண்ணிப்பார்த்தால், பத்து ஆயிரம்கோடி-பதினாயிரங்கோடி, பார் என்ன - சோதித்துப்பாரென்று (அயோத்தியரசன்) சொல்ல, தேவர் சவை நடுவே - தேவருடைய சபையின்மத்தியிலே, தார் நிறுத்தும் தோள் வேந்தன் - மணமாலை நிற்கச் செய்யப் பெற்ற தோளையுடைய நளமகாராசன், அதனில் தேர் நிறுத்தி - அவ் வயலினிடத்தே தேரை நிற்கச்செய்து, உய்த்து எண்ணினான் - கூர்மையாகப் பார்த்து எண்ணினான், எ - று. தான் - அசை.

கொடி—கொள் என்ற ஏவல்முற்றுமாம். அதனை எச்சமாவைத்து நீ என்பேச்சைக் கொண்டுபார் எனவுமுரைக்கலாம். கொள் - பகுதி, இ - விகுதி, த் - எழுத்துப்பேறு, தி - விகுதி என்னலாம், பகுதி முதல் நீண்டது. "குறில்செறியாலள" என்பதினால் ளகரங்கெட்டது. "ணளமுன்டணவும்" என்கிற விதியால் த் ட் ஆனது. (௬௫)

366. ஏரடிப்பார் கோலெடுப்ப விண்டேன் றொடை
பீறிக், காரடுத்த சோலைக் கடனாடன்—தேர
டுத்த, மாத்தொழிலு மித்தொழிலு மாற்றுதி
யோ வென்றுரைத்தான், தேர்த்தொழிலின் மிக்
கானைத் தேர்ந்து.

366. The king of the country adjoining sea and surrounded by groves, where the men who drive ploughs, lifting up their sticks, strike the bunches of flowers above them, so that the honey which bursts forth reaches the clouds, esteeming Nala who excelled in the art of chariot-driving, said—"Would you exchange the art of driving the chariot for the art of counting these fruits?"

(இ-ள்.) ஏர் அடிப்பார்-உழவுமாடுகளைத் துரப்பவர், கோல் எடுப்ப - தாற்றுக்கோலை உயரவெடுக்கையில், இன் தேன் தொடைபீறி- இனிமையான தேனுளது பூங்கொத்தைப்பீறிக் கொண்டு, கார் அடுத்த-மேகத்தைச் சேரப்பெற்ற, சோலை - சோலைகள் சூழ்ந்த, கடல் நாடன் - சமுத்திரமடுத்த நாட்டை யுடைய ருதுபர்ணன், தேர் தொழிலின் மிக்கானை -தேரோட் டுந் தொழிலில் மேன்மையான நளனை, தேர்ந்து - மதித்து தேர் அடுத்த மா தொழிலும் - தேரிற்கட்டிய குதிரையோட் டுந் தொழிலையும், இத் தொழிலும்-இந்தக் காயெண்ணுந் தொழிலையும், மாற்றுதியோ என்று உரைத்தான் - மாற்றிக்கொள் ளுகிறாயா வென்று சொன்னான், எ - று.

என் கல்வியை யுனக்குக் கற்பிக்கின்றேன் உன் கல்வியை எனக்குக் கற்பிக்க வுடன்படுகிறையா என்றான் என்றதாம் ஏரடிப்பார் எடுத்த கோல் தாக்கிச் சோலைக்கண் பூங்கொத்தி னுள்ள தேன் அவைகளைப்பீறி யெழும்பி அச்சோலையிற் படிந் திருக்கிற மேகத்தைச் சேர்கின்றதென நாட்டின் சிறப்பை அதிசய அணியாகக் கூறினார். அந்நாட்டின் கிழக்கெல்லை கடற் கரை வரைக்கும் போலும். (சரு)

367. வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோ
மான், தண்டார் புனைசந் திரன் சுவர்க்கி—கொ
ண்டாடும், பாவலன்பா னின்ற பசிபோல நீங்கி
ற்றே, காவலன்பா னின்ற கலி.

367. Kali departed from king Nala, as the hunger departs from those poets who were exalted by our king Chandra Swarki, who is adorned with cool garlands, and who rules the country of Malwa, which abounds in beetles and which is surrounded by fertile fields.

(இ - ள்,) வண்டு ஆர் - வண்டுகள்நிறைந்த, வளவயல் சூழ் வளப்பமான வயல்கள் சூழ்ந்த, மள்ளுவ நாட்டு - மள்ளுவ நாட்டையாள்கின்ற, எம் கோமான்-எம்முடைய அரசனாகிய தண் தார் புனை - குளிர்ச்சியான பூமாலை யணிந்த, சந்திர,

சுவர்க்கி—, கொண்டாடும் - மேன்மைப்படுத்துகின்ற, பாவலன்பால் நின்ற - கவியினிடத்தி லிருந்த, பசி போல - பசியைப்போல், காவலன்பால் நின்ற கலி - நளமகாராசனிடத்திருந்த கலிதோஷம், நீங்கிற்று - தீர்ந்தது, எ - று. ஏ-அசை

அவ்வரசனிடத் திருந்து நளன் அக்ஷ இருதயம் என்னும் வித்தையைக் கற்றான்; அவ்வித்தை சொக்கட்டா ஞட்டம் மரத்தின் இலை காய்களை யெண்ணல் இவையெல்லாம் வல்லது ஆதலின் கலியின் வல்லமை இவன் கையில்வரக் கலி நீங்கினானென்பது கருத்து. இதை ஸ்ரீமகாபாரதத்தாலுணர்க. கலி இங்கு பாவல னென்று ஒருமையாற் கூறியது தன்னையென்பர் சாதியொருமை எனக்கொண்டு பலருக்கு மாக்கலாம். (சகூ)

368. ஆமை முதுகி லலவன் றுயில்கொள்ளும், காமர்
நெடுநாடு கைவிட்டு—வீமன்றன், பொன்னகரி
சென்றடைந்தான் போர்வேட் டெழுங்கூற்றம்,
அன்னகரி யொன்றுடையா னங்கு.

368. The king of Oudh who possessed an elephant which resembled Yama, who rises desirous for war, left the large and beautiful country where the crabs sleep on the backs of the turtles, and arrived at the splendid capital of king Bhima.

(இ - ள்.) போர் வேட்டு - யுத்தத்தை விரும்பி, எழும் கூற்றம் அன்ன-எழுகின்ற யமனையொத்த,கரிஒன்று உடையான்-ஒரு யானையையுடைய அயோத்தியரசன், ஆமை முதுகில் - ஆமைகளின் முதுகுகளில், அலவன் துயில்கொள்ளும்- நண்டுகள் தூங்கப்பெற்ற, காமர் நெடு நாடு - அழகான பெரிய நாட்டை, கைவிட்டு - நீங்கி, வீமன் தன் பொன் நகரி - வீமராசனுடைய பொன்பெருத்த பட்டணத்தை, சென்று அடைந்தான் - போய்ச் சேர்ந்தான், எ - று. ஆங்கு - அசை.

வேட்டு—வேள் - பகுதி, உ - விகுதி, ட் - இடைநிலை, ள் ட் ஆனது சந்தி (சஎ)

369. வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயின்
முற்றத் திருத்தி முறைசெய்யுங் — கொற்றவற்
குத், தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்விரவு தாரான் மகிழ்ந்து.

369. Having caused his victorious and matchless chariot to be stopped in the yard of king Bhima's palace, ருதுபர்ணன் commanded his arrival to be annouuced to the king, who administered justice; and rejoicing, sought a retired spot.

(இ - ள்.) வெற்றி தனி தேரை - ஜயமுள்ள தனிமையான தேரை, வீமன் பெரு கோயில் முற்றத்து-வீமனுடைய பெரிய அரமனையின் முன்றிலிலே, இருத்தி-இருக்கச்செய்து, [நிறுத்தி,] முறை செய்யும் கொற்றவற்கு - நியாயத்தை நடத்து மரசனுக்கு, தன் வரவு கூற பணித்து-தான் வந்ததைச்சொல் லும்படி கட்டளையிட்டு, மன் விரவு தாரான்-பெருமைசேர்ந்த சேனையையுடைய ருதுபர்ணன், மகிழ்ந்து - சந்தோஷித்து, தனி புக்கான் - தனியிடஞ் சென்றான், எ - று.

தார் - மாலை யெனவுங் கொள்ளலாம். முற்றம் - வீட்டி னெதிர்ப்புறம். மகிழ்ச்சி, சுயம்வரநாள் தப்பாது வந்தோ மென்பதனாலாகியது. (சக)

370. கன்னி நறுந்தேறன் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு — பின்னையும்போய்
நெய்தற் கவாவு நெடுநாட நீயென்பால்
எய்தற் கவாவியவா றென்.

370. "O king of the great country where the winged bees, which retire to sleep on the lotus flowers after imbibing the fresh fragrant honey, again seek after the black நெய்தல் what is the desire which causes you to come to me?" said Bhima.

(இ - ள்.) [ருதுபர்ணனை வீமன் வினவியது.] கன்னி நறு தேறல் மாந்தி - இளமையான வாசனையுள்ள தேனைக்குடித்து கமலத்தில் மன்னி - தாமரைமலரில் பொருந்தி, துயின்ற வரி வண்டு - தூங்கின இரேகைகளுள்ள வண்டுகள், பின்னையும் போய் - மறுபடியும்போய், நெய்தற்கு அவாவும்- கருநெய்தற் பூவை விரும்புகிற, நெடு நாட - பெரியதேசத்தரசனே, நீ என் பால் எய்தற்கு - நீ என்னிடம் வருவதற்கு, அவாவிய ஆறு என் - அபேக்ஷித்த விதமென்ன, எ - று.

குவ்வுருபு செயப்படுபொருளில் தகுதியாய் வந்தது. (சகூ)

371. இன்றுன்னைக் காண்பதோ ராதரவால் யானிங்
ஙன், மன்றன் மலர்த்தாராய் வந்தடைந்தேன்—
என்றான், ஒளியார்வேற் கண்ணாண்மே லுள்ளந்
துரப்பத், தெளியாது முன்போந்த சேய்.

371. The prince ருதுபர்ணன் who advanced, his mind becoming irresolute at the thought of Damayanti, who possessed bright lance-like eyes, said:—" O thou, adorned with fragrant garlands! I have come here, this day, with a desire to see you."

(இ - ள்.) ஒளி ஆர் வேல் கண்ணாள் மேல் - காந்தி நிறைந்த வேல்போன்ற கண்ணையுடைய தமயந்தியினிடத்தில், உள்ளம் துரப்ப - மனஞ் செலுத்துவதனால், தெளியாது-தெளிவில்லாமல் [மயங்கி,] முன் போந்த சேய்-முன்னிட்டுவந்த ராசகுமாரன் [ருதுபர்ணன்], மன்றல் மலர் தாராய் - பரிமளமுள்ள பூமாலையுடையவனே, உன்னை காண்பது ஓர் ஆதரவால் - உன்னைக் காணும்படியான ஓராசையினால், யான்-, இன்று இங்ஙன் வந்து அடைந்தேன்-இன்றைக்கு இவ்விடம்வந்து சேர்ந்தேன் என்றான்—, எ - று.

இன்று, இங்ஙன்,—இடைச்சொற்கள்; பெயரெனக் கொள்வாருமுளர். (ருo)

372. ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதி லடிசிற் குறைமுடிப்பான் — மேதிக்
கடைவாயிற் கார்நீலங் கண்விழிக்கு நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து.

372 The king of the country of Nidatha, where the black நெய்தல் blossoms at the corner of the buffaloes mouth, having unharnessed and rested the horses of the excellent huge chariot, entered the kitchen, intending to finish the remaining work of cooking which is free from all defect.

(இ - ள்.) மேதி கடை வாயில் - எருமையின் கடைவாயிலே, கார் நீலம் கண் விழிக்கும் நாடன் - கருநெய்தற்பூ மலரப்பெற்ற நிடதநாட்டரசன, ஆதி நெடு தேர் பரி விட்டு - முதன்மையான பெருந் தேரிற் பூட்டியகுதிரைகளை யவிழ்த்துவிட்டு அவை ஆற்றி - அவைகளை இளைப்பாறுவித்து, கோது இல் அடிசில் குறை - குற்றமில்லாத சோறு சமைப்பதாகிய குறையை, முடிப்பான் - முடிக்கும்பொருட்டு, மதித்து - யோசித்து, மடைவாயில் - மடைப்பள்ளியி னிடத்தில், புக்கான் - பிரவேசித்தான், எ - று.

முதல் வேந்தர் இக்ஷுவாகு வமிசத்தரே யாதலால், அம்மரபில்வந்த தேரை ஆதித்தேர் என்றார்; அரசன்தேர் எனினுமொக்கும். மேதிக்கடைவாயிலே நீலம் கண்விழிப்பது என்பது எருமை தின்னும்போது மலர்வதென்பதாம். மடை — மடுக்கப்படுவது; மடுத்தல்=உட்கொள்ளல், தின்னல். (௩௱௭௰௨)

373. ஆதி மறைநூ லனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல் — யாதும்
நிரப்பாம லெல்லா நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை.

373. Like the mind of the great, who rule the path of justice. and have learnt all the ancient Vedas, the house into which Nala the excellent driver of the beautiful cha-

riot entered, and which before was empty, become filled with every variety of materials requisite.

(இ - ள்.) ஆதி மறைநூல் அனைத்தும் - முதன்மையான வேத சாஸ்திரங்க ளெல்லாவற்றையும், தெரிந்து உணர்ந்த - ஓதி யறிந்திருக்கிற, நீதி நெறியாளர் - நீதிவழியாள்கின்ற பெரியோர்களுடைய, நெஞ்சம்போல் - மனதைப்போல, பொன் தேர் - அழகிய தேரினது, வரம் பாகன் புக்க - சிறந்த பாகனாகிய நளன் பிரவேசித்த, மனை - வீடு, யாதும் நிரம்பாமல் - எதையும் (ஏவலாட்கள்) நிறைக்காமலிருக்க, எல்லாம் நிரம்பிற்று - எல்லாப்பண்டமும் நிறைந்தது, எ - று. ஏ - அசை.

நெஞ்சம்போல் நிரம்பிற்றெனக் கூட்டுக. மறைநூல் - மறைகளாகிய நூல், அல்லது மறையும் நூலும். (௫௨)

374. இடைச்சுரத்திற் றன்னை யிடையிருளி னீத்த,
கொடைத்தொழிலா னென்றயிர்த்த கோமான் —
மடைத்தொழில்கள். செய்கின்ற தெல்லாந் தெ
ரிந்துணர்ந்து வாவென்று, னைகின்ற நெஞ்சா
ணயந்து.

374. Damayanti, whose mind was weighed down by sorrow, and who doubted whether this was the large-hearted Nala who deserted her at midnight in the midst of the desert, said affectionately to one of her attendants, " Go, and take notice of the different ways in which he cooks, and eats."

(இ - ள்.) நைகின்ற நெஞ்சாள் - விசனத்தினால் தளர்கின்ற மனமுள்ள தமயந்தி, நயந்து - விரும்பி, [பிரியமாகப்பேசியென்கிறபடி,] இடை சுரத்தில் - பாலைவனத்தின் நடுவிலே, இடை இருளில் - நடு ராத்திரியில், தன்னை நீத்த - தன்னை விட்டுப்போன, கொடை தொழிலான் என்று - உதார குணமுள்ள நளனென்று, அயிர்த்த - சந்தேகிக்கப்பட்ட, கோமான் - நளமகாராசன், மடை தொழில்கள் - சமைக்கும்

காரியங்களை, செய்கின்றதெல்லாம் - செய்யும் வகையையெல்லாம், தெரிந்து உணர்ந்து வா என்ருள் - உன்னிப் பார்த்து அறிந்துவா வென்று சொன்ஞள் (ஒருவனை), எ - று.

[பொதுவியல் சகூ - ஆய் - சூ.] விதியினுல் அயிர்க்கப்பட்ட என்கிற செயப்பாட்டு வினைஅயிர்த்த என்று செய்வினைபோல் வந்தது. செய்கின்றதெல்லாம்—ஒருமை பன்மை மயக்கம். இவ்வாறு ஆங்காங்கு வருவதையுங் கண்டுகொள்க. (௫௩)

375. கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதி யரச னருகாகப்—போத
விளையாட விட்டவன்றன் மேற்செயனு டென்
ருள், வளையாடுங் கையாண் மதித்து.

375. Damayanti, upon whose hands the bangles shook, thinking highly of that charioteer sent her garland-bedecked son, who was able to bear a lance, and his sister, to go and play near king Nala and to find out his noble qualities.

(இ - ள்.) வளை ஆடும் கையாள் - வளையலாடிக்கொண்டிருக்கிற கையையுடைய தமயந்தி, மதித்து - (அப்பாகனை) விசேஷமாக நினைத்து, கோதை நெடு வேல் குமரனையும் - மாலையணிந்த பெரிய வேல் தரிக்கத்தக்க குமாரனையும், தங்கையையும் - (அந்தக் குமாரனுடைய) தங்கையையும், ஆதி அரசன் அருகு ஆக - நளமகாராசன் சமீபமாக, போத - போய், விளையாடவிட்டு -, அவன்றன் - அவ்வரசனுடைய, மேல் செயல் - மேலாகிய செய்கைகளை, நாடு என்ருள் - பார்த்து அறி என்று சொன்ஞள், எ - று.

தன் மகனையும் மகளையும் அப்பாகனருகேவிளையாட விட்டு அவன் செய்கைகளை யறியும்படி சொன்ஞளென்பதாம். போத என்பதை, போக அல்லது புகுத என்பதின் திரிபெனக் கொள்க. இது செய்தெனெச்சத்திரிபு. (௫௪)

376. மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிராய்ப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா— மக்காணீர்

என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்று
ரைத்தான், வன்மக் களியானை மன்.

376. Nala, who possessed warlike and rutting elephants, seeing his children before him, became troubled in mind, and, heaving a hot sigh, went and took them up, and embraced them with his heroic shoulders, exclaiming "O children! you resemble my offsprings. Whose children are you?"

(இ - ள்.) வன்மம் - பகைக்குணமுள்ள, களி யானை - மதயானையையுடைய, மன் - நளமகாராசன், மக்களை முன் காணு - புத்திரரை எதிரில் கண்டு, மனம் நடுங்கா - இதயம் நடுங்கி, வெய்து உயிரா - வெப்பமாக மூச்செறிந்து, புக்கு எடுத்து - போய் எடுத்து, வீரம் புயத்து அணையா - வீரத்தன்மையுள்ள புசங்களாலே அணைத்து, மக்காள் - மக்களே, நீர் என்மக்கள் போல்கின்றீர் - நீங்கள் என்புத்திரரைப்போ லிருக்கிறீர்கள், யார் மக்கள் - யாருடைய குமாரர், என்று உரைத்தான் -, எ - று.

மக்காள் - ஈற்றயல்நீட்சி விளியுருபாயிற்று. காணு முதலியவை செய்யா என்னும் வாய்பாட்டு எச்சம். மனநடுங்கா - சினை வினையாதலின் முதல்வினை கொண்டது. வெய்து-இங்கு வினையுரி. வன்மம் - வல் - பண்படி, பகுதி, அம் - தொழிற் பெயர் விகுதி, மகரம் எழுத்துப்பேறு. (௫௫)

377. மன்ன னிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக — இந்
நகர்க்கே, வாழ்கின்றோ மெங்கள் வளநாடு மற்
றொருவன், ஆள்கின்றா னென்றா ரழுது.

377. Those children weeping, replied:—"We are the children of the great king Nala who protects the inhabitants of the country of Nidatha. As that king deserted our mother in the forest, we are living in this town. Another is ruling our fertile conntry."

(இ - ள்.) மன்னன் நிடதத்தார் - மகாராஜனாகிய நிடத தேசத்தார், வாழ் வேந்தன் - வாழ்கிறதற்குக் காரணமாகிய நளச்சக்கிரவர்த்தியினுடைய, மக்கள் யாம் - குமாரர்கள் நாங்கள், அவன் - அந்தச் சக்கிரவர்த்தி, அன்னை தனை - (எங்கள்) தாயை, கான் விட்டு ஏக - காட்டில் விட்டுப்போனதனால், இந்நகர்க்கே வாழ்கின்றோம்-இந்தப் பட்டணத்திலேயே இருக்கிறோம், எங்கள் வள நாடு-எங்களுடைய வளப்பமான நாட்டை, மற்றொருவன் ஆள்கின்றான்—,என்றார் அழுது-என்று அழுது சொன்னார்கள் (அம்மக்கள்), எ - று.

நகர்க்கு—கு உருபு கண்ணுருபு ஆம். நகர்க்கே—ஏ - பிரிநிலை, எங்கள் நகர்க்குப் போகாமல் என்றபடி. (௫௬)

378. ஆங்கவர் சொன்ன வுரைகேட் டழிவெய்தி
நீங்கா வுயிரோடு நின்றிட்டான்—பூங்காவில்
வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாடன்
உள்ளம்போற் கண்ணீ ருகுத்து.

378. The king of the excellent country of Nidatha where the கோங்கு flowers in the groves resemble cups, hearing these words of the children, became faint, his tears flowing like his mind, and stood there, his life alone clinging to him.

(இ - ள்.) பூ காவில் - பூந்தோட்டங்களில், வள்ளம் போல்- கிண்ணங்களைப்போல, கோங்கு மலரும் - கோங்கம்பூ மலரப் பெற்ற, திரு நாடன் - மேன்மையான நிடதநாட்டை யுடையவன், ஆங்கு-அப்படி, அவர் சொன்ன உரைகேட்டு - அம்மக்கள் சொன்ன பேச்சைக் கேட்டு, அழிவு எய்தி - (ஒன்றுந் தோன்றாம லிருக்கும்படியான) சோர்வை யடைந்து, உள்ளம் போல் - மனதைப் போல், கண்ணீர் உகுத்து - கண்ணீரை உதிரச்செய்து, நீங்கா உயிரோடு - உடம்பைவிட்டு நீங்கமாட்டாத பிராணனோடு, நின்றிட்டான் - நின்றிருந்தான், எ - று

"உள்ளம்போற் கண்ணீருகுத்து" என்பது அழிவெய்தியதனால் மனஞ் சோரவிட்டதுபோல் கண்ணீரையுஞ் சோர

விட்டென்று வர்ணியங்களி லொன்றையே உபமான மாகக் கூறிய வர்ணியோபமையணி. மனதையும் உகுத்தான் கண்ணீரையும் உகுத்தானென்பது கருத்து. நீங்காவுயிரோடு நின்றான் என்றதனால் உயிர் நீங்காக்குறை யொன்றேயன்றி மற்றச் செய்கைகள் நீங்கிக் கம்பம்போல் நின்றானென்றதாயிற்று .()

379. உங்க ளரசொருவ னாளநீ ரோடிப்போ
இங்க னுறைத லிழுக்கன்றோ—செங்கை
வளவரசே யென்றுரைத்தான் மாதவத்தாற்பெ
இளவரசை நோக்கி யெடுத்து. [ற்ற

379. Taking up the young prince, whom he had begotten with great penance, Nala addressed him saying:—"O beautiful prince possessing fair hands! Is it not mean in you to run away and live here while another rules your kingdom ?"

(இ - ள்) மாதவத்தால் பெற்ற-பெருந்தவத்தினாலீன்ற, இள அரசை - இராசகுமாரனை, எடுத்து நோக்கி—, செங்கை வள அரசே - சிவந்தகையையுடைய வளப்பமான ராசகுமாரனே, உங்கள் அரசு ஒருவன் ஆள - உங்கள் ராச்சியத்தை மற்றொருவன் ஆளாநிற்க, நீ - நீங்கள், ஓடி போந்து - ஓடிப் போய், இங்கன் உறைதல் - இங்கே இருப்பது, இழுக்கு அன்றோ - தாழ்மையல்லவோ, என்று உரைத்தான்—,(நளன்), எ - று.

"செங்கைவளவரசே" என்றது, ஆளுதற்குரிய லக்ஷணங்களைக் குறித்தபடி. (௫௮)

380. நெஞ்சாலும் மாற்ற நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ மன்ன ரடுமடையா—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலா யெங்கோமா
வாய்மையே கண்டாய் வலி. [ன்

380. "O thou, fit only for cooking in a kitchen ? O thou, who dost a work full of meanness! Kings will fear

to say these words that you say. Know that, to our king Nala, truth is strength."

(இ - ள்.) அடும் - சமைக்கின்ற, மடையா - மடைப்பள்ளிக் குரியவனே, எஞ்சாது - குறையாமல், தீமையே கொண்ட - கோட்டையே யுடைத்தாயிருக்கிற, சிறு தொழிலாய் - அற்பத் தொழில் செய்பவனே, நெஞ்சால் நினைத்து - மனத்தினுலே சிந்தித்து, இம் மாற்றம் உரைக்க - இந்தப்பேச்சைப் பேச, நீ அல்லது - நீ யல்லாமல், மன்னர் அஞ்சாரோ - அரசர் பயப் படார்களோ, எங்கோமான் - எங்களரசனுகிய நளச்சக்கிரவர்த் திக்கு, வாய்மையே வலி - சத்தியமே பலம், கண்டாய்—, எ - று.

கூறிய நிந்தையைச் சகியாமல், அப்பாலகர், நீ கீழோ னுதலால் துணிந்து இவ்வாறு சொன்னுய், மேன்மையான ஆட்சித்தொழில் செய்யும் அரசர்கள் சொல்லார்கள். எம்மரச னுகிய சக்கிரவர்த்தி ஆண்மை யில்லாமையாலன்று நாட்டைப் பிறனுக்குக் கொடுத்தது, சத்தியத்திற்காக என நீ அறிந்து கொள் என்று நியாயங்கூறினுர்கள். மடை—சோறு - பகுதி அன் - விகுதி, ஈறுகெட்டு அயல் நீண்டது விளியுருபு. (ருக)

381. எந்தை கழலிணையி லெம்மருங்குங் காணலாம்
கந்து சுளியுங் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியிற் றேய்ந்த வடு.

381. You may see on all sides of both my father's feet, the marks left by the jewelled crowns of the just sovereigns, who riding on the male elephants which, when chained to their pegs, are angry at the restraint, rule the world which is supported on the head of the serpant ஆதிசேடன்.

(இ - ள்.) கந்து சுளியும் - கட்டுத்தறிகளோடு கோபிக்கிற, கடா களிற்றின் வந்து - ஆண் யானைகளின்மேல் ஏறிவந்து

பணி முடியில் பார் காக்கும் - ஆதிசேடன் தலைமேலிருக்கிற பூமியை யாளுகின்ற, பார் வேந்தர் தங்கள் - முறைமையுள்ள அரசருடைய, மணி முடியின் - இரத்தின கிரீடங்களால், தேய்ந்தவடு-தேய்வதனாலாகிய அடையாளத்தை,எந்தை கழல் இணையில் - எம் தந்தையாகிய சக்கிரவர்த்தியின் இருபாதங்களிலும், எம் மருங்கும் காணலாம்-எந்தப்புரத்திலும் பார்க்கலாம், எ - று.

இவ்வாறு அச்சிறுவர் தகப்பனார் சகல ராசாக்களும் பணியப்பெற்ற சக்கிரவர்த்தியென்று சொல்லிச் சத்தியத்திற்காக அல்லது வலியின்மையாலன்று நாடு கைவிட்ட தென்பதைக் குறிப்பாய் நிலை நாட்டினார்கள். (௯0)

382. மன்னர் பெருமை மடைய ரறிவரோ
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருள லென்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண்.

382. “Can menials understand the greatness of kings? Do not be angry with me who spoke, ignorant of your rank.” Having said this, he Nala, bowed his head, and fainted with affection, and stood with tears flowing from his eyes.

(இ - ள்.) [அதற்குத் தேர்ப்பாகன் கூறியது.] மன்னர் பெருமை - ராசாக்களுடைய பெருமையை, மடையர் அறிவரோ - மடைத்தொழிலாளர் அறிவார்களா, உன்னை அறியாது - உன்பெருமையை யறியாமல், உரைசெய்த என்னை - பேசின என்னை, முனிந்தருளல்-கோபிக்கவேண்டாம், என்று - எனச்சொல்லி, முடி சாய்த்து - தலையை வணக்கி, கனிந்து உருகி - அன்புற்றுத்தளர்ந்து, கண் நீர் வார-கண்ணினின்றும் நீரொழுக நின்றான்—, எ - று.

முனிந்தருளல்—எதிர்மறை யேவலொருமை வினைமுற்று; வியங்கோள் முற்றுமாம். அல் விகுதியே மறுத்தலையும் ஏவலை

யுங் காட்டுமெனத் துணிந்தாருமுளர். அருள் என்னுஞ்சொல், உயர்ந்தோரைநோக்கிச் சொல்லுமிடத்தில் வருவது கண்ணீர் ஒழுகல் அன்பினுல். (௩௧)

383. கொற்றக் குமரனையுங் கோதையையுந் தான்க
ண்டு, மற்றவன்று னுங்குரைத்த வாசகத்தை—
முற்றும், மொழிந்தாரம் மாற்ற மொழியாத மு
ன்னே, அழிந்தாள் விழுந்தா ளழுது.

383. When Damayanti saw her royal son and her daughter, they related to her all that the charioteer had said to them there. But before they had finished speak-ing, her mind became troubled, and she fell down weeping.

(இ - ள்.) கொற்ற குமரனையும் - ராஜலக்ஷணமுள்ள மகனை யும், கோதையையும் - மகளையும், கண்டு—, அவன் - அந்தப் பாகன், ஆங்கு - அவ்விடத்தில் (அல்லது) அப்படி, உரைத்த வாசகத்தை - சொன்ன பேச்சை, முற்றும் மொழிந்தார்-முழு துஞ் சொன்னூர் (மக்கள் முதலானோர்,) அம் மாற்றம் - அப் பேச்சு, மொழியாத முன்னே - சொல்லாத முன்னமே, அழிந் தாள் - மனம் அழிந்தவளாகி, விழுந்தாள் அழுது - விழுந்தழு தாள் (தமயந்தி,) எ - று. தான்-இரண்டும், மற்று-அசைகள். மொழியாதமுன் என்பது விரைவைக் குறிக்கின்றது. (௩௨)

384. கொங்கை யளைந்து குழறிருத்திக் கோலஞ்செய்
அங்கை யிரண்டு மடுபுகையால்—இங்ஙன்
கருகியவோ வென்றழுதாள் காதலனை முன்னாள்
பருகியவேற் கண்ணாள் பதைத்து.

384. Damayanti whose lance-like eyes looked with pleasure in former days upon her husband, becoming sorrowful, wept and said:—"Have these palms become blackened, by the smoke of the kitchen, which once touch-ed the fragrant mixtures, and which adjusted my hair and adorned me?"

(இ - ள்.) முன் நாள் - முற்காலத்தில், காதலனை - நாயகனை, பருகிய வேல் கண்ணாள் - கண்டு அனுபவித்த வேல்போலுங் கண்ணுள்ள, தமயந்தி பதைத்து - தவித்து, கொங்கை அளைந்து - வாசனை வஸ்துக்களை மிகவும் பரிசித்து, குழல் திருத்தி- கூந்தலைச் செவ்வையாக்கி, கோலம் செய் - (எனக்கு) அலங்காரஞ் செய்கிற, அங்கை இரண்டும்-இரண்டுஉள்ளங் கைகளும், அடு புகையால் - சமைத்தலினாலாகும் புகையினால், இங்ஙன் - இவ்வாறு, கருகியவோ-கறுத்துப்போயினவோ, என்று அழுதாள்—- எ - று.

இங்ஙன் என்பது கரியடை பற்றிப்போயின என்று சொல்வார் சொல்லியபடி, அல்லது தன்னுடம்பு வஸ்திர முதலானவைபோலெனவுமாம். [மெய் புணரியல்-கக-ஆம்] சூத்திர விதியினால் அகங்கை அங்கையாயிற்று; அழகிய கை - என்னவுமாம். "கொங்கைவருடிக் குழைதிருத்தி" எனவும் பாடமுண்டு, அதற்குத் தனங்களைத்தடவிக் காதணிகளைச் செவ்வை செய்து எனப் பொருள்கொள்க. (கூஙட)

385. மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்,
காற்றத் தனித்தேருங் கொண்டணைந்து — மற்
றும், மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்
காணெங்கள், கொடைத்தொழிலா னென்றாள்
குறித்து.

385. Damayanti, addressing her parents, pointing, said:—"Look, the king who drove the victorious and matchless chariot of the monarch ருதுபர்ணன் who has arrived in this excellent city, and who also is engaged in cooking, is my royal husband."

(இ - ள்.) [தாய் தந்தையருக்குத் தமயந்தி யறிவித்தது.] இத் திருநகர்க்கு வந்து அடைந்த-இந்தச்சிறப்பான பட்டணத்திற்கு வந்து சேர்ந்த, மன்னவற்கு - ருதுபர்ணராசனுக்கு, கொற்ற தனி தேரும் கொண்டு அணைந்து-ஜயமுள்ள ஒப்பற்ற

தேரையும் ஓட்டிக்கொண்டு வந்து, மற்றும் - மேலும், மடை தொழிலே செய்கின்ற - சமையல் வேலையுஞ் செய்கிற, மன்னவன் - அரசன், எங்கள் கொடை தொழிலான் - எங்கள் அதிபதியாகிய வள்ளல், காண் - அறி, என்றாள் குறித்து - என்று நிருபித்துச் சொன்னாள் (தமயந்தி), எ - று.

முதல் மற்று, ஏ — அசைகள். தொழிலே — ஏ - எண்ணிடைச்சொல். (௩௮௪)

386. போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப்
போய்க், காதலிதன் காதலனைக் கண்ணுற்றான் -
ஓதம், வரிவளைகோண் டேறும் வளநாடன் றன்
னைத், தெரிவரிதா நின்றான் றிகைத்து.

386. King Bhima, who wore a garland on which the buds blossomed, going, surrounded by warlike kings, saw the husband of his daughter; but was perplexed at not being able to recognize in him the king of the fertile country of Nidatha, where the ocean, carrying with it the striped shells, ascends the shore.

(இ - ள்.) போது அலரும் கண்ணியான்-மொட்டுக்கள் மலர்கின்ற மாலைதரித்த வீமராசன், போர் வேந்தர் சூழ போய் - வீரரான அரசர்களை சுற்றிவரச் சென்று, காதலிதன் காதலனை - தன் மகளுடைய கணவனை, கண்ணுற்றான்-பார்த்தான்; ஓதம் - கடல், வரி வளை கொண்டு - இரேகை யுள்ள சங்குகளை யெடுத்துக்கொண்டு, ஏறும் - கரையேறுகின்ற, வள நாடன் தன்னை - வளப்பமுள்ள நிடதநாட்டரசனை, தெரிவு அரிதா - அறிவது அருமையாக, திகைத்து நின்றான் - பிரமித்து நின்றான், எ - று.

வளநாடன்றன்னை என்கிற செயப்படுபொருள், அறிவு என்னுந் தொழிற்பெயரைக் கொண்டது. அந்த எழுவாய் அறிது என்கிற குறிப்பு முற்றைக் கொண்டது. (௩௮௫)

387. செவ்வாய் மொழிக்குஞ் செயலுக்குஞ் சிந்தைக்கும், ஒவ்வாது கொண்ட வுருவென்று—எவ்வாயும், நோக்கினு னோக்கித் தெளிந்தா னுணங்கியதோர், வாக்கினுன் றன்னை மதித்து.

387. King Bhima, seeing that the form which he, Nala, had assumed did not suit either the fine speech which proceeded from his mouth, or the work he was engaged in, or his thoughts, and having scrutinized him in every way, thought highly of him, whose speech was so exquisite; and concluded that he was king Nala.

(இ - ள்.) கொண்ட உரு - (இவன்) கொண்டிருக்கின்ற உருவம், செம் வாய் மொழிக்கும் - செம்மையான வாயில் வரும் பேச்சுக்கும், செயலுக்கும் - செய்யுந் தொழிலுக்கும், சிந்தைக்கும் - நினைப்புக்கும், ஒவ்வாது என்று - ஒத்திருக்க வில்லையென்று, எவ்வாயும் - எல்லாவழிகளையும், நோக்கினன் - பார்த்தான் (வீமராசன்) நோக்கி - பார்த்து, நுணங்கியது - (கருத்தில்) நுட்பமுள்ளதாகிய, ஓர் வாக்கினன் தன்னை - ஒரு வாக்குடையவனாகிய அவ்வரசனை, மதித்து-மேன்மையாயெண்ணி, தெளிந்தான் - நிச்சயித்தான், எ - று.

அவனுருவத்துக்கும் பேச்சுமுதலானவற்றிற்கு மொத்திராமையால் யோசித்து வாக்கின் கம்பீர குணத்தினால் இவனே அவனயிருக்கலாம் என்று நிச்சயித்தான் வீம னென்றபடி. வழி - அறியுமுபாயம். ஒவ்வாது என்று - ஒத்திராமை என்ன காரணம் எனவு முரைக்கலாம். (சுசு)

388. பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை யையுற்று—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா வுன்னை
ஒளியாது காட்டுன் னுரு.

388. " O thou who possessest the excellent country where the monkeys are confused as they mistake the

spatha on the beautiful head of the arecanut palm for the hood on the beautiful head of the snake! Without hiding yourself, shew us your form" said Bhima to Nala.

(இ-ள்) [வீமன் நளனைநோக்கிச் சொல்லியது.] பூகத்தின் - பாக்குமரத்தினுடைய, ஐ தலையின் பாளைதனை - அழகிய தலையிலுள்ள பாளையை, பைந்தலைய - பசுமையான தலையுள்ள, நாக பணம் என்று ஐயுற்று - பாம்பின் படமென்று சந்தேகப்பட்டு, மந்தி - குரங்கு, தெளியாது இருக்கும் - மனந்தெளிவில்லாமலிருக்கிற, திரு நாடர் - சிறந்தநாடுடையவனே, உன்னை ஒளியாது - உன்னை மறையாமல், உன் உரு - உன் ரூபத்தை, காட்டு - காண்பி, எ - று.

உன்னாட்டுக் குரங்கு பாக்கின் பாளையைப் பாம்பின் படமென்று மயங்கித் தெளியாது வருந்துவதுபோல், யானுமுன்னைத் தெளியாது வருந்துகிறேனென்று குறிப்பித்ததாம். நாக பணம்—வடநூல் முடிபாதலால் பகரம் இரட்டவில்லை. (௬௭)

389. அரவரசன் றான்கொடுத்த வம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி யுடுத்தான்—ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்
டளிக்குங், கோத்தாய முன்னிழந்த கோ.

389. Nala who had lost by the deceit of the warlike Kali the kingly power which he inherited and protected, unfolding one of the very beautiful garments given him by the serpent king, tied it round his waist; and the other he cast over him.

(இ-ள்.) பொரு கலியின் வஞ்சனையால் - போரிடச்செய்யுங் கலியினது மோசத்தினால், பூண்டு அளிக்கும் - (இராச்சியத்தைப்) பெற்றுக் காக்கின்ற, கோ தாயம் - இராசாதிகாரத்தை, முன் இழந்த கோ - முன் போக்கடித்த நளமகாராசன், அரவரசன் தான்கொடுத்த - சர்ப்பராசன் கொடுத்த,

அம்பூ துகிலின் - மிக அழகான ஆடைகளுள், ஒரு துகிலை வாங்கி உடுத்தான் - ஓராடையைப்பிரித்து அரையிற் கட்டிக் கொண்டான், ஒரு துகிலை போர்த்தான் - மற்றொன்றை மேலே போர்த்துக்கொண்டான், எ - று. தான் - அசை.

தாயமாவது, பிதா முதலியோர்களுடையதாய் புத்திரன் முதலியோர் கைக்கொள்ளத்தக்க பொருள். இரண்டாடையு மொன்றுபோல் ஒட்டியிருந்ததனால் வாங்கி யென்றார். அம் பூந்துகில் - அழகான பூப்போன்ற துகிலெனவுமாம். (௬அ)

390. மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே - அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு.

390 Like the sins of those who worship the sacred feet of the king of the Gods which measured the earth, the form of one who drives the huge mountain-like chariot, which Nala had assumed when he deserted his wife in the forest and hid himself, left him when he put on, the garment.

(இ - ள்.) அக்காலம் - ஆடையணிந்த அந்தக் காலத்தில், கானகத்தே காதலியை நீத்து - காட்டில் மனைவியை விட்டு கரந்து உறையும் - மறைந்து வாசஞ் செய்கிற, மால் நகம் தேர் பாகன் வடிவு - பெரிய மலையொத்த தேரையோட்டுஞ் சாரதியின் ரூபமானது, மிக்கோன் - தேவருள் மேலான திருமாலினுடைய, உலகு அளந்த - உலகங்களை அளவிட்ட, மெய் அடியே - மெய்யான திருவடியையே, சார்வு ஆக - துணையாக (உபாயமாக,) புக்கோர் - அடைந்தவர்களுடைய, அருவினைபோல் - (நீங்குதல்) அருமையான பாவம்போல், போயிற்று - நீங்கிவிட்டது, எ - று. ஏ - அசை.

அடியே என்பதில் ஏகாரம் பிரிநிலை; மற்றதையுஞ் சார்பாகப் புகாமல் என்பதைக் கொண்டது. உலகளந்த என்பது

அருளன்பு முதலிய குணங்களை விளக்குகின்றதென இவ்வடையைச் சிறப்பாய் வைஷ்ணவர் உரைப்பர். மெய்யென்பது நூல்களில் உண்மையான துணையென்று சொல்லப்பட்டதென்பதாம். அருவினையாவது ஆகாமிய சஞ்சிதங்களு ளகப்பட்ட பாவ மனைத்துமாம்.

"ஆவி திகைக்க வைவர் குமைக்குஞ் சிற்றின்பம்
பாவி யேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ
தாவி வையங் கொண்ட தடந்தா மரைகட்கே
கூவிக் கொள்ளுங் கால மின்னுங் குறுகாதோ" என்றும்,

"உளதான வல்வினைக் குள்ளம் வெருவி புலகளந்த
வளர்தா மரையிணை வன்சர ணாக வரித்தவர்தாம்
களைதா னெனவெழுங் கன்மந் துறப்பர் துறந்திடலும்
இளைதா நிலைசெக வெங்கள் பிரானருட் டேனெழுமே"

என்றும் ஆங்காங்கு வைஷ்ண வாசிரியர்கள் கூறினதைக் காண்க. கவி கலிதொடருமிடத்து "நாராயணாயநம" என்றதற்கு ஏற்ப கலி நீங்குமிடத்தும் "மிக்கோனுலகளந்த" என்றெடுத்துத் தமது கொள்ளையை வெளியிட்டார். (கூ)

391. தாதையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீர
ரும்பப் போதலருங் குஞ்சியான் புக்கணைந்து —
கோதிலாப், பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினான், மின்னிடையா ளோடும்
விழுந்து.

391. Immediately as he saw his father before him, the young prince upon whose locks the buds blossom, and in whose lotus-like eyes the tear-drops gathered, went with his sister whose waist moved as imperceptibly as the lightning and fell on his father, so that the tears from his eyes washed his pure and beautiful feet.

(இ-ள்) தாதையை முன் காண்டலுமே - தந்தையை எதிரிற் கண்டவுடனே, தாமரை கண் நீர் அரும்ப - தாமரை

போலுங் கண்களில் நீர் துளிக்க, போது அலரும் குஞ்சியான் -அரும்புகள் மலர்கின்ற தலைமயிர் முடியுள்ள ராசகுமாரன், மின் இடையாளோடும் - மின்னலைப்போல அசையும் இடுப்புள்ள தன் தங்கையோடு, புக்கு அணைந்து - போய்ச் சேர்ந்து, விழுந்து—, கோது இலர் - குற்ற மில்லாத, பொன் அடியை - பொன்போன்ற (அவன்) பாதத்தை, கண்ணில் புனலால் கழுவினன் - கண்ணிலுண்டான நீரினல் அலம்பினன் [அழுதுகொண்டே கும்பிட்டா னென்கிறபடி,] எ - று.

கண்டலும்—வினையெச்சம். (௭0)

392. பாதித் துகிலோடு பாய்ந்திழியுங் கண்ணீருஞ்
சீதக் களபதனஞ் சேர்மாசும்—போத
மலர்ந்ததார் வேந்தன் மலரடியில் வீழ்ந்தாள்
அலர்ந்ததே கண்ணீ ரவற்கு.

392. With the half garment, and her tears flowing profusely, and her breast covered with dust where the cool sandal mixture should have been daubed, she went and fell at the lotus-like feet of king Nala, who was adorned with a garland of blossoms. And Nala's tears fell fast.

(இ - ள்.) பாதி துகிலோடு - பாதி வஸ்திரத்துடனே, பாய்ந்து இழியும் கண்ணீரும்-பெருகி வருகின்ற கண்ணீரும், சீத களபம் - குளிர்ச்சியான கலவைச்சாந் தணியத்தக்க, தனம் சேர் மாசும் - முலைகளைச் சேர்ந்த புழுதியுமாய், போத-போய், மலர்ந்த தார் வேந்தன் - மலர்ந்த பூத்தொடுத்த மாலையணிந்த நளமகா ராசனுடைய, மலர் அடியில் வீழ்ந்தாள் - தாமரைப் பூப்போன்ற பாதத்தில் சரணமாக வீழ்ந்தாள் (தமயந்தி,) அவற்கு - அந்த நளனுக்கு, கண்ணீர்—, (அப் போது) அலர்ந்தது - அதிகமா யுண்டாயிற்று, எ - று.

ஏ - அசை.

கண்ணுங் கண்ணீருமாய் நின்றான், இட்டகால் இட்ட கைக ளாய்க் கிடந்தான் ; கைப் பதைப்பும் வாய்ப் பதைப்புமாய்ப்

பேசினான் என்பனபோலக் கண்ணீரு மாசுமாய்ப் போதஎன்பது தமிழ் நடை. (எக)

393. வெவ்விடத்தோ டொக்கும் விழியிரண்டும் வீழ்துயில்கொள், அவ்விடத்தே நீத்த வவரென் றே—இவ்விடத்தே, வாரார் முலையாளம் மன் னவனைக் காணமல், நீரான் மறைத்தனவே நின்று.

393. In order that Damayanti, whose breasts filled her bodice, might not see, in the palace of Bhima, him who deserted her in the mandapam when she fell asleep through exhaustion, her eyes which were like rank poison, were filled with tears and hid him from her sight.

(இ - ள்.) வெம் விடத்தோடு ஒக்கும் -வெப்பமான விஷத்தோடு சமானமாயிருக்கிற, விழி இரண்டும் - (தமயந்தியின்) இரண்டு கண்ணும், வீழ் துயில் கொள் அவ்விடத்தே - சோர்வலாகிய நித்திரைகொண்ட அந்த மண்டபத்தில், நீத்த அவர் என்றே - (இவர்) விட்டுப்போனவரென்று, இவ்விடத்தே - இந்த வீமன் மாளிகையிலே, வார் ஆர் முலையாள் - கச்சு நிறைந்த தனங்களையுடைய தமயந்தி, அம் மன்னவனை காணமல் - அந்த நளனைக் காணதிருக்கும்படி, நீரால் மறைத்தன - ஜலத்தினாலே மறைத்து விட்டன, எ-று. ஏ- நின்று-அசைகள்

நின்று மறைத்தன எனவுங் கூட்டலாம். தமயந்திக்குக் கண்ணீர் கூர்ந்து கண்தெரியாமலிருந்ததை, நளன் முன்செய்த தீமைக்காக இப்போது அவள் பாராதிருக்கும்படி கண்கள் செய்தன என்று கவி தற்குறிப்பாகக் கூறினர். (எஉ)

394. உத்தமரின் மற்றிவனை யொப்பா ரொருவரில்லை, இத்தலத்தி லென்றிமையோ ரெம்மருங்கும்— கைத்தலத்தில், தேமாரி பெய்யுந் திருமலர்த் தார் வேந்தன்மேற், பூமாரி பெய்தார் புகழ்ந்து.

394. Saying that there were none on this earth among the great to be compared to him, the Gods cast, with their hands, showers of flowers upon king Nala who was adorned with a splendid garland which poured forth honeyed rain.

(இ - ள்.) இ தலத்தில் - இப்பூமியில், உத்தமரில் - மேலானவர்களில், இவனை ஒப்பார் - இந்த நளனை யொத்திருக்கிறவர், ஒருவர் இலை என்று - ஒருவரும் இல்லை யென்று, இமையோர் - தேவர்கள், புகழ்ந்து - துதித்து, கைத்தலத்தில் - கையினிடத்தே, தேன் மாரி பெய்யும் - தேன்மழை பொழிகின்ற, திரு மலர் தார் வேந்தன்மேல்-மேன்மையான பூமாலையணிந்த நளமகாராசன்மேலே, எம்மருங்கும்-எப்புறத்திலும் பூ மாரி பெய்தார் - பூமழையைப் பொழிந்தார்கள், எ - று. மற்று - அசை.

ஒருவரும் என்பதில் இழிவுசிறப்பும்மை விகாரத்தால்தொக்கது. இலை—லகரம் - தொகுத்தல். (௩௯௪)

395. தேவியிவள் கற்புக்குஞ் செங்கோன் முறைமைக்கும், பூவுலகி லொப்பாயார் போதுவார்—
காவலனே, மற்றென்பால் வேண்டும் வரங்கேட்டுக் கொள்ளென்றான், முற்றன்பாற் பாரளிப்பான் முன்.

395. Kali stood before king Nala, the benign protector of the earth, and said:—"O king! who is there in this world to be compared to the chastity of your wife Damayanti, or to the regularity of your goverument? Ask of me whatever you desire."

(இ - ள்.) [கலி.] முற்று அன்பால்-நிறைந்த பிரீதியினாலே, பார் அளிப்பான் முன் - பூமியைக் காக்கின்ற நளச்சக்கிரவர்த்தியின் எதிரில் (நின்று,) காவலனே - அரசனே, தேவி இவள் கற்புக்கும் - உன்தேவியாகிய இத்தமயந்தியின் பதி விரதைத்

தனத்திற்கும், செங்கோல் முறைமைக்கும் - உன் துரைத்தன ஒழுங்குக்கும், பூ உலகில் - பூலோகத்தில், ஒப்பா-சமானமாக, போதுவார் யார் - வருகின்றவர் எவர், என்பால் வேண்டும் வரம் கேட்டுக்கொள் - என்னிடத்தில் வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளு, என்றான்—, எ - று. மற்று - அசை.

"ஒப்பாயார் போதுவார்" என்றதினால் அப்படிபட்டவர் உண்டானாருமில்லை, இருக்கின்றாருமில்லை, உண்டாவாரோ வெனின் அவருமில்லை என்றதாயிற்று. யார் — உயர்திணைப் பொதுக்குறிப்பு வினைமுற்று. [வினையியல் ௩௦ - ம் - சூ.] கேட்டுக்கொள்—கொள் விகுதி தற்பொருட்டு என்னும் பொருளில் வந்தது. போதுவார் — புகுதுவார் என்பதின் திரிபென்பர்; போ - பகுதி, து - சாரியை, வ் - எதிர்கால இடைநிலை, ஆர் - விகுதி என்று, போ என்னு முதனிலைக்கு இங்ஙனம் புடை பெயர்ச்சியு முண்டெனலாம். காவல் அன் - காவலைச் செய்பவன் எனவும், கா - காத்தலிலே, வலன் - வல்லவ னென்றும், இருவகையுங் கொள்ளலாம். கா — முதனிலைத் தொழிற்பெயர். (எச)

396. உன்சரிதஞ் செல்ல வுலகாளுங் காலத்து, மின்
சொரியும் வேலாய் மிகவிரும்பி — என்சரிதம்,
கேட்டாரை நீயடையே லென்றான் கிளர்மணிப்
பூண், வாட்டானை மன்னன் மதித்து.

396. King Nala, who was adorned with jewels of sparkling gems, and who commanded sword-girt armies, esteeming the words of Kali said:—" O thou, who possessest a glittering lance! In the age of your reign you must not trouble those who listen to my history with interest

(இ - ள்.) கிளர் மணி பூண் - விளங்காநின்ற ரத்தினாபரணங்களையும், வாள் தானை மன்னன் - வாளேந்திய சேனையையுமுடைய நளமகாராசன், மதித்து - (கலியின்பேச்சை) மேன்

மையாகக்கொண்டு, மின் சொரியும் வேலாய் - காந்தியைப் பொழிகின்ற வேலுடையவனே, உன் சரிதம் செல்ல - உன் நடக்கை செல்லும்படி, உலகு ஆளும் காலத்து - நீ உலகத்தை யாளு நாளில், மிக விரும்பி என் சரிதம் கேட்டாரை - மிகவும் பிரியப்பட்டு என் சரித்திரத்தைக் கேட்பவர்களை, நீ அடையேல் - நீ சேராதிரு, என்றான் —, எ - று.

"உன் சரிதஞ் சொல்லி" எனவும் பாடமுண்டு, உன்சரிதஞ் செல்ல - உலகாளுங் கால மாவது கலியுகம். (௭௫)

397. என்காலத் துன்சரிதங் கேட்டாரை யானடையேன், மின்கா லயில்வேலாய் மெய்யென்று—நன்காவி, மட்டிறைக்குஞ் சோலை வளநாடன் முன்னின்று, கட்டுரைத்துப்போனான் கலி.

397. Kali, standing before Nala, the king of the fertile country of Nidatha which is sorrounded by groves, and in which the good dark-hued Kuvali flowers shed honey, spoke with truth after this:—"O thou possessing a sharp lance which emits lightning! During my reign (கலியுகம்) I will not trouble those who listen to your history. This I say truly." Having thus spoken, he departed.

(இ - ள்.) மின் கால் அயில் வேலாய் - மின்னலைக் கக்குகின்ற கூர்மையான வேலாயுத முடையவனே, என் காலத்து - என்னுடைய காலமாகிய கலியுகத்தில், உன் சரிதம் கேட்டாரை - உன்கதை கேட்பவர்களை, யான் அடையேன் - நானசேரமாட்டேன், மெய் - (இது) சத்தியம், என்று —, நன் காவி - நல்ல நீலோற்பலமலர்கள், மட்டு இறைக்கும் சோலை - மதுவை இறைக்கப்பெற்ற சோலை சூழ்ந்ததும், வள நாடன் - வளப்பம் பெற்றதுமான நிடதநாட்டரசனது, முன் நின்று - எதிரில் நின்று, கலி - கலிபுருடன், கட்டு உரைத்து - உறுதியான பேச்சைப்பேசி, போனான் —, எ - று.

நன்கு ஆவி எனப்பிரித்து, நன்கு - நன்றாக, ஆவி - குளங்களுக்கு, மட்டு இறைக்கும் எனவு முரைக்கலாம். கட்டுரைத்து—கட்டுரை என்பதை ஒரே சொல்லாக எடுத்துப் பகுதியாய்க் கொள்க. சோலையிற்காவி அங்குள்ள குளங்களில் எனக் கொள்க. (எசு)

398. வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கட்,
கோதையையு மக்களையுங் கொண்டுபோய்த்—
தாது, புதயத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்
சோலைவேலி, விதையக்கோன் செய்தான்விருந்து.

398. The king of the country of Vidarpa, which is fenced around with groves in which the pollen in the flowers is drowned in the gushing honey, having taken with him king Nala, who never departed from the paths of the Vedas, and Damayanti, whose eyes resembled tanks filled with flowers, as well as their children, made a feast.

(இ-ள்.) தாது புதைய - கேசரங்கள் புதைந்து போம்படி, தேன் பாய்ந்து ஒழுகும் - தேன் பாய்ந்து ஒழுகுகின்ற, பூ சோலை - பூவுள்ள சோலைகளாகிய, வேலி - வேலி சூழ்ந்த, விதையம் கோன் - விதர்ப்பநாட்டரசன், வேத நெறி வழுவா வேந்தனையும் - வேதமார்க்கந் தப்பாத நளமகாராசனையும், பூ தடம் கண் கோதையையும் - பூப்பூத்த தடாகம்போன்ற கண்களையுடைய தமயந்தியையும், மக்களையும் - (அவர்களுடைய) ஆண் பெண் மக்களையும், கொண்டு போய் - இட்டுக்கொண்டு போய், விருந்து செய்தான் —, ஒ - று.

விதர்ப்பம் என்னும் ஆரியமொழி விதையமெனத் திரிந்தது. பூந்தடங்கண் - பூப்போன்ற விசாலமாகிய கண் எனவு முரைக்கலாம். (எஎ)

99. உன்னையா னென்று முணரா துரைத்தவெலாம்
பொன்னமருந் தாராய் பொறுவென்று—பின்,

னைத்தன், மேனீர்மை குன்றா வெறுந்தேர் மிசை
க்கொண்டான், மானீ ரயோத்தியார் மன்.

399. The king of the inhabitants of the great fertile country of Oudh, said:—" O thou adorned with garlands swarming with golden beetles! You must bear with all that I said in ignorance concerning you." And then, with his dignity unlessened he departed in an empty chariot.

(இ - ள்.) மால் நீர் அயோத்தியார் மன் - பெருமையான நீர்வளமுள்ள அயோத்தி நாட்டாருடைய அரசன், பொன் அமரும் தாராய் - பொன் வண்டு பொருந்திய மாலை யணிந்தவனே, யான் ஒன்றும் உணராது - நான் ஒன்றுந் தெரியாமல், உன்னை உரைத்த எல்லாம் - உன்னைக் குறித்துச் சொன்னவைகளை யெல்லாம், பொறு என்று - பொறுக்கவேண்டுமென்று சொல்லி, பின்னை - பின்பு, தன் மேல் நீர்மை குன்றா - தன் மேலான குணங் குறையாமல், வெறு தேர்மிசை கொண்டான் - வெறுமையான தேர்மேலேறிச் சென்றான், எ - று.

குன்றா என்பதற்குக் குன்றி எனப் பொருள் கொண்டு தமயந்தி சுயம்வரமென்று வந்து இகழ்ச்சிப்பட்டதைக் கருத்தாகவு முரைக்கலாம். வெறுந் தேராவது தமயந்தியோடு கூடி வருஞ் சந்தோஷமற்ற தேர். பொன் அமருந் தாராய் என்பதற்குத் திருமகள் பொருந்தின சேனையையுடையாய் எனவும் பொருள்படும். மிசைக்கொண்டான் என்பதை ஒருசொன்னீர்மையாக வைத்து ஏறினான் எனப்பொருளுரைத்துக்கொள்க, தேர்—ஏழனுருபு தொக்கது. (எஅ)

400. விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்
லப், பொற்றேர்மேற் றேவியொடும் போயி
னான்—முற்றாம்பல், தேனீ ரளித்தருகு செந்
நெற் கதிர்விளைக்கும், மாநீர் நிடதத்தார் மன்.

400. The king of the inhabitants of the very fertile country of Nidatha, in which the honey which flows out of the old ambal blossoms, falling on the adjacent ears of corn, causes them to grow, rode with his wife in a golden chariot, the army of archers going before, and the kings with their lances following in the rear.

(இ-ள்.) முற்று ஆம்பல்-முற்றிய ஆம்பற் பூக்கள், தேன் நீர் அளித்து-தேனாகிய நீரைப் பாய்ச்சி, அருகு செந்நெல் கதிர் - சமீபத்திலுள்ள செந்நெற் கதிர்களை, விளக்கும் - விளையச் செய்கின்ற, மா நீர்-மிகுதியான நீர்வளம் பொருந்திய, நிடதத்தார் மன் - நிடத தேசத்தாருடைய அரசன், வில் தானை - வில்லேந்திய சேனை, முன் செல்ல - முன்புறம் போய்க்கொண்டிருக்கவும், வேல் வேந்தர் - வேலேந்திய அரசர், பின் செல்ல-பின்புறம் போய்க்கொண்டிருக்கவும், தேவியொடு - மனைவியோடு, பொன் தேர்மேல் - பொன்னாற் செய்த தேர்மேல் (ஏறி,) போயினான்—, எ - று.

மா நீர் - மேன்மையான குணமுள்ள எனவுமாம். தேவியொடும்—உம்-அசை. செம்மை நெல் என்பதில் "ஈறு போதலிடையுகரமியாதல்" என்னுஞ் சூத்திரத்தினால் மைகெட்டு "மம்முன்பயவ மயங்குமென்ப" என்று வரைந்திருத்தலால் மகரத்தோடு நகரத்திற்கு மயக்கமின்மைபற்றி மகரமும் நகரமாகத் திரிந்தது. "இனையவும் பண்பிற் கியல்பே" என்பதில் அடக்கிக்கொள்க. "விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின் செல்ல" என்பவை வினைச் செவ்வெண். முன் பின் என்பன இடைச்சொல்லாதலால் "இடையுரிவடசொலி னியம்பிய கொளாதவும்" என்பதினால் னகரங்கள் இயல்பாயின. (எக)

401. தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாய்
ஏனைநெறி தூரமினி யெத்தனையோ—மானே
இந்த மலைகடந் தேழுமலைக் கப்புறமா [கேள்
விந்தமெனு நம்பதிதான் மிக்கு.

401. O thou who bore a long sharp lance in order to conquer the Asuras What is the distance we have yet to go ?" asked Damayanti. To which Nala replied:— "Harken, O wife After passing the mountain before us and seven mountains beyond, our capital Mahavindam lies in all its greatness."

(இ - ள்.) தானவரை வெல்ல - அசுரரைச் செயிக்கும்பொருட்டு, தரித்த நெடு வை வேலாய் - ஏந்திய பெரிய கூர்மையான வேலுடையவனே, ஏனை நெறி தூரம் - மற்ற வழியின் தூரம், இனி எத்தனையோ - மேல் எவ்வளவோ (என்று தமயந்தி வினவ,) மானே கேள் - பெண்ணே கேள், இந்த மலை கடந்து - எதிரிலிருக்கின்ற பருவதத்தைத் தாண்டி, ஏழு மலைக்கு அப்புறம் - எழு பருவதங்களுக்கு அப்புறத்தில், மாவிந்தம் எனும் நம் பதி - மாவிந்தம் என்கிற நம்முடைய பட்டணம், மிக்கு (உளது) - மேன்மைப்பட்டு இருக்கின்றது (என்று நளன் விடுத்தான்,) ஏ-று தான் - அசை.

இதில், ஓராசிரியனை சிஷனொருவன் மோக்ஷலோகமெங்கே என்று வினவ, அவன் அது இவ்வண்டமும் இதனைச் சூழ்ந்த ஏழாவரணமுங் கடந்தபின் அது காணப்படுமென்று கூறியது எனப் பொருளொன்று தோன்றுதலால் சுருங்கச்சொல்லல் அணியாம். (அ0)

402. இக்கங்குல் போக விகல்வே ளனெறிநீர்
செய்க்கங்கு பாயுந் திருநாடு—புக்கங்
கிருக்குமா காண்பான்போ லேறினான் குன்றிற்
செருக்குமான் றேர்வெய்யோன் சென்று.

402. When that night had passed away, Nala who bore an heroic lance, entered the excellent country of Nidatha, where the water which flows in waves down the rivers &c, enters the paddy fields, and the sun who possessed a chariot drawn by proud horses, rode on the mountain நிடத நாடு as if he came to see the town.

(இ - ள்.) இ கங்குல் போக - இவ் விரவு நீங்க, இகல் வேல் நளன்-வீரங்கொண்ட வேலுள்ள நளன், எறி நீர் - (ஆறுமுதலானவை) அலைமோதிவீசுகிற தண்ணீர், செய்க்கு பாயும் திரு நாடு - கழனிகளுக்குப் பாயும்படியான மேலான நிடத நாட்டில் புக்கு - பிரவேசித்து, அங்கு இருக்கும் ஆ - அந்நாட்டில் வீற்றிருக்கும் வகையை, காண்பான் போல் -பார்ப்பவன் போலே, செருக்கு மான்- (விரைவினால்) கர்வமுள்ள குதிரைகள் பூட்டிய, தேர் வெய்யோன் - தேரையுடைய சூரியன், சென்று - போய், குன்றில் ஏறினன் - உதயமலையில் ஏறினன், எ-று. அங்கு - அசை.

போல்—தற்குறிப்பில் வந்தது. (௪௧)

403. மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானு
மொரு, வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச்—
சென்றடைந்தான், மாவிந்த மென்னும் வள
நகரஞ் சூழ்ந்தவொரு, பூவிந்தை வாழும்
பொழில்.

403. Together with Damayanti, who wore a garland of flowers fresh and fragrant, and with his children, Nala, riding in a large chariot, matchless, victorious, and begemmed, entered the grove which surrounded the fertile town of மாவிந்தம் and in which Lakshmi resided.

(இ - ள்.) மன்றல் இள கோதையொடும் - வாசனை பொருந்திய இளமையான மாலைசூடிய தமயந்தியோடு, மக்களும் தானும் - பிள்ளைகளும் அவனும், ஒரு வென்றி மணி நெடு தேர்மேல் - ஒப்பற்ற ஜயமுள்ள ரத்தினமிழைத்த பெரிய தேரின்மேல், ஏறி சென்று - ஏறிக்கொண்டுபோய், மாவிந்த மென்னும் வள நகரம் -மாவிந்தமென்கிற வளப்பமான பட்டணத்தை, சூழ்ந்தது - சூழ்ந்த, ஒரு- ஒப்பில்லாத, பூவிந்தை - பூவிலிருக்கும் திருமகள், வாழும் பொழில் - வாசஞ்செய்கிற தோப்பை, அடைந்தான் - சேர்ந்தான் (நளன்,) எ - று.

பூவிந்தை என்பதற்கு - பூக்களின் அதிசயங்கள் எனவும் பொருளுரைக்கலாம். அப்போது விந்தை தெலுங்கி லிருந்து வந்த திசைச்சொல். மன்றலிளங்கோதை — அன்மொழித் தொகை. கோதை - பெண், எனக்கொண்டு மன்றலையும் இளமையையும் அவளுக்கே விசேஷண மாக்கினு மமையும் மன்றல் - கலியாணமாகையால் கலியாணஞ் செய்துகொண்ட இளங்கோதை யென்னவுமாம். "மன்றவிளங்கோதை" எனப் பாடமாயின் மன்ற - அசை. (அஉ)

404. மற்றவனுக் கென்வரவு சொல்லி மறுசூதுக்
குற்ற பணைய முளதென்று—கொற்றவனைக்
கொண்டணைவீ ரென்று குலத்தூ தரைவிடுத்
தண்டெரியற் றேர்வேந்தன் றான். [தான்

404. King Nala, who was adorned with a cool garland sent the messengers, whose ancestors performed the same office, saying, " Go and inform Putcarn of my arrival; tell him that I have a fit wager for a second game of dice, and bring that king here."

(இ - ள்.) தண் தெரியல் - குளிர்ச்சியான மாலையணிந்த, தேர் வேந்தன் - நளமகாராஜன், மற்றவற்கு - மற்றவனுக்கு (புட்கரனுக்கு,) என் வரவு சொல்லி - நான் வந்ததைச் சொல்லி, மறு சூதுக்கு - மறுதரம் ஆடுஞ் சூதுக்கு, உற்ற பணையம் - தகுதியான பந்தையப்பொருள், உளது என்று - உண்டு என்று சொல்லி, கொற்றவனை - (அந்த) அரசனை, கொண்டு அணைவீர் - கொண்டு வாருங்கள், என்று—, குல தூதரை - குலபரம்பரையாய்வரும் தூதரை, விடுத்தான் - அனுப்பினன், எ-று. தான் - அசை.

பரம்பரையாய் ஒருதொழில் செய்வோர்க்கே அத்தொழிலை நிறைவேற்று மாற்றலிருக்கும் ஆனதுபற்றி " குலத்தூதரை விடுத்தான்" என்றார். அவராயின் அவனைச் சூதுக்கு இசையச் செய்வார்களென்பது கருத்து. (அங)

405. மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வன்னெஞ்சன்
தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய்—ஆய
பெருந்தானை சூழப் பெடைநடையா ளோடும்
இருந்தானைக் கண்டா னெதிர்.

405. The hard-hearted Putcaran, who deceived Nala in the fatal game at dice, saw before him, in the clean and beautiful grove which was filled with fragrant flowers Nala and Damayanti whose (i. e. Damayanti's) gait resembled the walk of a female swan, as they stood surrounded by a large and trusty host.

(இ - ள்.) மாயம் நெடு சூதில் - மோசத்துக்குரிய பெரிய சூதாட்டத்தில், வஞ்சித்த வல் நெஞ்சன் - (நளனை) மோசஞ் செய்த கடின இருதயமுள்ள புட்கரன், தூய - சுத்தமான, நறு மலர் பூ சோலைவாய் - பரிமளமுள்ள பூக்கள் நிறைந்த அழகிய தோப்பினிடத்தில், ஆய பெரு தானை சூழ - யோக்கியமான பெரிய சேனை சூழ்ந்திருக்க, பெடை நடையாளோடு - பெண்ணன்னத்தின் நடைபோன்ற நடையையுடையவளான தமயந்தியோடு, இருந்தானை - வீற்றிருந்த நளனை, எதிர் - எதிரிலே, கண்டான்—, எ-று. உம் - அசை.

பெடை என்பது தகுதியால் அன்னப்பெடைக்குக் கொள்ளப் பட்டது. அது ஆகுபெயராய் அதன் நடைமேலாயிற்று.()

406. செங்கோ லரசன் முகநோக்கித் தேர்ச்சியிலா,
வெங்கோ லரசன் வினவினன்—அங்கோலக்
காவற் கொடைவேந்தே காதலற்குங் காதலிக்
யாவர்க்குந் தீதிலவே யென்று. [கும்

406. Looking at the face of king Nala who governed rightly, Putcaran who had no judgment and who governed badly, said, "O handsome, protecting, and generous king! Are you all happy without any evil happening to yourself, to your consort Damayanti or to any of the others."

(இ - ள்.) செங்கோல் அரசன் - செவ்வையான அரசாட்சியுள்ள நளச்சக்கிரவர்த்தியினது, முகம் நோக்கி - முகத்தைப் பார்த்து, தேர்ச்சி இலா - விவேக மில்லாத, வெம் கோல் அரசன் - உக்கிரமான அரசாட்சியுள்ள புட்கரராசன், அம் கோலம் - அழகான ரூபமுள்ள, காவல் - காக்குந் தன்மையுள்ள, கொடை வேந்தே - உதாரனான நளமகாராசனே, காதலற்கும் - கணவனாகிய உனக்கும், காதலிக்கும் - மனைவியாகிய தமயந்திக்கும், யாவர்க்கும் - (மக்கள்முதலிய) எல்லாருக்கும், தீது இலவே என்று - தீங்குகள் இல்லையே என்று வினவினான் - கேட்டான், எ - று.

நளனை க்ஷேமம் விசாரித்தா னென்பதாம். தீது—பால்பகா அஃறிணைப் பெயரா தலால் ஈண்டு பன்மைக்கு வந்து பன்மை வினையைக்கொண்டது. [பெயரியல் - உஅ - ஆம் - சூ.] "காதலர்க்கு" எனப் பாடமாயின் மக்களுக்கு என உரைத்துக் கொள்க. (௮௫)

407. தீது தருகலிமுன் செய்ததனை யோராதே
யாது பணைய மெனவியம்பச்—சூதாட
மையாழி யிற்றுயிலு மாலனையான் வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து.

407. Putcaran forgetting the assistance rendered to him on the former occasion by Kali, the progenitor of evil, while playing at dice asked:—"What is the wager?" and Nala, who resembled Vishnu who slept on the dark ocean, took out the beautiful ring which was on his finger and placed it before him.

(இ - ள்.) தீது தரு கலி - தீமையைத் தரும்படியாகிய கலிபுருஷன், முன் செய்ததனை - முன்பு செய்த சகாயத்தை, ஓராதே - நினையாமலே (புட்கரன்,) சூது ஆட—, யாது பணையம் - என்ன பந்தியம், என இயம்ப - என்று சொல்ல, மை ஆழியில் - கறுப்பான கடலில், துயிலும் - கண் வளர்கின்ற, மால் அனையான் - திருமாலை ஒத்தவனாகிய நளன், வண்மை

புனை - அழகணிந்த கை ஆழி - கையிலிருக்கும் மோதிரத்தை, கழித்து வைத்தான், - கழற்றி வைத்தான், எ - று.

"மால் பராய்" எனவும் பாடமுண்டு. திருமாலைப் போற்றி என்பது அதன் பொருள். (௪௬)

408 அப்பலகை யொன்றி னருகிருந்தார் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும்—ஒப்பரிய
வன்றானை யோடு வளநாடும் வஞ்சனையால்
வென்றானை வென்றானவ் வேந்து.

408. King Nala earned the praises of those around him by winning in one game, the town whose beauty and wealth are indecribable, the army matchless in strength, and the fertile country, and by conquering Putcaran who before had won these from him by deceit.

(இ - ள்.) அவ் வேந்து - அந்த நளமகாராசன், அருகுஇருந்தார் - பக்கத்தி லிருந்தவர்கள், மதிக்க - மெச்சும்படி, அப் பலகை ஒன்றின் -சொக்கட்டான் பலகை ஒன்றிலேயே [ஓரே யாட்டத்தி லென்றபடி,] செப்பு அரிய - சொல்லுவதற்கு அருமையான, செல்வ திரு நகரும் - செல்வமுள்ள அழகான பட்டணத்தையும், ஒப்பு அரிய - உவமானம் இல்லாத, வல் தானையோடு - வன்மையான சேனையோடு, வள நாடும்-வளப் பமுள்ள தேசத்தையும், வஞ்சனையால் வென்றானை - (முன்பு) மோசத்தினால் ஜயித்த புட்கரனை, வென்றான் - ஜயித்தான், எ-று, தாம் - அசை.

அரிய என்பது இங்கு இல்லாமையைக் காட்டியது. வெல் என்பது இரண்டு செயப்படுபொருளுள்ள தாகலா மாதலின் இங்கே வென்றானை நகர் முதலியவற்றை வென்றான் எனவு முரைக்கலாம். (௪௭)

409. அந்த வளநாடு மவ்வரசு மாங்கொழிய, வந்த
படியே வழிக்கொண்டான் — செந்தமிழோர்,

நாவேய்ந்த சொல்லா னளனென்று போற்றி
சைக்குங், கோவேந்தற் கெல்லாங் கொடுத்து.

409. Losing that fertile country and that Government, Putcaran gave up to King Nala, who was praised by the eloquent Tamil bards, all his wealth and departed by the way he came.

(இ - ள்.) செம் தமிழோர் - செம்மையான தமிழ் வல்லவர்கள், நா ஏய்ந்த - நாவுக்குப் பொருந்தின, சொல்லால் - சொற்களினல், நளனென்று —, போற்றி இசைக்கும் - துதித்துப் பாடப்பெற்ற, கோ வேந்தற்கு-அரசனுக்கு, அந்த வள நாடும்- அந்த வளப்பமான நாடும், அ அரசும் - அந்தத்துரைத்தனமும், ஒழிய - தன்னைவிட்டு ஒழிந்துபோம்படி, எல்லாம் கொடுத்து-செல்வமெல்லாங்கொடுத்து, வந்தபடியே - (முன்) வந்த விதமாகவே, வழிகொண்டான் - போனன் (புட்கரன்,) எ - று. ஆங்கு - அசை.

போற்று இசைக்கும் எனினும் ஒக்கும். போற்று - துதி. போற்று என்பதின் ஈறு குறையப் போற்றிசைக்கும் என்ருயிற்று. நாவேய்ந்த என்பதை, நா + வேய்ந்த எனப் பிரித்து நாக்கினுற் புனைந்த எனப் பொருள்கூறவு மமையும். நாவேய்ந்த சொல்லாவன மேன்மையான சொற்கள்.

வந்தபடியே—படி என்பது விதம் என்னும் பொருளுள்ளது ; இங்கே வழிக்கொண்டானென்னும் வினையை விசேடித்து வினையுரியாய் நின்றது. காலம் இடம் முதலிய பொருளுள்ள இடைச்சொற்கள், பெயர்த்தன்மையவாய்ப் பெயரெச்ச முதலியவைகளைக் கொள்ளும்: ஆனபடியால், ஆனபடிக்கு என வரும்போது பெயர். இங்கே பெயராய் மூன்றனுருபு தொக்குவந்த தெனினும் பொருந்தும். (௮௮)

410. ஏனை முடிவேந்த ரெத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்ப்

பொன்னகர மெய்தும் புரந்தரனைப் போற்பொ
லிந்து, நன்னகரம் புக்கா னளன்.

410. Like the God Indra entering the famous city Amaravathy, Nala entered the good town of Mahvintham, riding on a chariot, and surrounded by armies; so that all the crowned monarchs in every corner of the earth might praise him.

(இ-ள்.) ஏனை முடி வேந்தர் - மற்றக் கிரீடாதிபதிகள் எத்திசையும் - எல்லாத் திசைகளிலும், போற்று இசைப்ப - புகழைப்பாட, சேனை புடை சூழ - சேனைகள் பக்கங்களிற் சூழ்ந்துவர, தேர் ஏறி - இரதத்தின்மே லேறிக்கொண்டு, ஆன புகழ் - பொருந்தின புகழுள்ள, பொன் நகரம் - அமராவதி பட்டணத்தை, எய்தும் - அடைகிற, புரந்தரனை போல் - தேவேந்திரனைப்போல், பொலிந்து - விளங்கி, நளன் - நளச்சக்கிரவர்த்தி, நல் நகரம் - நன்மையான மாவிந்தநகரத்தை, புக்கான் - அடைந்தான், எ-று.

ஏனை என்பது புட்கரனை நீக்குகின்றது. அவன் அற்பனும் மனஸ்தாபப் பட்டவனு மானதால் புகழ்ந்திலன்.

அமராவதி யென்பது சொர்க்கலோகத்தின் முக்கியபட்டணம். ஒருபொருளைப் பலவகையிற் கூறுவதும் ஒரு கவித்திறம். (௪௧௰)

411. கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முக
மோ, நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்
பெற்று, மாதோடு மன்னன் வரக்கண்ட மாநக
ருக், கேதோ வுரைப்ப னெதிர்.

411. To what shall I compare the great town of Mah - vintham, as Nala, having regained his Government, entered with Damayanti? Is it like the peacock hailing the coming clouds? Is it like the brightened countenance re -

gaining its lost sight? Or is it like the fertile and excellent fields, filled with water?

(இ - ள்) பார் பெற்று - பூமியாள்வதைப் பெற்று, மாதோடு - தமயந்தியோடு, மன்னன் - நளமகாராஜன், வர கண்ட - வருவதைப் பார்த்த, மா நகருக்கு - பெருமையான மாவிந்த நகரத்துக்கு, கார் பெற்ற தோகையோ - மேகம் வரப்பெற்ற மயிலையோ, கண் பெற்ற வாள் முகமோ - கண் வரப்பெற்ற பிரகாசமான முகத்தையோ, நீர் பெற்று உயர்ந்த - தண்ணீரைப் பொருந்தி மேன்மைப்பட்ட, நிறை புலமோ - விளைவு நிறைந்த கழனியையோ, ஏதோ - எதையோ, எதிர் உரைப்பன் - சமானமாகச் சொல்லுவேன் (நான்), எ - று.

நகரத்தாரெல்லாம் அரசனும் அரசியும் வரக்கண்டு களித்தார்கள் என்றபடி.

பார் அதன் ஆளுகைக்கும், நகர் அங்குள்ளார்க்கும் ஆகுபெயர். ஓ - நான்கும் ஐயப்பொருளில்வந்தன. ஈண்டு ஐயம் உபமானமாதற்கு உரிமைப் பற்றியது. ஆகவே இவையாவும் உபமானம் என்பது கருத்து. (கூ௦)

நளவெண்பாவுரை

முற்றியது.

இலக்கணக் குறிப்பு.

☞ ஒருசொல்லுக்கு இலக்கணங்கூறு என்றால் திணை - பால் - எண் - இடம் - வேற்றுமை - தொழிற்பெயர் - பண்புப்பெயர் - வினையாலணையும் பெயர் என்கிற சிறப்புகளையும் பெயர்க்குக் கூறவேண்டும்.

திணைமுத லானவைகளோடு காலம் - தன்வினை - பிறவினை - செய்வினை - செயப்பாட்டுவினை முதலிய சிறப்பும், பெயரெச்

சம் - வினையெச்சம் - இன்ன வாய்பாடு என்பவைகளும், வினைக்குக் கூறவேண்டும்.

தொடர்சொல்லவேண்டுமாயின் இரண்டு சொற்களுக்கு நடுவில் வேற்றுமையுருபோ, அல்லது வினையுருபு முதலியவையோ, நோக்கு இருப்பது இன்னதென்று அறிந்து இன்ன தொகைநிலைத்தொடரென்றாவது, இன்ன தொகாநிலைத்தொடரென்றாவது, கண்டு உரைக்கவேண்டும்.

உதாரணம்.

365 - வது பாட்டு.

பணையில்—அஃறிணை ஒன்றன்பால் ஒருமைப்படர்க்கை யிடப்பெயர், ஏழாம்வேற்றுமை, தான்றி எனும் பிறிதின்கிழமைக்கு இடமாயிற்று, எண்ணினான்— உயர்திணையாண்பால் ஒருமைப்படர்க்கை இறந்தகாலச் செயப்படுபொருள் குன்றாத தன்வினை வினைமுற்று, தாரான் என்னும் பெயரைக் கொண்டது.

பார்—ஏவலொருமை முன்னிலை வினைமுற்று,இது இருதிணைப்பொது, இங்கு உயர்திணை முன்னிலைப்பெயரைக் கொண்டது.

என்ன —இடைச்சொலடியாகப் பிறந்த செயவென்வாய்பாட்டு வினையெச்சம். இங்கு காரணப் பொருட்டாகையால் இறந்த காலமாயிற்று, ருதுபர்ணன் என்னும் பெயரைக் கொண்டது.

இத்தாழ்—இடைச்சொற்றொடர்

தாழ்பணையில்—வினைத்தொகைநிலைத் தொடர், தாழ்ந்தபணையில் எனவிரியும்.

பணையிலிரு—ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.

இருந்தான்றி—பண்புத்தொகைநிலைத்தொடர், இருமையாகிய தான்றி யென விரியும்.

தான்றிக்காய் — ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர், தான்றியினது காய் என விரியும்.

பத்தாயிரம்—பண்புத்தொகைநிலைத்தொடர்.
ஆயிரங்கோடி—இதுவுமது.
கோடி என்பதைமுற்றெச்சமாகக்கொண்டால் கோடிபார்என் பது வினையெச்சத் தொகாநிலைத் தொடர்; பெயரானல் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.
பார் என்ன—வினைமுற்றுத்தொடர்.
உய்த்ததனில்—வினையெச்சத்தழாத்தொடர்.
அதனில் தேர்—ஏழாம் வேற்றுமை தொகாநிலைத்தொடர்.
நிறுத்தி எண்ணிஞன்—வினையெச்சத்தொடர்.
எண்ணிஞன்தேவர்—வினைமுற்றுத் தழாத்தொடர்.
தேவர் சபை—ஆரும் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர் தேவரது சபையென விரியும்.
தார் நிறுத்தும்—இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர், தாரைநிறுத்தும் என விரியும்.
நிறுத்துந்தோள்—பெயரெச்சத்தொடர்.
தோள் வேந்தன் — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைநிலைத் தொடர்; தோளையுடைய வேந்தன் எனவிரியும்.
இப்படி நிலைமொழிநோக்கி யின்ன தொடரெனச் சொல்லுக.

இடைச்சொல் முன்னும் பின்னும் வருமாதலால் எப்படி யிருந்தாலும் இடைச்சொற்றொடரே யாம்.

(உ - ம்.)

மற்றொருவன்,—முன்வந்தது.
ஆளுமே, அவனும்,—பின்வந்தது.

தத்தம்பொருள், அசைநிலை, இசைநிறை, குறிப்பு, இப்படிப் பட்ட இடைச்சொற்களைத் தனிச்சொல்லாய்ப் பிரிக்க வேண்டும்.

வேற்றுமையுருபு, விகுதி, இடைநிலை, சாரியை இப்படிப் பட்ட இடைச்சொற்களைப் பிரிக்கக்கூடாது.

எல்லாவற்றிற்கும் முடிபும் சம்பந்தமும் கூறவேண்டும். இதுதான் இலக்கணஞ் சொல்லுமுறை.

இப்படி ஆங்காங்கு காட்டிக்கொடுத்த வழியால் மற்ற விடங்களிலும் இலக்கணமுறைகளை அமைத்துக்கொள்க.

வெண்பாவியற்சுருக்கம்.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என நான்கு பாக்கள் உண்டு. பா = பாட்டு.

இவற்றுள் வெண்பாவிற்கு அடியிற்கூறுகிறபடி இலக்கண முறை யறியத்தக்கது.

ஒருகுற்றெழுத்தாகிலும் ஒரு நெட்டெழுத்தாகிலும் தனித்தாவது ஒற்றடுத்தாவது வந்தால் நேர் அசை எனப்படும்.

(உ-ம்) அ, ஆ, அல், ஆல்.

இரண்டுகுறிலாவது, குறிலு நெடிலுமாவது, தனித்தும் ஒற்றடுத்தும் வந்தால் நிரை அசை எனப்படும். (உ - ம்.) கர, கரா, கரம், கராம்.

இவ்வசைகள், இரண்டு மூன்று நான்கு சேர்ந்து வருவது சீர் எனப்படும்.

இவற்றுள் - நேர் நேர், நிரை நேர், நேர் நிரை, நிரை நிரை, இந்நான்கும் ஈரசைச்சீராம்.

இவற்றிற்கு உதாரணவாய்பாடு.

தே மா=நேர் நேர் புளி மா=நிரை நேர்	இவ்விரண்டும் மாச்சீர்.
கூ விளம்=நேர் நிரை கரு விளம்=நிரை நிரை	இவ்விரண்டும் விளஞ்சீர்

இந்நான்கும் இயற்சீர் எனவும் ஆசிரிய வுரிச்சீர் எனவும் வழங்கப்படும்.

நேர் நேர் நேர், நிரை நேர் நேர், நேர் நிரை நேர், நிரை நிரை நேர், நேர் நேர் நிரை, நிரை நேர் நிரை, நேர் நிரை நிரை, நிரை நிரை நிரை, இவ்வெட்டும் மூவசைச்சீராம்.

தேமாங் காய்—நேர் நேர் நேர்		இவை காய்ச்சீர் எனவும் வெண்சீர் எனவும் படும்.
புளிமாங் காய்—நிரை நேர் நேர்		
கூவிளங் காய்—நேர் நிரை நேர்		
கருவிளங் காய்—நிரைநிரைநேர்		
தேமாங் கனி—நேர் நேர் நிரை		இவை கனிச்சீர் அல்லது வஞ்சிச்சீர் என்னப்படும்.
புளிமாங் கனி—நிரை நேர் நிரை		
கூவிளங் கனி—நேர் நிரை நிரை		
கருவிளங்கனி—நிரைநிரைநிரை		

இக் கனிச்சீர்களும், நாலசைச்சீர்களும் வெண்பாவில் வருவனவல்ல. சிலவெண்பாக்களி ஓரசையும் சீராய்க் கடைசியில் வரும்.

மாச்சீர்முன் நிரைவருவதும், விளஞ்சீர் முன் நேர்வருவதும், இயற்சீர் வெண்டளை யெனப்படும்.

காய்முன் நேர்வருவது வெண்சீர்வெண்டளை என்னப்படும்.

வெள்தளை—வெண்டளை. தளை, கட்டு, பந்தம் என்றாலும் யாப்பென்றாலும் தளையே. வெண்பாவிற்கு உரிய தளை வெண்டளை. வெண்டளையின்றி வேறுதளை வெண்பாவில் வராது. இப்படிப்பட்ட தளை தப்பாமல் ஈற்றடி முச்சீராயும் மற்றையடி நாற்சீராயும் வருவது வெண்பா என்னப்படும். ஈற்றடியின் கடைச்சீர் காசு, பிறப்பு என்கிற குற்றியலுகர வாய்பாடாயும் நாள், மலர் என்கிற ஓரசைச்சீராயும் வரவேண்டும்.

இவ்வெண்பா குறள்வெண்பா, சிந்தியல்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, பஃறொடைவெண்பா, என ஐவகைப்படும்.

இரண்டடியால் வருவது குறள்வெண்பா; மூன்றடியால் வருவது சிந்தியல்வெண்பா; நான்கடியால்வருவது நேரிசைவெண்பாவும் இன்னிசை வெண்பாவும்; நான்குக்கு மேற்பட்ட அடிகளால் வருவது பஃறொடைவெண்பா.

இந் நளவெண்பா முற்றும் நேரிசைவெண்பாவே. இதன் இலக்கணம், ஒருவிகற்பத்தாலேனும் இருவிகற்பத்தாலேனும் வந்து, இரண்டாமடிக் கடைச்சீர் தனித்துவருவது. விகற்பம் என்றால் எதுகை.

(உ - ம்.)

முன் னை - வினை யான் - முடிந்ததோ - மொய் குழ லாள்
நேர் நேர் - நிரை நேர் - நிரை நிரை - நேர் நிரை நேர்
தே மா - புளி மா - கரு விளம் - கூ விளங் காய்
என் னைத் தான் - கா ண - விசைந் ததோ - தன் மர புக்
நேர் நேர் நேர் - நேர் நேர் - நிரை நிரை - நேர் நிரை நேர்
தே மாங் காய் - தே மா - கரு விளம் - கூ விளங் காய்
கோவ் வா த்து - வார்த் தை - யுல கத் - துரைப் பட்ட
நேர் நேர் நேர் - நேர் நேர் - நிரை நேர் - நிரை நேர் நேர்
தே மாங் காய் - தே மா - புளி மா - புளி மாங் காய்
தெவ் வா று - சொல் லோ - விது.
நேர் நேர் நேர் - நேர் நேர் - நிரை
தே மாங் காய் - தே மா - மலர்

முன்னை வினையான் - இது மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.

வினையான் முடிந்ததோ - இதுவுமது.

முடிந்ததோ மொய்குழலாள் - இது விளமுன் நேர்வந்த இயற்சீர்வெண்டளை.

மொய்குழலாள் என்னைத்தான் - காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை.

என்னைத்தான் காண - இதுவுமது.

காண இசைந்ததோ - இது மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.

இசைந்ததோ தன்மரபுக் - இது விளமுன் நேர்வந்த இயற்சீர்வெண்டளை.

"மீண் டோர் சுயம்வரத்தை" என்னும் எஉ-வது பாட்டின் கடைச்சீர் "பரிந்து" பிறப்பு என்னும் வாய்பாட்டால் வந்தது.

"எங்கோன்மகளுக்" என்னும் எ௩-வது பாட்டின் கடைச்சீர் "சேர்ந்து" காசு என்னும் வாய்பாட்டால் வந்தது.

"ஒற்றைத்தனியாழி" என்கிற ௭௭-வது பாட்டின் கடைச்சீர் "சேய்" நாள் என்னும் வாய்ப்பாட்டால் வந்தது.

"நறையொழுக" என்கிற ௧௮௬-வது பாட்டின் கடைச்சீர் "பொழில்" மலர் என்னும் வாய்ப்பாட்டால் வந்தது.

இவ்வாறு வேண்டும் வெண்பாக்களைப் பிரித்துச் சீருந்தளை யும் முன் கூறியபடி சிதையாமல் வரப்பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவருவதை எதுகை யென்றும், அவ்வடிகளின் சீர்களின் முதல் எழுத்து ஒன்றி வருவதை மோனையென்றுஞ் சொல்வார்கள்.

அ-ஆ-ஐ-ஔ-இவைகளும்
இ-ஈ-எ-ஏ-இவைகளும்
உ-ஊ-ஒ-ஓ-இவைகளும்
தம்முள் ஒன்றோடொன்று இனமாம்.

ச-த-இவையும்
ந-ஞ-இவையும்
ம-வ-இவையும்
தம்முள் ஒன்றோடொன்று இனமாம்.

மோனையாகிய மெய்கள் அவ்வுயிர்களாயினும் இனவுயிர்க ளாயினும் ஏறப்பெற்றே வரவேண்டும்.

(உ-ம்.)

"கொற்றவேற் றானைக் குருநாடன் பாலணைந்தான்"
"தீர்த்தோவப் பார்காத்த சேய்"
"மறைமுதல்வ நீயிங்கே வந்தருளப் பெற்றேன்"

இவற்றுள் உயிரும் மெய்யும் இனங்களாய் மோனையான து காண்க.

எதுகையு மிவ்வாறே. எதுகையிலும் முதலெழுத்து நெடி லோ குறிலோ ஒன்றியே வரவேண்டும்.

(உ-ம்.)

"கொற்றவேற் றானை" என்பதற்கு
"ஏற்றுநீர் ஞாலம்" என்று வருவதேயல்லது
ஏற்றுநீர் ஞாலம் என்று வராமாட்டாதென அறிக.

தனிச்சீரென்பது முன் இரண்டடிகளில் வந்த எதுகைபெற் றிருப்பதேயாம்.